லெனின்
ஸ்டாலின்
மாவோ

# பாட்டாளிவர்க்க இயக்கத்தின் போர்த்தந்திரம் செயல்தந்திரம் பற்றி

- ஒரு தொகுப்பு

சமரன்
பதிப்பகம்

உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்!!

# லெனின்
# ஸ்டாலின்
# மாவோ

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

பாட்டாளி வர்க்க இயக்கத்தின் போர்த்தந்திரமும் செயல் தந்திரங்களும் பற்றி — ஒரு தொகுப்பு

சமரன் பதிப்பகம்
சென்னை — 600 019

பதிப்பு : முதற் பதிப்பு
டிசம்பர், 1988

விலை : முப்பது ரூபாய்கள்

வெளியீடு : சமரன் பதிப்பகம்

முகவரி : இல. கோவிந்தசாமி
52/4, மேட்டுத் தெரு,
சாத்துமா நகர்,
திருவொற்றியூர்,
சென்னை—600 019

நூலின் அளவு : டெம்மி 1×8

தாள் : வெள்ளைத்தாள். 13.4 கிலோ

பக்கங்கள் : 368+32 = 400 பக்கங்கள்

அச்சகம் : அலைகள் அச்சகம்
சென்னை—600 024.

## வாசகருக்கு ஓர் வேண்டுகோள்!

*அன்புள்ள வாசகர்களே!*

சமரன் பதிப்பகத்தால் 1985, அக்டோபரில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட இந்த புத்தகம் தற்சமயம் தமிழில் கொண்டுவரப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் அவசியம் பற்றி அறிமுகப்பகுதி விளக்குகிறது. மொழியாக்கம் செய்யும் போது நேர்ந்த சில பிரச்சினைகளால் பிழைத்திருத்தத்திற்கு சில கூடுதல் பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆங்கில மூலத்திலிருந்த தவறுகள், மொழியாக்க பிரச்சினைகள், பொறுப்பானவர்களின் கவனக் குறைவு போன்றவற்றால் இவை நேர்ந்தன. எனவே வாசகர்கள் புத்தகத்தின் இறுதியில் உள்ள பிழைத் திருத்தங்களை சரிபார்த்துப் புத்தகத்தை படிக்கக் கோருகிறோம். சிரமத்திற்கு வருந்துகிறோம்.

2-12-88

**சமரன் பதிப்பகம்**

---

*பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர போராட்டத்தில் லெனினியத்தின் போர்த்தந்திரமும் செயல் தந்திரங்களும் தலைமையின் விஞ்ஞானமாக அமைகிறது.*

**—ஸ்டாலின்**

# பொருளடக்கம்


பக்கம்

அறிமுகம் I to xxiv

1. ரஷ்யப் பொது உடமையாளர்களின் போர்த் தந்திரமும் செயல்தந்திரங்களும் என்ற பிரச்சினை குறித்து —டாலின் 1

I. அடிப்படைக் கருத்தாக்கங்கள்

அ) தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் இரு அம்சங்கள் 1

ஆ) மார்க்சியத் தத்துவமும் செயல்திட்டமும் 3

இ) போர்த்தந்திரம் (Strategy) 4

ஈ) செயல்தந்திரங்கள் (Tactics) 7

உ) போராட்ட வடிவங்கள் 10

ஊ) அமைப்பு வடிவங்கள் 11

எ) முழக்கம், ஆணை 12

II. போர்த்தந்திரத் திட்டம்

அ) வரலாற்று ரீதியான திருப்பங்கள், போர்த்தந்திரத் திட்டங்கள் 15

ஆ) முதல் வரலாற்று ரீதியான திருப்பமும் ரஷ்யாவில் பூர்சுவா ஜனநாயகப் புரட்சியை நோக்கிய பாதையும் 16

இ) இரண்டாவது வரலாற்று ரீதியான திருப்பமும் ரஷ்யாவில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நோக்கிச் சென்றமையும் பாதையும் 18

ஈ) மூன்றாவது வரலாற்று ரீதியான திருப்பமும் ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை நோக்கிய பாதையும் 20

2. ருஷ்யப் பொதுவுடமையாளர்களின் அரசியல் போர்த்தந்திரமும் செயல் தந்திரங்களும்-ஸ்டாலின்.

அ) கலைச்சொல் வரையறையும் ஆய்வுப் பொருளும் 23

ஆ) ருஷ்யாவின் வளர்ச்சியின் வரலாற்றுத்திருப்பங்கள் 28

இ) பிரச்சினைகள் 33

3. விவசாயப் பிரச்சினை பற்றிய கட்சியின் மூன்று அடிப்படை முழக்கங்கள் -ஸ்டாலின் 49

4. அக்டோபருக்கான தயாரிப்புக் கால கட்டத்தின் போது போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் சில தனிச்சிறப்பான அம்சங்கள் -ஸ்டாலின் 67

பின்னுரை -லெனின் 82

5. மார்க்சின் மேற்கோள். 91

6. கோனிக்ஸ் பெர்கிலிருந்த ஜோசப் பிளாச்சுக்கு -ஏங்கெல்ஸ் 98

7. பிரேசாலூவிலுள்ள போர்கியசுக்கு -ஏங்கெல்ஸ் 94

8. சனநாயகப் புரட்சியில் சமூக-சனநாயகத்தின் இரண்டு செயல் தந்திரங்கள் -லெனின் 103

பொதுவான பாதையும் போர்த்தந்திரத் திட்டமும் -லெனின் 104

9. மாவோவின் மேற்கோள்கள்

பொருளியல் அடித்தளமும் மேற்கட்டுமானமும் 111

இலக்குகளும் சக்திகளை முன்னிறுத்தலும் 112

இராணுவம் மற்றும் அரசியல் செயல் தந்திரங்கள் 113

10. சீனப் புரட்சியும் சீனப் பொது உடமைக் கட்சியும் -மாசேதுங் 114

11. சமூக சனநாயகத்தின் விவசாய வேலைத் திட்டம் -லெனின் 119

12. தொழிலாளர் கட்சியின் விவசாய வேலைத் திட்டத்தின் மாற்றம் குறித்து -லெனின் 124

13. மார்க்சியமும் புரட்சி எழுச்சியும் -லெனின் 128

14. போல்ஷ்விக்குகள் அரசு அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியுமா? -லெனின் 136

15. தோழர்களுக்குக் கடிதம் -லெனின் 138

16. ஒரு பார்வையாளரின் அறிவுரைகள் -லெனின் 140

17. திட்டத்திற்கும் செயல் தந்திரத்திற்கும் இடையே உள்ள உறவு -லெனின் 144

18. அரசியல் செயல் தந்திரங்கள், முழக்கங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம் -லெனின் 146

19. லெனினியத்தின் அடிப்படையான மூன்று செயல்தந்திரக் கோட்பாடுகள் -ஸ்டாலின் 150

20. லெனின் மேற்கோள்கள்

*செயல் தந்திரத்தின் வரையறை.* 153

*சூழ்நிலை மற்றும் செயல் தந்திரத்தைப் பற்றிய மதிப்பீடு.* 154

*குறிப்பான தருணத்தில் நிலைமையை எவ்வாறு மதிப்பிடுவது?* 155

*அரசு கட்டமைப்பில் உண்டாகும் மாற்றங்கள் பற்றி* 156

21. மாவோ மற்றும் லெனின் மேற்கோள்கள்

*நிலைமைகளில் மாறுதலும் முரண்பாடுகளில் மாறுதலும்* —மாவோ 157

*நிலைமையிலும் உள் கட்டங்களிலும் உண்டான மாறுதல்* —மாவோ 161

*சீனப் பொதுவுடமைக் கட்சியின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசியல் செயல் தந்திரங்க* —மாவோ 162

*முழக்கங்களைப் பற்றி* —லெனின் 165

*புறக்கணிப்புப் பிரச்சினை* —லெனின் 165

*தலைமையின் வழிமுறைகளும் சரியான முழக்கங்களை முன்னெடுத்துச் செல்லுதலும்* —மாவோ 167

22. சீனப் புரட்சிக்கான நமது பொது வேலைத் திட்டமும் குறிப்பான வேலைத் திட்டமும்-மாவோ 168

23. புரட்சிகர நிலைமையில் சமமற்ற வளர்ச்சி -மாவோ 179

24. சீனப் புரட்சியின் தணிந்த அலை-புரட்சிகரத் தளங்களை நிறுவுதலும் மேம்படுத்தலும் ஹோ கான்சி

1) 1927-ல் புரட்சி தோற்ற பிறகு நிலவிய அரசியல் நிலைமை. புரட்சியின் ஒரு தணிந்த நிலை 182

11) முன்னேறுவதிலிருந்து பின்வாங்கிச் செல்வதற்கு சீனப் புரட்சி மாறிச் செல்லுதல்-பொதுவுடமை கட்சிக்குள் முதல் ''இடது'' பாதையை களையெடுத்தல் 192

25. இயக்கத்தின் உயர்ந்த அலையும் தணிந்த அலையும் -மாவோ 195

புரட்சிப் பேரலை மாவோ 198

இயக்கத்தின் உயர்ந்தஅலையும் தாழ்ந்தஅலையும் கட்சியின் செயல் தந்திரங்கள் -ஹோகான்சி 202

26. ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் வேறுபாடுகள் -லெனின் 210

27. வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய தாராளவாத கருத்துக்களும் மார்க்சியக் கருத்துக்களும் -லெனின் 218

28. தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் பற்றி ஆலை முதலாளிகள் 227

29. பொருளாதாரம் மற்றும் அரசியல் வேலை நிறுத்தங்கள் 228

30. மாவோவின் கட்டுரைப் பகுதிகள்

பாட்டாளி வர்க்கக் கட்சியின் இராணுவப் பாதை 239
சீனப் புரட்சிப் போரின் பண்பியல்புகள் எவை? 242
இந்தப் பண்பியல்புகளிலிருந்து பிறக்கும் எமது போர்த்தந்திரமும் செயல்தந்திரங்களும் 247
''சுற்றி வளைத்து அடக்குதலும்'' அதற்கு எதிரான நடவடிக்கைகளும் சீனாவின் உள்நாட்டுப் போரின் தலையாய வடிவம். 249
சீனப் புரட்சிபோரின் தனிப் பண்பியல்புகள். 251
சீனப் பொதுவுடமைக் கட்சியின் போர் வரலாறு. 256

31. இராணுவப் பாதை—கட்டுரைப் பகுதிகள்

செம்படையைக் கட்டுவது மற்றும் செம்படையின் போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரங்களின் அடிப்படைக் கோட்பாடுகள் —ஹோகான்சி. 258
ஆயுதம் ஏந்திய மக்கள் ஆயுதம் ஏந்திய எதிர்ப் புரட்சியை எதிர்த்து நிற்கின்றனர். —மக்கள் தினசரி. 266

32. பிற்சேர்க்கை: நமது கட்சியின் வரலாற்றில் சில பிரச்சினைகள் பற்றிய தீர்மானம்—
சீனப் பொதுவுடமைக் கட்சி, 1945. 275

33. கம்யூனிஸ்டை அறிமுகம் செய்தல் —மாவோ 340

34. கட்சி கட்டும் முறை —ஸ்டாலின் 357

# அறிமுகம்

இந்தத் தொகுப்பில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகிய பன்னாட்டுப் பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவர்கள் எழுதிய கட்டுரைகளும், கட்டுரைகளின் பகுதிகளும் உள்ளன. இவற்றில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் போர்த் தந்திரம் மற்றும் செயல்தந்திரக் கொள்கைகள் விவாதிக்கப் பட்டுள்ளன.

1848 புரட்சியின் அனுபவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு ''லூயி போனபார்ட்டின் பதினெட்டாவது புரூமேர்'' என்ற நூலில் மார்க்ஸ் எழுதினார்.

''எனவே, உழவர்களின் நலன்கள் நெப்போலியனின் கீழிருந்ததைப் போல, முதலாளியத்தின், மூலதனத்தின் நலன்களுடன் ஒத்திருக்கவில்லை; ஆனால் அவற்றுக்கு எதிராக உள்ளன. எனவே முதலாளிய அமைப்பைத் தூக்கி எறிவதைத் தன் கடமையாகக் கொண்டுள்ள நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கத்தையே தன் இயற்கையான நண்பராக விவசாயிகள் காணுகிறார்கள்.''

(மார்க்ஸ், எங்கெல்ஸ் தொகுப்பு நூல்கள்,
தொகுதிII பக்கம், 191)

பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தி மார்க்ஸ் 1856-லும் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

''ஜெர்மனியிலுள்ள முழு விஷயமும் பாட்டாளிவர்க்கத் தீர்மானத்தை உழவர் போரின் சில இரண்டாவது பதிப்பு தாங்கி ஆதரிக்கும் வாய்ப்பைப் பொறுத்துள்ளது. அப்புறம் அந்த உறவு அபூர்வமாக இருக்கும்''. இவ்வாறாக, பாட்டாளி வர்க்கத்துக்

கும் உழவர் வர்க்கத்துக்கும் இடையிலான கூட்டணியைச் சார்ந்து இருந்தால் புரட்சியின் வெற்றி உறுதி என்று மார்க்சிய நிறுவனர்கள் தெளிவாகக் கூறினார்கள்.

மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துகளை லெனின் ஆக்க ரீதியாக மேம்படுத்தினார். உழைக்கும் வர்க்கத்திற்கும், விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியை முழுமையாகத் தொகுக்கப்பட்ட தத்துவமாக வளர்த்தார். ஏகாதிபத்தியம் உருவாக்கியுள்ள புதிய நிலைமைகளில் புரட்சி இயக்கத்தின் வெவ்வேறு கட்டங்களில் வர்க்கச் சக்திகளை எவ்வாறு திறமையாகப் பயன்படுத்துவது என்பதைத் தெளிவாக விளக்கினார். லெனின் மரபுரிமையைப் பாதுகாத்தார். ஆனால் மரபுரிமையால் கட்டுண்டு விடவில்லை. முதலாளிய நாடுகளிலுள்ள உழைக்கும் வர்க்கம் மற்றும் விவசாயி வர்க்கம் புரட்சிப் போராட்டங்களிலிருந்து பெற்ற அனுபவத்தி லிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டதோடு லெனின் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விடவில்லை. ஆனால் அவர் ருஷ்யாவின் சமூக மற்றும் பொருளியல் நிலைமைகள் பற்றி அறிவியல் ரீதியான பகுப்பாய்வு செய்தார். முதலாவது முதலாளிய சனநாயகப் புரட்சிக் கட்டத்திலிருந்து இரண்டாவது சோசலிசக் கட்டத்திற்கு மாறுவதற்கு இன்றியமையாத நிலைமைகள் பரிணாம [illegible]ர்ச்சிப் பெறுவதற்குக் கட்டாயமாக ஒரு நீண்ட இடைக்காலம் தேவை என்று 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டு முதலாளியப் புரட்சிகளில் கருதப்பட்டது. அந்த இரு நூற்றாண்டுகளின் முதலாளியப் புரட்சி களிலும் அப்படித்தான் இருந்தது. ஏனெனில் பாட்டாளி வர்க்கம் அப்போதுதான் ஒரு வர்க்கமாக உருவாகிக் கொண்டிருந்தது; அதற்கு அப்போது அரசியல் போராட்ட அனுபவமோ, வர்க்கப் போராட்ட அனுபவமோ கிடையாது. விவசாய வர்க்கம் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் இரண்டறக் கலந்திருந்த வர்க்கமாக இருந்தது. அது அடிக்கடி முதலாளிய வர்க்கத்தின் பக்கம் சார்ந்திருந்தது. எனவே, இயற்கையாகவே அத்தகைய நிலைமை களின் கீழ் உழைக்கும் வர்க்கம் முதலாளிய சனநாயகப் புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்துவதோ அதைச் சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னெடுத்துச் செல்வதோ இயலாததாக இருந்தது. லெனின் மேலை நாடுகளின் முதலாளியப் புரட்சிகளின் அனுபவத்தைப் பகுத்தாய்ந்தார்; முதலாளிய சனநாயகப் புரட்சிக்கும், சோசலிசப் புரட்சிக்கும் இடையில் பிரமாண்டமான வேறுபாடு உள்ளதென்று நிருபித்தார். புரட்சிகளுக்கு இடைப்பட்ட ''முறிவுகளும்'' இடைவெளிகளும் பற்றிய சோசலிச சனநாயகக் கோட்பாடு தவறு என்றும் அவர் நிருபித்தார். அது ஒரு கருத்து

நிலை (Ideological weapon) ஆயுதமாகும். முதலாளியம் அதை உழைக்கும் வர்க்கத்துக்கும், விவசாயத் தொழிலாளருக்கும் எதிராகப் பயன்படுத்தி பலவந்தமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. முதலாவது ருஷ்யப்புரட்சியின் பலாபலன்களை ஒரு புதிய கோணத்திலிருந்து மதிப்பீடு செய்தார். அதிலிருந்து முதலாளிய சனநாயகப் புரட்சியும் சோசலிசப் புரட்சியும் இரண்டு பிரிக்க முடியாத நிகழ்முறைகள் என்ற—குற்றங்காண முடியாத முடிவுகளுக்கு வந்தார். எதேச்சாதிகாரம், பேரரசின் நீதிமன்றம், காவல்துறை, அதிகாரவர்க்கம், இராணுவம், ஒரு கையளவு பிரபுக்குலம் எல்லாம் புரட்சியின் முதலாவது கட்டத்தில் அதற்கு எதிராக ஒருங்கிணைந்திருந்தனர். ருஷ்யாவில் புரட்சியின் நேரடியான மற்றும் உடனடியான நோக்கம் முதலாளிய சனநாயகமாகும்; அதாவது இடைக்காலத்திய பிற்போக்கு நிலையின் மிச்ச சொச்சங்களை அழிப்பதாகும். புரட்சியின் முதலாளிய சனநாயக உள்ளடக்கம் நாட்டின் சமூக உறவுகளில் இருந்து (ஏற்பாடுகள், நிறுவனங்கள்) இடைக்காலத்தில் பிற்போக்கு நிலை, அடிமை முறை, நிலப் பிரபுத்துவம் ஆகிய கழிவுகளை வெளியேற்றுவதாகும். ருஷ்யாவிலுள்ள முதலாளி வர்க்கம் புரட்சிக்கு அளிக்கும் ஆதரவில், ஒவ்வாமையுடையவர்களாகவும், தன்னலத்துக்காக அலைபவர்களாகவும், கோழைத்தனம் உடையவர்களாகவும் உள்ளனர். ஏனெனில் மக்கள் முழு வெற்றியடைவதைக் கண்டு அது அஞ்சியது. அவர் மேலும் சொன்னார், ''முதலாளிய வர்க்கம் தனது குறுகிய சுயநலன்களைப் பெற்ற உடனேயே முரண்பாடில்லாத சனநாயகத்திலிருந்து ''பின்னோக்கி உதைக்கத்'' தொடங்கியதுமே தவிர்க்க இயலாதபடி எதிர்ப்புரட்சியின்பாலும், எதேச்சாதிகாரத்தின்பாலும் திரும்பும்: புரட்சிகளுக்கு எதிராகவும், மக்களுக்கு எதிராகவும் திரும்பும்.'' (அது ஏற்கனவே அதிலிருந்து பின்னோக்கி உதைத்துக் கொண்டு இருக்கிறது).

எனினும் பாட்டாளிவர்க்கம் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்காகவும், அதை வெற்றிகரமாக முடித்து வைப்பதற்கும் உறுதியாக நின்றது, நிற்கின்றது; ஏனெனில் அது சனநாயகப் புரட்சியையும் தாண்டி வெகுதொலைவு போகிறது. உழவர் வர்க்கம் தனிச் சொத்துடைமையின் முதன்மை வடிவங்களுள் ஒன்றான நிலப்பண்ணைகளைப் பறிமுதல் செய்வதில் காட்டும் ஈடுபாட்டின் அளவுக்குத் தனிச் சொத்துடைமையை முற்றிலும் பாதுகாத்து வைப்பதில் அக்கறை கொள்ளவில்லை. சோசலிஸ்டாக மாறாமலும் அல்லது குட்டி முதலாளியாக இருக்காமலும் உழவர் வர்க்கம் சனநாயகப் புரட்சியின் முழுமனதுடனான மற்றும் புரட்சிகரமான சார்பாளராக இருக்க முடிந்தது.

மேலும், புரட்சிகரமான விவசாயச்சீர்திருத்தத்தின் பயன்களால் மட்டும் (விவசாயி) உழவர் வர்க்கம் புரட்சியில் ஈடுபாடு காட்டவில்லை; ஆனால் அதனுடைய பொதுவான மற்றும் நிரந்தர நலன்களாலும் அது ஈடுபாடு காட்டியது. பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து சண்டை போடும் போது கூட, உழவர் வர்க்கம் சனநாயகத்தை முன்னிட்டும் நின்றது. ஏனெனில் சனநாயக முறை மட்டுமே அதன் நலன்களைத் துல்லியமாக வெளிப்படுத்தத் தகுதியானதாகும்; சனநாயக முறை மட்டுமே அதனுடைய தலைமையை ஒரு மக்கள் திரள், ஒரு பெரும்பான்மை என்ற வகையில் உறுதிப்படுத்தும். ருஷ்யாவின் சனநாயகப் புரட்சியின்பால் உழவர் வர்க்கத்தின் போக்கைப் பற்றிய லெனின் மதிப்பீடு இதுவேயாகும். அரசியல் நிலைமை முழுவதையும் மதிப்பிட்ட பிறகு லெனின் சொன்னார்:

''ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கம் இயற்கையாகவும் தவிர்க்க இயலாத வகையிலும் தாராள முடியரசுக் கட்சியின் சிறகுகளின் கீழ்வர விரும்புவதற்குக் காரணம் அதுதான்; அதே வேளையில் உழவர் வர்க்கம் திரள் திரளாகப் புரட்சியின் தலைமையின் கீழும், குடியரசுக் கட்சியின் கீழும் வரப்பார்க்கிறது.'' புதிய வரலாற்று நிலைமைகளின் கீழ் பாட்டாளி வர்க்கம் போதிய அளவு வலிமை பெற்றிருந்தது; அத்துடன் கூடவே உழவர் வர்க்கமும் சனநாயகப் புரட்சியை நிறைவு செய்திடவும், முதலாளிய சனநாயகப் புரட்சிக்குப் பின்னால் ஒரு சோசலிசப் புரட்சிக்கான தொடர் நடவடிக்கைகளைச் செய்யவும் தேவையான ஆற்றலுடையதாக உள்ளது.

18ஆம், 19ஆம் நூற்றாண்டின் முதலாளியப் புரட்சிகளில் முதலாளிய வர்க்கம் தலைமையேற்றிருந்தது; பாட்டாளி வர்க்கம் அதற்குத் துணைப் பாத்திரம் வகித்தது. உழவர் வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு எதிர் நிலையில் இருந்தது. ஒரு புதிய வரலாற்றுச் சகாப்தத்தின்—ஏகாதிபத்திய சகாப்தத்தின்—நிலைமைகளின் கீழ் முதலாளிய சனநாயக மற்றும் சோசலிசப் புரட்சிகளின் உந்து சக்திகள் பற்றிய கேள்விகளை லெனின் மீண்டும் எழுப்பினார். புதிய வரலாற்று நிலைமைகளின் கீழ் ருஷ்யாவில் பாட்டாளிவர்க்கம் முதலாளிய வர்க்கத்துக்கு வழி காட்டும் சக்தியாக மாறிவிட்டது. புரட்சியின் தலைமையிலிருந்து முதலாளிய வர்க்கத்தை ஓரம் கட்டியாக வேண்டும்; அதே வேளையில் உழவர் வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தின் சேமிப்புச் சக்தியாகும் என்ற மறுக்க முடியாத முடிவுக்கு லெனின் வந்தார்.

லெனினின் கூற்றுப்படி, ருஷ்ய சனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தலைமை என்பதற்கு, முதலாளியப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தலைமை வகிப்பதும், அதைத் தொடர்ந்து தொழிலாளி வாக்கத்துக்கும் உழவர் வர்க்கத்துக்கும் இடையிலான கூட்டணிக் கொள்கையும், தாராள முதலாளிகளைத் தனிமைப் படுத்தும் கொள்கையும் என்பதே பொருளாகும். ருஷ்யப் புரட்சியின் சனநாயகக் காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கம் உழவர் வர்கம் முழுமனதுடனும் கூட்டணி சேர்ந்து செயல்பட்டது; சோசலிசப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் கிராமப்புற மக்களில் பாட்டாளி வர்க்கம் மற்றும் அரைப்பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டணி சேர்ந்து செயல்பட்டது.

ருஷ்யப் புரட்சியின் சனநாயகக் கால கட்டத்தில் தாராள முதலாளிகளைத் தனிமைப்படுத்தும் கொள்கையை போல்ஷெவிக்குகள் பின்பற்றினர்; அதேவேளையில் சோசலிசப் புரட்சியில் அவர்கள் உழவர்களையும், குட்டிமுதலாளிகளையும் தனிமைப் படுத்தும் கொள்கையைக் கடைப்பிடித்தனர். ஏனென்றால், ''இந்தப் போர்த் தந்திரம் இல்லாமல் முதலாளிய சனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை நிறுவுவது சாத்தியப் பட்டிருக்காது.'' மேலும் ''போல்ஷெவிக்குகளின் செயல் தந்திரத்திலான இந்தச் சிறப்புக்கூறு இல்லாமல் உழைக்கும் வர்க்கத்திற்கும், உழவுத் தொழிலாளர் திரளுக்கும் இடையிலான கூட்டணி என்பது அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்திருக்க வேண்டியதுதான்.''

(ஜே. வி. ஸ்டாலின்)

லெனின் சர்வதேச, மற்றும் உள்நாட்டுச் சமூக சக்திகளை ஆராய்ந்த பிறகு, இரண்டு கட்டப் புரட்சிகளுக்குமான போர்த் தந்திரத்திட்டங்களைத் தனது புகழ் பெற்ற, ''சனயநாயகப் புரட்சியில் சமூக-சனநாயகத்தின் இரண்டு செயல் தந்திரங்கள்'' என்ற நூலில் வகுத்தளித்தார். ''பாட்டாளி வர்க்கம் தன்னுடன் உழவர் வர்க்கத்தைச் சேர்த்துக் கொண்டு எதேச்சாதிகாரத்தின் எதிர்ப்பைப் பலவந்தமாக நசுக்கவும், முதலாளியத்தின் உறுதி நிலையின்மையை முடக்கவும் (ஸ்தம்பிக்கவும்) செய்து, சனநாயகப் புரட்சியை முழு நிறைவடையச் செய்ய வேண்டும். பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சியைச் செய்து முடிக்கும்; அப்போது அது மக்களில் அரைப்பாட்டாளி வர்க்கத்தினரைக் (Semi Proletarian) கூட்டுச் சேர்த்துக் கொண்டு முதலாளிய வர்க்கத்தின் எதிர்ப்பைப் பலவந்தமாக நசுக்கவும், உழவர் வர்க்கம் மற்றும் குட்டி முதலாளிகளின் உறுதி நிலையின்மையை முடக்கவும் செய்ய வேண்டும்.

ருஷ்யாவில் முதலாளிய சனநாயகப் புரட்சியின் உள்ளடக்க மாவது அந்நாட்டின் சமூக நிறுவனங்களில் (ஏற்பாடுகளும்,நிறுவனங் களும்) இருந்த இடைக்காலத்திய பிற்போக்குத் தன்மை, அடிமைத் தனம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றைக் கழுவி வெளியேற்ற வேண்டும் என்பதாகும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ருஷ்யாவில் நிலப்பண்ணைகள் நிலப்பிரபுத்துவக் கொத்தடிமை முறையின் மீதே தங்கியிருந்தன. முதலாளிய அமைப்பைச் சார்ந்திருக்க வில்லை. எனவே, போராட்டத்தின் மையப்புள்ளி ருஷ்யாவிலிருந்த அடிமைத் தனத்தின் மிச்ச மீதங்களை எதிர்த்தே அமைந்திருந்தது. சரக்கு உற்பத்தியையும் முதலாளியத்தையும் மேம்படுத்துவதால் மட்டுமே அடிமைத்தனத்தின் மிச்ச மீதங்களைத் துடைத்திருக்க முடியும். அந்த வகையில் ருஷ்யாவின் முன்னால் ஒரே ஒரு பாதை தான் இருந்தது. அது முதலாளிய வளர்ச்சிப் பாதையாகும். ஆனால் அங்கே அப்படிப்பட்ட வளர்ச்சிக்கு இரண்டு வடிவங்கள் இருந்தன. "நிலப்பிரபுத்துவப் பொருளியல் மாற்றத்தின் விளைவாகவோ அல்லது நிலப்பிரபுத்துவப் பெரும் பண்ணை ஆட்சி முறையை ஒழிப்பதன் மூலமாகவோ அடிமைத் தனத்தின் மிச்ச சொச்சங்களை அகற்றலாம்; அதாவது சீர்திருத்த முறையிலேயோ, புரட்சியின் மூலமாகவோ அகற்றலாம். பெரும் நிலப்பிரபுத்துவப் பொருளி யலைத் தலைமையில் கொண்டு முதலாளிய வளர்ச்சி தொடங்கி வளர முடியும். அது படிப்படியாக மேலும் மேலும் முதலாளியமாக மாறி, நிலப்பிரபுத்துவச் சுரண்டல் முறைக்குப் பதிலாக முதலாளியச் சுரண்டல் முறையில் பதிலீடு செய்து விடும். சிறு உழவர் பொருளியலைத் தலைமையில் கொண்டும் அது வளரத் தொடங் கலாம். அது புரட்சிகரமானதொரு வழியில் நிலப்பிரபுத்துவப் பெரும்பண்ணை ஆட்சிமுறையின் தொங்குசதைகளைச் சமூக அமைப்பிலிருந்தே அகற்றிவிடும். அது பிறகு அத் தொங்குசதை களற்ற முதலாளியப் பொருளியல் பாதையில் கட்டற்று வளரும்," என்று லெனின் கூறினார்.

(லெ. தொ. நூ. தொகுதி 13 பக். 239)

முதலாவது பாதை, நீண்ட நெடியது; கடும் துன்பம் தரக்கூடியது. இது முதலாளிய வளர்ச்சியை அடிமை முறையின் மிச்சசொச்சங்கள் பலவற்றுடன் சேர்த்திருக்கும் "பர்சியன் பாதை (Pursian Path) ஆகும். இந்த நிலையில் நிலப் பிரபுத்துவ நிலக்கிழார் பொருளியல் மெதுவாக முதலாளிய ஜங்கர் பொருளியலாகப் பரிணாம வளர்ச்சி அடைந்தது; அதேசமயம் பெரிய உழவர்களில் ஒரு சிறிய பகுதி சிறுபான்மையினர் தோன்றினர்.

இரண்டாவது பாதை, ஒரு விரைந்த, தீர்மானகரமான பாதையாகும். அது அடிமை முறையின் மிச்ச சொச்சங்களை எல்லாம் அடித்துக் கொண்டு போயிற்று. இவ்வாறாக, தூய முதலாளியப் பண்ணை முறைக்குப் பாதையை ஒழுங்குபடுத்திக் கொடுத்தது. இது ''அமெரிக்கப் பாதை''யாகும். இரண்டாவது பாதையில் நிலப்பிரபுத்துவப் பொருளியில் கிடையாது, அல்லது அது புரட்சியால் நொறுக்கப்பட்டிருந்தது. அம்முறை நிலப்பிரபுத்துவப் பண்ணைகளைப் பறிமுதல் செய்யத் தூண்டியது. முதல் நிலைமையில் அப்பரிணாம வளர்ச்சியின் முக்கிய உள்ளடக்கம் நிலப்பிரபுத்துவக் கட்டுகளை அடிமைத்தனமாகவும் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களின் ஜங்கர்களின் நிலங்களில் முதலாளியச் சுரண்டலாகவும் உருமாற்றுவதாகும். இரண்டாவது நிலைமையில் குல முறைமை உழவர்களை முதலாளியப் பண்ணையார்களாக உருமாற்றுவதே தலையாய பின்னணியாகும். உழவர்களுக்கு விடிவு காலம் பிறந்த உடனேயே இந்த இரண்டு வழிகளும் பின்பற்றப் பட்டன. 1861-இன் சீர்திருத்தம் முதலாவது பாதையைப் பின்பற்றியதாகும். இரண்டாவது 'ஸ்டோலிபின்' சீர்திருத்தமாகும்.

விவசாயப் பரிணாம வளர்ச்சியின் சாத்தியமான இரண்டு பாதைகளையும் கற்றறிந்த பிறகு, வேளாண்மையின் மெய்யான பொருளியல் உறவுகளை லெனின் பருண்மையாகப் பகுத்தாய்ந்தார். அவர் வர்க்கச் சக்திகளின் வேறுபாடுகளைக் காட்டினார். லெனின் சொன்னார்:

''ருஷ்யப் புரட்சியில் வெளிப்படையாக வந்த அனைத்துக் கட்சிகள் மற்றும் வர்க்கங்களின் விவசாய வேலைத்திட்டத்தை, முதலாளிய விவசாயப்புரட்சியின் இரண்டு வகைகளுக்கு ஏற்றவாறு நாம் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்க முடியுமென்ற மறுக்க முடியாத உண்மையை நாம் முதலில் குறிப்பிட்டாக வேண்டும். 'மென்ஷெவிக்குகள்' அடிக்கடி தவறாக அனுமானம் செய்தது போல ''வலது'' மற்றும் ''இடது'' விவசாய வேலைத்திட்டங்களுக்கு இடையிலான பிரிவினைக்கோடு அக்டோபரிஸ்டுகளுக்கும் காடெட்டுகளுக்கும் இடையில் ஓடவில்லை. (மென்ஷெவிக்குகள் ''அரசியல் சட்டரீதியான சனநாயக'' சொற்களின் ஒலியில் மயங்கி விடுகிறார்கள்; வர்க்கப்பகுப்பாய்வுக்குப் பதிலாக அவர்கள் அந்தந்தக் கட்சிகளின் பெயர்களுக்குப் பதிலாகப் பகுப்பாய்வு என்ற சொல்லைச் சேர்த்து விடுகின்றனர்) பிரிவினைக்கோடு கேடட்டுகளுக்கும்; துருதோவிக்குகளுக்கும் இடையில் ஓடுகிறது. ருஷ்யாவிலுள்ள இரண்டு முதன்மையான வர்க்கங்களுடைய நலன்களால் அக்கோடு

தீர்மானிக்கப்படுகிறது. அவ்வர்க்கங்கள் நிலத்துக்காகச் சண்டையிடு கின்றன. நிலப்பிரிவுத்துவ வர்க்கமும், உழவர் வர்க்கமுமே அவ்வர்க்கங்களாகும். காடெட்டுகள் நிலப்பிரபுத்துவத் துக்காவும், ஒரு நாகரிகமடைந்த ஐரோப்பிய நிலப்புரத்துவ முதலாளிய விவசாயப் பரிணாம வளர்ச்சிக் (Landlord Bourgeoisie evolution of Agriculture) காகவும் நிற்கிறார்கள்.

துருதோவிக்குகள் (கூடவே சமூக-சனநாயகத் தொழிலாளர் பேராளர்களும்) அதாவது பாட்டாளிவர்க்கத்தின் சார்பாளர்கள். உழவர் முதலாளிய விவசாயப் பரிணாம வளர்ச்சிக்கு வக்காலத்து வாங்குகின்றனர்''.

(லெ. தொ. நூ. தொகுதி 13பக். 246, 247)

மற்ற எல்லாக்கட்சிகளின் செயல் திட்டங்களையும் லெனின் மதிப்பீடு செய்தார். விவசாயத்திலான முதலாளிய வளர்ச்சியின் இருவகைகளுக்கு ஏற்ப அவற்றை வேறுபடுத்தினார். ''இடது'' மற்றும் ''வலது'' விவசாய வேலைச் செயல்திட்டத்தின் பிரிவினைக் கோடு மென்ஷெவிக்குகள் கருதியபடி அக்டோபரிஸ்டுகளுக்கும் காடெட்டுகளுக்கும் இடையில் ஓடவில்லை; ஆனால் காடெட்டு களுக்கும் துருதோவிக்குகளுக்கும் இடையில் ஓடுகிறதென்றார். நரோத்னிக் கோட்பாடுகளையும், செயல் திட்டங்களையும் அவர் விமர்சித்த போதிலும் கூட, அவற்றின் புரட்சிகர சனநாயக சாரத்தை அவர் சுட்டிக்காட்டினார். அவர் அமெரிக்கப் பாதையை இடைவிடாது ஆதரித்தார். ஏனெனில் பாட்டாளிவர்க்கம் மற்றும் உழவர்வர்க்கத்தின் வெற்றியில் முடியக்கூடிய முதலாளிய சனநாயகப் புரட்சியின் விளைவாக மட்டுமே அத்தகைய பாதையை அடைய முடியும்.

லெனின் தனது அறிவியல் முடிவுகளைக் கட்சியின் அரசியல் கடமைகளுடன் இணைத்தார். தொழிலாளர் கட்சியின் விவசாயச் செயல் திட்டத்தின் திருத்திய பதிப்பில் அவர் பின்வருமாறு எழுதினார்:

எனவே, நமது விவசாயச் செயல் திட்டம் மூன்று தலையாய பகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவதாக, நிலப்பிர புத்துவத்தின் மீதான (landlordism) புரட்சிகரமான உழவர்களின் கடுந்தாக்குதலை நடத்துமாறு மிக மிக அதிகமாக வலியுறுத்தி அறைகூவல் விடுப்பதற்கு ஏற்பாடு செய்வது; இரண்டாவதாக,

உழவர்கள் பெற்ற வெற்றிகளை உறுதிப்படுத்தவும், சன நாயகத்தின் வெற்றியிலிருந்து சோசலிசத்துக்கான பாட்டாளிகளின் நேரடிப் போராட்டத்துக்குக் கடந்து செல்லவும் இயக்கம் எடுக்க முடிந்ததும், எடுக்க வேண்டியதுமான அடுத்த நடவடிக்கையைத் துல்லியமாக வரையறுத்தல். மூன்றாவதாக, கட்சியின் பாட்டாளி வர்க்க நோக்கங்களைச் சுட்டிக் காட்டுதல்; விவசாய எழுச்சியின் வெற்றி நெருங்கி வர வர, பாட்டாளி வர்க்கத்தின் நோக்கங்களை நாம் மிகவும் அவசரமாக எதிரிட வேண்டியுள்ளது; மேலும் அவை தெளிவாக வகுக்கப்பட வேண்டியது முன்னை விட அவசியத் தேவையாகி விடுகிறது.''

ஜார் ஆட்சியைத் தூக்கி எறிந்து சனநாயகக் குடியரசை நிறுவுவதற்கான மிகவும் பயனுள்ள வழி மக்களின் வெற்றிகரமான ஆயுதந் தாங்கிய எழுச்சியே ஆகும் என்று லெனின் கருதினார்.

மக்கள் திரளை எழுச்சிக்கு வழி நடத்திச் செல்வதற்கு, அவர்களின் புரட்சிகர முன் முயற்சியைக் கட்டவிழ்த்துவிடக் கீழ்க்கண்ட முழக்கங்கள் இன்றியமையாதவை என்று அவர் கருதினார்.

அ. ''மக்கள் திரள் அரசியல் வேலை நிறுத்தங்கள். இவை தொடக்கத்திலும், புரட்சி எழுச்சியின் போதும் மாபெரும் முக்கியத்துவமுடையன.''

ஆ. எட்டுமணி நேர வேலை நாள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் பிற உடனடிக் கடமைகளைப் புரட்சிகர வழியில் உடனடியாகக் கைவரப் பெறுதல்.

இ. நிலப்பண்ணைகளைக் கைப்பற்றுதல் உள்ளிட்ட சனநாயக மாற்றங்கள் அனைத்தையும் ஒரு புரட்சிகரமான வழியில் செயல்படுத்துவதற்கான புரட்சிகர உழவர் குழுக்களை உடனடியாக அமைத்தல்.

ஈ. தொழிலாளர்களை ஆயுதபாணியாக்குதல்.

மக்கள் எழுச்சி வெற்றி பெற்ற பிறகு மாறுநிலை (Transit) அரசாங்கத்தின் இடத்தில் தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தை வைக்கவேண்டுமென லெனின் உறுதியாகக் கூறினார். இந்தத் தற்காலிகப்புரட்சி அரசாங்கம், புரட்சியின் வெற்றிகளை உறுதிப்படுத்தி நிலை நாட்டுவதையும், எதிர்புரட்சியை நசுக்குவதையும் ருஷ்ய சமூக சனநாயகத் தொழிலாளர் கட்சியின் (RSDLP) குறைந்தபட்ச

செயல்திட்டத்தைச் செயல்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்ட தொழிலாளர் மற்றும் உழவர்களின் சர்வாதிகாரத்தை யுடைய அரசாங்கமாக இருக்கும்.

ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் போகிற போக்கிலேயே அதனுடைய தலையாய, தூய பாட்டாளி வர்க்க சோசலிச நடவடிக்கைகளின் ''துணை விளைவாக'' முதலாளிய சனநாயகப் புரட்சியின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தது. முதலாளிய சனநாயகச் சீர்திருத்தங்கள் பாட்டாளிவர்க்கத்தின், அதாவது சோசலிசப் புரட்சியின் துனண விளைவாகும். முதலில் சொல்லப் பட்டது இரண்டாவதாக வளர்ச்சியடைந்தது. இரண்டாவது சொல்லப்பட்டது, போகிற போக்கிலேயே முதலாவது சொல்லப் பட்டதன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தது. இரண்டாவது சொல்லப்பட்டது முதலாவதன் வேலைகளை உறுதிப்படுத்தி நிலை நாட்டியது.

சென் து-சியுவால் தலைமை தாங்கப்பட்ட வலது சந்தர்ப்ப வாதக் குறுங்குழு, சீனாவின் முதலாளிய சனநாயகப் புரட்சி முதலாளிய வர்க்கத்தால்தான் தலைமை தாங்கப்பட வேண்டு மென்று உறுதியாகக் கூறியது. சீன முதலாளிய சனநாயகப் புரட்சி யின் நோக்கம் ஒரு முதலாளியக் குடியரசை நிறுவுவதாகும் என்றும் அவர் கூறினார். அவருடைய கூற்றுப்படி, சீனாவில் முதலாளிய வர்க்க மட்டுமே சனநாயக சக்தியாகும். அவர் முதலாளிய வர்க்கத் துடனான பாட்டாளி வர்க்கக் கூட்டணியை வரவேற்றார். ஆனால் அவர் மிக மிகப் பரந்து இருந்ததும், மிக மிக அடிப் படையானதுமான உழவர் வர்க்கத்தின் பங்கை மறுத்துவிட்டார். செங் கு-தாவோவால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இடது சந்தர்ப்பவாதிகள் உழைக்கும் வர்க்கத்தின் பங்கைமட்டுமே அங்கீகரித்தனர்; அவர்கள் உழவர் வர்க்கத்தின் பங்கை மறுத்தனர். கட்சியில் அப்போது இந்த இருவிதமான பிழைபட்ட போக்குகளும் நிலவின. இவற்றுக்கு எதிராக, தோழர் மாவோ 1926 மார்ச்சில் ''சீன சமுதாயத்திலுள்ள வர்க்கங்களைப்பற்றிய பகுப்பாய்வு'' என்ற கட்டுரையை எழுதினார்.

சீனாவில் நிலப்பிரபுத்துவ வர்க்கமும் தரகு முதலாளிய வர்க்கமும் சீனாவிலிருந்த மிகவும் பிற்போக்கான, பின்தங்கிய உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தின. அவை சீனாவின் சமூக உற்பத்தி சக்திகளுக்கு ஊறு விளைவித்தன. ஏனெனில், அவை தம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஏகாதிபத்தியங்களையே முற்றிலும்

சார்ந்திருந்தன. எனவே, அவை பிற்போக்கு சக்திகள் எனவும், எதிரிகள் எனவும் சீன சனநாயகப் புரட்சியின் இலக்குகள் எனவும் மாவோ ஊறுதியாகக் கூறினார்.

சீனாவின் புரட்சிகர வர்க்கங்களாவன: தொழிலாளி வர்க்கம், உழவர் வர்க்கம், குட்டி முதலாளிய வர்க்கம் மற்றும் தேசிய முதலாளி வர்க்கம்.

தேசிய முதலாளிவர்க்கத்துக்கெனத் தனியான பொருளாதார மதிப்பு நிலை (அந்தஸ்து) சமுதாயத்தில் உள்ளது. இதனால் அதற்கு இரட்டைப் பண்புள்ளது. இக்காரணத்தால் தேசியமுதலாளி வர்க்கம் புரட்சியின்பால் இடைவிடாத பற்றுறுதியுடன் இருப்பதில்லை. தேசிய முதலாளி வர்க்கத்தைப் பற்றிப் பருண்மையான ஆய்வு செய்த பிறகு மாவோ கீழ்க்காணும் முடிவுக்கு வந்தார்: அது சனநாயகப் புரட்சியில் சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பங்கேற்கும் என்ற போதிலும்கூட, அது ஊசலாட்டத்திற்கும், சமரசத்திற்கும் ஆட்படும்; ஏன், புரட்சியை விட்டு விலகி ஓடி எதிர்ப் புரட்சியில் சேரவும் செய்யலாம். எனவே, கட்சி உஷாராக இருக்கவேண்டுமென்றும், அதனுடைய சமரச மனப்பான்மைக்கு எதிராகத் தீர்மானகரமான, மாறாத ஆனால் அளவுக்கு மிஞ்சாத போராட்டத்தை நடத்தவேண்டும் என்றும் மாவோ உறுதியாகக் கூறினார். தேசிய முதலாளி வர்க்கம் ஒருமுனைப்படுவதையும், இரண்டு பகுதிகளாகப் பிரிவதையும்கூட மாவோ முன்னறிந்தார். ஒரு பகுதி புரட்சியில் சேர்வதன் மூலமும் தொழிலாளி வர்க்கத் தலைமையை அங்கீகரிப்பதன் மூலமும் இடது சாரியோடு சேரும். மற்ற பகுதி, எதிர்ப்புரட்சியில் சேர்ந்து தரகு முதலாளிய வர்க்கத்தைப் பின்பற்றுவதன் மூலம் வலது சாரியாக மாறும்.

உழைக்கும் வர்க்கம், சீனாவின் புதிய உற்பத்தி உறவுகளையும் புதிய சீனாவின் மிகவும் முற்போக்கான வர்க்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. எனவே தொழிலாளி வர்க்கம்தான் சீனப்புரட்சியின் தலைவராக இருக்கும் என்ற முடிவுக்கு மாவோ வந்தார். தொழிலாளி வர்க்கத்தின் மிகவும் பரந்துபட்ட, மேலும் மிக மிக நம்பகமான நண்பர்கள் உழவர் வர்க்கமும் குட்டி முதலாளிய வர்க்கமும் ஆகும்.

சீனச் சமுதாயத்திலிருந்த பல்வேறு வர்க்கங்களின் பொருளியல் மதிப்பு நிலைகளையும் அரசியல் நோக்குகளையும் பகுத்தாராய்ந்த பிறகு மாவோ பின்வருமாறு கூறினார்:

''ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள அனைத்து வர்க்கங்களும்—போர்பிரபுக்கள், அதிகார வர்க்கம், தரகு முதலாளிகள், பெருநிலப் பிரபுக்கள் மற்றுமுள்ள அவர்களைச் சார்ந்துள்ள அறிவாளிகளின் பிற்போக்குப் பிரிவினர்—நமது எதிரிகளாகும். தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் நமது புரட்சியின் தலைமைச் சக்தியாகும். அரைப்பாட்டாளி வர்க்கம் மற்றும் குட்டி முதலாளி வர்க்கத்தின் எல்லாப் பிரிவினரும் நமது மிக நெருங்கிய நண்பர்களாவார்கள். ஊசலாடுகின்ற நடுத்தர முதலாளியைப் பொருத்தவரையில், அதன் வலப்பகுதி நமது எதிரியாகவும், இடப்பகுதி நமது நண்பராகவும் மாறலாம். அந்த இடதுசாரிப் பகுதியைப் பொருத்தவரையில் நாம் இடைவிடாது விழிப்புடனிருந்து அது நமது அணியில் குழப்பத்தை ஏற்படுத்த அனுமதிக்கக்கூடாது.

மாவோ பன்னாட்டுச் சூழ்நிலையையும் கூடப் பகுத்தாராய்ந்தார். அக்டோபர் சோசலிசப் புரட்சிக்குப் பின்னால், உலகம் சோசலிச சக்திகளென்றும் ஏகாதிபத்திய சக்திகளென்றும் இரு பெரும் சக்திகளாகப் பிரிந்துவிட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார். சோசலிச சக்திகளோடு சேர்ந்து லெனினியப் பதாகையின் கீழ் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமின் ஒரு பகுதியாக மாறுவதன் மூலம் மட்டுமே சீனப் புரட்சி வெற்றியடைய முடியுமென்று அவர் கூறினார்.

பன்னாட்டு மற்றும் தேசிய சமூக சக்திகள் பற்றிய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு, புரட்சியின் ஆதார அரசியல் வழி முன்வைக்கப்பட்டது.

''சீனப்புரட்சி பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகும். அது தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட வேண்டும். அது உழவர் வர்க்கத்தையும் குட்டி முதலாளிய வர்க்கத்தையும் தனது மிக மிக நம்பகமான கூட்டாளியாக மதித்து ஏற்று, புரட்சிகர முதலாளிய வர்க்கத்துடன் ஒன்றிணைய வேண்டும். அதன் நோக்கம் ஏகாதிபத்தியர்கள் நிலப்பிரபுக்கள் மற்றும் தரகு முதலாளிகளை எதிர்த்துச் சண்டை போடுவதும், சனநாயகப் புரட்சியில் முழு வெற்றியடைய கடுமுயற்சி செய்வதும், சோசலிசத்தை நோக்கி முன்னேற வழிவகுப்பதுமாகும்.''

சீன சமுதாயத்திலிருந்து பல்வேறு வர்க்கங்களின் பொருளியல் மதிப்பு நிலையையும், அரசியல் நோக்குகளையும் மாவோ பகுத்-

துராய்ந்தார். வெவ்வேறு மூன்று கட்டங்களின் அனுபவத்தைத் தொகுத்தளித்தார். 1924-27இல் நடந்த அவை முதலாவதுமாபெரும் புரட்சி, 1927-37 காலகட்டத்திய விவசாயப் புரட்சிப் போர் மற்றும் ஜப்பானுக்கு எதிரான போர். புரட்சியின் தலையாய சக்தி களையும் அவற்றின் சேமிப்புச் சக்திகளையும் கையாள கீழ்க்கண்ட விதிகளை வகுத்தளித்தார்.

(1) ''சீனாஅயல்நாட்டு ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருக்கிற படியால், சீனத் தேசிய முதலாளிகள் ஏகாதிபத்தியத்துக்கும், நிலப் பிரபுத்துவப் போர்ப் பிரபுக்களுக்கும் எதிரான போராட்டத்தில் சில குறிப்பிட்ட சமயங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பங்கேற் பார்கள். எனவே அத்தகைய நேரங்களில் பாட்டாளி வர்க்கம் தேசிய முதலாளிகளுடன் சேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணி அமைக்கவும், முடிந்த வரையில் அதைக் காப்பாற்றவும் வேண்டும்.

(2) ''மற்ற வரலாற்றுச்சூழ்நிலைகளில் சீனத் தேசிய முதலாளி வர்க்கம் அதனுடைய பொருளியல் மற்றும் அரசியல் உரமின்மை காரணமாக ஊசலாடும். எனவே சீனப் புரட்சியின் ஐக்கிய முன்னணியின் சேர்மானம். எல்லாக் காலங்களிலும் மாறாதிருக்காது. அது மாறத்தக்கதேயாகும். ஒரு நேரம் தேசிய முதலாளியம் புரட்சியில் பங்கேற்கலாம். இன்னொரு நேரம் அது பங்கேற்காமல் போகலாம்.

(3) ''சீனப் பெரு முதலாளி வர்க்கம் தரகுப் பண்புடையதாகும். அது நேரடியாக ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்கிறது. மேலும் அது ஏகாதிபத்தியத்தால் ஊட்டி வளர்க்கப்படுகிறது. எனவே, சீனத் தரகு முதலாளிய வர்க்கம் எப்போதுமே புரட்சியின் இலக்கு ஆகும். எனினும் இந்தப் பெருமுதலாளிகளுக்குள்ளேயிருக்கும் வெவ்வேறு குழுக்கள் வெவ்வேறு ஏகாதிபத்தியங்களால் ஆதரிக்கப்படுகின்றன. எனவே இந்த ஏகாதிபத்திய சக்திகளுக்கிடையேயான முரண்பாடு கள் கூர்மையடைந்து, புரட்சி ஈட்டியின்முனை முக்கியமாக ஒரு தனிப்பட்ட ஏகாதிபத்தியத்தை நோக்கித் திரும்பியிருக்கும் போது மற்ற சக்திகளைச்சார்ந்திருக்கும் பெருமுதலாளியக் குழுக்கள் அந்தத் தனிப்பட்ட ஏகாதிபத்திய சக்திக்கு எதிரான போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்குச் சேரக்கூடும். அத்தகைய நேரங்களில் எதிரியைப் பலவீனப்படுத்தவும், தன்னுடைய சொந்த சேமிப்புச் சக்தியை அதிகரிப்பதற்கும் சீனப்பாட்டாளி வர்க்கம் இந்தக் குழுக்களோடு சேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்டலாம். அந்த ஐக்கிய முன்னணி புரட்சிக்கு நன்மை பயக்கும் என் றால் முடிந்தவரையில் அதைக்காப்பாற்ற வேண்டும்.

(4) "பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தோடு சேர்ந்து ஐக்கிய முன்னணி கட்டினாலும் கூடத் தரகுப் பெரு முதலாளிவர்க்கம் மிகமிகப் பிற்போக்கானதாகவே இருக்கிறது. பாட்டாளி வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் சித்தாந்த அரசியல் மற்றும் அமைப்பு வளர்ச்சிகளைத் தரகுப் பெருமுதலாளி வர்க்கம் முரட்டுப்பிடிவாதத்தோடு எதிர்க்கிறது. அவற்றின் மீது கட்டுப்பாடுகளை விதிக்க முயல்கிறது. பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக ஏமாற்றல், புகழ்ச்சி "அரித்தல்" மற்றும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் போன்ற தகர்க்கும் செயல் தந்திரங்களைப் பயன்படுத்துகிறது. மேலும், எதிரியிடம் சரணடைவதற்கும் ஐக்கிய முன்னணியைப் பிளப்பதற்கும் தயாரித்துக் கொள்ள இதையெல்லாம் தரகுப் பெரு முதலாளி வர்க்கம் செய்கிறது.

(5) "உழவர் வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான (நண்பர்) கூட்டாளி ஆகும்."

(6) "நகர்ப்புறக் குட்டி முதலாளிய வர்க்கம் நம்பகமான கூட்டாளி ஆகும்."

அரைக்குடியேற்ற அரை நிலவுடைமை சீனாவில் மக்கள் சனநாயகப் புரட்சியின் முதன்மை எதிரிகள் ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களும் ஆவர். இந்த இரண்டு எதிரிகளை அடிப்பதும் தேசியப்புரட்சியை நடத்துவதும் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார் (Feudal Landlord)களின் ஒடுக்குமுறையைத் தூக்கியெறிவதும் இதன் தலையாய கடமைகளாக இருந்தன. தேசியப்புரட்சியின் தலையாயதும் முக்கியமானதுமான கடமை ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவதாகும். இந்த இரண்டு மாபெரும் கடமைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகும். ஏகாதிபத்திய ஆட்சி தூக்கியெறியப்பட்டால் ஒழிய நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களின் ஆட்சியை ஒழித்துக்கட்ட முடியாது; ஏனெனில் ஏகாதிபத்தியமே அதை முக்கியமாகத் தாங்கி நின்றது. மறுதலையாகச் சொன்னால், நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்வர்க்கத்தைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தில் உழவர்களுக்கு உதவி செய்திருக்காவிட்டால், ஏகாதிபத்திய ஆட்சியைத் தூக்கி எறிவதற்கான ஆற்றல் மிக்கப் புரட்சிப் படைகளைக் கட்டியமைத்தல் சாத்தியமாகி இருக்காது. ஏனெனில் நிலப்பிரபுத்துவ நிலவுடைமை வர்க்கம் சீனாவில் ஏகாதிபத்திய ஆட்சிக்கான தலையாய சமூக அடித்தளமாக இருந்தது; உழவர் வர்க்கம் புரட்சியின் தலையாய சக்தியாக இருந்தது. எனவே

இரண்டு அடிப்படைக்கடமைகளும், தேசியப் புரட்சியும், சனநாயகப் புரட்சியும் ஒரே சமயத்தில் இருவேறு பட்டதாகவும் ஒன்றிணைந்ததாகவும் உள்ளன.

தேசியப்புரட்சியும், சனநாயகப் புரட்சியும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட இரண்டு புரட்சிக்கட்டங்களில்லை. ஏகாதிபத்தியம் முதலில் முந்தைய சீன சமூக நிலைமைகளின் ஆளும் பகுதியினரோடு ஒருங்கிணைந்தது—அதாவது நிலப்பிரபுக்கள், வணிக மற்றும் வட்டித்தொழில் முதலாளிகளோடு பெரும்பான்மை மக்களுக்கு எதிராகக் கூட்டுசேர்ந்தது. முதலாளியத்துக்கு முந்திய எல்லாவகையான சுரண்டல் வடிவங்களையும் (குறிப்பாக கிராமங்களில்) பாதுகாக்கவும் நீட்டிக்கவும் ஏகாதிபத்தியம் முயற்சி செய்தது. ஏனெனில் ஏகாதிபத்தியம் மற்றும் அதன் பிற்போக்கு நண்பர்களின் வாழ்வுக்கான அடித்தளமாக அவைதான் விளங்கின. ஏகாதிபத்தியம் தனது நிதி மற்றும் இராணுவ வலிமை அனைத்தையும் பயன்படுத்திச் சீனாவில் நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களையும் முழு அதிகார வர்க்க இராணுவ மேற்கட்டுமானத்தையும் தாங்கி நின்றது; தூண்டி ஊக்கமூட்டியது; போலி உரிமை கொடுத்துப் பாதுகாத்தது. ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ நிலவுடைமை வர்க்கத்துடனான கூட்டணி காரணமாக, சீனாவில் விவசாயத்தில் முதலாளிய வளர்ச்சியின் ஐங்கர் பாணிமுறை பரிணமித்து வளருவதற்கு வாய்ப்பே இருக்கவில்லை. எனவே, தேசியப் புரட்சிக் கடமையை நிறைவேற்றுவதானாலும் சரி, சனநாயகப் புரட்சிக் கடமையை நிறைவேற்றுவதானாலும் சரி, உழவர் வர்க்கம் புரட்சியின் தலையாய சக்தியாக விளங்கியது. ருஷ்யாவின் சனநாயகப்புரட்சியில் பாட்டாளிவர்க்கத்தின் உடனடிச் சேமிப்புச் சக்தியாக மட்டுமே உழவர் வர்க்கம் விளங்கியது போலில்லாமல் சீனாவின் சனநாயகப் புரட்சியில் உழவர் வர்க்கம் உந்து சக்தியாக விளங்கியது. எனவே, அரைக்குடியேற்ற அரை நிலவுடைமைச் சீனாவில் புதிய சனநாயகப் புரட்சியின் பொதுப்பாதையை வரையறுப்பதில் உழவர் பிரச்சினை ஆதிக்கநிலை அம்சமாக விளங்கியது; எனவே, சனநாயகப் புரட்சி சாராம்சத்தில் விவசாயப் புரட்சியாகவும், கூடவே உழவர்களின் புரட்சிப்போராகவும் இருந்தது.

ஏராளமான ஆற்றல் மிக்க, அதே வேளையில் ஒன்றோடொன்று சச்சரவிட்டுக் கொண்டிருந்த ஏகாதிபத்திய நாடுகளாலும், நிலப் பிரபுத்துவ சக்திகளாலும் ஆதிக்கம் செலுத்தப்பட்ட ஒரு பெரிய அரைக் குடியேற்ற, அரை நிலப்பிரபுத்துவ நாட்டின் சனநாயகப் புரட்சியாக அது இருந்தது. அந்த நாட்டின் பொருளியல் மற்றும் அரசியல் வளர்ச்சி அதீதமான ஏற்றத்தாழ்வுகளோடு சீரற்று

இருந்தது, சீனாவின் புதிய சனநாயகப் புரட்சியின் வளர்ச்சியில் ஏற்பட்ட ஆதீத ஏற்றத் தாழ்வுகளை இது தீர்மானித்தது. இதனால் தான் ஒரு நாடளாவிய வெற்றியை அடைவதற்கு முன்பு, புரட்சி ஒரு நீண்டகால, வளைவு நெளிவுகளுடன் கூடிய போராட்டத்தின் வழியே செல்ல வேண்டியது இன்றியமையாததாகியது. அதே சமயம், இந்தப் போராட்டத்தில் எதிரியின் முரண்பாடுகளை விரிவான அளவில் பயன்படுத்துவதையும் ஆயுதம் தாங்கிய புரட்சிகரத் தளப் பகுதிகளைக் கட்டிப் பராமரிப்பதையும் அது சாத்தியமாக்கியது. அத்தகைய தளங்கள் எதிரியின் ஆளுகை முற்றிலும் பலவீனமாக இருக்கிற பரந்த பிரதேசங்களில் முதலில் கட்டப்பட வேண்டும். இவைதான் சீனப்புரட்சியின் அடிப்படைக் குணாம்சமும், அடிப்படைக் குறைபாடுகளும் ஆகும்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளிய நாடுகளின் ஏற்றத் தாழ்வான பொருளியல் மற்றும் அரசியல் வளர்ச்சி விதிகளை மாவோ அரைக்குடியேற்ற அரை நிலவுடைமை சீனாவுக்குப் பிரயோகித்தார். அவர் சீனாவில் ஏற்றத்தாழ்வான பொருளியல் மற்றும் அரசியல் வளர்ச்சியின் விதியை விளக்கினார். வெள்ளை ஆட்சி சுற்றி வளைத்திருந்தாலும் அதன் நடுவே சில அல்லது பல சிறிய சிவப்பு ஆட்சிப் பகுதிகளைக் கொண்டுவரச் சாத்தியம் உள்ளது; அங்கே சிவப்பு ஆட்சி நிலவி நின்று வளர முடியும்; எதிரி சக்திகள் பலவீனமாக உள்ள நாட்டுப் புறத்தில் புரட்சி முதலில் வெற்றிபெறும்; அதை அடுத்து நாடு முழுவதும் புரட்சி வெற்றிபெற முடியும் என்று மாவோ விளக்கினார். புரட்சிகரத் தளப்பகுதிகளை நிறுவுவதன் மூலமும் அரசியல் அதிகாரத்தை அடுத்தடுத்து முறைப்படி அமைப்பதன் மூலமும் மக்களின் ஆயுதந் தாங்கிய படைகளைக் கட்டி அமைப்பதன் மூலமும் மட்டுமே புரட்சிகர உயர் அலையை விரைவுபடுத்த முடியும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

சீனப்புரட்சிப் போரின் தலையாய பண்பியல்புகளாக கீழ்க்கண்ட நான்கை மாவோ சுட்டிக்காட்டினார்: ''அரசியல் ரீதியாகவும் பொருளியல் ரீதியாகவும் ஏற்றத்தாழ்வாக வளர்ச்சியடைந்திருப்பதுவும், ஒரு மாபெரும் புரட்சியினூடே கடந்து வந்திருப்பதுவுமான ஒரு பரந்த அரைக்குடியேற்ற நாடு; ஒரு பெரிய ஆற்றல் மிக்க எதிரி; ஒரு சிறிய பலவீனமான செம்படை; விவசாயப் புரட்சி. இந்தப் பண்பியல்புகள் சீனாவின் புரட்சிப் போரையும், பல போர்த்தந்திர மற்றும் செயல்தந்திரக் கோட்பாடுகளையும் தீர்மானிக்கின்றன.

இந்தக் கோட்பாடுகள் ஒருபுறம் செம்படை வளர்ந்து அதன் எதிரியைத் தோற்கடிப்பதற்கான சாத்தியத்தையும், மறுபுறம் செம்படை மிகவேகமாக வளர்ந்து அதன் எதிரியை மிக விரைவாகத் தோற்கடிக்க இயலாமையையும் தீர்மானித்தன. வேறு சொற்களில் கூறினால் அது ஒரு நீண்ட காலப்போர் ஆக இருந்தது. இது சீனப் புரட்சிப்போரின் அடிப்படை விதியாகும். இதிலிருந்து வேறுபல விதிகளும் தோன்றின. இந்தப் பண்பியல்புகளிலிருந்து தோன்றிய ஆதாரப் போர்த்தந்திர மற்றும் செயல்தந்திரக்கோட்பாடுகளாவன, படை ஒரு நீண்டகாலப் போர் முறையிலான போர்த் தந்திரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்; எனினும் செயல்பாடு மற்றும் செயல்தந்திரத் திசைவழியின் கோட்பாடு அதற்கு நேர்மாறான தாகும்—கால நீட்டிப்புச் செய்யாமல் மிக விரைவான முடிவு எடுத்தலாகும். சீனப்புரட்சிப் போரின் இராணுவப் போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரம் இத்தகையதே ஆகும்.

அரசியல் போர்த்தந்திரம், இராணுவப் போர்த்தந்திரம் ஆகிய இரண்டும் மார்க்சியக் கோட்பாட்டால் வழிநடத்தப்படுகின்றன. இவை மார்க்சியச் செயல்திட்டம் அளித்த தகவலை ஆதாரமாகக் கொண்டவை ஆகும். ஆனால் அரசியல் போர்த்தந்திரமும் இராணுவப் போர்த்தந்திரமும் ஒன்றில்லை. இரண்டும் வெவ்வேறானவையாகும்; அதே நேரத்தில் ஒன்று மற்றதிலிருந்து விலகித் தனியே நிற்பதோடு ஒன்று மற்றதற்குச் சேவை செய்கிறது. இராணுவப் போர்த்தந்திரத் தில் தலையாய அடிகொடுக்கும் திசைவழியைத் தீர்மானிப்பது என் பது போர்க்கால முழுவதிலுமான செயல்பாடுகளை முன்கூட்டியே தீர் மானிப்பது என்று பொருள்படும்; அதாவது, பத்தில் ஒன்பது பங்கு அளவுக்குப் போர் முழுவதன் தலைவிதியை முன்கூட்டியே தீர்மானிப் பது ஆகும். அரசியல் போர்த்தந்திரத்தில் தலையாய அடிகொடுக்கும் திசைவழியைத் தீர்மானிப்பது என்பது அந்தக் குறிப்பிட்ட வரலாற் றுக்காலப்பகுதியில், குறிப்பிட்ட நாட்டின் பாட்டாளிவர்க்க இயக் கத்தின் திசைவழியைத் தீர்மானிப்பது ஆகும்; அது அந்தக் குறிப் பிட்ட கட்டத்தில் புரட்சியின் காலப்பகுதி முழுவதிலும் கட்சி செய்ய வேண்டிய வேலையின் பண்பைத் தீர்மானிக்கிறது. இராணுவப் போர்த்தந்திரத்தில் போர்க்காலப்பகுதி முழுவதிலும் மக்களின் ஆயுதந்தாங்கிய படைகளை எப்படிக் கையாள்வது என்பது பற்றிப் போர்த்தந்திரத்திட்டம் பார்த்துக் கொள்கிறது. அரசியல் போர்த் தந்திரத்தில், அந்தக் குறிப்பிட்ட கட்டம் முழுவதின் போதும் சமூக முனையில் பாட்டாளிவர்க்கத்தையும் மற்றும் அதன் கூட்டாளிகளை யும் (அதாவது சமூக வர்க்கங்களும் மக்களும்) எப்படிக் கையாள்வது

என்பதைப்பற்றிப் போர்த்தந்திரத் திட்டம் பார்த்துக்கொள்கிறது. அரசியல் போர்த்தந்திரம் புரட்சியின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி முழுவதிலும் அடிப்படையில் மாறாமல் இருக்கிறது. ஏனெனில் அது இயக்கத்தை இந்தக் காலப்பகுதி முழுவதுமான பொதுக்குறிக்கோளை நோக்கி நெறிப்படுத்துகிறது. மேலும் இதன் நோக்கம் இந்தக் காலப் பகுதி முழுவதிலும் தொகுத்து நடத்தப்படும் வர்க்கங்களின் போரில் வெல்லுவதாகும். எனவே, அது இந்தக் காலப்பகுதி முழுவதிலும் மாறாதிருக்கிறது. வர்க்கங்களுக்கு இடையிலான அடிப்படை உறவு மாறாதிருந்தால், பொது மற்றும் அடிப்படை நோக்கங்கள் வரலாற்றுத் திருப்பங்களுடன் கூடவே மாறுவதில்லை; ஆனால் புரட்சியின் ஒரு காலப் பகுதிக்குள்ளேயே இராணுவப் போர்த்தந்திரம் மாறுகிறது. ஏனெனில் புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்குள்ளேயே ஒன்றுக்கு மேற்பட்ட போர்கள் இருக்கலாம்; மேலும், ''வெவ்வேறு போர்களை நெறிப்படுத்துவதற்கான வெவ்வேறு விதிகள் இந்தப் போர்களின் வெவ்வேறு சூழ்நிலைகளால் தீர்மானிக்கப் படுகின்றன. இந்த விதிகள் காலம், இடம், இயல்பு ஆகியவற்றில் மாறுகின்றன.'' மாவோ சொன்னார்: ''எங்கெல்லாம் போர் இருக்கிறதோ அங்கெல்லாம் மொத்தமாக ஒரு போர் நிலைமை இருக்கிறது. போர் நிலைமை மொத்தமாக அல்லது உலகம் முழுவதையுமோ, ஒரு நாடு முழுவதையுமோ, அல்லது சுதந்திரமான கொரில்லா மண்டலத்தையோ, அல்லது சுதந்திரமான பெரிய செயற்பாட்டுமுனையையோ தழுவி இருக்கலாம். பல்வேறு சிறப்புக் கூறுகளையும், கட்டங்களையும் விரிவாகப் பெற்றுள்ள ஒரு போர் நிலைமை மொத்தமான போர் நிலைமையாக உருவாகிறது. ஒரு போர் நிலைமையை மொத்தமாக ஆளக் கூடிய போரை நெறிப் படுத்துவதற்கான இந்த விதிகளைக் கற்பதுதான் போர்த்தந்திர அறிவியலின் கடமையாகும். போரியக்க அறிவியல் மற்றும் செயல் தந்திர அறிவியலின் கடமைகள் ஒரு பகுதி (Partial) நிலைமையை ஆளுகின்ற ஒரு போரை மற்றும் உடனடியான முறையில், செயலுக்கான, எனவே அதன் நோக்கத்துக்கான நிபந்தனைகளைத் தீர்மானிக்கின்றனர் வரலாற்று நிகழ்முறையின் தனிப்பட்ட காலப்பகுதி ஒவ்வொன்றின் பருண்மையான பொருளியல் மற்றும் அரசியல் நிலைமை (Conditions)களால் பொதுக்கடமைகள் இன்றியமையாதவாறு மாற்றத்திற்கு உள்ளாக்கப்படும். எனவே, வரலாற்று நிகழ்முறையின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் பருண்மையான அரசியல் மற்றும் பொருளியல் நிலைமைகளைத் துல்லியமாக மதிப்பீடு செய்வது அந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியின் அரசியல் செயல்தந்திரத்தை வகுப்பதில் தவிர்க்க இயலாததாகும். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கான பாட்டாளிவர்க்க இயக்கத்தின் உடனடி நோக்கத்தையும் திசை

வழியையும் தீர்மானிப்பதே செயல்தந்திரத்தின் வேலையாகும். ''கட்சியின் செயல்தந்திரம் என்றால் கட்சியின் அரசியல் நடத்தை அல்லது பண்பு, திசைவழி மற்றும் அதன் நடவடிக்கை முறைகளும் ஆகும்'' என்று லெனின் சொன்னார்.

கட்சியின் மொத்த அரசியல் நடத்தையைப் புதிய கடமைகளின் கண்ணோட்டத்தில் அல்லது புதிய கடமைகளின் நோக்கில் அல்லது ஒரு புதிய அரசியல் நிலைமையின் நோக்கில் துல்லியமாக வரையறுக்கக் கட்சி செயல்தந்திரத்தை வகுக்கிறது என்று அவர் மேலும் கூறினார். அரசியல் செயல்தந்திரம் அல்லது கட்சியின் அரசியல் நடத்தை வழி ஒவ்வொரு வரலாற்று நிலைமைக்கு மட்டுமே உரித்தான வர்க்கங்களிடையேயான உறவுகளையும், பருண்மையான சிறப்புக் கூறுகளையும் மிகத்துல்லியமாகவும், புறவயமாக நிரூபிக்கத்தக்க வகையிலும் பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் அமையவேண்டும்.

கொள்கைக்கு ஒரு சரியான அறிவியல் அடிப்படையைக் கொடுப்பதற்கு இது முற்றிலும் அவசியமானதாகும். ஒரு தனிப்பட்ட சமயத்தில் நிலைமையைப் பகுத்தாராயவும், செயல் தந்திரத்தை வகுக்கவும், ''முதலாவதாக சமூக, பொருளியல் மற்றும் அரசியல் வளர்ச்சியின் பொதுப்போக்குகள் என்ற நிலைப்பாட்டிலிருந்து நாம் கணக்கிலெடுத்துக் கொண்ட புரட்சிகர சூழ்நிலைமையின் இயல்பை ஆராய வேண்டும்.

''இரண்டாவதாக, இன்றைக்கு ருஷ்யாவில் உள்ள அரசியல் குழுக்களின் (மற்றும் கட்சிகளின்) சேர்க்கையை ஆராய வேண்டும்.

''மூன்றாவதாக, இந்த நிலைமையில் சமூக சனநாயக தொழிலாளர் கட்சியின் (SDLP) அடிப்படைக் கடமைகளை அதன் சமூக சக்திகளின் அரசியல் குழுக்களின் சேர்க்கையுடன் ஆராய வேண்டும்'' என்று லெனின் கூறினார்.

தோழர் ஸ்டாலின் சொன்னார்: ''ஒப்பீட்டளவில், இயக்கத்தின் அலை ஏற்றம் அல்லது இறக்கத்தின் குறுகிய காலப்பகுதியில் பாட்டாளிவர்க்கத்தின் நடத்தை வழியையும், புரட்சியின் எழுச்சி அல்லது சரிவையும், பழைய போராட்ட வடிவங்களையும் அமைப்பு வடிவங்களையும் புதியவைகளால் அகற்றுவதன் மூலம் இந்த வழியைச் செயல்படுத்துவதற்கான சண்டையையும், பழைய முழக்கங்களைப் புதிய முழக்கங்களால் அகற்றுவதையும், இது போன்ற

பிற வடிவங்களை இணைப்பதன் மூலமும் தீர்மானிப்பதே செயல் தந்திரம் ஆகும். செயல்தந்திரம் என்பது போர்த்தந்திரத்துக்குக் கீழ்ப்படிந்து அதற்குச் சேவை செய்கிற போர்த்தந்திரத்தின் ஒரு பகுதியேயாகும்.

அவர் மேலும் சொன்னதாவது: ''அலை ஏற்றத்திற்கும் இறக்கத்துக்கும் ஏற்றவாறு செயல் தந்திரம் மாறுகிறது.''

ருஷ்யப் புரட்சியின் அனுபவங்களைத் தொகுத்து தோழர் ஸ்டாலின் கூறினார்.

''1903 முதல் 1905 வரையிலான காலத்தில் புரட்சி அலை உயர்ந்து கொண்டே போனது; இயக்கம் உயர்நிலையில் இருந்தது; செயல தந்திரமும் இந்த உண்மையிலிருந்தே தொடங்கி முன்னேற வேண்டியிருந்தது. எனவே, அப்போது கட்சி, தாக்குதல் செயல் தந்திரத்தை மேற்கொண்டது. அதன்படி, புரட்சியின் உயரும் அலைகளின் தேவைக்கேற்றபடி அப்போது போராட்டங்கள் புரட்சிகரமாக இருந்தன. உள்ளூர் அரசியல் வேலை நிறுத்தங்கள், அரசியல் ஆர்ப்பாட்டங்கள். பொது வேலை நிறுத்தம், டூமாவைப் (பாராளு மன்றம்) புறக்கணித்தல், எழுச்சி, புரட்சிகரப் போர் முழக்கங்கள் அந்தக் காலகட்டத்திலான வெற்றிகரமான போராட்ட முறைகள் அத்தகையனவாக இருந்தது. போராட்ட முறைகளிலான இந்த மாறுதல்களைத் தொடர்ந்து அமைப்பு முறைகளிலும் மாற்றங்கள் வந்தன. ஆலைக் குழுக்கள், புரட்சிகர உழவர் குழுக்கள், வேலை நிறுத்தக் குழுக்கள், தொழிலாளர் சோவியத்துகள், கிட்டத்தட்ட வெளிப்படையாகச் செயல்படும் தொழிலாளர் கட்சி-அந்தக் காலப்பகுதியில் அமைப்பு வடிவங்கள் இத்தகையனவாக இருந்தன. 1907 முதல் 1912 வரையிலான காலப் பகுதியில் செயல் தந்திர ரீதியாகக்கட்சி பின்வாங்க வேண்டியகட்டாயத்துக்குள்ளானது; ஏனெனில் அப்போது புரட்சிகர இயக்கத்தில் ஒரு சரிவை நாம் கண்டோம். புரட்சி அலையின் இறக்கத்தினால் செயல்தந்திரம் இந்த உண்மையைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அதற்கேற்றபடி போராட்ட வடிவங்களும் அத்துடன் கூடவே அமைப்பு வடிவங்களும் மாறின. டூமாவைப் புறக்கணிப்பதற்கு மாறாக-டூமாவில் பங்கேற்பு, டூமாவுக்கு வெளியில் வெளிப்படையான புரட்சி நடவடிக்கைகளுக்கு மாறாக—டூமாவில் வேலை செய்யும் செயல்கள் பொது அரசியல் வேலைநிறுத்தங்களுக்கு மாறாக—பகுதி (Partial) பொருளியல் வேலை நிறுத்தங்கள் என்றாயின. பொதுவாக, நடவடிக்கைகளில் ஒரு மந்தநிலை ஏற்பட்டது என்று சுருக்கமாகக்

கூறலாம். அந்தக் காலப் பகுதியின்போது கட்சி தலைமறைவாகப் போகவேண்டியதாயிற்று என்பது உண்மைதான். அதே வேளையில் புரட்சிகர மக்கள்திரள் அமைப்புகளைப் பண்பாட்டு, கல்வி, கூட்டுறவு, காப்பீடு மற்றும் பிற சட்டபூர்வ அமைப்புகள் அகற்றி விட்டன.''

சீனாவின் முதலாளிய சனநாயகப் புரட்சியில் இரண்டு அடிப்படைத் தனியியல்புகள் இருந்தன. தோழர் மாவோ சொன்னார்:

(1) ''பாட்டாளிவர்க்கம் முதலாளி வர்க்கத்துடன் ஒரு புரட்சிகர தேசிய ஐக்கிய முன்னணியை நிறுவ வேண்டும் அல்லது அதை முறிக்க வேண்டும்.''

(2) ''ஆயுதப் போராட்டமே புரட்சியின் தலையாய வடிவம் ஆகும். இந்த இரண்டு தனிச்சிறப்பியல்புகளும் கட்சியின் அரசியல் வழியைத் தீர்மானித்தன.''

சீனாவின் முதலாளிய சனநாயகப் புரட்சியில் இந்த இரண்டு தனிச் சிறப்பியல்புகளும் தோன்றுவதற்கு, அந்த நேரத்தில் அங்கே நிலவிய பின்வரும் நிலைமைகளே காரணமாகும்.

(1) ''கட்சி முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து ஒரு தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டியது. அது முறிந்த பிறகு பெரு முதலாளிய வர்க்கத்துடனும் அதன் கூட்டாளிகளுடனும் கடுமையான தோர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டது...சீன முதலாளி வர்க்கத்துடனான இந்தவகைச் சிக்கலான உறவின் மூலமாகத்தான் சீனப்புரட்சியும், சீனப்பொதுவுடைமைக் கட்சியும் இந்நிகழ்ச்சி களினூடே வளர்ந்து முன்னேறின. இது ஒரு தனிவகை வரலாற்றுச் சிறப்பியல்பாகும்; இது குடியேற்ற, மற்றும் அரைக் குடியேற்ற நாடுகளின் புரட்சிக்கே உரித்தானதாகும். இதை வேறெந்த முதலாளிய நாட்டின் புரட்சி வரலாற்றிலும் காணமுடியாது.

(2). சீனாவில் ஆயுதம் தாங்கிய புரட்சி ஆயுதந் தாங்கிய எதிர்ப்புரட்சியுடன் போரிடுகிறது. இது சீனப் புரட்சியின் தனிச் சிறப்பியல்புகளில் ஒன்றாகும்; இது சீனப் புரட்சியின் நற்பண்புகளில் ஒன்றாகும்.

(3). ''...சீனப்புரட்சிப்போரின் முதலாவது பண்பியல்பு, அது ஒரு பரந்த அரைக்குடியேற்ற நாட்டில், அரசியல் ரீதியாகவும்

பொருளியல் ரீதியாகவும் ஏற்றத் தாழ்வாக வளர்ச்சியடைந்துள்ள ஒரு நாட்டில், முன்பே ஒரு புரட்சி நடைபெற்ற ஒரு நாட்டில் நடைபெறுகிறது என்பதாகும். இந்தப் பண்பு நமது இராணுவப் போர்த் தந்திரம் மற்றும் செயல் தந்திரத்தையும், கூடவே அரசியல் போர்த் தந்திரம் மற்றும் செயல் தந்திரத்தையும் தீர்மானிக்கும் அடிப்படையாகும்.

(4) ''வேறு நாடுகளில் முதலாளியக் கட்சி ஒவ்வொன்றும் தன் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் ஓர் ஆயுதப்படையை வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால் சீனாவில் விஷயங்கள் வேறு மாதிரியாக உள்ளன. அங்கே, நாடு நிலப்பிரபுத்துவப் பிரிவினைக்கு உள்ளாகி இருப்பதால் அதிகமான ஆயுதங்களை வைத்திருக்கக் கூடிய நிலப்பிரபுக்களோ அல்லது முதலாளியக் குழுக்களோ அல்லது கட்சிகளோ அதிக ஆற்றலுடையனவாக விளங்குகின்றன. மேலதிக ஆயுதம் உடையவைகள் மேலதிக ஆற்றலுடன் இருக்கின்றன.

(5) சீர்திருத்த வாதத்துக்கான சமூக அடித்தளம் சீனாவில் நிலவவில்லை.

மேலே குறிப்பிட்ட இரண்டு ஆதார தனிச் சிறப்பியல்புகளைத் தவிர, கட்சியின் செயல் தந்திரத்தை வழி நடத்திய மற்ற போர்த் தந்திரக் கோட்பாடுகளாவன:

1) பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுதல்.

2) சீன சனநாயகப் புரட்சி சாராம்சத்தில் விவசாயப் புரட்சியாகும். அத்துடன் அது உழவர்களின் புரட்சிப்போர் ஆகும்.

3) புரட்சியின் தலையாய சக்திகளையும் அவற்றின் சேமிப்பு சக்திகளையும் கையாள்வதற்கான விதிகள்.

4) முதலாளி வர்க்கத்துடன் ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்டுகிற அதே வேளையில் ஐக்கிய முன்னணிக்குள் முதலாளி வர்க்கத்தை எதிர்த்து அரசியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் போரிடுவது; உழைக்கும் வர்க்க இயக்கத்துக்குள்ளே வலது மற்றும் இடது விலகல்களை எதிர்த்துப் போரிடுவது.

5) புதிய சனநாயகப் புரட்சியின் வரலாற்றில் ஏற்றத் தாழ்வான வளர்ச்சியின் விதி.

புதிய ஜனநாயகத்தின் பொதுச்செயல் திட்டத்தை ஆதார மாகக் கொண்டு ஒவ்வொரு காலப்பகுதிக்குமான தனிச் செயல் திட்டங்களைச் சீனப் பொதுவுடைமைக் கட்சி முன் வைத்தது. வர லாற்று வளர்ச்சிப் போக்குடன் பொருந்தக் கூடிய அடிப்படையான அரசியல் முழக்கங்களை முன் வைத்தும், இந்த அரசியல் முழக்கங் களை யதார்த்த நடைமுறையாக மாற்றுவதற்காக வளர்ச்சியின் ஒவ்வொரு காலகட்டத்திற்கும், ஒவ்வொரு பெரிய நிகழ்ச்சித் திருப்பங்களுக்கும் செயல் முழக்கங்களை முன்வைத்து நாட்டிலுள்ள அனைத்துப் புரட்சிகர வர்க்கங்களுக்கும் தனது கட்சியின் மூலமாகப் பாட்டாளிவர்க்கம் அரசியல் தலைமை அளித்தது.''

தோழர் மாவோ சொன்னார்: ''செயல் தந்திரத் திசைவழி சரியாக இருப்பதற்கு, தோழர், ஸ்டாலின் சுட்டிக்காட்டியபடி, நிலைமையைச் சரியாகப்பகுத்தாராய வேண்டும். (வர்க்க சக்திகளின் உறவைச் சரியாக மதிப்பிடலும், இயக்கத்தின் அலை ஏற்றம் அலை இறக்கம் ஆகியவற்றைச் சரியாக நடுநின்று நோக்கி மதிப்பிடலும்); அவற்றின் மீது அமைந்த சரியான போராட்ட வடிவங்களும், அமைப்பு வடிவங்களும் தேவைப்படுகின்றன. மேலும் அதன் எதிரி முகாமில் தோன்றும் ஒவ்வொரு பிளவையும் சாதகமாகச் சரியாகப் பயன் படுத்த வேண்டியுள்ளது; கூட்டாளிகளைக் கண்டுபிடித்துச் சேர்க்கும் திறமை தேவைப்படுகிறது. அதற்கான முன் மாதிரிகளில் ஒன்று சீனப் புரட்சி இயக்கத்துக்கான தோழர் மாவேவின் திசை வழியாகும்.''

இது சீனாவில் எவ்வளவு பருண்மையாக நடைமுறைப்படுத்தப் பட்டது என்பதைப் பின் வருகிற தோழர் மாவோவின் கட்டுரை யின் மேற்கோள்களிலிருந்தும் கற்றறிய முடியும்:-

சிறு பொறி பெருங் காட்டுத்தீயை முட்ட முடியும்.

போர் மற்றும் போர்த் தந்திரப் பிரச்சினைள்.

'கம்யூனிஸ்டை அறிமுகம்' செய்வது.

நமது கட்சியின் வரலாற்றில் சில பிரச்சினைகள் பற்றிய தீர்மானம்.

மார்க்சிய லெனினியப் போர்த்தந்திரம் மற்றும் செயல் தந் திரப் பொதுக் கோட்பாடுகளைக் கற்பதுடன், பன்னாட்டுப் பாட் டாளி வர்க்க இயக்கத்தின் அனுபவங்களை விமர்சன ரீதியாகக் கற்றறிவதற்கான ஒரு முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக லெனின் தலைமையிலான போல்ஷெவிக்குகளின்

அனுபவங்களிலிருந்தும், மாவோவின் தலைமையிலான சீனப் பொதுவுடைமைக் கட்சியின் புரட்சி அனுபவங்களிலிருந்தும் கற்றறிய வேண்டும். வரலாற்று இணை நிகழ்ச்சிகளை வைத்து முடிவு எடுக்கும் முறையை நாம் கடைப்பிடிக்கக் கூடாது. அப்படிச் செய்யும் போது, ரஷ்யப்பாதை சீனப் பாதையிலிருந்து வேறுபட்டிருப்பதால், ஒரு பாதையிலிருந்து சிலவற்றையும், அடுத்த பாதையிலிருந்து வேறு சிலவற்றையும் பொறுக்கி எடுக்கிற, பல கோட்பாடுகளின் கருத்துக்களைத் தேர்ந்து ஏற்றுக் கொள்கிற முறையைக் கடைபிடிப்பது தவறாகும்.

இந்தக் காலகட்டத்தில் நமது புரட்சி ஓர் அரைக் குடியேற்ற அரை நிலவுடைமை நாட்டிலான மக்கள் சனநாயகப் புரட்சியாகும்; எனவே, தோழர் மாவோவின் தலைமையில் நடந்த சீனாவின் மக்கள் சனநாயகப் புரட்சி கடந்துவந்த பாதையைப் போன்று அடிப்படையில் நமது புரட்சியின் பாதை உள்ளது. சீனமக்கள் சனநாயகப் புரட்சியின் பாடங்களை இந்தக் காலகட்டத்திலான நமது புரட்சியின் புறவய நிலைமைகளோடு ஒப்பிட்டு நம் நாட்டின் மக்கள் சனநாயகப் புரட்சியின் போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

பாட்டாளிவர்க்க இயக்கத்தின் போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரப் பிரச்சினைகள் பற்றிய மார்க்சிய—லெனினிய நிலை, நோக்கு, மற்றும் முறைகளை வாசகர்கள் புரிந்துகொள்ள இங்கே கொடுக்கப்பட்டுள்ள கட்டுரைகள் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சென்னை
அக்டோபர், 1988.

சமரன் பதிப்பகம்

# ரஷ்யப் பொதுவுடைமையாளர்களின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் என்ற பிரச்சினை குறித்து...

**ஜே. வி. ஸ்டாலின்**

பிரஸ்னியா மாவட்டத்திலுள்ள தொழிலாளர் மன்றத்திலும் ஸ்பெர்ட்லோவ் பல்கலைக்கழகத்திலுள்ள பொதுவுடைமையாளர் குழுவுக்கும் ''ரஷ்யப் பொதுவுடைமையாளர்களின் போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவைக் குறித்து'' என்ற தலைப்பில் பல்வேறு சமயங்களில் நான் ஆற்றிய சொற்பொழிவுகளை அடிப்படையாகக் கொண்டதே இக்கட்டுரையாகும்.

பிரஸ்னியா, ஸ்பெர்ட்லோவ் தோழர்களின் விருப்பங்களை நிறைவு செய்வது எனது கடமை என்று நான் நினைப்பதோடு மட்டுமல்லாமல் இளந்தலைமுறையைச் சார்ந்த நமது கட்சி ஊழியர்களுக்கு இக்கட்டுரை சிறிது பயன்படும் என்று எனக்குத் தோன்றுவதாலுமே நான் வெளியிட முடிவு செய்துள்ளேன். ஆயினும் நமது முன்னணித் தோழர்களால் ரஷ்யக் கட்சி வெளியீடுகளில் பல்வேறு சமயங்களில் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளவற்றின் சாரத்தோடு ஒப்பிடும்போது இக்கட்டுரை புதிதாக எதையும் சொல்வதில்லை என்பதைக் குறிப்பிடுவது அவசியமென்று நான் கருதுகிறேன். தோழர் லெனினின் அடிப்படைக் கருத்துக்கள் பற்றிய ஒரு சுருக்கமான, முறைப்படுத்தப்பட்ட விளக்கமே இக்கட்டுரை என்று கருதப்பட வேண்டும்.

## I. அடிப்படைக் கருத்தாக்கங்கள்

### அ. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் இரு அம்சங்கள்

அரசியல் போர்த் தந்திரமும் செயல் தந்திரமும் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பற்றியன. ஆனால் தொழிலாளிவர்க்க

இயக்கமோ தன்னுள் இரு அம்சங்களைக் கொண்டுள்ளது; ஒன்று, புறவயமான அம்சம் (Objective aspect); அதாவது தன்னிகழ்வான அம்சம் (Spontaneous aspect) மற்றது, அகவயமான அம்சம் (Subjective aspect); அதாவது உணர்வு பூர்வமான அம்சம் (Conscious aspect). புறவயமானதும் தன்னிகழ்வானதுமான அம்சம் என்பது பாட்டாளிவர்க்கத்தின் உணர்வுப்பூர்வமான நெறிமுறைப்படுத்தும் சித்தத்தைச் சார்ந்திராது சுயேச்சையாக நடைபெறும் நிகழ்ச்சிப்போக்குகளின் தொகுதி ஆகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி, முதலாளியத்தின் வளர்ச்சி, பழைய அரசாட்சி சிதைந்து அழிவது, பாட்டாளி வர்க்கமும் அதைச் சுற்றியுள்ள பிற வர்க்கங்களும் தாமாகக் கிளர்ந்தெழும் இயக்கங்கள், வர்க்கங்களுக்கிடையே நிகழும் மோதல்கள்—இவையாவும் பாட்டாளிவர்க்கத்தின் சித்தத்தைச் சார்ந்திராமல் தாமாக உருவாகி வளரும் நிகழ்வுகள். இதுதான் தொழிலாளிவர்க்க இயக்கத்தின் புறவய அம்சம். போர்த்தந்திரத்திற்கு இந்நிகழ்ச்சிப் போக்குகள் பற்றி எவ்விதமான பொறுப்புமில்லை. ஏனெனில் அவற்றைப் போர்த்தந்திரத்தால் நிறுத்தவும் முடியாது, மாற்றவும் முடியாது. இந்நிகழ்ச்சிப் போக்குகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வதும் அவற்றை ஆதாரமாகக்கொள்வதும்தான் போர்த்தந்திரத்தால் ஆகக் கூடியது. புறவய அம்சம், மார்க்சியத் தத்துவத்தாலும் மார்க்சியச் செயல் திட்டத்தாலும் ஆய்வு செய்யப்படவேண்டிய துறையாகும்.

ஆனால் தொழிலாளிவர்க்க இயக்கத்திற்கு அகவயமான உணர்வுப் பூர்வமான அம்சமும் உண்டு. இயக்கத்தின் அகவய அம்சம் என்பது இயக்கத்தில் தன்னிகழ்வாக நேரும் நிகழ்ச்சிப் போக்குகள், தொழிலாளர்களின் சிந்தைகளில் தோற்றுவிக்கும் பிரதிபலிப்பாகும். அது ஒரு திட்டவட்டமான குறிக்கோளை நோக்கிப் பாட்டாளிவர்க்கம் உணர்வுப் பூர்மாகவும் முறைப்படுத்தப் பட்டதாகவும் செல்லும் இயக்கம். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் இந்த அம்சத்தில்தான் நமக்கு அக்கறை இருக்கிறது. ஏனெனில் புறவய அம்சம் போலல்லாது, இது முழுக்க முழுக்க போர்த் தந்திரம், செயல்முறைத் தந்திரம் ஆகியவற்றின் நெறிமுறைப்படுத்தும் செல்வாக்கிற்கு உட்பட்டது. இயக்கத்தின் புறவய நிகழ்ச்சிப் போக்குகளின் பாதையை மாற்றக்கூடிய திறன் போர்த் தந்திரத்திற்கு இல்லை. மாறாக, இயக்கத்தின் அகவய, உணர்வுப்பூர்வமான பகுதியில் போர்த் தந்திரத்தைக் கையாள்வதற்கான களங்கள் மிகவும் பரவலானவை; பலதரப் பட்டவை. காரணம் போர்த்தந்திரத்தால், அகவய இயக்கத்தைத்

துரிதப்படுத்தவும் முடியும்; தாமதப்படுத்தவும் முடியும். இயக்கத்தை மிகச் சுருக்கமான வழியிலும் நடத்திச் செல்ல முடியும்; மிகக் கடினமான துன்பம் நிறைந்த பாதையிலும் திருப்பிவிட முடியும். இவையாவும் போர்த் தந்திரம் குறைபாடற்றதா, குறைபாடுடையதா என்பதைச் சார்ந்து நிகழ்பவை.

எனவே, இயக்கத்தைத் துரிதப்படுத்துவது அல்லது தாமதப்படுத்துவது; அதற்கு உதவியாக இருப்பது அல்லது தடையாக இருப்பது—இவையே அரசியல் போர்த்தந்திரமும் செயல் தந்திரமும் செயல்படக்கூடிய பரப்பும் எல்லைகளுமாகும்.

## ஆ. மார்க்சியத் தத்துவமும் செயல்திட்டமும் (Marxist Theory and Programme)

போர்த் தந்திரம் தானாக இயக்கத்தின் புறநிலைப் போக்குகளை ஆய்வு செய்வதில்லை. இருப்பினும் அவற்றை அது அறிந்திருக்கவும் அவற்றைச் சரியான முறையில் கருத்தில் கொள்ளவும் வேண்டும். அப்போதுதான் இயக்கத் தலைமை தன்னை அழிவுக்குக் கொண்டு செல்லும் படுமோசமான தவறுகளைப் புரிவது தவிர்க்கப்படும்.

இயக்கத்தின் புறநிலைப்போக்குகள் முதலாவதாக மார்க்சியத் தத்துவத்தாலும், மேலும் மார்க்சியச் செயல் திட்டத்தாலும் (Programme) ஆய்வு செய்யப்படுகின்றன. எனவே போர்த்தந்திரம் என்பது மார்க்சியத் தத்துவத்தாலும் செயல் திட்டத்தாலும் வழங்கப்படும் விவரங்களையே முற்றிலுமாகத் தனது அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

முதலாளியத்தின் புறநிலைப்போக்குகளின் வளர்ச்சி, வீழ்ச்சி ஆகியவற்றைப் பற்றிய ஓர் ஆய்விலிருந்து மார்க்சியத்தத்துவம், கீழ்க்காணும் முடிவிற்கு வருகிறது: முதலாளிய வர்க்கத்தின் வீழ்ச்சியும் பாட்டாளிவர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் தவிர்க்க இயலாதவை; முதலாளியம் தவிர்க்க இயலாதவாறு சோசலிசத்திற்கு வழிவிட்டாக வேண்டும். மார்க்சியத் தத்துவத்தின் இந்த அடிப்படையான முடிவினைப் பாட்டாளிவர்க்கப் போர்த்தந்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தால்தான் அதை உண்மையானதொரு மார்க்சியப் போர்த்தந்திரம் என அழைக்க முடியும்.

மார்க்சியத் தத்துவத்தால் வழங்கப்படும் விவரங்களைத் துவக்கமுனையாகக் கொண்டு மார்க்சியத் திட்டமானது பாட்டாளி

வர்க்க இயக்கத்தின் குறிக்கோள்களைத் தீர்மானிக்கிறது. இக்குறிக்கோள்கள் செயல்திட்டத்தின் அம்சங்களாக அறிவியல் ரீதியில் முறைப்படுத்தப்படுகின்றன. செயல் திட்டமானது முதலாளிய வளர்ச்சிக் காலகட்டம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் உருவாக்கப்படலாம்; அதாவது, முதலாளியத்தைத் தூக்கியெறிவதையும் சோசலிச உற்பத்தியை ஒழுங்கமைப்பதையும் நோக்கமாகக் கொண்டும் இருக்கலாம். அல்லது, முதலாளிய வளர்ச்சியின் ஒரே ஒரு திட்டவட்டமான கட்டத்தை மட்டுமே உள்ளடக்கியதாகவும் இருக்கலாம். உதாரணமாக, நிலப் பிரபுத்துவ—முடியாட்சி அமைப்பின் எச்சங்களைத் தூக்கியெறி வதையும் முதலாளியத்தின் தடையற்ற வளர்ச்சிக்கான நிலைமை களை உருவாக்குவதையும் மட்டுமே செயல்திட்டம் தனது குறிக் கோளாகக் கொண்டிருக்கலாம். இதற்குகந்தவாறு, செயல் திட்டம் இருபகுதிகளாக அமையும்:—(i) அதிகபட்சத் திட்டம் (ii) குறைந்த பட்சத்திட்டம். அதிகபட்சத் திட்டத்திற்கென உருவாக்கப்பட்ட போர்த்தந்திரம், குறைந்தபட்சத் திட்டத்திற்கென உருவாக்கப் பட்ட போர்த்தந்திரத்திலிருந்து வேறுபட்டே இருமென்பதைச் சொல்லத் தேவையில்லை. இயக்கத்தின் குறிக்கோள்கள் மார்க்சியச் செயல் திட்டத்தில் முறைப்படுத்தப்பட்டுள்ளன. போர்த்தந்திரத் தின் செயல்பாடுகள் இக்குறிக்கோள்களை வழிகாட்டிகளாகக் கொண்டு அமைய வேண்டும். அப்பொழுதுதான், போர்த்தந்திரம் உண்மையிலேயே மார்க்சியப் போர்த்தந்திரம் என்ற தகுதியைப் பெறும்.

## இ. போர்த் தந்திரம் (Strategy)

தொழிலாளிவர்க்க இயக்கம் மேற்கொள்ள வேண்டிய முதன்மையான திசை எது என்று தீர்மானிப்பது, செயல் திட்டத்தில் முறைப்படுத்தப்பட்ட குறிக்கோள்களைச் சாதிக்கும் பொருட்டுத் தனக்கு மிகவும் சாதகமான முறையில் எதிரியின் மீது முதன்மையான தாக்குதலைத் தொடுக்க எத்திசையில் பாட்டாளி வர்க்கத்திற்கு இயலுமோ அத்திசையைத் தீர்மானிப்பது, போர்த் தந்திரத்தின் மிக முக்கியமான பணியாகும். ஒரு போர்த்தந்திரத் திட்டமென்பது இறுதித் தாக்குதலை எத்திசையில் செலுத்தினால் மிக அதிகபட்ச விளைவுகளைச் சாதிக்க முடியுமோ அத்திசையை நோக்கி இறுதித் தாக்குதலை நடத்தத் திட்டமிடுதலாகும்.

அரசியல் போர்த்தந்திரத்தின் முதன்மை அம்சங்களை எளிதாக விளக்க இராணுவ போர்த்தந்திரத்திலிருந்து ஒரு

உவமை காட்டுவோம், உள்நாட்டுப் போரின் போது டெனிக்கனுக்கு எதிராக நடந்த போரை எடுத்துக் கொள்வோம். 1919ஆம் ஆண்டின் இறுதியில் டூலா என்னுமிடத்தில் டெனிக்கினின் படைகள் நின்று கொண்டிருந்தன என்பது அனைவருக்கும் தெரியும். எந்த முனையிலிருந்து டெனிக்கினின் படைகள் மீது தீர்மானகரமான தாக்குதல் தொடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து நமது இராணுவத்தினரிடையே ஆர்வமிக்கசர்ச்சை ஒன்று அச்சமயத்தில் எழுந்தது.

ஜாரிட்சின்—நோவோராஸைஸ்க் பாதைதான் தாக்குதலுக்கான முதன்மையான திசையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இராணுவத்தினர் சிலர் ஆலோசனை வழங்கினர். இதற்கு மாறாக வேறு சிலர் வொரொனெஸ்—ரோஷ்டோவ் பாதை வழியாகத் தீர்மானகரமான தாக்குதல் தொடுக்கப்பட வேண்டும்; இந்தப் பாதை வழியாக முன்னேறி டெனிக்கினின் சேனைகளை இரண்டாகப் பிளந்து ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாக நசுக்கிவிட வேண்டும என்று ஆலோசனை வழங்கினார்கள். முதல் திட்டத்தில் பாராட்டத்தக்க அம்சங்கள் இருந்தன என்பதில் ஐயமில்லை. காரணம் நோவோரோ ஸைஸ்க் நகரத்தைக் கைப்பற்றுவதற்கு அது வழி கோலியது. அந்நகரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் டெனிக்கினின் சேனைகள் பின் வாங்குவதைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஆனால் அத்திட்டத்தில் குறைபாடும் இருந்தது. காரணம் அத்திட்டத்தின்படி நாம் டான் பிரதேசத்து மாவட்டங்களின் மூலமாக முன்னேறிச் செல்ல வேண்டும். இம்மாவட்டங்களோ சோவியத் அதிகாரத்திற்குப் பகையானவை. எனவே, ஏராளமான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருந்திருக்கும். மேலும், அத்திட்டம் அபாயகரமானதுமாகும். ஏனெனில், அத்திட்டமானது டூலா, செர்புகோவ் ஆகிய நகரங்களின் வழியாக மாஸ்கோவுக்கான பாதையை டெனிக்கினது படைகளுக்குத் திறந்து விடக்கூடியதாகும். முதன்மையான தாக்குதலுக்கான சரியான திட்டம், இரண்டாவதாகச் சொல்லப்பட்ட ஒன்றுதான். ஏனெனில், அத்திட்டமானது நமது முக்கியக்குழு சோவியத் அதிகாரத்துடன் நட்பு பாராட்டிய மாவட்டங்கள் (ஒரோணிஸ், குபர்ணியா, டோனஸ்டஸ் பேசின்) வழியாக முன்னேறிச் செல்லுமாறு யோசனை கூறியது. எனவே கணிசமான அளவு உயிர்ச்சேதங்கள் இதனால் ஏற்படாது; மேலும் மாஸ்கோவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த டெனிக்கனின் முதன்மையான படைக்குழுவின் நடவடிக்கைகளை அத்திட்டம் சீர்குலைக்கும். பெரும்பான்மையான ராணுவத்தினர் இந்த இரண்டாவது திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். இது, போரில் டெனிக்கினின் தோல்வியைத் தீர்மானித்தது.

வேறுவிதமாகக் கூறுவதானால், முதன்மையான தாக்குதல் திசையைத் தீர்மானிப்பது என்பது, போர்க்கால கட்டம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் தன்மையை முன் கூட்டியே தீர்மானிப்பதாகும். அதாவது போரின் முடிவு பற்றிப் பத்தில் ஒன்பது பங்கு அளவிற்கு முன்கூட்டியே தீர்மானிப்பதாகும். இதுதான் போர்தந்திரத்தின் பணியாகும்.

அரசியல் போர்த்தந்திரத்திற்கும் இது பொருந்தும். பாட்டாளிவர்க்க இயக்கத்தின் முதன்மையான திசை எது என்ற பிரச்சினை மீது ரஷ்யப் பாட்டாளிவர்க்கத்தின் அரசியல் தலைவர்களுக்கிடையே முதல் தீவிரமான கருத்து மோதல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்ய—ஜப்பானியப் போரின் போது ஏற்பட்டது. அச்சமயத்தில், நமது கட்சியின் ஒரு பிரிவு (மென்ஷெவிக்குகள்) கீழ்க்காணும் கருத்தைக் கொண்டிருந்தது என்பது நமக்குத் தெரியும். பாட்டாளிவர்க்கத்திற்கும் மிதவாத முதலாளிவர்க்கத்திற்கும் இடையே உள்ள ஒரு கூட்டணி என்ற மார்க்கத்தின் வழியாகவே ஜாரிசத்திற்கு எதிரான தனது போராட்டத்தில் பாட்டாளிவர்க்க இயக்கத்தின் முதன்மையான திசை அமையவேண்டும். இத்திட்டத்தில், முக்கியமான புரட்சிகரக்காரணியான விவசாயிவர்க்கம் விலக்கப்பட்டிருந்தது; அல்லது கிட்டத்தட்ட முழுமையாக விலக்கப்பட்டிருந்தது. அதே சமயத்தில் பொதுவான புரட்சிகர இயக்கத்தின் தலைமைப்பாத்திரம் மிதவாத முதலாளிவர்க்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மாறாக, கட்சியின் மற்றொரு பிரிவு (போல்ஷெவிக்) கீழ்க்காணும் கருத்தை முன் வைத்தது. பாட்டாளிவர்க்கத்திற்கும் விவசாயி வர்க்கத்திற்கும் இடையிலான ஒரு கூட்டணி என்ற பாதையின் வழியாகவே முதன்மையான தாக்குதல் செலுத்தப்படவேண்டும்; பொதுவான புரட்சிகர இயக்கத்தில், தலைமைப் பாத்திரம் பாட்டாளிவர்க்கத்திற்கு வழங்கப்படவேண்டும்; மிதவாத முதலாளிவர்க்கம் செயலிழக்கும்படிச் செய்ய வேண்டும்.

டெனிக்கனுக்கு எதிரான போர் என்ற உவமையினைக் கொண்டு இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து 1917 பிப்ரவரி புரட்சி வரையிலான நமது புரட்சி இயக்கம் முழுவதையும் விளக்குவோம். இக்காலகட்டத்திய புரட்சி இயக்கம் ஜாரிசத்துக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராகத்தொழிலாளிகளும் விவசாயிகளும் நடத்திய ஒரு போர் என்று நாம் சித்தரிப்போம். ஜாரிசத்தினதும் நிலப்பிரபுக்களினதும் தலைவிதி இந்த இரண்டு யுத்ததந்திர திட்டங்களில் (மென்ஷெவிக் திட்டம், போல்ஷெவிக் திட்டம்) எது மேற்கொள்ளப்படும் என்பதையும், புரட்சிகர இயக்கத்தின் முதன்மையான

திசையென எத்திசை நிர்ணயிக்கப்படும் என்பதையும் பொறுத்து சார்ந்திருந்தது என்பது தெளிவாகும்.

டெனிக்கினுக்கு எதிரான போரில் இராணுவ போர்த் தந்திரம் தாக்குதலின் முதன்மைத் திசையைச் சரியாகத் தீர்மானித்ததன் மூலம், டெனிக்கினின் படைகள் அழிக்கப்பட்டது உட்பட பின்னர் நிகழ்ந்த போர் நடவடிக்கைகளின் தன்மையை முன்கூட்டியே பத்தில் ஒன்பது பங்கு அளவிற்கு நிர்ணயித்தது. அதே போல, ஜாரிசத்திற்கு எதிரான புரட்சிகரப் போராட்டக்களத்திலும் புரட்சி இயக்கத்தின் முதன்மையான திசையானது போல்ஷெவிக் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்று தீர்மானித்ததின் மூலம், நமது அரசியல் போர்த்தந்திரமானது, ரஷ்ய-ஜப்பானியப் போர்க் காலத்திலிருந்து 1917 பிப்ரவரி புரட்சிவரை நடந்த ஜாரிசத்திற்கு எதிரான பகிரங்கப் போராட்டக் காலக்கட்டம் முழுவதிலும் நமது கட்சிப்பணியின் தன்மையைத் தீர்மானித்தது. மார்க்சியத்தத்துவம் செயல் திட்டம் ஆகியவற்றால் வழங்கப்படும் விபரங்களின் அடிப் படையிலும் எல்லாநாடுகளிலுமுள்ள தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்டங்களின் அனுபவத்தைக் கருத்தில் கொண்டும் ஒரு குறிப் பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் முதன்மைத் திசையைச் சரியாகத் தீர்மானிப்பது தான் அரசியல் போர்த்தந்திரத்தின் முதன்மையான செயற் பாடாகும்.

## ஈ. செயல்தந்திரம்
## (Tactics)

செயல்தந்திரங்கள் போர்த்தந்திரத்தின் ஒரு பகுதியாகும். அவை போர்த்தந்திரத்துக்கு உட்பட்டவை; அதற்குத் துணைபுரிபவை. செயல் தந்திரங்கள் போர்முழுவதுக்குமாகக் கணிக்கப்படுவன அல்ல. மாறாக, போரின் தனித்தனி நிகழ்ச்சிகளோடு, தனித்தனிச் சண்டை களோடு, தனித்தனி மோதல்களோடு சம்பந்தப்பட்டவை. போர்த் தந்திரம் என்பது போரில் வெற்றியடைய முயற்சிசெய்கிறது; அல்லது போராட்டத்தை, உதாரணத்திற்குச் சொல்லப் போனால் ஜாரிசத் திற்கு எதிரான போராட்டத்தை, இறுதிவரை நடத்த முயற்சி செய்கிறது. அதற்கு மாறாக, செயல் தந்திரங்களோ குறிப்பிட்ட மோதல்களிலும், குறிப்பிட்ட சண்டைகளிலும் வெற்றி பெறவும் குறிப்பிட்ட இயக்கங்களை வெற்றிகரமாக நடத்திச் செல்லவும் அல்லது ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் போராட்டத்தின் திட்டவட்டமான நிலைமைகளுக்கு ஏறத்தாழ பொருத்தமான குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முயல்கின்றன.

குறிப்பிட்ட தருணத்தில் நிலவுகிற திட்டவட்டமான நிலைமைகளுக்கு மிகவும் பொருத்தமானவையாகவும் போர்த்தந்திர வெற்றிக்கான பாதையை மிகவும் நிச்சயமாக வகுக்க வல்லனவாகவும் உள்ள போராட்ட வழிமுறைகளையும், போராட்ட வடிவங்களையும் தீர்மானிப்பதுதான் செயல் தந்திரங்களுக்குள்ள ஒரு மிக முக்கியமான பணியாகும். இதன் காரணமாகச் செயல்தந்திரங்களின் செயல்பாட்டையும் விளைவுகளையும் அவற்றை மட்டும் தன்னந்தனியாகவோ அவற்றின் உடனடியான பாதிப்புகளை மட்டும் கருத்திற் கொண்டோ பார்க்கக் கூடாது. மாறாகப் போர்த்தந்திரத்தின் குறிக்கோள்களையும் சாத்தியக்கூறுகளையும் கருத்தில் கொண்டே பார்க்க வேண்டும்.

சிலசமயம் செயல் தந்திர வெற்றிகள் போர்த்தந்திரக் குறிக்கோள்களை அடைய உதவும். உதாரணமாக 1919ஆம் ஆண்டின் இறுதியில் டெனிக்கினுக்கு எதிரான போரில் நமது துருப்புகள் ஓரல், வோரோனெழ் ஆகியவற்றை விடுதலை செய்தபோது வோரோனெழில் நமது குதிரைப்படைகளும், ஓரோலில் நமது தரைப்படைகளும் பெற்ற வெற்றிகள் ரோஸ்டோவில் தாக்குதலை நடத்துவதற்கான சாதகமான ஒரு சூழலை உருவாக்கின. 1917 இல் ரஷ்யாவில் நடந்ததும் இத்தகையது தான். அப்போது பெட்ரோகிராட் சோவியத்தும் மாஸ்கோ சோவியத்தும் போல்ஷ்விக்குகளின் தரப்பிற்கு வந்து அதன் காரணமாக ஒரு புதிய அரசியல் சூழ்நிலைமை உருவாயிற்று. பின்னர் அக்டோபரில் நமது கட்சி தாக்குதல் தொடுப்பதற்கு இது உதவிற்று. செயல் தந்திர வெற்றிகள் சில சமயங்களில் அவற்றின் உடனடியான விளைவின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது வியக்கத் தக்கனவாக இருக்கும்; ஆனால் போர்த்தந்திரச் சாத்தியப்பாடுகளுடன் பொருத்தமற்றனவாக அமைந்து ஒரு ''எதிர் பாராத'' சூழ்நிலைமையைத் தோற்றுவிக்கும். இதனால் போர்முனை ஏற்பாடுகள் முழுவதும் நாசமடையும்படி நேரலாம். 1919 இறுதியில் டெனிக்கினுக்கு நடந்தது இதுதான். மாஸ்கோவை நோக்கிய விரைவான, மின்னல் போன்றதொரு முன்னேற்றத்தின் எளிதான வெற்றியால் அவனுக்குக் கர்வம் தலைக்கேறியது. அவன் தனது போர் முனையை வோல்கா விலிருந்து நீப்பருக்கு விரிவுபடுத்தினான். இவ்வாறு அவன் தனது சேனைகளின் தோல்விக்கு வழிவகுத்தான். 1920இல் போயந்துகாரர்களுக்கு எதிராக நடந்த போரில் நிகழ்ந்ததும் இத்தகையது தான். அப்போது நாம் போலந்திலிருந்த தேதிய உணர்வுக்குள்ள வலிமையைக் குறைத்து மதிப்பிட்டு மின்னல் போன்ற முன்னேற்றத்தின் எளிதான வெற்றியால் கர்வமேறி நமது சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு

பணியை—வார்ஸா வழியாக ஐரோப்பாவிற்குள் நுழையும் பணியை—நாம் மேற்கொண்டோம். இது போலிஷ் மக்கள் தொகையில் மிகப் பெரும் பகுதியைச் சோவியத் படைகளுக்கு எதிராகத் திரட்டியது. மின்ஸ்க், ஸிடோமிர் ஆகிய இடங்களில் சோவியத் படைகள் கண்ட வெற்றிகளைப் பயனற்றவைகளாக்கிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. சோவியத் அரசின் கௌரவத்துக்கு மேற்கு நாடுகளில் ஊறு விளைவித்தது.

கடைசியாக ஒன்று; சில சமயங்களில் எதிர்காலப் போர்த் தந்திர ஆதாயங்களை உறுதி செய்து கொள்வதற்காக ஒரு செயல் தந்திர வெற்றியைப் புறக்கணிக்க வேண்டியும் மற்றும் செயல்தந்திர வகையில் இழப்புகளையும் பின்னடைவுகளையும் வேண்டுமென்றே உருவாக்கிக் கொள்ள வேண்டியுமிருக்கும். இது போர்க்காலத்தில் அடிக்கடி நிகழக் கூடிய ஒன்றாகும். ஒரு தரப்பினர் தமது ராணுவப் படையினரை அழிவினின்று காப்பாற்றவும் தன்னைவிட வலு மிகுந்த எதிரிப்படையின் தாக்குதலிலிருந்து அவர்களை ஒதுங்கச் செய்யவும் திட்டமிடப்பட்ட முறையில் பின்வாங்கி, எதிர்காலத்தில் புதிய தீர்மானகரமான சண்டைகளைப் புரிவதற்காக அவகாசம் திரட்டவும், தனது சக்திகளையும் படைகளையும் திரட்டவும், சண்டை போடாமல் நகரங்களையும் பிரதேசங்களையும் கைவிட்டு விடுவதுண்டு. 1918இல் ஜெர்மன் தாக்குதலின் போது ரஷ்யாவில் நிகழ்ந்தது இத்தகையது தான். அப்போது நமது கட்சி பிரஸ்ட் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது. அந்த நேரத்தில் ஏற்பட்ட உடனடியான அரசியல் விளைவு என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் அது மிகப் பெரும் பின்னடைவு. சமாதானத்திற்காக ஏங்கிய விவசாயிகளுடன் நேசஅணியைப் பாதுகாத்துக் கொள்ளவும், அவகாசம் பெறவும், ஒருபுதிய படையை உருவாக்கவும் அதன் காரணமாக எதிர்காலத்தில் போர்த் தந்திர ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும், இந்தச் சமாதானத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு இருந்தது.

வேறு விதத்தில் சொல்லப் போனால் ஒரு குறிப்பிட்ட தருணத்தின் தற்காலிக நலன்களுக்குக் கீழ்ப்படிந்ததாகச் செயல்தந்திரங்களைச் செய்யக் கூடாது. உடனடியான அரசியல் விளைவு என்ற எண்ணங்களால் அவை வழிகாட்டப்படககூடாது. மேலும், உறுதியான நிலத்தில் ஊன்றி நிற்பதை விட்டு ஆகாயத்தில் கோட்டை கட்டுவது இன்னும் கூடாது. போர்த் தந்திரத்தின் நோக்கங்கள், சாத்தியப்பாடுகள் ஆகியவற்றிற்கு உகந்தவாறுதான் செயல் தந்திரங்கள் உருவாக்கப்படவேண்டும்.

செயல் தந்திரங்களுடைய செயல்பாடு முதன்மையாக இதுதான்:

போர்த்தந்திரத்தின் தேவைகளுக்கு உகந்தவகையிலும் எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்டங்களின் அனுபவத்தைக் கருத்தில் கொண்டும் ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் போராட்டத்தின் திட்டவட்டமான சூழ்நிலைகளுக்கு உகந்தவாறு போராட்டங்களின் வடிவங்களையும் முறைகளையும் தீர்மானிப்பதாகும்.

உ) போராட்ட வடிவங்கள்

போர்முறைகள், போர்வடிவங்கள் எப்போதும் ஒரே மாதிரியாயிருப்பதில்லை. வளர்ச்சி நிலைமைகளுக்கு ஏற்ப—முதன்மையாக உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்ப—அவை மாறுகின்றன. செங்கிஸ்கான் காலத்தில் இருந்த போர்முறைகள், மூன்றாம் நெப்போலியன் காலத்திய போர் முறைகளிலிருந்து மிகவும் மாறுபட்டவையாகும்; இருபதாம் நூற்றாண்டில் உள்ள போர்முறைகள் 19 ஆம் நூற்றாண்டில் உள்ள போர் முறைகளிலிருந்து மாறுபட்டவையாகும்.

நவீன நிலைமைகளில் போர்க்கலை என்பது எல்லாப் போர் வடிவங்களையும், இத்துறையில் அறிவியல் ஈட்டிய அனைத்துச் சாதனைகளையும் கற்றுத் தேர்வதையும் அவற்றை அறிவுக் கூர்மையோடு பயன்படுத்துவதிலும் அவற்றைத் திறமையாக ஒன்றிணைப்பதிலும் அல்லது சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப இவ் வடிவங்களில் பொருத்தமான ஒன்றைச் சரியான சமயத்தில் பயன்படுத்துவதிலும் அடங்கியுள்ளது.

அரசியல் மட்டத்திலுள்ள போராட்ட வடிவங்களுக்கும் இதுவே பொருந்தும். இராணுவப் போராட்ட வடிவங்களைக் காட்டிலும் அரசியல் துறைகளிலுள்ள போராட்டவடிவங்களின் வகைகள் அதிகமானவை. பொருளாதாரவாழ்வு, சமூகவாழ்வு, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கேற்ப, வர்க்கங்களின் நிலைமைகளுக்கேற்ப, முட்டி மோதுகின்ற சக்திகளின் உறவுக்கேற்ப எத்தகைய அரசாங்கம் உள்ளதோ அதற்கேற்ப, இறுதியாக, சர்வதேச உறவுக்கேற்ப இன்னும் பல காரணங்களுக்கேற்ப, அரசியல் போராட்ட வடிவங்கள் மாறுகின்றன. முடியாட்சி நிலவும் காலகட்டத்தில், பகுதி-வேலை நிறுத்தங்கள், தொழிலாளர் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றுடன் இணைந்த சட்டவிரோதப் போராட்ட வடிவங்கள்; 'சட்டரீதியாக இயங்கும் சாத்தியக்

கூறுகள்' நிலவும் காலகட்டத்தில் வெளிப்படையான போராட்ட வடிவமும் பரந்துபட்ட தொழிலாளர்களின் அரசியல் வேலை நிறுத்தங்களும்; 'டூமா' இயங்கிய காலம் போன்ற கட்டங்களில் நாடாளுமன்றப் போராட்ட வடிவமும் சில சமயங்களில் ஆயுத மேந்திய எழுச்சிகளாக வளர்ச்சியடைகிற நாடாளுமன்றத்துக்குப் புறம்பான மக்கள்திரள் நடவடிக்கையும்; கடைசியாக, பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி இராணுவம் உள்ளிட்ட அரசு சக்திகள், வசதிகள் அனைத்தையும் பயன்படுத்துகிற வாய்ப்பைப் பெறுகையில், அரசு மட்டப் போராட்ட, வடிவங்கள்—என இத்தகைய போராட்ட வடிவங்களே பொதுவாக, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் நடைமுறை அனுபவத்தில் முன்னிடம் பெறுகின்றன.

எல்லாப் போராட்ட வடிவங்களையும் கசடறக் கற்றுத் தேர்ச்சி பெறுவது; போராட்டக் களத்தில் அவற்றை அறிவுக் கூர்மையுடன் ஒருங்கிணைப்பது; குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த வடிவங்கள் மிகச் சிறப்பாகப் பொருத்தமுடையனவாக உள்ளனவோ அவ்வடிவங்களில் போராட்டத்தைத் திறம்பட தீவிரப்படுத்துவது ஆகியவையே கட்சியின் கடமையாகும்.

ஊ) அமைப்பு வடிவங்கள்

இராணுவங்களின் அமைப்பு வடிவங்களும் படைகளின் வெவ்வேறு துறைகளும், போர் முறைகள், போர் வடிவங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப மாற்றப்பட்டுப் பயன்படுத்திக் கொள்ளப் படுகின்றன. போர்முறைகளும், போர் வடிவங்களும் மாறும்போது இராணுவங்களின் அமைப்பு வடிவங்களும் பயன் படுத்தப்படுகிற படைவகைகளும் மாறுகின்றன. படைகளைத் திட்டமிட்ட முறையில் இயக்கி நிகழ்த்தும் போரில் (War of Manoeuvre) ஒன்று குவிக்கப்பட்ட குதிரைப் படையாலேயே பிரச்சினை யானது பெரிதும் தீர்மானிக்கப்படுகிறது. அதற்கு மாறாக, ஓரிடத் தில் நிலை நின்று நடத்தும் போரில் (War of position) குதிரைப் படையானது பங்கேதும் வகிப்பதில்லை அல்லது கீழான பங்கே வகிக் கிறது. இங்குக் கனரக பீரங்கி, போர் விமானங்கள்,வாயு, டாங்கிகள் ஆகியவையே அனைத்தையும் தீர்மானிக்கின்றன.

படைகளின் எல்லாத் துறைகளும் கைவசம் இருப்பதை உறுதி செய்வதும்; அவற்றைக் குறைபாடுகளற்றவையாய் ஆக்குவதும், அவற்றின் செயல்பாடுகளை அல்லது நடவடிக்கைகளை ஒன்றி ணைப்பதும் போர்க் கலையின் பணியாகும்.

அரசியல் துறையில் உள்ள அமைப்பு வடிவங்களுக்கும் இது பொருந்தும். இங்கு இராணுவத்துறையில் இருப்பது போலவே அமைப்பு வடிவங்கள் போராட்ட வடிவங்களுக்கு ஏற்றவாறு பயன் படுத்திக் கொள்ளப்படுகின்றன. எதேச்சதிகாரக் காலகட்டத்தில் புரட்சியையே தம் முழு நேர ஊழியமாகக் கொண்டவர்களின் இரகசிய அமைப்புகள்; டூமா கால கட்டத்தில் கல்வி அமைப்புகள், தொழிற்சங்கம், கூட்டுறவு அமைப்புகள், நாடாளுமன்ற அமைப்புகள் (டூமா குழு) முதலியவை; மக்கள்திரள் நடவடிக்கை மற்றும் எழுச்சிக் காலகட்டத்தில் தொழிற்சாலை மற்றும் பட்டறைக் குழுக்கள், உழவர் குழுக்கள், வேலைநிறுத்தக் குழுக்கள், தொழிலாளர்-போர் வீரர் பிரதிநிதிகளின் குழுக்கள், புரட்சிகர இராணுவக்குழுக்கள், இந்த அமைப்பு வடிவங்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்தும் ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி; இறுதியாக, தொழிலாளிவர்க்கத்தின் கரத்தில் அதிகாரம் குவிந்திருக்கும் காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் அரசமைப்பு வடிவம்—இவையே பொதுவாகச் சொல்லப் போனால் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான தனது போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் சில குறிப்பிட்ட நிலைமைகளில் சார்ந்திருக்கக் கூடியமற்றும் சார்ந்திருக்க வேண்டிய அமைப்பு வடிவங்களாகும்.

இவ்வமைப்பு வடிவங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்வதும், அவற்றை முழுநிறைவுடையனவாக ஆக்குவதும் ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் அவற்றின் செயல்பாடுகளை திறமையோடு ஒன்றிணைப்பதும் கட்சியின் கடமையாகும்.

## எ. முழக்கம்—ஆணை
## (The Slogan: The Directive)

போரின் குறிக்கோள்களை அல்லது தனிப்பட்ட மோதல்களின் குறிக்கோள்களை வெளியீடு செய்கிற வகையில் திறமையாக வகுக்கப்பட்டவையும் துருப்புக்களிடையே சனரஞ்சகமாக இருக்கக் கூடிவையுமான முடிவுகள் சில சமயங்களில் போர் முனையில் ராணுவத்தை ஊக்குவிக்கக் கூடிய, அதன் மனஉறுதியைப் பேணிப் பாதுகாக்கின்ற சாதனம் என்ற வகையில் தீர்மானகரமான முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு போரின் போக்கு முழுவதற்கும் முதல்தர கனரக பீரங்கிகள் அல்லது முதல்தர விரைவு டாங்கிகள் எவ்வளவு முக்கியமானவையோ அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை. பொருத்தமான ஆணைகள், முழக்கங்கள், துருப்புகளுக்கு விடுக்கப்படும் அறைகூவல்கள் ஆகியவையாகும்.

அரசியல் துறையில் பல்வேறு வகைப்பட்ட கோரிக்கைகளை யும் தேவைகளையும் உடைய பல லட்சக்கணக்கான மக்களைக் கையாள வேண்டியிருக்கும் பொழுது முழக்கங்கள் இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒரு தலைமைக்குழு—உதாரணமாகப் பாட்டாளிவர்க்கத்தின் தலைமைக்குழு (அதாவது கட்சி)—போராட்டத்தின் நோக்கங்களை (இவை உடனடி நோக்கங்களாகவோ தொலைவான எதிர்காலத்திய நோக்கங்களாகவோ இருக்கலாம்) சுருக்கமாகவும் தெளிவாகவும் முறைப்படுத்திக் கூறுவதே முழக்கம் எனப்படும். போராட்டத்தின் வெவ்வெறு குறிக்கோள்களுக்கேற்ப முழக்கங்களும் மாறுபடுகின்றன. குறிக்கோள்கள் ஒரு முழு வரலாற்றுக் காலகட்டத்தையும் தழுவக் கூடியதாகவோ அல்லது குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தின் தனித்தனிக் கட்டங்களையோ அல்லது நிகழ்ச்சிகளையோ மட்டும் தழுவுவதாகவோ அமையலாம். 19 ஆம் நூற்றாண்டின் எண்பது களில் 'உழைப்பாளர் விடுதலைக் குழு' வினரால் முதன் முதலில் முன்வைக்கப்பட்ட முழக்கமான ''எதேச்சதிகாரம் ஒழிக'' என்ற முழக்கம் ஒரு **பிரச்சார** முழக்கம் (Propaganda slogan) ஆகும். அதன் நோக்கம், மிகவும் உறுதியான மற்றும் திடமான போராட்டக் குழுக் களையும், தனிமனிதர்களையும் கட்சியின்பால் வென்றெடுப்பதாகும். ரஷ்ய-ஜப்பானிய போர்க் காலத்தில், எதேச்சதிகாரத்தின் உறுதி யற்ற தன்மை தொழிலாளி வர்க்கத்தின் பரந்த பிரிவுகளுக்குக் கிட்டத்தட்ட தெளிவாகத் தெரிந்த கால கட்டத்தில், இந்த முழக்க மானது ஒரு **கிளர்ச்சி** முழக்கமாயிற்று (agitation slogan), ஏனெனில் அது இப்போது பரந்துபட்ட உழைப்பாளி மக்கள் திரளினரை வென் றெடுக்க உருவாக்கப் பட்டது. 1917 பிப்ரவரி புரட்சிக்குச் சற்றே முந்திய காலகட்டத்தில் மக்கள் திரளினரின் கண்களில் ஜாரிசம் ஏற்கனவே முற்றிலுமாக மதிப்பிழந்திருந்த போது, ''எதேச்சதி காரம் ஒழிக'' என்ற முழக்கமானது ஒரு கிளர்ச்சி முழக்கம் என்கிற நிலையிலிருந்து ஒரு **நடவடிக்கை முழக்கமாக** (action slogan) மாற்றப் பட்டது. காரணம், அம்முழக்கமானது அப்போது ஜாரிசத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்குப் பரந்து பட்ட மக்கள் திரளினரைத் தூண்டுவதற்காக உருவாக்கப்பட்டது. பிப்ரவரி புரட்சியின் போது இம் முழக்கமானது ஒரு கட்சியின் **ஆணை** (directive) ஆகியது. அதாவது ஒரு குறிப்பிட்ட நாளில் ஜாரிச அமைப்பின் குறிப்பிட்ட நிறுவனங்களையும் குறிப்பிட்ட ஸ்தானங்களையும் கைப்பற்றுவதற் கான நேரடியான அறை கூவலாயிற்று. ஏனெனில், அது ஏற்கனவே ஜாரிசத்தைத் தூக்கியெறிந்து அதை நிர்மூலமாக்க வேண்டிய விஷய மாக்கிவிட்டது. ஆணை என்பது கட்சியின் உறுப்பினர்கள் அணை

வரையும் கட்டுப்படுத்துகின்ற ஒன்றாகும். அது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடவடிக்கை மேற்கொள்வதற்காகக் கட்சியின் நேரடியான அறைகூவலாகும். இந்த அறைகூவலானது மக்கள் திரளினரின் தேவைகளைச் சரியாகவும் பொருத்தமாகவும் முறைப்படுத்தியிருக்குமேயானால், அதற்கான நேரம் உண்மையாகவே கனிந்திருக்குமேயானால், பரந்துபட்ட உழைப்பாளி மக்களால் அது மேற்கொள்ளப்பட்டுவிடும்.

முழக்கங்களை ஆணைகளுடன் சேர்த்துக் குழப்புவது அல்லது ஒரு கிளர்ச்சி முழக்கத்தை நடவடிக்கை முழக்கத்துடன் இணைத்துக் குழப்புவது என்பது காலம் கனிவதற்கு முன்பு அல்லது காலம் கடந்த பிறகு மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கை போல அபாயகரமானது. அது சில சமயங்களில் அழிவேற்படுத்தும். 1917 ஏப்ரலில் வழங்கப்பட்ட ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே'' என்கிற முழக்கம் ஒரு கிளர்ச்சி முழக்கமாகும். ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே'' என்ற முழக்கத்தின் கீழ் 1917 ஏப்ரலில் பெட்ரோகிராடில் நடந்ததும் பனிக்கால மாளிகையைச் சுற்றி வளைத்ததுமான மிகப்பிரபலமான ஆர்ப்பாட்டமானது இம்முழக்கத்தை ஒரு நடவடிக்கை முழக்கமாக மாற்றுவதற்கான ஒரு முயற்சியாகும். காலம் கனிவதற்கு முன்னர் செய்யப்பட்ட முயற்சியானதால் அது அழிவை ஏற்படுத்தியது. ஒரு கிளர்ச்சி முழக்கத்தை ஒரு நடவடிக்கை முழக்கத்துடன் குழப்புவதுபற்றிய ஒரு அபாயரமான உதாரணமே இது. இந்த ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்தவர்களின் மீது கட்சி கண்டனம் தெரிவித்தது சரியானதாகும். ஏனெனில் இம்முழக்கத்தை ஒரு நடவடிக்கை முழக்கமாக மாற்றுவதற்குத் தேவையான நிலைமை இன்னும் தோன்றவில்லை என்பதையும் காலம் கனிந்து வருவதற்கு முன்பு பாட்டாளிவர்க்கம் எடுக்கும் நடவடிக்கை அதன் சக்திகளின் தோல்வியில் போய் முடியும் என்பதையும் கட்சி அறிந்திருந்தது.

மற்றொருபுறம், பகைவன் விரித்துள்ள வலையில் விழாமல் அணிகளைக் காப்பாற்றுவதற்காக எந்த ஒரு தீர்மானிக்கப்பபட்ட முழக்கத்தை அல்லது ஆணையை அதற்கான காலம் கனிந்திருந்த போதிலும் உடனடியாக ரத்து செய்ய வேண்டிய அல்லது மாற்றி அமைக்க வேண்டிய தேவையைக் கட்சி எதிர் கொள்ள வேண்டியதும் உண்டு; அல்லது ஆணையை நிறைவேற்றுவதை மேலும் சாதகமான தருணத்திற்கு ஒத்திப்போட வேண்டிய தேவையைக் கட்சி எதிர் நோக்க வேண்டிய சமயங்களும் இண்டு. ஜுன் 1917 பெட்ரோகிராடில் இத்தகைய ஒரு நிகழ்வு ஏற்பட்டது. கவனத்தோடு

தயாரிப்பு செய்யப்பட்டிருந்ததும் ஜூன் 10-ஆம் நாள் நடைபெறுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுமான தொழிலாளர்-போர்வீரர் ஆர்ப்பாட்டத்தை, மாறிய சூழ்நிலையின் காரணமாக நமது கட்சியானது திடீரென ரத்து செய்தது.

கிளர்ச்சி முழக்கங்களை நடவடிக்கை முழக்கங்களாகவும் அல்லது நடவடிக்கை முழக்கங்களைத் திட்டவட்டமான ஆணைகளாகவும் திறமையோடு தக்க தருணத்திலும் மாற்றுவதும் அல்லது சூழ்நிலைமை கோரினால் எந்த ஒரு குறிப்பிட்ட முழக்கத்தையும் அது சனரஞ்சகமானதாக இருந்த போதிலும் அதற்கான காலம் கனிந்திருந்த போதிலும் செயல்படுத்துவதை ரத்து செய்வதற்கு தேவையான வளைந்து கொடுக்கக் கூடிய தன்மையையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துவதும் கட்சியின் கடமையாகும்.

## II. போர்த் தந்திரத் திட்டம்

### அ. வரலாற்று ரீதியான திருப்பங்கள், போர்த்தந்திரத் திட்டங்கள்

கட்சியின் போர்த்தந்திரம், நிலையானதும் எல்லாக் 'கட்டத்துக்குமாக நிர்ணயிக்கப்பட்டதுமான ஒன்றல்ல. வரலாற்றின் திருப்பங்களுக்கு ஏற்பப் போர்த்தந்திமும் மாறுகிறது. போர்த்தந்திரத்தில் ஏற்படும் இந்த மாற்றங்கள் கீழக்காணும் உண்மையில் வெளிப்படுத்தப்படுகின்றன: வரலாற்றின் திருப்பம் ஒவ்வொன்றுக்கும் ஏற்ப ஒரு தனி போர்த்தந்திரத் திட்டம் உருவாக்கப்படுகிறது. அது அத் திருப்பத்திற்குப் பிறகு மற்றொரு திருப்பம் உருவாகும் வரையுள்ள காலகட்டம் முழுவதிலும் செயல்படக் கூடியதாகிறது. போர்த்தந்திரத்திட்டமானது புரட்சிகரச் சக்திகளால் மேற்கொள்ளப்படும் முதன்மைத் தாக்குதல் எத்திசையில் அமைய வேண்டும் என்பதையும் சமுதாயப் போர்முனையில் தாக்குதலின் திசைக்கு ஏற்பப் பரந்துபட்ட மக்கள் திரளை எங்கெங்கு எப்படி நிறுத்துவது என்பதையும் வரையறுக்கிறது. ஒரு வரலாற்றுக் கட்டம் தனக்கேயுரிய பிரத்யேக அம்சங்களைக் கொண்டுள்ளது. எனவே இக்கட்டத்துக்குப் பொருத்தமான ஒரு போர்த்தந்திரத்திட்டம் மாறுபட்ட பிரத்யேக அம்சங்களைக் கொண்ட மற்றொரு வரலாற்றுக் கட்டத்துக்குப் பொருத்தமானதாக இராது என்பது தெளிவு. வரலாற்றில் நேரும் ஒவ்வொரு திருப்பத்திற்கும் ஏற்றவாறு, அத் திருப்பத்தைச் சமாளிக்க இன்றியமையாத போர்தந்திரத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அத் திருப்பம் கோரும் கடமைகளுக்குத் தக்கப்படி அமைக்கப்படும்.

போர் நடவடிக்கைக்கும் இது பொருந்தும். மகால்சாக்குக்கு எதிரான போருக்குத் திட்டப்பட்ட போர்த் தந்திரத்திட்டம் டெனிக்கினுக்கு எதிரான போருக்குப் பொருத்தமானதாக இருந்திருக்க முடியாது. டெனிக்கினுக்கு எதிரான போர் புதிய போர்த்தந்திரத் திட்டத்தைக் கோரியது. இப்புதிய போர்த்தந்திரத் திட்டமும் 1920 இல் போலந்துக்காரர்களுக்கு எதிராக நடந்த போருக்கு ஏற்றதாக இருந்திராது. ஏனெனில் இந்த மூன்று நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் முதன்மைத் தாக்குதலின் திசையும், முக்கிய போர்ப் படைகள் நிறுத்தப்பட்டிருந்த விதமும் வேவ்வேறாகவே இருந்திருக்க முடியும்.

ரஷ்யாவின் சமீபத்திய வரலாற்றில் மூன்று முக்கியமான திருப்பங்கள் காணப்படுகின்றன. இத் திருப்பங்களின் விளைவாக நமது கட்சியின் வரலாற்றில் மூன்று வேவ்வேறான போர்த்தந்திரத் திட்டங்கள் தோன்றின. கட்சியின் போர்த் தந்திர திட்டங்கள், பொதுவாக எவ்வாறு புதிய வரலாற்று மாற்றங்களுக்கு ஏற்ப மாறுகின்றன என்பதைக் காட்ட இத் திருப்பங்களைப் பற்றிச் சுருக்கமாக கூறுவது அவசியம்.

### ஆ. முதல் வரலாற்று ரீதியான திருப்பமும் ரஷ்யாவில் பூர்ஷ்வா சனநாயகப் புரட்சியை நோக்கிய பாதையும்

இந்தத் திருப்பமானது, இந்நூற்றாண்டின் துவக்கத்தில், ரஷ்ய-ஜப்பானியப் போர்க் காலகட்டத்தில் துவங்கியது. அப்போது, ஜாரின் படைகளின் தோல்வியும் ரஷ்யத் தொழிலாளர்களின் பெரும் அரசியல் வேலை நிறுத்தங்களும் எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த பொதுமக்களையும் உலுக்கி விட்டு அவர்களை அரசியல் போர்க்களத்திற்குள் உந்தித் தள்ளின. 1917 பிப்ரவரி புரட்சி நாட்களில் இத்திருப்பம் முற்றுப்பெற்றது.

இந்தக் காலகட்டத்தில் நமது கட்சியில் இரண்டு போர்த் தந்திரத் திட்டங்கள் பிரச்சினைக்குட்பட்டன. ஒன்று, (பிளக்கனே, மார்ட்டோவ் 1905 இல் முன் வைத்த) மென்ஷெவிக்குகளின் போர்த் தந்திரத் திட்டம்; மற்றொன்று (தோழர் லெனின், 1905 இல் முன்வைத்த) போல்ஷெவிக்குகளின் போர்த் தந்திரத் திட்டம்.

மென்ஷெவிக் போர்த் தந்திரம், ஜாரிசத்துக்கு எதிரான முதன்மைத் தாக்குதல், மிதவாத முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான ஒரு கூட்டணி என்ற மார்க்கத்தின் வழியாகச் செலுத்தப்படவேண்டும் என்று திட்டமிட்டது. அச்சமயத்தில் புரட்சியானது, ஒரு பூர்ஷ்வா புரட்சியாகக் கருதப்பட்டது,

என்ற அடிப்படையில் இந்தப் போர்த் தந்திரத்திட்டம் தீட்டப் பட்டது. இதன்படி புரட்சி இயக்கத்திற்குத் தலைமை தாங்க வேண்டியது மிதவாத முதலாளிய வர்க்கம் என்றும், முதலாளி வர்க்கத்தின் பின்னால் நின்று கொண்டு முதலாளிகளுக்குச் 'சொல்லித் தரவேண்டிய' 'தீவிர இடதுசாரி எதிர்க்கட்சி' என்ற பாத்திரத்தைத்தான் பாட்டாளிவர்க்கம் வகிக்கவேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. முக்கிய புரட்சிச் சக்திகளில் ஒன்றான விவசாயி வர்க்கமோ முற்றிலும் அல்லது கிட்டத்தட்ட முற்றிலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவில்லை. இத்திட்டமானது, ரஷ்யா போன்ற நாட்டிலுள்ள இலட்சக் கணக்கான விவசாயிகளைக் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளாததால் அது கேடுகெட்ட கற்பனாவாதத் திட்டமாகவே அமைந்தது என்பதைப் புரிந்து கொள்வது கடினமானதல்ல; புரட்சியின் தலைவிதியை மிதவாத முதலாளி வர்க்கத்திடம் (பூர்ஷ்வா வர்க்கத்திடம் மேலாண்மையை) ஒப்படைத்து விட்டதால் அது பிற் போக்கானது என்பதையும் புரிந்து கொள்வது கடினமானதல்ல; ஏனெனில் புரட்சியில் முழு வெற்றியைச் சாதிக்கும் அக்கறை மிதவாத முதலாளி வர்க்கத்திற்கு இல்லை; ஜாரிசத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்க அது எப்போதும் தயாராக இருந்தது.

போல்ஷெவிக்போர்த்தந்திரமோ (தோழர்லெனினின் ''சனநாயகப் புரட்சியில் சமூக சனநாயகத்தின் இரண்டு செயல்தந்திரங்கள்'' என்ற நூலைப்பார்க்கவும்) ஜாரிசத்துக்கு எதிரானமுதன்மைத் தாக்குதலைப் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கும் இடையிலான கூட்டணி என்ற பாதையின் வழியாகச் செலுத்தவேண்டும் என்றும், மிதவாத முதலாளி வர்க்கத்தைச் செயலற்றதாக ஆக்கவேண்டும் எறுன்ம்திட்டமிட்டது. பூர்ஷ்வா சனநாயகப் புரட்சியில் முழு வெற்றியைச் சாதிப்பதில் மிதவாத முதலாளி வர்க்கத்திற்கு அக்கறை இல்லை என்பதையும் புரட்சி வெற்றி அடைவதைவிடதொழிலாளர்-விவசாயிகள் நலன்களைக்கைவிட்டு ஜாரிசத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதையே அது அதிகம் விரும்பியது என்பதையும் அடிப்படையாகக்கொண்டு தீட்டப்பட்ட இந்தப் போர்த்தந்திரத் திட்டமானது, ரஷ்யாவில் உள்ள முற்றிலும் புரட்சிகரமான ஒரே வர்க்கம் என்ற வகையில் பாட்டாளி வர்க்கத்திற்குப் புரட்சி இயக்கத்தின் மேலாண்மையை வழங்கியது. இத்திட்டம் குறிப்பிடத்தக்கதாக விளங்கியதற்குக் காரணம், அது புரட்சியின் உந்து சக்திகளைச்சரியாகக் கணக்கிட்டது மட்டுமல்ல, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் (பாட்டாளி வர்க்கத்தின் மேலாண்மை) பற்றிய கருத்தைக் கருநிலையில் கொண்டு இருந்தது என்பதும் ரஷ்யாவில் புரட்சியின் அடுத்த, மேலும் உயர்ந்த

கட்டத்தைத் தீர்க்கமாக முன்கூட்டியே பார்த்து, அக்கட்டத்தை நோக்கிச் செல்வதை எளிதாக்கியது என்பதுமாகும். பிற்பாடு 1917 பிப்ரவரி வரை புரட்சியில் ஏற்பட்ட வளர்ச்சியானது இந்தப் போர்த் தந்திரத் திட்டம் சரியானது என்பதை முற்றிலும் நிரு பித்தது.

**இ. இரண்டாவது வரலாற்று ரீதியான திருப்பமும் ரஷ்யாவில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நோக்கிச் சென்றமையும் பாதையும்.**

1917இல் பிப்ரவரிப் புரட்சியுடன், ஜாரிசம் தூக்கியெறியப்பட்ட பிறகு இரண்டாவது திருப்பம் தொடங்கியது. அப்போது ஏகாதி பத்தியப் போரானது உலகம் முழுவதும் முதலாளியத்தை அரித்து, அதன் உயிரைப் போக்கிக் கொண்டிருந்த சீர்கேடுகளை அம்பலப் படுத்தியிருந்தது; நாட்டின் உண்மையான அரசாங்கத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்ள ஆற்றல் இல்லாதிருந்த மிதவாத முத லாளிவர்க்கம் பெயரளவு அதிகாரத்தை (தற்காலிக அரசாங்கம்) வைத்திருப்பதற்கு மட்டுமே தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தது. தொழிலாளர் மற்றும் போர்வீரர் பிரதிநிதிகளின் சோவியத்துகள், தம் கரங்களில் உண்மையான அதி காரத்தைப் பெற்றவுடன் அதைத் தேவையான முறையில் பயன்படுத் துவதற்கான அனுபவமோ, மனவுறுதியோ இல்லாமலிருந்தன. போர்முனையில் போர்வீரர்களும், பின்புறத்தில் தொழிலாளரும் விவசாயிகளும் போரினாலும் பொருளாதாரச் சீர்குலைவினாலும் தாங்க முடியாத் துன்பத்தில் அலற்றிக் கொண்டிருந்தனர். ''இரட்டை அதிகார'' மற்றும் ''தொடர்புக்குழு'' ஆட்சியானது உள்முரண்பாடுகளால் பிளவுண்டு, போரை நடத்தவும் முடியாமல், சமாதானத்தைக் கொண்டு வரவும் முடியாமல் எதைச் செய்யவும் இயலாமல் இட்டுக்கட்டான நிலையினின்று மீளும் வழி காணத் தவறியதோடல்லாமல் நிலைமையை மேலும் குழப்பத்திற்குள்ளாக் கியது. இந்தக் காலகட்டம் 1917 அக்டோபர் புரட்சியுடன் முற்றுப் பெற்றது.

அச்சமயத்தில் சோவியத்துக்களில் இரு போர்த்தந்திரத் திட்டங்கள் பிரச்சினைக்கு வந்தன. மென்ஷெவிக்-சோசலிசப் புரட்சியாளர் திட்டம் ஒன்று; போல்ஷெவின் திட்டம் மற்றொன்று. மென்ஷெவிக்-சோசலிசப் புரட்சியாளர் திட்டம், முதலில் சோவியத் துக்களுக்கும் தற்காலிக அரசாங்கத்துக்குமிடையேயும், புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. பிறகு சனநாயக மாநாடு துவக்கப்பட்ட (செப்டம்பர், 1917) சமயத்தில்

இறுதி வடிவம் எடுத்தது. சோவியத்துக்களிடமிருந்த அதிகாரத்தைப் படிப்படியாக, ஆனால் ஒரு நிலையாக அவற்றிடமிருந்து அகற்றி நாட்டில் எல்லா அதிகாரத்தையும் ஒரு எதிர்கால பூர்ஷ்வா நாடாளுமன்றத்தின் முன் மாதிரியான ''பூர்வாங்க பாராளுமன்றத்தின்'' கரங்களில் குவிக்கும் வழியை மேற்கொண்டது. சமாதானமா, போரா என்கின்ற பிரச்சினைகள், விவசாய-தொழிலாளர் பிரச்சினைகள், தேசியப் பிரச்சினைகள் ஆகியன அரசியல் நிர்ணயசபைக் கூட்டம் கூடும்வரை தள்ளிப் போடப்பட்டன. அரசியல் நிர்ணய சபைக் கூட்டமோ ஓர் வரையற்றகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. ''அரசியல் நிர்ணயசபைக்கே எல்லா அதிகாரமும்''—சோசலிசப் புரட்சியாளர்களும் மென்ஷெவிக்குகளும் இப்படித்தான் தங்கள் போர்த்தந்திரத்திட்டத்தை வகுத்தனர். அது, ஒரு பூர்ஷ்வாவர்க்க சர்வாதிகாரத்துக்கு வழிகோலும் திட்டமாகும்; நன்றாக சோடிக்கப்பட்ட ''பரிபூரண சனநாயக'' சர்வாதிகாரம் தான் அது என்பது உண்மை; ஆனால் அது ஒரு பூர்ஷ்வா வர்க்க சர்வாதிகாரமே.

போல்ஷெவிக் போர்த்தந்திரமோ 1917 ஏப்ரலில் பிரசுரிக்கப்பட்ட தோழர் லெனினின் ''ஆய்வுரை'' களைப் பார்க்கவும்) பாட்டாளிவர்க்கம், ஏழை விவசாயிகள் ஆகியோரின் ஒன்றுபட்ட சக்திகளைக் கொண்டு முதலாளி வர்க்கத்தின் அதிகாரத்தை அழித்தொழிக்கும் மார்க்கத்தினூடே, சோவியத் குடியரசு என்ற வடிவத்தில் பாட்டளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஒழுங்கமைத்தல் என்ற மார்க்கத்தினூடே முதன்மைத் தாக்குதல் நடத்தத்திட்டமிட்டது. ஏகாதிபத்தியத்துடன் முறிவேற்படுத்திக் கொண்டு போரிலிருந்து விலகுதல்; முன்னாள் ரஷ்யப் பேரரசிலிருந்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களை விடுதலை செய்தல்; நிலப் பிரபுக்கள், முதலாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்; சோசலிசப் பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பதற்கான நிலைமைகளுக்கான தயாரிப்பு செய்தல் —அக்காலகட்டத்தில் போல்ஷெவிக் போர்த்தந்திரத் திட்டத்திலிருந்த அம்சங்கள் இத்தகையன. இத்திட்டம் முக்கியத்துவம் உடையதாக இருந்ததற்குக் காரணம், ரஷ்யாவில் புதிய, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உண்மையான உந்து சக்திகளை அது சரியாகக் கருத்தில் கொண்டது என்பது மட்டுமல்ல; மேற்கத்திய நாடுகளில் புரட்சிகர இயக்கத்தைக் கட்டவிழ்த்து விடவும் உதவியது, அவ்வாறு கட்டவிழ்த்து விடுவதை விரைவுபடுத்தியது என்பதுமாகும். அக்டோபர் புரட்சிவரை பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிகள் இந்த யுத்த தந்திரத் திட்டத்தின் சரியான தன்மையை முழுமையாக உறுதிப்படுத்தின.

**ஈ. மூன்றாவது வரலாற்று ரீதியான திருப்பமும் ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை நோக்கிய பாதையும்**

மூன்றாவது திருப்பம் அக்டோபர் புரட்சியுடன் தொடங்கியது. அப்போது மேற்கு நாடுகளில் இரு ஏகாதிபத்தியக் கூட்டுகளுக்கிடையே நடந்த ஜீவமரணப் போராட்டம் தன் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. மேற்கு நாடுகளில் புரட்சிகர நெருக்கடி தீவிரமடைவது கண்கூடாகிக் கொண்டிருந்தது; ரஷ்யாவில், பூர்ஷ்வா அரசாங்கம் ஓட்டாண்டியாகி, முரண்பாடுகளில் சிக்கித் தவித்துப்பாட்டாளிவர்க்கப் புரட்சியின் தாக்குதலால் வீழ்ந்திருந்தது. வெற்றிகரமான பாட்டாளிவர்க்கப் புரட்சி ஏகாதிபத்திய உறவை முறித்துக் கொண்டு, போரிலிருந்து விலகி, இதன் காரணமாக மேற்கு நாடுகளில் ஏகாதிபத்தியக் கூட்டணிகள் என்ற வடிவெடுத்த கடும் பகைவர்களைப் பெற்றிருந்தது; நிலப்பிரபுக்களின் நிலங்களைக் கைப்பற்றவும், முதலாளிகளின் உடைமைகளைப் பறிமுதல் செய்யவும், தேசிய இனங்களை விடுதலை செய்யவும் புதிய சோவியத் அரசாங்கம் பிறப்பித்த ஆணைகள் உலகம் முழுவதிலுமுள்ள லட்சக்கணக்கான உழைப்பாளிகளின் நம்பிக்கையை ஈட்டியிருந்தன. இந்தத் திருப்பம் சர்வதேச அளவிலானது. ஏனெனில், முதன் முறையாக மூலதனத்தின் சர்வதேச முனையில், உடைப்பேற்படுத்தப்பட்டது. முதலாளியத்தைத் தூக்கியெறிதல் என்ற பிரச்சினைக்கு முதன் முறையாக ஓர் நடைமுறைத் தீர்வு வழங்கப்பட்டது. இது அக்டோபர் புரட்சியை, ஒரு தேசிய, ரஷ்யச் சக்தி என்ற நிலையிலிருந்து ஒரு சர்வதேசச் சக்தியாக உருமாற்றியது. ரஷ்யத் தொழிலாளர்களைச் சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்தின் பிற்பட்ட படைப்பிரிவு என்ற நிலையிலிருந்து அதன் முன்னணிப்படை என்ற நிலைக்கு மாற்றியது. ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் முழு ஈடுபாட்டுடன் நடத்திய தனது போராட்டங்களின் மூலம் மேற்கு நாடுகளின் தொழிலாளரையும் ஒடுக்கப்பட்ட கீழை நாடுகளையும் தட்டியெழுப்பியது. இந்தத் திருப்பத்தின் வளர்ச்சி இன்னும் முற்றுப்பெறவில்லை. ஏனெனில் அது இன்னும் ஒரு சர்வதேச அளவில் வளர்ச்சி பெறவில்லை. ஆனால் அதன் உள்ளடக்கமும் பொதுத்திசையும் ஏற்கனவே போதுமான அளவு தெளிவாகியுள்ளன.

அச் சமயத்தில் ரஷ்யாவில் அரசியல் வட்டாரங்களில் இரு போர்த்தந்திரத் திட்டங்கள் பிரச்சினையாயிருந்தன. ஒன்று எதிர்ப்புரட்சியாளர்களின் திட்டம்: இவர்கள். மென்ஷெவிக்குகள், சோசலிசப் புரட்சியாளர்கள் ஆகியோரில் செயலாற்றல் மிகுந்த பிரிவுகளைத் தங்கள் அமைப்புகளில் ஈர்த்திருந்தனர். மற்றொன்று, போல்ஷெவிக்குகளின் திட்டம்.

எதிர்ப்புரட்சியாளர்களும் செயலாற்றல் மிக்க சோசலிசப் புரட்சியாளர்களும் மென்ஷெவிக்குகளும் புரட்சியினால் அதிருப்தி யுற்ற சக்திகள் அனைத்தையும் ஒரே முகாமுக்குள் ஐக்கியப்படுத்தும் மார்க்கத்தையொட்டித் திட்டம் ஒன்றை வகுத்தனர். போர் முனை யிலும் பின்புறத்திலும் இருந்த பழைய இராணுவ அதிகாரிகள்; எல்லைப் பிரதேசங்களிலிருந்த பூர்ஷ்வா-தேசிய அரசாங்கங்கள்; புரட்சியால் உடைமைகள் பறிமுதல் செய்யப் பட்டிருந்த முதலாளி களும் நிலப்பிரபுக்களும்; தலையீட்டுக்கு ஆயத்தம் செய்து கொண் டிருந்த நேசநாடுகளின் கையாட்கள்; இன்ன பிறரே அதிருப்தியுற்ற சக்திகள். கலகங்கள் மூலமோ அந்நியத் தலையீட்டின் மூலமோ சோவியத் அரசாங்கத்தைத் தூக்கியெறிந்து ரஷ்யாவில் முதலாளிய அமைப்பைத் திரும்பவும் கொணரும் பாதையை நோக்கித் தம் திட்டத்தை இவர்கள் செலுத்தினர்.

அதற்கு மாறாக போல்ஷெவிக்குகளோ, ரஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நாட்டிற்குள் வலுப்படுத்தி, உலக ஏகாதி பத்தியத்துக்கு எதிராக ரஷ்யப்பாட்டாளிகளின் முயற்சிகளை ஐரோப்பியப் பாட்டாளிகளின் முயற்சிகளுடனும் ஒடுக்கப்பட்ட கீழைத்தேசங்களின் முயற்சிகளுடனும் ஒன்றிணைப்பதன் மூலம் பாட் டாளி வர்க்கப் புரட்சி நடைபெறும் களத்தின் பரப்பினை உலகின் எல்லா நாடுகளுக்கும் விரிவுபடுத்துவது என்ற மார்க்கத்தினூடே திட்டமிட்டனர். இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது, 'பாட் டாளிவர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்' என்ற பிரசுரத்தில் தோழர் லெனின் இந்தப் போர்த்தந்திரத் திட்டம் பற்றி வழங்கியுள்ள சரியான, துல்லியமான விளக்கமாகும். அதாவது ''எல்லா நாடுகளிலும் புரட்சியை வளர்க்கவும் ஆதரிக்கவும் எழச்செய்யவும் வேண்டி ஒரு நாட்டில் (ஒருவரது சொந்த நாட்டில்- ஜே. ஸ்டாலின்) உயர்ந்த பட்சம் இயன்றது அனைத்தையும் செய் தல்.'' இந்தப் போர்த் தந்திரத்தின் மதிப்பு, அது உலகப்புரட்சியின் உந்து சக்திகளைச் சரியாகக் கருத்தில் கொண்டது என்பதில் மட்டும் பொதிந்திருக்கவில்லை; சோவியத்ரஷ்யா, உலகம் முழுவதிலும் உள்ள புரட்சிகர இயக்கங்களின் கவனத்தின் குவிமுனையாக, மேற்கு நாடு களின் தொழிலாளர்கள், கீழைக்காலனி நாடுகள் ஆகியவற்றின் விடுதலைக்கான பதாகையாக பின்னர் உருமாறப் போவதை முன் கூட்டியே பார்த்து, அந்த உருமாற்றப் போக்கைச் சாத்தியமாக்கியது என்பதிலும் இந்தப் போர்த் தந்திரத்தின் மதிப்பு அடங்கியுள்ளது.

உலகம் முழுவதிலும் புரட்சி பின்னர் வளர்ந்ததும் ரஷ்யாவில் சோவியத் அதிகாரம் ஐந்தாண்டுகளாக நிலவி வருவதும் இந்தப்

போர்த்தந்திரத் திட்டத்தின் தன்மையை உறுதிப்படுத்தியுள்ளன. ஒரு பக்கம் சோவியத் அரசாங்கத்தைத் தூக்கியெறிய பல முயற்சி களைச் செய்த எதிர்ப்புரட்சியாளர்களும் சோசலிசப் புரட்சியாளர் களும் மென்ஷெவிக்குகளும் இப்போது வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார் கள் என்பதும், இன்னொரு பக்கம் சோவியத் அரசாங்கமும் சர்வ தேசப்பாட்டாளிவர்க்க அமைப்பும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் கொள்கையை நிர்ணயிக்கும் முக்கிய கருவிகளாக ஆகிவருகின்றன என்பதும், இது போன்ற இதர உண்மைகளும் போல்ஷெவிக்குகளின் போர்த்தந்திரத் திட்டத்துக்கு ஆதரவான கண்கூடான சான்றுகளா கும்.

*பிராவ்தா எண் :— 56*

*மார்ச் 14, 1923.*

ஒப்பம் : ஜே. ஸ்டாலின்

ஸ்டாலின் தொகுப்பு நூல் எண். 5

# 2

# ருஷ்யப் பொதுவுடைமையாளர்களின் அரசியல் போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரம்

—ஜே. வி. ஸ்டாலின்

(ஒரு சிறு வெளியீட்டின் சுருக்கம்)

## (அ) கலைச்சொல் வரையறையும் ஆய்வுப் பொருளும்

**1. அரசியல் போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றின் செயல்பாட்டு எல்லைகளும், அவற்றின் பயன்பாட்டுப் புலமும்.** *பாட்டாளி வர்க்க இயக்கமானது, ''அகவயம் மற்றும் புறவயம்'' என்ற இரு பகுதிகளைக் கொண்டுள்ளது எனக் கொண்டால், பின்பு சந்தேகமின்றி, போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரத்தின் செயல்தளம், இயக்கத்தின் அகவயப்பகுதியின் வரம்பிற்கு உட்பட்டதாக இருக்கிறது.* **புறவயமானது**, *பாட்டாளி வர்க்கம் அதன் விருப்பம், அதன் கட்சியின் விருப்பம் ஆகியவற்றுக்கு வெளியேயும், பாட்டாளி வர்க்கத்தைச் சுற்றிலும் சுதந்திரமாக நடைபெறும் ''வளர்ச்சி முறையை'' உள்ளடக்கியுள்ளது. மேலும், இந்த நிகழ் முறையே வளர்ச்சியே (மொ. பெ)— இறுதிப் பகுப்பாய்வில், மொத்த சமூகத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது.* **அகவயமானது**, *பாட்டாளி வர்க்கத்தினுள் புறச் செயல்பாடுகளின் காரணமாக பாட்டாளி வர்க்கத்தின் உணர்வில் தோன்றும் பிரதிபலிப்புகளின் நிகழ்முறைகளை உள்ளடக்கியிருக்கிறது. புறச் செயல்பாடுகள், பின் சொன்னதை—அகச் செயல்பாடுகளை-துரிதப்படுத்துகிறது அல்லது தடுக்கிறது; ஆனால் அதைத் தீர்மானிப்பதாக உள்ளது.*

**2. மார்க்சியக் கோட்பாடானது,** முதன்மையாக, தன்னுடைய வளர்ச்சியிலும் தாழ்விலும் உள்ள புறவய நிகழ் முறைகளை ஆராய்கிறது. தவிர்க்க இயலாதவாறு அதிகாரத்துக்கு வரும் வகையில் எழுகின்ற வர்க்கம் அல்லது வர்க்கங்களின் அல்லது தவிர்க்க இயலாதவாறு வீழ்ந்து கொண்டுள்ள, வீழ்ந்தாக வேண்டிய வர்க்கம் அல்லது வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கை வரையறுத்துச் சுட்டிக் காட்டுகிறது.

**3. செயல் திட்டம்**

இந்த கோட்பாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மார்க்சியச் செயல் திட்டமானது, வளர்கின்ற வர்க்க இயக்கத்தின், இந்தக் காலகட்டத்தில், பாட்டாளி வர்க்க இயக்கத்தின்—முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கான, அல்லது முதலாளியத்துவக் கால கட்டம் முழுமைக்குமான நோக்கங்களை வரையறுக்கிறது. (குறைந்த பட்ச செயல்திட்டம் மற்றும் அதிக பட்ச செயல் திட்டம்)

**4. போர்த் தந்திரம்**

இது செயல் திட்டத்தால் வழி காட்டப்படும். தேசிய அளவிலும் மற்றும் சர்வதேசிய அளவிலும் போராடும் சக்திகளின் கணிப்பின் மேல் வகுக்கப்படுவது. போர்த்தந்திரமானது, புரட்சிகர பாட்டாளி வர்க்க இயக்கம், தொடக்க நிலையிலும் வளர்ந்து செல்கின்ற சக்திகளின் உறவின் கீழும் மிகப் பெரும் விளைவுகளைச் சாதிக்கும் நோக்கத்துடன், வழிநடத்திச் செல்லப்பட வேண்டிய, பொதுவான வழியையும், பொதுவான திசையையும் வரையறுக்கிறது. இதற்கு ஏற்றவாறு, இது, சமுதாய முனையில், பட்டாளி வர்க்கம் மற்றும் அதன் நட்பு சக்திகளின் நிலைபாட்டைப் பற்றிய ஒரு வரைப்படத்தின் எல்லைக் கோட்டை வரையறுக்கிறது. இது பொதுவான நிலைபாடு (General Disposition) ஆகும். ''சக்திகளின் நிலைப்பாட்டுத் திட்டத்தை விளக்குதல்'' என்பதைப் போர்த்தந்திரம், செயல் தந்திரம்இவை இரண்டாலும் செயல்படுத்தப்படுகின்ற,உண்மையான (பருண்மையான மேலும் நடைமுறையுடன் கூடிய) செயல்பாட்டுச் சக்திகளாகப் பகிர்தல் ஆகியவற்றோடு சேர்த்துக்குழப்பிக் கொள்ளுதல் கூடாது. பாட்டாளிவர்க்கப்பாசறையின் வழியையும், போராடும் சக்திகளின் நிலைப்பாட்டையும் வரையறுத்தல் என்ற அளவிற்குப் போர்த்தந்திரமானது சுருக்கப்பட்டுள்ளது என இது குறிக்காது. இதற்கு மாறாக, இது போராட்டத்தை வழி நடத்துகிறது; ஒரு

திருப்பத்தின் காலப்பகுதி முழுவதும் கைவசமுள்ள சேமிப்புகளைத் திறமையுடன் பயன்படுத்தியும், செயல் தந்திரத்தை ஆதரிக்கும் குறிக்கோளுடன் சூழ்ச்சித் திறமையுடன் செயலாற்றியும் அது அப்போதைய செயல்தந்திரத்தில் திருத்தங்களைப் புகுத்துகிறது.

## 5. செயல் தந்திரங்கள்

போர்த் தந்திரத்தாலும் உள்நாட்டிலும் அண்டை நாடுகளிலும் உள்ள புரட்சி இயக்கங்களின் அனுபவத்தாலும் வழி காட்டப்படுகிறது; ஒவ்வொரு தருணத்திலும் பாட்டாளி வர்க்கத்துக்குள்ளும் அதன் கூட்டாளிகளுக்குள்ளும் எதிரியின் பாசறையிலும் இருக்கிற சக்திகளின் நிலையைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது; (பண்பாட்டின் உயர்ந்த அல்லது தாழ்ந்த மட்டம், அரசியல் உணர்வின் உயர்ந்த அல்லது தாழ்ந்த தரம் நிலவும் மரபுகள், இயக்க வடிங்கள், தலையாய மற்றும் துணை அமைப்பு வடிவங்கள்) எதிரியின் முகாமில் உள்ள இணக்கமின்மையையும், குழப்பத்தையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது. பரந்துபட்ட மக்கள் திரளைப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் பால் வென்றெடுக்கவும், போர்த்தந்திரத்தின் வெற்றியை மிகமிக நிச்சயமாகத் தயாரிக்கும் வகையில் சமூக முனையில் அவர்களது போரிடும் நிலைகளில் அவர்களை வைக்கவும் திட்டவட்டமான வழிகளைச் சுட்டிக்காட்டுகிறது. இதற்குப் பொருத்தமாக அவை கட்சியின் முழக்கங்களையும் ஆணைகளையும் வழங்குகின்றன அல்லது மாற்றுகின்றன.

## 6. போர்த்தந்திரம்

வரலாற்றின் திருப்பங்களிலும் அடிப்படையான மாற்றங்களிலும் மாறுகிறது; இது ஒரு திருப்பத்திலிருந்து அடுத்த திருப்பம் வரையிலுள்ள (அடிப்படையான மாற்றம்) காலப் பகுதியைத் தழுவுகிறது. எனவே, இந்தக் காலப்பகுதி முழுவதற்கும் பாட்டாளி வர்க்க நலன்களை உள்ளடக்கிய பொதுக் குறிக்கோளின்பால் அது இயக்கத்தை நெறிப்படுத்துகிறது. அதன் நோக்கம் இக்காலப்பகுதி முழுவதின்போதும் தொடுக்கப்படுகின்ற வர்க்கங்களின் போரில் வெல்லுவதாகும்; எனவே, இந்தக் காலப் பகுதியின்போது அது மாற்றமின்றி இருக்கிறது.

மறுபுறம், செயல்தந்திரங்கள் ஒரு குறிப்பிட்ட திருப்பத்தை, ஒரு குறிப்பிட்ட போர்த்தந்திரக் காலப்பகுதியின், அடிப்படையான

ஏற்ற இறக்கங்களால் தீர்மானிக்கப்படுகின்றன; எதிரெதிரே நின்று போரிடும் சக்திகளின் உறவால், போராட்ட(இயக்க) வடிவங்களால், ஒவ்வொரு குறிப்பிட்ட மாவட்டத்திலும் இயக்கத்தின் உணர்ச்சி வேகத்தால் ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள போராட்டக் களத்தால் இவ்வாறு தீர்மானிக்கப் படுகிறது. ஒரு திருப்பத்திலிருந்து மற்றது வரையிலான காலப்பகுதியின் போது செயல் தந்திரங்கள் கால, இட, நிலைமைகளுடன் பொருந்துமாறு மாறுகிறது; செயல் தந்திரங்கள் போர் முழுவதிலும் இடங் கொள்வதில்லை; போரின் வெற்றி தோல்விக்கு இட்டுச் செல்கிற தனித்தனிச் சண்டைகளில் மட்டுமே இடங் கொள்கின்றன. எனவே, செயல் தந்திரங்கள் போர்த் தந்திரக் காலப்பகுதியின் போது பல தடவை மாறுகின்றன (மாறலாம்). ஒரு போர்த் தந்திரக் காலப்பகுதி, செயல் தந்திரக் காலப் பகுதியை விட நீண்டதாக இருக்கின்றது. போர்த்தந்திர நலன்களுக்குக் கீழ்ப்பட்டதாகவே செயல் தந்திரங்கள் உள்ளன. பொதுவாகச் சொன்னால் செயல் தந்திர வெற்றிகள் போர்த் தந்திர வெற்றிக்குத் தயார் செய்கின்றன. போராட்டம் பொதுவாகப் போரில் வெற்றியடையும் வகையில், அதாவது போர்த் தந்திர, வெற்றிக்கென மக்கள் திரளை புதிய நிலைகளுக்கு வழி நடத்தும் வகையில் போராட்ட முழக்கங்களை வழங்குவது செயல்தந்திரங்களின் செயல்பாடு ஆகும். ஆனால் ஒரு செயல் தந்திர வெற்றியானது, போர்த்தந்திர வெற்றியை முறியடிக்கச் செய்கிற அல்லது ஒத்திப் போடுகிற சம்பவமாகவும் உண்டு. இத்தகைய விஷயங்களில் செயல்தந்திர வெற்றிகளை விட்டு விட்டுப் போவது இன்றியமையாததாகும்.

எடுத்துக் காட்டாக, 1917 தொடக்கத்தில் தொழிலாளர்களிடையேயும், படை வீரர்களிடையேயும் நாம் கெரென்ஸ்கியின் கீழ்ப் போரை எதிர்த்து நடத்திய போராட்டத்தைக் கூறலாம். அது ஐயத்திற்கிடமின்றி ஒரு செயல் செயல்தந்திரப் பின்னடைவில் முடிவடைந்தது; ஏனெனில், மக்கள் திரளினர் நமது பேச்சாளர்களை மேடைகளிலிருந்து கீழே இழுத்துப் போட்டு அடித்தனர்; சில நேரங்களில் அவர்களை நார் நாராகக் கிழித்தனர். மக்கள் திரள் கட்சியை நோக்கி இழுக்கப்படுவதற்கு மாறாக அவர்கள் கட்சியிடமிருந்து விலகி ஓடினர். ஆனால் இந்தச் செயல்தந்திரத் தோல்விக்கு மாறாக, இப்போராட்டம் ஒரு பெரிய போர்த்தந்திர வெற்றியை அண்மையில் கொணர்ந்தது; ஏனெனில், போரை எதிர்த்து நாம் போராடியது சரி என்று மக்கள் விரைவிலேயே புரிந்து கொண்டனர்; பின்னர் அவர்கள் கட்சியின்பால் வருவதற்கு இது உதவி செய்து விரைவு படுத்தியது.

**மற்றோர் எடுத்துக்காட்டு:** இருபத்தொரு நிபந்தனைகளுக்கு பொருத்தமாக, சீர்திருத்தவாதிகள் மற்றும் மையவாதிகளிடமிருந்து பிரிந்து போய்விட வேண்டுமென்ற காமின்டர்னின் (கம்யூனிஸ்ட் அகிலம்) கோரிக்கை, ஒரு குறிப்பிட்ட செயல் தந்திரம் பின்னடைவைத் தடுக்கிறது; ஏனெனில், அது பொதுவுடைமை அகிலத்தின் ''ஆதரவாளர்கள்'' எண்ணிக்கையை வேண்டுமென்றே குறைத்து அதைப் பலவீனமாக்குகிறது. ஆனால் அது நம்ப முடியாத கூறுகளை உதறித்தள்ளுவதன் மூலம் ஒரு பெரிய போர்த் தந்திர ஆதாயத்துக்கு இட்டுச் செல்கிறது. அது ஐயமின்றி காமின்டர்னை வலிமைப்படுத்தும்; அதன் அணிகளை மிக நெருக்கமாகப் பிணைக்கும் அதாவது, பொதுவாக அதன் ஆற்றலை அதிகரிக்கும்.

## 7. கிளர்ச்சி முழக்கமும், செயல் முழக்கமும்

இவற்றைக் குழப்பி விடக்கூடாது. அப்படிச் செய்வது அபாயகரமானது. 1917 ஏப்ரல் முதல் அக்டோபர் வரையில் ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே'' என்பது **கிளர்ச்சி** முழக்கமாக இருந்தது; கட்சியின் மையக்குழு அக்டோபர் 10இல் கூடி ''அதிகாரத்தைக் கைப்பற்றுதல்'' மீதான தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு அது **செயல்** முழக்கம் ஆனது. ஏப்ரலில் பெத்ரோகிராடில் பெக்டாத்யேல் குழு செய்த நடவடிக்கையில் முழக்கங்கள் பற்றிய அத்தகைய தவறைச் செய்தது.

## 8. ஆணை (Directive) (பொது)

**ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் குறிப்பிட்ட இடத்திலும்** செயலில் ஈடுபடுவதற்கு நேரடியாக அறைகூவல் விடுப்பதே ஆணை ஆகும். இது கட்சியைக் கட்டுப்படுத்துகிறது. ஏப்ரல் தொடக்கத்தில் ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே'' என்பது ஒரு பிரச்சார முழக்கமாகவேஇருந்தது ('ஆய்வுரை') ஜூனில் அது **கிளர்ச்சி** முழக்கமாகியது. (அக்டோபர் 10) அக்டோபரில் அது **செயல்** முழக்கமாகியது. ஆனால் அக்டோபர் முடிவில் அது உடனடி **ஆணையாகியது.** கட்சி முழுவதற்குமான பொது ஆணை பற்றியே நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பொது ஆணைக்கு விளக்கமான உள்ளூர் ஆணைகளும் இருக்க வேண்டும் என்பதை மனத்தில் கொண்டே அவ்வாறு சொல்லுகிறேன்.

## 9. சிறு உடைமை வர்க்கத்தின் ஊசலாட்டம்

குறிப்பாக, அரசியல் நெருக்கடி முற்றித் தீவிரமடையும் காலங்களில் (ஜெர்மனியில் ரெய்ஷ்டாக் தேர்தல்களின்போது;

ருஷ்யாவில் கெவின்ஸ்கியின் கீழ் ஏப்ரலில் ஜூனில் மற்றும் ஆகஸ்டில் மீண்டும் ருஷ்யாவில் க்ரான்ஸ்டாட் நிகழ்ச்சிகளின்போது 1921இல்) இதைக் கவனமாக ஆராய வேண்டும். இதை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு வளைந்து கொடுப்பது அபாயகரமானது; பாட்டாளிவர்க்க நோக்கத்திற்குச் சாவுமணி அடித்து விடும். அத்தகைய ஊசலாட்டங்களால் கிளர்ச்சி முழக்கங்களை மாற்றிவிடக் கூடாது; ஆனால் ஒரு குறிப்பிட்ட **ஆணையையும்,** ஒரு (செயல்) முழக்கத்தையும் கூடத்தான் மாற்றவோ, ஒத்திவைக்கவோ வேண்டியது அனுமதிக்கப்படுகிறது; சில சமயங்களில் இது இன்றியமையாததாகிறது. ''இரவோடிரவாகச்'' செயல் தந்திரத்தை மாற்றுவதென்பது துல்லியமாக ஓர் **ஆணையை** அல்லது ஒரு **செயல் முழக்கத்தைக்** கூட மாற்றுவதாகும்; ஆனால் ஒரு கிளர்ச்சி முழக்கத்தை மாற்றக் கூடாது. (1917 ஜூன் 9 ஆர்ப்பாட்டத்தைத் திரும்பப் பெற்றதும் அது போன்ற விவரங்களும்).

**10. போர்த் தந்திரம் உள்ளவரின்** மற்றும் **செயல் தந்திரம் உள்ளவரின்** கலையானது, ஒரு கிளர்ச்சி முழக்கத்தைத் திறமையுடனும், தக்க சமயத்திலும் ஒரு செயல் முழக்கமாக மாற்றுவதிலும், ஒரு செயல் முழக்கத்தைத் திறமையுடனும் தக்க சமயத்திலும் வரையறுக்கப்பட்ட பருண்மையான **ஆணைகளாக** மாற்றுவதிலும் அடங்கியுள்ளது.

## ருஷ்யாவின் வளர்ச்சியின் வரலாற்றுத் திருப்பங்கள்

**1. 1904-05** திருப்பம் (ருஷ்ய - ஜப்பானியப் போர் ஒருபுறம் எதேச்சதிகாரத்தின் முற்றிலும் போதாத தன்மையையும் மறுபுறம், பாட்டாளி வர்க்கம் மற்றும் உழவர் இயக்கத்தின் வலிமையையும் வெளிப்படுத்தியது) மார்க்சியப் போர்த் தந்திரத் திட்டமாக வந்த **'இரண்டு செயல் தந்திரங்கள்"** என்ற லெனினின் புத்தகம் இந்தத் திருப்பத்திற்கானது. முதலாளிய ஜனநாயகப் புரட்சியை நோக்கியதான திருப்பம். **(இந்தத் திருப்பத்தின் சாரம் இதுதான்).** காடேட்டுகளின் ஆதிக்கத்தின் கீழ் ஜாரிசத்துடன் உறவு கொண்டது போன்று இல்லை. ஆனால் பாட்டாளி வர்க்க ஆதிக்கத்தின் கீழான பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியாகும். (இதுதான் போர்த் தந்திரத் திட்டத்தின் சாரமாகும்) ருஷ்ய முதலாளிய ஜனநாயகப் புரட்சி (Bourgeoise - democratic revolution) மேலை நாடுகளின் சோசலிச இயக்கத்துக்கு ஒரு தூண்டும் விசையாக அமைந்து, அங்கே புரட்சியைக் கட்டவிழ்த்து விட்டு, பூர்ஷ்வா வர்க்கப்

புரட்சியிலிருந்து சோசலிசப் புரட்சிக்குக் கடந்து செல்ல உதவும் என்பதைத் தொடக்கப் புள்ளியாக இப்போர்த் தந்திரத் திட்டம் மேற்கொண்டது. (மூன்றாவது கட்சிப் பேராயத்தின் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளிலும், பேராயத்தின் லெனின் பேச்சுகளிலும், சர்வாதிகாரம் பற்றிய கருத்தியலைப் பற்றி அவர் பேராயத்திலும் அவருடைய சிறு நூலான ''காடேட்டுகளின் வெற்றி'' என்பதிலும் செய்த பகுப்பாய்வுகளிலும் காண்க), எதிரெதிர் நின்று போரிடும் சக்திகள் பற்றிய கணிப்பும், பொதுவாக, இந்தத் திருப்பக் காலப் பகுதியின் பொருளியல் மற்றும் அரசியல் பகுப்பாய்வும் உயர் நிலையானதாகும். ''இரண்டு செயல் தந்திரங்கள்'' என்ற நூலில் வரையப்பட்டுள்ள போர்த்தந்திரத் திட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கையாவது செய்ததன் மூலம் பிப்ரவரிப் புரட்சி இந்தக் காலப் பகுதியின் உச்சநிலையைக் குறித்தது.

## 2. சோவியத் புரட்சியை நோக்கியதான 1917 பிப்ரவரி–மார்ச்சில் நேர்ந்த திருப்பம்

(ஏகாதிபத்தியப்போர் எதேச்சதிகாரத்தைத் துடைத்தழித்தது; முதலாளியத்தின் முற்று முழுதான திவாலாத்தனத்தை வெளிப்படுத்தி, நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தவிர்க்க இயலாத ஒரே வழி **சோசலிசப் புரட்சி என்று காட்டியது**.) மக்கள், முதலாளி வர்க்கம் மற்றும் ஆங்கிலோ-பிரெஞ்சு மூலதனம் கொண்டுவந்த மேன்மைமிக்க பிப்ரவரிப் புரட்சிக்கும், எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிய அக்டோபர் புரட்சிக்கும் இடையிலான வேறுபாடு (இந்தப் புரட்சி காடேட்டுகளுக்கு அதிகாரத்தை மாற்றிக்கொடுத்தபடியால், பன்னாட்டுச் சூழலில் (Situation) முக்கியத்துவமுள்ள எந்த மாறுதலையும் உண்டாக்கவில்லை. ஏனெனில் இது ஆங்கிலோ-பிரெஞ்சு மூலதனத்தின் ஒரு தொடர்ச்சியே ஆகும்).

**லெனினின் ''ஆய்வுரை''** யானது புதிய திருப்பத்திற்கு இசைந்த போர்த்தந்திரத் திட்டமாக அமைந்த ஒரேவழி பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம்தான் என்றது. ''நாம் ருஷ்யாவில் சோசலிசப் புரட்சியைத் தொடங்குவோம்; நமது சொந்த முதலாளி வர்க்கத்தைத் தூக்கி எறிந்து, இந்த வழியில் மேலைநாடுகளில் புரட்சியைக் கட்டவிழ்த்து விடுவோம்; அதன்பிறகு மேல்நாட்டுத் தோழர்கள் நமது புரட்சி முழுமை பெறச் செய்ய உதவுவார்கள்'' என்பதை அத் திட்டம் தொடக்கப் புள்ளியாகக் கொண்டது. இந்தத் திருப்புமுனைக்காலப் பகுதியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளியலையும், அரசியலையும் பகுத்தாராய்வது உயர்நிலையான ஒன்றாகும். (இக்காலப்பகுதி

இரட்டை அதிகாரம், கூட்டணிச் சேர்க்கைகள், கெரென்ஸ்கி ஆட்சியின் சாவு அறிகுறியாக கர்னிலோவ் (Karnilou) கலகம், போரில் அதிருப்தியடைந்ததால் மேலை நாடுகளில் அமைதி யின்மை ஆகியவற்றின் காலப்பகுதியாகும்.)

**3. 1917 அக்டோபர் திருப்பம்**

(ருஷ்யாவில் மட்டுமின்றி உலக வரலாற்றிலான திருப்பம்) ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவுதல்; (அக்டோபர்—நவம்பர்—டிசம்பர் 1917,-1918- முதல் பாதி ஆண்டு) **இத்திருப்பம் உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் பன்னாட்டுச் சமூக முனையில் நேர்ந்த பிளவு ஆகும்· இது உலக அளவில் முதலாளி யத்தைக் கலைத்துவிட்டு சோசலிச அமைப்பை நிறுவுவதை நோக்கிய தான திருப்பமாகும்.** ஏகாதிபத்தியப் போருக்கு மாறாக உள்நாட்டுப் போர்ச் சகாப்த (ஊழி) தொடக்கமான திருப்பம் **இது.** (சமாதானம் பற்றிய ஆணை, குலம் பற்றிய ஆணை, தேசிய இனங்கள் பற்றிய ஆணை, இரகசிய ஒப்பந்தங்களை வெளியிடல், கட்டுமான வேலைத் திட்டம். சோவியத்துகளின் இரண்டாவது பேராயத்தில் **லெனின்** பேசிய பேச்சுகள், **சோவியத் ஆட்சியதிகாரத் தின் கடமைகள்,** பொருளியல் கட்டுமானம் பற்றிய லெனினின் சிறு நூல்.)

**பொதுவுடைமை அதிகாரத்தில் இல்லாத போது, அது எதிர்க்கட்சி யாக இருக்கிறபோது, அதன் போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரத் துக்கும் பொதுவுடைமை அதிகாரத்திலிருக்கும்போது அதன் போர்த் தந்திரம் மற்றும் செயல் தந்திரத்துக்கும் இடையிலான வேறு பாட்டை அலசி ஆராய்க.**

பன்னாட்டு நிலைமை, இரண்டு ஏகாதிப்பத்தியக் குறுங் குழுக்களிடையிலான போர் தொடர்ந்தமை ருஷ்யாவில் சோவியத் ஆட்சியதிகாரம் நிலைப்பதற்கும் நீடிப்பதற்கும் ஒரு சாதகமான நிலைமை ஆகியது. (டீரெஸ்ட் சமாதானம் முடிவடைந்த பிறகு).

**4. சுருக்கமான அமைதியான கட்டுமான காலப்பகுதிக்குப் பிறகு, பிரெஸ்ட் சமாதானத்துக்குப் பிறகு தொடங்கிய குறுக்கீட்டாளர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை நோக்கிய செல்திசை (Course)** (1918 கோடை முதல் 1920 இறுதிவரையில்) இது பிரெஸ்ட் சமா தானத்துக்கு அப்புறம் தொடங்கியது. **இது சோவியத்** ருஷ்யாவின் இராணுவ பலவீனத்தை எதிரொலித்து சோவியத் புரட்சியின் முதன் மையான காப்பரணாகச் சேவைச் செய்வதற்கு **ஒரு** செம்படையை

உருவாக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தியது. செக்கோஸ்லோவாகியர்களின் எதிர் நடவடிக்கை, முர்மான்ஸ்க், அர்ச்சங்கள், விலாடி வாஸ்டாக், மற்றும் பாகுவை என்டென்டெ துருப்புகள் (ஆக்கிரமித்தன) கைப்பற்றியமை, சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக என்டென்டெ போர் அறிவித்தமை. இவை எல்லாம் புதிய திருப்பத்தைக் குறித்தன— அப்போது தொடங்கிய அமைதியான கட்டுமானத்திலிருந்து இராணுவ நடவடிக்கைகளுக்கும், உலகப் புரட்சியின் மையத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பகைவர்களின் தாக்குதலில் இருந்து பாதுகாத்தலுக்கும் மாறுவதான திருப்பம்.

(பிரெஸ்ட் சமாதானம் முதலியவை பற்றிய லெனினின் பேச்சுகள்) சோசலிசப் புரட்சி நடந்து முடிய நீண்டகாலம் பிடிக்கும்; அத்துடன் நாம் நமது சொந்த மூலவளங்களை மட்டுமே நம்பி நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். இதுவும் குறிப்பாக— மேலே குறிப்பிட்ட மாவட்டங்களின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு அந் நிலைக்கு ஆளானோம். இதற்கு மேலை நாடுகளின் பாட்டாளிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பு வரவில்லை. இதனால் நாம் அந்த அசிங்கமான பிரெஸ்ட் சமாதானத்தைச் செய்தோம். நாம் ஒய்வெடுத்து, அதே போழ்தில் நமது செம்படையைக் கட்டி நமது சொந்த முயற்சிகளாலேயே சோவியத் குடியரசைத் தற்காத்துக் கொள்வதற்கு அந்த ஓய்வு தேவைப்பட்டது.

"எல்லாம் போர் முனைக்கே, எல்லாம் குடியரசின் பாதுகாப்பிற்கே" எனவே பாதுகாப்புக் குழுவை அமைத்தல் முதலியன நடந்தேறிற்று. இது போர்க்காலப் பகுதியாகும். இது தன் முத்திரையை ருஷ்யாவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாழ்க்கை முழுவதிலும் பதித்தது.

5) ராங்கல் (Wrangal) தோற்கடிக்கப்பட்ட பிறகு, 1921 இன் தொடக்கத்திலிருந்து அமைதியான கட்டுமானத்தை நோக்கிய செல் திசை (Course) பிரிட்டன் போன்ற பல முதலாளி வர்க்க அரசுகளுடனான சமாதான ஒப்பந்தம் போட போர் முடிவடைந்து விட்டது. ஆனால் மேற்கத்திய நாட்டு சோசலிஸ்டுகள் நமது பொருளாதாரத்தை மீட்பதற்கு இன்னமும் உதவமுடியாதவர்களாக இருப்பதால், தொழில் துறையில் நாம், மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளி வர்க்க அரசுகளால் பொருளியல் ரீதியாகச் சூழப்பட்டிருப்பதால், தனித்தனி முதலாளி வர்க்க அரசுகளுக்குச் சலுகை அளித்து வர்த்தக உடன்படிக்கை போடவும் தனித்தனி முதலாளியக் குழுக்களுடன் சலுகை உடன்படிக்கை போடவும் நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்தத் (பொருளியல்) துறையில் கூட நாம்

நமது சொந்த மூலவளங்களையே நம்பி சூழ்ச்சித் திறமையுடன் செயலாற்றவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானோம். எல்லாமே தேசியப் பொருளாதாரத்தை மீட்டமைக்கத்தான். (லெனினது நன்கறியப்பட்ட பேச்சுகளையும் சிறுநூல்களையும் காண்க) பாதுகாப்புக் குழு உழைப்பு மற்றும் பாதுகாப்புக்கான குழுவாக உருமாற்றம் பெற்றது.

6. 1917 வரையிலான, கட்சியின் வளர்ச்சியில் உள்ள காலக் கட்டங்கள்.

a.) தலைமைக் கருப்பகுதியை, குறிப்பாக ''இஸ்க்ரா'' குழுவையும், பிறரையும் பற்றிப் பிணைத்தல், பொருளாதார வாதத்துக்கு எதிரான சண்டை தி கிரெட (The Crede)

b.) அனைத்து ருஷ்ய அளவில் எதிர்காலத்திய தொழிலாளர் கட்சியின் அடித்தளமாகக் கட்சி ஊழியர்களை உருவாக்குதல். (1895-1903) கட்சியின் இரண்டாவது காங்கிரஸ்.

c.) ஊழியர்களை ஒரு தொழிலாளர் கட்சியாக விரிவுபடுத்துதலும், பாட்டாளி வர்க்க இயக்கக் காலத்தின் போது சேர்க்கப்பட்ட புதிய கட்சி ஊழியர்களால் அத் தொழிலாளர் கட்சிக்கு மேலும் வலுவூட்டுதலும் (1903 - 04) மூன்றாவது கட்சிக் காங்கிரஸ்.

d.) கட்சி சாராத மக்கள் திரளிடையே (உழைப்பாளர் பேராயம்) கட்சியைக் கலைத்து கைகழுவும் குறிக்கோளுடன் கட்சி ஊழியர்களுக்கு எதிராக மென்ஷ்விக்குகள் போரிட்டது. கட்சியின் அடித்தளமாகக் கட்சி ஊழியர்களைப் பாதுகாப்பதற்காகப் போல்ஷெவிக்குகள் சண்டை போட்டனர். இலண்டன் பேராயமும் ஒரு தொழிலாளர் காங்கிரஸுக்கு வக்காலத்து வாங்கியவர்களின் தோல்வியும்.

e.) கலைப்புவாதிகளும் கட்சி ஆதரவாளர்களும் - கலைப்புவாதிகளின் தோல்வி (1908-10)

f.) 1908 முதல் 1916 முடிய சட்ட விரோத நடவடிக்கைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் சேர்த்ததும், நடவடிக்கையின் எல்லாத் துறைகளிலும் கட்சி அமைப்புகள் வளர்ச்சி அடைந்தமையும்.

7. சோவியத் அரசுக்குள் பொதுவுடைமைக்கட்சி விருது பெற்ற வாள்வீரன் போல இருந்து அதன் உறுப்புகளை நெறிப்படுத்தி, அவற்றின் நடவடிக்கைகளுக்குத் தூண்டுதல் அளித்தது.

இந்த ஆற்றல் மிக்க அமைப்பில் (order) பழைய காவலரின் முக்கியத்துவம். கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக

எஃகுறுதியாக்கப்பட்ட புதிய சக்திகளைக் கொண்டு பழைய காவலர்களுக்கு மேலதிக வலுச்சேர்த்தமை.

லெனின் இணக்கவாதிகளுக்கு (Concillators) எதிராகச் சமரசமில்லாத போராட்டத்தைத் தொடுத்தது சரிதானா? ஆம், ஏனெனில் அவர் அவ்வாறு செய்திருக்காவிட்டால் கட்சி நீர்த்துப் போயிருக்கும்; அது உயிருள்ள ஒன்றாக இல்லாமல் பல படித்தான கூறுகளின் கலவையாகி இருக்கும். அது உள்ளுக்குள் அவ்வளவு பற்றிப் பிணைக்கப்பட்டதாகவும், ஒன்றியதாகவும் இருந்திருக்காது. லெனின் அப்படிப் போராடியிருக்காவிட்டால் கட்சி இதற்கு முன்னுதாரணம் இல்லாத கட்டுப்பாடும், முன்னர் அறியப்படாத நெகிழ்வும் உடையதாகி இருக்காது. இவ்விரண்டு பண்புகளும் இல்லையெனில் கட்சியும், அது வழிகாட்டுகிற சோவியத் அரசும் உலக ஏகாதிபத்தியத்தைத் தாக்குப்பிடித்து நின்றிருக்க முடியாது. ''கட்சி கழிவுகளை வெளியேற்றுவதால் வலிமையுடையதாகிறது'' என்றும் லஸ்ஸால் (Lassale) சரியாகவே கூறினார். முதலில் தரம், பிறகு அளவு.

8. ஒரு பாட்டாளி வர்க்கக்கட்சி தேவையா இல்லையா, அதன் பாத்திரம் என்ன என்பது பற்றிய கேள்வி. கட்சியானது பாட்டாளி வர்க்கத்தின் அலுவலர் அணிகளையும் பொதுவான ஊழியர்களையும் கொண்டிருக்கிறது. இவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தை விதிவிலக்கின்றி எல்லா வடிவங்களிலும், எல்லாத் துறைகளிலும் நெறிப்படுத்துகின்றனர்; இவர்கள் போராட்டத்தின் பலதரப்பட்ட வடிவங்களை ஒரு முழுமையாகச் சேர்க்கின்றனர். ஒரு பொதுவுடைமைக் கட்சி தேவை இல்லை என்பது பொது ஊழியர்களின்றி (General staff), முதன்மையான உட்கருவும் இல்லாமல் பாட்டாளிவர்க்கம் போராட வேண்டும் என்பதாகும். இந்த ஊழியர்கள் போராட்ட நிலைமைகளைச் சிறப்பாக ஆராய்ந்து, போரிடுவதற்குரிய முறைகளை வகுக்கின்றனர். ஒரு முட்டாளை வைத்துக்கொண்டு போரிடுவது பொது ஊழியர்களின்றிப் போரிடுவதைவிட நல்லது என்பதற்குச் சமமானது இது.

## III பிரச்சினைகள் (Questions)

### 1. ருஷ்ய-ஜப்பானியப் போருக்கு முன்னும்பின்னும் எதேச்சதிகாரத்தின் பாத்திரம்

ருஷ்ய-ஜப்பானியப் போரானது ருஷ்ய எதேச்சதிகாரத்தின் முழுவதும் அழுகிய தன்மையையும், பலவீனத்தையும் அம்பலப்

படுத்தியது. 1905 அக்டோபரில் நடந்த வெற்றிகரமான பொது வேலை நிறுத்தம் இந்தப் பலவீனத்தை முற்றிலும் தெளிவாக்கியது. (களிமண் காலுடைய பேருருவம்) மேலும், 1905 எதேச்சதிகாரத்தின் பலவீனம், தாராளவாத பூர்ஷ்வாக்களின் வலுக்குறைவு, ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் வலிமை ஆகியவற்றை அம்பலப்படுத்திய தோடல்லாமல், ருஷ்ய எதேச்சதிகாரம் ஐரோப்பாவின் காவற் காரனாக இருந்தது. அப்படி ஐரோப்பாவின் காவற்காரனாக இருக்கும் அளவுக்கு வலிமையுடையதாக இருந்தது என்று அப்போது நிலவிய நம்பிக்கையையும் தவறென்று காட்டியது. ருஷ்ய எதேச்சதிகாரம் ஐரோப்பிய மூலதன உதவி இல்லாமல் தனது சொந்த உழைக்கும் வர்க்கத்தைக் கூடச் சமாளிக்க முடியாது என்பதை உண்மை நிகழ்ச்சிகள் காட்டின. சித்தப்பா ஜாரின்மேல் தொடர்ந்து நம்பிக்கை வைத்துக்கொண்டு ருஷ்ய உழைக்கும் வர்க்கம் உறக்கத்திலிருந்த வரைக்கும், ருஷ்ய விவசாயி வர்க்கம் அமைதியாக இருந்தவரையில் ருஷ்ய எதேச் சதிகாரம் ஐரோப்பாவின் காவற்காரனாக இருக்க முடிந்தது. உண்மைதான், ஆனால் 1905 இல் எல்லாவற்றுக்கும் மேலாக 1905 ஜனவரி 9-இல் நடந்த துப்பாக்கிச் சூடு ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தை எழுப்பி விட்டது. அதே ஆண்டில் நடந்த விவசாயிகள் இயக்கம் ஜாரின் மீது முஜிக்குகள் (Muzhiks) கொண்டிருந்த நம்பிக்கையைக் குழி தோண்டி புதைத்தது. ஐரோப்பிய எதிர்ப்புரட்சியின் மையம் ருஷ்யப் நிலப்புரபுக்களிடமிருந்து ஆங்கிலோ-பிரெஞ்சு வங்கி உடமையாளர்கள் ஏகாதிபத்தியர் களுக்கும் மாறியது. ஐரோப்பாவின் காவற்காரனாகிய ருஷ்ய எதேச்சதிகாரத்துக்கு எதிரான அப்போர் முற்போக்கானது என்ற சாக்குச் சொல்லித் (1914ல்) தாம் பாட்டாளி வர்க்கத்துக்கிழைத்த துரோகத்தை நியாயப் படுத்த முயன்ற ஜெர்மன் சமூக ஜனநாயகர் கள் (ஜனநாயக வாதிகள்) உண்மையிலேயே கடந்த காலத்தின் நிழலோடு விளையாடிக் கொண்டிருந்தனர், மேலும் அவர்கள் நாணயமின்றி அந்த ஆட்டம் ஆடினார்கள்; ஏனெனில் ஐரோப்பா வின் காவற்கார வேலைப் பார்ப்பதற்குத் தேவையான போதிய அளவு படைகளையும் நிதியையும் தங்களிடம் வைத்திருந்த மெய்யான காவற்காரர்கள் பெத்ரோகிராடில் இல்லை; அவர்கள் பெர்லினிலும், பாரிசிலும், லண்டனிலும் இருந்தனர்.

ஐரோப்பா ருஷ்யாவுக்குள் சோசலிசத்தை அறிமுகப் படுத் திய தோடல்லாமல் ஜாருக்குக் கடன் வழங்குதல் போன்ற வடிவங்களில் எதிர்ப் புரட்சியையும் அறிமுகப் படித்திக் கொண்டிருந்தது. அதேபோழ்து அரசியல் அகதிகளுடன் கூடவே

ஐரோப்பாவுக்குள் புரட்சியையும் ரஷ்யா புகுத்திக் கொண்டிருந்தது. (இவை எல்லாவற்றிலும் முக்கியமாக பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் ஓர் ஆயுதமாகப் பொது வேலை நிறுத்தத்தை 1905இல் ருஷ்யர்கள் ஐரோப்பாவுக்குள் புகுத்தினர்.)

## 2. ''பழத்தின் கனிவு''

புரட்சிகர எழுச்சிக்கான தருணம் எப்போது வாய்க்கிறது என்று தீர்மானிப்பது எவ்வாறு? பழம் கனிந்துள்ளது என்றும், தயாரிப்புக் காலம் முடிந்து விட்டது என்றும், நடவடிக்கை தொடங்கலாம் என்றும் எப்போது சொல்லமுடியும்?

அ.) மக்கள்திரளின்புரட்சிகர மனநிலை ததும்பிவழிகிறபோதும், நமது செயல் முழக்கங்களும் ஆணைகளும் மக்கள் திரள் இயக்கங்களின் பின்னே தங்கிவிட்டபோதும் (லெனினின் ''டூமாவுக்குப் போவதற்காக'' என்பதைப் பார்க்க: 1905 அக்டோபர் காலப் பகுதிக்கு முன்பாக) மக்கள் குரலை கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் போதும். அதுவும்கூட எப்போதும் முடிவதில்லை; எடுத்துக்காட்டாக 1917 இல் நடந்த ஜூலை ஆர்ப்பாட்டத்தின் போது புத்திலோவ் தொழிலாளர்களும், எந்திரத் துப்பாக்கியாளர்களும் (இடது சாரி கம்யூனிசம் என்ற லெனின் நூலைப் பார்க்கவும்).

ஆ. எதிரிமுகாமில் நிச்சயமின்மையும் குழப்பமும் அழிவும் சிதைவும் உச்சநிலையை எட்டும் போதும்; எதிரி முகாமை விட்டு ஓடுபவர்கள் மற்றும் (ஓடுகாலிகளும்) கொள்கை மாறிகளின் எண்ணிக்கை துள்ளலும் பாய்ச்சலுமாக அதிகரிக்கும் போதும், நடுநிலை சக்திகள் எனப்படுகிற நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குட்டி முதலாளிகளின் பரந்துபட்ட பெருந்திரள் எதிரியிடமிருந்து (எதேச் சதிகாரம் அல்லது முதலாளிகளிடமிருந்து) உறுதியாக விலகிப் பாட்டாளி வர்க்கத்தோடு கூட்டணி சேர விரும்பும்போதும்; இவற்றின் விளைவாக, எதிரியின் நிர்வாக உறுப்புகளும் அவற்றுடன் கூடவே அடக்குமுறை உறுப்புகளும் செயல்படாமல் நின்று முடங்கிப் பயனற்றுப் போவதுபோன்ற செயல்களால் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றும் தனது உரிமையைச் செயல்படுத்துவதற்கான பாதையைத் திறந்துவிடும்போதும்

இ. இவ்விரண்டு காரணிகளும் (அ-வும், ஆ-வும்) ஒரே நேரத்தில் ஒன்றிணையும் போதும் உண்மையில் இதுதான் நடக்கிறது.

தாக்குதலைத் தொடுப்பதற்கு, அதிகாரத்திலுள்ள வர்க்கம் அழிந்து போதலின் புறவய நிகழ்முறையைக் கவனிப்பதே போது

மானது என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் அது தவறு. இத்துடன் கூடவே வெற்றிகரமான ஒரு தாக்குதலுக்கு இன்றியமையாத அகவய நிலைமைகளையும் தயாரித்தாக வேண்டும். ஆளும் வர்க்க அதிகாரம் அழிந்து போதலின் புறவய நிகழ்முறைகளோடு பொருந்துமாறு தாக்குதல்களுக்கான அகவய நிலைமைகளைத் திறமையுடனும், தக்க சமயத்திலும் செய்ய வேண்டியது போர்த் தந்திரம் மற்றும் செயல் தந்திரத்தின் துல்லியமான கடமையாகும்.

### 3. தருணத்தைத் தேர்ந்தெடுத்தல்

தாக்குதலுக்கான தருணத்தைப் பொறுத்தவரையில் தருணத்தைச் சரியாகத் தேர்ந்தெடுப்பது கட்சிதானே ஒழிய நிகழ்ச்சிகளால் அது திணிக்கப்படுவதில்லை. இப்படிச் சரியான தருணத்தைத் தேர்ந்தெடுப்பதற்குக் கீழ்க்கண்ட இரண்டு முன் நிபந்தனைகள் தேவை. அ) ''பழத்தின் கனிவு'' மற்றும் ஆ) ஏதோ ஒரு வெளிப்படையான நிகழ்ச்சி. அரசாங்கத்தின் நடவடிக்கை அல்லது உள்ளூர்த் தன்மையுடைய ஏதோ தன்னெழுச்சியான வெடிப்பு முதல் அடியைத் தொடுப்பதற்கு, தாக்குதலைத் தொடங்குவதற்குத் தகுந்த காரணமாகப் பரந்துபட்ட மக்கள் திரளுக்குத் தெளிவாக விளங்கக் கூடியதாக இது இருக்கவேண்டும். இவ்விரண்டு நிலைமைகளையும் காணத் தவறுவது எதிரியின்மீது அதிகரித்த அளவிலும் வலிமையுடனும் பொதுத் தாக்குதல்களுக்கான தொடக்கப்புள்ளியாக அந்த அடி இருக்காது என்பதுடன், இடியாய்த் தாக்கி நசுக்கும் அடியாக அது வளரத் தவறிவிடும். (தக்க தருணத்தைத் தெரிவு செய்வதன் பொருளும் நோக்கமும் துல்லியமாக அதுதான்) அத்துடன் இல்லாமல், அதற்குமாறாக, அது நகைக்கத் தக்கதோர் எதிர்ப் புரட்சியாக இழிந்துவிடும்; அரசாங்கமும் பொதுவாக எதிரியும் தங்கள் மதிப்பை உயர்த்திக்கொள்ள அதை வரவேற்றுப் பயன்படுத்துவார்கள்; கட்சியை உடைப்பதற்கு அல்லது குறைந்த பட்சம் அதன் மனவுறுதியை அழிப்பதற்கு இது ஒரு சாக்காகவும் தொடக்கப்புள்ளியாகவும் ஆகிவிடலாம். எடுத்துக்காட்டாக, ஜனநாயக மாநாட்டை நிறுத்துவதற்கு மையக்குழுவின் ஒரு பிரிவினர் முன்மொழிந்தமையும், ஆனால், (மேலே சொன்ன) இரண்டாவது தேவைக்கு இணங்கத் தவறியதால் (இணங்குவதற்கு முழுமையாகவே தவறிவிட்டது) மையக்குழு அக் கோரிக்கையை மறுத்துவிட்டதையும், தருணத்தைத் தெரிவு செய்யும் நிலைபாட்டிலிருந்து பார்த்தால் பொறுத்தமற்றதாகும்.

பொதுவாக, முதலாவது அடி (தருணத்தைத் தெரிவு செய்தல்) ஓர் எதிர்ப்புரட்சியாக மாறாதிருப்பதில் கவனம் செலுத்த

வேண்டும். இதைத் தடுப்பதற்கு, மேலே சுட்டிக்காட்டிய இரண்டு நிலைமைகளும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியது உயிர் நிலையானதாகும்.

### 4. வலிமையைச் சோதித்தல்

சில நேரங்களில் கட்சி தீர்மானகரமான நடவடிக்கைகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, போதிய சேமிப்புகளைச் சேகரித்ததாகக் கருதும்; எதிரியின் வலிமையைச் சோதிக்கவும், தனது சொந்த சக்திகள் நடவடிக்கைக்குத் தயாராக உள்ளனவா என்று உறுதி செய்து கொள்ளவும் ஒரு சோதனை நடவடிக்கையை மேற்கொள்ளுதல் சூழ்வினைத் திறமுடையதாக இருக்கும் என்று சிந்திக்கலாம். அத்தகைய வலிமைச் சோதனை கட்சியால் தன் விருப்பப்படி ஆராய்ந்து தீர்மானிக்கப்படலாம். (1917, ஜூன் 10இல் நடத்த இருந்து, பின்னர் ஜூன் 18 க்குத் தள்ளி வைக்கப்பட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்); அல்லது சூழ்நிலைகளாலோ பொதுவாக, ஏதோ எதிர்பாராத நிகழ்ச்சியாலோ (ஆகஸ்ட் 17இல் நடந்த கார்னிலோவ் (karnilou) கலகம் மற்றும் பொதுவுடைமைக் கட்சியின் எதிர்நடவடிக்கை இது சிறந்ததொரு வலிமைச் சோதனையாக விளங்கியது) வலிமைச் சோதனையை ஒரு மே நாள் ஆர்ப்பாட்டம் போன்ற ஆர்ப்பாட்டமாக மட்டும் கருதிவிடக் கூடாது; எனவே, அதைச் **சக்திகள் பற்றிய கணிப்பீடு** ஆக மட்டுமே விவரித்து விடலாகாது; அதன் முக்கியத்துவத்தையும், நேரக் கூடிய விளைவுகளையும் பொறுத்த வரையில், அது ஒரு எழுச்சியை (uprising) விடவும் குறைவானது என்ற போதிலும் ஒரு சாதாரண ஆர்ப்பாட்டத்தை விடவும் அதிகமானது என்பதில் ஐயமில்லை. அது ஓர் ஆர்ப்பாட்டத்திற்கும் ஒரு எழுச்சி அல்லது பொது வேலை நிறுத்தத்திற்கும் இடைப்பட்டதாகும். சாதகமான நிலைமைகளின் கீழ் அது முதல் அடியாக (தருணத்தைத் தெரிவு செய்தல்) எழுச்சியாக (அக்டோபர் இறுதியில் நம் கட்சியின் நடவடிக்கை) மேம்படக் கூடும்; சாதகமற்ற நிலைமைகளின் கீழ்க் கட்சி உடைந்து சிதறும் உடனடி அபாயத்தில் அது கட்சியைத் தள்ளிவிடும் (1917 ஜூலை 3-4 ஆர்ப்பாட்டம்). எனவே, ''பழம் கனிந்த நிலை''யில் இருக்கும்போது; எதிரியின் முகம் போதிய அளவு மன உறுதி கலைந்திருக்கும் போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் சேமிப்புகளைச் சேகரித்த போது; சுருக்கமாக; கட்சி ஒரு மேற் தாக்குதல் தொடுக்கத் தயாராக இருக்கும் போது; வலிமையைச் சோதிப்பதானது முதல் அடி கொடுப்பதாகவும், அதன் பிறகு எதிரிக்கு எதிரான பொதுத் தாக்குதலாகவும் ஆகும் அளவுக்குச் சூழ்நிலைகள் ஆக்கிவிடும் வாய்ப்பைக் கண்டு கட்சி அஞ்சாத போது, வலிமையைச் சோதிப்பது

மிக மிகச் சூழ்வினைத் திறம் உடையதாகும். வலிமைச் சோதனை நடத்தும் போது கட்சி எல்லாவிதமான எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்.

## 5. சக்திகளைக் கணித்தல்

சக்திகளைக் கணித்தல் என்பது ஓர் எளிய ஆர்ப்பாட்டமாகும். இதைப் பெரும்பாலும் எந்த நிலைமையிலும் மேற்கொள்ள முடியும். (எடுத்துக்காட்டாக, ஒரு மே நாள் ஆர்ப்பாட்டத்தைக் கூறலாம். இது ஒரு வேலை நிறுத்தத்துடனோ, வேலை நிறுத்தம் இன்றியோ நடக்கலாம்) ஒரு வெளிப்படையான பேரெழுச்சியின் போது சக்திகளைக் கணிக்காமல், கிட்டத்தட்ட "அமைதியான" காலத்தில் கணித்தால் அது அரசாங்கத்தின் போலீஸ் அல்லது துருப்புகளுடனான சிறு சிறு போர்களில் முடியும். இதில் கட்சிக்கோ அல்லது எதிரிக்கோ தாங்க முடியாத இழப்புகள் ஏற்படாது. எனினும் எழுச்சி அண்மையில் ஏற்பட இருக்கிற போதுள்ள கடுமையான வெள்ளையாட்சி நடக்கின்ற சூழலில் சக்திகளைக் கணித்தால், அது கட்சியை எதிரியுடனான பக்குவப் படாத தீர்மானகரமான மோதலில் ஈடுபடுத்தி விடலாம்; மேலும் கட்சி அப்போதும் பலவீனமாகவும் அத்தகைய மோதலுக்குத் தயாரின்றியும் இருந்தால், எதிரி அத்தகைய "சக்திகளைக் கணிக்கும்" செயலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பாட்டாளி வர்க்கச் சக்திகளை நசுக்கிவிட முடியும். (இதனால்தான் 1917 செப்டம்பரில் கட்சி திரும்பத் திரும்ப உங்களைச் "சினமூட்ட இடங் கொடுக்காதீர்கள்" என்று வேண்டுகோள்கள் விடுத்தது) எனவே, ஏற்கனவே புரட்சிகர நிலைமை கனிந்திருக்கின்ற சூழலில் சக்திகளைக் கணிக்கும் முறையை மேற்கொள்ளும்போது, மிகவும் கவனமுடன் இருப்பது இன்றியமையாததாகும்; கட்சி வலுக்குன்றி இருந்தால் எதிரி அத்தகைய கணிப்பை ஓர் ஆயுதமாக மாற்றிவிட முடியும்; அந்த ஆயுதத்தைக் கொண்டே பாட்டாளி வர்க்கத்தைத் தோற்கடிக்கவோ அல்லது குறைந்த பட்சம் கடுமையாக வலுக்குன்றச் செய்யவோ முடியும். அதற்கு மாறாக, கட்சியானது நடவடிக்கைக்குத் தயாராக இருந்து எதிரியின் அணிகள் வெளிப்படையாகவே மனவுறுதி குலைந்து இருந்தால், அப்புறம் "சக்திகளைக் கணிக்கத்" தொடங்கிய பிறகு "வலிமையைச் சோதனை" செய்வதற்கும் (இதற்கான நிலைமைகள் பழம் கனிந்தமை போன்றவை உள்ளன என்று அனுமானத்தில்) அடுத்துப் பொதுவான தாக்குதலைத் (assault) தொடுப்பதற்கும் வாய்ப்பை நழுவ விடக்கூடாது.

**6. தாக்குதல் செயல் தந்திரம்**

பாட்டாளி வர்க்கம் ஏற்கனவே அதிகாரத்தை எடுத்துக் கொண்ட நிலையில் விடுதலைப் போர்களின் செயல் தந்திரம்.

**7. முறையாகப் பின்வாங்கும் செயல் தந்திரம்**

ஐயத்திற்கு இடமின்றி மேல்நிலையிலுள்ள எதிரிப் படைகளை எதிர் கொள்ளும்போது படையில் பெரும் பகுதியை இல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் அதன் ஊழியர்களையாவது காப்பாற்றும் பொருட்டு எப்படித்திறமையுடன் உட்பகுதிகளுக்குப் பின்வாங்குவது (இடது சாரி கம்யூனிசம்...என்ற லெனினின் நூலைப் பார்க்கவும். விட்டே துபா சோவ் டூமா (Witte-DubaSou Duma) வைப் புறக்கணித்த காலத்தில் நாம் எவ்வாறு இறுதியாகப் பின் வாங்கினோம் என்பதை எடுத்துக் கட்டாகக் கூறலாம். பின் வாங்குதல் செயல் தந்திரத்துக்கும் ஓட்டம் பிடிக்கும் ''செயல்தந்திரத்துக்கும்'' இடையிலான வேறுபாட்டை அறிய வேண்டும் (மென்ஷ்விக்குகளை ஒப்பிடுக.)

**8 தற்காப்புச் செயல் தந்திரம்**

எதிர் காலச் சண்டைகளை எதிர் பார்த்து ஊழியர்களைப் பாதுகாக்கவும் சக்திகளைச் சேகரிக்கவும் இன்றியமையாத ஒன்றாகத் தற்காப்புச் செயல் தந்திரம் உள்ளது. தீர்மானகரமான சண்டைகள் தொடங்கும் போது எந்தக் களம் முதலாவது போர்க்களமாகும் அல்லது எந்த வடிவிலான இயக்கம் அல்லது எந்த வடிவிலான அமைப்பு தொடக்கப் புள்ளியாகவும், பாட்டாளி வர்க்கத்திற்கு எட்டக் கூடிய ஆயுதமாகவும் ஆகும் என்பதை எவராலும் முன் கூட்டியே சொல்ல முடியாது. எனவே விதி விலக்கின்றிப் போராட்டத்தின் எல்லாக் களங்களிலும் நிலை கொள்ளுதல் மிகவும் அற்பமாகத் தெரிவது உட்பட எந்த ஒன்றையும் உதறித் தள்ளாமல் எல்லா வகையான ஆயுதங்களையும், அதாவது எல்லா வகையான அமைப்பு (நிறுவனங்)களையும் உரிய முறையில் வளர்த்தல் ஆகிய கடமையை அவை கட்சியின்மேல் சுமத்துகின்றன. வேறு சொற்களில் கூறினால்; தற்காப்புச் சக்திகளைச் சேகரிக்கும் காலப் பகுதியில் தீர்மானகரமான சண்டைகளை, முன் கூட்டியே எதிர்பார்த்துக் கட்சி முற்றிலும் தயார் நிலையில் இருக்க வேண்டும். சண்டைகளை முன் கூட்டியே எதிர்பார்த்து... இதன் பொருள் கட்சி கையைக் கட்டிக் காத்துக் கொண்டு ஒரு சேம்பேறிப் பார்வையாளராக இருக்க வேண்டும் என்பதில்லை; ஒரு புரட்சிகரக் கட்சி என்ற நிலையி

லிருந்து (அது எதிர்க் கட்சியாக இருந்தால்) சீரழிந்து காத்திருந்து பார்க்கும் கட்சியாக மாறக்கூடாது. இல்லை, அது இன்னமும் தேவையான அளவு சக்தியை சேகரிக்கா விட்டாலும் அல்லது நிலைமை அதற்குச் சாதகமாக இல்லாவிட்டாலும் அத்தகைய காலப்பகுதியில் அது சண்டைகளைத் தவிர்க்க வேண்டும். ஆனால் சாதகமான நிலைமைகளில் எதிரிக்குத் தீங்காக முடியும் என்றால் எதிரியின்மீது ஒரு சண்டையைத் திணிப்பதற்கும், எதிரியை மாறாத ஒரு நெருக்கடி நிலையில் வைக்கவும், எதிரியின் சக்திகளைப் படிப்படியாகச் சிதறடித்து மனவுறுதி குலையச் செய்யவும் பாட்டாளி வர்க்கத்தின் அன்றாட நலன்களைப் பாதிக்கும் சண்டைகளில் படிப்படியாகப் பாட்டாளிவர்க்கச் சக்திகளைப் பயிற்றுவிக்கவும், இந்த வழியில் அதன் சொந்த சக்திகளை அதிகரிக்கவும் அது எந்த ஒரு வாய்ப்பையும் தவறவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் மட்டுமே, தற்காப்பு மெய்யான செயலூக்கமுள்ள (active) தற்காப்பாகவும், நடவடிக்கைக்கான உண்மையான தன்மைகளைப் பாதுகாக்கின்ற கட்சியாகவும், ஆழ்ந்து நினைத்து எதிர்பார்த்துக் காத்திருக்கிற கட்சியாக அல்லாமலும் இருக்கமுடியும். அப்போது மட்டுமே கட்சி தீர்மானகரமான நடவடிக்கைக்கான தருணத்தைத் தவறவிடாத கட்சியாகவும், கண்டும் காணாதிருக்கிற போக்கின்றியும், எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்கு உள்ளாகாத கட்சியாகவும் இருக்க முடியும். காவுத்ஸ்கியும் அவரைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய ''அறிவார்ந்த'' ஆழ்ந்து நினைத்துக் காத்திருக்கின்ற போர்த் தந்திரம் மற்றும் செயலற்ற அமைதியான ''மிக அறிவார்ந்த'' தன்மை ஆகியவற்றால் மேற்கில் பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கான தருணத்தைக் காணத் தவறியமை ஒரு நேரடி எச்சரிக்கையாகும். அல்லது மீண்டும் கூறினால், முடிவற்றுக் காத்திருத்தல் மற்றும் சமாதானம் ஆகிய பிரச்சினைகள் மீதான தங்களுடைய போர்த் தந்திரம் காரணமாக மென்ஷ்விக்குகளும் சோசலிஷ்ட் புரட்சியாளர்களும் அதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பை நழுவவிட்டமையும் ஓர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மறுபுறம், செயலூக்கமுள்ள தற்காப்புச் செயல்தந்திரம், நடவடிக்கைச் செயல்தந்திரம், தவறாகப் பயன்பட்டுவிடக் கூடாது. ஏனெனில் அது பொதுவுடைமைக் கட்சியின் புரட்சிகர நடவடிக்கைச் செயல்தந்திரத்தைப் ''புரட்சிகர'' உடற்பயிற்சி விளையாட்டுச் செயல்தந்திரமாக மாற்றிவிடும். அதாவது, பாட்டாளிவர்க்க சக்திகளைச் சேகரிப்பதற்கும் அவை நடவடிக்கைக்கு மேலதிகத் தயார்நிலையில் இருப்பதற்கும்

இவ்வாறாக, புரட்சியை முடுக்கி விடுவதற்கும், வழிகாட்டும் செயல்தந்திரமாக ஆக்காமல், பாட்டாளிவர்க்க சக்திகளை வீணடிக்கவும், அவை நடவடிக்கைக்குத் தயார்நிலையில் இல்லாமல் மோசமாக்கவும், எனவே புரட்சி நோக்கத்தைத் தடுக்கவும் ஆன செயல் தந்திரமாக மாற்றிவிடும்.

**9. பொதுவுடைமைப் போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரத்தின் பொதுக்கோட்பாடுகள் (Principles).** அத்தகையக் கோட்பாடுகள் மூன்று உள்ளன.

அ.) மார்க்சியத் தத்துவத்தின்படி வந்தடைந்து முதலாளிய நாடுகளிலான புரட்சிகர நடைமுறையால் உறுதிப்படுத்தப்பட்ட முடிவின் அடிப்படையில் ஏற்கப்படுகிறது. பாட்டாளி வர்க்கம் மட்டுமே ஒரே புரட்சிகர வர்க்கம் ஆகும். முதலாளியத்திடமிருந்து மனித குலத்தை முழுவதும் விடுதலை செய்வதில் அது ஆர்வம் கொண்டுள்ளது. எனவே, முதலாளித்துவத்தைத் தூக்கி எறியும் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மற்றும் சுரண்டப்பட்ட மக்கள் திரள்களின் தலைவராக இருப்பதே அதன் வாழ்க்கைப் பணி ஆகிறது. இதன் விளைவாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதை நோக்கி எல்லா வேலைகளையும் திசை திருப்ப வேண்டும்.

ஆ.) மார்க்சியத் தத்துவத்தின்படி வந்தடைந்து, புரட்சிகர நடைமுறையால் உறுதிப்படுத்தப்பட்ட முடிவின் அடிப்படையில் ஏற்கப்பட்டது அது. அதாவது, எந்த ஒரு நாட்டின் பொதுவுடைமைக் கட்சியின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும், அவை ''அவர்களது சொந்த'' நாட்டின் ''அவர்களது சொந்தத்'' தாய் நாட்டின், ''அவர்களது சொந்தப்'' பாட்டாளி வர்க்கத்தின் நலன்களோடு மட்டும் குறுகிப் போய்விடாமல் இருக்க வேண்டும்; ஆனால் அதற்கு மாறாக, அவர்களது சொந்த நாட்டின் நிலைமைகளையும், சூழலையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும் போதே, அவை சர்வ தேசிய பாட்டாளி வர்க்க நலன்களையும், மற்ற நாடுகளின் புரட்சியின் நலன்களையும், ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். அதாவது, சாரத்தில் உயிரோட்டமாக அவர்கள் சர்வ தேசிய கண்ணோட்டமுடையவர்களாக இருக்க வேண்டும்; ''எல்லா நாடுகளின் புரட்சிக்கான வளர்ச்சி, ஆதரவு, விழிப்புணர்வுக்காக ஒரு (அவர்களது சொந்த) நாட்டில் தங்களால் இயன்றதை எல்லாம் அவர்கள் செய்ய வேண்டும்.'' அப்போதுதான் அந்த ஒரு நாட்டுப் பொதுவுடைமைக் கட்சியின் போர்த் தந்திரமும் செயல் தந்திரமும்

சரியானதாக இருக்க முடியும் (''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்'') என்ற லெனின் நூலைப் பார்க்கவும்.

இ.) போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் மாற்றும் போது புதிய போர்த் தந்திரத் திட்டங்களையும், செயல்தந்திர வழிகளையும் வகுக்கும்போது (காவுத்ஸ்கி, அக்ஸல்ராடு, பொக்க னோவ், புக்காரின்) எல்லா வரட்டுச் சூத்திரங்களையும் (இடது மற்றும் வலது) மறுதலித்தல்; ஒன்றையே திரும்பச் சொல்லி அதிலேயே ஆழ்ந்துவிடும் முறையை மறுதலித்தல், நூல் வாசகங் களை மேற்கோள் காட்டுதல், வரலாற்று இணை நிகழ்வு களையும், செயற்கைத் திட்டங்களையும், உயிரற்ற சூத்திரங்களை யும் (அக்ஸல்ராடு, பிளக்கானவ்) வரைதல் ஆகியவற்றை மறுத லித்தல்; மார்க்சிய நோக்கு நிலையின் ''மேல்படுத்துக் கிடப்பதல் லாமல்'' அதன் நோக்கு நிலையில் நிற்றலே இன்றியமையாதது என்பதைப் புரிந்து கொள்ளல்; உலகை ''வெறுமனே விளக்கிக் கொண்டிராமல்'' அதை ''மாற்றுவதே'' இன்றியமையாதது என்பதைப் புரிந்து கொள்ளல், பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமைத் தாங்கி நடத்துவதும், உணர்வு மயங்கிய நிகழ்முறையின் உணர்வுபூர்வமான விளக்கமாகவும் இருப்பதே இன்றியமையாதது என்பதைப் புரிந்துகொள்ளல்; ''பாட்டாளி வர்க்கத்தின் முதுகுப் புறத்தில் சிந்தித்துக் கொண்டிராமல்'' நிகழ்ச்சிகளுக்கு வால் பிடித்துச் செல்லாமல் இருப்பதே இன்றியமையாதது என்பதைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றைத் தொடக்கப் புள்ளியாகச் கொண்டு இது ஏற்கப்படுகிறது. (லெனின் ''தன்னெழுச்சியும் உணர்வு பூர்வமும் (Consciousness) என்ற கட்டுரையையும், பொதுவுடைமையாளர்கள்தான் பாட்டாளிவர்க்கத்தின் மிகவும் தொலைநோக்கு பார்வையுடைய முன்னேறிய பிரிவு ஆவர் என்ற மார்க்சின் நன்கறியப்பட்ட கம்யூனிஸ்ட் அறிக்கையின் பகுதியையும் பார்க்கவும்).

இந்த ஒவ்வொரு கோட்பாட்டையும் ருஷ்யாவிலும், மேலை நாடுகளிலும் உள்ள புரட்சி இயக்கங்களிலிருந்து பெறப்படும் உண்மை நிகழ்ச்சிகளோடு விளக்க வேண்டும். குறிப்பாக இரண்டாவது மற்றும் மூன்றாவது கோட்பாட்டை விளக்குக.

**10. கடமைகள்**

அ.) பாட்டாளிவர்க்க முன்னணிப் படையினரைப் பொதுவுடைமை யின் பக்கம் வென்றெடுத்தல் (அதாவது, ஊழியர்களை வளர்த் தெடுத்தல், பொதுவுடைமைக் கட்சியை உருவாக்குதல், வேலைத்

திட்டத்தை உருவாக்குதல், செயல் தந்திரக் கோட்பாடுகள்) முதன்மை வடிவமாக பிரச்சாரம் இருக்கும்.

ஆ.) தொழிலாளர்கள், உழைப்பாளர்கள் ஆகியோரின் பெருந் திரளைமுன்னணிப் படையின்பக்கம் வென்றெடுத்தல்(மக்கள் திரளைப் போரிடும் நிலைக்குக் கொண்டு வருதல்). நடவடிக்கையின் முதன்மை வடிவம்—தீர்மானகரமான போர்க்களங்களுக்குப் பீடிகையாக நடைமுறைச் செயல்.

**11. விதிகள்**

அ) விதிவிலக்கின்றி பாட்டாளி வர்க்கத்தின் எல்லா அமைப்பு வடிவங்களிலும் போராட்ட இயக்கத்தின் எல்லா வடிவங்களிலும் தேர்ச்சி பெறுக. (இயக்க வடிவங்கள், பாராளுமன்ற மற்றும் பாராளுமன்றத்துக்கு அப்பாற்பட்ட சட்டரீதியான மற்றும் சட்டவிரோத வடிவங்கள்).

ஆ) இயக்கம் சில வடிவங்களிலிருந்து வேறு வடிவங்களுக்கு விரைந்து மாறும்போது அதற்கேற்ப ஒருவர் தன்னை மாற்றியமைத்துக் கொள்ளவும் சில வடிவங்களை வேறு வடிவங்களுக்குப் பின்னால் சேர்த்து நிரப்பவும் கற்றுக்கொள்ளவும்: சட்டரீதியான வடிவங்களைச் சட்டவிரோதமானவற்றோடும், பாராளுமன்ற வடிவங்களை பாராளுமன்றத்துக்குப் புறம்பான வடிவங்களோடும் இணைப்பதற்கும் கற்றுக்கொள்ளவும். (எடுத்துக்காட்டு, ஜூலை 1917-ல் சட்டரீதியான வடிவங்களிலிருந்து சட்டவிரோதமான வடிவங்களுக்கு போல்ஷ்விக்குகள் விரைந்து மாற்றிக்கொண்டமை; லேனா நிகழ்ச்சிகளின்போது டூமாவில் செயல்பட்டுக்கொண்டே பாராளுமன்றத்துக்கும் புறம்பான நடவடிக்கைகளை அத்துடன் இணைத்தமை)

**2. ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னும் பின்னும், பொதுவுடைமைக் கட்சியின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும்.**

நான்கு தனிச்சிறப்பியல்புகளாவன:

அ) அக்டோபர் புரட்சிக்கும் பின்னால் பொதுவாக ஐரோப்பாவிலும், குறிப்பாக ருஷ்யாவிலும் எழுந்த நிலைமையின் மிக மிக முக்கியமான தனிச்சிறப்பியல்பு, ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தால் ருஷ்யப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட, சர்வதேசிய சமூக ρனையில் உண்டான பிளவு (ருஷ்ய முதலாளிகள் மீதான வெற்றியின் விளைவால் உண்டானது. ஏகாதிபத்தியத்துடனான முறிவு (rupture) ' இரகசிய உடன்படிக்கைகளை வெளியிட்டமை

தனித்தனி உடன்படிக்கைக்குப் பாட்டாளிவர்க்கம் மறுத்துவிட்டது. ஏனெனில் அத்தகைய கொள்கை அப்போது அதிகாரத்தில் இருந்த முதலாளி வர்க்கத்தை வலுப்படுத்தியிருக்கும். எனினும் இப்போது பாட்டாளி வர்க்கம் தனித்தனியான உடன்படிக்கைகளுக்குச் சாதகமாக உள்ளது; ஏனெனில் அவை இப்போது அதிகாரத்தை வலுப்படுத்துகின்றன; முதலாளி வர்க்கத்தினிடையே சிதைவை உண்டாக்குகின்றன. முதலாளி வர்க்கத்தின் தனித் தனி குழுக்களைப் பழக்கப்படுத்துவதற்கும் அவற்றை உட்கிரகித்துக் கொள்ளுவதற்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு அவை உதவுகின்றன. **சீர்திருத்தவாதத்திற்கும் தனித் தனி. உடன்படிக்கைகளுக்கும் இடையிலான வேறுபாடு** (முன்னதுபுரட்சிகர நடவடிக்கை முறை அனைத்தையும் மறுக்கிறது; பின்னது மறுக்கவில்லை; புரட்சியாளர்கள் உடன்படிக்கைகளைப் பயன்படுத்தும்போது அவர்கள் அதைப் புரட்சிகர முறையின் மீது செய்கிறார்கள்; முன்னது குறுகியது; பின்னது விரிந்த செயல் வாய்ப்புடையது). (''சீர்திருத்தவாதமும் உடன்படிக்கைக் கொள்கையும்'' என்பதைப் பார்க்கவும்).

ஈ) பாட்டாளி வர்க்கமும் பொதுவுடைமைக் கட்சியின் திறமைகளும் மாபெரும் அளவில் வளர்ந்தமைக்கு ஏற்ப, **பொதுவுடைமைக் கட்சியின் போர்த் தந்திர நடவடிக்கைகளின் செயல்வாய்ப்புகள் அதிகரித்து விட்டன.** முன்னதாக இயக்கத்தின் வெவ்வேறு வடிவங்கள், பாட்டாளி வர்க்க அமைப்புகளின் வடிவங்கள் ஆகியவற்றுக்கிடையிலும் இயக்கத்தின் வெவ்வேறு கோரிக்கைகளுக்கு (முழக்கங்கள்) இடையிலும் சூழ்ச்சித் திறமையுடன் செயலாற்றுவதற்காகச் போர்த் தந்திரத் திட்டத்தை வரைதல், சிலவற்றை முன் தள்ளுதல், பிறவற்றை மாற்றுதல், வெவ்வேறு வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளின்வடிவில் போதாததாக உள்ள சேமிப்புகளைப் பயன்படுத்துதல் என்ற வரம்புக்குள்தான் பொதுவுடைமைக்கட்சியின் போர்த்தந்திரம் இருந்தது. கட்சி பலவீனமாக இருந்த காரணத்தால் இந்தச் சேமிப்புகளைப் பயன்படுத்தும் செயல் எல்லைகளும் வாய்ப்புகளும் குறுகிய வரம்புக்குள் தடைபட்டிருந்தன. எனினும், அக்டோபருக்குப் பிறகு இப்போது முதலாவதாக இந்தச் சேமிப்புகள் வளர்ந்துள்ளன. (ருஷ்யாவுக்குள்ளேயுள்ள சமூகக் குழுக்களுக்கிடையிலான முரண்பாடுகளும், சுற்றியுள்ள அரசுகளிலுள்ள வர்க்கங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளும் மேற்கில்வளர்ந்துவருகின்ற சோசலிசப்புரட்சியும், கிழக்கிலும் பொதுவாகக்குடியேற்ற நாடுகளிலும் வளர்ந்துவருகின்றபுரட்சிகர இயக்கமும் போன்றவை). இரண்டாவதாக,சூழ்ச்சித்திறமுடன் செயலாற்றுவதற்கான வழிமுறைகளும் வாய்ப்புகளும் அதிகரித்

துள்ளன. (பழைய வழிமுறைகள் புதியனவற்றில் இட்டு நிரப்பப் படுகின்றன. எடுத்துக்காட்டாக அரசதந்திர நடவடிக்கை, மேலை நாட்டு சோசலிச இயக்கம் மற்றும் கீழை நாட்டு புரட்சிகர இயக்கம் ஆகியவற்றோடு மேலும் பயனுள்ள தொடர்புகளை நிறுவுதல் ஆகியவற்றின் வடிவில் இவை இட்டு நிரப்பப்படுகின்றன); மூன்றாவதாக, பாட்டாளிவர்க்கம் ருஷ்யாவில் தனக்கேயுரிய ஆயுதப்படைகளையுடைய ஆதிக்க அரசியல் சக்தியாகிவிட்டது; சர்வதேசிய அளவில் அது உலகப்புரட்சிகர இயக்கத்தின் முன்னணிப் படை ஆகிவிட்டது. இவ்வாறு பாட்டாளிவர்க்கத்தின் வலிமையும் திறமையும் அதிகரித்துவிட்டன; இதனால் சேமிப்புகளைப் பயன் படுத்துவதற்கான புதிய மற்றும் விரிந்த வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

**13.** சிறப்பானது:

அ) இயக்கத்தின் உணர்ச்சி வேகம் போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரத்தைத் தீர்மானிப்பதில் அதன் பாத்திரம் பற்றிய பிரச்சினை.

ஆ) சீர்திருத்தவாதம், உடன்படிக்கைகள் பற்றிய கொள்கை மற்றும் இவற்றுக்கிடையிலான உறவு ஆகியவை பற்றிய பிரச்சினை.

14 ''சீர்திருத்தவாதம்'' (சமரசம்) ''உடன்படிக்கைகள்'' பற்றிய கொள்கை, மற்றும் ''தனித்தனி உடன்படிக்கை''கள் ஆகியவை மூன்று வெவ்வேறு விஷயங்களாகும். (ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியாக எழுதவும்). மென்ஷ்விக்குகள் செய்த ''உடன்படிக்கைகள்'' சீர்திருத்தவாதத்தின் மீதமைந்தவை—அதாவது அவை புரட்சிகர நடவடிக்கையை மறுதலிப்பவை—ஆதலால் அவை ஏற்கத்தக்கதல்ல. ஆனால் போல்ஷ்விக்குகளின் உடன்படிக்கைகள் புரட்சிகர நடவடிக்கைகளுக்கான தேவையை ஒட்டி அமைந்தவை. அந்தக் காரணத்தினாலேயே மென்ஷ்விக்குகள் செய்த உடன்படிக்கைகள் ஓர் ஏற்பாடாக (system) ஓர் உடன் படிக்கைகளின் கொள்கையாக மாற்றப்படுகின்றன. ஆனால் போல்ஷ்விக்குகள் தனித்தனியான, பருண்மையான நடவடிக்கைகளை ஆதரிக்கின்றனர். அவற்றை உடன்படிக்கைகளுக்கான ஒரு சிறப்புக் கொள்கையாக ஆக்குவதில்லை.

**15.** ருஷ்யப் பொதுவுடைமைக் கட்சியின் வளர்ச்சியில் மூன்று காலப்பகுதிகள்:

அ) பாட்டாளிவர்க்க முன்னணிப் படையை (கட்சியை) உருவாக்கிய காலப்பகுதி, கட்சி ஊழியர்களைத் திரட்டிய காலப்பகுதி (இந்தக் காலப்பகுதியில் கட்சி வலுக்குன்றியிருந்தது; அது ஒரு வேலைத் திட்டத்தையும், செயல்தந்திரப் பொதுக் கோட்பாடுகளையும் பெற்றிருந்தது. ஆனால் மக்கள் திரள் நடவடிக்கை கட்சி என்ற வகையில் அது வலுக்குன்றி இருந்தது).

ஆ) பொதுவுடைமைக் கட்சியின் கீழ் புரட்சிகர மக்கள்திரள் போராட்டம் நடந்த காலப்பகுதி, இந்தக் காலப்பகுதியில் ஒரு மக்கள் திரள் கிளர்ச்சிக்கான அமைப்பு என்பதிலிருந்து மக்கள்திரள நடவடிக் கைக்கான ஓர் அமைப்பாகக் கட்சி உருமாற்றம் பெற்றது; தயாரிப்புக் காலப்பகுதியின் இடத்தை புரட்சிகர நடவடிக்கைக் காலப்பகுதி கைப்பற்றியது.

இ) அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகுள்ள பொதுவுடைமைக் கட்சி அரசாங்கக் கட்சியாக மாறியபிறகு உள்ள காலப்பகுதி.

16. ருஷ்யப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அரசியல் வலிமை, பாட்டாளி வர்க்கத் தலைமையின்கீழ் (முதலாளி வர்க்கத் தலைமை யின் கீழல்ல) உழவர்களின் விவசாயப் புரட்சி (Peasant agrarian revolution — நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கியெறிதல்) நடைப் பெற்றது—என்பதில் அடங்கியுள்ளது. இதன்விளைவாக முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியானது பாட்டாளிவர்க்க புரட்சியின் முகப்பாக (Prologue) பணியாற்றியது. உழவர்களின் கூலி உழைப்புப் பிரிவினருக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான தொடர்பும், பாட்டாளி வர்க்கம் உழவர்களுக்குக் கொடுத்த ஆதரவும், அரசியல் ரீதியாகப் பாதுகாக்கப்பட்டது மட்டுமின்றி சோவியத்துக்களில் அமைப்பு ரீதியாக உறுதி செய்யப்பட்டது என்பதிலும், மக்கள் தொகையில் பரந்த பெரும்பான்மைப் பகுதி யினரின் அனுதாபத்தை பாட்டாளி வர்க்கத்திற்காக இது தட்டி எழுப்பியது (நாட்டில் தனிப் பெரும்பான்மையாகப் பாட்டாளி வர்க்கம் இல்லாவிட்டாலும் கேடில்லாமல் போனது இதனால் தான்) என்பதிலும் ருஷ்யப் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் அரசியல் வலிமை அடங்கியிருக்கிறது.

ஐரோப்பாவில் (கண்டத்தில்) பாட்டாளிவர்க்கப் புரட்சியின் பலவீனம், அங்கே பாட்டாளிவர்க்கம் நாட்டுப்புறத்தின் இந்தத் தொடர்பையும், இந்த ஆதரவையும் பெற்றிருக்கவில்லை; அங்கே முதலாளிவர்க்கத்தின தலைமையின்கீழ் உழவர்கள் நிலப்பிரபுத் துவத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். (அப்போது பாட்டாளி வர்க்கம் வலுக்குன்றி இருந்தமையால் பாட்டாளிவர்க்கத் தலைமை இல்லை). இதுவும், சமூக ஜனநாயகவாதிகள் நாட்டுப்புற நலன் களின்பால் கருத்துச் செலுத்தாமையும் சேர்ந்து உழவர்களில் பெரும்பான்மையினர் முதலாளி வர்க்கத்தின்பால் நீண்டகாலத் திற்கு அனுதாபம் உடையவர்களாக ஆவதற்கு உதவியது. *

ஜூலை, 1921

---

* இந்தக் கட்டுரை சுருக்கம் ஸ்டாலின் எழுதிய ''லெனினி யத்தின் அடிப்படை அம்சங்கள்'' என்ற 1924-ல் வெளியிடப் பட்ட நூலுக்கு ஸ்டாலினால் பயன்படுத்தப்பட்டது. இது ஜே. வி. ஸ்டாலின் தொகுப்பு நூல்கள் தொகுதி 6-ல் உள்ளது. 1923-ல் வெளியிடப்பட்ட ''ருஷ்யப் பொது வுடைமையாளர்களின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் பற்றிய பிரச்சினை பற்றி'' என்ற கட்டுரையில் இதன் முதற் பகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

# 3

# விவசாயப் பிரச்சனை பற்றிய கட்சியின் மூன்று அடிப்படை முழக்கங்கள்

**யான்-ஸ்கியிக்கு பதிலுரை**
**ஜே. வி. ஸ்டாலின்**
**(லெனினியத்தின் பிரச்சினைகள்)**

உண்மையிலேயே, சரியான நேரத்தில் தங்களது கடிதம் எனக்குக் கிடைத்தது. சிறிது தாமதமாக நான் பதில் எழுதுகிறேன்; அதற்காக தயவு செய்து என்னை மன்னிக்கவும்.

1. லெனின் கூறுகிறார்: "**ஒவ்வொரு புரட்சியினுடைய தலையாயப் பிரச்சினை அரசு அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினைதான்**" (தொகுப்பு. 21. பக். 142-ஐப் பார்க்கவும்). எந்த வர்க்கத்தின் அல்லது வர்க்கங்களின் கைகளில் அதிகாரம் குவிந்துள்ளது; எந்த வர்க்கம் அல்லது வர்க்கங்கள் தூக்கியெறியப்பட வேண்டும்; எந்த வர்க்கம் அல்லது வர்க்கங்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்— "ஒவ்வொரு புரட்சியினதும் முக்கியமான பிரச்சினை" இத்தகையதாகத்தான் உள்ளது.

புரட்சியின் எந்தவொரு குறிப்பான இட்டத்தின் காலப்பகுதி முழுமைக்கும் செல்லுபடியாகும் தன்மையை கொண்டிருக்கின்ற கட்சியின் அடிப்படையான போர்த்தந்திர (Strategic) முழக்கங்கள் லெனினது இந்த முக்கியமான கோட்பாட்டை முழுமையாக அடிப்படையாகக் கொண்டிருக்காவிட்டால் அவை அடிப்படையான முழக்கங்கள் என்று அழைக்கப்பட முடியாது.

வர்க்க சக்திகளைப் பற்றிய மார்க்சியப் பகுப்பாய்வைக் கொண்டிருந்தால் மட்டுமே, வர்க்கப் போராட்ட முனையில் புரட்சிகர சக்திகளை முன்னிறுத்துவதற்கான சரியான திட்டத்தை வரையறுத்திருந்தால் மட்டுமே, புரட்சியின் வெற்றிக்கான போராட்ட முனைக்கு, புதிய வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்ட முனைக்கு மக்கள் திரளைக் கொண்டு வருவதற்கு உதவினால் மட்டுமே, இந்தப் பணியை நிறைவு செய்வதற்கு அவசியமாக உள்ள ஒரு பெரிய, சக்திவாய்ந்த அரசியல் இராணுவத்தை பரந்துபட்ட மக்கள் திரளிலிருந்து அமைக்க கட்சிக்கு உதவினால் மட்டுமே, அடிப்படையான முழக்கங்கள் சரியான முழக்கங்களாகும்.

புரட்சியின் எந்தவொரு குறிப்பிட்ட கட்டத்தின் போதும் தோல்விகளும் பின்வாங்குதல்களும், தோல்விகளும் செயல்தந்திர தவறுதல்களும் ஏற்படலாம்; ஆனால் அதற்காக அடிப்படையான போர்த்தந்திர முழக்கம் தவறு என்று பொருளாகாது. இவ்வாறு, எடுத்துக்காட்டாக, நமது புரட்சியின் முதல் கட்டத்தில், "முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்காக ஜாருக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக விவசாய வர்க்கம் முழுவதுடனும், நடுநிலையாக்கப்பட்ட முதலாளிகளுடனும் ஒன்று படுக"—என்ற அடிப்படை முழக்கமானது, 1905-ம் ஆண்டு புரட்சி தோல்வியடைந்தது என்றாலும் கூட முழுக்க முழுக்க சரியானதொரு முழக்கமாக இருந்தது.

எனவே, கட்சியின் அடிப்படை முழக்கப்பிரச்சினையை புரட்சியின் வளர்ச்சிகளின் எந்தவொரு குறிப்பிட்ட கட்டத்தின் வெற்றிகள் அல்லது பின்னடைவுகளின் பிரச்சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

அடிப்படை முழக்கத்திலிருந்து எழுகின்ற புரட்சியின் பல முக்கியமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கும்போதோ அல்லது அவை நிறைவேற்றப்படுவது ஒரு நீண்ட காலத்துக்கு தாமதப்படுத்தப் பட்டிருக்கும் போதோ அல்லது அவை நிறைவேற்றப் படுவதற்கு ஒரு புதிய புரட்சி தேவைப்படலாம் என்ற நிலை இருக்கும் போதோ கட்சியின் அடிப்படை முழக்கம் புரட்சியின் போக்கில் பழைய வர்க்கங்களின் அல்லது வர்க்கத்தின் அதிகாரம் தூக்கியெறியப்படுவதற்கு ஏற்கெனவே இட்டுச் சென்றிருப்பதும் நடக்கலாம். ஆனால் இதற்காக அடிப்படை முழக்கம் தவறாக இருந்தது என்று பொருளாகாது. இவ்வாறு, எடுத்துக் காட்டாக, 1917-ம் ஆண்டு பிப்ரவரி புரட்சி ஜாராட்சியையும் நிலப்பிரபுக்களையும் தூக்கியெறிந்தது! ஆனால் நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளை பறிமுதல் செய்தல் போன்றவற்றிற்கு அது இட்டுச் செல்லவில்லை. ஆனால்

அதற்காக, புரட்சியின் முதல் கட்டத்தில் நமது அடிப்படை முழக்கம் தவறு என்று பொருளாகாது.

அல்லது வேறு உதாரணங்கள்: அக்டோபர் புரட்சி முதலாளிய வர்க்கத்தைத் தூக்கியெறிந்து பாட்டாளி வர்க்கத்திடம் அதிகாரத்தை மாற்றிக் கொடுத்தது; ஆனால் அது (அ) பொதுவாக முதலாளித்துவப் புரட்சி நிறைவு செய்யப்படுவதற்கும் (ஆ) குறிப்பாக, கிராமப்புற மாவட்டங்களில் குலாக்குகள் தனிமைப்படுத்தப் படுவதற்கும் உடனடியாக இட்டுச் சென்று விடவில்லை. ஒரு குறிப்பட்ட காலத்துக்கு இவை தாமதமாயின. ஆனால், அதற்காகப் புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் நமது அடிப்படை முழக்கம்— "பாட்டாளி வர்க்கத்தின் அதிகாரத்திற்காக, நடுத்தர விவசாயிகளை நடுநிலையாக்கி, நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் முதலாளித்துவத்திற்கு எதிராக ஏழை விவசாயிகளுடன் ஒன்றிணைக"— தப்பு என்று பொருளாகாது.

எனவே, கட்சியின் அடிப்படை முழக்கத்தின் பிரச்சினையை, அந்த முழக்கத்திலிருந்து எழுகிற எந்தவொரு குறிப்பான கோரிக்கையையும் நிறைவேற்றுகின்ற காலம், வடிவங்கள் ஆகியவற்றின் பிரச்சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

எனவேதான், எந்தவொரு குறிப்பிட்ட கட்டத்திலும் புரட்சிகர இயக்கத்தின் பகுதியான வெற்றிகள் அல்லது தோல்விகளைக் கணக்கில் கொண்டு நமது கட்சியின் போர்த்தந்திர முழக்கங்களை மதிப்பிட முடியாது; மேலும் அந்த முழக்கங்களிலிருந்து எழுகின்ற எந்தவொரு குறிப்பாக கோரிக்கையை அடைகின்ற காலம், வடிவங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டும் அவை மதிப்பிடப்பட முடியாது. புரட்சியின் வெற்றிக்காக, புதிய வர்க்கத்தின் கைகளில் அதிகாரம் குவிக்கப்படுவதற்காக, வர்க்கச் சக்திகள் பற்றியும் போராட்ட முனையில் புரட்சிகர சக்திகளைச் சரியாக முன்னிறுத்துதல் (disposition) பற்றியும் ஒரு மார்க்சியப் பகுப்பாய்வின் கண்ணோட்டத்தின் மூலம் மட்டுமே கட்சியின் போர்த்தந்திர முழக்கங்கள் மதிப்பிடப்படமுடியும்.

இந்த மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வு முறை பற்றிய பிரச்சினையை நீங்கள் பார்க்காமல் விடுவதில் அல்லது அதனைப் புரிந்து கொள்ளாததில் உங்களது தவறு அடங்கியிருக்கிறது.

2. நீங்கள் உங்கள் கடிதத்தில் எழுதுகிறீர்கள்:

> "அக்டோபர் வரை மட்டுமே நாம் விவசாய வர்க்கம் முழுவதுடனும் இணைந்திருந்தோம் எனக் கருதுவது சரியா?

இல்லை; அது சரியில்லை. 'விவசாய வர்க்கம் முழுவது டனும் கூட்டணி' என்ற முழக்கமானது-முதலாளித்துவப் புரட்சியைப் பூர்த்தி செய்வதில் விவசாய வர்க்கம் முழு அக்கறைக் காட்டியது என்ற அளவில் —அக்டோபருக்கு முன்பும், அக்டோபரின் போதும், அக்டோபருக்குப் பிந்திய முதல் கால கட்டத்திலும் செல்லுபடியானதாக இருந்தது.''

ஜார், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் அதிகாரத்தைத் தூக்கி யெறிவதும், பாட்டாளி வர்க்கம், விவசாயி வர்க்கம் ஆகியவற்றின் சர்வாதிகாரத்தை நிறுவுவதும் பணியாக இருந்த புரட்சியின் முதல் கட்டத்தின் போது (1905 முதல் 1917 பிப்ரவரி வரை) கட்சியின் போர்த் தந்திர முழக்கமானது, முதலாளிய வர்க்கத்தின் அதிகாரத் தைத் தூக்கியெறிவதும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிறுவுவதும் பணியாக இருந்த புரட்சியின் இரண்டாவது கட்டத்தின் போதான (பிப்ரவரி 1917-லிருந்து அக்டோபர்1917 வரை) போர்த் தந்திர முழக்கத்திலிருந்து வேறுபடவில்லை என்பதையே மேற் கண்ட மேற்கோள் தெரிவிக்கிறது.

இதன் விளைவாக, நீங்கள் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்க-சோசலிசப் புரட்சிக்கும் இடையி லான அடிப்படையான வேறுபாட்டை மறுக்கிறீர்கள். புரட்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினைதான், எந்த வர்க்கம் தூக்கியெறியப்படுகிறது, எந்த வர்க்கத்துக்கு அதிகாரம் மாற்றித் தரப்படுகிறது என்ற பிரச்சினைதான் ஒரு போர்த் தந்திர முழக்கத்தின் அடிப்படையான கருத்துரு என்ற /மிக எளிமையான ஒரு பொருளை புரிந்து கொள்ள நீங்கள் மறுப்பதால் தான், இந்தத் தவறைச் செய்கிறீர்கள் என்பது தெளிவு. இந்த விஷ யத்தில் நீங்கள் அடிப்படையிலேயே தவறிழைத்துள்ளீர்கள் என்பதை நிருபிக்கத் தேவையில்லை.

அக்டோபரின் போதும் அக்டோபருக்குப் பிந்திய முதல் கால கட்டத்திலும், முதலாளித்துவப் புரட்சியைப் பூர்த்தி செய்வதில் விவசாய வர்க்கம் முழுவதும் ஆர்வம் காட்டிய வரை ''விவசாய வர்க்கம் முழுவதுடனும் ஒன்றிணைக'' என்ற முழக்கத்தை நாம் நடைமுறைப் படுத்தினோம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அக்டோபர் கிளர்ச்சியும் அக்டோபர் புரட்சியும் இத்தோடு தங்க ளைக் கட்டுப்படுத்திக் கொண்டன என்று அல்லது அவற்றின் பிரதானப் பணி முதலாளித்துவப் புரட்சியைப் பூர்த்தி செய்வது தான் என்று யார் உங்களுக்குச் சொன்னார்கள்? நீங்கள் இதை

எங்கிருந்து பெற்றீர்கள்? முதலாளிய வர்க்க அதிகாரத்தைத் தூக்கி யெறிந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது என்பது முதலாளித்துவப் புரட்சியின் கட்டமைப்புக்குள்ளேயே நடைபெறும் என நீங்கள் கருதுகின்றீர்களா? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அடைவது என்பது முதலாளித்துவப் புரட்சியின் கட்டமைப்புக்கு அப்பால் செல்வது எனப் பொருள்படவில்லையா?

குலாக்குகள் (உண்மையிலேயே அவர்களும் விவசாயிகள் தான்) முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்து பாட்டாளி வர்க்கத் திடம் அதிகாரத்தை மாற்றித் தருவதை ஆதரித்தார்கள் என்று எவ்வாறு நீங்கள் உறுதியாக கருத முடியும்?

நிலத்தை தேசிய மயமாக்குதல், நிலத்தில் தனி உடமையை ஒழித்தல், நிலத்தை வாங்குவதற்கும், விற்பதற்கும் தடை விதித்தல் போன்றவற்றின் மீதான சட்டத்தை—அது ஒரு சோசலிச சட்டமாக கருதப்பட முடியாது என்ற போதிலும்—நாம் குலாக்குகளுடன் கூட்டணியாக இல்லாமல், அவர்களை எதிர்த்த ஒரு போராட்டத்தின் மத்தியில் அமுலாக்கினோம் என்பதை எவ்வாறு உங்களால் மறுக்க முடியும்?

குலாக்குகள் (அவர்களும் கூட விவசாயிகள்தான்) மில்கள், தொழிற்சாலைகள், ரயில் பாதைகள், வங்கிகள் போன்றவற்றை பறி முதல் செய்வதற்கான சோவியத் அரசாங்கத்தின் ஆணைகளை அல்லது ஏகாதிபத்தியப் போரை ஒரு உள்நாட்டுப் போராக மாற்றுதல் பற்றிய பாட்டாளி வர்க்க முழக்கத்தை ஆதரித்தார்கள் என்று நீங்கள் எப்படி வலியுறுத்திச் சொல்லமுடியும்?

அக்டோபரில் அடிப்படையான விஷயம் இதைப் போன்ற செயல்கள் அல்ல, முதலாளித்துவத்தை தூக்கியெறிவது அல்ல, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது அல்ல, ஆனால் முதலாளித்துவப் புரட்சியை பூர்த்தி செய்வதே ஆகும் என்று நீங்கள் எப்படி வலியுறுத்திச் சொல்ல முடியும்?

அக்டோபர் புரட்சியின் பிரதான பணிகளில் ஒன்றாக முதலாளித்துவப் புரட்சியை பூர்த்தி செய்வது இருந்தது என்பதை யும், அக்டோபர் புரட்சி இல்லாமல் அது பூர்த்தி செய்ய பட்டிருக்க முடியாது என்பதையும், முதலாளித்துவப் புரட்சி பூர்த்தி செய்யப்படாமல் அக்டோபர் புரட்சியை உறுதி செய்திருக்க முடியாது என்பதையும், அக்டோபர் புரட்சி முதலாளித்துவப் புரட்சியை பூர்த்தி செய்தது என்ற அளவில் அது

எல்லா விவசாயிகளின் ஆதரவையும் பெறுவதற்கு உரியதாக இருந்தது என்பதையும் யாரும் மறுக்கவில்லை. இவையனைத்தும் மறுக்கப்பட முடியாதவை. ஆனால் இந்தக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவப் புரட்சியை பூர்த்தி செய்வது என்பது அக்டோபர் புரட்சியின் துணை நிகழ்வு அல்ல, மாறாக அதனுடைய சாராம்சமாக, அதனுடைய பிரதான குறிக்கோளாக இருந்தது என்று கருதப்பட முடியுமா? அப்படியா னால் முதலாளித்துவ அதிகாரத்தைத் தூக்கியெறிதல், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவுதல், ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றுதல், முதலாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல், இன்னபிற போன்றவற்றில் உங்கள் கூற்றுப்படி எது அக்டோபர் புரட்சியின் பிரதான குறிக்கோளாக ஆகியிருக் கின்றது?

ஒரு போர்த் தந்திர முழக்கத்தின் முக்கிய கருத்துருவானது ஒவ்வொரு புரட்சியினுடைய அடிப்படை பிரச்சினையாக இருக்கிறது என்றால், அதாவது, ஒரு வர்க்கத்திடமிருந்து இன்னொரு வர்க்கத்திற்கு அதிகாரத்தை மாற்றித் தருவது என்ற பிரச்சினையாக இருக்கிறது என்றால், பாட்டாளி வர்க்க வலிமையால் முதலாளித் துவப் புரட்சி பூர்த்தி செய்யப்படுதல் என்ற பிரச்சினையை, முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்து இந்தப் பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுதல் என்ற பிரச்சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. அதாவது புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் போர்த் தந்திர முழக்கத்தின் முக்கியக் கருத்துருவாக உள்ள பிரச் சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்பது இதிலிருந்து தெளிவாக வெளிப்படவில்லையா?

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் மிகப் பெரிய சாதனை களில் ஒன்று என்னவென்றால், அது முதலாளித்துவப் புரட்சியை பூர்த்தி செய்து மத்திய காலத்தின் அசிங்கங்களைத் துடைத் தெறிந்து விட்டது என்பதாகும். நாட்டுப்புற மாவட்டங்களில் இது அனைத்துக்கும்மேலானதாகவும், உண்மையிலேயே தீர்மானகரமான முக்கியத்துவம் உடையதாகவும் இருந்தது. இதில் தவறியிருந்தால் கடந்த நூற்றாண்டின் பின்பாதியில் மார்க்ஸ் கூறிய பாட்டாளி வர்க்கப்புரட்சியை விவசாயப் போர்களுடன் ஒன்றிணைத்தல் என்ற ஒன்றைக்கொண்டு வந்து இருக்க முடியாது; இதில் தவறியிருந்தால், பாட்டாளி வர்க்கப் புரட்சியே கூட நிலைநிறுத்தப்பட்டிருக்க முடியாது.

மேலும் கூடுதலாக, கீழ் வருகின்ற முக்கியமான சூழ்நிலைகள் மனதில் கொள்ளப்பட வேண்டும். முதலாளித்துவப் புரட்சியின்

பூர்த்தி ஒரே வீச்சில் அடையப்பட்டிருக்க முடியாது. உண்மையி லேயே அது நீங்கள் உங்கள் கடிதத்தில் கூறியிருப்பது போல் 1918 ம் ஆண்டின் ஒரு பகுதியை மட்டும் தழுவியில்லாமல் 1919 ம் ஆண்டின் ஒரு பகுதியையும் (வோல்கா மாகாணங்களும் யூரல்களும்) 1919-1920 ம் ஆண்டுகளின் பகுதியையும் (உக்ரைன்) அது தழுவிப் பரவி யிருந்தது. நிலப்பிரபுக்களின் ஆட்சியதிகாரம் மீண்டும் கொண்டு வரப்படும் அபாயத்தை விவசாய வர்க்கம் முழுமையும் எதிர் நோக்கியபோது, முதலாளித்துவப் புரட்சியைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், அந்தப் புரட்சியின் பலன்களை தக்கவைத்துக் கொள் ளும் பொருட்டும் சோவியத் அதிகாரத்தைச் சுற்றி அணி திரள விவசாயி வர்க்கம் முழுவதுமே நிர்ப்பந்திக்கப் பட்டபோது இருந்த சூழ்நிலையை அதாவது கோல்சாக், டெனிகின் ஆகிய தளபதிகளின் முன்னேற்றத்தைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். லெனினது படைப்புகளிலிருந்து நீங்கள் மேற்கோள் காட்டுகின்ற பகுதிகளை யும் கட்சியின் முழக்கங்களை செயலுக்குக் கொண்டுவரும் நுட்பங் களையும் நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நிலவும் யதார்த்தத்தின் இந்த சிக்கலான வேறுபட்ட நிகழ்ச்சிப் போக்குகள் முதலாளித்துவப் புரட்சியை பூர்த்தி செய்யும் பணியுடன் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நேரடியான சோசலிசப் பணிகள் இணைந்திருக் கின்ற இந்த ''விநோதமான'' பின்னிப் பிணைந்த நிலைமைகள் ஆகியவற்றை நாம் எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டும்.

புரட்சியின் இரண்டாவது கட்டத்தின் போது கட்சி முழக்கம் தவறாக இருந்தது என்றும் அந்த முழக்கம் புரட்சியின் முதற் கட்டத் தின் போதிருந்த முழக்கத்திலிருந்து மாறுபட்டது என்றும் இந்தப் பின்னிப் பிணைந்த நிலை நிரூபிக்கிறது என்று சொல்ல முடியுமா? இல்லை, அப்படிச் சொல்ல முடியாது. இதற்கு மாறாக, பாட்டாளி வர்க்க அதிகாரம் போன்றவற்றுக்காக நகர்ப்புறத்திலும், நாட்டுப் புறத்திலும் 'தொழில் முதலாளி வர்க்கத்திற்கு எதிராக ஏழை விவசாயிகளுடன் ஒன்றிணைக' என்கிற புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் கட்சியின் முழக்கமானது சரியானது என்பதையே இந்தப் பின்னிப் பிணைந்த நிலை உறுதிப்படுத்துகின்றது. ஏன்? ஏனெனில்' முதலாளித்துவப் புரட்சியை பூர்த்தி செய்வதற்கு முதலாளித்துவ அதிகாரத்தைத் தூக்கியெறிந்து பாட்டாளி வர்க்க அதிகாரத்தை நிலை நாட்டுவது அக்டோபரில் முதன்மையான அவசியமாக இருந் தது; ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு அதிகாரம்தான் முதலாளித் துவப் புரட்சியைப் பூர்த்தி செய்யத் திறமையுடைய ஒன்றாகும். அக்டோபரில் பாட்டாளிவர்க்க அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கு முதலாளி வர்க்கத்தை தூக்கியெறியக் கூடிய—பாட்டாளி வர்க்க அதிகாரத்தை நிறுவக்கூடிய—சக்திவாய்ந்த ஒருபோதுமான அரசியல்

வேறு வார்த்தைகளில் கூறினால்: சோசலிசப் புரட்சிக்காகப் பொதுவாக முதலாளி வர்க்கத்துக்கு எதிராக—நகர்ப்புறத்திலும் கிராமப்புறத்திலும் குட்டி முதலாளிய வர்க்கம் நடுநிலைப்படுத்தப்படுகின்ற அதே சமயத்தில்—ஏழை விவசாயிகளுடனும் அரைப்பாட்டாளி வர்க்க மக்கள் பிரிவுகளுடனும் ஒன்றிணைய வேண்டும்.

1905-ல் நிலை அதுவாகும்.

1917 ஏப்ரலில், லெனின் பாட்டாளிவர்க்கம், விவசாயி வர்க்கம் ஆகியவற்றின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம் முதலாளிய வர்க்கத்தின் உண்மையான அதிகாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது என அந்த நேரத்தின் அரசியல் சூழலை விளக்கிக் கீழ்வருமாறு கூறினார்:

> ''ரஷ்யாவில் தற்போதைய சூழ்நிலையின் தனிச்சிறப்பான அம்சம் என்னவென்றால், இது வர்க்க உணர்வு போதாமையின் காரணமாகவும் பாட்டாளிவர்க்கம் ஸ்தாபனமாக்கப்படாத காரணத்தாலும் அதிகாரத்தை முதலாளிகள் கையில் ஒப்படைத்த புரட்சியின் முதல்* கட்டத்தில் இருந்து பாட்டாளி வர்க்கம், விவசாயி வர்க்கத்தின் மிகமிக ஏழைப் பிரிவினர் * ஆகியோரின் கையில் அதிகாரத்தை அது ஒப்படைக்க வேண்டிய இரண்டாவது கட்டத்திற்கான ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது. (பார்க்க, ''லெனினுடைய ஏப்ரல் ஆய்வுகள்.'' தொகுதி 20, பக்கம். 88)

அக்டோபர் புரட்சியின் தயாரிப்புகள் முழு வீச்சில் இருந்த 1917 ஆகஸ்ட் இறுதியில் லெனின், ''விவசாயிகளும் தொழிலாளர்களும்'' என்ற ஒரு தனிக் கட்டுரையில் கீழ்வருமாறு எழுதினார்:

> ''பாட்டாளி வர்க்கமும் விவசாயி வர்க்கமும் * மட்டும்தான் முடியாட்சியை தூக்கியெறிய முடியும்—அந்த நாட்களில் (அதாவது 1905-ஸ்டாலின்) நமது வர்க்கக் கொள்கையின் அடிப்படையான வரையறை இதுதான். மேலும் அந்த வரையறை சரியான ஒன்றாக இருந்தது. 1917 பிப்ரவரி-மார்ச் அதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது. ஏழை விவசாயிகளை * (நமது திட்டம் அவர்களை அரைப்

---

* அழுத்தம் ஸ்டாலினுடையது.

> பாட்டாளிகள் என அழைக்கிறது) வழிநடத்திச் செல்லுகின்ற பாட்டாளி வர்க்கம்தான் ஜனநாயக, அமைதி வழியின் மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவரவும், போர் உருவாக்கிய காயங்களைக் குணப்படுத்தவும், மிக மிக அவசியமாகவும் அவசரமாகவும் ஆகியுள்ள சோசலிசத்தை நோக்கி நடைபோடத் துவங்கவும் முடியும்—இப்போது நமது வர்க்கக் கொள்கையின் வரையறை இப்படித்தான் உள்ளது. (பார்க்க, தொகுதி 21, பக்கம், 111.)

நாம் இப்போது பாட்டாளிவர்க்கம், விவசாயி வர்க்கம் ஆகியவற்றின் ஒரு சர்வாதிகாரத்தைப் பெற்றுள்ளோம் என்பதைக் குறிப்பதாக இது புரிந்துக் கொள்ளப்படக் கூடாது. அது, உண்மையிலேயே அவ்வாறு இல்லை. பாட்டாளிவர்க்கம், ஏழை விவசாயி வர்க்கம் ஆகியவற்றின் சர்வாதிகாரம் என்ற முழக்கத்தின் கீழ் நாம் அக்டோபரை நோக்கி அணிவகுத்தோம்; இடது சோசலிஸ்ட்—புரட்சியாளர்களுடன் நாம் உறவு கொண்டிருந்ததற்கேற்ப முறையாக அதை அக்டோபரில் நடைமுறைப் படுத்தினோம்; ஏற்கெனவே பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் யதார்த்தத்தில் நிலவியபோதிலும் போல்சுவிக்குகளாகிய நாம் பெரும்பான்மையாக இருந்ததால், நாம் அவர்களுடன் தலைமையைப் பகிர்ந்து கொண்டோம். இடது சோசலிஸ்ட் - புரட்சியாளர்களுடைய ''புட்ஸ்களுடைய'' அதாவது இடது சோசலிஸ்ட்-புரட்சியாளர்களின் முகாமுடனான உறவு முறிந்த பின்னர், ஒரே கட்சியின் கைகளுக்கு அதாவது வேறு எந்தக் கட்சியுடனும் அரசு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளாத—பகிர்ந்து கொள்ளவும் முடியாத நமது கட்சியின் கைகளுக்குத் தலைமை மொத்தமாகவும், முழுமையாகவும் மாறிய போது முறைப்படி பாட்டாளி வர்க்கம், ஏழை விவசாயி வர்க்கம் ஆகியவற்றின் சர்வாதிகாரம் இல்லாதொழிந்துவிட்டது. நாம் இதைத்தான் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என அழைக்கிறோம்.

இறுதியாக, 1918 நவம்பரில் லெனின் நாம் கடந்து வந்திருந்தப் புரட்சிப் பாதையைப் பின்னோக்கிப் பார்த்து, பின்வருமாறு எழுதினார்:

> ''ஆம். விவசாய வர்க்கம் முழுவதுடனும் நாம் அணிவகுத்து செல்கின்றவரை நமது புரட்சி முதலாளித்துவப் புரட்சிதான். இது நமக்கு எவ்வளவு தெளிவாக விளங்கியிருக்க

மேலே கூறப்பட்ட பகுதியிலிருந்து வெளி வருவது என்ன வென்றால் நடுத்தர விவசாயிகளை நடுநிலைப்படுத்தும் கொள்கையைக் கட்சியானது அக்டோபர் தயாரிப்பு கால கட்டத்திலும், அக்டோபரிலும் கடைப்பிடிக்கவில்லை; அக்டோபருக்குப் பின்புதான், குறிப்பாக 1918-க்கு பின்புதான், ஏழை விவசாயக் கமிட்டிகள் கலைக்கப்பட்டபோதுதான் கட்சி அந்தக் கொள்கையைக் கடைப் பிடித்தது என்பதே ஆகும். இது முற்றிலும் தவறானது ஆகும்.

மாறாக, நடுத்தர விவசாயிகளை நடுநிலைப்படுத்தும் கொள்கையானது 1918-க்குப் பிறகு ஏழை விவசாயக் கமிட்டிகள் கலைக்கப்பட்டபோது ஆரம்பமாகவில்லை,முடிவுதான் அடைந்தது. நடுத்தர விவசாயிகளை நடுநிலைப்படுத்தும் கொள்கை 1918-க்குப் பிறகு கைவிடப்பட்டது. (அறிமுகப்படுத்தப்படவில்லை). 1918-க்குப் பிறகுதான் 1919-மார்ச்சில் லெனின் நமது கட்சியின் எட்டாவது காங்கிரசைத் தொடங்கி வைத்து கீழ் வருமாறு கூறினார்:

> ''கடந்த காலத்திய சோசலிசத்தின் மிகச் சிறந்த பிரதிநிதிகள்-அவர்கள் புரட்சியில் நம்பிக்கை கொண்டு தத்துவ, சித்தாந்த ரீதியாக அதற்குச் சேவை செய்து கொண்டிருந்த போது-விவசாய வர்க்கத்தை நடுநிலைப் படுத்துவதைக் குறித்துப் பேசினார்கள்; அதாவது நடுத்தர விவசாய வர்க்கம்'பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ஊக்கத்துடன் உதவி செய்யாவிட்டாலும்கூட குறைந்த பட்சம் அதைத் தடுக்காமல் நடுநிலை வகிப்பதற்கு, எதிரியின் பக்கம் செல்லாதிருப்பதற்கு அதைச் சமுதாய அடுக்காக மாற்றுவது குறித்துப் பேசினார்கள். இந்தப் பொதுக் கருத்து, பிரச்சினையின் தத்துவ ரீதியான இந்தக் கருத்து எங்களுக்குத் தெளிவாக விளங்குகின்றது. ஆனால் இது போதாது. **சோசலிசத்தை கட்டியமைக்கிற கட்டத்தில்*** நாம் நுழைந்திருக்கின்றோம்; இந்தக் கட்டத்தில் ஸ்தூலமான விரிவான அடிப்படை விதிகளையும் ஆணைகளையும் நாம் வரையறுக்க வேண்டும்; அந்த விதிகளும் ஆணைகளும் நாட்டுப்புற மாவட்டங்களில் நமது பணியினுடைய அனுபவத்தின் மூலம் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றன; நடுத்தர விவசாய வர்க்கத்துடன் ஒரு நிலையான உடன்பாட்டை அடையும் பொருட்டு நாம் அவற்றால் வழிகாட்டப்பட வேண்டும்.'' (பார்க்க, தொகுதி, 24 - பக்கம், 114).

---

* அழுத்தம் ஸ்டாலினுடையது.

உங்கள் கடிதத்தில் நீங்கள் கூறியிருப்பதற்கு நேர் எதிராக இது இருப்பதை நீங்கள் காணலாம்; நீங்கள் நடுநிலைப்படுத்தலின் ஆரம்பத்தை அதனுடைய முடிவுடன் போட்டுக் குழப்புவதின் மூலம் உண்மையான நமது கட்சி நடை முறையைத் தலை கீழாக்குகின் றீர்கள்.

முதலாளிவர்க்கம் தூக்கியெறியப்படுகின்ற வரையிலும் சோவியத் அதிகாரம் உறுதிப்படுத்தப்படுகின்ற வரையிலும் நடுத்தர விவசாயி, புரட்சிக்கும் எதிர்ப் புரட்சிக்கும் இடையே பாசாங்கு செய்து ஊசலாடினான்; எனவே அவனை நடுநிலைப்படுத்துவது அவசியமாக இருந்தது. நடுத்தர விவசாயி, முதலாளி வர்க்கம் ''நிரந்தரமாக'' தூக்கியெறிப்பட்டது என்பதை யும், சோவியத் அதிகாரம் திடப்படுத்தப்பட்டுக் கொண்டி ருந்தது என்பதையும், குலாக்குகள் தோற்கடிக்கப்பட்டுக் கொண்டி ருந்தார்கள் என்பதையும் உள்நாட்டுப் போர் முனைகளில் செஞ்சேனை வெற்றியடையத் தொடங்கியிருந்தது என்பதையும் உணரத் தொடங்கியபோது அவன் நம்மை நோக்கி வரத் தொடங் கினான். துல்லியமாகச் சொன்னால் இந்த அலை திரும்பியபிறகு தான் எட்டாவது கட்சி காங்கிரசில் கட்சியின் மூன்றாவது போர்த் தந்திர முழக்கத்தை லெனினால் முன்வைக்க முடிந்தது. அந்த முழக் கம் பின்வருமாறு: ஏழை விவசாயிகளைச் சார்ந்து நிற்கும் அதே சமயத்தில் நடுத்தர விவசாயிகளுடன் ஒரு நீடித்த கூட்டணியை நிறுவி சோசலிசக் கட்டுமானத்தை நோக்கி முன்னேறிச் செல்வோ மாக!

இந்த நன்கறிந்த உண்மையை நீங்கள் எவ்வாறு மறந்திருக்க முடியும்?

மேலும் உங்கள் கடிதத்தில் இருந்து வெளிப்படுவது என்ன வென்றால், பாட்டாளி வர்க்க புரட்சிக்கு மாறி சென்ற காலத்திலும் அந்தப் புரட்சியின் வெற்றிக்குப் பிந்திய ஆரம்ப நாட்களிலும் நடுத் தர விவசாயியை நடுநிலைப் படுத்தும் கொள்கையானது தவறாக உள்ளது, பொருத்தமற்றதாக உள்ளது, எனவே, ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதாகும். அது முழுக்க முழுக்க தவறாகும். விசயம் நேர் எதிராக உள்ளது. துல்லியமாகச் சொன்னால் முதலாளி வர்க்க அதிகாரம் தூக்கியெறியப்பட்டுக் கொண்டிருந்த சமயத்திலும், பாட் டாளி வர்க்க அதிகாரம் திடப்படுத்தப்படுவதற்கு முன்பும் நடுத்தர விவசாயி மற்ற எல்லோரையும் விட அதிகமாக ஊசலாடினான், எதிர்த்தான். இந்தக் கட்டத்தில்தான் ஏழை விவசாயியுடன்

கூட்டணியும் நடுத்தர விவசாயியை நடுநிலைப் படுத்துவதும் அவசிய மானவையாக இருந்தன என்பது தெளிவு.

உங்கள் தவறில் பிடிவாதமாக நின்று கொண்டு, விவசாயப் பிரச்சினை என்பது நமது நாட்டுக்கு மட்டுமின்றி ''ஏறக்குறைய அக்டோபருக்கு முந்திய ரஷியாவின் பொருளாதார அமைப்பைக் கொண்டிருக்கின்ற'' நாடுகளுக்கும் கூட மிக முக்கியமான பிரச்சினையாகும் என்று நீங்கள் வலியுறுத்திக் கூறுகின்றீர்கள். பின்னால் கூறப்பட்ட கூற்று உண்மைதான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இங்கு காமின்டோனின் இரண்டாவது காங்கிரசில் லெனின் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தை மேற்கொள்ளும்போது நடுத்தர விவசாயி பற்றி பாட்டாளி வர்க்க கட்சிகளின் கொள்கை சம்பந்தமாக விவசாயப் பிரச்சினைப் பற்றிய தனது ஆய்வுரையில் வரையறை செய்துள்ளார். விவசாயக் கூலிகள், அரைப் பாட்டாளிகள், அல்லது பங்கீட்டினைப் பெற்றுள்ளவர்கள், சிறு விவசாயிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு தனிக் குழுவாக ஏழை விவசாய வர்க்கத்தை அல்லது இன்னும் துல்லியமாகச் சொன்னால் ''நாட்டுப்புற மாவட்டங்களில் உழைக்கின்ற மற்றும் சுரண்டப்படுகின்ற மக்கள் திரளை'' இவ்வாறு வரையறை செய்த பின்னர், நாட்டுப்புற மாவட்டங்களில் ஒரு தனிப் பிரிவாக நடுத்தர விவசாயிப் பிரச்சினையை வரையறைச் செய்யச் சென்ற லெனின் பின்வருமாறு கூறுகிறார்:

> ''நடுத்தர விவசாயிகள், அதன் பொருளாதார ரீதியான அர்த்தத்தில், குத்தகை தாரர்களாகவோ அல்லது உரிமையாளர்களாகவோ சிறிய அளவிலான நிலங்களைக் கொண்டுள்ள சிறுநில விவசாயிகளைக் குறிக்கின்றது. மேலும், முதலாவதாக முதலாளித்துவத்தின் கீழ் பொதுவிதிப்படி அவர்கள் தங்களுடைய குடும்பத்திற்காகவும், வீட்டுப் பொருள்களுக்காகவும் சிறு அளவிலான வருவாயைச் சேமிப்பதோடன்றி நல்ல பருவகாலங்களிலாவது மூலதனமாக மாற்றப்படக்கூடிய ஒரு குறிப்பிட்ட உபரியை உத்திரவாதம் செய்யும் வாய்ப்பைப் பெறுவார்கள். இரண்டாவதாக மிக அடிக்கடி (உதாரணமாக இரண்டு அல்லது மூன்று பண்ணைகளில் ஒன்றை) வெளியாட்களின் உழைப்பைக் கூலிக்கு அமர்த்த முயல்கிறார்கள்......புரட்சிகரமான பாட்டாளி வர்க்கமானது—அடுத்து வரும் உடனடி எதிர்காலத்தில் இல்லாவிட்டாலும் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் ஆரம்பக் கட்டத்தில்—இந்த வர்க்கத்தட்டை தங்கள் பக்கம் வென்றெடுக்கும் பணியை மேற்கொள்ள முடியாது; ஆனால் அது இதை நடுநிலைப்படுத்தும்

பணியோடு அதாவது, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளிய வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டத்தில் அதை நடுநிலைப் படுத்துவதோடு நின்று கொள்ள வேண்டும்."

(பார்க்க, தொகுதி 25. பக்கம் 271-72).

இதற்குப் பிறகு, நடுத்தர விவசாய வர்க்கத்தை நடுநிலைப் படுத்தும் கொள்கையானது 1918 கோடைக்காலம் மற்றும் இலையுதிர் "காலத்தில்தான்" அதாவது சோவியத்துக்களின் அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கத்தின் அதிகாரத்தை திடப்படுத்திய தீர்மானகரமான வெற்றிகளைப் பெற்ற பிறகுதான் "எழுந்தது" என்று எவ்வாறு வலியுறுத்திச் சொல்ல முடியும்?

சோசலிசப் புரட்சிக்கு மாறும் காலகட்டத்திலும் பாட்டாளி வர்க்க அதிகாரம் திடப்படுத்தும் காலத்திலும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் போர்த்தந்திர முழக்க பிரச்சினையும் அதைப்போல நடுத்தர விவசாயியை நடுநிலையாக்கும் பிரச்சினையும் நீங்கள் கற்பனை செய்திருப்பது போல் அவ்வளவு எளிமையானது அல்ல என்பதை நீங்கள் பார்க்கலாம்.

4. மேலே கூறப்பட்ட அனைத்திலிருந்தும் நமக்குத் தெரிவது என்னவென்றால் நீங்கள் லெனினது நூல்களிலிருந்து சுட்டிக் காட்டியுள்ள பகுதிகள், புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் நமது கட்சியின் அடிப்படையான முழக்கத்திலிருந்து எவ்விதத்திலும் மாறுபடவில்லை என்பது தெளிவு; (அ) ஏனென்றால் இந்த மேற்கோள்கள் அக்டோபருக்கு முந்திய அடிப்படையான முழக்கத்துடன் சம்பந்தப்படவில்லை; ஆனால் அக்டோபருக்குப் பிந்திய முதலாளித்துவப் புரட்சியின் பூர்த்தியுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது; மேலும் (ஆ) அந்த முழக்கத்தின் சரியான தன்மையை அது மறுக்கவில்லை, ஆனால் உறுதிப்படுத்துகிறது.

கீழ்வரும் கருத்தை ஏற்கெனவே நான் மேலே கூறியிருக்கிறேன். திரும்பவும் நான் அதைக் கூறியாக வேண்டும். பாட்டாளி வர்க்கத்தால் அதிகாரம் கைப்பற்றப் படுதல் என்ற காலப் பகுதிக்கு முன்பு புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்சியின் போர்த்தந்திர முழக்கத்தை—அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையை மையக்கருவாகக் கொண்ட முழக்கத்தை—பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தை மேற்கொண்ட பின்னர் நடைமுறைப் படுத்தப் படுகின்ற முதலாளிய புரட்சியைப் பூர்த்தி செய்கின்ற பணியுடன் வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

5. தோழர் மாலட்டோ பிராவ்தா பத்திரிகையில் (1927, மார்ச் 12) ''நமது நாட்டில் முதலாளித்துவப் புரட்சி'' என்ற தலைப்பில் எழுதிய மிகப் பிரபலமான கட்டுரையைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்; ஒரு விளக்கத்துக்காக எனக்கு அதை பொருத்தும்படி உங்களை அது ''தூண்டியதாக'' தோன்றுகிறது. கட்டுரைகளை நீங்கள் எப்படி படிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. நானும் கூட தோழர் மாலட்டோவின் கட்டுரையைப் படித்திருக்கிறேன்; நமது கட்சியின் பதினான்காவது காங்கிரசில் விவசாய வர்க்கம் சம்பந்தமாக நமது கட்சியின் முழக்கங்கள் குறித்த எனது அறிக்கையில் நான் கூறியுள்ளதுடன் அது எந்த விதத்திலும் முரண்படுவதாக நான் நினைக்கவில்லை.

தோழர் மாலட்டோ தனது கட்டுரையில் அக்டோபர் காலத்திய கட்சியின் அடிப்படையான முழக்கத்தைப் பற்றி விவாதிக்கவில்லை; ஆனால் அக்டோபருக்குப் பிறகு கட்சி முதலாளித்துவப் புரட்சியை நிறைவுக்கு இட்டுச் சென்ற போது அது விவசாயிகள் அனைவருடைய ஆதரவைப் பெற்றது என்ற உண்மையைப்பற்றியே அதில் அவர் விவாதிக்கிறார். இந்த உண்மையைப் பற்றிய கூற்றானது நகர்ப்புறத்திலும், நாட்டுப் புறத்திலும் முதலாளிய வர்க்கத்திற்கு எதிராக ஏழை விவசாய வர்க்கத்துடன் ஒன்றுபட்டு நடுத்தர விவசாய வர்க்கத்தை நடுநிலையாக்கி முதலாளித்துவ அதிகாரத்தைத்தூக்கி எறிந்து பாட்டாளிவர்க்க அதிகாரத்தை நாம் நிறுவினோம் என்ற உண்மையை அது மறுக்கவில்லை; ஆனால் உறுதிப்படுத்துகிறது. இதைச் செய்யாமல் முதலாளித்துவப் புரட்சியை நம்மால் நிறைவு செய்ய முடிந்திருக்காது என்று ஏற்கனவே நான் மேலே கூறி உள்ளேன்.

போல்ஷ்விக் எண் 7-8
1927, ஏப்ரல் 13.

# 4

# அக்டோபருக்கான தயாரிப்புக் கால கட்டத்தின்போது போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் சில தனிச்சிறப்பான அம்சங்கள்

—ஜே. வி. ஸ்டாலின்

## எதிர்த்தரப்பு பற்றி

*ஒரு கட்சியின் அதாவது கம்யூனிஸ்ட் கட்சியின் பிரிக்கப்படாத தலைமை அக்டோபர் (புரட்சிக்கான) தயாரிப்பில் ஒரு முதன்மையான காரணியாகும். இதுதான் அக்டோபர் புரட்சியின் தனிச்சிறப்பு அம்சமாகும்; இதுதான் அக்டோபர் (புரட்சிக்கான) தயாரிப்புக் காலகட்டத்தின் போது போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் முதலாவது தனிச்சிறப்பு அம்சமாகும்.*

*போல்ஷ்விக் செயல் தந்திரங்களின் இந்த அம்சம் இல்லாமல், ஏகாதிபத்திய நிலைமைகளில் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் வெற்றியைப் பெற்றிருப்பது என்பது சாத்தியம் இல்லை என்பதற்கு நிரூபணம் தேவைப்படாது.*

*இந்த அம்சத்தில் அக்டோபர் புரட்சியானது 1871-ல் பிரான்சில் நடந்த புரட்சியிலிருந்து சாதகமாக வேறுபடுகிறது! அங்கே தலைமை இரு கட்சிகளுக்கிடையே பிளவுபட்டிருந்தது; அவற்றில் எதுவுமே கம்யூனிஸ்ட்கட்சி என அழைக்கப்பட முடியாமல் இருந்தது.*

இரண்டாவது தனிச்சிறப்பான அம்சம் : அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்பு இவ்வாறு ஒரு கட்சித் தலைமையின் கீழ் அதாவது போல்ஷ்விக் கட்சித் தலைமையின் கீழ் தொடர்ந்து முன்னேறியது; ஆனால் இந்தத் தலைமையைக் கட்சி எவ்வாறு நிறைவேற்றியது? எந்த வழியினூடே இந்தத் தலைமை முன்னேறிச் சென்றது? புரட்சி வெடிக்கும் சமயத்தில் மிகவும் அபாயகரமான குழுக்களாக சமரசக் கட்சிகளைத் தனிமைப்படுத்தும் வழியில்—சோசலிசப் புரட்சியாளர்களையும் மென்ஷ்விக்குகளையும் தனிமைப்படுத்தும் வழியில் – இந்தத் தலைமை முன்னேறியது.

லெனினியத்தின் அடிப்படையான போர்த்தந்திர (Strategic) விதி என்ன?

அது கீழ்கண்டவற்றை அங்கீகரிப்பதில் அடங்கியுள்ளது.

1. புரட்சி வெடிக்கக் கூடிய கால கட்டத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில், சமரசவாதக் கட்சிகள் புரட்சியின் எதிரிகளின் மிக அபாயமான சமூக ஆதரவாகும்.

2. இத்தகைய கட்சிகள் தனிமைப்படுத்தப்படாமல் எதிரியை (ஜாரிசம் அல்லது முதலாளித்துவ வர்க்கம்) தூக்கியெறிவது என்பது சாத்தியம் இல்லை.

3. எனவே, புரட்சிக்கான தயாரிப்புக் காலகட்டத்தில் இத்தகைய கட்சிகளைத் தனிமைப்படுத்துவதை நோக்கியும் அவற்றிடமிருந்து பரந்துபட்ட உழைக்கும் மக்களை வென்றெடுப்பதை நோக்கியும் முக்கிய ஆயுதங்கள் செலுத்தப்பட வேண்டும்.

ஜாரிசத்துக்கு எதிரான போராட்டக் காலத்தில்-முதலாளித்துவ சனநாயகப் புரட்சிக்கான தயாரிப்புக் காலகட்டத்தில் (1905-16) ஜாரிசத்துக்கு மிக அபாயகரமான சமூக ஆதரவாக தாராளவாத—முடியரசுவாத கட்சியான கேடட் கட்சி இருந்தது. ஏன்? ஏனென்றால் இது ஒரு சமரசவாதக் கட்சியாக, ஜாரிசத்துக்கும் பெரும்பான்மையான மக்களுக்கும் அதாவது மொத்த விவசாய வர்க்கத்திற்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்தும் கட்சியாக இருந்தது. இயல்பாகவே கட்சியானது அந்த சமயத்தில், தனது பிரதான அடிகளை காடெட்டுகளின் மீது தொடுத்தது; ஏனென்றால் காடெட்டுகள் தனிமைப்படுத்தப்படாமல் ஜாரிசத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான முறிவுக்குச் சாத்தியமில்லை. மேலும் இந்த முறிவானது உறுதிப்படுத்தப்படாதிருந்தால் புரட்சியின் வெற்றிக்கான வாய்ப்பு இருந்திருக்க முடியாது. அந்த நேரத்தில் பலர், போல்ஷ்விக் போர்த்தந்திரத்தின் இந்தத் தனிச்

சிறப்பான அம்சத்தைப் புரிந்து கொள்ளவில்லை; போல்ஷ்விக்குகள் "காடேட்டுகளைப் பார்த்து அதீதமாக அஞ்சுகின்றனர்" என்று குற்றம் சாட்டினார்கள். காடேட்டுகளுக்கு எதிரான போல்ஷ்விக்குகளின் போராட்டமானது, பிரதான எதிரியான ஜாரிசத்துக்கு எதிரான போராட்டத்தை "பின் தள்ளி விட்டது" என்று கருதினார்கள். ஆனால் நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரமில்லாத இந்தக் குற்றச்சாட்டுகள், பிரதான எதிரியின் மீதான வெற்றியை எளிமைப்படுத்தவும், துரிதப்படுத்தவும் சமரசவாதக் கட்சிகளைத் தனிமைப்படுத்தக் கோரிய போல்ஷ்விக்குகளின் போர்த்தந்திரத்தை புரிந்துகொள்ள அறவே தவறிவிட்டன என்பதையே வெளிப்படுத்தின.

இந்தப் போர்த்தந்திரம் இல்லாமல் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளிவர்க்க மேலாதிக்கத்தைப் பெற்றிருக்க முடியாது என்பதற்கு நிரூபணம் தேவையில்லை.

அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்புக் காலகட்டத்தில் போராடும் சக்திகளின் ஈர்ப்பு மையம் வேறு தளத்திற்கு மாறியது. ஜார் மன்னன் ஒழிந்தான்; காடேட்டு கட்சியானது சமரசவாத சக்தி என்ற நிலையிலிருந்து ஆளும்சக்தியாக, ஏகாதிபத்திய ஆளும் சக்தியாக மாற்றப்பட்டிருந்தது. இப்பொழுது யுத்தமானது ஜாரிசத்துக்கும் மக்களுக்கும் இடையில் இல்லை; ஆனால் முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் பாட்டாளிகளுக்கும் இடையிலானதாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் குட்டி முதலாளித்துவ ஜனநாயகக் கட்சிகளான, சோசலிஸ்ட் புரட்சியாளர்களின் கட்சியும், மென்ஷ்விக்குகளின் கட்சியும் ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் அபாயகரமான சமூக ஆதரவாக இருந்தன. ஏன்? ஏனெனில் அப்பொழுது இந்தக் கட்சிகள் ஏகாதிபத்தியத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் சமரசம் செய்கின்ற சமரசக் கட்சிகளாக இருந்தன. இயல்பாகவே, போல்ஷ்விக்குகள் அந்த சமயத்தில், தங்களது பிரதான தாக்குதல்களை இந்தக் கட்சிகள் மீது தொடுத்தனர். ஏனெனில் இந்தக் கட்சிகள் தனிமைப்படுத்தப்படாமல் இருந்தால், உழைக்கும் மக்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் முறிவு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருந்திருக்க முடியாது; இந்த முறிவு உறுதிப்படுத்தப்படாதிருந்தால் சோவியத் புரட்சியின் வெற்றிக்கான வாய்ப்பு இருந்திருக்க முடியாது. அந்த நேரத்தில் பலர் போல்ஷ்விக் செயல்தந்திரங்களின் இந்தத் தனிச்சிறப்பான அம்சத்தைப் புரிந்து கொள்ளவில்லை. சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் மீதும், மென்ஷ்விக்குகள் மீதும் போல்ஷ்விக்குகள் "அதீத வெறுப்பை" வெளிப்படுத்துகின்றனர்—என்றும், பிரதான

லட்சியத்தை ''மறந்து விட்டனர்'' என்றும் குற்றம் சாட்டினார்கள். ஆனால், இந்தச் செயல்தந்திரங்களைக் கையாண்டதால் தான், போல்ஷ்விக்குகள், அக்டோபர் புரட்சிக்கான வெற்றியை உறுதிப்படுத்த முடிந்தது என்பதை மிகத் தெளிவாக அக்டோபர் தயாரிப்பு காலகட்டம் முழுவதும் மெய்ப்பிக்கிறது.

இந்த காலகட்டத்தில் குறிப்பிடத்தகுந்தது என்னவென்றால் அது விவசாய வர்க்கத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்களை மேலும் புரட்சிகரமயமாக்கியது; சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் மீதும் மென்ஷ்விக்குகள் மீதும் இருந்த அவர்களது பிரமை நீங்கியது; இந்தக் கட்சிகளிடமிருந்து அவர்கள் தங்களைத் துண்டித்துக் கொண்டனர்; நாட்டை சமாதானத்துக்கு இட்டுச் செல்லும் சக்திபடைத்த முரணில்லாத ஒரே சக்தியான பாட்டாளிவர்க்கத்தை சுற்றி அவர்கள் திரண்டனர். இந்தக் காலப்பகுதியின் வரலாறானது, உழவர் வர்க்கத்தின் உழைக்கும் மக்களுக்காக அவர்களைத் தங்கள் பக்கம் வென்றெடுப்பதற்காக சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் மென்ஷ்விக்குகள் ஆகியோருக்கும், போல்ஷ்விக்குகளுக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தின் வரலாறாகும்.

இந்தப் போராட்டத்தின் இறுதிவிளைவானது கெரன்ஸ்கியின் காலப்பகுதியான கூட்டரசாங்கக் காலப்பகுதிகளும் நிலப் பிரபுக்களின் நிலங்களை பறிமுதல் செய்ய மென்ஷ்விக்குகளும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களும் மறுத்த செயல்யு,த்தத்தை தொடர்வதற்காக மென்ஷ்விக்குகளும், சோசலிஸ்ட்—புரட்சியாளர்களும் நடத்திய சண்டை, போர் முனையில் சூன்தாக்குதல், ராணுவ வீரர்களுக்கு மரணதண்டனை கொண்டு வந்தது, கோர்னிலோவ் கலகம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டது. அதோடு இவை இப் போராட்ட பிரச்சனையை முழுமையாக போல்ஷ்விக் போர்த் தந்திரத்துக்கு சாதகமாகவே தீர்மானித்தன. ஏனெனில் சோசலிஸ்ட் புரட்சியாளர்களும் மென்ஷ்விக்குகளும் தனிமைப்படுத்தப்படாமலிருந்தால் ஏகாதிபத்தியவாதிகளின் அரசாங்கத்தைத் தூக்கியெறிவது சாத்தியமாகியிருக்காது. இந்த அரசாங்கம் தூக்கியெறியப்படாமலிருந்தால் போரிலிருந்து விடுபட்டு வருவது சாத்தியமில்லாது போயிருக்கும்; சோசலிஸ்ட் புரட்சியாளர்களையும் மென்ஷ்விக்குகளையும் தனிமைப்படுத்தும் கொள்கைதான் சரியான கொள்கை என்பது நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறு, அக்டோபருக்கான தயாரிப்புகளைச் செய்வதில் மென்ஷ்விக்குகளையும் சோசலிஸ்ட் — புரட்சியாளர்களையும் தனிமைப்படுத்துவது பிரதான வழியாக இருந்தது. இதுதான்

போல்ஷ்விக் செயல்தந்திரங்களின் இரண்டாவது தனிச்சிறப்பான அம்சமாக இருந்தது.

போல்ஷ்விக் செயல் தந்திரங்களுடைய இந்தத் தனிச் சிறப்பான அம்சம் இல்லாமல், பாட்டாளி வர்க்கத்திற்கும் உழவர் வர்க்கத்தின் உழைக்கும் மக்களுக்கும் இடையிலான கூட்டு அந்தரத்தில் விடப்பட்டிருக்கும் என்பதற்கு நிருபணம் தேவையில்லை.

ட்ராட்ஸ்கி, "அக்டோபரின் படிப்பினைகள்" என்ற தமது நூலில் போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் இந்தத் தனிச் சிறப்பான அம்சம் பற்றி எதையும் சொல்லாமல் விட்டு விட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத் தகுந்தது.

**மூன்றாவது தனிச் சிறப்பான அம்சம் :** இவ்வாறு கட்சியானது அக்டோபருக்கான தயாரிப்புகளைச் செய்கையில் சோசலிஸ்ட்—புரட்சியாளர்கள் கட்சியையும், மென்ஷ்விக்கு கட்சிலயயும் தனிமைப் படுத்தும் வழியையும் அவர்களிடமிருந்து தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தங்கள் பக்கம் வென்றெக்கும் வழியையும் பின் பற்றியது. ஆனால், கட்சி இந்தத் தனிமைப் படுத்துதலை எந்த வடிவத்தில், எந்த முழக்கத்தின் கீழ் பருண்மையாக நிறைவேற்றியது? "அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே" என்ற முழக்கத்தின் கீழ் சோவியத்துக்களை மக்களைத் திரட்டும் அமைப்புகள் என்பதிலிருந்து எழுச்சிக்கான அமைப்புக்களாகவும், அதிகாரத்துக்கான அமைப்புக்களாகவும், ஒரு புதிய பாட்டாளி வர்க்க அதிகாரத்துக்கான கருவியாகவும் மாற்றுவதற்கான போராட்டத்தின் மூலம் சோவியத்துக்களின் அதிகாரத்துக்கான புரட்சிகர மக்கள் இயக்கத்தின் வடிவில் இது நிறைவேற்றப்பட்டது.

சோசலிஸ்ட் புரட்சியாளர்களையும் மென்ஷ்விக்குகளையும் தனிமைப் படுத்தும் கடமையினை நிறைவு செய்யக்கூடிய, பாட்டாளி வர்க்கப் புரட்சி லட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் திறன் படைத்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வெற்றிக்கு லட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் திரளை வழி நடத்திச் செல்கின்ற கடமைக்கு உதவிய முதன்மையான ஸ்தாபன நெம்பு கோலாலான சோவியத்துக்களை போல்ஷ்விக்குகள் பற்றிக் கொண்டது ஏன்?

### சோவியத்துக்கள் என்றால் என்ன?

1917 செப்டம்பர் ஆரம்பத்திலேயே லெனின் கூறினார். "சோவியத்துக்கள் ஒரு புதிய அரசு உறுப்புக்களாக

முறையின் மூலமாகப் போல்ஷ்விக்குகள் சோவியத்துக்களைக் கைப் பற்றுவதில் வெற்றி பெறுவார்கள் என்றும், அமைதி வழியிலான புரட்சி வளர்ச்சியின் மூலமாகவே சோவியத் அரசாங்கத்தின் உட் கூறுகளை மாற்றியமைக்க முடியும் என்றும் எதிர்ப்பார்த்ததன் காரணமாகச் சோவியத்தினுள் கட்சிகளின் சுதந்திரமான போராட் டத்திற்கு உரிமை தருவது ஆகியவற்றைக் குறிக்கிறது. இத்திட்ட மானது, பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தைக் குறிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் மென்ஷ்விக்குகளையும் சோஷலிஸ்ட் புரட்சியாளர்களையும் அதிகாரத்தில் வைத்து, அவர்களது எதிர்ப் புரட்சிகரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நிர்பந்தித்ததன் மூலம் (பாட்டாளிவர்க்க- மொ. பெ) சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்து வதற்குத் தேவையான நிலைமைகளைத் தயாரிப்பதற்கு இது உதவி யது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இது அந்தக் கட்சிகளின் உண்மையான இயல்பு அம்பலப்பட்டுப் போவதைத் துரிதப்படுத்தி யது; அவை மக்கள் திரளிடமிருந்து தனிமைப்பட்டுத் தொடர்பற்றுப் போவதைத் துரிதப்படுத்தியது. ஆயினும் போல்ஷ்விக்குகளின் ஜூலைத் தோல்வி இந்த வளர்ச்சிப்போக்கைத் தடுத்தது; ஏனெனில் இந்தத் தோல்வி ஜெனரல்கள் மற்றும் காடேட்டுகளின் எதிர்ப் புரட்சிக்கு முன்னுரிமை அளித்தது; சோஷலிஸ்ட் புரட்சியாளர்களை யும் மென்ஷ்விக்குகளையும் எதிர்ப்புரட்சிகர அணிக்குத் தள்ளியது. மேலும், இது "அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே" என்ற முழக்கத்தைத் தற்காலிகமாக வாபஸ் பெற்றது. மீண்டும் அலைத ஒரு புதிய புரட்சிகர எழுச்சியின் நிலைமைகளில் முன் வைக் கவும் கட்சியை நிர்ப்பந்தித்தது.

கோர்னிலோவ் கலகத்தின் தோல்வி இரண்டாவது கட்டத் தைத் தொடங்கி வைத்தது. மீண்டும் "அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே" என்ற முழக்கம் உடனடி முழக்கமாக மாறியது. ஆயினும் இந்த முழக்கம் இப்போது முதல் கட்டத் திலிருந்து மாறுபட்டதொரு பொருளைக் கொண்டிருந்தது. இப்போது இந்த முழக்கம், ஏகாதிபத்தியத்துடன் ஒரு முழுமை யான முறிவையும் ஏற்கனவே போல்ஷ்விக்குகள் பெரும் பான்மையாக இருந்ததால் அவர்களுக்கு அதிகாரத்தை மாற்றித் தருவதையும் குறித்தது. இப்போது இந்த முழக்கம் ஒரு எழுச்சியின் மூலம் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தை நோக்கிப் புரட்சி நேரடி யாக நெருங்கி வருவதைக் குறித்தது. இவை அனைத்திற்கும் மேலாக, இந்த முழக்கம், இப்போது பாட்டாளிவர்க்கச் சர்வாதி கார அமைப்பைக் குறிப்பதாகவும், அதற்கு ஒரு வடிவத்தைக் கொடுப்பதாகவும் இருந்தது.

சோவியத்துக்களை அரசு அதிகார உறுப்புக்களாக மாற்றி யமைத்த செயல் தந்திரங்களின் அளப்பிடற்கரிய முக்கியத்துவம் லட்சக்கணக்கான மக்களை ஏகாதிபத்தியத்திடமிருந்து முறித்துக் கொள்ளச் செய்தது என்ற உண்மையிலும், மென்ஷ்விக் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களின் கட்சிகள் ஏகாதிபத்தியத்தின் கைத்தடிகள் என்பதை அம்பலப்படுத்தியதிலும், மக்கள் திரளை ஒரு நேரடிப் பாதையான பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குக்—இதுதான் அந்த வழியாக இருந்ததால்—கொண்டு வந்ததிலும் அடங்கியிருந்தது.

இவ்வாறு சமரசவாதக் கட்சிகளைத் தனிமைப்படுத்துவதற்கும், பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் வெற்றிக்கும் மிக மிக முக்கிய நிபந்தனையாகச் சோவியத்துக்களை அரசு அதிகாரத்தின் உறுப்புக் களாக மாற்றும் கொள்கை—அக்டோபருக்கான தயாரிப்புக் காலத் தில் போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் மூன்றாவது குறிப்பான அம்சமாகும்.

**நான்காவது குறிப்பான அம்சம்:** போல்ஷ்விக்குகள் தங்களின் கட்சி முழக்கங்களைப் பெரும் மக்கள் திரளுக்கான முழக்கங்களாக, புரட்சியை முன்னுக்கு உந்தித் தள்ளிய முழக்கங்களாக எப்படி, ஏன் மாற்றினார்கள் என்பதையும், முன்னணிப் படையை மட்டு மின்றி, உழைக்கும் வர்க்கத்தின் பெரும்பான்மையினரை மட்டுமின்றி மக்களில் பெரும்பான்மையோரையும் கூடத் தங்கள் கொள்கை சரி யானது என நம்ப வைப்பதில் எப்படி ஏன் வெற்றி பெற்றார்கள் என்பதையும் நாம் விவாதிக்கவில்லையென்றால் இந்தப் பகுதி முழுமையடையாது.

விசயம் என்னவென்றால் லட்சக்கணக்காக மக்களைக் கொண் டுள்ள உண்மையானதொரு மக்கள் புரட்சியாகப் புரட்சி இருக்கிற தென்றால், அப்புரட்சியின் வெற்றிக்குச் சரியான கட்சி முழக்கங்கள் மட்டும் போதாது. ஏனெனில் புரட்சியின் வெற்றிக்கு மேலும் ஒரு அவசியமான நிபந்தனை தேவைப்படுகிறது; அதாவது மக்கள் தாங்களே தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் இந்த முழக்கங் களின் சரியான தன்மையை உணர்ந்தறிய வேண்டும். அதன் பிறகு தான் கட்சி முழக்கங்கள் மக்கள் திரளின் முழககங்களாக மாறுகின் றன. அதன் பிறகு தான் புரட்சி உண்மையிலேயே மக்கள் புரட்சி யாக ஆகின்றது. அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்புக் காலத்தில் போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் குறிப்பான அம்சங் களில் ஒன்று யாதெனில், இயல்பாகவே கட்சி முழக்கங்களிடம் இன்னும் சரியாகச் சொன்னால் புரட்சியின் வாயிற்படிக்கே மக்கள்

திரளைக் கொண்டு வந்த பாதைகளையும் திருப்பங்களையும் அவர்கள் சரியாகத் தீர்மானித்தனர் என்பதாகும். இவ்வாறு இந்த முழக்கங்களின் சரியான தன்மையை மக்கள் தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் உணரவும், சோதிக்கவும், உண்மையுணரவும் அவர்களுக்கு உதவியது என்பதாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால் போல்ஷ்விக்குகளது செயல்தந்திரங்களின் குறிப்பான அம்சங்களில் ஒன்று யாதெனில் போல்ஷ்விக்குகள் கட்சித் தலைமையை மக்கள் திரள் தலைமையுடன் போட்டுக் குழப்பிக் கொள்வதில்லை; அவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை அவர்கள் தெளிவாக உணர்கின்றனர்; எனவே அவர்கள் கட்சித் தலைமைக்கு மட்டுமல்ல உழைக்கும் மக்களின் பெரும் மக்கள்திரள் தலைமைக்கும் கூட விஞ்ஞானத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.

அரசியல் நிர்ணய சபையைக் கூட்டியதும் அதனைக் கலைத்ததுமான அனுபவம் போல்ஷ்விக் செயல்தந்திரங்களின் மேலே குறிப்பிட்ட அம்சத்துக்கு ஒரு தெளிவான உதாரணத்தை அளித்தது.

போல்ஷ்விக்குகள், ''சோவியத் குடியரசு" என்ற முழக்கத்தை 1917, ஏப்ரல் ஆரம்பத்திலேயே முன்வைத்தனர் என்பது அனைவருக்கும் நன்குதெரியும். அரசியல் நிர்ணயசபை ஒரு முதலாளித்துவப் பாராளுமன்றமாக இருந்தது என்பதும் ''சோவியத் குடியரசின்'' கோட்பாடுகளுக்கு அடிப்படையிலேயே எதிராக இருந்தது என்பதும் அனைவருக்கும் தெரியும். சோவியத் குடியரசை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த போல்ஷ்விக்குகள், அதே நேரத்தில், தற்காலிக அரசாங்கம் அரசியல் நிர்ணய சபையை உடனே கூட்டவேண்டுமென்று கோரியது ஏன்? போல்ஷ்விக்குள் தேர்தல்களில் பங்கெடுத்துக்கொண்டது மட்டுமின்றி அவர்களே அரசியல் நிர்ணய சபையைக் கூட்டியது ஏன்? எழுச்சிக்கு ஒரு மாதத்திற்கு முன்பாகப் பழையதிலிருந்து புதியதற்கு மாறியதில், போல்ஷ்விக்குகள் சோவியத் குடியரசை அரசியல் நிர்ணய சபையுடன் தற்காலிகமாக இணைப்பது சாத்தியம் என்று கருதியது ஏன்?

இது ''நிகழ்ந்தது'' ஏனெனில்;

(1) அரசியல் நிர்ணய சபைக்கான கருத்து பெரும்பான்மையான மக்களிடையே நிலவிய மிகப் மிகப் பிரபலமான கருத்துகளில் ஒன்றாக இருந்தது.

(2) அரசியல் நிர்ணய சபையை உடனே கூட்டவேண்டும் என்ற முழக்கம், இடைக்கால அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சிகர இயல்பை அம்பலப்படுத்த உதவியது.

(3) மக்களிடமிருந்த அரசியல் நிர்ணய சபையைப் பற்றிய கருத்தை மதிப்பிழக்கச் செய்ய அவர்களது கோரிக்கைகளான ''நிலம், சமாதானம், சோவியத் அதிகாரம்'' ஆகியவற்றுடன் அவர்களை அரசியல் நிர்ணய சபைக்குக் கொண்டு செல்வதும், அரசியல் நிர்ணய சபையின் உண்மை நிலையை நேருக்கு நேர் சந்திக்கச் செய்வதும் அவசியமானதாக இருந்தது.

(4) மக்கள் தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் அரசியல் நிர்ணய சபையின் எதிர்ப்புரட்சிகர இயல்பைப் புரிந்து கொள்ளவும், அதைக் கலைக்க வேண்டிய அவசியத்தை உணரவும் இதுதான் உதவி செய்தது.

(5) இவை அனைத்தும் இயல்பாக, அரசியல் நிர்ணய சபையை ஒழித்துக்கட்டுவதற்கான வழிகளில் ஒன்று என்ற விதத்தில் சோவியத் குடியரசை அரசியல் நிர்ணய சபையுடன் தற்காலிகமாக இணைக்கும் சாத்தியப்பாட்டை முன் கூட்டியே அனுமானித்தன.

(6) இத்தகைய சேர்க்கை, அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கு மாற்றப்பட்ட நிலையில் ஏற்படுத்தப்பட்டதால் சோவியத்துகளுக்கு அரசியல் நிர்ணய சபையைக் கீழ்ப்படியச் செய்வதையும், சோவியத்துக்களுக்குக் கீழ்ப்பட்டதாக அது மாற்றப் படுவதையும், அது வலியின்றி மறைந்து ஒழிந்து போவதையும் தான் குறிக்க முடிந்தது.

இத்தகையதொரு கொள்கையைப் போல்ஷ்விக்குகள் கடைப் பிடிக்காதிருந்தால் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது என்பது அவ்வளவு சுலபமாக நடந்தேறியிருக்காது, அதைத் தொடர்ந்து ''அனைத்து அதிகாரமும் அரசியல் நிர்ணயசபைக்கே!'' என்ற முழக்கத்தின் கீழ் சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷ்விக்குகளின் நடவடிக்கைகள் அவ்வளவு எடுப்பான விதத்தில் தோல்வியடைந்திருக்காது என்பதற்கு நிருபணம் தேவையில்லை.

லெனின் கூறுகிறார்:

> ''1917, செப்டம்பர்—நவம்பரில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபைக்கான—ரஷிய முதலாளித்துவ நாடாளு மன்றத்துக்கான—தேர்தல்களில் நாங்கள் பங்கெடுத்துக் கொண்டோம். எங்களது செயல் தந்திரம் சரியா? தவறா?—1917, செப்டம்பர் நவம்பரில் நாடாளுமன்ற முறை ரஷியாவில் அரசியல் வழியில் காலாவதியாகிவிட்ட தாகக் கருத ரஷிய கம்யூனிஸ்ட்டுகளாகிய எங்களுக்கு மேல்

நாட்டு கம்யூனிஸ்டுகள் யாரையும் விட அதிக அளவு உரிமை இருக்கவில்லையா? இருந்தது என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. இங்கு எழும் கேள்வி என்னவெனில் முதலாளித்துவ நாடாளுமன்றங்கள் அதிக காலம் இருந்துள்ளனவா அல்லது சிறிது காலம் இருந்துள்ளனவா என்பதல்ல; பெருந்திரளான உழைப்பாளி மக்கள் சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், முதலாளித்துவ சனநாயக நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் (அல்லது கலைக்கப்பட அனுமதிக்கவும்) எந்த அளவுக்கு (சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும்) தயாராக இருக்கிறார்கள் என்பதே ஆகும். பல விசேச நிலைமைகளின் காரணமாக 1917, செப்டம்பர் நவம்பரில் ரஷியாவில் நகரத் தொழிலாளி வர்க்கமும், படை வீரர்களும், விவசாயிகளும் சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்வதற்கும், அதிக சனநாயகத் தன்மை வாய்ந்த முதலாளித்துவ நாடாளுமன்றங்களைக் கலைத்து விடவும் நன்கு தயார் நிலையில் இருந்தனர் என்பது கொஞ்சம் கூட மறுக்க முடியாத நூற்றுக்கு நூறு நிரூபிக்கப்பட்ட வரலாற்று உண்மையாகும். ஆயினும் போல்ஷ்விக்குகள் அரசியல் நிர்ணய சபையைப் புறக்கணிப்பு செய்யவில்லை; பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வெல்வதற்கு முன்பும் வென்ற பின்பும் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொண்டனர்'' (லெ. நூ. தி. தொகுதி 25, பக்-201 -202).

அப்படியானால் அவர்கள் ஏன் அரசியல் நிர்ணய சபையைப் புறக்கணிப்பு செய்யவில்லை? ஏனெனில், லெனின் கூறுகிறார்:

''சோவியத் குடியரசின் வெற்றிக்குச் சில வாரங்கள் முன்னதாகவும், இந்த வெற்றிக்குப் பின்னரும் கூட முதலாளித்துவ சனநாயக நாடாளுமன்றம் ஒன்றில் பங்கெடுத்துக் கொள்வதானது புரட்சிகர பாட்டாளி வர்க்கத்திற்குத் தீங்கிழைப்பதற்குப் பதிலாக இது போன்ற நாடாளுமன்றங்கள் கலைக்கப்படவேண்டியது எப்படி அவசியம் என்பதைப் பிற்பட்ட நிலையிலுள்ள பரந்துபட்ட மக்களுக்கு நிரூபிப்பதற்கு நடைமுறையில் உதவுகிறது என்பதும், இந்த நாடாளுமன்றங்கள் வெற்றிகரமாகக் கலைக்கப்படுவதற்கும் வகை செய்கிறது என்பதும், முதலாளித்துவ நாடாளுமன்ற முறையை ''அரசியல் ரீதியில் காலாவதியாக்குவதற்குத்" துணை புரிகிறது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன'' (லெ. நூ. தி. தொகுதி. 25. பக். 201-202).

ட்ராட்ஸ்கி போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் இந்தக் குறிப்பான அம்சத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்பதும், அரசியல் நிர்ணயச் சபையைச் சோவியத்துக்களுடன் இணைக்கும் ''தத்துவத்தை'' ஹில்பர்டிங்கிசமாகும் (Hilferdingism) என ஆவேசமாகக் குற்றம் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதுடன் தொடர்பு கொண்டுள்ள எழுச்சிக்கான முழக்கத்துடனும் சோவியத்துக்களின் சாத்தியப்பாடான வெற்றியுடனும் சேர்ந்துள்ள இத்தகையதொரு இணைப்பை அனுமதிப்பது தான் ஒரே புரட்சிகர செயல்தந்திரமாக இருந்தது என்பதையும், சோவியத்துக்களை அரசியல் நிர்ணய சபையின் தொங்கு சதையாக மாற்றுகின்ற ஹில்பர்டிங்கின் செயல் தந்திரங்களுடன் பொதுவாக இதற்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதையும் அவர் (ட்ராட்ஸ்கி) புரிந்து கொள்ளவில்லை. சில தோழர்கள் இந்தப் பிரச்சனையில் செய்துள்ள தவறுகள், குறிப்பான சில நிலைமைகளின் கீழ் ''ஒன்றிணைக்கப்பட்ட அரசு அதிகார வகை'' பற்றி லெனினும் கட்சியும் எடுத்த முற்றிலும் சரியான நிலையைக் குறை சொல்ல அவருக்கு எவ்விதக் காரணமும் அளிக்க வில்லை என்பதை அவர் புரிந்துகொள்ளவில்லை. (பார்க்க, லெ. நூ. தி. தொ-21, பக்-338)

போல்ஷ்விக்குகள், அரசியல் நிர்ணய சபை பற்றி இந்தத் தனிச் சிறப்பான கொள்கையை மேற்கொண்டிருக்காவிட்டால், அவர்கள் பெரும் மக்கள் திரளைத் தங்கள் பக்கம் வென்றடுப்பதில் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பதையும், அப்படி அவர்கள் மக்கள் திரளைத் தங்கள் பக்கம் வென்றெடுக்காது போயிருந்தால் அக்டோபர் புரட்சியைப் பிரபலமான மக்கள் புரட்சியாக மாற்றி யிருக்க முடியாது என்பதையும் அவர் புரிந்து கொள்ளவில்லை.

போல்ஷ்விக்குகள் தங்கள் கட்டுரைகளில் பயன்படுத்தும் ''மக்கள்'' ''புரட்சிகர சனநாயகம்'' போன்ற வார்த்தைகளை ட்ராட்ஸ்கி ஆவேசமாகக் குறை கூறுவதும், மேலும் அவ்வார்த்தை களை மார்க்சியவாதிகள் உபயோகிப்பது முறையல்ல எனக் கருது வதும் சுவாரசியமான விசயங்களாகும்.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் வெற்றிக்கு ஒரு மாதத் திற்கு முன்பு 1917 செப்டம்பரில் கூடச் சந்தேகத்துக்கிடமற்ற மார்க்சிய வாதியான லெனின் ''புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புரட்சிகரமான சனநாயகத்திற்கு அதிகாரம் முழு வதும் உடனடியாக மாற்றித் தரப்பட வேண்டிய அவசியம்''

குறித்து எழுதினார் என்பதை ட்ராட்ஸ்கி மறந்து விட்டார் என்பது தெளிவு. (காண்க, லெ. நூ. தி. தொ-21, பக் 198).

கண்டத்தில் நடைபெறும் ஒவ்வொரு உண்மையான மக்கள் புரட்சிக்கும், அதிகாரத்துவ-இராணுவ அரசு இயந்திரத்தை நொறுக்குவது முதல் நிபந்தனையாகும் என்று மார்க்ஸ் இகல் மேனுக்கு எழுதிய பிரபலமான கடிதத்தைச் (1871,ஏப்ரல்) சந்தேகத் திற்கிடமற்ற மார்க்சிய வாதியான லெனின் மேற்கோள் காட்டி எழுதியுள்ள பின்வரும் கூற்றை ட்ராட்ஸ்கி மறந்து விட்டார் என்பது தெளிவு:

> ''ஒவ்வொரு உண்மையான மக்கள் புரட்சிக்கும் அதிகாரத் துவ-ராணுவ அரசு இயந்திரத்தை அழிப்பது முன் நிபந் தனை ஆகும்'' என்ற மார்க்சின் மிக ஆழமான கூற்றுக்குக் குறிப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும். தாங்கள் மார்க்சியவாதிகளாகக் கருதப்பட வேண்டுமென விரும்பு கின்றவர்களும் ஸ்துருவேயின் சீடர்களுமான ரஷிய பிளக் கானவ் வாதிகள் மற்றும் மென்ஷ்விக்குகளுக்கு 'மக்களது' புரட்சி என்ற கருத்தோட்டம் மார்க்சிடமிருந்து வருவதே விநோதமாகத் தோன்றுகிறது; மேலும் அவர்கள் மார்க்ஸ் 'கை தவறி' இந்த வார்த்தையை எழுதியிருப்பார் என அறிவிக்கவும் செய்வார்கள். மிக மோசமான தாராள வாத திரிபுக்கு மார்க்சியத்தை உட்படுத்தி அது, முதலாளித்துவ புரட்சிக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையில் நிலவும் எதிரெதிரான கருத்தே தவிர வேறொன்றுமில்லை என்ற நிலைக்கு மார்க்சியத்தைக் குறைத்து விட்டனர்— இந்த எதிரெதிரான கருத்துக்குக் கூட மிகவும் உயிரோட்ட மில்லாத வழியில் பொருள் விளக்கமும் தருகிறார்கள்...
>
> ஐரோப்பாக் கண்டத்தில், 1871 இல் எந்தவொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் மக்களில் பெரும்பான்மையாக இருக்க வில்லை. உண்மையிலேயே இயக்கத்திற்குள் பெரும்பான்மை யான மக்களைக் கொண்டு வந்த ஒரு'மக்கள்' புரட்சியானது பாட்டாளிகள் விவசாயிகள் ஆகிய இரு சாராரையும் தழு வியதாகத் தான் இருந்திருக்க முடியும். அன்று 'மக்கள்' எனப்படுவோர் இவ்விரு வர்க்கங்களும் தான். இவ்விரு வர்க் கங்களையும் 'அதிகாரத் துவ-ராணுவ அரசு இயந்திரம்' அடக்கி, நசுக்கி, சுரண்டுகிறது என்ற உண்மையே இவை யிரண்டையும் ஒன்றிணைக்கின்றன. இந்த இயந்திரத்தை உடைத்து நொறுக்குவது என்பது உண்மையிலேயே

'மக்களில்' பெரும்பான்மையோரான தொழிலாளர்களுக்கும், பெரும்பாலான விவசாயிகளுக்கும் நன்மை பயப்பதாகும்; ஏழை விவசாயிகளுக்கும் பாட்டாளிகளுக்கும் இடையிலான ஒரு சுதந்திரமான கூட்டுக்கு இது 'முன் நிபந்தனை' ஆகும். இத்தகையதொரு கூட்டு இல்லாவிட்டால் சனநாயகம் நிலையற்றதாகும், சோசலிச மாற்றம் சாத்தியமில்லை' (தொகுதி-23, பக், 354).

லெனினது இந்த வார்த்தைகளை மறந்து விடக் கூடாது.

கட்சியின் பக்கம் லட்சக் கணக்கான உழைக்கும் மக்களை வென்றெடுப்பதற்கான மிக மிக முக்கியமான நிபந்தனை என்ற விதத்தில், புரட்சிகர நிலைகளுக்கு அவர்களைக் கொண்டு வருவதன் மூலம் அவர்கள் தங்களது சொந்த அனுபவத்தின் வாயிலாகக் கட்சி முழக்கங்களின் சரியான தன்மையை உணரும்படிச் செய்யும் திறமை தான் அக்டோபருக்கான தயாரிப்புக் கால கட்டத்தில் போல்ஷ்விக்குகளுடைய செயல் தந்திரங்களின் நான்காவது குறிப்பான அம்சமாகும்.

இந்தச் செயல் தந்திரங்களின் தனிச் சிறப்பான அம்சங்களைப் பற்றி ஒரு தெளிவான கருத்தைப் பெறுவதற்கு நான் சொல்லியிருப்பவை முற்றிலும் போதுமானவையாகும் என நினைக்கிறேன்.

# பின்னுரை

முன்னுள்ள வரிகளை ஏற்கனவே எழுதி முடித்த பிறகு அக்டோபர் முதல் தேதி நோவயா ழீஸ்ன் மற்றொரு மணியான முட்டாள் தனத்தைத் தலையங்கக் கட்டுரையில் வெளியிட்டிருந்தது. போல்ஷெவிக்குகளிடம் அனுதாபம் காட்டுவது போன்று வேடம் தாங்கியும், 'உங்களைத் தூண்டி விடுவதற்கு இடங்கொடாதீர்கள்' (தூண்டுதலைப் பற்றிய கூக்குரல் என்ற பொறியில் நாம் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்க வேண்டும். அதன் நோக்கம் போல்ஷெவிக்குகளைப் பீதியடையச்செய்து அவர்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளாமலிருக்கும்படிச் செய்வதுதான்) என்ற மதியூகி அற்பவாத எச்சரிப்புரை வழங்கியும் வருவதினால் அது இன்னும் ஆபத்தானதாகும்.

அந்த மணிவாசகம் பின்வருமாறு:

''இயக்கம் அளித்துள்ள பாடங்கள், ஜூலை 3-5 இன் பாடங்களைப் போன்றவை ஒரு புறமும், கர்னீலவ் நாட்களின் அனுபவங்கள் மற்றொரு புறமாக நமக்கு மிகத் தெளிவாகக் காட்டுவது என்னவெனில் மக்களிடையே மிகுந்த செல்வாக்கையுடைய நிறுவனங்களைத் தன் ஆணையின் கீழ் வைத்துக்கொண்டுள்ள சனநாயகம், உள்நாட்டுப் போரில், தற்காப்பு நிலையில் இருக்குமானால், தோற்கடிப்பதற்கு முடியாத வன்மையுடன் விளங்குகிறது. ஆனால், அது தாக்குதலைத் தொடங்கி நடத்த முற்படுமானால், நடுவேயுள்ள ஊசலாடும் பகுதியினரையெல்லாம் இழந்து தோல்வியடைகிறது.''

இந்த வாதத்தில் வெளியிடப்படும் அற்பவாத முட்டாள்தனத்துக்கு மிகச் சிறிதளவேனும், எந்த உருவிலாவது போல்ஷெவிக்குகள் இணங்கிவிடுவாராயின், அவர்கள் தங்கள் கட்சியையும் புரட்சியையும் அழிவுக்கு ஆளாக்குவார்கள்.

இந்த வாதத்தைக் கூறும் ஆசிரியர் உள்நாட்டுப் போரைப் பற்றிப் பேசும் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு (எல்லாவிதத்

திலும் இனிய சுபாவம் படைத்த சீமாட்டிக்கு லாயக்கான விஷயம் இதுதான்) நம்புவதற்கு முடியாத வேடிக்கையான விதத்தில் இப்பிரச்சினை பற்றி வரலாறு கற்பிக்கும் பாடங்களைத் திரித்துக் கூறியுள்ளார்.

பாட்டாளி வர்க்கப் புரட்சியினது செயல் தந்திரங்களின் பிரதிநிதியும், நிறுவனருமாகிய கார்ல்மார்க்ஸ், இந்தப் பாடங்களை, இந்தப் பிரச்சினை பற்றி வரலாறு கற்பிக்கும் பாடங்களைப் பின்வருமாறு தொகுத்துரைத்தார்:

''எழுச்சியும் போரும் மற்ற கலைகளைப் போலவே ஒரு கலையாகும். அது சிற்சில செயல்முறை விதிகளுக்கு உட்பட்டதாகும். அவ்விதிகளைப் புறக்கணித்தால் அப்படிப் புறக்கணிக்கும் கட்சிக்குச் சீரழிவுதான் ஏற்படும். கட்சிகளின் இயல்பையும், இத்தகைய விஷயத்தில் எதிர்ப்படுகிற நிலைமைகளையும் ஒட்டி எழுகின்ற தர்க்க ரீதியான அனுமானங்களாகிய இந்த விதிகள் மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் இருப்பதனால் 1848இல் கிடைத்த குறுகிய அனுபவத்தைக்கொண்டு ஜெர்மானியர்கள் அவற்றை நன்கறிந்துகொண்டார்கள். முதலாவது, முடிவு வரை செல்வதற்கு (நேர்பொருள்: உங்களது விளையாட்டின் விளைவுகளை எதிர்கொள்வதற்கு)* திடச்சித்தம் இல்லாத நிலையில், எழுச்சி விசயத்தோடு ஒரு பொழுதும் விளையாடாதீர்கள். எழுச்சியானது, நிச்சயமற்ற பரிமாணங்களைக் கொண்ட சமன்பாடாகும்; அந்தப் பரிமாணங்களின் மதிப்பு ஒவ்வொரு நாளும் மாறிக் கொண்டிருக்கக்கூடும். உங்களை எதிர்த்து நிற்கும் சக்திகளிடம் நிறுவனம், கட்டுப்பாடு, வழக்கமாகச் செலுத்தும் செல்வாக்கு முதலிய சகல அனுகூலங்களும் இருக்கின்றன'' (எழுச்சியின் மிகக் கடினமான உதாரணத்தை மனத்தில் கொண்டு மார்க்ஸ் கூறுகிறார்: அதாவது, ''உறுதியாக நிலைத்துள்ள'' பழைய அதிகாரத்தை எதிர்த்து, புரட்சியின் செல்வாக்காலும், அரசாங்கத்தின்* ஊசலாட்டத்தாலும் இன்னும் உடைந்து சரிந்து போகாமலிருக்கிற படையை எதிர்த்துச் செய்யப்படும் எழுச்சி பற்றிக் கூறுகிறார்:) ''பகைவர்களுக்கெதிராக மிகுந்த படைபலம் திரட்டாவிட்டால் எழுச்சியாளர்களுக்குத் தோல்வியும் சீரழிவும் நிச்சயமே. இரண்டாவது, எழுச்சியைத் தொடங்கிவிட்ட பிறகு மிகுந்த மனத்திண்மையுடன் செயல் புரிய வேண்டும். மேலேறித் தாக்கியபடியே இருக்க வேண்டும். தற்காப்பில் இருந்து கொள்வது ஒவ்வொரு ஆயுதந்தாங்கிய எழுச்சிக்குச் சாவாகத்தான் முடியும்;

* பிறைக்கோட்டுக்குள் உள்ளவை லெனின் எழுதியவை.

எதிரிகளுடன் பலப்பரீட்சை சிதறுண்டு வருகையில், எதிர்பாராத விதத்தில் பகைவரைத் தாக்க வேண்டும். தினந்தோறும் புதிய புதிய வெற்றிகளை, அவை சிறியவையாயிருந்தாலும் பரவாயில்லை, ஈட்டிக் கொண்டிருக்கவேண்டும். எழுச்சியில் ஏற்பட்ட முதல் வெற்றியால் கிடைத்த ஊக்கத்தின் ஏற்றத்தை இடைவிடாது காப்பாற்ற வேண்டும். அதிகம் பலம் வாய்ந்தவர்களை எப்பொழுதும் பின்பற்றுகிற, மிகப் பத்திரமான தரப்பு எது என்று எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிற, ஊசலாட்டமுள்ள பகுதியினரை இவ்வாறு உங்கள் பக்கம் இழுத்துத் திரட்டிக் கொள்ள வேண்டும்; பகைவர்கள் உங்களுக்கு எதிராகத் தங்களுடைய படை பலத்தைச் சேகரித்துத் திரட்டிக்கொள்வதற்குமுன், அவர்களைப் பின்வாங்குப்படிச் செய்ய வேண்டும். புரட்சி உத்திகளில் இதுவரை நாமறிந்தவர்களில் தலைசிறந்த நிபுணரான தன்தோன் கூறுவதாவது: துணிச்சல், துணிச்சல், மேலும்,மேலும் துணிச்சல்! (ஜெர்மனியில் புரட்சியும், எதிர்ப்புரட்சியும், ஜெர்மன் பதிப்பு, 1907, பக்கம் 118).

நோவயா ழீஸ்னைச் சேர்ந்த ''மார்க்சீயர்கள் ஆகப் போகிறவர்கள்'' என்போர் தங்களைப் பற்றி இவ்வாறு சொல்லலாம்: நாங்கள் அதையெல்லாம் மாற்றிவிட்டோம்; மும்மடங்கு துணிச்சலுக்குப் பதில் எங்களிடம் இரண்டு பண்புகள் உள்ளன: 'இரண்டு பண்புகள் ஐயா! நிதானம், ஒழுங்கு-கறார், உலக வரலாற்றின் அனுபவமும் மகத்தான பிரெஞ்சுப் புரட்சியின் அனுபவமும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. 'எங்களுக்கு' முக்கியமாயிருக்கும் விஷயம் மொல்ச்சாலின் மூக்குக் கண்ணாடியின் மூலம் திரிபுற்றுத் தெரியும் 1917 ஆம் வருடத்து இரண்டு இயக்கங்களின் அனுபவம்தான்.''

இந்த அழகிய மூக்குக் கண்ணாடி இல்லாமல் இவ்வனுபவத்தை நாம் பரிசீலனை செய்து பார்ப்போம்.

ஜூலை 3-4 நாளைய நிகழ்ச்சிகளை ''உள்நாட்டுப் போருடன்'' நீங்கள் ஒப்பிடுகின்றீர்கள்; ஏனென்றால் அலேக்ஸின்ஸ்கி, பெரிவேர்செவ் ஆகியோரையும் அவர்கள் கூட்டத்தாரையும் நீங்கள் நம்பினீர்கள். இத்தகைய மக்களை நம்புவதும் (ஒரு பெரிய நாளிதழ் சாதனம் அனைத்தும் தங்களுக்கிருந்த போதிலும், ஜூலை 3-5 தேதிய நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல் சேகரிக்கத் தாங்களாக எதுவுமே செய்யாதிருப்பதும்) நோவயா ழீஸ்ன் கனவான்களுக்குரிய தனிப்பண்பாகும்.

ஜூலை 3-5 தேதிய நிகழ்ச்சிகள் உள்நாட்டுப் போரின் தொடக்க நிலை அல்லவென்றும், போல்ஷெவிக்குகள்தான் அதைத்

தொடக்க நிலைக்குள் அடக்கி வந்திருந்தார்கள் என்றும், உண்மையில் அது உள்நாட்டுப்போரே என்றும் ஒரு நொடிக்கு வைத்துக் கொள்வோம். அப்படியே வைத்துக் கொண்டு பார்ப்போம்.

அவ்வாறாயின், இந்தப் பாடம் எதை மெய்ப்பித்துக் காட்டுகிறது?

முதலாவது, போல்ஷெவிக்குகள் தாக்குதலில் இறங்கவில்லை. ஏனெனில், ஜூலை (3ம் தேதி இரவிலும், ஜூலை 4ம் தேதியிலும் அவர்கள் தாக்குதலில் இறங்கியிருந்தால் பெருமளவிற்கு வெற்றி கண்டிருப்பார்கள் என்பது வாதத்திற்கிடமற்ற விசயமாகும். உள்நாட்டுப் போர் பற்றி (உண்மை விவரங்கள் காட்டுவதுபோல் தானாகத்தோன்றிய வெடிப்பை ஏப்ரல் 20-21ஆம் தேதியதுபோன்ற ஆர்ப்பாட்டமாக மாற்றுவதைக் குறித்துப் பேசாமல், நோவயா ழீஸ்ன் பேசுவது போல) நாம் பேசுவதானால் போல்ஷெவிக்குகள் மேற்கொண்ட தற்காப்பு நிலைதான் அவர்களின் பலவீனமாயிருந்தது.

ஆகவே, நோவயா ழீஸ்ன் மதியூகிகள் கூறுவது தவறு என்று இந்தப் ''பாடம்'' நிரூபிக்கிறது.

இரண்டாவதாக, ஜூலை 3-4இல் போல்ஷெவிக்குகள் எழுச்சி தொடங்குவதை நோக்கமாகவே கொள்ளவில்லை என்றால், போல்ஷெவிக்குகளின் ஒருபிரிவுகூட அப்படிப்பட்டபிரச்சினைகளைக் கிளப்பவேயில்லையென்றால், அதற்குரிய காரணம், நோவயா ழீஸ்னுக்கும் நமக்குமுள்ள வாதத்திற்கு அப்பாற்பட்டது. ஏனெனில் நாம் இப்போது ''உள்நாட்டுப் போரின்'' அதாவது எழுச்சியின் பாடங்கள் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோமே தவிர, எழுச்சிக்குப் பெரும்பான்மையானவர்களின் ஆதரவு இல்லையென்பது வெளிப்படையாக இருந்தமையால், புரட்சி கட்சி எழுச்சி பற்றிய சிந்தனையில் இறங்காமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டதைப் பற்றியல்ல.

தலைநகரத்திலுள்ள சோவியத்துக்களிலும், நாட்டுப் புறத்திலுள்ள சோவியத்துக்களிலும் (மாஸ்கோவில் 49 விழுக்காடு வாக்குகளுக்கு அதிகமாகவே) 1917 ஜூலைக்கு மிகவும் பின்னாலே தான் போல்ஷெவிக்குகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றனர் என்பதை ஒவ்வொருவரும் அறிந்துள்ளனர். ஆகவே ''பாடங்கள்'' எல்லா விதத்திலும் இனிய சுபாவம் படைத்த சீமாட்டி நோவயா

மீஸ்ன் விரும்புவதற்கு மிகமிக மாறுபட்டவையாகவே இருக்கின்றன என்பது இதிலிருந்து தெரிகிறது.

வேண்டாம், வேண்டாம், நோவயா மீஸ்ன் கனவான்களே! நீங்கள் அரசியல் விஷயங்களில் தலையிடாமல் இருப்பதே நல்லது!

புரட்சிகரமான வர்க்கங்களின் முன்னணிப் படைகளிலும் நாட்டிலும் புரட்சிக் கட்சிக்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு இல்லையென்றால் எழுச்சியைப் பற்றிய பேச்சுக்கிடமில்லை. தவிரவும் எழுச்சிக்குத் தேவையாயிருப்பன. 1. நாடெங்கும் பரவிய அளவில் புரட்சியின் வளர்ச்சி; 2. தார்மிக மற்றும் அரசியல் விஷயத்தில் பழைய அரசாங்கத்தின், உதாரணமாக "கூட்டணி" அரசாங்கத்தின், பூரணமான சீரழிவு; 3. நடுத்தர பகுதியினரின்- அதாவது நேற்றைய தினம் அரசாங்கத்தைப் பூரணமாக ஆதரித்து வந்து இன்று முழு ஆதரவு காட்டாமல் இருப்பவர்களின்-முகாமிலே கடுமையான ஊசலாட்டம்.

ஜூலை 3-5 தேதிய நிகழ்ச்சிகளின் "பாடங்கள்" பற்றிப் பேசுகையில் நோவயா மீஸ்ன் இந்த மிக முக்கியமான பாடத்தைக் கவனிக்கக்கூடத் தவறிவிட்டது ஏன்? ஏனெனில் ஓர் அரசியல் பிரச்சினையை அரசியல்வாதிகள், அல்ல, முதலாளி வர்க்கத்தைக் கண்டு பீதியடைந்து நிற்கும் படித்தவர்களின் குழு எடுத்துக் கொண்டது.

மேலே செல்வோம். மூன்றாவதாக, தெஸெரெத்தேலி போன்ற கனவான்கள் தங்களுடைய ஜூலைக் கொள்கையின் மூலமாகத் தங்களை அம்பலப்படுத்திக் கொண்ட காரணத்தால் தான், போல்ஷெவிக்குகளே தங்களுடைய சொந்த முன்னணி வீரர்கள் என்றும், 'சமூக—கூட்டணிவாதிகள்' துரோகிகள் என்றும் மக்கள்திரள் கண்டறிந்ததின் காரணத்தால்தான்,ஜூலை 3-4தேதிக்குப் பிறகே சோசலிஸ்ட் புரட்சியாளர்கள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் சீர்குலைவு தொடங்கியது என்று உண்மை விவரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே கர்னீலவ் கலகத்திற்கு முன்பே ஆகஸ்ட் 20இல் நடந்த பெத்ரோகிராத் தேர்தலில் இச்சீர்குலைவு பூரணமாக மெய்ப்பிக்கப்பட்டது. அதில் போல்ஷெவிக்குகள் வெற்றி கண்டனர். "சமூகக் கூட்டணிவாதிகள்" தோற்றனர் (அண்மையில் தியேலோ நரோதா எல்லாக் கட்சிகளுக்கும் கிடைத்த வாக்கு விவரங்களை மறைத்து விட்டு இதனை மறுக்க முயன்றது. ஆனால், இது தன்னையே ஏமாற்றிக் கொள்வதும், தன்னுடைய வாசகர்களை ஏமாற்றுவதுமாகும். ஆகஸ்ட் 24 தேதியிட்ட டேன் என்னும்

பத்திரிகையில் கண்ட கணக்கு விவரப்படி நகரில் மட்டும் போட்ட மொத்த வாக்குகளில் காடேட்டுகளுக்குக் கிடைத்த பங்கு 22 விழுக்காடாக இருந்தது-23 விழுக்காடாக உயர்ந்தது; ஆனால், அவர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 40 விழுக்காடு குறைந்துவிட்டது. மொத்த வாக்குகளில் போல்ஷெவிக்குகளுக்குக் கிடைத்த பங்கு 20 விழுக்காடாகியிருந்தது-33விழுக்காடாக உயர்ந்தது. ஆனால் அவர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் குறைவு 10 விழுக்காடே. எல்லா "நடுத்தரக்காரர்களுக்கும்" கிடைத்த பங்கு 58 விழுக்காடாயிருந்தது-44 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. ஆனால், அவர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 60 விழுக்காடாகக் குறைந்தது.)

ஜூலை நாட்களுக்குப் பிறகும், கர்னிலவ் கலகத்துக்கு முன்பும் ஏற்பட்ட சோசலிஸ்ட் புரட்சியாளர்கள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் சீர்குலைவு, அவ்விரு கட்சிகளிலும் "இடதுசாரி"ப் பிரிவின் வளர்ச்சியினாலும் மெய்ப்பிக்கப்படுகிறது. இந்தப் பிரிவு கிட்டத்தட்ட 40 விழுக்காட்டை எட்டியிருக்கிறது. கெரென்ஸ்கி போன்ற கனவான்கள் போல்ஷெவிக்குகளை அடக்குமுறை வேட்டையாடியதற்கு இது "பழிக்குப்பழி" யாகும்.

ஒரு சில நூறு உறுப்பினர்களை "இழந்துவிட்ட" போதிலும் ஜூலை 3-4 தேதிய நிகழ்ச்சிகளிலிருந்து பாட்டாளி வர்க்கக் கட்சி பிரம்மாண்டமான அளவுக்கு ஆதாயமடைந்தது. ஏனெனில் இந்தக் கடுமையான நாட்களில்தான் இக்கட்சியின் விசுவாசத்தையும், சோசலிஸ்ட்-புரட்சியாளர்கள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் துரோகத்தையும், மக்கள் திரள் பார்த்தறிந்து கொண்டது. ஆகவே, "பாடம்" ஒரு சிறிதுகூட நோவ்யா ழீஸ்ன் கூறுகிற "பாடம்" அல்ல, அடியோடு மாறுபட்ட பாடம் அது. அதாவது; கொந்தளித்துக் கொண்டிருக்கும் மக்கள் திரளைச் "சனநாயகத்தின் மொல்சாலின்களுக்காகக்" கைவிட்டுவிடாதீர்கள்; மேலும்; எழுச்சியைத் தொடங்கிவிட்டால், எதிரிப்படைகள் சிதறிக் கிடக்கையில் ஏறித்தாக்குங்கள், எதிர்பாராதிருக்கையில் எதிரியைத் தாக்குங்கள், என்பதே.

"மார்க்சியர்கள் ஆகப் போகிறவர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் நோவயா ழீஸ்ன் கனவான்களே, விஷயம் அப்படித் தானே?

அல்லது, "மார்க்சியம்" என்பதின் அர்த்தம், எதார்த்த நிலைமையைச் சரியாகச் சீர்தூக்கியறிந்து அதன் அடிப்படையில்

செயல்தந்திரங்களை வகுப்பது அன்று. ஆனால் மதிகெட்ட ரீதியிலே ஆய்ந்து பாராமல் ''அரசியல் நிர்ணய சபையைக் கூட்டும் அதே காலத்தில் சோவியத்துக்களின் மாநாடு'' என்பதோடு ''உள்நாட்டுப்போர்'' என்பதையும் போட்டுக் குழப்புவதுதானா?

கனவான்களே! இது வெறும் கேலிக் கூத்தாகும். இது மார்க்சியத்தையும் பொதுவாகத் தர்க்கவியலையும் நையாண்டி செய்வதாக இருக்கின்றது!

''உள்நாட்டுப் போர்'' என்ற அளவிற்கு வர்க்கப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்குப் புறவய நிலைமையிலே காரணம் எதுவும் கிடையாது என்றால், ''சோவியத்துக்களின் மாநாடு, அரசியல் நிர்ணய சபை ஆகியவை'' சம்பந்தமாக நீங்கள் ஏன் ''உள்நாட்டுப் போரைப்'' பற்றிப் பேச வேண்டும்? (நாம் இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கும் நோவயா ழீஸ்ன் தலையங்கக் கட்டுரையின் தலைப்பு இதுதான்) அப்படிப் பேசுவதானால், புறவய நிலைமையிலே உள்நாட்டுப் போருக்குரிய அடிப்படை ஒன்றும் இல்லை. ஆகவே, சோவியத்துக்களின் மாநாடு அரசியல் நிர்ணயசபை போன்ற அமைதியான, அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட, சட்டம், நாடாளுமன்ற நடவடிக்கை ஆகியவற்றின் கோணத்திலிருந்து பார்க்கும்போது ''சாதாரணமானவையாகத்'' தோன்றுகிற விசயங்களையே செயல்தந்திரங்களுக்கு அச்சாணியாக வைத்துக்கொள்ள முடியும். வைத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் தெளிவாக வாசகருக்குத் தெரிவித்து அதை நிருபித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அப்படிப்பட்ட மாநாடும், அப்படிப்பட்ட சபையும் உண்மையில் தீர்மானித்து முடிவு கட்டுவதற்குச் சக்தியுள்ளவை தான் என்று அபிப்பிராயம் கொள்வது சாத்தியமே.

ஆனால், இப்பொழுதுள்ள புறவய நிலைமையில் உள்நாட்டுப் போர் தவிர்க்கமுடியாதது, அல்லது அநேகமாய் ஏற்படலாம் என்றிருக்குமாயின், நீங்கள் அதைப்பற்றி ''வீணாய்ப்'' பேசவில்லையென்றால், உள்நாட்டுப் போருக்கான ஒரு நிலைமை இருப்பதைத் தெளிவாகப் பார்த்து, உணர்ந்து, அறிந்துதான் பேசியிருக்கிறீர்கள் என்றால், சோவியத்துக்களின் மாநாட்டையோ, அல்லது அரசியல் நிர்ணய சபையையோ எவ்வாறு நீங்கள் அச்சாணியாக வைத்துக் கொள்ள முடிந்தது? பசியால் வாடிக்கொண்டிருக்கும், வதைபட்டுக் கொண்டிருக்கும் மக்கள் திரளை ஏளனம் செய்வதாகும் இது! இரண்டு மாத காலம் ''காத்திருக்கப்'' பட்டினியால் தவிக்கும் மக்கள் சம்மதிப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது

எந்தப் பொருளாதாரச் சீரழிவு அதிகரித்து வருவதாக நீங்களே நாள் தவறாமல் எழுதியவாறு இருக்கிறீர்களோ, அந்தப் பொருளாதாரச் சீரழிவு சோவியத்துக்களின் மாநாட்டுக்காக அல்லது அரசியல் நிர்ணய சபைக்காகக் "காத்திருக்கச்" சம்மதிக்குமா? அல்லது சமாதானத்துக்காகக் காரியப் பற்றுள்ள நடவடிக்கைகளை நாம் எடுக்காமல் விட்டநிலையிலே (போரில் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளுக்கும் நியாயமான சமாதானம் பற்றிய அதிகாரபூர்வமான பிரேரணை வழங்காத நிலையிலே) ஜெர்மானியத் தாக்குதல் சோவியத்துக்களின் மாநாட்டுக்கும், அரசியல் நிர்ணயச் சபைக்கும் "காத்திருக்கச்" சம்மதிக்குமா? அல்லது, பிப்ரவரி 28 லிருந்து செப்டம்பர் 30 வரை மிகுந்த கொந்தளிப்போடும் என்றும் காணாத வேகத்தோடும் நடந்து முன்னேறிய ருஷ்யப் புரட்சியின் வரலாறு அக்டோபர் முதல் தேதியிலிருந்து நவம்பர் 29 வரை அதி நிம்மதியான, அமைதியான, சட்டபூர்வமான நடைபோட்டுச் செல்லும் என்றும், வெடிப்புகள், திடீர்ப் பாய்ச்சல்கள், ராணுவத் தோல்விகள், பொருளாதார நெருக்கடிகள் அனைத்தையும் அது தவிர்க்கும் என்றும் நீங்கள் முடிவுகட்டுவதற்கு இடந்தரக்கூடிய உண்மை விவரங்கள் உங்களிடம் இருக்கின்றனவா? அல்லது, போல்ஷெவிக் கட்சியைச் சேராத துபாஸவ் என்ற அதிகாரி போர்முனையிலுள்ள இராணுவத்தின் சார்பாக அது "சண்டை செய்யாது" என்று அதிகார பூர்வமாகத் தெரிவித்திருக்கிற போர் முனையிலுள்ள அந்தச் சேனை, "குறித்த" நாள்வரை பட்டினியாக, குளிரில் உறைந்தபடி பொறுமையுடன் கிடக்குமா? அல்லது நீங்கள் விவசாயிகளின் எழுச்சியை "அராஜகம்" என்றும், "இனக்கொலை" என்றும் சொல்லிவிட்டபடியாலோ, உழவர்களுக்கு எதிராக கேரென்ஸ்கி ராணுவப் படைகளை அனுப்பிவைப்பார் என்பதனாலோ அது உள்நாட்டுப் போரின் ஓர் அம்சமாக இருந்து வருவது நிற்குமா? அல்லது உழவர்கள் மிகுந்துள்ள ஒரு நாட்டில் விவசாயிகளின் எழுச்சியை நசுக்கிவரும் அதே அரசாங்கம் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கு அமைதியாக, நேர்மையாக, பாசாங்கு இல்லாமல் வேலை செய்ய முடியும் என்பது சாத்தியமா? நினைக்கத்தான் முடியுமா?

கனவான்களே, "ஸ்மோல்னி கல்லூரியில் நேர்ந்த குழப்பத்தைக்" கண்டு சிரிக்க வேண்டாம்! உங்கள் அணிகளிலும், குழப்பத்திற்குக் குறைவில்லை, உள்நாட்டுப் போர் கிளத்துகிற பயமுறுத்தும் கேள்விகளுக்கு நீங்கள் குழப்பம் மிகுந்த சொற்களைக் கொண்டும்,

இரங்கத்தக்க அரசியல் சட்டப் பிரமைகளைக் கொண்டும் விடையளிக்கிறீர்கள். அதனால்தான், போல்ஷெவிக்குகள், இவ்வித மனோநிலைகளுக்கு இடங் கொடுப்பார்களானால் அவர்கள் தங்கள் கட்சியையும் தங்கள் புரட்சியையும் அழிப்பார்கள் என்று சொல்கிறேன்.

நி. லெனின்.
நூல் திரட்டு, தொகுதி 34
பக்கங்கள் 287—339.

அக்டோபர் 1, 1917
1917 செப்டம்பரில் முடிவு—
அக்டோபர் 1 (14)ல் எழுதப்பட்டது
1917, அக்டோபரில் புரோஸ்வெஷேன்யே
இதழில் 1-2-ல் வெளியிடப்பட்டது.

# 5

# மார்க்ஸின் மேற்கோள்

## அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரையின் முன்னுரையிலிருந்து

என்னை வாட்டிய ஐயங்களைப் போக்கிக் கொள்வதற்காக நான் செய்த முதல் ஆராய்ச்சி சட்டம் பற்றிய ஹெகலின் தத்துவத்தை விமர்சன ரீதியாக (மறுபரிசீலனை) மீளாய்வு செய்ததாகும்...... சட்ட உறவுகளையோ அல்லது அரசியல் வடிவங்களையோ, தனித்தனியாகவோ அல்லது மனித அறிவின் பொதுவான வளர்ச்சிப் போக்கு என்று சொல்லப்படுகிற அடிப்படையைக் கொண்டோ புரிந்து கொள்ள முடியாது; அதற்கு மாறாக அவை வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளில் பிறக்கின்றன; இவற்றின் முழுத் தொகுதியையே ஹெகல், பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கில, பிரெஞ்சுத் தத்துவ ஞானிகளின் உதாரணத்தைப் பின்பற்றி ''சிவில் சமூகம்'' (Civil Society) என்ற சொற்களில் அடைக்கிறார்; எனினும் இந்தச் சிவில் சமூகத்தின் உள்ளமைப்பை அரசியல் பொருளாதாரத்தில் தேடவேண்டும் — என்னுடைய ஆராய்ச்சியின் பயனாக மேற்கூறிய முடிவுகளுக்கு வந்தேன். பாரிசில் இந்த ஆராய்ச்சியைத் தொடங்கினேன். ஆனால் திரு கிஸோ என்னைப் பிரான்சில் இருந்து வெளியேற்ற உத்தரவிட்டபடியால் இந்த ஆராய்ச்சியைப் பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் தொடர்ந்து செய்தேன். இதன் மூலம் நான் உருவாக்கிய பொதுவான முடிவை — இந்த முடிவுக்கு வந்தவுடன் அதுவே என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டும் கொள்கையாக மாறியது— பின் வருமாறு சுருக்கிச் சொல்லலாம். மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும். அதாவது அவர்களுடைய

உற்பத்தியின் பொருளாயத சக்திகளின் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும். இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டு மொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டடம் எழுப்பப்பட்டு அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது. மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்தி சக்திகள் அன்றைக்கிருந்த உற்பத்தி உறவுகளோடு — அல்லது அவற்றைச் சட்டபூர்வமான சொற்களில் வெளிப்படுத்துகிற சொத்துரிமை உறவுகளோடு — இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திசக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறி விடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டம் முழுவதையுமே விரைந்தோ அல்லது சற்றுத் தாமதமாகவோ மாற்றியமைக்கின்றன. இப்படிப்பட்ட மாற்றங்களை ஆராய்கின்ற பொழுது, உற்பத்தியின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகிற பொருள் வகை மாற்றங்களுக்கும் (இயற்கை அறிவியலைப் போல இதைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியும்) சட்டம், அரசியல், சமயம், கலைத்துறை அல்லது தத்துவ அறிவுத் துறைகளில்—சுருக்கமாகச் சொல்வதென்றால் சித்தாந்தத் துறைகளில்—இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக்காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறுபாட்டைக் காண்பது எப்போதும் அவசியமாகும். ஒரு தனியாள் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி முடிவு செய்வதில்லை. அதுபோலவே இப்படி மாறிக் கொண்டிருக்கும் காலகட்டத்தை அதன் உணர்வைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. அதற்கு மாறாக, இந்த உணர்வைப் பொருளாயத வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாக, உற்பத்தியின் சமூக சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தின் மூலமாகவே விளக்க முடியும். எந்தச் சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்திச் சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை;

புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்று வட்டத் துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. எனவே, மனித குலம் தன்னால் சாதிக்கக் கூடிய கடமைகளையே தனக்குத் தவிர்க்க முடியாதபடி விதித்துக் கொள்கிறது. ஏனென்றால் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் முன்பே இடம் பெற்ற பிறகு அல்லது குறைந்தபட்சம் உருவாகிக் கொண்டிருக்கும்பொழுதுதான் அந்தப் பிரச்சினையே தோன்றுகிறது என்பது அதிக நுணுக்கமாக ஆராயும் பொழுது புலப்படும். விரிவான உருவரையில் ஆசிய, பண்டைக்கால, நிலவுடைமை, நவீன முதலாளிய உற்பத்தி முறை களைச் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்தைக் குறிக்கும் சகாப்தங்கள் என்று குறிப்பிடலாம். முதலாளிய உற்பத்தி முறைதான் உற்பத்திமுறையின் சமூக நிகழ்வில் இறுதி முரணியல் வடிவம்—முரணியல் என்பது தனிப்பட்ட முரணியல் என்ற பொருளில் அல்ல, தனியாட்களின் வாழ்வாதாரங்களின் சமூக நிலைமைகளிலிருந்து தோன்றும் முரணியிலே; ஆனால் முதலாளிய சமூகத்தின் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச்சக்திகள இந்த முரணைத் தீர்ப்பதற்குரிய பொருளாயத நிலைமைகளையும் உருவாக்குகின்றன. எனவே இந்தச் சமூக அமைப்போடு மனித சமூகத்தின் வரலாற்றுக்கு முந்திய காலம் முடிவடைகிறது.

**காரல் மார்க்ஸ்**

(அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை 1982, முன்னேற்றப் பதிப்பகம், பக். 9-11.)

# 6

## கோனிக்ஸ்பெர்கிலிருந்த ‘ஜோசப் பிளாச்’சுக்கு

## (To Joseph Bloch in Konigsberg)

**இலண்டன், செப்டம்பர் 21(-22), 1890**

---

**—ஏங்கெல்ஸ்**

...வரலாற்றைப் பொருள்முதலியல் கருத்தினடிப்படையில் ஆராய்ந்தால் வரலாற்றில் **அறுதியாகத்** தீர்மானிக்கும் காரணி எதார்த்த வாழ்க்கையின் உற்பத்தியும் மறு உற்பத்தியுமே ஆகும். மார்க்சோ அல்லது நானோ இதற்கு மேல் எதையும் உறுதிப் படுத்திக் கூறவே இல்லை. எனவே யாராவது இதைத் திரித்துப் பொருளியல் காரணி **மட்டும்தான்** தீர்மானிக்கும் சக்தி என்றால்) அவர் இந்தக் கூற்றைப் பொருளற்ற, கருத்தியலான (சூட்சுமமான, முட்டாள்தனமான சொற்கூட்டாக மாற்றுகிறார். பொருளியல் நிலைமை அடித்தளமாகும். ஆனால் வர்க்கப் போராட்டத்தின் அரசியல் வடிவங்களும் முடிவுகளும், வெற்றிகரமான சண்டைக்குப் பிறகு வெற்றிபெற்ற வர்க்கத்தால் நிறுவப்பட்ட அரசியலமைப்புகள் போன்றவையும், நீதி அமைப்பு வடிவங்களும், குறிப்பாக பங்கேற்பவர்களின் மூளைகளில் இந்த எல்லா எதார்த்தப் போராட்டங்களின் எதிரொலிப்புகளும், அரசியல், சட்ட, தத்துவார்த்தக் கொள்கைககளும், சமயப் பார்வைகளும், சித்தாந்த ஏற்பாடுகளில் மேற்கொண்டு அவற்றின் வளர்ச்சியும்—போன்ற மேற்கட்டுமானத்திலுள்ள பல்வேறு கூறுகளும் கூட வரலாற்றுப் போராட்டங்களின் போக்கின்மேல் தங்கள் செல்வாக்கைச் செலுத்து

கின்றன; பல நிலைமைகளில் குறிப்பாக அவைகளின் வடிவத்தைத் தீர்மானிக்கின்றன. இந்த எல்லாக் கூறுகளும் ஒன்றுடன் மற்றது இடைவினைப் புரிகின்றன; இந்த இடைவினையிலும், முடிவற்ற பெருந்திரளான விபத்துக்களிலும் (அதாவது பொருள்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இடையிலான இடைவினை நிலவவில்லை என்று சொல்லுமளவுக்கோ புறக்கணிக்கும் அளவுக்கோ அவை தொடர்பில்லாதபடியும் நிரூபிக்க முடியாதபடியும் உள்ளன) பொருளாதார இயக்கம் முடிவில் அதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் உள்ளது. மற்றபடி இக்கொள்கையை வரலாற்றின் எந்தவொரு காலப்பகுதிக்கும் பயன்படுத்துவது (பிரயோகிப்பது) ஒரு முதல்நிலை (First degree) எளிய சமன்பாட்டுக்குத் தீர்வு காண்பதை விட எளிதாகும்.

நமது வரலாற்றை நாமே உருவாக்குகிறோம். ஆனால் முதலாவதாக, மிகவும் வரையறுக்கப்பட்ட முரண் வரலாறு மற்றும் நிலைமைகளின் கீழ்தான் அவ்வாறு உருவாக்குகிறோம். இவற்றுள் பொருளாதார விசயங்கள் அறுதித் தீர்மானகரமானவையாகும். ஆனால் அரசியல் போன்ற பிறவும் உணமையில் மானுட மனங்களைப் பற்றி நிற்கும் மரபுகள் போன்றவையும் கூட தீர்மானகரமானதில்லா விட்டாலும் கூட ஒரு பாத்திரம் வகிக்கின்றன. பிரஷ்யன் அரசும் கூட வரலாற்றுக் காரணங்களிலிருந்தும் இறுதியில் பொருளியல் காரணங்களிலிருந்தும் தோன்றி வளர்ந்ததேயாகும். ஆனால், பொருளாதாரத் தேவையாலும் மற்ற காரணிகளாலும், பொருளாதார, மொழியியல் வேறுபாடுகளும் மற்றும் சீர்திருத்தத்திற்குப் பிறகு வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான சமய வேறுபாடுகளும் கொண்ட மாபெரும் சக்தியாக வடஜெர்மனியைச் சேர்ந்த பல சிறிய அரசுகளுக்குள்ளும் கூட' பிரான்டென்பர்க்தான் அமைய வேண்டியதாயிற்று என்பதைக் கல்விச் செருக்கின்றி அரிதாகவே நிலைநாட்ட முடியும். (மற்ற காரணிகளுள் எல்லாவற்றுக்கும் மேலாக அதற்குப் போலந்துடனான சிக்கலும் பிரஷ்யாவை அது கையகப்படுத்தியதால் நேர்ந்த சிக்கல் மற்றும் பன்னாட்டு அரசியல் உறவுகளும் அடங்கும். உண்மையில் இவையும் கூட ஆஸ்திரிய மன்னர் வழி அரசாட்சி உருவாகத் தீர்மான காரணிகளாய் அமைந்தன.) ஜெர்மனியில் ஒவ்வோர் அரசு இருப்பதையும்—அது கடந்த காலத்ததாயினும் இக்காலத்ததாயினும் சரி—அல்லது சூடேட்சில் இருந்து டானஸ் வரையிலுமாக ஒழுங்கான முறையில் ஜெர்மனியின் குறுக்காகப் பிளவுபட்டுக் கிடக்கிறதும் மலை அடுக்குகளால் பிரிக்கப் பட்டிருக்கிற புவியியல் (பூகோள) பிரிவினையை அகலப்படுத்தியுள்ள

உயர் ஜெர்மன் ஒத்தொலிப்புப் பெயர்ச்சி (High German consonant shift)யையும் ஒருவர் நகைப்புக்கிடங் கொடாத வகையில் பொருளாதார அடிப்படையில் விளக்குவது சாத்தியமில்லை.

எனினும், இரண்டாவதாக பல தனிப்பட்ட விருப்புகளுக்கிடையிலான சச்சரவுகளிலிருந்தே இறுதி முடிவு எப்பொழுதும் எழுகிறது என்ற வழியில் வரலாறு தொடர்ந்து நடக்கிறது. மேலும் அத்தகைய ஒவ்வொரு விருப்பமும் வாழ்க்கையின் பெருந்திரளான குறிப்பிட்ட நிலைமைகளால்தான் சமைக்கப்படுகிறது. இவ்வாறாக இங்கு எண்ணற்ற இடைவினை புரியும் விசைகள் உள்ளன; (முற்றிலி அளவுடைய) எண்ணிக்கையற்ற இணைகர வரிசைகள் உள்ளன; இவை எல்லாவற்றுக்கும் ஒரு தொகுதி பயன் (Resultant) கிடைக்கிறது. அதுதான் வரலாற்று நிகழ்ச்சியாகும். இதை மறுபடியும் உணர்வற்ற நிலையில் முழுதாகவும், துணிவாற்றலின்றியும் செயல்படும் ஒரு திறனின் விளைவாகக் கொள்ளமுடியும். ஒவ்வொரு தனி விருப்பமும் ஒவ்வோர் ஆளாலும் எதற்காகத் தடுக்கப்படுகிறதோ, அதிலிருந்து மாறுபட்ட எவரும் நினைத்திராத வேறொன்றுதான் வெளிப்படுகிறது. இவ்வாறாக வரலாறு இதுவரையில் ஓர் இயற்கை நிகழ் முறையாகவே தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது; சாராம்சத்தில் அதே இயக்க விதிகளுக்கு உட்பட்டே நடக்கிறது. ஒவ்வொரு தனியாளும் அவரது (பௌதீக அமைப்பாலும்) உடலமைப்பாலும் (Physical constitution) புறவயமாக உள்ள— இறுதியாக பொருளாதாரச் சூழல்களாலும் (ஒன்று அவரது சொந்தச் சூழல்கள் அல்லது பொதுவாக சமூகத்தின் சூழல்களாலும்) தான் அவர் நினைக்கத் தூண்டப்படுவதை நினைக்கிறார்; தனியாட்களின் விருப்புறுதிகள் அவர்கள் செய்ய விரும்புவதைச் செய்து முடித்து விடுவதில்லை; அவை எல்லாம் ஒன்று திரண்டு ஒரு சராசரியாக, பொதுவான ஒரு தொடுபயனாக ஒன்று கலந்து விடுகின்றன; இதனால் அவையெல்லாம் (சூன்யமென்று) சுழி என்று முடிவு கட்டிவிடக் கூடாது. இதற்கு மாறாக, ஒவ்வொன்றும் தொடுபயனுக்குத் தம்மாலானதை வழங்குகின்றது; இந்த அளவுக்கு அது அத்தொடுபயனில் உள்ளடக்கப்படுகிறது.

இந்த விளக்கக் கோட்பாட்டை இரண்டாம் நிலையிலிருந்தன்றி அதன் மூல நூல்களிலிருந்தே கற்குமாறு நான் உங்களை மேன்மேலும் கேட்டுக் கொள்கிறேன்; அது மிகவும் எளிது. இது பற்றிய முக்கிய குறிப்புகள் வராத அளவுக்கு மார்க்ஸ் எதையும் எழுதவில்லை. ஆனால் குறிப்பாக லூயி போனபார்ட்டின் பதினெட்

டாவது புருமேர்[1] என்ற நூல் அதை மிக மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி யதற்கு ஓர் உதாரணமாகும். **மூலதனத்**[2] திலும் இதற்குப் பல சுட்டுக் குறிப்புகள் உள்ளன. நான் எனது நூல்களையும் உங்கள் பார்வைக்கு குறிப்பிடலாம். **ஹெர்ன்யூகள் டூதங்கின் அறிவியல் புரட்சி**[3] மற்றும் **லூத்விக் பேயர்பாக்கும் மூலச்சிறப்புள்ள ஜெர்மானிய மெய்யியலின் முடிவும்**[4] ஆகியவற்றில் வரலாற்றுப் பொருள் முதலியவை எனக்குத் தெரிந்த அளவுக்கு மிகவும் விளக்கமாக நான் சொல்லி இருக்கிறேன்..

இளைஞர்கள் சில வேளைகளில் பொருளாதாரத்திற்கு உரிய தற்கும் மேலாக அதிக அழுத்தம் கொடுப்பதற்கு மார்க்சும் நானும் ஓராளவுக்குப் பொறுப்பேற்க வேண்டும். எங்களுடைய எதிராளிகளி டம் அவர்கள் மறுத்த தலையாய கோட்பாட்டுக்கு நாங்கள் அழுத் தம் கொடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று; இடைவினைகளில் அடங்கியுள்ள மற்று காரணிகளுக்கு உரிய இடத்தை அளிப்பதற்கான நேரம், இடம் அல்லது வாய்ப்பு எங்களுக்கு எப்போதும் கிடைக்க வில்லை. ஆனால், வரலாற்றில் ஒரு பகுதியை எழுதுவது என்று வரும்போது, அதாவது கோட்பாட்டை நடைமுறையில் பயன் படுத்தும் போது, அது வேறு விஷயமாகி விடுகிறது; அதில் எந்தப் பிழையையும் அனுமதிக்க முடியாது. எனினும் மக்கள் ஒரு புதிய கோட்பாட்டின் தலையாய கொள்கைகளை ஈர்த்துக் கொண்ட உட னேயே-அவையும் கூட எப்போதும் சரியாகச் செய்வதில்லை—அதை அவர்கள் முழுதுமாகப் புரிந்து கொண்டு விட்டதாகவும், அதை மேலும் கடுமையாக முயற்சி செய்யாமல் நடைமுறையில் பயன்படுத்தி விடலாம் என்றும் மிக அடிக்கடி நினைக்கின்றனர். மிக அண்மைக் காலத்திய ''மார்க்சியர்களில்'' பலரை இந்த வகைக் கண்டனத்தி லிருந்து என்னால் விலக்க முடியாது. மிகவும் மலைக்க வைக்கிற விசயங்கள் அந்தப் பகுதியிலிருந்து உற்பத்திச் செய்யப்படுகின்றன....

—மார்க்ஸ், ஏங்கெல்ஸ் **தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள்**
பக்கம் 394-96

---

1. காரல் மார்க்ஸ் & பிரடெரிக் ஏங்கல்ஸ் தொகுப்பு நூல்கள் தொகுதி 11 'மாஸ்கோ' 19/9.

2. காரல் மாாக்ஸ், மூலதனம்; தொகுதி, மாஸ்கோ, 1974

3. பி. எங்கெல்ஸ், **டூரிங்கிற்கு மறுப்பு**, மாஸ்கோ, 1975

4. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ் மூன்று தொகுதிகளில் தேர்ந் தெடுக்கப்பட்ட நூல்கள், தொகுதி 3, மாஸ்கோ, 1970.

# 7

# பிரெசாலுவிலுள்ள டபிள்யூ. போர்கியசுக்கு

## (To W. Borgius in Bresalu)*

பி. எங்கெல்ஸ்

இலண்டன், ஜனவரி 25, 1984

அன்புள்ள ஐயா,

உங்களுடைய கேள்விகளுக்கான விடை இதோ:

1. பொருளியல் உறவுகளையே நாம் சமுதாய வரலாற்றின் தீர்மானகரமான அடித்தளமாகக் கருதுகிறோம். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உயிர்வாழ்வதற்குத் தேவையானவற்றை மனிதர்கள் உற்பத்திச் செய்யும் முறையையும், (வேலைப் பிரிவினை நிலவுகிற காலம் வரையிலும்) உற்பத்திப் பொருட்களைப் (பரிவர்த்தனை) பரிமாற்றம் செய்து கொள்கிற முறையையும் பொருளியல் உறவுகள் என்று நாம் புரிந்து கொள்கிறோம். எனவே, அவை உற்பத்தி மற்றும் போக்குவரத்துத் தொழில் நுணுக்கம் முழுவதையுமே உள்ளடக்கும். நமது கருத்துப்படி, இந்தத் தொழில் நுணுக்கம் பரிமாற்ற முறையையும், அதற்கும் மேலாக உற்பத்திப் பொருட்களின் பகிர்வு முறையையும், எனவே, இந்தப் பிடிமானமுடைய சமுதாயம் கலைக்கப்பட்ட பிறகு, வர்க்கப் பிரிவினையையும், இதன் விளைவாகப் பிரபுத்துவம் மற்றும் அடிமை

* இதற்கு ரோக்ளா (Wroclaw) என்பது போலிஷ் பெயர்.

—தொகுப்பாசிரியர்

உறவுகளையும், முடிவில் அரசு, அரசியல், சட்டம் ஆகியவற்றையும் இந்தத் தொழில் நுணுக்கம் தீர்மானிக்கிறது. பொருளியல் உறவுகள் புவியியல் அடிப்படையையும் உள்ளடக்கும்; புவியியல் அடிப்படையில் தான் அவை தொழிற்படுகின்றன. பொருளியல் உறவுகள் மரபின் விளைவாகவோ கடமையினாலோ கடந்த காலத்திலிருந்து ஊடனுப்பி வரப்பெற்ற (Transmitted) வையும், தாக்குப்பிடித்து நிற்கக் கூடியவையுமான பொருளியல் மேம்பாடுகளின் தொடக்க காலகட்ட மிச்சமீதங்களையும் உள்ளடக்கும்; இந்தச் சமுதாய அமைப்பைச் சுற்றிச் சூழ்ந்துள்ள புறவயச்சுற்றுச் சூழலையும் கூட பொருளியல் உறவுகள் உள்ளடக்கும்.

நீங்கள் சொல்லுகிறபடி, தொழில் நுணுக்கம் அறிவியல் நிலையைப் பொருத்தது என்றால், அறிவியல் அரசையும் தொழில் நுணுக்கத்தின் தேவைகளையும் (Req'iirements) இன்னும் மேலதிகமாகச் சார்ந்துள்ளது. சமுதாயத்துக்கு ஓர் அறிவியல் தேவையிருக்குமானால், ''அத்தேவை பத்துக்கும் மேற்பட்டால் கலைக் கழகங்கள் செய்வதைவிட அதிகமாக அறிவியலை முன்னேற்றுகிறது. நீர்ம நிலையியல் (Hydrostatics) (Toricelli, etc) முழுவதுமே பதினாறாவது, பதினேழாவது நூற்றாண்டுகளில் இத்தாலியிலுள்ள மலை ஓடைகளை ஒழுங்குபடுத்தும் தேவையை ஒட்டி எழுந்ததாகும். மின்னியல் தொழில் நுணுக்கப் பயன்பாடு கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் அதைப்பற்றிப் பகுத்தறிவுள்ளவற்றை நாம் அறிகிறோம். ஆனால் துரதிருஷ்டவசமாக அறிவியல்கள் யாவும் ஏதோ வானத்திலிருந்து விழுந்தவை போல அறிவியல் வரலாறு எழுதுவதே ஜெர்மனியில் வழக்கமாகப் போய்விட்டது.

2. வரலாற்று மேம்பாட்டை இறுதியில் தீர்மானிக்கிறவையாக நாம் பொருளியல் (Conditions) நிலமைகளைக் கருதுகிறோம். ஆனால் பந்தயம் (race) என்பது ஒருபொருளியல் காரணியேயாகும். எனினும் இதனுடன் சேர்த்து நாம் இரண்டு விஷயங்களைக் காணத் தவறக்கூடாது.

(அ) அரசியல், சட்ட, மெய்யியல், சமய, படிப்பறிவு, கலையியல்... போன்றவற்றின் வளர்ச்சி பொருளியல் வளர்ச்சியின்மேல் அமைவதாகும். பொருளியல் நிலைமை (Situation) தான் காரணமும் குற்றமுழுக்கச் செயலூக்கமுள்ளதும் எனவும் மற்றவை யாவும் செயலற்றவை என்றும் ஒருவர் நினைக்கக் கூடும். அதற்கு மாறாக இறுதியில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிற (Asserts-உறுதிப்படுத்திக் கொள்கிற) பொருளியல் தேவையின் அடிப்படையில் இடை

வினை (Interaction) நடைபெறுகிறது. எடுத்துக்காட்டாக, காப்புவரிகள் (Protective tariffs), சுதந்திர வர்த்தகம், நல்ல அல்லது கெட்ட பண ஏற்பாடு, போன்றவற்றின் மூலம் அரசு ஒரு செல்வாக்கைச் செலுத்துகிறது. 1648இலிருந்து 1830 வரையில் ஜெர்மனியிலிருந்த மிக மோசமான பொருளியல் நிலைமையின் விளைவாகத் தோன்றிய ஜெர்மன் பண்பிலாரின் (Philistine) கடைக்கோடித்தனமான வலுக்கேடும் முக்கியத்துவமும் கூட பொருளியல் விளைவின்றி இருந்ததில்லை; முதலில் அடக்க ஒடுக்கமாகவும் (Pietism) பிறகு உணர்ச்சி மேலிட்டும், அதன் பிறகு இளவரசர்களையும், பிரபுக்களையும் கெஞ்சுகிற அடிமைமனப்பாங்கோடும் அவர்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கும் கூடப் பொருளியல் விளைவு இல்லாமல் இல்லை. அது மீட்பு (Recovery)க்கான மாபெரும் தடைகளில் ஒன்றாக இருந்தது; புரட்சிகர, மற்றும் நெப்போலியன் போர்கள், நீண்டநாள் பட்ட துயரைக் கூர்மையானதாக்கிய வரையிலும் இத்தடை அசைக்கப்படாமலிருந்தது. எனவே மக்கள் இங்கு மங்கும் வசதியாகக் கற்பனை செய்ய முயல்கிறவாறு பொருளியல் நிலைமை தானாகவே ஒரு விளைவை உண்டாக்குவதில்லை; ஆனால் மனிதர்கள் தங்கள் வரலாற்றைத் தாங்களே உருவாக்குகிறார்கள்; எனினும், அவர்களைப் பக்குவப்படுத்துகிற ஒரு குறிப்பிட்ட சுற்றுச் சூழலில், உண்மையில் ஏற்கனவே நிலவுகிற உறவுகளின் அடிப்படையில் அவ்வாறு உருவாக்குகிறார்கள். அவர்கள் அரசியல், சித்தாந்தம் போன்ற மற்ற உறவுகளால் எவ்வளவுதான் ஆதிக்கம் செலுத்தப்பட்டாலும் கூட பொருளியல் உறவுகளே இன்னமும் இறுதியான தீர்மானகரமானவையாக உள்ளன; பொருளியல் உறவுகளே புரிதலுக்கு இட்டுச் செல்லும் கருப்பொருளாக அமைகின்றன.

(ஆ) மனிதர்கள் தங்கள் வரலாற்றைத் தாங்களே உருவாக்குகிறார்கள்; ஆனால் அவர்கள் இன்னமும் ஒரு கூட்டு விருப்புறுதியுடன், ஒரு கூட்டுத்திட்டத்தின்படியோ அல்லது தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலோ அவ்வாறு செய்வதில்லை. அவர்களுடைய ஆர்வங்கள் மோதுகின்றன. அந்தக் காரணத்தினாலேயே அத்தகைய சமுதாயங்கள் யாவுமே **அவசியத்தால் (Necessity)** ஆளப்படுகின்றன; **அவசியத்தின்** நிரப்புப்பகுதியும் விளக்கமும் (manifestation) விபத்து (accident) ஆகும். எல்லா விபத்துகள் மூலமும் இங்கே தன்னை நிலைநிறுத்திக் கொள்கிற அவசியம் என்பது மீண்டும் இறுதியில் பொருளியல் அவசியமேயாகும். இத்துடன் தொடர்புபடுத்திப் பெரிய மனிதர்கள் என்றழைக்கப்படுகிறவர்களை ஒருவர் கவனிக்கவேண்டும். எனவே, அத்தகைய ஒரு

மனிதர், அதிலும் துல்லியமாக அந்த மனிதர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாட்டில் தோன்றுகிறார் என்பது முற்றிலும் தற்செயல் நிகழ்ச்சியே என்பது உறுதி. ஆனால் அவரை ஒருவர் அகற்றிவிட்டால் அவருக்கு மாற்றாக வேறொருவர் தேவைப்படுகிறார். நல்லவரோ கெட்டவரோ இந்த மாற்றாள் கிடைப்பார். நீண்டகாலப் போக்கில் அவர் கிடைத்துவிடுவார்.

பிரெஞ்சுக் குடியரசு தன்னுடைய சொந்தப் போர்த் தொழிலால் ஓய்ந்து போயிருந்த வேளையில் அவசியமாக இருந்ததால் அந்த நெப்போலியன், அந்தக் குறிப்பிட்ட கார்சிகான் (Corsican), இராணுவ சர்வாதிகாரியாக வந்தமை தற்செயல் நிகழ்ச்சியே ஆகும். ஆனால் ஒரு நெப்போலியன் இல்லாவிட்டால் அந்த இடத்தை இன்னொருவர் நிரப்பியிருப்பார் என்பதை அவசியப்படும் போது உடனேயே ஒருவர் கிடைக்கிறார் என்பது மெய்ப்பிக்கிறது. சீசர், அகஸ்டஸ், கிராம்வெல் போன்றவர்களைக் காண்க. மார்க்ஸ் வரலாற்றின் பொருள் முதலியல் கருத்தைக் கண்டுபிடித்தார்; அதே வேளையில், தியெர்ரி, மிக்னெட், குய்ஸோட், மற்றும் 1850 வரையிலிருந்த எல்லா ஆங்கில வரலாற்றாசிரியர்களும் அந்தக் கருத்துக்காகக் கடுமுயற்சி செய்ததைப் புலப்படுத்தும் சான்றுகளாவர். அதே கருத்தியலை மார்கனும் கண்டுபிடித்தார் என்பது அதற்கான காலம் கனிந்துள்ளது என்பதையும், அதைக் கண்டுபிடிக்க வேண்டியது மட்டுமே பாக்கியிருந்தது என்பதையும் மெய்ப்பிக்கிறது.

எனவே, எல்லா எதிர்பாராத நேர்வுகளையும் போலவே, வரலாற்றின் தோற்றஎதிர்பாரா நேர்வுகளும் (Apparent Contingencies of history) உள்ளன. நாம் புலனாய்வு செய்கிற குறிப்பிட்ட துறை (Sphere) மேன்மேலும் பொருளியல் சூழலிலிருந்து (Economic sphere) பிரிக்கப்பட்டுத் தூய கருத்தியலான சித்தாந்தத்தை எந்த அளவு நெருங்குகிறதோ அந்த அளவுக்கு மேன்மேலும் அதன் வளைகோடு வளைந்து நெளிந்து செல்லும். ஆனால் நீங்கள் வளைகோட்டின் சராசரி அச்சை வரைந்தால் நாம் எடுத்துக் கொண்ட காலப்பகுதி நீண்டதாகவும், நாம் கவனிக்கும் புலம் பரந்தும் இருக்கும்போது இந்தக் கோடு மேலும் மேலும் பொருளியல் வளர்ச்சியின் அச்சுக்குக் கிட்டத்தட்ட இணையாகச் செல்லுவதை நீங்கள் காணலாம்.

ஜெர்மனியில் சரியான புரிதலுக்கு மிகப்பெரும் தடையாக இருப்பது இலக்கியத்தால் பொருளியல் வரலாறு பொறுப்பற்ற முறையில் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகும். ஒருவருக்குப் பள்ளியில்

பயிற்சியளித்துப் புகட்டியுள்ள வரலாற்று எண்ணங்களிலிருந்து விடுபடுதல் மிகவும் கடினம் என்பது மட்டுமின்றி, அவ்வாறு செய்வதற்கு இன்றியமையாத விசயங்களை எடுத்துக் கொள்ளுதல் அதைவிடக் கடினமாகும். எடுத்துக்காட்டாக, பழைய ஜி-வான் குலிச்சை எவர் படித்திருக்கிறீர்கள்? அவருடைய வறண்ட பொருட்திரட்டில் எண்ணற்ற அரசியல் உண்மைகளைத் தெளிவு படுத்துவதற்கான எவ்வளவோ செய்திகள் அடங்கியுள்ளன.

78, அப்படியே, பதினெட்டாவது புருமேரில் மார்க்ஸ் கொடுத்துள்ள நேர்த்தியான எடுத்துக்காட்டு உங்களுடைய கேள்விகளுக்கு நல்ல விடையை அளிக்குமென்று நான் கருதுகிறேன்; ஏனெனில் அது நடைமுறை எடுத்துக்காட்டாகும். மேலும், நான் இதில் பல அம்சங்களை டூரிங்கிற்கு மறுப்பு என்ற நூலில் பகுதி Iல் 9-11 ஆம் அதிகாரத்திலும், பகுதி II ல் 2-4 ஆம் அதிகாரத்திலும், பகுதி IIIல் முதல் அதிகாரத்திலும், முன்னுரையிலும், **பேயர்பாக்கின் இறுதிப் பிரிவிலும்** தொட்டுச் சென்றுள்ளேன்.

அருள் கூர்ந்து மேலே சொன்னவற்றில் ஒவ்வொரு சொல்லையும் மிக நுணுகிப்பார்க்காதீர்கள்; ஆனால் பொதுத் தொடர்பை மனதில் கொள்ளுங்கள். உங்களுக்கு எழுதுவதை வெளியிட வேண்டுமென்றிருந்தால் எப்படி எழுதக்கடமைப் பட்டிருப்பேனோ அவ்வாறு இப்போது உங்களுக்கு எழுதவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்...

—மார்க்ஸ், எங்கெல்ஸ்
தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள்
பக் (441- 43)

# 8

# சனநாயகப் புரட்சியில் சமூக-சனநாயகத்தின் இரண்டு செயல் தந்திரங்கள்

**லெனின்**

உண்மையில், மார்க்சியப் பார்வை நிலையில் புரட்சி என்பது என்ன? காலாவதியாகிவிட்ட அரசியல் மேற்கட்டு மானத்தை வலிமையைக் கொண்டு இடித்துத் தள்ளுவது; அதற்கும் புதிய உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு ஒரு குறிப்பிட்ட தருணத்தில் அதை இற்றுவிழும்படிச் செய்தது. எதேச்சாதிகார முறைக்கும், முதலாளிய ருஷ்யாவின் கட்டுமானம் முழுவதற்கும் அதன் மற்றும் முதலாளிய-சனநாயக வளர்ச்சிக்குரிய எல்லாத் தேவைகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு நொறுங்கி அதை விழச் செய்திருக்கிறது. இந்த முரண்பாடு நீண்டகாலத்துக்குச் செயற்கையாக நிலைநிறுத்தப்பட்டு வந்ததால் அதன் வீழ்ச்சியும் மிகக் கடுமையானதாகும். மேற்கட்டுமானம் ஒவ்வொரு கணுவிலும் வெடிப்புற்று வருகிறது. அழுத்தம் தாங்க முடியாமல் வலிமை யிழந்து வருகிறது. மிகப் பலவாக வேறுபட்ட வர்க்கங்களின் குழுக்களின் சார்பாளர்கள் மூலமாக மக்கள் இன்று தங்கள் சொந்த முயற்சியினால் ஒரு புதிய மேற்கட்டுமானத்தைக் கட்டிக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தில் பழைய மேற்கட்டுமானம் பயனற்றதென்று எல்லாருக்கும் தெரிந்து விடுகிறது. எல்லாரும் புரட்சியை அறிந்தேற்கிறார்கள். எந்த வர்க்கங்கள் இந்தப் புதிய மேற்கட்டுமானத்தைக் கட்டவேண்டும், எப்படிக் கட்டவேண்டும் என்பதை வரையறுப்பதே இன்றுள்ள

தனிச் சொத்துடைமையைப் பேணிக்காப்பதை விட தனிச் சொத்துடைமையின் முதன்மையான வடிவங்களில் ஒன்றாகிய நிலப்பிரபுத்துவப் பண்ணைகளைப் பறிமுதல் செய்வதில் அதிகமாக அக்கறை கொண்டுள்ளனர். அதன் வழியாக சோஷலிஸ்டு ஆகிவிடாமலும் குட்டி முதலாளி வர்க்கத் தன்மையை இழக்காமலும் இருந்த போதிலும் விவசாயி மக்களிடம் சனநாயகப் புரட்சியின் ஒரு முழுமனதான தீவிரமான ஆதரவாளனாக ஆகும் திறமுண்டு. அதற்கு அறிவுத் தெளிவு ஊட்டும் புரட்சிகரமான நிகழ்ச்சிகளின் போக்கு முதலாளி வர்க்கத்தின் துரோகத்தாலோ பாட்டாளி வர்க்கத்தின் தோல்வியாலோ அகாலமாகத் துண்டிக்கப்படாமல் மட்டும் இருக்குமேயானால், விவசாயி மக்கள் தவிர்க்க முடியாதவாறு அப்படி ஆவார்கள். இந்த நிபந்தனைக்கு உட்பட்ட நிலையில் தவிர்க்க முடியாதவாறு விவசாய மக்கள் புரட்சிக்கும் குடியரசுக்கும் அரணாகி விடுவார்கள். ஏனெனில் முற்றாக வெற்றி பெறும் புரட்சி ஒன்றுதான் நிலச்சீர்திருத்தத் துறையில் விவசாயி மக்களுக்கு அனைத்தையும் கொடுக்கமுடியும் (அவர்களுக்கு அவை தேவைப்படுவது ''சோசலிஸ்டு புரட்சியாளர்கள்'' நினைப்பது போல் முதலாளித்துவத்தை ஒழிப்பதற்காக அல்ல). அரைப் பண்ணையடிமை முறை எனும் சேற்றுக் குழியிலிருந்து வெளியேறுவதற்காக, ஒடுக்குமுறை அடிமை நிலையிலிருந்து வெளியேறுவதற்காக, பண்ட உற்பத்தி அமைப்பு முறையின் கீழ் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத் தங்களுடைய வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக.

மேலும் தீவிரமான நிலச் சீர்திருத்தம் கிடைக்கும் வாய்ப்பை நோக்கி மட்டும் விவசாயி மக்கள் புரட்சியிடம் பற்றுக் கொண்டிருக்கவில்லை. தங்களுடைய பொதுவான நிரந்தரமான நலன்களுக்காகவும் தான், பாட்டாளி வர்க்கத்தோடு சேர்ந்து போராடிக் கொண்டிருக்கும் போதுங்கூட விவசாய மக்களுக்குச் சனநாயகம் தேவையாயுள்ளது ஏனெனில் சனநாயக அமைப்பு முறை ஒன்றுதான் விவசாயி மக்களின் நலன்களைச் சரிநுட்பமாக வெளியிடவும் பெருந்திரள், பெரும்பான்மை எனும் வகையில் விவசாய மக்களின் தலைமை நிலைமையை உறுதிப்படுத்தவும் முடியும். விவசாய மக்களின் அறிவுத் தெளிவு வளர வளர (ஜப்பானுடன் போர் நடந்த காலத்திலிருந்து அவர்களின் அறிவுத் தெளிவு விரைவாக வளர்ந்து வருகிறது. பள்ளிக்கூட அளவு கோலை வைத்து அறிவுத் தெளிவை அளந்து பழக்கப்பட்ட பலர் இவ்வளவு வேகமாக அது வளரும் என்று எதிர்பார்க்கவில்லை),

மேன்மேலும் முரணின்றியும் உறுதியுடனும் அது முழுமையான சனநாயகப் புரட்சியை ஆதரிக்கும். ஏனெனில் முதலாளி

வர்க்கத்தைப்போல் மக்களின் மேலாதிக்கத்தைப் பற்றி அது பயப்படுவதற்கு ஏதுமில்லை. மாறாக, அதனால் ஆதாயந்தான் உண்டு. விவசாயி மக்கள் தம்முடைய அப்பாவித்தனமான முடியரசு வாதத்தைத் தூக்கியெறியத் தொடங்கியதும் சனநாயகக் குடியரசு அவர்களின் குறிக்கோளாகி விடும். ஏனெனில் முதலாளி வர்க்கத் தரகர்களின் உணர்வுப் பூர்வமான முடியரசு வாதம் (மேலவை முதலியவற்றைக் கொண்டது) விவசாய மக்கள் இன்று அனுபவித்து வரும் அதே உரிமையின்மையும் ஒடுக்கு முறையும் அறியாமை யையும்—ஐரோப்பிய அரசியல் சட்டமுறை எனும் பூச்சுப் பூசிச் சற்று மெருகிட்ட தோடு சரி—குறிக்கும்.

எனவேதான் ஒரு வர்க்கம் என்கிற வகையில் முதலாளி வர்க்கம் இயல்பாகவும் தவிர்க்க முடியாதபடியும் மிதவாத முடியரசுவாதக் கட்சியின் அரவணைப்பின் கீழ் வரும் போக்கில் போகிறது. விவசாய மக்கள் மொத்தத்தில் புரட்சிகரமான குடியரசுவாதக் கட்சியின் தலைமையின் கீழ் வரும் போக்கில் செல்கின்றனர். எனவே தான் முதலாளி வர்க்கத்தால் சனநாயகப் புரட்சியை முழுமையாக நடத்தி இருக்கமுடியாது. விவசாயி மக்களால் அவ்வாறு நடத்தி இருக்கமுடியும். அவ்வாறு நடத்தி முடிக்க அவர்களுக்கு நாம் உதவியளிக்க எல்லா முயற்சிகளும் செய்யவும் வேண்டும்.

இது சொல்லித் தெரிய வேண்டிய விஷயமல்லவே, அரசியல் ஆனா, ஆவன்னா ஆயிற்றே, எல்லாச் சமூக-சனநாயக வாதிகளுக் கும் நன்றாகத் தெரிந்ததுதானே என்று ஆட்சேபம் எழக்கூடும். இல்லை. அப்படி ஒன்றும் இல்லை. முதலாளி வர்க்கம் பின் வாங்குதலின் விளைவாகப் புரட்சியின் ''வீச்சு குறைந்து விடும்'' என்று பேச முடிகிறவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. அப்படிப்பட்ட ஆசாமிகள் நிலப்பிரச்சினை பற்றிய வேலைத் திட்டத்தின் சொற்களைத் திரும்பியொப்பிக்கிறார்கள். அவற்றின் பொருளைப் புரிந்து கொள்ளாமல் வெறுமே மனப்பாடமாகக் கற்றிருக்கிறார்கள். அப்படி இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கத்தின், விவசாயி மக்களின் புரட்சிச் சாரமான, சனநாயகச் சர்வாதிகாரம் எனும் கருத்துருவத்தைப் பற்றி அவர்கள் பயப்பட் டிருக்க மாட்டார்கள். இந்தக் கருத்துருவம் மார்க்சிய உலகப் பார்வை முழுவதிலிருந்தும் நம் வேலை திட்டத்திலிருந்தும் தவிர்க்க முடியாதவாறு வருவதாகும். அப்படி இல்லாவிட்டால், முதலாளி வர்க்கம் எந்த எல்லைக்குப் போகத் தயாராயிருக்கிறதோ அந்த எல்லையுடன் அவர்கள் மாபெரும் ருஷ்யப் புரட்சியின் வீச்சைக்

கட்டுப்படுத்தி நிறுத்தி விடமாட்டார்கள். இப்படிபட்ட, ஆசாமிகள் தம்முடைய பருண்மையான மார்க்சிய எதிர்ப்பான, புரட்சி எதிர்ப்பான தீர்மானங்களின் மூலமாகத் தம்முடைய சூட்சுமமான மார்க்சியப் புரட்சிகரச் சொற்றொடர்களைத் தோற்கடித்து விடுகிறார்கள்.

வெற்றிகரமான ருஷ்யப் புரட்சியில் விவசாயி மக்களின் பாத்திரத்தை உண்மையாகவே புரிந்து கொண்டிருப்பவர்கள் முதலாளி வர்க்கம் பின்வாங்குமேயானால் புரட்சியின்வீச்சு குறைந்து விடும் என்று பேசுவதாகக்கூட கனவு காண மாட்டார்கள். ஏனெனில் உண்மையாகப் பார்த்தால், முதலாளி வர்க்கம் பின்வாங்கும் போது தான், திரள்திரளான விவசாயி மக்கள் பாட்டாளி வர்க்கத்துடன் தோள் சேர்த்துத் தீவிரமான புரட்சியாளர்களாக வெளிக்கிளம்புகிற போது தான் ருஷ்யப் புரட்சிகரதன்னுடைய உண்மையான வீச்சை எடுத்துக்கொள்ளத் தொடங்கும். முதலாளித்துவ சனநாயகப்புரட்சி யின் சகாப்தத்தில் சாத்தியமான மிக விரிவான புரட்சிகர வீச்சை உண்மையாகவே எடுத்துக் கொள்ளும். முரணின்றிக் கடைசிவரை கொண்டு சென்று முடிப்பதற்கு நம்முடைய புரட்சியானது முதலாளி வர்க்கத்தின் தவிர்க்க முடியாத முரண்தன்மை முடக்கம் செய்யக் கூடிய சக்திகளை (அதாவது, ''அரைப் புரட்சியிலிருந்து பின் வாங்கும்படிச் செய்ய'' முடிகிற சக்திகளைச் சிந்தனையின்மையின் காரணமாக இஸ்கராவின் காக்கேஷிய ஆதரவாளர்கள் அதைக் கண்டு வெகுவாகப் பயப்படுகிறார்கள்) நம்பி நிற்க வேண்டும்.

எதேச்சதிகார முறையின் எதிர்ப்பைப் பலத்தின் மூலமாக நசுக்கவும் முதலாளி வர்க்கத்தின் நிலைப்பாடற்ற நிலையை ஸதம்பிக்கச் செய்யவும், பாட்டாளி வர்க்கம் விவசாயி மக்களுடன் கூட்டணி வகுத்துக் கொண்டு, சனநாயகப் புரட்சியை நடத்தி முடிக்க வேண்டும். முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பைப் பலத்தின் மூலமாக நசுக்கவும், விவசாயி மக்களின் குட்டி முதலாளி வர்க்கத் தவரின் நிலைப்பாடற்ற நிலையை முடக்கம் செய்து விடவும் மககளிடையேயுள்ள அரைப் பாட்டாளி வர்க்கத் தன்மையுள்ள பகுதிகளோடு கூட்டணி வகுத்துக் கொண்டு பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சியைச் சாதித்து முடிக்க வேண்டும். இவைதாம் பாட்டாளி வர்க்கத்தின் பணிகள் புரட்சியின் வீச்சைப் பற்றிய தம்முடைய வாதங்கள் தீர்மானங்கள் என்று அனைத்திலும் புதிய இஸ்க்ரா குழுவினர் இவற்றை மிகவும் குறுக்கி முன்வைக்கிறார்கள்.

எனினும் ஒரு விஷயத்தை மறந்துவிடக் கூடாது. புரட்சியின் வீச்சுப் பற்றிய விவாதங்களில் அதை அடிக்கடி

மறந்து விடுகிறார்கள். இந்தப் பணியிலுள்ள கஷ்டங்கள் பிரச்சினையல்ல. அதன் தீர்வைத் தேடிப் பெறுவதற்கு என்ன வழி என்பதே பிரச்சினையாகும் என்பதை மறக்கலாகாது. புரட்சியின் வீச்சை வலுவானதாகவும் வெல்லற்கரியதாகவும் செய்வது எளிதா கடினமா என்பது பிரச்சினையல்ல. அந்த வீச்சை மேலும் வலுவுள்ளதாகச் செய்வதற்கு எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பதே பிரச்சினை. நம் நடவடிக்கைகளின் அடிப் படையான தன்மை அவை பின்பற்றிச் செல்ல வேண்டிய திசை இதிலேதான் நம்முடைய கருத்துக்கள் வேறுபடுகின்றன. இதை நாம் வலியுறுத்தக் காரணம், கவனமற்ற, மனச்சாட்சியற்ற ஆசாமிகள் மிக அடிக்கடி இரண்டு வெவ்வேறான பிரச்சினைகளை— பின்பற்ற வேண்டிய திசை, அதாவது இரண்டு வெவ்வேறான பாதைகளில் ஒன்றைத் தேர்ந்து கொள்வது எனும் பிரச்சினையையும் நம் குறிக்கோளைச் சாதித்துக் கொள்வது சுலபமா, குறிப்பிட்ட பாதையில் போனால் அதை சாதித்துக் கொள்வதின் வாய்ப்பு நெருங்குமா என்கிற பிரச்சினையையும்—குழப்பிக் கொள்கிறார்கள்.

மேலே இந்தக் கடைசிப் பிரச்சினையை நாம் எடுத்துக் கவனிக்கவேயில்லை. ஏனெனில் அது கட்சியில் எந்த வேறுபாட்டையோ கருத்து வேற்றுமையையோ உண்டாக்கவில்லை, உண்மையில் இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானது. எல்லாச் சமூக-சனநாயகவாதிகளும் கறாராகக் கவனம் செலுத்தும் தகுதியுடையது. திரள் திரளாகப் பட்டாளி வர்க்கத்தை மட்டுமின்றி விவசாயி மக்களையும் இயக்கத்தினுள் கொண்டு வருவதிலுள்ள கஷ்டங்களை மறப்பது மன்னிக்கத்தகாத நம்பிக்கை வாதமாகும். இந்தக் கஷ்டங்கள் தாம் பல தடவைகளில் சனநாயகப் புரட்சியை முற்றாக நடத்தி முடிக்கச் செய்யும் முயற்சிகளை நாசப்படுத்தியுள்ளன, மிகப் பெரும்பாலும் முரணுள்ள தன்னலமிக்க முதலாளி வர்க்கமே வெற்றி பெற்றுள்ளது. ஏனெனில் அது மக்களுக்கு எதிராக முடியரசின் பாதுகாப்பு எனும் வடிவத்தில் ஆதாயம் பெற்று முதலாக்கியது. அதே நேரத்தில் மிதவாதத்தின்......அல்லது ஓஸ்வபஷ் தேனியே போக்கின் ''கன்னிமையைக் காத்துக் கொண்டும்'' இருக்கிறது என்ற போதிலும், கஷ்டம் என்பது அசாத்தியம் என்றாகி விடாது. தேர்ந்து கொண்ட பாதை சரியானது என்கிற நம்பிக்கையே முக்கியமாகும். இந்த நம்பிக்கை அதிசயங்களைச் செய்ய முடிகிற புரட்சிகரமான ஆற்றலையும் புரட்சிகரமான ஆர்வத்தையும் நூறு மடங்காகப் பெருக்கி விடும்.

தேர்ந்து கொள்ள வேண்டிய பாதை பற்றிய பிரச்சினையில் இன்றையச் சமூக-சனநாயக வாதிகளிடையேயுள்ள பிளவின்

ஆழத்தைப் பார்ப்பதற்குப் புதிய இஸ்க்ரா குழுவினரின் காக்கேஷியத் தீர்மானத்தை ரு. ச.ச. தொ. கட்சியின் மூன்றாவது காங்கிரஸ். தீர்மானத்துடன் ஒப்பு நோக்கினால் உடனே தெரிந்து விடும். காங்கிரஸ் தீர்மானம் கூறுகிறதாவது: முதலாளி வர்க்கம் முரண் தன்மையுள்ளது. நம்மிடம் புரட்சியின் ஆதாயங்களைப் பறிப்பதற்குத் தவறாமல் முயற்சிக்கும். எனவே தொழிலாளித் தோழர்களே போராட்டத்துக்கு மேலும் வலுவான தயாரிப்புகள் செய்யுங்கள்! ஆயுதமெடுத்துக் கொள்ளுங்கள். விவசாயி மக்களை உங்கள் பக்கம் கொண்டு வந்து விடுங்கள்! போராட்டம் இன்றி நம்முடைய புரட்சிகரமான ஆதாயங்களைத் தன்னலம் தேடும் முதலாளி வர்க்கத்திடம் தாரை வர்க்க மாட்டோம். காக்கேஷியப் புதிய இஸ்க்ரா குழுவினரின் தீர்மானம் கூறுகிறதாவது: முதலாளி வர்க்கம் முரண்தன்மை உள்ளதால் புரட்சியிலிருந்து பின்வாங்கக் கூடும். எனவே, தொழிலாளித் தோழர்களே! தயவு செய்து இடைக்கால அரசாங்கத்தில் கலந்து கொள்வது பற்றிச் சிந்திக்க வேண்டாம். ஏனெனில் அப்படிச் செய்தால் முதலாளி வர்க்கம் நிச்சயமாகப் பின்வாங்கி விடும். அதனால் புரட்சியின் வீச்சு குறைக்கப்பட்டு விடும்!

ஒரு தரப்பினர் சொல்கிறதாவது: முரண்தன்மையுள்ள முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பையோ செயல் முனைப்பின்மையையோ மீறிப் புரட்சியை முழு முடிவுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

மற்ற தரப்பினர் சொல்கிறதாவது: சுதந்திரமாகப் புரட்சியை முழுமுடிவுக்குக் கொண்டு செல்வதைப் பற்றி சிந்திக்காதீர்கள். ஏனெனில் அப்படிச் செய்தால் முரண்தன்மையுள்ள முதலாளி வர்க்கம் அதிலிருந்து பின்வாங்கி விடும்.

இவ்விரண்டும் நேரெதிரான பாதைகள் அல்லவா? ஒரு செயல்தந்திரத் தொகுதி மற்றதை முற்றாக விலக்குகிறது என்பது வெளிப்படையில்லையா? முதலில் சொன்ன செயல் தந்திரங்கள் மட்டுமே புரட்சிகரமான சமூக-சனநாயகத்தின் சரியான செயல் தந்திரங்கள். இரண்டாவதாகச் சொன்னவை வெறுமே ஓஸ்வபஷ்தேனியே செயல் தந்திரங்களே என்பது வெளிப்படையாக வில்லையா?

# 9

# மாவோவின் மேற்கோள்கள்

## பொருளியல் அடித்தளமும் மேற்கட்டுமானமும்

ஏகாதிபத்திய வல்லரசுகள் சீனாவில் தங்களுடைய ஆட்சிக்கான முக்கிய ஆதார ஊன்றுகோல்களாக நிலப்பிரபுத்துவ நிலவுடைமை வர்க்கத்தையும், தரகு முதலாளி வர்க்கத்தையும் ஆக்கி விட்டனர். ஏகாதிபத்தியம் முதலில் பழைய சமூக அமைப்பின் ஆளும் மேல்தட்டுடனும், நிலப்பிரபுக்களுடனும், வணிக மற்றும் வட்டித்தொழில் உடைமையாளர்களுடனும் பெரும்பான்மை மக்களுக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்து கொள்கிறது. அதன் பிற்போக்குக் கூட்டாளிகளை நிலைநிறுத்துவதற்கான அடித்தளமாக விளங்குகிற முதலாளியத்துக்கு முந்திய சுரண்டல் வடிவங்கள் அனைத்தையும் (குறிப்பாக கிராமங்களில்) பாதுகாக்கவும், நீடித்திருக்கச் செய்யவும் எல்லா இடங்களிலும் ஏகாதிபத்தியம் முயற்சி செய்கிறது. ஏகாதிபத்தியம் தனது எல்லா நிதிமூலதன மற்றும் இராணுவ வலிமையுடன் சீனாவிலுள்ள நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களை அவற்றின் அதிகாரவர்க்க மற்றும் இராணுவ மேற்கட்டுமானங்கள் முழுவதுடனும் ஆதரித்து, ஊக்குவித்து, ஊட்டிவளர்த்து, நீடித்திருக்கச் செய்கிற முக்கிய சக்தியாக உள்ளது.

## இலக்குகளும் சக்திகளை (Forces) கையாளுதலும்

சீனச் சமுதாயம் குடியேற்ற (Colonial) அரைக்குடியேற்ற மற்றும் அரை நிலவுடைமையதாக இருப்பதாலும், புரட்சியின் இலக்குகள் முக்கியமாக அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாகவும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவமாக இருப்பதாலும், புரட்சி

யின் கடமைகள் இந்த இரண்டு ஒடுக்கு முறையாளர்களையும் தூக்கி எறிவதாக இருப்பதாலும், சீனச் சமுதாயத்திலிருக்கிற பல்வேறு வர்க்கங்கள் மற்றும் சமூகத்தட்டுகளில் எந்த வர்க்கங்கள் அல்லது தட்டுகள் அந்த ஒடுக்குமுறையாளர்களுடன் சண்டையிட வல்ல சக்திகளாக அமையமுடியும்? இந்தக் காலகட்டத்தில் சீனப்புரட்சியின் இயக்குவிசைகள் (Motive forces) பற்றிய கேள்வி இதுவேயாகும். சீனப்புரட்சியின் அடிப்படைச் செயல்தந்திரம் பற்றிய பிரச்சினைக்கான சரியான தீர்வை அடைவதற்கு இந்தக் கேள்வியைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுவது தவிர்க்க இயலாததாகும்.

இன்றையச் சீனச் சமுதாயத்திலுள்ள வர்க்கங்கள் யாவை? சீனச் சமுதாயத்திலுள்ள ஆளும் வர்க்கங்களாக நிலப்பிரபு வர்க்கமும், உடைமையாளரின் (Bourgeoisie) மேல்தட்டுகளும் அமைகின்றன. பாட்டாளிகள், உழவர்கள் (Peasentry), உழவர்கள் தவிர மீதியுள்ள (குட்டிமுதலாளி) சிறு உடைமையாளரின் வெவ்வேறு பகுதியினர் ஆகியோர் சீனாவின் பரந்த பகுதிகளில் ஆளப்படும் குடிபடைகளாக இன்னமும் உள்ளனர்.

சீனப்புரட்சியின்பால் இந்த வர்க்கங்களின் நோக்கும் நிலையும், அவை சமுதாயத்தில் வகிக்கிற பொருளியல் தரத் (Stolins)தால் தான் முழுக்க முழுக்கத் தீர்மானிக்கப்படுகின்றன. இவ்வாறாக, புரட்சியின் இயக்கு விசைகளும், இலக்குகளும், கடமைகளும் சீனாவின் சமூக பொருளியல் அமைப்பால் தீர்மானிக்கப்படுகின்றன.

—O—

இவ்வாறாக, சீனாவின் முதலாளிய (பூர்ஷ்வா) சனநாயகப் புரட்சியில் பாட்டாளிகள், உழவர்கள், மற்றும் சிறு உடைமையாளர்களின் பிற பிரிவுகளது பங்கை-அது போராட்டத்திற்குச் சக்திகளை ஒருங்கமைப்பதிலாகட்டும் (அதாவது ஐக்கிய முன்னணியில்) அல்லது அரசு அதிகாரத்தை நிறுவுவதிலாகட்டும்-புறக்கணிக்க முடியாது. இந்த வர்க்கங்களை ஒதுக்கிவிட முயல்கிற எவராலும் சீனதேசத் தலைவிதிப்பிரச்சினையையோ அல்லது சீனாவின் வேறெந்தப்பிரச்சினையையோ தீர்க்க முடியாது. இன்றைய காலகட்டத்தில் சீனப் புரட்சி, உழைப்பாளர்கள், உழவர்கள், சிறு உடைமையாளர்களின் பிற பிரிவுகள் ஆகியோர் திண்ணமான ஒரு இடத்தையும், திண்ணமான ஒரு பாத்திரத்தையும், வகிக்கக் கூடிய சனநாயகக் குடியரசை உருவாக்கக் கடும் முயற்சி செய்ய வேண்டும். வேறு சொற்களில் கூறினால், உழைப்பாளர்கள், உழவர்கள், நகர்ப்புறச் சிறு உடைமை

யாளர்கள் மற்றும் ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்க்கிற பிற அனைவருடனுமான புரட்சிகரக் கூட்டணியின் மேல் எழுந்த ஒரு சனநாயகக் குடியரசாக அது இருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ்தான் அத்தகைய குடியரசை முழுமையாக அடைய முடியும்.

(மேலேகண்ட மேற்கோள்கள் 'சீனப்புரட்சியும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும்' (தொகுதி II பக்கம் 312) என்பதிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்)

## இராணுவ மற்றும் அரசியல் செயல் தந்திரங்கள்

எல்லாப் பிரச்சினைகளையும் பகுத்தாய வேண்டும்; ஒவ்வொன்றையும் மறுத்தொதுக்கலாகாது. எடுத்துக் காட்டாக, நான்காவது பிளீனரி (Plenary-நிறைந்த, முழுமையான) கூட்ட அமர்விலிருந்து சுன்யி (Tsynyi) கூட்டம் வரையிலான காலத்தின் போது மையத் தலைமையின் வழி பற்றிய பிரச்சினையை இரண்டு சிறப்பியல்புகளிலிருந்து (aspects) பகுத்து ஆராய வேண்டும்.

ஒரு புறம், அந்தக்காலத்தில் மையத்தலைமை அமைப்பு கடைப்பிடித்த அரசியல் செயல்தந்திரம் இராணுவ செயல் தந்திரம் மற்றும் ஊழியர் கொள்கை ஆகியவை அவற்றின் தலையாய அம்சங்களில் தவறு என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்; ஆனால், மறுபுறம், சியாங்-கை-ஷேக்கை எதிர்த்தல், விவசாயப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லுதல், செம்படைப் போராட்டம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளில் நமக்கும், தவறுகளைச் செய்த தோழர்களுக்கும் இடையில் எந்தவொரு சச்சரவும் இல்லை என்பதையும் சுட்டிக் காட்டவேண்டும்'

'நமது படிப்பும், இப்போதைய நிலைமையும்'
(our study and the current situation)
என்பதிலிருந்து, மாவோ III, பக். 64.

'சீனப்புரட்சியும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும்' தனி வெளியீடு-திருத்தப்பட்ட பகுதியில் உள்ளது.

# 10

# சீனப்புரட்சியும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும்

—மாசேதுங்

சீனப் புரட்சியின் எதிரிகள் மிக்க ஆற்றல் வாய்ந்தவர்கள் என்பது தெளிவு. சக்தி வாய்ந்த ஏகாதிபத்தியவாதிகளும் ஆற்றல் மிக்க நிலப்பிரபுத்துவ சக்திகளும் மட்டுமல்ல மக்களை எதிர்ப்பதற்காக ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ சக்திகளுடன் கள்ளக் கூட்டு சேரும் பூர்ஷ்வா வர்க்கப் பிற்போக்கு வாதிகளும் சில சமயங்களில் எதிரிகளாவர். ஆகவே புரட்சிகரச் சீன மக்களின் எதிரிகளின் வலிமையைக் குறைத்து எடை போடுவது தவறாகும்.

இத்தகைய எதிரிகளை எதிர்நோக்கும் போது, சீனப்புரட்சி நீண்டதாகவும், கொடியதாகவுந்தான் இருக்க முடியும், எமது எதிரிகள் மிக்க ஆற்றல் வாய்ந்தவர்களாக இருப்பதால் நீண்டகால நேரத்தில் தான் புரட்சிகர சக்திகள் இறுதியில் அவர்களை நொறுக்கவல்ல சக்தியாக தம்மைக் கட்டி வளர்த்துப் புடம் போட்டெடுக்க முடியும். சீனப்புரட்சி மீதான எதிரியின் அடக்குமுறை மிகக் கொடியதாக இருப்பதால், புரட்சிகர சக்திகள் தமக்கு வலுவூட்டி, உறுதியை முற்றாக வெளிப்படுத்தினாலொழிய தமது நிலையங்களைப் பாதுகாக்க முடியாது; எதிரியின் நிலையங்களைக் கைப்பற்றுவதைப் பற்றிப் பேசவே தேவையில்லை, ஆகவே, கண்ணிமைப்பதற்குள் சீனப்புரட்சியின் சக்திகளைக் கட்டியமைத்து விட முடியும் என்றோ சீனப்புரட்சி போராட்டம் ஒரு நாளில் வெற்றியடைந்து விடும் என்றோ நினைப்பது தவறாகும்.

இத்தகைய எதிரிகளை எதிர்நோக்கும் போது சீனப்புரட்சியின் முதன்மையான வழிமுறை அல்லது அதன் முதன்மையான வடிவம்

ஆயுதப் போராட்டமாக இருக்கவேண்டுமேயன்றி, சமாதான போராட்டமாக இருக்க முடியாது. ஏனென்றால், எமது எதிரிகள் சீன மக்கள் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இயலாத தாக்கி அவர்களது அரசியற் சுதந்திர உரிமைகள் அனைத்தையும் அபகரித்து விட்டார்கள். ''சீனாவில் ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந் தாங்கிய எதிர்ப்புரட்சியுடன் போரிடுகின்றது. அது சீனப்புரட்சியின் தனி இயல்புகளில் ஒன்றாகவும் அதன் மேம்பாடுகளில் ஒன்றாகவும் இருக்கின்றது என ஸ்டாலின் கூறுகின்றார். இந்த வரையறை முற்றிலும் சரியானது. ஆகவே ஆயுகப் போராட்டத்தையும், புரட்சிகர போரையும் கொரில்லா போரையும் இராணுவ வேலையையும் குறைத்து மதிப்பிடுவது தவறாகும்.

இத்தகைய எதிரிகளை எதிர்நோக்கும் போது புரட்சிகர தளப் பகுதிகள் பற்றிய பிரச்சினை எழுகிறது. வலிமை வாய்ந்த ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களுடைய பிற்போக்கு சீனக் கூட்டாளிகளும் நீண்டகாலமாகவே சீனாவின் கேந்திர நகரங்களை வசப்படுத்தி உள்ளனர். ஆகவே புரட்சி அணிகள் பின் தங்கிய கிராமப் பிரதேசங்களை முன்னேறிய உறுதியான தளப் பிரதேசங்களாக மாபெரும் இராணுவ,அரசியல்,பொருளாதார,பண்பாட்டுப் புரட்சிக்கோட்டைகளாக மாற்றி இவற்றிலிருந்து நகரங்களைப் பயன்படுத்திக் கிராமப் பகுதிகள் மீது தாக்குதல் தொடுக்கும் பயங்கர எதிரிகளை எதிர்த்துப் போராடுவதும்,இவ்வாறு நீண்டகாலப் போராட்டத்தின் மூலம், புரட்சியின் முழு வெற்றியைப் படிப்படியாகப் பெறுவதும் அவசியமானது. அவர்கள் ஏகாதிபத்தியத்துடனும் அதன் அருவருடிகளுடனும் சமரசம் செய்து கொள்ளாமல், போராடுவதில் உறுதியாக நிற்க விரும்பினால், தமது சொந்த வலிமை போதாத சமயத்திற்குப் பலம் வாய்ந்த எதிரிகளுடன் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் போராட்டம் நடத்துவதை தவிர்த்து, தமது சக்திகளைக் கட்டி வளர்த்து புடம் போட்டெடுக்க எத்தெனித்தால் அவர்கள் அப்படிச் செய்வது அவசியமானது. சீனாவின் பொருளாதார வளர்ச்சி சம மற்றதாக இருத்தல் (அதன் பொருளாதாரம் ஒருமுகப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரம் இல்லை) அதன் ஆட்சிப் பகுதி பரந்ததாய் இருத்தல் (அது, புரட்சிகர சக்திகள் தந்திர மிக்க போர் நடவடிக்கைகளில் ஈடுபட இடமளிக்கின்றது) எதிர்ப்புரட்சி முகாம் ஒற்றுமையற்றும் முரண்பாடுகள் நிறைந்தும் இருத்தல், புரட்சியின் முதன்மையான சக்தியாய் விளங்கும் விவசாயிகளின் போராட்டம் பாட்டாளி வர்க்கக் கட்சியால்' அதாவது பொதுவுடைமைக் கட்சியால் தலைமை தாங்கப்படுதல் ஆகிய காரணங்களினால் சீனப்புரட்சியில் முதன்முதலில் கிராமப்

புறத்தில்தான் வெற்றி ஈட்டப்பட முடியும். மறுபுறம், இதே நிலைமைகள்தான் புரட்சியைச் சமமற்றதாக்கி, புரட்சியின் முழு வெற்றி பெறும் கடமையை நீண்டகாலமானதாகவும், கடுமையானதாகவும் செய்கின்றன. புரட்சித்தளப் பகுதிகளில் நடைபெறும் நீடித்த புரட்சிப் போராட்டம் முக்கியமாக, சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில் நிகழும் விவசாயி கொரில்லாப் போராவே இருக்கும் என்பது தெளிவு. எனவே கிராமப் பகுதிகளைப் புரட்சி தளப் பகுதிகளாகப் பயன்படுத்தும் தேவையைப் புறக்கணிப்பதும் விவசாயிகள் நடுவில் கஷ்டப்பட்டு வேலை செய்வதை அலட்சியம் செய்வதும் கொரில்லா போரை புறக்கணிப்பதும் தவறாகும்.

ஆனால் ஆயுதப் போராட்டத்தை வலியுறுத்தினால் அது இதர போராட்ட வடிவங்களை நாம் கைவிடுவது என்று பொருளாகாது. அதற்கு மாறாக இதர பல்வேறு போராட்டங்களும் ஆயுதப் போராட்டத்துடன் இணையாவிட்டால் ஆயுதப் போராட்டம் வெற்றி பெற முடியாது. கிராமியத் தளப்பகுதி தேசங்களின் வேலையை வற்புறுத்தினால், அது நகரங்களிலும் எதிரியாட்சியில் இன்னும் இருக்கின்ற பரந்த இதர கிராமப் பகுதிகளிலும் நாம் செய்ய வேண்டிய வேலையைக் கைவிடுவது என்று பொருளாகி விடாது. மாறாக, நகரங்களிலும் இதர கிராமப் பகுதிகளிலும், வேலை செய்யாவிட்டால் கிராமியத் தளப்பகுதிகள் தனிமை படுத்தப்பட்டுவிடும். புரட்சியும் தோல்வி அடைந்து விடும். இன்னும் புரட்சியின் இறுதிக் குறிக்கோள் எதிரியின் முக்கிய தளங்களாகிய நகரங்களைக் கைப்பற்றுவது ஆகும். நகரங்களில் போதுமான வேலை செய்யப்படாவிட்டால இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற முடியாது.

இவ்வாறு எதிரி ராணுவம், அதாவது மக்களுக்கெதிரான அவனது முதன்மையான ஆயுதம் அழிக்கப்படாவிட்டால் கிராமியப் பகுதிகளிலோ, அல்லது நகரங்களிலோ புரட்சி வெற்றி பெற முடியாதென்பது தெட்டத் தெளிவு. ஆகவே போரில் எதிரித் துருப்புகளை அழித்தொழிக்கும் அதே வேளையில் அவற்றைச் சின்னாபின்னப்படுத்துவதும் முக்கிய கடமையாகும்.

நீண்ட காலமாக எதிரிகளால் கைப்பற்றப்பட்டு, இருண்ட பிற்போக்குச் சக்திகள் ஆதிக்கம் செலுத்துகின்ற நகரப் பகுதிகளிலும் கிராமப் பகுதியிலுமுள்ள பிரச்சார அமைப்பு வேலைகளில் பொதுவுடைமைக் கட்சி அவசரத் தன்மையும், அசட்டுத்துணிச்சலும் உள்ளதாய் இருக்கக் கூடாது. மாறாக அது தலைமறைவாக வேலை

செய்யும் நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களை உடைய தாகவும், வலிமையைச் சேகரித்துத் தன் வேளைக்காகப் பொறுத் திருப்பதாகவும் இருக்கவேண்டுமென்பதும் தெளிவு. எதிரிக்கெதிரான போராட்டத்தில் மக்களுக்குத் தலைமை தாங்கும்போது கட்சிச் சட்டமும் விதிகளும் சமூகப் பழக்கமும் அனுமதித்தவை போன்ற வெளிப்படையான எல்லாவற்றையும் பயன்படுத்தி, நியாயமான வையும், எமக்குச் சாதகமானவையும், கட்டுப்பாடுடையவையுமான போராட்டங்களை நடத்தும் கோட்பாட்டைக் கடைபிடித்து, மெதுவாகவும், உறுதியாகவும் படிப்படியாகவும் முன்னேறும் செயல் தந்திரத்தைக் கைக்கொள்ள வேண்டும். வெறுங்கூச்சலும் அசட்டுத் துணிச்சல் நடவடிக்கையும் வெற்றிக்கு வழி கோல மாட்டா.

## சீனப் புரட்சியின் கடமைகள்

இந்தக் கட்டத்தில் ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவ நிலப் பிரபு வர்க்கமும் புரட்சியின் முதன்மையான எதிரிகளாய் இருப்ப தால் புரட்சியின் தற்போதைய கடமைகள் யாவை?

தலையாய கடமைகள் இந்த இரண்டு எதிரிகளையும் தாக்குவது, அதாவது அந்நிய ஏகாதிபத்திய அடக்குமுறையைத் தூக்கி எறிவதற்கு ஒரு தேசியப் புரட்சியை மேற்கொள்வதும் நிலப் பிரபுக்களின் அடக்கு முறையைத் தூக்கியெறிவதற்கு ஒரு சன நாயகப் புரட்சியை மேற்கொள்வதுமாகும். அதிலும் ஏகாதிபத்தி யத்தைத் தூக்கி எறிவதற்கான தேசியப்புரட்சியே முதன்மையான தும் முதலாவதுமான கடமை என்பதன் கேள்விக்கே இடமில்லை.

இந்த இரண்டு மாபெரும் கடமைகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன. ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவ நிலப்பிரபு வர்க்கத்தின் முக்கிய ஆதரவாய் இருப்பதால் ஏகாதி பத்திய ஆட்சி தூக்கியெறியப்பட்டாலொழிய அதற்கு முடிவு கட்ட முடியாது. மாறாக, சீனாவில் நிலப்பிரபுத்துவ நிலப்பிரபு வர்க்கம் ஏகாதிபத்ய கட்சியின் முக்கிய சமூக அடிப்படையாகவும் விவசாயி கள் சீனப் புரட்சியின் முக்கிய சக்தியாகவும் இருப்பதால், நிலப் பிரபுத்துவ நிலப்பிரபு வர்க்கத்தைத் தூக்கியெறிவதற்கான விவசாயி களின் போராட்டத்தில் விவசாயிகளுக்கு உதவியளித்தாலொழிய ஆற்றல் மிக்க புரட்சிகரப்படைகளை அமைத்து ஏகாதிபத்திய ஆட்சி யைத் தூக்கியெறிவது அசாத்தியமாகும். ஆகவே இரண்டு அடிப்

ப்டைக் கடமைகளும் அதாவது தேசியப் புரட்சியும், சனநாயகப் புரட்சியும் ஒரே நேரத்தில் வேறுபட்டும் இணைந்தும் உள்ளன.

சீனத் தேசியப் புரட்சியின் தலையாய உடனடியான கடமை ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளரை எதிர்ப்பதாக இருப்பதானாலும் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்குச் சனநாயகப் புரட்சி நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதனாலும் இரண்டு புரட்சிகர கடமைகளும் உண்மையில் ஏற்கனவே இணைக்கப் பட்டிருக்கின்றன. தேசியப் புரட்சியையும் சனநாயகப் புரட்சியையும் புரட்சியின் முற்றிலும் வேறுபட்ட இரண்டு கட்டங்கள் எனக் கருதுவது தவறாகும்.

## 11

# சமூக சனநாயகத்தின் விவசாய வேலைத்திட்டம்

—வி. இ. லெனின்

முதலாளிய விவசாயப் பரிணாம வளர்ச்சியின் இருவகைகளைத் தொடர்வோம். முதலாளி வர்க்கத்திற்கு எதிரான சோசலிசப் போராட்ட நிலையில் இருந்து காணும் பொழுது கேலிக்குரியதாகவும், எதிர்புரட்சிகரமானதாகவும் இருக்கும் நரோத்னிக் கொள்கைகள், அடிமைத் தனத்திற்கு எதிரான முதலாளியப் போராட்டத்தில் விவேகமுள்ளதாகவும், (குறிப்பான வரலாற்றுக் கடமையைக் கொண்டிருக்கிற அர்த்தத்தில்) முன்னேற்றகரமானதாகவும் இருக்கிறது என நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம். இப்பொழுது, கேள்வி எழுகின்றது: அடிமைத் தனமானது, தவிர்க்க இயலாதவாறு, ருஷ்ய நிலவுடைமையில், முழுமையான ருஷ்ய சமூக அமைப்பால், இறந்து படும் என நாம் கூறும் பொழுது, இத்தகையமாற்றம், ஒரே குறிப்பிட்ட வடிவில் நிகழும் என்று இது இருக்கிறதா? அல்லது பல வடிவங்களுக்கு வாய்ப்பு உள்ளதா?

நமது புரட்சி, மற்றும் சமூக சனநாயக விவசாய வேலைத் திட்டம் இவற்றின் மீது சரியான நிலைப்பாடுகளை வந்தடைவதில், இந்தக் கேள்வியானது, உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்தாக உள்ளது. இந்தப் பிரச்சினையை நாம் தீர்த்தாக வேண்டும். அதற்கு, நாம் புரட்சியின் பொருளாதார அடிப்படை சம்பந்தமான விவரங்களிலிருந்து தொடங்க வேண்டும். ருஷ்யாவில் அடிமைத்தனம் பிழைத்திருப்பதற்கு மிகவும் தெளிவாக உருக் கொடுக்கக் கூடிய, வலிமை வாய்ந்த முக்கிய ஆதாரமான நிலப் பிரபுத்துவம்தான்

போராட்டத்தின் முக்கிய மையமாக இருக்கிறது. சந்தைப் பொருள் உற்பத்தி, முதலாளித்துவம் இவற்றின் வளர்ச்சி, அத்தகைய உயிர் பிழைத்தல் தவிர்க்க இயலாதவாறு ஒரு முடிவுக்கு கொண்டு வரும். இந்த வகையில், ருஷ்யாவின் முன் ஓரே ஒரு வழிதான் உள்ளது; அது அதன் முதலாளித்துவ வளர்ச்சியாகும்.

ஆனால், அத்தகைய வளர்ச்சிக்கு இரு வடிவங்கள் இருக்கலாம். அடிமைத்தனத்தின் உயிர் பிழைத்தல் நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தின் தன்மையினை மாற்றி அமைப்பதின் மூலமோ, அல்லது நிலப்பிரத்துவத்தை அழிப்பதின் காரணமாகவோ அதாவது சீர்திருத்தத்தின் மூலமாகவோ அல்லது புரட்சியின் மூலமாகவோ கேள்வியினைத் தழுவலாம். முதலாளித்துவ வளர்ச்சி படிப்படியாக முதலாளித்துவ மயமாக மாறுகின்ற, மேலும் படிப்படியாக நிலப்பிரபுத்துவ சுரண்டல் முறைக்கு மாற்றீடாக முதலாளித்துவ சுரண்டலை வைக்கின்ற, பெரும் நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தைக் கட்டமைப்பதின் மூலம் தொடரலாம். புரட்சிகரமான முறையில், சமுதாய உயிரியில் இருந்து, நிலப்பிரபுத்துவ கழிவுகளை வெளியேற்றக் கூடிய சிறு விவசாய பொருளாதாரத்தை முன் வைப்பதன் மூலம் தொடரலாம். மேலும், இதன்பின் முதலாளித்துவமானது, இவை இன்றியே முதலாளித்துவ பொருளாதாரப் பாதையினூடே முன்னேறும்.

முதலாளித்துவ வளர்ச்சிக்கு, ''புறவயமாகச் சாத்தியமா'' அந்த இரு வழிகளை, ''பிரஷ்யன் பாதை'' ''அமெரிக்கர் பாதை'' என்று அழைக்கலாம். முதல் நிகழ்ச்சியில், விவசாயிகளைத் தலை முறை தலைமுறையாக, கொடூரச் சுரண்டலுக்கும், கொத்தடிமைத் தனத்திற்கும் உட்படுத்திய, நிலப்பிரபுத்துவ பண்ணைப் பொருளாதாரம், முதலாளித்துவ, ஜங்கர் பண்ணைப் பொருளாதாரமாக வளர்ச்சியடைகிறது. அதே சமயத்தில், ஒரு குறுகிய, சிறுபான்மையான, ரோஸ்பாரன் (Roos bauron) (பெரும் விவசாயிகள்) உதித்தனர். இரண்டாவது நிகழ்வில், பண்ணைகளின் பொருளாதார அமைப்பு இல்லை; அல்லது, நிலப்பிரபுத்துவப் பண்ணைகளைக் கைப்பற்றிப் பிளக்கும் புரட்சியால் அது நொறுக்கப்படுகிறது. இந்த நிகழ்வில், விவசாயி ஆதிக்கம் செலுத்துகிறார்; விவசாயத்தின், முழு காரியஸ்தனாக மாறுகிறார்; மேலும், முதலாளிய விவசாயியாகப் பரிணமிக்கிறார். முதல் நிகழ்வில், நிலப்பிரபுத்துவ கொத்தடிமைத்தனத்தை, அடிமைத்தனமாக மாற்றுவதிலும், நிலப்பிரபுத்துவப் பண்ணை நிலங்களில் முதலாளியச் சுரண்டல் முறையை —ஜங்கர்கள் —நிறுவுவதும், அதன் பரிணாமத்தின் முக்கிய விசயமாக இருக்கிறது. இரண்டாவது நிகழ்வில், அதன் முக்கிய பின்பலம்

குறிப்பிட்ட விவசாயியை, முதலாளிய விவசாயியாக மாற்றுவதில் உள்ளது.

ருஷ்யப் பொருளாதார வரலாற்றில், இத்தகைய இரு பரிணாம வகைகளும், தெளிவான சான்றுகளோடு உள்ளன. அடிமைத்தன வீழ்ச்சிக் கால கட்டத்தை எடுத்துக் கொள்வோம். சீர்திருத்தத்தைக் கொண்டும் வழிமுறையில், நிலப்பிரபுக்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் ஒரு போராட்டம் நடந்தேறியுள்ளது. இரண்டு வர்க்கமுமே, முதலாளியப் பொருளாதார வளர்ச்சி நிலைமைகளுக்காக நின்றன. (அதைப்பற்றிய கவனமின்மை இல்லாமலே) ஆயின், நிலப்பிரபுத்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தை, நிலப்பிரபுத்துவ வரிமுறைகளை, நிலப் பிரபுத்துவச் சுரண்டல் முறைகளைக் (கொத்தடிமைத்தனம்) கூடிய மட்டும் பாதுகாக்கின்ற ஒரு வளர்ச்சியை விரும்பியது. விவசாய வர்க்கமானது, நிலவுகின்ற விவசாய நிலைமைகளுடன், விவசாயி களின் உயர்ந்த செழிப்பான வாழ்க்கைத் தரச் சாத்தியப்பாடுகளை உத்திரவாதம் செய்யும், நிலப்பிரபுத்துவத்தை அழிக்கும், அனைத்து அடிமைத்தன மற்றும் கொத்தடிமைத்தனச் சுரண்டலை ஒழிக்கும், ஒரு வளர்ச்சியை விரும்பியது. ''விவசாயச் சீர்திருத்தத்திற்கு'' நிலப்பிரபுக்கள் கையாண்ட முறையினைவிட, இரண்டாவது வழிமுறையில்தான், முதலாளிய வளர்ச்சி மற்றும் உற்பத்திச் சக்தியின் வளர்ச்சி மிகவும் விரிந்த அளவிலும், மேலும் மிகுந்த வேகமான முறையிலும் இருந்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. மார்க்சியத்துக்கு எதிரான நரோத்னிக்குகளைப் போன்ற, கேலிச்சித்திர மார்க்சியவாதிகள்தான், 1861-இல் நிலத்திலிருந்து விவசாயி தனிமைப்படுத்தப்பட்டது முதலாளிய வளர்ச்சிக்கு உத்திரவாதமளிக்கிறது என நம்பி, அதைச் சித்திரமாய் வரைகின்றனர். இதற்கு மாறாக, இது கொத்தடிமைத் தனத்தின் உத்திரவாதமாக- ஆகையினால், உண்மையிலேயே, ஓர் உத்திரவாதமாக மாறியது- இருந்திருக்கும்; அதாவது, இன்னும் கூடுதலாக- முதலாளியத்தின் வளர்ச்சியையும், தடைசெய்யும் ஓர் அரை அடிமை-குத்தகைப் பண்ணை முறை மற்றும் உழைப்புக் குத்தகை அதாவது கூலியில்லா வேலைப் பொருளாதாரம் இருந்திருக் கும். விவசாயிகளின், நிலப்பிரபுக்களின் நலன்களுக்கு இடையேயான முரண்பாடானது, ''மக்களின் உற்பத்தி'' ''தொழிலாளர் கொள்கை'' ஆகியவற்றால் முதலாளிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட போராக இருக்கவில்லை. (நமது நரோத்னிக்குகள் இது இப்படி இருக்குமென கற்பனை செய்திருப்பதைப் போன்று) இது, அமெரிக்கா

மாதிரி முதலாளிய வளர்ச்சிக்காக, பிரஷ்யா மாதிரி முதலாளிய வளர்ச்சியை எதிர்த்த போராட்டமாகவே இருந்தது.

அடிமைத்தனம் நிலவாத, விவசாயம் முற்றிலுமாக, பிரதான மாக, ''சுதந்திர விவசாயிகளால்'' எடுத்துக் கொள்ளப்பட்ட, அத்த கைய ருஷ்யப் பகுதிகளில் (உதாரணமாக, சீர்திருத்தத்துக்குப் பின் காலனியாக்கப்பட்ட பிரான்ஸ் வோல்கா ஸ்டெப்பிப் பகுதி. நோவோரோஸியா, வடக்கு காகஸஸ் பகுதிகள்) உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சியும், முதலாளித்துவத்தின் முன்னேற்றமும், அடிமைத் தனத்தின் மிச்ச மீதங்களால் அழுத்தப்பட்ட மத்தியப் பகுதிகளை விட மிகவும் மோசமாக இருந்தன.

ருஷ்யா விவசாய மையம் மற்றும் விவசாய எல்லைப்புற நிலங் கள், நமக்குக் காட்டுவதைப் போன்றே, அந்தப் பகுதிகளின் வெளி (Spatial) அல்லது பூகோள ரீதியான பகிர்மாணம், ஒன்று அல்லது மற்றைய வகையின் பரிணாமம் வழக்கிலிருக்கிறது எனவும், நிலப்பிர புத்துவ மற்றும் விவசாயப் பண்ணை முறை அடுத் தடுத்து நிலவுகின்ற அந்தப் பகுதிகளில், இரண்டு வகை யான பரிணாமங்களின் விசேஷ குணாம்சங்களும் தெளி வாகப் புலப்படுகின்றன எனவும் காட்டுகின்றன. ''மக்களின் உற்பத்தி'', ''தொழிலாளர் கொள்கை'' என்ற நோக்கு நிலை களிலிருந்து விவசாயப் பண்ணை முறையை நரோத்னிக்குகள் அங்கீகரித்த அதே வேளையில் நிலப்பிரபுத்துவப் பண்ணை முறை விவசாய முதலாளித்துவத்துக்கான ஒரே வழி என அவர்கள் நம்பியதே நரோத்னிக் பொருளாதார வாதிகள் செய்த மாபெரும் தவறு. (இப்பொழுதும் கூட, இந்த நிலைப்பாடு துருதோவிக்குகள், புகழ் வாய்ந்த சோஷலிஸ்டுகள் மற்றும் சோஷலிஸ்டு புரட்சியாளர் களால் எடுத்துக்கொள்ளப்படுகிறது.) இது தவறு என நாம் அறிவோம். நிலப்பிரபுத்துவப் பொருளாதாரம் முதலாளிய வழியில் பரிணமிக்கிறது; மேலும், படிப்படியாக, உழைப்புக் குத்தகைக்குப் பதிலாக (Labour rent) ''கட்டற்ற கூலி உழைப்பு'' (Free wage Labour); தீவிர வேளாண்மை மூலம் ''முப்போக முறையையும்'', பெரிய தனியார் பண்ணைகளில், காலம் கடந்த விவசாயக் கருவிகளுக்குப் பதிலாக, முன்னேறிய இயந்திரங் களைப் புகுத்துகிறது. விவசாயப் பண்ணை முறையும், முதலாளிய வழியில் பரிணமித்து, கிராமப்புற முதலாளி, கிராமப்புறப்பாட்டாளி வர்க்கங்கள் எழ வாய்ப்பு அளிக்கின்றன. ''கிராமச் சமூகத்தின்'' முன்னேறிய நிலையும், பொதுவாக, கிராமப்புற விவசாயிகளின் செழிப்பான வாழ்க்கைத் தரமும், விவசாயிகளிடையே முதலாளிய

விவசாயத்தின் பகை வர்க்கங்களாகப் பிரிந்து வேறுபடுத்தும் நிகழ்வு மிக வேகமாகவே நடைபெறுகிறது. இதன் விளைவாக எங்கெங்கும் இருவகைப் போக்கிலான விவசாயப் பரிணாம வளர்ச்சியை நாம் காண்கிறோம். சீர்திருத்தத்துக்கும் பிந்திய ருஷ்யாவின் வரலாறு முழுவதின் ஊடே சிவப்பு நூலிழை போல ஓடுகின்ற, உழவர்கள் மற்றும் நிலப்பிரபுக்களின் நலன்களுக்கிடையிலான மோதல், நமது புரட்சியின் மிக முக்கிய பொருளாதார அடித்தளமாக இருந்தது. இம்மோதல் முதலாளிய விவசாயப் புரட்சிக்கான போராட்டமாகும்.

இந்த இரு வகைகளுக்கு இடையேயான வேறுபாட்டையும் இவை இரண்டின் முதலாளியப் பண்பியல்பையும் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்வதின் மூலம்தான், ருஷ்யப் புரட்சியில், விவசாயப் பிரச்சினையைச் சரியாக விவரிக்க முடியும்; பல்வேறான கட்சிகள் முன் வைக்கும் பலவகையான விவசாயத் திட்டங்களின் வர்க்கக் குறிபொருளை (முக்கியத்துவத்தை) அறிய முடியும். ''நிலப்பிரபுத்துவம்'' பெரும் பண்ணை ஆட்சி நிலைதான் போராட்டத்தின் ''சுழல் அச்சு'' என நாம் மீண்டும் கூறுவோம். இவை இரண்டின் முதலாளியப் பரிணாமம், அனைத்து வாக்கு வாதங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையில் இருக்கிறது. ஆனாலும், இத்தகைய இரு வடிவங்களிலும், ''முதலாளியப் பரிணாமம்'' சாத்தியமாக இருக்கிறது. விவசாயிகளால், புரட்சிகரமான முறையில், அவை ஒழிக்கப்படும்; நீக்கப்படும். அல்லது, அவை படிப்படியாக, ஜங்கர் பண்ணைகளாக மாற்றப்படும். (மேலும், இதன் பயனாக, அடிமை முழிக் (Muzhik), அடிமை நெக்ட் (Knecht) ஆக மாற்றப்படும்.

12

# தொழிலாளர் கட்சியின் விவசாய வேலைத்திட்டத்தின் மாற்றம் குறித்து

—வி. இ. லெனின்

## நமது விவசாய வேலைத்திட்டத்தின் நோக்கங்கள்

சமூக சனநாயகக் கட்சி, சனநாயகப் புரட்சிக்கான கால கட்டத்தில், தொழிலாளர்களையும், விவசாயிகளையும் அறைகூவி அழைக்க வேண்டும் என்று தெளிவான மற்றும் நேரடியான வடிவத்தில் ஆலோசனையை முன்வைக்க முயன்றோமானால், ரு.ச.ச.தொ. கட்சியின் விவசாய வேலைத் திட்டத்தைப் பற்றியதான கேள்வி, மிகத் தெளிவாக இருந்திருக்கும்.

முதல் அறிவுரையானது, அவசியமானதாக, கீழ்க்கண்டவாறு இருந்திருக்கும்: ஒவ்வொரு முயற்சியையும், விவசாய எழுச்சியின் முழு வெற்றியைச் சாதிப்பதற்காகத் தயாரித்தல் வேண்டும். இத்தகைய வெற்றி இன்றி, நிலப்பிரபுக்களிடமிருந்து "நிலங்களைக்கைப் பற்றுதல்" என்று கறாராகப் பேசுவதோ அல்லது உண்மையிலேயே சனநாயகமான அரசினை அமைப்பதோ சாத்தியமற்றதாக இருக்கும். மேலும், விவசாயிகளைக் கலகம் செய்யத் தூண்டக்கூடிய ஒரே முழக்கமானது: பண்ணை நிலங்கள் அனைத்தும் கைப்பற்றுதல் (மறைமுகமாக, "நஷ்டஈடு வழங்குதல்" என்ற கேள்வியினை ஒதுக்கித் தள்ளக் கூடியவாறு, பொதுவாக அந்நியமாதல் இன்றி அல்லது பொதுவாக உடைமையாளர்களிடமிருந்து கைப்பற்றுதல்) மேலும், அரசியல் சபையின் கூட்டத்தை நிறுத்தி, உறுதியாக, விவசாயக் கமிட்டிகள் மூலம் கைப்பற்றுதல்.

வேறு எந்த விதமான அறிவுரையும் (மாஸ்லோவின் கோஷமான "அந்நியமாதல்" மற்றும் "நகர சபைக்குச் சொந்தமாக்குதல்" என்பதனையும் உள்ளிட்டு) புரட்சியின் வழியாக இல்லாமல் எதிர்ப் புரட்சிகர மைய அதிகாரத்துடன், நிலப்பிரபுக்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விவசாய வர்க்கத்திற்கு ஓர் அழைப்பாக இருக்கிறது. புரட்சிகரமான வழியால் இன்று, அதிகார வழியில், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அழைப்பாக இருக்கிறது; ஏனெனில் புரட்சிகர உழவர் குழுக்களுடன் ஒப்பிடுகையில் மிக உயர்ந்த, சனநாயகப் பிரதேச மற்றும் ஜெம்ஸ்த்வோ (Zemstoo) அமைப்புகள் கூட அதிகாரவர்க்க மனோபாவம் கொண்டவையாகவே உள்ளன. புரட்சிகர உழவர் குழுக்கள் அங்கேயே, அப்பொழுதே, நிலப்பிரபுக்களுடன் கணக்குத் தீர்த்துக் கொள்கின்றன; பின்பு ஒரு தேசீய அரசியல் சபை வழங்கப் போகிற அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும்.

இரண்டாவது அறிவுரையானது, இன்றியமையாது பின் வருமாறு இருக்கும். அரசியல் அமைப்பு முற்றிலுமாக சனநாயக ரீதியாக அமைக்கப்படாவிடில், குடியரசு நிறுவப்படாவிட்டால், உண்மையிலேயே, மக்களின், இறைமை உறுதி செய்யப்படாவிட்டால், விவசாய எழுச்சியின் மூலம் வென்ற பயன்களைத் தக்க வைப்பது பற்றியோ அல்லது மேலும் முன்னேற்றுவது பற்றியோ நினைப்பது பயனற்றது ஆகும். நாம் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், அனைத்து ஐயங்களையும், பலவாறு அர்த்தம் எடுத்துக் கொள்ளும் நிலையினையும், தவறான வியாக்கியானங்களையும், எதிர்ப்புரட்சிகர மைய அதிகாரத்தின் கீழ் நிலப்பிரபுத்துவத்தை அழித்துவிடமுடியும் என்ற கேளிக்குரிய தெளிவற்ற எண்ணங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில், மிகவும் தெளிவாக, சிறந்த முறையில், இந்த அறிவுரையை விளக்கிச் சொல்ல வேண்டும். மேலும், இதன் காரணமாக நமது அரசியல் அறிவுரையை அழுத்திக் கூறுவதில் நாம் விவசாயிகளுக்குச் சொல்ல வேண்டும்: நிலங்களை எடுத்துக் கொண்ட பிறகு, நீங்கள் மேலும் செல்ல வேண்டும்; இல்லையெனில் நீங்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் பெரும் முதலாளிகளால் தோற்கடிக்கப்படுவீர்கள். பலாத்காரமாக பின் தூக்கி எறியப்படுவீர்கள். புதிய அரசியல் இலாபங்களை அடையாமலோ, பொதுவாக நிலங்களின் தனியார் உடைமையின் மீது மேலும் முன்னைவிட பலம் வாய்ந்த அடுத்த அடியினைத் தொடுக்காமலோ, நாம் நிலங்களை எடுத்துக் கொள்ளவும், தக்க வைத்துக் கொள்ளவும் முடியாது. அரசியலில், சமுதாய வாழ்க்கையின் அனைத்துப் பகுதியையும் போன்று, நீங்கள் முன்-

நோக்கித் தள்ளவில்லை என்றால், நீங்கள் பலாத்கராமாக, பின்னால் தூக்கி வீசியெறியப்படுவீர்கள். சனநாயகப் புரட்சியின் பின்பலம் பொருந்திய முதலாளித்துவ வர்க்கத்தார் (இது இயற்கையாக, முதலாளித்துவ வர்க்கத்தாரைப் பலம் பொருந்திய தாக ஆக்குகின்றது) தொழிலாளர்களின், விவசாயிகளின் அனைத்து விதமான அவர்களுடைய லாபங்களைத் திருடிக்கொள்வார்கள்; அல்லது, தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்களுடைய பாதையில் மேலும் முன்னேறிச் செல்லப் போராடுவார்கள். மேலும், இது ஒரு குடியரசினையும், ஒரு முழுமையான மக்களின் இறைமையையும் குறிக்கிறது. குடியரசு நிறுவப்படுவது முதலாளிய சனநாயகப் புரட்சி சாதிக்கக் கூடிய, அனைத்துப் பெரும்பாலான நிலங்களைத் தேசிய மயமாக்குதலின், முதலாளிய சனநாயகப் புரட்சியில் இருந்து, சோசலிசத்திற்கு மாறிச்செல்வதற்கான, இயற்கையான மேலும் அவசியமான போராட்டம் ஆரம்பமாவதைக் குறிக்கிறது.

**மூன்றாவது மற்றும் கடைசி அறிவுரை:** கிராம மற்றும் நகரத் தொழிலாளர்கள் அரைப் பாட்டாளிகள் தனித்தனியாக அமைப்பாகிறார்கள். மிகச்சிறிய, உழைக்கும் 'உடமையாளரை' உள்ளிட்டு அனைத்து எந்த விதமான சிறு உடமையாளர்களையும் நம்பாதீர்கள். வியாபாரப் பொருள் உற்பத்தி முறை நீடிக்கும் வரை, சிறுவீத முதலாளியத்துடன் உறவு கொள்ளாதே. விவசாய எழுச்சியானது வெற்றிக்கு அருகாமையில் இருக்கும் பொழுது, விவசாய (நில) முதலாளி, தொழிலாளிகளுக்கு, எதிராகத் திரும்புவது நிதர்சனமானது; தொழிலாளிகளுக்கு அவர்களுடைய சுதந்திரமான அமைப்பைப் பெறுவது அவசியமானதாக இருக்கிறது; மேலும், மேலும் கடுமையாக, விடாமுயற்சியுடன், தீர்மானகரமாக உரக்க, நாம் சோஷலிசப் புரட்சிக்கு அறைகூவல் விடுக்க வேண்டாமா? விவசாய இயக்கத்தின் முடிவு வரை, நாம் அதனருகில் நிற்கிறோம்; ஆனால், சோஷலிசப் புரட்சியினைக் கொண்டுவராத மேலும் கொண்டுவர முடியாத, பிரிதொரு வர்க்கத்தின் இயக்கம் என்று நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதன் காரணமாக, பொருளாதாரநடவடிக்கையின் கடமையான நில விநியோகம் பற்றி என்ன செய்யப்பட வேண்டும் என்ற கேள்வியின் பக்கமாய் நிற்கிறோம். முதலாளித்துவ சமூகத்தில் இந்தப் பிரச்சினை சிறிய மற்றும் பெரிய முதலாளிகளால் தீர்க்கப்படும்; மேலும் தீர்க்கப்பட முடியும். நாம் இதில் அதிகமான ஆர்வம் காட்டுவது எதுவெனில்: (மேலும், பிரத்தியேகமாக, விவசாய எழுச்சிக்குப் பின்) கிராமப்புறப் பாட்டாளிகள் செய்ய வேண்டியது என்ன? சமப்படுத்தப்பட்ட நில உரிமை மேலும் இவை போன்றவற்றைப் புனைவதற்குக் குட்டிமுதலாளிய சித்தாந்தி

களிடம் இதை ஒப்படைத்துவிட்டு நாம், இந்தக் கேள்வி பற்றியே முக்கியமாக அக்கறைகாட்டுகிறோம்; காட்டுவோம்; தொடர்பு கொள்வோம். புதிய முதலாளிய சனநாயக ருஷ்யாவின், அடிப்படையான இந்தக் கேள்விக்கு நமது பதில்: கிராமப்புறப் பாட்டாளிகள், நகர்ப்புறப் பாட்டாளிகளுடன், சோசலிசப் புரட்சி முழுமை பெறுவதற்காகப் போராடுவதற்குக் கிராமப்புறப் பாட்டாளிகள் அமைப்பு ரீதியாகத் தனியாகவும் நகர்ப்புறப் பாட்டாளிகளுடனும் ஒன்று சேர வேண்டும்.

எனவே நமது விவசாய வேலைத்திட்டம் மூன்று முக்கிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். முதலாவது, நிலப்பிரபுத்துவத்தின் மீது புரட்சிகர விவசாயத் தாக்குதலுக்கான, மிக அழுத்தமான அறைகூவலைத்தெளிவாகக்கூறுதல். இரண்டாவது, அடுத்த நடவடிக்கை பற்றிய நுணுக்கமான வரையறை: விவசாயிகளின் நலன்களை உறுதி செய்வதற்கும், சனநாயகத்தின் வெற்றியிலிருந்து, சோசலிசத்திற்காக, நேரடியான பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கும், இயக்கம் நடத்த முடியும்; நடத்த வேண்டும். மூன்றாவது, விவசாயி எழுச்சியின் காரணமாக அருகில் நெருங்குகிற மிகவும் அவசரமாக நம்முடன் மோதுகிற மேலும், உறுதியாக ஒரு தெளிவான திட்டத்தை வகுக்கக் கோருகின்ற கட்சியினது, பாட்டாளி வர்க்க நோக்கங்களைப் பற்றிய ஒரு குறிப்புரை.

# 13

# மார்க்சியமும் புரட்சி எழுச்சியும்

ருஷ்யாவின் சமூக-சனநாயகத் தொழிலாளர் (போல்ஷெவிக்குகள்) கட்சியின் மையக்குழுவுக்கு ஒரு கடிதம்.

ஆதிக்கமுள்ள "சோசலிஸ்டுக்" கட்சிகள் ஆக விஷமத்தனமாகக் கையாண்டும், பெரும்பாலும் மிகப் பெருமளவு விரிவாகப் பரப்பியும்வரும் மார்க்சியம் பற்றிய புரட்டுகளில் ஒன்று புரட்சி எழுச்சிக்கான தயாரிப்பும், பொதுவாகப் புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருதி வரும் "பிளான்கிவாதம்" என்று கூறும் சந்தர்ப்பவாதப் பொய்யேயாகும்.

சந்தர்ப்பவாதத்தின் தலைவரான பெர்ன்ஷ்டைன் மார்க்சியத்தினைப் பிளான்கிவாதம் என்று குற்றம் சாட்டியது மூலம் ஏற்கனவே அவப்பேறான புகழினை ஈட்டியிருந்தார். நமது இன்றைய சந்தர்ப்பவாதிகள் பிளான்கிவாதம் என்று கூக்குரலிடுவது மூலம் பெர்ன்ஷ்டைனின் அற்பமான "கருத்துக்களை" கிஞ்சித்தும் மேம்படுத்தவோ அல்லது செழுமைப்படுத்தவோ இல்லை.

புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருதுகிறார்கள் என்பதால் மார்க்சியவாதிகள் மீது பிளான்கிவாதம் என்று கூறிக் குற்றம் சாட்டப்படுகிறது! மார்க்ஸ் இந்த விஷயத்தில் மிகவும் திட்டவட்டமாக—துல்லியமாக, ஐயத்திற்கிடமற்ற தன்மையில் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். புரட்சி எழுச்சியைக் குறிப்பாயும் ஒரு கலை என்று குறிப்பிட்டு அது ஒரு கலையாகக் கட்டாயம் கருதப்பட வேண்டும் என்றும் முதல் வெற்றியை நீங்கள் போராடி அடைய வேண்டும் பிறகு வெற்றியிலிருந்து வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும், எதிரியின் குழப்பத்தைச் சாதகமாக எடுத்துக் கொண்டு, எதிரியை எதிர்த்தத் தாக்குதலை என்றுமே நிறுத்திவிடக்கூடாது

என்றும் கூறியுள்ளார் என்பதை மார்க்சியர் எவரும் மறுக்கமாட்டார் என்றிருக்கும் பொழுது இதைவிட உண்மையைப் படுமோசமாகப் புரட்டும் செயல் வேறுண்டா?

புரட்சி எழுச்சி வெற்றிக்கு வழிவகுக்க வேண்டுமானால் அது சதியாலோசனை மீதோ மற்றும் ஒரு கட்சியினையோ நம்பிச் சார்ந்திருக்கக் கூடாது. மாறாக முன்னேற்றமான வர்க்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இதுவே முதல் நிபந்தனை. புரட்சி எழுச்சி மக்களின் புரட்சிகரமான கிளர்ச்சியைச் சார்ந்திருக்க வேண்டும். இது இரண்டாவது நிபந்தனை. புரட்சி எழுச்சி வளர்ந்துவரும் புரட்சி வரலாற்றின் திருப்பு முனையைச் சார்ந்திருக்க வேண்டும்; அப்பொழுது மக்களின் முன்னேற்றமான அணிகளின் செயல்பாடு அதன் உச்சத்தில் இருக்கும், எதிரியின் அணிகளிலும் புரட்சியின் பலவீனமான அரை மனது மற்றும் உறுதியற்ற நண்பர்களின் அணிகளிலும் ஊசலாட்டங்கள் வலுவாக இருக்கும். இது மூன்றாவது நிபந்தனை. புரட்சி எழுச்சி பற்றிய பிரச்சினையை எழுப்புவதற்கான இந்த மூன்று நிபந்தனைகளும் மார்க்சியத்தைப் பிளான்கிவாதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

ஆயினும் இந்த நிபந்தனைகள் நிலவும்போது, புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருத மறுப்பது மார்க்சியத்திற்குத் துரோகம் செய்வதாகும்; புரட்சிக்குத் துரோகம் செய்வதாகும்.

நிகழ்ச்சிகளின் முழுமையான போக்கும், புரட்சி எழுச்சியை நாள் நிகழ்ச்சி நிரலில் புறநிலை நோக்கில் வைத்திருக்கும் ஒரு தருணம் குறிப்பாய் இன்றைய தருணமே. இதைக் கட்சி கட்டாயம் உணர வேண்டும் என்பதையும், புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருத வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்ட ஒப்புநோக்கும் முறையினைப் பயன்படுத்துவதும், ஜூலை 3-4 மற்றும் செப்டம்பர் நாட்களுக்கிடையேயான வேறுபாட்டை ஆய்வு செய்வதும் சிறப்பானதாக இருக்கும்.

ஜூலை 3-4-இல் செய்ய வேண்டிய சரியான காரியம் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்வதே என்று உண்மையை மீறாமல்; வாதிட்டிருக்க முடியும். காரணம், நமது எதிரி நம்மை எப்படியும் புரட்சி எழுச்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தி, நம்மைக் கலகக்காரர்களாக இரக்கமின்றி நடத்தியிருப்பார்கள். எனினும், இந்தக் காரணத்தால் அந்த நேரத்தில் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ள ஆதரவாக முடிவு செய்வது தவறாக இருந்திருக்கும். புரட்சி எழுச்சியின் வெற்றிக்கான புறவய நிலைமைகள் அன்று இருக்கவில்லை.

1. புரட்சியின் முன்னணிப் படையான வர்க்கத்தின் ஆதரவு இன்னும் இருக்கவில்லை.

பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோவின் தொழிலாளர் படை வீரர்களிடையே பெரும்பான்மையினர் இன்னும் நம் பக்கம் இருக்க வில்லை. இப்போது இரண்டு சோவியத்துகளிலும் பெரும்பான்மை இருக்கிறது. இது முற்றிலும், ஜூலை ஆகஸ்ட் வரலாற்றாலும்; போல்ஷெவிக்குகள் ''இரக்கமற்ற முறையில் நடத்தப்பட்டதால்' ஏற்பட்ட அனுபவத்தாலும் கர்னீலவ் கலகத்தின் அனுபவத்தாலும் உருவாக்கப்பட்டது.

2. அந்தச் சமயத்தில் நாடு தழுவியதான புரட்சிகர கிளர்ச்சி இல்லை. கர்னீலவ் கலகத்திற்குப் பிறகு இப்போது இருக்கிறது. மாகாணங்களிலுள்ள நிலைமையும், பல ஸ்தலங்களில் சோவியத்து கள் ஆட்சி அதிகாரம் மேற்கொண்டிருப்பதும், இதை நிரூபிக்கின் றன.

3. அந்தச் சமயத்தில் எமது எதிரிகளிடையிலும், உறுதியற்ற குட்டி முதலாளிய வர்க்கத்தினரிடையிலும் எந்தவொரு முனைப் பான அரசியல் அளவுக்கும் ஊசலாட்டம் இருக்கவில்லை. இப்போது ஊசலாட்டம் மிகப்பெரிய அளவில் இருக்கிறது. நமது தலையாய எதிரி ''கூட்டணி நாடுகள்'' மற்றும் உலக ஏகாதிபத்தியம் (உலக ஏகாதிபத்தியத்திற்குக் ''கூட்டணி நாடுகள்'' தலைமை தாங்குகின் றன) வெற்றிகரமான முடிவுவரைப் போரை நடத்துவது, அல்லது ருஷ்யாவுக்கு எதிராகத் தனிப்பட்ட ஒரு சமாதானம் செய்து கொள் வது என்பவற்றுக்கிடையே ஊசலாடத் தொடங்கியுள்ளது. மக்களி டையே பெரும்பான்மையைத் தெளிவாக இழந்துவிட்ட எமது குட்டி முதலாளிய சனநாயகவாதிகள் மிகப் பெருமளவுக்கு ஊசலாடத் தொடங்கியுள்ளனர். காடேட்டுகளுடனான கூட்டணியை அதாவது ஒரு கூட்டாட்சியை அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

4. எனவே ஜூலை 3-4இல் புரட்சி எழுச்சி என்பது தவறாக இருந்திருக்கும்; நாம் ஆட்சி அதிகாரத்தைப்புலப்படுத்தும் வகையிலும் அரசியல் முறையிலும் நீடித்து வைத்திருக்க முடியாது. சில சமயங் களில் பெத்ரோகிராத் நமது கரங்களில் இருந்தபோதிலும் அதை நாம் புலப்படும் வகையில் நீடித்து வைத்திருக்க முடியாது. காரணம், அந்தச் சமயத்தில் நமது தொழிலாளர்களும், போர் வீரர்களும் பெத்ரோகிராதுக்காகப் போராடி உயிரிழந்திருக்க மாட்டார்கள். கேரென்ஸ்கிகள், தெஸெரெத்தேலிகள் மற்றும் செர்னோவ்கள் மீது அந்தச் சமயத்தில் அந்தக் ''கொடூரத் தன்மை''

அல்லது மூர்க்கமான பகைமை இருக்கவில்லை. சோசலிஸ்டு புரட்சியாளர்களும், மென்ஷெவிக்குகளும் பங்குபற்றிய அடக்குமுறை வேட்டைக்குப் போல்ஷெவிக்குகள் இலக்கானதால் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து நமது மக்கள் இன்னும் உறுதிப்பட்டிருக்கவில்லை.

ஜூலை 3-4இல், அரசியல் முறையில் நாம் ஆட்சி அதிகாரத்தை நீடித்து வைத்திருந்து இருக்க முடியாது, காரணம். கர்னீலவ் கலகத்திற்கு முன்னால் இராணுவமும் மாகாணங்களும் பெத்ரோகிராதை எதிர்த்து அணிவகுத்துச் செல்லக்கூடும், சென்றிருக்க முடியும்.

இப்போது சித்திரம் முற்றிலும் வேறாக உள்ளது.

நமக்கு ஒரு வர்க்கத்தின் பெரும்பான்மையினது ஆதரவு, புரட்சியின் முன்னணிப்படையின் மக்களின் முன்னணிப் படையின் ஆதரவு இருக்கிறது. அது மக்களைத் திரட்டிச் செல்லும் ஆற்றல் கொண்டது.

நமக்கு மக்களில் பெரும்பான்மையினரது ஆதரவு இருக்கிறது. காரணம், செர்னோவின் ராஜினாமா; இது உழவர்கள், சோசஷலிஸ்டு-புரட்சியாளர் கூட்டணியிடமிருந்தோ (சோசலிஸ்டு--புரட்சியாளர்களிடமிருந்தோ) நிலத்தைப் பெற மாட்டார்கள் என்பதற்கான ஒரே அடையாளமல்லாவிடினும் மிகவும் எடுப்பான தெளிவான அடையாளமாகும். இதுவே புரட்சியின் பொது மக்கள் ஆதரவுத் தன்மைக்கு முதன்மையான காரணம்.

ஏகாதிபத்தியம் முழுவதும் மென்ஷெவிக்குகள் மற்றும் சோசலிஸ்டு புரட்சியாளர்கள் கூட்டணி முழுவதும் நம்புதற்குரிய விசித்திரமான பாணியில் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு சமயத்தில் எந்த வழியில் செல்வது என்பதை நிச்சயமாக அறிந்துள்ள ஒரு கட்சியின் சாதகமான நிலைமையில் நாம் இருக்கிறோம்.

நமது வெற்றி உறுதிப்பட்டுள்ளது. காரணம், மக்கள் முழுமையாகப் பொறுமை இழந்துவிட்டார்கள், எல்லா மக்களுக்குமான உறுதியான மீள்வழியை நாம் காட்டுகிறோம்; ''கர்னீலவ் நாட்களில்'' நமது தலைமையின் மதிப்பை மக்கள் அனைவருக்கும் எடுத்துக் காட்டினோம். கூட்டணி அரசியல்வாதிகளிடம் ஒரு சமரசத்திற்கான யோசனைகளை முன்மொழிந்தோம். அவர்களது ஊசலாட்டத்தில் எவ்விதக் குறைவும் இல்லாவிடினும் அவற்றை (யோசனைகளை) அவர்கள் நிராகரித்தார்கள்.

நமது சமரச யோசனை இதுவரை நிராகரிக்கப்படவில்லை என்றும், சனநாயக மாநாடு அதை இன்னும் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் நினைப்பது மாபெருந்தவறாகும். இந்தச் சமரச யோசனை ஒரு கட்சியால் கட்சிகளிடம் முன்மொழியப்பட்டது; இது வேறு எந்த வழியிலும் முன்மொழியப்பட்டிருக்க முடியாது. அது கட்சிகளால் நிராகரிக்கப்பட்டது. சனநாயக மாநாடு ஒரு மாநாடு என்பது தவிர வேறு எதுவுமல்ல; ஒரு விஷயத்தை மறந்துவிடக் கூடாது; அதாவது, பெரும்பான்மையான புரட்சிகர மக்கள்- வெறுப்படைந்த ஏழை விவசாயிகள் இதில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கவில்லை. இது மக்களில் சிறுபான்மையினரின் மாநாடு ஆகும். இந்தக் கண்கூடான உண்மையை மறந்து விடக்கூடாது. சனநாயக மாநாட்டை ஒரு நாடாளுமன்றம் என்று நாம் கருதுவோமானால் அது பெருந்தவறாகும். அது நமது நாடாளுமன்ற மூடத்தனத்தையே அறவே காட்டுகிறது; அது தன்னைத் தானே புரட்சியின் ஒரு நிரந்தரமான சர்வ சுதந்திர நாடாளுமன்றம் என்று பறைசாற்றிக் கொண்டாலும் கூட அது எதையும் முடிவு செய்ய முடியாது. முடிவு செய்யும் அதிகாரம் அதற்கு வெளியே பெத்ரோகிராத்- மாஸ்கோ தொழிலாளி வர்க்கக் குடியிருப்பு வட்டாரங்களில் அமைந்திருக்கிறது.

எமக்கு முன்னால் வெற்றிகரமான புரட்சி எழுச்சிக்கான, புறவய நிலைமைகள் அனைத்தும் உள்ளன. உலகிலேயே மிகவும் வேதனையானதும் மக்களைச் சலிப்புக்குள்ளாக்கிவிட்டதுமான ஊசலாட்டத்திற்குப் புரட்சி எழுச்சியில் நாம் பெறும் வெற்றிமட்டுமே முடிவுகட்ட முடியும், புரட்சி எழுச்சியில் நாம் பெறும் வெற்றி மட்டுமே உழவர்களுக்கு உடனடியாக நிலம் வழங்கும். இதற்கான நிலைமையின் தனிச் சிறப்பு வாய்ந்த சாதகம் நமக்கு இருக்கிறது. புரட்சி எழுச்சியில் நாம் பெறும் வெற்றி மட்டுமே புரட்சிக்கு எதிராக முடுக்கப்படும் தனியான சமாதானம் என்ற சூழ்ச்சியைத் தோற்கடிக்கும். முழுமையான மேலும் நீதியான மேலும் முன்னதான சமாதானத்தை, புரட்சிக்கு அனுகூலமான ஒரு சமாதானத்தை வெளிப்படையாகப் பிரேரணை செய்வது மூலம் இதைத் தோற்கடிக்கும்.

இறுதியாக நமது கட்சி மட்டுமே வெற்றிகரமான புரட்சி எழுச்சி மூலம் பெத்ரோகிராதைப் பாதுகாக்க முடியும்; ஏனென்றால் சமாதானத்திற்கான நமது யோசனை நிராகரிக்கப்படுமானால், நாம் ஒரு போர் நிறுத்தத்தைக் கூடி நாடிப் பெற முடியவில்லையானால், அதன்பின் நாம் ''பாதுகாப்புவாதிகள்'' ஆகிவிடுவோம். போர்க்

கட்சிகளின் தலைமையில் நாம் இருப்போம். நாமே மிக மேம்பட்ட போர்க் கட்சியாகிவிடுவோம். போரை உண்மையிலேயே புரட்சிகரமான முறையில் நடத்துவோம். முதலாளிகளிடமிருந்து எல்லா ரொட்டிகளையும் (உணவையும்) காலணிகளையும் பறித்துக் கொள்வோம், அவர்களுக்கு ரொட்டிப் பொருக்குகளை மட்டுமே விட்டு வைத்து மரப்பட்டைக் காலணிகளை அணிவிப்போம். எல்லா உணவையும், காலணிகளையும் போர் முனைக்கு அனுப்பி வைப்போம்.

அதன்பின் நாம் பெத்ரோகிராதைப் பாதுகாப்போம்.

ருஷ்யாவில் உண்மையிலேயே ஒரு புரட்சிகரப் போரை நடத்துவதற்கான பொருளாயத, ஆன்மிக- இருவகை மூலவளங்களும் இன்னும் அளவற்றதாக இருக்கின்றன. செர்மானியர் நமக்குக் குறைந்த பட்சம் போர்நிறுத்தத்தையாவது அனுமதிப்பார்கள் என்பதற்கான வாய்ப்புகள் ஒன்றுக்கு நூறு இருக்கிறது. தற்போது ஒரு போர் நிறுத்தத்தை உறுதியாகப் பெறுவது உலகம் முழுவதையும் வென்று பெறுவதாகும்.

* * *

புரட்சியைப் பாதுகாக்கவும், இரு கூட்டணிகளையும் சேர்ந்த ஏகாதிபத்தியவாதிகளும் ''தனித்தனியாகத்'' துண்டாட விடாமல் ருஷ்யாவைப் பாதுகாக்கவும் பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோ தொழிலாளர்களின் புரட்சி எழுச்சி முற்ற முழு அவசியம் என்பதைக் கண்டுணர்ந்துவிட்ட நாம், முதலில் வளர்ந்து வரும் புரட்சி எழுச்சியின் நிலைமைகளுக்கு ஏற்ப மாநாட்டில் நமது அரசியல் போர்த் தந்திரங்களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்; இரண்டாவதாக, புரட்சி எழுச்சியை ஒருகலையாகக் கருத வேண்டும் என்ற மார்க்சின் கருத்தை நாம் சொல்லளவோடு மட்டும் ஏற்கவில்லை என்பதைக் காட்ட வேண்டும்.

மாநாட்டில் ஆள் தொகையைத் தேடித் திரியாமல், ஊசலாட்டக்காரர்களை ஊசலாட்டக்காரர் முகாமிலேயே விட்டு வைக்க அஞ்சாமல் நாம் உடனடியாக போல்ஷெவிக் குழுவை உறுதியாக இணைக்க வேண்டும். ஊசலாட்டக்காரர்கள் உறுதியான பற்றார்வமுள்ள போராட்ட வீரர்கள் முகாமில் இருப்பதை விட அங்கேயே இருப்பது புரட்சி இலட்சியத்திற்கு அதிகப்பயனுடையதாக இருக்கும்.

# 14

# போல்ஷெவிக்குகள் அரசு அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா?

(போல்ஷெவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா?)

—வி. இ. லெனின்

சோவியத்துகள் ஒரு புதிய அரசுக் கருவி ஆகும்; இது, முதலாவதாக, ஆயுதந்தாங்கிய தொழிலாளர் மற்றும் விவசாயிகள் படையை அளிக்கின்றது; பழைய நிலையான படையைப் போன்று இப்படை மக்களிடமிருந்து விலகி நிற்பதல்ல. ஆனால் மக்களோடு மிகவும் நெருக்கமாகக் கட்டுப்பட்டு இருக்கிறது. இராணுவ நிலையிலிருந்து நோக்கினால் இப்படை பழைய படைகளோடு ஒப்பிட முடியாத அளவுக்கு அதிக ஆற்றலுடையதாக இருக்கிறது; புரட்சியின் நிலையிலிருந்து நோக்கினால் இப்படையினிடத்தில் வேறு எதையும் வைக்க முடியாது. இரண்டாவதாக, இக்கருவி மக்களோடு, பெரும்பான்மையான மக்களோடு ஒரு பிணைப்பைத் தருகிறது; இப்பிணைப்பு போன்ற ஒன்று—மிகவும் குறைந்த அம்சங்களில் ஒத்திருப்பதாகக் கூட—பழைய அரசுக் கருவியில் இருந்திராத அளவுக்கு நெருக்கமாகவும் கலைக்க முடியாத படியும், அவ்வளவு எளிமையாக நிருபிக்கத்தக்கதாகவும், புதுப்பிக்கத் தக்கதாகவும் இருந்ததில்லை. மூன்றாவதாக, இந்தக் கருவியின் ஆட்களை மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள்; மக்கள் விரும்புகிறபோது அதிகாரவர்க்க முறைகள் ஏதுமின்றித் திரும்ப அழைத்துக்கொள்ள முடியும்; இந்தக் காரணத்தால் இது பழைய அரசு வடிவங்களைவிட

மேலதிக சனநாயகத் தன்மையுடையது. நான்காவதாக, மிகவும் பல்வேறுபட்ட தொழில்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பை இது அளிக்கிறது; அப்படியே சிவப்புநாடா முறை இல்லாமல் பல திறப்பட்டதும் மிகவும் புரட்சிகரமானதுமான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வசதி செய்து கொடுக்கிறது. ஐந்தாவதாக, முன்னணியினர்க்கு, அதாவது ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிலும்,தொழிலாளிகளிலும், உழவர்களிலும் உள்ள, மிக மிக வர்க்க உணர்வு பெற்ற, மிகமிக ஆற்றல் பெற்ற, மிகமிக முற்போக்கான பிரிவினர்க்கு ஓர் அமைப்பு ரீதியான வடிவத்தை அது கொடுக்கிறது; அதனால் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் முன்னணியினர் இவ் வர்க்கங்கள் முழுவதன் பரந்த மக்களை மேலே தூக்கிவிடவும், பயிற்சியளிக்கவும், வழிநடத்திச் செல்லவும் உதவக்கூடிய ஒரு கருவியாக அது அமைகிறது. இவ்வர்க்கங்களின் பரந்த மக்கட் பிரிவினர் இதுவரையில் அரசியல் வாழ்விலிருந்தும் வரலாற்றிலிருந்தும் முற்றிலும் வெளியே ஒதுங்கி நிற்கின்றனர். ஆறாவதாக பாராளுமன்ற முறையின் நற்பயன்களை உடனடி மற்றும் நேரடி சனநாயகத்தின் நற்பயன்களுடன், அதாவது மக்கள் தேர்ந்தெடுத்த சார்பாளர்களிடம் சட்டச் செயல்பாடு மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளை ஒன்றுசேர்க்க வாய்ப்பளிக்கிறது. பூர்ஷ்வா பாராளுமன்ற முறையுடன் ஒப்பிடும்போது, இது சனநாயக மேம்பாட்டில் ஒரு முன்னோக்கிய அடியாகும்; இது உலகளாவிய வரலாற்று ரீதியான முக்கியத்துவம் உடையதாகும்.

# 15

# தோழர்களுக்குக் கடிதம்

—வி. இ. லெனின்

மார்க்சியம் ஓர் ஆழ்ந்த, அறிவார்ந்த பன்முகப் பார்வையுடைய தத்துவமாகும். இதன் காரணமாக, ஆச்சரியமின்றித் துண்டு துண்டான மேற்கோள்கள்—குறிப்பாக மேற்கோள்களைச் சரியான விதத்தில் எழுப்பாதபோது—மார்க்சியத்திடமிருந்து முறித்துக் கொள்பவர்களின் விவாதங்களிலும், மார்க்சிடமிருந்து பெறப் பட்டுக் காணப்படும். இராணுவ சதியாலோசனை, ஒரு கறாரான வர்க்க ஸ்தாபனத்தால் அமைக்கப்படவில்லையென்றால், அதன் அமைப்பாளர்கள் அரசியல் இயக்கத்தைப் பொதுவாகவும், சர்வதேசச் சூழலைக் குறிப்பாகவும் பகுத்தாராய்ந்திருக்கவில்லையென்றால், ஸ்தாபனமானது பெருவாரியான மக்களின் அனுதாபத்தைப் பெற்றிருக்கவில்லையென்றால், புறவய உண்மைகள் நிரூபிப்பது போன்று புரட்சிகர நிகழ்ச்சிகளின் வளர்ச்சி, குட்டி முதலாளிய சமாதான கற்பனைகளுடன் ஒரு நடைமுறை மறுப்பைக் கொண்டு வந்திருக்கவில்லையென்றால், பெருவாரியான சோவியத் வடிவ அமைப்புகளின் புரட்சிகரப் போராட்டமானது அதிகாரமுடையதாக அங்கீகரிக்கப்படவில்லையென்றால், அல்லது அவை நடைமுறையில் வென்றிருக்கப்பட்டிருக்கவில்லை என்பதனைத் தாங்களாகவே வெளிப்படுத்தியிருக்கிறதெனில், அனைத்து மக்களின் எண்ணத்திற்கு மாறாக அரசாங்கமானது ஓர் அநீதியான போரைத் தொடர்கிறது என்ற மனோபாவமானது இராணுவத்தில் முதிர்ந்திருக்கவில்லை என்றால் (போர்க்காலமானால்) எழுப்பப்படும் கோஷங்கள் (அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே, உழுபவனுக்கே நிலம், அனைத்து ரகசிய உடன்படிக்கைகளையும், ரகசிய அதிகாரத்தையும் உடனடியாக ரத்து செய்து, போரில்

பங்கேற்றுள்ள நாடுகள் அனைத்திலும் சனநாயக அமைதிக்கான உடனடி கோரிக்கை என்பன போன்றவை) பரந்துபட்டுள்ள அளவில் அறிந்துள்ளதாகவும், பிரபல்யமானதாகவும் மாறியிருக்க வில்லையென்றால் முன்னேறிய தொழிலாளர்கள், மக்களின் பயமில்லாத சூழலையும் கிராமப்புறங்களின் ஆதரவினையும்—தீவிரமான விவசாய இயக்கங்களின் மூலமோ அல்லது நில உடமையாளர்களுக்கு எதிராகவும், அவர்களைப் பாதுகாக்கிற அரசுக்கு எதிராகவும், எழுச்சிகளின் மூலமோ ஆதரவு நிரூபிக்கப் படவேண்டும்—நிச்சயித்துக் கொள்ளவில்லையென்றால் நாட்டின் பொருளாதார நிலைமை, அமைதியான மற்றும் பாராளுமன்ற வழிகளின்மூலம் பிரச்சினைகளுக்குச் சாதகமான தீர்வுக்கான ஊக்கமான நம்பிக்கைகளை உட்கொண்டிருந்தால்—அது இராணுவ சதி ஆலோசனை—ஒரு பிளாங்கிய வாதமாகும்.

# 16

# ஒரு பார்வையாளரின் அறிவுரைகள்

நான் இந்த வரிகளை அக்டோபர் 8 ஆம் நாள் எழுதுகிறேன். இவை 9 ஆம் நாளுக்குள் பெத்ரோகிராத் தோழர்களுக்குப் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை எனக்குக் கிஞ்சித்தும் இல்லை. வடக்குப் பிராந்தியம் சோவியத்துக்களின் காங்கிரஸ் அக்டோபர் 10 ஆம் நாள் நடைபெற இருப்பதால் இவை மிகவும் தாமதாக வந்து சேரலாம். இருந்தபோதிலும் பெத்ரோகிராத் மற்றும் அந்தப் ''பிராந்தியம்'' முழுவதன் தொழிலாளர் படையாளிகள் நடத்தவிருக்கும் போராட்டம், விரைவில் நடைபெறும். ஆனால் இன்னும் நடைபெற வில்லை என்று இருக்கும்பட்சத்தில், நான் எனது ''பார்வை யாளரின் அறிவுரைகளை'' அளிக்க முயல்வேன்.

ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துகளுக்கு மாற்றி வழங்கப்படவேண்டும் என்பது தெட்டத் தெளிவானது. பாட்டாளி களின் புரட்சிகர ஆட்சி அதிகாரம் (அல்லது போல்ஷெவிக் ஆட்சி அதிகாரம்—இப்போது இவை இரண்டும் ஒன்றே) பொதுவாக உலகம் முற்றிலும் குறிப்பாக, போரிடும் நாடுகளில் உள்ள எல்லா உழைக்கும் மக்கள், எல்லா சுரண்டப்படும் மக்கள் மற்றும் ருஷ்ய உழவர்களின் உச்சபட்சமான அனுதாபத்தையும், தயக்கமற்ற ஆதரவையும் உறுதியாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதை எந்த போல்ஷெவிக்கும் மறுக்க முடியாது. இந்த மிகவும் நன்கறியப்பட்ட, நீண்ட காலமாக நிலைநாட்டப்பட்டுவிட்ட உண்மைகள் குறித்து விவரிக்கத் தேவை இல்லை.

இங்கு விவரிக்கப்பட வேண்டுவது என்னவென்றால், ஒரு வேளை எல்லாத் தோழர்களுக்கும் முற்றும் தெளிவாக இல்லாத சிலவற்றை, அதாவது சோவியத்துகளுக்கு இப்போது ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்குவது என்பது ஆயுதமேந்திய எழுச்சி

என்றே பொருள்படும் என்பதையே ஆகும். இது கண்கூடானதாகத் தோன்றலாம். ஆனால் எல்லோரும் இந்த அம்சம் குறித்துச் சிந்தனை செலுத்தியிருந்தார்கள் அல்லது சிந்தனை செலுத்தி வருகிறார்கள் என்று கூறமுடியாது. இப்போது ஆயுதமேந்திய எழுச்சியைத் தள்ளுபடி செய்வது, போல்ஷெவிசத்தின் கேந்திர முழக்கம் (எல்லா ஆட்சி அதிகாரமும் சோவியத்துகளுக்கே) மற்றும் பொதுவாகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வதேசியவாதத்தைத் தள்ளுபடி செய்வதாகவே பொருள்படும்.

ஆனால் ஆயுதமேந்திய எழுச்சி அரசியல் போராட்டத்தின் ஒரு விசேஷ வடிவமாகும். விசேஷவிதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும். இதைக் குறித்துக் கவனமாகச் சிந்தித்தல் வேண்டும். ''போரைப் போலவே அந்த அளவுக்கு முழுமையாகப் புரட்சி எழுச்சியும் ஒரு கலையாகும்'' என்று எழுதியபோது கார்ல் மார்க்ஸ் இந்த உண்மையையே தனிச்சிறப்புடைய துலக்கத்துடன் வெளியிட்டார்.

இந்தக் கலையின் முக்கியமான விதிகள் என்ற முறையில் மார்க்ஸ் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டார்.

1. புரட்சி எழுச்சியுடன் என்றுமே விளையாட வேண்டாம், ஆனால், அதைத் துவங்கும்போது நீங்கள் கடைசிவரையில் செல்ல வேண்டும் என்பதை உறுதியாக உணர்ந்திருக்க வேண்டும்.

2. தீர்மானகரமான முனையில், தீர்மானகரமான தருணத்தில் மாபெரும் வலுமிக்க சக்திகளை ஒரு முனைப்படுத்த வேண்டும். இல்லையேல், மேலும் நல்ல ஆயத்தங்களும் ஒழுங்குத்திரட்சியும் கொண்ட எதிரி கலகக்காரர்களை அழித்துவிடுவார்.

3. புரட்சி எழுச்சி தொடங்கிவிட்டது என்றால், நீங்கள் மிகப்பெரிய வைராக்கியத்துடன் செயல்பட வேண்டும். தவறாமல் எல்லா வழிகளிலும் எதிர்த்தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். ''தற்காப்புப் போக்கு ஆயுதமேந்திய எழுச்சி அனைத்தின் மரணமாகும்.''

4. நீங்கள் எதிரி மீது திடீர்த் தாக்குதல் தொடுக்க முயல வேண்டும். அவரது படைபலம் சிதறிக் கிடக்கும் தருணத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

5. எவ்வளவு சிறியதாக இருப்பினும் சரி நாள்தோறுமான வெற்றிகளுக்காக (ஒரு நகரம் சம்பந்தப்பட்டதாக இருந்தால்

மணிக்கு மணி என்று சொல்லலாம்) நீங்கள் பாடுபட வேண்டும். ''தார்மிக மேநிலையை'' எப்பாடுபட்டும் நீடித்து வைத்திருக்க வேண்டும்.

இதுகாறும் ''உலகமறிந்துள்ள புரட்சிக் கொள்கையின் மாபெரும் விற்பன்னரான தன்தோனின் துணிச்சல், துணிச்சல், மேலும் துணிச்சல் (de l'audace, de l'audace de l'audace) என்னும் சொற்களால் ஆயுதமேந்திய எழுச்சி சம்பந்தமாக எல்லாப் புரட்சிகளின் படிப்பினையையும் மார்க்ஸ் தொகுத்தளித்தார்.

ருஷ்யாவுக்கும் 1917 அக்டோபருக்கும் அதைப் பிரயோகம் செய்தால் அதன் பொருள் எவ்வளவு சடுதியாகவும் எவ்வளவு வேகமாகவும் சாத்தியமோ அது போன்ற ஒரே சமயத்தில் பெத்ரோகிராத் மீது எதிர்த்தாக்குதல், இது உள்ளே இருந்தும் வெளியில் இருந்தும் தவறாமல் தொடுக்கப்பட வேண்டும். தொழிலாளி வர்க்க வட்டாரங்களில் இருந்தும், பின்லாந்தில் இருந்தும், ரெவெலில் இருந்தும், கிரோன்ஷ்டாத்தில் இருந்தும் தொடுக்கப்பட வேண்டும். கடற்படை முழுவதன் எதிர்த்தாக்குதல், நமது ''முதலாளித்துவ காவற்படை'' (இராணுவப் பள்ளி மாணவர்கள்) நமது ''வாந்தே துருப்புகள்'' (கசாக்குப்படையின் பகுதி) இத்தியாதிகளின் 15,000 அல்லது 20,000 (ஒருவேளை அதிகம்) பேரின் மீது படை பலத்தின் மாபெரும் மேலாதிக்கத்தை ஒரு முனைப்படுத்தல் என்பதாகும்.

நமது மூன்று பிரதான சக்திகளான கடற்படை, தொழிலாளர்கள், சேனைப் பிரிவுகளைத் தக்கபடி இணைத்து, அவை பின்வருவனவற்றை எப் பாடுபட்டும் தவறாது பற்றிப் பிடித்துவிடாது வைத்திருக்க வகை செய்ய வேண்டும்: (அ) தந்தி அலுவலகம், (ஆ) தொலைபேசி இணைப்பகம், (இ) இரயில்வே நிலையங்கள் (ஈ) எல்லாவற்றுக்கும் மேலாகப் பாலங்கள்.

மிகவும் உறுதியான நபர்கள் (நமது ''அதிரடிப் படைகள்'' இளம் தொழிலாளர், சிறந்த கடலோடிகள்) சிறிய படைப் பிரிவுகளாக அமைக்கப்பட்டு; மிகவும் முக்கியமான இடங்களைப் பிடித்தடக்கவும் எல்லா இடங்களிலும் எல்லா முக்கியமான செயல்பாடுகளிலும், பங்கு பற்றும்படி செய்தல் வேண்டும். உதாரணம் :

பெத்ரோகிராதைச் சுற்றி வளைத்துக் கொண்டு தொடர்புகளை வெட்டி விடுதல்; கடற்படையினர், தொழிலாளர் மற்றும் துருப்புகளின் கூட்டுத் தாக்குதல் மூலம் அதைக் கைப்பற்றல்—இந்தப் பணிக்குக் கலையும் மும்மடங்கு துடுக்கும் தேவை.

விரோதியின் ''மையங்களை'' (இராணுவப் பள்ளி, தந்தி அலுவலகம், தொலைபேசி இணைப்பகம் ஆகியவற்றை) தாக்கி சுற்றி வளைத்துக் கொள்ளும் நோக்கமுடன் துப்பாக்கிகள் எறிகுண்டுகளை ஆயுதமாக ஏந்திய சிறந்த தொழிலாளர்களின் படைப் பிரிவுகளை அமைப்பது. அவர்களது கோட்பாட்டு வாசகம்: 'எதிரி முன்னேற இடம் கொடுப்பதைவிட கடைசி மனிதன் வரை சாவது மேல்!' என்பதாக இருக்க வேண்டும்.

போராடுவது என்று முடிவு செய்யப்படுமானால் தலைவர்கள் தன்தோன் மற்றும் மார்க்சின் மாபெரும் கட்டளை வாசகங்களை வெற்றிகரமாகப் பிரயோகிப்பர் என்று நம்புவோமாக.

ருஷ்யப் புரட்சியின் வெற்றியும், உலகப் புரட்சியின் வெற்றியும் ஒருங்கே இந்த இரண்டு அல்லது மூன்று நாள் போராட்டத்தைச் சார்ந்திருக்கிறது.

நூல் திரட்டு
தொகுதி 34,
பக்கங்கள் 383—84.

# 18

# அரசியல் செயல் தந்திரம் மற்றும் முழக்கங்களின் முக்கியத்துவம்

—வி. இ. லெனின்

புரட்சி நமக்குக் கற்றுக் கொடுக்கும், திரளான மக்களுக்கும்
க் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இன்று போர்க்
மிக்க (போராட்ட ஊக்கமுள்ள ஓர் அரசியல் கட்சியின் முன்
ம் கேள்வி இதுதான்: புரட்சிக்கு நாம் எதையாவது கற்றுக்
டுக்க இயலுமா? புரட்சி மீது பாட்டாளிவர்க்க முத்திரை
வதற்கு, சொல்லளவில் அல்லாமல் செயலில் புரட்சியை ஓர்
மையான, நிர்ணயமான வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு
நாயகப் போக்குள்ள முதலாளிவர்க்கத்தின் நிலை இன்மை
யும் அரை மனத்தன்மையையும், துரோகத் தன்மையையும்
பலறச் செய்வதற்கு, நம் சமூக-சனநாயகக் கொள்கையில்
ctrine) தவறின்மையையும், முழுதும் புரட்சிகரமான ஒரே
க்கமாகத் திகழும் பாட்டாளிவர்க்கத்துடன் நமக்குள்ள பிணைப்
யும் நம்மால் பயன்படுத்திக் கொள்ள இயலுமா என்பதே.

இக்குறிக்கோளை நோக்கியே நம் முயற்சிகள் அனைத்தையும்
றிப்படுத்த வேண்டும். ஒரு புறத்தில் அரசியல் நிலைமையைப்
றிய நம் மதிப்பீடு சரியாக இருப்பதையும், நம் செயல் தந்திர
க்கங்கள் சரியாக இருப்பதையும் பொறுத்தும், மறுபுறத்தில்
ள் திரளான தொழிலாளிகளின் உண்மையான போராடும் சக்தி
த முழக்கங்களை ஆதரிக்குமா என்பதையும் பொறுத்தும்தான்
குறிக்கோளின் சாதனை இருக்கும். நம் கட்சியின் எல்லா
மைப்புகளின், எல்லாக் குழுக்களின் வழக்கமான, முறையான,
டமுறைக்குரிய வேலையும் பிரச்சாரம், கிளர்ச்சி, அமைப்புத்

தொடர்புடைய வேலையும், மக்களோடுள்ள பிணைப்புகளை வலுப்படுத்தி விரிவாக்குவதை நோக்கிச் செலுத்தப்படுகிறது. இந்த வேலை எப்போதும் அவசியமேயாயினும் கூட, புரட்சிக் காலத்தில் இதைப் போதுமானது என்று கருத முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில் தொழிலாளிவர்க்கம் வெளிப்படையான புரட்சிச்செய்கைக்கு உள்ளியல்பாக வேட்கை கொள்கிறது. இச்செய்கையின் குறிக்கோள்களை நாம் சரிவர வகுத்தளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மக்களுடன் நமக்குள்ள பிணைப்புகளைப்பற்றி இன்று நிலவும் நம்பிக்கையின்மை புரட்சியில் பாட்டாளிவர்க்கத்தின் பாத்திரத்தைப்பற்றிய முதலாளிவர்க்கப்போக்கான கருத்துகளை மூடிமறைக்கத்தான் மிக அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது என்பதை மறக்கக்கூடாது. தொழிலாளிவர்க்கத்துக்குக் கல்வியளித்து ஒழுங்கமைப்பதற்கு (Organise) இன்னும் நாம் நிறைய வேலை செய்தாக வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆனால் சாராம்சத்தில் இன்றுள்ள கேள்வி இதுதான். இந்த கல்வி மற்றும் அமைப்புப் பணியில் அரசியல் ரீதியில் முக்கியமாக எதை வலியுறுத்திக்காட்டவேண்டும்? தொழிற்சங்கங்கள் மற்றும் சட்டபூர்வமான சங்கங்களையா அல்லது ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியையா, புரட்சிகரமான படையையும், புரட்சிகரமான அரசாங்கத்தையும் படைக்கும் பணியையா? தொழிலாளி வர்க்கத்துக்குக் கல்வியளித்து ஒழுங்கமைப்பதற்கு இரண்டுந்தான் பயன்படுகின்றன. உண்மையில் இரண்டும் அவசியந்தான். ஆனால் இன்றையப் புரட்சியில் பிரச்சினை மொத்தத்தில் இதுதான்; தொழிலாளி வர்க்கத்துக்குக் கல்வியளித்து ஒழுங்கமைக்கும் பணியில் எதை வலியுறுத்தவேண்டும்? முந்தியதையா, பிந்தியதையா?

தொழிலாளிவர்க்கம் முதலாளிவர்க்கத்துக்குத் துணைபோகும் படை என்ற பாத்திரத்தை வகிக்குமா? (இந்த துணைபோகும் படை ஏதேச்சாதிகார முறையை எதிர்த்துத் தாக்குவதில் வலிமை மிக்க சக்தியாய் இருந்தாலும் கூட அரசியல் ரீதியிலே சக்தியற்றது) அல்லது அது மக்கள் புரட்சியில் தலைவனாகப் பாத்திரம் வகிக்குமா என்பதைப் பொறுத்துத்தான் புரட்சியின் விளைவு இருக்கிறது. உணர்வுள்ள முதலாளிவர்க்கச் சார்பாளர்கள் இதை நன்றாக உணர்ந்து வைத்திருக்கிறார்கள். எனவேதான், ஒஸ்வபஷ் தேனியே அக்கீமவிசமை, சமூக-சனநாயக இயக்கத்தில் ''பொருளாதாரவாதத்தையும்'' புகழ்ந்து பேசுகிறது; இந்தப் போக்கு இன்று தொழிற் சங்கங்களையும் சட்டபூர்வமாக இருந்துவரும் சங்கங்களையும் முன்னணியில் கொணர்ந்து நிறுத்தி வருகிறது. எனவேதான் **புதிய—இஸ்கரா** கருத்துகளில் காணும் அக்கீமவ் வாதத்துக்குரிய போக்கை (ஒஸ்வபஷ்தேனியே இதழ் 72இல்) திரு.ஸ்துருவே வரவேற்

# 19

# லெனினியத்தின் அடிப்படையான மூன்று செயல்தந்திரக் கோட்பாடுகள்

-ஸ்டாலின்

லெனினியத்திற்குக் குறிப்பான செயல்தந்திரக் கோட்பாடுகள் இருக்கின்றன. அவற்றுடன் தொடர்புபடுத்திப் பார்க்காமல் சீனாவில் 'புரட்சியின் சரியான தலைமை' என்பது இருக்க முடியாது; அல்லது பொதுவுடைமை அகிலத்தின் வழியினைச் சோதித்துப் பார்ப்பது முடியாது. நான், அத்தகைய லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கீழ்கண்டவையாகக் கருதுகிறேன்:

அ) ஒரு நாட்டைச்சார்ந்த தொழிலாளிவர்க்க இயக்கத்துக்கு கம்யூனிஸ்டு அகிலம் வழிகாட்டும் நெறிமுறைகளை வரையறுத்துக் கொடுக்கும் போது, ஒவ்வொரு தனித்தனி நாட்டின், குறிப்பான மற்றும் தனித்த விசேச அம்சங்களைத் தவறாது கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆ) ஒவ்வொரு நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியும், பாட்டாளி வர்க்கத்துக்கு நண்பர்களை-அது தற்காலிக ஊசலாட்டமிக்க, நிலையற்ற நம்பகமற்றதாக இருக்குமேயானாலும் கூட வெல்வதற்கான மிகச்சிறிய சந்தர்ப்பத்தையும் கூட தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இ) 'மக்கள் பெருந்திரளின் அரசியல் கல்விக்குப்' பிரச்சாரமும் கிளர்ச்சியும் மட்டும் போதாது; மக்களுடைய சொந்த அரசியல் அனுபவத்தையே அது கோருகின்றது என்ற உண்மைக்குத் தவறாமல் உரிய மதிப்பு கொடுக்கப்பட வேண்டும்.

இந்த லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் தருவது ஓர் அவசியமான நிபந்தனையாகும் என நான் எண்ணுகின்றேன். இதன்றி, சீனத்தில் அகிலத்தின் வழியை மார்க்சிய வழியில் நிருபிப்பது என்பது முடியாதது.

தொழிலாளி வர்க்கத்தின் நெகிழ்வுத்தன்மையுடைய அதே நேரத்தில் நன்கு ஆராய்ந்து வந்தடைந்த கொள்கை, அதனுடைய எதிரியின் முகாமில் உள்ள பிளவுகளையும் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளும் திறன், மக்கள் பெருந்திரளின் நண்பர்களாக இருக்கக் கூடிய தொழிலாளர் வர்க்கக்கட்சியின் புரட்சிகரமான பிரச்சாரத்தையும் கிளர்ச்சியையும் கட்டுப் படுத்தாத தொழிலாளர் வர்க்கத்தையும் உழைக்கும் மக்கள் பெருந்திரளையும் அமைப்பாக்கும் கட்சியின் வேலையினைக் கட்டுப்படுத்தாத நண்பர்களை—அவர்கள் ஊசலாட்ட முள்ளவர்களாகவும் நிலையற்றவர்களாகவும் இருப்பார்களேயானாலும் கூட, கண்டுபிடிக்கும் திறன், இவைதான் வேறு எதனையும் விட திறன் மிக்க எதிரியை அழிப்பதற்குத் தேவையாக உள்ளது.

முழக்கங்களின் மூன்றாவது செயல்தந்திர கோட்பாடு, மாற்றங்கள் மற்றும் அத்தகைய மாற்றத்தின் முறைகள், வரிசை ஆகியவற்றைப் பற்றிய கேள்விகளுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. இது கட்சிக்கான முழக்கத்தை எங்ஙனம் மக்களுக்கான முழக்கமாக மாற்றுவது என்ற வினாவுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. மேலும், இது மக்களை எப்படி, எந்த வழிவகைகளில் புரட்சிகர நிலைக்குக் கொண்டுவருவது, இதன்மூலம் அவர்கள் தாங்களாகவே, தங்களது சொந்த அரசியல் அனுபவத்தின் மூலமாக, கட்சி முழக்கத்தின் சரியான தன்மையை உணர்ந்து கொள்ளலாம் என்பதுடனும் சம்பந்தப்பட்டுள்ளது.

ஆனால், முன்னேறிய குழுவான கட்சியானது 1917 ஏப்ரலில் மில்யுகோவ்-கெரன்ஸ்கி அரசாங்கத்தைத் தூக்கியெறிவது தவிர்க்க முடியாததுஎன்பதை, தானே முன்னதாகவே உணர்ந்திருந்ததுஎன்பது நல்ல செய்தியாக இருந்தது. ஆனால், முன்வந்து அந்த அரசாங்கத்தைத் தூக்கியெறிந்து சோவியத் அரசாங்கத்தை நிர்மாணிப்பது என்ற முழக்கத்தை அன்றைய முழக்கமாக முன் வைப்பதற்கு, இது-கட்சியின் அத்தகைய நிலைமட்டும் போதுமானதாக இல்லை.

'அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே' என்ற விதியினை உடனடி எதிர்காலத்தைக் காண தொலை நோக்கு நிலையிலிருந்து, இன்றைய முழக்கமாக, உடனடிச் செயலுக்கான முழக்கமாக

மாற்றுவதற்கு, மற்றுமொரு தீர்மானகரமான கூறு தேவைப்பட்டது. அதாவது மக்கள் இந்த முழக்கத்தின் சரியான தன்மையை தாங்களாகவே உணர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். இதைச் செயலூக்கமுள்ளதாகச்செய்ய, ஏதாவது ஒரு வழியில்கட்சிக்கு உதவவேண்டும்.

உடனடி எதிர்காலத்தின் தொலைநோக்கு நிலையிலான விதிக்கும், இன்றைய கட்டத்தின் முழக்கமான விதிக்கும் கறாரான வேறுபாடு வரையப்பட வேண்டும்.

......முழக்கத்தின் மாற்றம், மக்கள் பெருந்திரளைப் புதிய புரட்சிகர நிலைக்குக் கொண்டுவரும் வழிகள் மற்றும் உத்திகள் கட்சியின் கொள்கை, செயற்பாடுகள் மற்றும் சரியான தருணத்தில் ஒரு முழக்கத்தை மற்றொரு முழக்கத்தால் இடம் பெயரச் செய்தல் ஆகியவற்றின் மூலம், பெருந்திரளான உழைக்கும் மக்களை, தங்களின் சொந்த அனுபவத்தின் மூலம் கட்சிப்பாதையின் சரியான தன்மையை அங்கீகரிக்க உதவுதல் இவைதான், லெனினியத்தின் மூன்றாவது செயல்தந்திரக் கோட்பாட்டினுடைய கோரிக்கைகளாகும்,

(சம காலத்திய கருத்துக்களைப் பற்றிய குறிப்புகள்
—ஸ்டாலின்— எதிர்தரப்பு பற்றி -பக் 735)

# 20

# லெனின் மேற்கோள்கள்

## செயல்தந்திரத்தின் வரையறை

கட்சியின் செயல்தந்திரம் என்பதன் மூலம், நாம் 'கட்சியின் அரசியல் நடத்தை, அல்லது பண்பு அதன் அரசியல் செயல்முறையின் திசைவழி மற்றும் வகைகள்' ஆகியவற்றைக் குறிப்பிடுகிறோம்.

புதிய கடமைகள் அல்லது புதிய அரசியல் சூழ்நிலை ஆகியவற்றின் விளைவாக, கட்சி முழுமைக்கும் அதன் சரியான அரசியல் நடத்தையை வரையறுப்பதற்காகக் கட்சியின் காங்கிரஸ்களால் செயல் தந்திரத் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(லெனின்-இரு செயல் தந்திரங்கள்- லெ.நூ .தி .9,ப. 22)

செயற்தந்திரம் பற்றிய கேள்வியானது கட்சியின் அரசியல் நடத்தையைப் பற்றிய கேள்வியாகும்.

நடத்தை வழியானது கோட்பாடு, வரலாற்றுக்குறிப்புகள், அரசியல் சூழ்நிலை முழுவதையும் பகுப்பாய்வு செய்தல், இன்ன பிறவற்றின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(லெ. நூ. தி. 9. பக் 26:)

நிகழ்வுகளுக்குப் பின்னால் ஸ்தம்பித்து நிற்கின்ற, நிகழ்வுகள் தோன்றிய பிறகு அதற்கு ஏற்றாற் போல் தகவலமைத்துக் கொள்கிற செயற்தந்திர முழக்கங்களைக் கொள்வதன் மூலம், நாம் திருப்தி அடைந்து கொள்ள முடியாது. நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்கிற, நமக்கு முன்னால் உள்ள பாதையை ஒளியூட்டிக் காட்டக்

கூடிய, இயக்கத்தின் உடனடி கடமைகளிலிருந்து நம்மை மேலே உயர்த்துகிற செயற்தந்திர முழக்கங்களை நாம் கொண்டிருக்க வேண்டும். தொழிலாளர் கட்சியின் உறுதியான செயற்தந்திரங்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தீர்மானிக்க முடியாது. தன்னுடைய செயற்தந்திர முடிவுகளின் நம்பகத் தன்மையைப் புரட்சிகர வர்க்கத்தின் முன்னேறிய கடமைகளுக்குத் தகுந்த மதிப்புக் கொடுத்து மார்க்சியத்தின் கோட்பாடுகளோடு சேர்க்க வேண்டும்.

## சூழ்நிலை மற்றும் செயல்தந்திரத்தைப் பற்றிய மதிப்பீடு

''நமது தத்துவமானது வறட்டுச் சூத்திர வாதம் அன்று; அது செயலுக்கான வழிகாட்டி'' என்று தோழர் எங்கெல்ஸ் தன்னையும் தன் புகழ் வாய்ந்த நண்பரையும் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

அடிக்கடி மறக்கப்படுகிற அந்த மார்க்சிய அம்சத்தை இந்தச் சீரிய வாசகம் குறிப்பிடத்தக்க அழுத்தத்துடனும் தெளிவுடனும் வலியுறுத்துகிறது. இதை மறந்து விடுவதன் மூலம் நாம் மார்க்சியத்தை 'ஒருபக்க நோக்கு உள்ளதாகவும்' 'உருவைக் கெடுப்பதாகவும்' 'உயிரற்றதாகவும்' ஆக்குகிறோம். அதன் உயிரோட்டத்தைச் சிதைப்பதுடன், நாம் அதனின் அடிப்படைத் தத்துவ அடிக்கட்டுமானங்களான இயக்கவியல், வரலாற்று வளர்ச்சியின் கோட்பாடுகள் அனைத்தும் தழுவிய தன்மையையும், முரண்பாடுகளையும், பறித்து விடுகிறோம். வரலாற்றின் ஒவ்வொரு திருப்பு முனையிலும் மாறக்கூடிய, நிகழ்காலத்தின் அரசியல் கடமையுடன் அதற்குள்ள தொடர்பை நாம் குறைத்து மதிப்பீடு செய்கிறோம்.

''உண்மையிலேயே நமது காலத்திய ருஷ்யாவில் மார்க்சிய உண்மையின்மீது அக்கறை உள்ளவர்களிடையே மிகவும் அடிக்கடி மார்க்சியத்தின் இந்த அம்சத்தில் பார்வையற்ற மக்களை நாம் சந்திக்கின்றோம். சமீப வருடங்களில் ருஷ்யாவானது என்றும் இராத வேகத்துடனும், என்றுமிராத சக்திகளுடனும் வெளிப்படையாகவே சூழ்நிலைகளை மாற்றக்கூடிய ஒரு மாற்றத்திற்குள்ளாகி இருக்கிறது என்பது ஒவ்வொருவருக்கும் தெளிவாகும்—சமூக, அரசியல் நிலைமைகளே, பெரும்பாலான நேரடி மற்றும் உடனடி வழிகளில் செயலுக்கான நிபந்தனைகளையும், அதன் காரணமாக அதன் நோக்கங்களையும் தீர்மானிக்கின்றன. பொதுவான, அடிப்படையான உறவு மாறினால் ஒழிய வரலாற்றின் திருப்பங்களுடன் மாறாத—ருஷ்யாவின் பொருளாதார வெளிப்பாட்டின் (பொருளாதாரம் மட்டுமில்லை) பொதுவான போக்கு, ரஷ்ய சமூகத்தின்

பல்வேறு வர்க்கங்களுக்கிடையேயான அடிப்படையான உறவு போன்று—கடந்த ஆறுவருடங்களாக மாறியிருக்கவில்லை என்பது தெளிவாகும்.

ஆனால், நமது உடனடி மற்றும் நேரான செயலுக்கான நோக்கங்கள் கூர்மையாகவே, இந்தக் காலகட்டத்தில் உண்மையான சமூக, அரசியல் சூழ்நிலைகள் மாறியுள்ளதைப் போன்று மாறியுள்ளன. ஏனெனில் மார்க்சியம் என்பது உயிர்த்துடிப்புள்ள தத்துவமாகும். அதன் பல்வேறு வகையான பார்வைகள் மிகவும் முக்கியமானவையாகும்.

(லெ. நூ. தி. 17, பக் 39-41)

மார்க்சியம் நம்மைச் சரியான விதத்திலும், புறவயமாகவும் வர்க்க உறவுகளைப் பற்றியும், ஒவ்வொரு வரலாற்றுச் சூழலின் கறாரான, விசேட குணாம்சங்களையும் சோதித்தறிய, பகுப்பாய்வு செய்யுமாறு கோருகிறது. போல்ஷெவிக்குகளாகிய நாம், தத்துவத்திற்கு விஞ்ஞான அடிப்படையைக் கொடுக்கக்கூடிய மிகவும் முக்கியமான இந்தக் கோரிக்கையினை நடைமுறைப்படுத்த எப்பொழுதும் முயன்று இருக்கிறோம்.

''நமது தத்துவமானது வறட்டுச் சூத்திரவாதம் அன்று; ஒரு செயலுக்கான வழிகாட்டியாகும்'' என்று மார்க்சும், எங்கெல்சும் எப்போதும் கூறி வந்ததுடன் ''விதிகளை மனனம் செய்வதும், அதைத் திரும்பத்திரும்பக் கூறுவதும் பொதுவான கடமைகளைப் பற்றிக் கூறுவதற்கே தகுதியுள்ளது'' என்று சரியான விதத்தில் பரிகசித்துள்ளனர். தத்துவமானது வரலாற்று நிகழ்வின் ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்தின் பொருளாதார அரசியல் நிபந்தனைகளுக் கேற்றாற் போன்று அவசியமானதாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

(லெனின், செயற்தந்திரம் பற்றிய கடிதங்கள், முதல்கடிதம்).

## குறிப்பான இயக்கத்தில் நிலைமையை எவ்வாறு மதிப்பிடுவது?

சமூக சனநாயகக் கட்சியில், இருவிதப் போக்குகளும், நகல் அறிக்கையைக் கொடுத்திருந்த போதிலும், புரட்சியில் தொழிலாளர்களின் கடமைகளை வரையறுத்து, நிகழ்காலத்தைப் பற்றிய ஒரு

மதிப்பீட்டை மட்டும் கொண்டு, ஒன்றுபட்ட காங்கிரஸ் ஒரு முடிவினை ஏற்றுக் கொள்ளாது. நிகழ்ச்சி நிரலில் சூழ்நிலையைப் பற்றி ஒரு மதிப்பீடு செய்தல் வேண்டும் என்ற கேள்வி இருந்தது. மேலும் அதுபற்றி காங்கிரஸில் விவாதிக்கப்பட்டது. இந்தக் கேள்வியினை பற்றிய ஒரு பாகுப்பாய்வு மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். முதலாவதாக, நாம் சமூக பொருளாதார, அரசியல் வளர்ச்சிப் போக்குகளின் நிலையில் இருந்து, தற்காலத்திய புரட்சிகர சூழ்நிலையைப் பற்றியும், இன்றைய ரஷ்யாவின் அரசியல் வர்க்கப் பிரிவுகளை (மாற்றங்களைப்) பற்றியும், மூன்றாவதாக, சமூக சக்திகளின் அரசியல் பிரிவுகளுடன் சமூக-சனநாயகத் தொழிலாளர்கட்சியின் அடிப்படைக் கடமையைப் பற்றியும், ஆய்வுகள் செய்ய வேண்டும்.

(லெ. நூ. தி. 12, பக்கம் 210)

## அரசு வடிவத்தில் உண்டாகும் மாற்றங்கள் பற்றி

சமூகத்தின் சமூக வடிவமைப்பும், அரசு அதிகாரமும் மாற்றங்களினாலே குறிக்கப்படுகின்றன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், சமூக நடவடிக்கையில் ஓர் அடிகூட நாம் எடுத்து வைக்க முடியாது. இந்த மாற்றங்களைப்பற்றிய புரிதலே, எதிர்காலத்திற்கான வரையறையைத் தீர்மானிக்கிறது. மேலும், இவற்றின் மூலம் நாம் உண்மையிலேயே, தெரியாத விசயங்களைப் பற்றி, சோம்பேறித்தனமான அவமானத்தை அல்ல. பொருளாதார, அரசியல் வளர்ச்சிகளின் அடிப்படைப் போக்குகளைப் பற்றிக் கூறுகிறோம். இத்தகைய போக்குகளின் விளைவே, நாட்டின் உடனடி எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன. இவைதான், ஒவ்வொரு அறிவார்ந்த பொது மனிதனின் கடமைகள், திசை வழிகள், செயல் முறையின் குணாம்சம் ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றன. கடமைகள் திசைவழிகள், செயல்முறையின் குணாம்சம் ஆகியவற்றைப்பற்றிய இந்தக் கடைசி கேள்வியானது மிக அதிக அளவில் நெருக்கமாக கலைப்பு வாதத்தைப் பற்றிய கேள்வியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

—அரசு அதிகாரத்தின் சமூக வடிவம், தோற்றம், மற்றும் கலைப்பு வாதம் என்பதிலிருந்து.

(லெ. நூ. தி. 17, ப. 144)

# 21

# நிலைமைகளில் மாறுதலும் முரண்பாடுகளில் மாறுதலும்

## (Change in Situations and change in contradictions)

---

1931, செப்டம்பர் 18 ஆம் நாள் நிகழ்ச்சிக்குப் பிறகு அதிலும் குறிப்பாக 1935இல் நடந்த வட சீன நிகழ்ச்சிக்குப் பிறகு, இந்த முரண்பாடுகளில் பின்வரும் மாற்றங்கள் நேர்ந்துள்ளன:

பொதுவாக,

(i) சீனாவுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாடு, குறிப்பாகச் சீனாவுக்கும் சப்பானிய ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் முனைப்பான, கூர்மையான முரண்பாட்டுக்கு வழி விட்டுள்ளது. சப்பானிய ஏகாதிபத்தியம் சீனாவை முழுமையாக வெல்லுதல் என்ற கொள்கையை மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக, சப்பானுக்கும் பிற சில ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும்இடையிலான முரண்பாடுகள் இரண்டாம்நிலைக்குஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளன. அதே வேளையில் இந்த வல்லரசுகளுக்கும் சப்பானுக்கும் இடையிலான பிளவு அதிகமாக்கப்பட்டுள்ளது. மேலும், இதன் விளைவாகச் சீனப் பொதுவுடைமைக் கட்சியும் சீன மக்களும் சீனாவின் சப்பானிய எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியை உலக சமாதான முன்னணியுடன் இணைக்கும் கடமையை எதிர்கொண்டுள்ளனர். இதன் பொருளாவது, சீன மக்களின் நல்ல நண்பனாகத் தொடர்ந்து இருந்து வருகிற சோவியத் (யூனியனுடன்) ஒன்றியத்துடன் சீனா கட்டாயம் ஒன்றுபடுவதுடன் மட்டுமின்றி, இப்போது சமாதானத்தைக் காக்க

விரும்புகிற ஆக்கிரமிப்புக்கான புதிய போர்களுக்கு எதிராக உள்ள ஏகாதிபத்திய நாடுகளுடன் சேர்ந்து சப்பானிய ஏகாதிபத்தியத்தைக் கூட்டாக எதிர்ப்பதற்குச் சாத்தியமானதை எல்லாம் செய்ய வேண்டும். நமது ஐக்கிய முன்னணியின்நோக்கம் சப்பானை எதிர்க்க வேண்டும் ஒழிய ஒரே சமயத்தில் எல்லா ஏகாதிபத்தியங்களையும் எதிர்ப்பதாக இருக்கக்கூடாது.

(ii) சீனாவுக்கும் சப்பானுக்கும் இடையிலான முரண்பாடு சீனாவில் உள்நாட்டு வர்க்க உறவுகளை மாற்றியுள்ளது; உடைமை யாளர்கள் ஏன் யுத்தபிரபுக்கள் கூட உயிர்வாழ முடியுமா என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறது. இதனால் அவர்களும், அவர்களது அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் நோக்கில் படிப்படியான மாறுதலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். ஒரு சப்பானிய எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டும் கடமையைச் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் முன்பும் சீன மக்கள் முன்பும் இது வைத்துள்ளது. நமது ஐக்கிய முன்னணி உடைமையாளர்களையும் தாய்நாட்டைக் காப்பாற்ற ஒப்புக் கொள்ளும் எல்லாரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; இது அந்நியப் பகைவனுக்கு எதிரான தேசிய ஒருமைப்பாட்டைப் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும். இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும்; நிறைவேற்ற முடியும்.

(iii) சீனாவுக்கும் சப்பானுக்கும் இடையிலுள்ள முரண்பாடு நாடு முழுவதிலுள்ள மக்களுக்கும் (பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கம், நகர்ப்புறச் சிறு உடைமையாளர் வர்க்கம்) பொது வுடைமைக் கட்சிக்குமான விஷயங்களை (Matters) மாற்றிவிட்டது. மேலும் அது கட்சிக் கொள்கையையும் மாற்றியிருக்கிறது. தேசிய விடுதலையை (Salvation) அடையச் சண்டை செய்வதற்கென மேலும் மேலும் மக்கள் எழுகின்றனர். செப்டம்பர் 18 ஆம் நாள் நிகழ்ச்சிக்குப் பிறகு பொதுவுடைமைக் கட்சி அறிவித்த கொள்கை, மூன்று நிபந்தனைகளுக்கு உட்பட்டு (புரட்சிகரத் தளப்பகுதி களைத் தாக்குவதை நிறுத்துக; மக்களின் சுதந்திரத்துக்கும், உரிமைக்கும் உத்திரவாதம் வழங்குக; மக்களுக்கு ஆயுதம் வழங்குக) நம்முடன் சேர்ந்து சப்பானை எதிர்க்க முன்வருகிற கோமின்டாங் பிரிவுகளுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ள முடிவு செய்தது. தேசம் முழுவதுக்குமான சப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை நிறுவும் கொள்கையாக அது உருவாகியுள்ளது. பின்வரும் நடவடிக்கைகளை நமது கட்சி எடுத்ததற்குக் காரணம் இதுவே யாகும். 1935 ஆகஸ்ட் அறைகூவலும், டிசம்பர் தீர்மானமும்; 1936 மேயில் ''சியாங்-கை-ஷேக் எதிர்ப்பு'' முழக்கத்தைக்

கைவிட்டது; ஆகஸ்ட்டில் கோமின்டாங்குக்குக் கடிதம்; செப்டம்பரில் சனநாயகக் குடியரசு மீதான தீர்மானம்; டிசம்பரில் ஸ்லான் (Slan) நிகழ்ச்சியை அமைதியான முறையில் தீர்ப்பதற்காக வலியுறுத்தல், 1937 பிப்ரவரியில் கோமின்டாங் மையச் செயற் குழுவின் மூன்றாவது நிறைவுக் கூட்ட அமலுக்கு (Third Plenary Session) தொலைவரி (தந்தி)ச் செய்தி.

(iv) சீனாவுக்கும் சப்பானுக்குமிடையிலான முரண்பாட்டால் சீன யுத்தப்பிரபுக்களின் ஆட்சி முறையிலும் அவர்களுக்கிடையிலான உள்நாட்டுப் போர்களிலும் மாறுதல் நேர்ந்துள்ளது; இது செல்வாக்கு மண்டலங்கள் பற்றிய ஏகாதிபத்தியக் கொள்கை மற்றும் சீனாவின் அரைக்குடியேற்றப் பொருளியல் நிலைமைகளின் விளைவாகும். சீனாவைத் தனி உரிமையுடன் ஆதிக்கம் செய்யும் நோக்கத்திற்காக இத்தகைய தனித்தனி ஆட்சி முறைகளையும் உள்நாட்டுப் போர்களையும் சப்பானிய ஏகாதிபத்தியம் ஊட்டி வளர்க்கிறது. வேறு சில ஏகாதிபத்திய வல்லரசுகள் தங்கள் சொந்த நலன்களின் பொருட்டு சீனாவின் ஒற்றுமைக்கும் சமாதானத்துக்கும் தற்காலிகமாக சாதகமாக உள்ளன. சீனப் பொதுவுடைமைக் கட்சியும் சீனமக்களும் தங்கள் பங்குக்கு உள்நாட்டுப்போர்களுக்கு எதிராகவும், பிளவுகளுக்கு எதிராகவும், சமாதானத்துக்காகவும் ஒற்றுமைக்காகவும் தங்களாலியன்ற முயற்சிகள் அனைத்தையும் செய்து கொண்டிருக்கின்றனர்.

அரசியல் முக்கியத்துவத்தை ஒப்பிட்டுப்பார்த்தால் சீனாவுக்கும் சப்பானுக்கும் இடையிலான தேசிய முரண்பாடு வளர்ச்சி உள்நாட்டில் வர்க்கங்களுக்கு இடையிலும், அரசியல் குழுக்களுக்கிடையிலும் உள்ள முரண்பாடுகளை இரண்டாம் தரம் மற்றும் கீழ்மட்டத்துக்கு இறக்கிவிட்டது. ஆனால் அவை இன்னமும் இருக்கின்றன. அவை மங்கவுமில்லை, மறையவுமில்லை. சீனாவுக்கும் சப்பான் தவிர்த்த பிற ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையிலான முரண்பாடுகளுக்கும் இது பொருந்தும். எனவே, சீனப்பொதுவுடைமைக் கட்சியும் சீன மக்களும் பின்வரும் கடமையை எதிர் கொண்டுள்ளனர்—சப்பானுக்கு எதிரான ஒற்றுமையின் பொதுவான கடமைக்குப் பொருந்துமாறு இப்போது சரி செய்யப்பட முடிந்த, மற்றும் சரி செய்யப்படவேண்டிய அந்த உள் மற்றும் வெளி முரண்பாடுகளைப் பொருத்தமட்டில் தகுந்தவாறு சரிசெய்ய வேண்டும். சீனப் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைகளான சமாதானம், ஒற்றுமை, சனநாயகம், மக்களின் வாழ்க்கையை மேலும் சிறந்தது ஆக்குதல்,

சப்பானை எதிர்க்கிற அயல் நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துதல் ஆகியவற்றுக்கு இதுவே காரணமாகும்.

—௱ வோ: சீனப்பொதுவுடைமைக் கட்சியின் கடமைகள், தொகுதி I

X X X

சீனா பின்வரும் இரண்டு வகைகளில் உடனடியாக சனநாயக மாறுதல்களைத் தொடங்கவேண்டும். முதலாவதாக, அரசியல் அமைப்பு விஷயத்தில் ஒருகட்சி, மற்றும் ஒரு வர்க்கத்தின் பிற்போக்கு கோமின்டாங் சர்வாதிகாரத்தை மாற்றியமைத்து எல்லாக் கட்சிகள் மற்றும் எல்லா வர்க்கங்களின் கூட்டுறவு அடிப்படையிலமைந்த ஒரு சனநாயகக் குடியரசு ஆக்க வேண்டும். இந்த வகையில் தேசியச் சட்ட மன்றத்தைத் தேர்ந்தெடுக்கவும் கூட்டவும் இப்போது கடைப்பிடிக்கப்படுகிற சனநாயகமற்ற நடைமுறைகளை (Procedures) மாற்றியமைக்கவும், சட்ட மன்றத்துக்கு சனநாயக முறையில் தேர்தல்களை நடத்தி அதன் கூட்டங்களை நடத்த சுதந்திரம் வழங்கி உறுதிப்படுத்ததல். அதன் பிறகு அது உண்மையிலேயே சனநாயகமான அரசியலமைப்பை இன்றியமையாது வரையவும் ஏற்கவும் செய்தல், உண்மையிலேயே சனநாயகமான பாராளுமன்றத்தைக் கூட்டிப் மெய்யான சனநாயகக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிற மெய்யான சனநாயக அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றைத் தொடங்கி வைக்க வேண்டும். இவ்வாறு மட்டுமே உள்நாட்டு சமாதானத்தை உண்மையிலேயே உறுதிப்படுத்தவும், அதன் வாயிலாக நாடுமுழுவதையும் ஒற்றுமைப்படுத்தி அந்நியப் பகைவரை எதிர்க்கவும் முடியும். இந்த மாறுதல்கள் முழுக்கச் செய்யப்படுவதற்கு முன்பாகவே சப்பானிய ஏகாதிபத்தியம் நம்மைத் தாக்குவதற்கு வாய்ப்புண்டு. எனவே சப்பானியத் தாக்குதல் வரும்போது அதை எதிர்க்கவும் முற்றிலும் நசுக்கவும், நாம் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும். நமது ஆயுதப் போராட்டக் காலத்தில் சீர்திருத்தங்களை முற்றிலும் நிறைவேற்றத் தயாராக இருக்க வேண்டும்.

நாடு முழுவதிலுமுள்ள மக்களும் எல்லாக் கட்சிகளின் நாட்டுப்பற்றுடையவர்களும் தேசியச் சட்டமன்றம் மற்றும் ஓர் அரசியலமைப்பின்பால் தங்களுக்கு முன்பிருந்த வெறுப்பை (Indifference) உதறி எறிய வேண்டும்; அவர்கள் தேசியச் சட்டமன்றத்துக்கும், ஓர் அரசியல் அமைப்புக்குமான இயக்கத்தில்—தேசியப்

பாதுகாப்புக்கு முக்கியமாகத் தேவைப்படும் ஓர் இயக்கத்தில்—கவனம் செலுத்த வேண்டும்; அவர்கள் அதிகாரத்தில் இருக்கிற கட்சியான கோமின்டாங்கைக் கடுமையாக விமர்சிக்க வேண்டும்; அதன் ஒரு கட்சி, ஒரு வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு விட்டு மக்களுடைய கருத்துக்கு ஏற்பச் செயல்படுமாறு வற்புறுத்தித் தூண்ட (Impel) வேண்டும். இவ்வாண்டின் அடுத்த சில மாதங்களில் நாடு முழுவதும் ஒரு பரந்த சனநாயக இயக்கம் தொடங்கி நடத்தப் படவேண்டும்; தேசிய சட்டமன்றத்தையும், அரசியலமைப்பையும் (Constitution) முற்ற முழுக்க சனநாயகப்படுத்தும் உடனடி நோக்கத்துடன் அது அமைய வேண்டும். இரண்டாவது விசயம் மக்களுக்கான பேச்சுச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், மற்றும் சங்கம் வைக்கும் சுதந்திரம் ஆகியவற்றைப் பற்றியதாகும். இத்தகைய சுதந்திரம் இல்லாமல் அரசியல் ஏற்பாட்டைத் திருத்தி யமைக்கவும், (மீள் கட்டுமானம் செய்ய, புதிதாகக் கட்ட—reconstruction) எதிர்ப்புப் போருக்கு மக்களைத் திரட்டவும், தாய்நாட்டை வெற்றியுடன் பாதுகாக்கவும், இழந்த பிரதேசங்களை மீட்கவும் இயலாது. அடுத்த சில மாதங்களில் தேசந்தழுவிய சனநாயக இயக்கம் அத்தகைய சுதந்திரங்களில் குறைந்தது சிலவற்றையாவது ஈட்ட வேண்டும். அச் சுதந்திரங்களில் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், அரசியல் கட்சிகளின் மீதான தடையை நீக்குதல் போன்றவையும் இருத்தல் வேண்டும். அரசியல் ஏற்பாட்டை சனநாயக ரீதியில் மறுபடியும் கட்டியமைத் தலும் மக்களுக்குச் சுதந்திரமும் உரிமையும் வழங்குதலும் சப்பானிய எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணித் திட்டத்தின் (Programme) ஒரு முக்கியமான பகுதியாக அமைகின்றன; அதே சமயம் ஒரு மெய்யான திடமான சப்பானிய எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியை நிறுவுவதற்கான முன் நிபந்தனைகளாகவும் அவை அமைகின்றன.

—மாவோ; சீனப்பொதுவுடைமைக் கட்சியின் கடமைகள்.

## நிலைமையிலும் உள்கட்டங்களிலும் உண்டான மாறுதல் (Change in Situation and Sub-Stages)

குடியேற்ற மற்றும் அரைக்குடியேற்ற நாட்டில் முதல் கட்டத்தில் அல்லது முதலாவதாக நடக்கும் அத்தகைய புரட்சியின் சமூகப்பண்பு அடிப்படையில் இன்னமும் முதலாளிய சனநாயக (bourgeois—democratic) மாகவே உள்ளது. மேலும் அதனுடைய உள்ளார்ந்த குறிக்கோள் முதலாளிய (Capitalism) வளர்ச்சிப்

பாதையைச் செப்பனிடுவதே என்ற போதிலும் அது பழைய வகைப்பட்ட உடைமையாளர்கள் முதலாளிய சமுதாயத்தையும், உடைமையாளர் சர்வாதிகாரத்தின் கீழமைந்த அரசையும் நிறுவும் நோக்கத்துடன் அமைந்த புரட்சியில்லை. அது புதிய வகைப்பட்ட புரட்சியாகும்; இதைப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கி நடத்துகிறது; அப்புரட்சியின் முதல் கட்டத்தில் புதிய சனநாயக சமுதாயத்தையும், அனைத்துப் புரட்சிகர வர்க்கங்களின் கூட்டுச் (Joints) சர்வாதிகாரத்தின் கீழமைந்த ஓர் அரசையும் நிறுவும் நோக்கமுடையதாகும். இவ்வாறாக, இப்புரட்சி உண்மையில் சோசலிசம் வளர்ச்சி பெற மேலும் அகலமான பாதையைச் செப்பனிடுவதற்குப் பணிபுரிகிறது. இதன் முன்னேற்றத்தில் மேலும் பல உள்கட்டங்கள் இருக்கலாம்; ஏனெனில் எதிரியின் தரப்பிலும் நமது கூட்டாளிகளின் அணிகளிலும் மாறுதல்கள் நிகழலாம். ஆனால் புரட்சியின் அடிப்படைப் பண்பு மாறாமலே இருக்கிறது.

—மாவோ: 'புதிய சனநாயகம் பற்றி'

## சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசியல் செயல் தந்திரங்கள்

பத்தாண்டு உள்நாட்டுப் போர்க் காலப்பகுதியின் அனுபவம் இன்றைய காலப்பகுதியில், அதாவது சப்பானை எதிர்க்கும் போரில், மிகச்சிறந்ததும் பொருத்தமானதும் ஆகும். நாம் மக்களுடன் நம்மை எப்படிப் பிணைத்துக் கொண்டு அவர்களை எதிரிக்கு எதிராக அணிதிரட்டுவது என்ற அம்சத்தைக் குறிக்கிறதேயன்றி செயல்தந்திர வழியாகிய அம்சத்தையல்ல. கட்சியின் இப்போதைய செயல் தந்திரவழி கடந்தகாலச் செயல்தந்திர வழியிலிருந்து வேறானது. முன்பு, கட்சியின் செயல்தந்திரவழி நிலவுடைமையாளர்களையும் எதிர்ப்புரட்சி உடைமையாளர்களையும் எதிர்ப்பதாக இருந்தது; இப்பொழுது, சப்பானிய எதிர்ப்புக்கு எதிராக இல்லாத எல்லா நிலவுடைமையாளர்களுடனும். உடமையாளர்களுடனும் ஒன்றுபடுவதாக இருக்கிறது. பிந்திய கட்டமாகிய பத்தாண்டுக்கால உள் நாட்டுப் போரின் போது கூட நம்மீது ஆயுதத் தாக்குதல் தொடுத்த பிற்போக்கு அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகள் பால் ஒரு புறமும்; நம் சொந்த ஆட்சியின் கீழிருந்த முதலாளியப் பண்புடைய சமூக அடுக்குகள் அனைத்தின்பால் மறுபுறமும் வெவ்வேறு கொள்கைகளைக் கடைப்பிடிக்காதது சரியில்லை; பிற்போக்கு அரசாங்கத்துக்குள்ளும், அரசியல் கட்சிக்குள்ளும் இருந்த வெவ்வேறு

குழுக்களின்பால் வெவ்வேறு கொள்கைகளைக் கடைப்பிடிக்காதது சரி இல்லைதான். அந்த நேரத்தில் உழவர் மற்றும் நகர்ப்புறச் சிறு உடமையாளர்களில் கீழ் அடுக்கிலிருந்தவர்கள் தவிர சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினருடனும் ''எல்லாம் போராட்டமே'' என்ற கொள்கையைப் பின்பற்றினோம்; இந்தக் கொள்கை தவறானதென் பதில் ஐயமில்லை. பத்தாண்டு உள்நாட்டுப் போரின் தொடக்க மற்றும் இடைக்காலப் பகுதியில் உழவர்களுக்குக் கொடுத்த அளவு நிலத்தைப் பிரித்து நிலவுடைமையாளர்களுக்கு வழங்கினோம்; இதனால் அவர்கள் வேளாண்மை வேலைகளில் ஈடுபட முடிந்தது; தம் நிலையிலிருந்து தறிகெட்டலைந்து அல்லது கொள்ளைக்காரர் களாக மாறி மலைப்பகுதிகளுக்குச்சென்று பொது ஒழுங்கைக் குலைக் காமல் போயினர். இந்தச் சரியான கொள்கையை மறுதலித்ததும் விவசாயக் கொள்கையில் தவறுதான். கட்சியின் கொள்கை இப் போது இன்றியமையாதவாறு வேறொன்றாகத்தான் இருக்கும்; அது ''எல்லாம் போராட்டமே-கூட்டணியே இல்லை'' என்பதில்லை; அல்லது (1927இல் சென் து-சியிசம் (Chen Tu-hsiuism) போல) ''எல்லாம் கூட்டணியே போராட்டமே இல்லை'' என்பதுமில்லை. இதற்குமாறாக, சப்பானிய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் சமூக அடுக்குகள் அனைத்துடனும் ஒன்றுபடுவதும், அவர்களுடன் ஐக்கிய முன்னணியைக் கட்டுதலும் அவர்களுக்கெதிராகப் போராட் டங்களைத் தொடுப்பதும்,— அவர்களுடைய ஊசலாட்ட அல்லது பிற்போக்குப் பகுதி எதிரியிடம் சரணடைவதிலோ அல்லது பொது வுடைமைக் கட்சியையும் மக்களையும் எதிர்ப்பதிலோ எந்த அளவுக்கு வெளிப்படுகிறதோ அதற்குத் தக்கவாறு வெவ்வேறு அளவில் வடிவில் வேறுபடும் போராட்டங்களைத் தொடுப்பதும் — கட்சியின் இப்போதைய கொள்கையாக உள்ளது. இப்போதைய கொள்கை ''நேசம்'' ''போராட்டம்'' ஆகிய இரண்டையும் தொகுக்கும் (Synthesises) இருமைக் கொள்கையாக உள்ளது. உழைப்பாளர் கொள்கையில், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைத் தகுந்த வாறு உயர்த்துவதும் முதலாளியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு சரியான இடையூறு செய்யாமையும் ஆகிய இருமைக் கொள்கை யாகும். விவசாயக் கொள்கையில், நிலவுடைமையாளர்கள் வாடகை யையும், வட்டியையும் குறைக்கச் செய்வது, உழவர்கள் இப்படிக் குறைக்கப்பட்ட வாடகையையும் வட்டியையும் கட்டுவதற்கு உடன் படுவது ஆகிய இருமைக் கொள்கையாகும். அரசியல் உரிமைகள் விசயத்தில் சப்பானை எதிர்க்கிற நிலவுடைமையாளர்கள் மற்றும் முதலாளிகள் அனைவருக்கும் தொழிலாளர்களுக்கும் உழவர் களுக்கும் இருக்கிற அளவு மனித உரிமைகளும் அதே அளவு அரசியல் மற்றும் சொத்துரிமைகளும் அனுமதித்துக் கொண்டு அதே வேளையில்

அவர்கள் தரப்பிலிருந்து எதிர்ப் புரட்சி நடவடிக்கைக்கான வாய்ப்புகள் இல்லாதபடி விழிப்போடிருத்தல் ஆகிய இருமைக் கொள்கையாகும். அரசுடைமை மற்றும் கூட்டுறவுப் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். ஆனால் இன்றைக்குக் கிராமப்புறத் தளப் பகுதிகளில் முக்கியமான பொருளாதாரத் துறை அரசைச் சேர்ந்ததில்லை; தனியார் துறையைச் சார்ந்ததாகும்; நம் பொருளாதாரத்திலுள்ள ஏக போகம் (முற்றுரிமை) அற்ற முதலாளியத்துக்கு அது வளரவும், ஜப்பானிய ஏகாதிபத்தியம் மற்றும் அரை நிலவுடைமை முறைக்கு எதிராகப் பயன்படுத்தவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இன்றைய சீனாவுக்கான மிகவும் புரட்சிகரமான கொள்கை இதுவேயாகும். இதைச் செயல்படுத்துவதை எதிர்ப்பதோ அல்லது தடுப்பதோ ஐயமின்றி ஒரு தவறே (Mistake) ஆகும். கட்சி உறுப்பினர்களின் பொதுவுடைமைத் தூய்மையை (Communist purity) முழு விழிப்போடும் (அணுவும் பிசகாதும்) தீர்மானகரமாகவும் காப்பாற்றிக் கொள்ளுதலால், சமூகப் பொருளாதாரத்தினது முதலாளியத் துறையின் பயனுள்ள பகுதியைக் காத்து அதைத் தகுந்த வகையில் வளரவிடுவதும் ஆகிய இரண்டுகடமைகளும் சப்பானை எதிர்த்துக்கொண்டும், சனநாயகக் குடியரசைக் கட்டிக் கொண்டும் இருக்கிற இந்தக் காலப் பகுதியில் நம் தவிர்க்க முடியாத கடமைகள் ஆகும். இந்தக் காலப் பகுதியில் சில பொதுவுடைமையாளர்கள் உடைமையாளர்களால் கெடுக்கப்பட்டு விடவும், கட்சி உறுப்பினர்களிடையே முதலாளியக் கருத்துகள் தோன்றவும் வாய்ப்புண்டு; நாம் இந்த நலிவுக் கருத்துகளுக்கு எதிராகப் போரிடவேண்டும்; எனினும், கட்சிக்குள்ளிருக்கும் முதலாளியக் கருத்துகளுக்கு எதிரான போராட்டத்தை நாம் தவறுதலாக சமூகப் பொருளாதாரத்துறைக்குக் கொண்டு போய், பொருளாதாரத்தின் முதலாளியத் துறையை எதிர்க்கக்கூடாது. இவை இரண்டுக்கும் நடுவில் நாம் தெளிவான எல்லைக் கோட்டை வரைந்து கொள்ள வேண்டும். சீனப் பொதுவுடைமைக் கட்சி சிக்கலானதோர் சூழ்நிலையில் வேலை செய்து கொண்டிருக்கிறது; கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும், குறிப்பாக ஒவ்வோர் ஊழியரும் மார்க்சிய செயல் தந்திரத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு போராளியாக ஆவதற்குத் தன்னைத் தயார் செய்து (பதப்படுத்தி-temper) கொள்ள வேண்டும். ஒரு தரப்பான மற்றும் மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட முறையில் பிரச்சினைகளை அணுகினால் புரட்சி வெற்றிப் பாதையில் செல்ல முடியாது.

—மாவோ தேர்வு நூல்கள்

தொகுதி-III

## முழக்கங்களைப் பற்றி

உடனடியாக அணுகிவருகிற போராட்டத்திற்கான முழக்கங்களை ஒரு குறிப்பிட்ட செயல் திட்டத்தின் (programme) பொது முழக்கத்திலிருந்து எளியமுறையிலும் நேரடியாகவும் வருவித்துவிட முடியாது என்பதை ஒரு மார்க்சியர் எந்தச் சூழ்நிலையிலும் மறக்கக் கூடாது.

உடனடியாக இப்போது அணுகிவருகிற, 1906 கோடை அல்லது இலையுதிர்காலத்தில் வரவிருக்கிற போராட்டத்திற்கான முழக்கத்தைத் தீர்மானிப்பதற்கு நமது செயல் திட்டத்தைப் (முந்திய பத்தியைப் பார்க்கவும்; எதேச்சதிகாரத்தையும், அதன் உறுப்பாகிய சட்டமன்றம் போன்றவற்றையும் தூக்கி எறிதல்) படித்துப் பார்ப்பது போதாது.

இதற்காக நாம் பருண்மையான வரலாற்று நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்; புரட்சியின் வளர்ச்சி முழுவதையும், அடுத்தடுத்த முன்னேற்றம் முழுவதையும் தொடர்ந்து அறிய வேண்டும்; நமது கடமைகளை செயல் திட்டத்தின் நெறிமுறை (principle)யிலிருந்து மட்டும் தீர்மானிக்காமல் அதற்கு முந்திய அடிகள் (steps) மற்றும் இயக்கத்தின் கட்டங்களில் இருந்தும் தீர்மானிக்க வேண்டும். அத்தகைய பகுப்பாய்வுதான் உண்மையான வரலாற்றுப் பகுப்பாய்வாக இருக்கும், இயங்கியல் பொருள் முதலர்க்குக் கட்டாயம் தேவைப்படும் பகுப்பாய்வாக இருக்கும்.

**வி. இ. லெனின்**

(லெ. தொ. நூ. தொகுதி II, பக். 117)

## புறக்கணிப்புப் பிரச்சினை

வர்க்கங்களுக்கிடையேயுள்ள புறவயமான உறவுகள், அவற்றின் ஒரு குறிப்பிட்டவகைச் சார்பு நிறுவனங்களுக்கு உள்ளும் புறமும் அவற்றின் (பொருளியல் மற்றும் அரசியல்) பாத்திரம்; புரட்சியின் எழுச்சி அல்லது வீழ்ச்சி; பாராளுமன்றமல்லாத மற்றும் பாராளுமன்ற போராட்ட முறைகளுக்கிடையிலான உறவு—இவைதான் புறக்கணிப்பு அல்லது பங்கேற்புச் செயல்தந்திரத்தை நமது அனுதாப அடிப்படையில் மனம்போன போக்கில் வருவிக்காமல் மார்க்சிய வழியில் வருவிக்க கணக்கில் எடுக்கத் தேவையான முதன்மையான அடிப்படைப் புறநிலை உண்மைகளாகும்.

# 22

# சீனப்புரட்சிக்கான நமது பொது வேலைத் திட்டமும் குறிப்பான வேலைத்திட்டமும்

—மாசேதுங்

சீனமக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் அணிதிரட்டவும் மற்றும் ஒன்றுபடுத்தும் நோக்கத்திற்காகவும், சப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றிலும் துடைத்தழிப்பதற்காகவும், சுதந்திரமான கட்டற்ற சனநாயகமுள்ள ஒன்றுபட்ட செழிப்புள்ள, ஆற்றல்மிக்க புதிய சீனாவைக் கட்டுவதற்காகவும், ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு பொது வேலைத்திட்டம் சீனமக்களுக்கும், சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கும், சப்பானிய எதிர்ப்பு சனநாயகக் கட்சிகள் அனைத்துக்கும் அவசரமாகத் தேவைப் படுகிறது.

அத்தகைய வேலைத் திட்டத்தைப் பொதுவான வேலைத் திட்டம், குறிப்பான வேலைத்திட்டம் என இரண்டாகப் பிரிக்கலாம். முதலில் நாம் பொதுவான வேலைத் திட்டத்தையும், அதன் பிறகு குறிப்பான வேலைத் திட்டத்தையும் ஆழ்ந்து ஆராயலாம்.

சப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றிலும் அழித்துவிட்டு ஒரு புதிய சீனாவைக் கட்டவேண்டும் என்ற பெரிய முன்னுரையைப் பொறுத்தமட்டில், சீனவளர்ச்சியின் இப்போதைய காலகட்டத்தில் பொதுவுடைமையாளர்களாகிய நாமும், மக்கள் தொகையில் மேலதிக பெரும்பான்மையினரும் பின்வரும் அடிப்படைக் கூற்றுகளை ஒப்புக் கொள்கின்றோம். முதலாவதாக, சீனாவில் நிலப் பிரபுத்துவ, பாசிச மற்றும் மக்களுக்கு எதிரான அரசமைப்பு

பெருநிலப்பிரபு மற்றும் பெரிய உடைமையாளர்களின் (big bourgeoisie) தலைமையின் கீழ் இருக்கக்கூடாது; ஏனெனில், கோமின்டாங்கின் முதன்மை ஆளும் குறுங்குழு அரசாங்கத்தின் பதினெட்டு ஆண்டுக் கால ஆட்சி ஏற்கனவே அதன் முற்றிலும் கையாலாகாத்தனத்தை மெய்ப்பித்து (நிரூபித்து) விட்டது. இரண்டாவதாக, பழைய வகைப்பட்ட சனநாயக சர்வாதிகாரத்தை—தூய தேசிய முதலாளி (பூர்ஷ்வா) அரசை—நிறுவும் வாய்ப்பு இல்லை. எனவே அதற்கு முயலக்கூடாது. ஏனென்றால், மறுபுறம் சீன தேசிய முதலாளிகள் பொருளியல் மற்றும் அரசியல் ரீதியாக உரமற்றவர்கள் என்பதை மெய்ப்பித்துவிட்டனர். மறுபுறம் ஒரு புதிய கூறு இப்போது நெடுங்காலமாக இருக்கிறது—சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையிலான விழிப்புற்ற சீனப் பாட்டாளி வர்க்கமே அது. அரசியல் அரங்கில் அது மாபெரும் திறனுடையதென்று விளக்கிக் காட்டியுள்ளது; உழவர்திரள், நகர்ப்புறச் சிறு உடைமையாளர்கள், அறிவாளிகள் மற்றும் பிற சனநாயக சக்திகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டது. மூன்றாவதாக, அயல்நாட்டு மற்றும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையை எதிர்ப்பதைத் தங்கள் கடமையாக இன்னமும் கொண்டுள்ள போது, ஒரு சோசலிச அரசுக்குத் தேவையான சமூக மற்றும் பொருளியல் நிலைமைகள் இன்னமும் போதாதிருக்கும் போது, இப்போதைய காலகட்டத்தில் ஒரு சோசலிச அரசு அமைப்பை (System) நிறுவுவது சீனமக்களுக்கு சாத்தியமில்லாத ஒன்றாகும்.

அப்படியானால் நாம் என்ன செய்யலாம் என்று முன்மொழிகிறோம்? சப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்ற முழுககத் தோற்கடித்தபிறகு புதிய சனநாயகம் என்று நாம் அழைக்க அரசு அமைப்பை, அதாவது தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழமைந்த மக்களின் மேலதிகப் பெரும்பான்மையை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட ஓர் ஐக்கிய முன்னணி சனநாயகக் கூட்டணியை (alliance-நேச அணி) நிறுவ வேண்டுமென்று முன்மொழிகிறோம்.

சீனமக்களின் மேலதிகப் பெருமபான்மையினரின் தேவைகளை (கோரிக்கைகளை-demonds) உண்மையிலேய நிறைவேற்றக் கூடியது இத்தகைய அரசு அமைப்பே ஆகும்; ஏனெனில், முதலாவதாக, இது இலட்சக்கணக்கான ஆலைத தொழிலாளர்கள், கோடிக்கணக்கான கைவினைஞர்கள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்கள், இரண்டாவதாக, சீனமக்கள் தொகையில்

80 விழுக்காடாக—அதாவது 45 கோடியில் 36 கோடி பேராக—உள்ள உழவர்கள், மூன்றாவதாக பெரும் எண்ணிக்கையில் அமைந்த நகர்ப்புறச் சிறு உடைமையாளர்கள், தேசிய முதலாளிகள், அறிவுத் துறையினர் மற்ற நாட்டுப் பற்றாளர்கள் ஆகியோரின் ஒப்புதலை வென்றெடுக்க முடியும், உண்மையில் வென்றெடுத்துக் கொண்டுள்ளது.

இந்த வர்க்கங்களுக்கிடையில் இன்னமும் கூட முரண்பாடுகள் இருக்கின்றன. குறிப்பாக உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கின்றது என்பதும், முடிவாக ஒவ்வொரு வர்க்கமும் தனக்கேயுரிய கோரிக்கைகளைக் கொண்டுள்ளன என்பதும் உண்மைதான். இந்த முரண்பாடுகளும், வேறுபட்ட கோரிக்கைகளும் இருக்கின்றன என்பதை மறுப்பதானது பாசாங்குத் தனமானதும் தவறும் ஆகும். ஆனால், புதிய சனநாயக அரசு உள்ளவரையில் இந்த முரண்பாடுகளும், இந்த வேறுபட்ட கோரிக்கைகளும் வளரவும் எல்லா வர்க்கங்களுக்கும் பொதுவாக உள்ள கோரிக்கைகளுக்குமேல் உயர்ந்தெழவும் மாட்டாது; அப்படி நடக்க விடவும்கூடாது. அவற்றைச் சரி செய்ய முடியும். அப்படிச் சரி செய்தால் இந்த வர்க்கங்கள் ஒன்றுகூடிப் புதிய சனநாயக அரசின் அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டுக் கடமைகளைச் செய்து முடிக்கமுடியும்.

நாம் பரிந்துரைக்கிற புதிய சனநாயக அரசியல் வெளிநாட்டு ஒடுக்கு முறையையும், உள்நாட்டு நிலப்பிரபுத்துவ மற்றும் பாசிச ஒடுக்கு முறையையும் தூக்கி எறிந்து, அதன்பிறகு பழையவகைப் பட்ட சனநாயகமாக இல்லாமல் சனநாயக வர்க்கங்கள் அனைத்தின் ஐக்கிய முன்னணியாக அமையும் ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்தும். நம்முடைய இந்த நோக்கங்கள் டாக்டர் சன்-யாட்செனனின் புரட்சிகர நோக்கங்களுடன் முழுதும் ஒத்துப் போகின்றன. கோமின்டாங்கின் முதலாவது தேசியப் பேராயத்தின் (congress) கொள்கை அறிக்கையில் டாக்டர் சென் பின்வருமாறு எழுதினார்.

''நவீன அரசுகளில் சனநாயக அமைப்பு என்று கூறப்படுகின்றதை உடைமையாளர்கள்தான் வழக்கமாக (ஏகபோக) முற்றுரிமையாக்கிக் கொண்டுள்ளனர். எளிதாகச் சொன்ன இந்த அமைப்பு பொது மக்களை ஒடுக்குவதற்கான ஒரு கருவியாகி விட்டது. மறுபுறம் கோமின்டாங்கின் சனநாயக நெறிமுறையானது (Principle) ஒரு சிலரால் தனி உடைமையாக்கப்படாமல் பொது மக்கள் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிற ஓர் அமைப்பு என்ற பொருள் படுகிறது.''

இது டாக்டர் சன்யாட்-சென்னின் ஒரு மாபெரும் அரசியல் கட்டளையாகும். சீனமக்களும், சீனப் பொதுவுடைமைக் கட்சியும், மற்றெல்லாச் சனநாயகவாதிகளும் இதற்கு மதிப்பளிக்க வேண்டும்; உறுதியாக இதை நடைமுறைப்படுத்த வேண்டும்; இதை மீறுகிற அல்லது எதிர்க்கிற தனி நபர்கள் அல்லது குழுக்கள் அனைவரையும் உறுதியுடன் எதிர்த்துச் சண்டையிட வேண்டும்; மேலும் இந்த முற்றிலும் சரியான புதிய சனநாயக அரசியல் நெறிமுறையைக் (விட்டுக் கொடுக்காமல்) காத்து வளர்த்தெடுக்க வேண்டும்.

புதிய சனநாயக அரசின் அமைப்பு நெறிமுறை சனநாயக மத்தியத்துவமாக இருக்க வேண்டும். பெருங் கொள்கைகளைத் தீர்மானிப்பதையும், பல்வேறு மட்டங்களில் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதையும் மக்கள் (காங்கிரஸே) பேரவையே செய்யும் அது ஒரே சமயத்தில் சனநாயகத் தன்மையுடையதாகவும், மையப் படுத்தப்பட்டதாகவும் இருக்கிறது; அதாவது சனநாயக அடிப் படையில் மையப்பட்டும், மையப்பட்ட வழிகாட்டுதலின் கீழ் சனநாயக ரீதியாகவும் உள்ளது. எல்லாமட்டங்களிலும் மக்கள் பேராயங்களில் சட்டப்படி அளிக்கப்பட்ட முழுஅதிகாரங்களுடனான சனநாயகத்துக்கு முழு விளக்கம் அளிக்க முடிந்ததும், மேலும் அதே நேரத்தில், ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள அரசாங்கங்களைக் கொண்டு மக்கள் பேராயத்தால் அந்தந்த மட்டங்களில் ஒப்படைக் கப்பட்ட எல்லாவற்றையும் மையப்பட்ட முறையில் நிர்வாகம் செய்கிற மையப்பட்ட ஆட்சித் துறைகளுக்கு உத்தரவாதமளிப்பதும் மக்களின் சனநாயக வாழ்க்கைக்கு என்னென்ன அவசியத் தேவை களோ அவற்றுக்குப் பாதுகாப்பு அளிப்பதுமான ஒரே அமைப்பு இதுதான்.

புதிய சனநாயக அரசு அதிகாரக் கருவியின் முக்கியமான தொரு பகுதியாக இராணுவமும் மற்ற ஆயுதந்தாங்கிய படைகளும் அமைகின்றன; இவையில்லாவிட்டால் அரசைப் பாதுகாக்க முடியாது. மற்றெல்லா அதிகார உறுப்புகளையும் போலவே புதிய சனநாயக அரசின் ஆயுதப்படைகள் மக்களுக்குச் சொந்தமானவை; அவை மக்களைக் காக்கும்; பழைய வகைப்பட்டதும், சிலருக்கே சொந்தமானதும், மக்களை ஒடுக்குகிறவையுமான இராணுவம், போலீஸ் போன்றவைகளுக்கும் இதற்கும் தொடர்பில்லை.

நாம் பரிந்துரைக்கிற புதிய சனநாயகப் பொருளாதாரம் இது போலவே டாக்டர் சன்யாட்-சென்னின் நெறிமுறைகளுடன் உடன் படுகிறது. நிலப்பிரச்சினையில் டாக்டர் சன்யாட் சென் "உழுப வனுக்கே நிலம் சொந்தம்" என்பதை ஆதரித்தார். தொழில் வணிகப்

பட்ட நோக்கங்கள்—அதாவது இப்போது புதிய சனநாயகப் புரட்சியும் வருங்காலத்தில் சோசலிசமும் பொதுவுடைமையும்—உள்ளன; இவைகளுக்காகப் பொதுவுடைமையின் எதிரிகளுடைய மிகுந்த வெறுப்பையும் அவர்களுடைய கொச்சையான, அறியாமை சார்ந்த அவதூறுகளையும், ஏச்சுகளையும், கிண்டல்களையும் அவர் எதிர்த்துச் சண்டையிடுவார்; நாமும் உறுதியுடன் எதிர்க்க வேண்டும். நல்லெண்ணமுடைய ஆனால் நம்பிக்கையுறுதி அற்றவர்களிடம் நாம் விசயங்களை நல்லெண்ணத்தோடும் பொறுமையோடும் விளக்க வேண்டும்; அவர்களைத் தாக்கக் கூடாது. இதெல்லாம் மிகவும் தெளிவாகவும், வரையறுக்கப்பட்டும் ஐயத்திற்கிடமின்றியும் உள்ளன.

ஆனால் சீனாவில் உள்ள எல்லாப் பொதுவுடைமையாளர்களும் பொதுவுடைமை அனுதாபிகளும் இப்போதைய காலகட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் போராட வேண்டும்; சீனமக்களை அவர்களது துயரம் நிரம்பிய குடியேற்ற, அரைக் குடியேற்ற மற்றும் அரை நிலப்பிரபுத்துவ இடுக்கண் நிலையில் இருந்து விடுவிக்கவும், உழவர் வர்க்கத்தை விடுதலை செய்வதை முக்கிய கடமையாகக் கொண்ட பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் புதிய சனநாயக சீனாவை, புரட்சிகர சீனாவை நிறுவவும், அவர்கள் அயல் நாட்டு மற்றும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குதலை எதிர்த்துப் போராட வேண்டும்; டாக்டர் சன் யாட்-சென் கூறிய மக்கள் நெறிகள் மூன்று. சுதந்திரமான, கட்டற்ற, சனநாயக, ஒன்றுபட்ட, செழிப்பான. ஆற்றல் மிக்க சீனாவை உருவாக்க வேண்டும், இது தான் உண்மையில் நாம் இப்போது செய்து கொண்டிருப்பதாகும். சீனமக்கள் திரளினருடன் பொதுவுடைமையாளர்களாகிய நாம் கடந்த இருபத்துநான்கு ஆண்டுகளாக இந்த நோக்கத்திற்காகவே வீரமுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஏதாவது ஒரு பொதுவுடைமையாளர் அல்லது பொதுவுடைமை அனுதாபி சோசலிசம்பற்றியும் பொதுவுடைமை பற்றியும் பேசிவிட்டு இந்த நோக்கத்துக்காகப் போரிடத் தவறினால், இந்த முதலாளிய சனநாயகப்புரட்சியைக் குறைவாக எண்ணினால், மிகக் குறைந்த அளவிலேனும் மந்தமடைந்த மிகச்சிறிய அளவிலேனும் பற்றின்மையையும் வெறுப்பையும் காட்டினால், அதற்காகத் தனது இரத்தம் சிந்தவோ, உயிரைக்கொடுக்கவோ தயங்கினால், அறிந்தோ அல்லது அறியாமலோ அத்தகைய ஒருவர் சோசலிசத்தையும் பொதுவுடைமையையும் பெரிய அளவிலோ சிறிய அளவிலோ காட்டிக் கொடுக்கிறார், அவர் உறுதியாக அரசியல் விழிப்புணர்வு பெற்றவரில்லை; அவர் உறுதியாகப் பொதுவுடைமைக்குத்

திடமாகப் போராடுபவர் இல்லை. சோசலிசத்தைச் சனநாயகக் கட்டத்தின் மூலம்தான் அடைய முடியும் என்பது மார்க்சிய விதியாகும். மேலும் சீனாவில் சனநாயகத்துக்கான போர் நீண்டதாகும். ஒன்றுபட்ட புதிய சனநாயக அரசு இல்லாமல் புதிய சனநாயகப் பொருளாதாரத்தின் அரசுத்துறை, தனியார் முதலாளியத்துறை மற்றும் கூட்டுறவுத்துறைகள் வளர்ச்சி அடையாமல் ஒரு தேசிய அறிவியலான (விஞ்ஞான) மற்றும் மக்கள்திரள் பண்பாடு, அதாவது ஒரு புதிய சனநாயகப் பண்பாடு வளர்ச்சி அடையாமல், நூற்றுக்கணக்கான இலட்சக்கணக்கானமக்களை விடுவிக்காமலும் அவர்களது தனித் தன்மை வளர்ச்சி அடையாமலும் சுருக்கமாகச் சொன்னால் பொதுவுடைமைக் கட்சி தலைமை தாங்கி நடத்தும் புதியவகை விட்டுக் கொடுக்காத முதலாளிய—சனநாயகப் புரட்சி இல்லாமல் குடியேற்ற அரைக் குடியேற்ற, மற்றும் அரை நிலப்பிரபுத்துவ அமைப்பின் அழிபாடுகளிலிருந்து சோசலிச சமுதாயத்தைக் கட்ட முயல்வது வெறும் மாயையே ஆகும்.

முதலாளியத்துக்கு அஞ்சுவதை விட்டுவிட்டுப் பொதுவுடைமையாளர்கள் சில குறிப்பிட்ட நிலைமைகளில் அதன் வளர்ச்சிக்குப் பரிந்து பேசுவது ஏன் என்பதைச் சிலர் புரிந்து கொள்ளத்தவறுகிறார்கள். நமது விடை எளிமையானது. வெளிநாட்டு ஏகாதிபத்தியம் மற்றும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறையின் இடத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு முதலாளிய வளர்ச்சியை ஈடுசெய்வது முற்போக்கானது மட்டுமின்றித் தவிர்க்க இயலாத நிகழ்முறையுமாகும். இது பாட்டாளி வர்க்கத்துக்கும். உடைமையாளருக்கும் உதவி செய்கிறது. பாட்டாளிவர்க்கத்துக்கே அதிக உதவி செய்கிறது. இன்றைய சீனாவில் தேவைக்கு அதிகமாக இருப்பது உள்நாட்டு முதலாளியம் அன்று; வெளிநாட்டு ஏகாதிபத்தியமும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவமுமே ஆகும்; உண்மையில், நம்மிடம் மிகக் குறைந்த அளவே முதலாளியம் உள்ளது. சீன உடைமையாளர்களின் சார்பாகப் பேசும் சிலர் முதலாளிய வளர்ச்சிக்கு நேரடியாகப் பரிந்து பேசாமல் சுற்றி வளைத்துக் குறிப்பிடுவது விந்தையாக உள்ளது. வேறு வகையான மக்களும் உள்ளனர். இவர்கள், சீனா இன்றியமையாத ஓர் அளவு முதலாளிய வளர்ச்சியை அனுமதிப்பதை முற்றிலும் மறுக்கின்றனர். இவர்கள் ஒரேதாவலில் சோசலிசத்தை அடைவது பற்றியும் மூன்று மக்களின் நெறிகள் மற்றும் சோசலிசக் கடமைகளை ஒரே அடியில் (வீச்சில்) நிறைவேற்றுவது பற்றியும் பேசுகிறார்கள். இந்தக் கருத்துகள் ஒன்று, சீனத் தேசிய முதலாளிகளின் பலவீனத்தை எதிரொலிக்கிறது, அல்லது, பெரிய நிலப்பிரபுக்கள் மற்றும் பெருவுடைமையாளர்கள் செய்கிற கும்பலாட்சித் (demagogic) தந்திரம் ஆகும் என்பது வெளிப்படை.

சமுதாய வளர்ச்சியின் மார்க்சிய விதிகளை நாம் அறிந்து கொண்டதிலிருந்து, சீனாவிலுள்ள புதிய சனநாயக அரசு அமைப்பின் கீழ் அரசுத்துறை, உழைக்கும் மக்களின் தனிநபர் கூட்டுறவுத் துறைகளின் வளர்ச்சியுடன் கூடவே பொருளாதாரத்தின் தனியார் முதலாளிய வளர்ச்சிக்கும் (அது மக்களின் வாழ்க்கை மூலாதாரங்களை ஆதிக்கம் செய்யாதிருக்கும் பட்சத்தில்) வாய்ப்பு அளிப்பது சமுதாய முன்னேற்ற நலன்களுக்கு இன்றியமையாதது; பொதுவுடைமையாளர்களாகிய நாம் இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். பொதுவுடைமையாளர்களாகிய நாம் வெற்றுப்பேச்சுகளோ, ஏமாற்று வித்தைகளோ நம்மை மயக்கிக் குழப்பத்தில் ஆழ்த்த விடமாட்டோம்.

''இன்று சீனாவுக்குத் தேவைப்படும் மூன்று மக்களின் நெறிகளை முழுவதும் (மெய்ம்மையாக்க) நனவாக்குவதற்காக (Realisation) நமது கட்சி போரிடத் தயாராக உள்ளது'' என்று நாம் அறிவிக்கும்போது பொதுவுடைமையாளர்களாகிய நாம் உண்மையானவர்களாக இருக்கிறோமா என்பதை ஐயுறுகிற சிலரும் உள்ளனர். 1924இல் கோமின்டாங்கின் முதலாவது தேசியப் பேராயத்தின் கொள்கை அறிக்கையில் டாக்டர் சன் யாட்-சென் தெளிவாகக் கூறிய மூன்று மக்களின் நெறிகளுடைய (tenets) அடிப்படையான கருத்துகளை நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். இந்த அடிப்படைக் கருத்துகள் இப்போதைய காலகட்டத்துக்காக நமது கட்சி வைத்துள்ள வேலைத்திட்டத்தின் சிறும வேலைத்திட்டத்தின் சில குறிப்பிட்ட அடிப்படைக் கருத்துகளுடன் முற்றிலும் பொருந்துகின்றன. இதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுவதன் விளைவாகவே அப்படி ஐயுறுகின்றனர். டாக்டர் சன்யாட்-சென்னின் மூன்று மக்கள் நெறிகள் இப்போதைய காலகட்டத்துக்கான நமது கட்சி வேலைத்திட்டத்தின் ஒருசில அடிப்படைக் கருத்துகளுடன்தான் முற்றிலும் பொருந்துகின்றனவே ஒழிய எல்லாவற்றுனுடமில்லை என்பதைச் சுட்டிக்காட்டியாக வேண்டும். நமது கட்சியின் புதிய சனநாயக வேலைத்திட்டம் டாக்டர் சன்யாட்-சென்னின் நெறிகளைவிடப் பலவற்றை உட்கொண்டுள்ளதென்பது உறுதி; அதுவும் குறிப்பாக, டாக்டர் சன்யாட்-சென் இறந்த பிறகு இருபதாண்டுகளில் சீனப்புரட்சியின் வளர்ச்சியுடன் கூடவே புதிய சனநாயகப் புரட்சிக்கான கட்சிக் கோட்பாடு, வேலைத்திட்டம், நடைமுறை எல்லாம் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளன; இனிமேலும் வளரும். எனினும், சாராம்சத்தில் இந்த மூன்று மக்கள் நெறிகளும் புதிய சனநாயகத்தின் ஒரு வேலைத்திட்டமாகும்; இதை முந்தைய, பழைய மூன்று மக்கள்

நெறிகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கவேண்டும்; இயற்கையாகவே அவைதான் ''இன்றைய சீனாவுக்குத் தேவை'' இயற்கையாகவே ''அவற்றை முற்றிலும் எய்திட நமது கட்சி போரிடத் தயாராக உள்ளது.'' சீனப் பொதுவுடைமையாளர்களாகிய நமக்கு நமது கட்சியின் சிறும (குறைந்தபட்ச) வேலைத்திட்டத்துக்கான போராட்டமும், டாக்டர் சன்யாட் சென்னின் புரட்சிகர, மூன்று மக்கள் நெறிகளுக்கான போராட்டமும் (எல்லாவற்றிலுமாக இல்லாவிட்டாலும்) அடிப்படையில் ஒன்றேயாகும். எனவே, கடந்த காலத்திலும் இப்போதும் போலவே சீனப் பொதுவுடைமையாளர்களாகிய நாம் வருங்காலத்திலும் கூடப் புரட்சிகர மூன்று மக்கள் நெறிகளை மிகவும் நேர்மையாகவும் விட்டுக் கொடுக்காமலும் நிறைவேற்றுவோம் என்பதை மெய்ப்பிப்போம்.

சீனப் பொதுவுடைமைக் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் அது ருஷ்யாவை உதாரணமாகப் பின்பற்றிப் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தையும் ஒருகட்சி அமைப்பையும் நிறுவிவிடும் என்று சிலர் நம்பிக்கையிழந்து சிந்திக்கலாம். சனநாயக வர்க்கங்களின் கூட்டணியை (Alliance) அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சனநாயக அரசு,பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் கீழ் அமைந்த ஒரு சோசலிச அரசிலிருந்து கொள்கை நெறியில் வேறுபடுகிறது என்பதே நமது விடையாகும். எல்லா ஐயத்துக்கும் அப்பாற்பட்டு (சந்தேகத்துக்கு இடமில்லாமல்) நமது புதிய சனநாயக அரசு பாட்டாளிவர்க்கம் மற்றும் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையின் கீழ்க் கட்டப்படும்; ஆனால் புதிய சனநாயகக் காலகட்டம் முழுவதிலும், சீனா ஒருவர்க்கச் சர்வாதிகாரத்தையும் ஒருகட்சி அரசாங்கத்தையும் கொள்ளும் வாய்ப்பிருக்க முடியாது; எனவே அதற்கான முயற்சி இராது.

எல்லா அரசியல் கட்சிகள், சமூகக் குழுக்கள் மற்றும் தனிநபர்கள் பொதுவுடைமைக் கட்சியின்பால் காட்டும் போக்கு ஒத்துழைப்பு அடிப்படையிலும், பகைமையற்றதாகவும் இருக்கும் பட்சத்தில் நாம் அவர்களுடன் ஒத்துழைப்பதை மறுக்க மாட்டோம். ருஷ்ய அமைப்பு ருஷ்ய வரலாற்றால் உருவாக்கப்பட்டது. ருஷ்யாவில் மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்தாயிற்று. சமுதாய அமைப்பாக சனநாயகத்தின் புத்தம் புதிய வகையான அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு அமலாக்கப்படுகிறது. மக்கள் போல்ஷெவிக் கட்சியை மட்டுமே ஆதரிக்கின்றனர். மற்ற எல்லா சோசலிச எதிர்ப்புக் கட்சிகளையும் புறத்தே தள்ளிவிட்டனர். இதெல்லாம் ருஷ்யாவுக்கு முற்றாக இன்றியமையாதிருக்கிறதும், நியாயமானது

மான ஒரு அமைப்பை-ருஷ்ய அமைப்பை-உருவாயிருக்கின்றனது. ஆனால் போல்ஷெவிக் கட்சி ஒன்றே அரசியல் கட்சியாக இருக்கிற ருஷ்யாவிலுங்கூட, அரசு அதிகார உறுப்புகளில் (organs of state power) நடை முறைப்படுத்தப்படும் ஏற்பாடு இன்னமும் கூடத் தொழிலாளர்கள், உழவர்கள், மற்றும் அறிவாளிகளின் கூட்டணியே ஆகும். கட்சி உறுப்பினர்கள் மற்றும் கட்சியில்லாத மக்களின் கூட்டணியே ஆகும். அரசாங்க உறுப்புகளில் உழைக்கும் வர்க்கமும, போல்ஷெவிக்குகளும் மட்டுமே வேலை செய்யக்கூடிய ஏற்பாடு இல்லை. இப்போதைய கால கட்டத்திற்கு ஆன—சீன அமைப்பு சீன வரலாற்றின் இப்போதைய கால கட்டத்தால் உருவாக்கப் பட்டுள்ளது. இனி நெடுங்காலம் வரையில் ஒரு தனிவகை வடிவிலான (special form) அரசு மற்றும் அரசியல் அதிகாரம் நிலவும், இவ்வடிவம் ருஷ்ய அமைப்பிலிருந்து வேறு பிரிதறியக் கூடிய வடிவில் இருக்கும், ஆனால் அது நமக்கு முற்றிலும் இன்றியமையாததாகவும் நியாயமானதாகவும் இருக்கும்: சனநாயகக் கூட்டணியின் அடிப் படையில் அமைந்த புதிய சனநாயக வடிவிலான அரசு மற்றும் அரசியல் அதிகாரமாக இது இருக்கும்.

## நமது குறிப்பான வேலைத் திட்டம்
## (Our Specific Programme)

இந்தப் பொதுவான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு காலப் பகுதிக்கும் என அமைந்த குறிப்பான வேலைத் திட்டத்தையும் நமது கட்சி கொண்டிருக்க வேண்டும். புதிய சனநாயகப் புரட்சிக்கான நமது பொதுவான வேலைத் திட்டம் முதலாளிய சனநாயகப் புரட்சிக் கால கட்டம் முழுவதும், அதாவது பல பத்தாண்டுகளுக்கு மாறாமலேயே இருக்கும். ஆனால் இந்தக் காலகட்டத்தில் கட்டத்துக்குக் கட்டம்(from phase to Phase during this stage), நிலைமைகள் (Conditions) மாறின அல்லது மாறிக் கொண்டுள்ளன; அதற்கு ஏற்றபடி குறிப்பான வேலைத் திட்டத்தை யும் நாம் மாற்ற வேண்டுமென்பது இயற்கையேயாகும். எடுத்துக் காட்டாக. நமது புதிய சனநாயகப் பொது வேலைத் திட்டம் வட படையெடுப்பு (Northern Expedition) உழவர் புரட்சிகரப் போர், சப்பானிய எதிர்ப்புப் போர்க் காலப் பகுதிகள் முழுவதும் மாறா மலேயே இருந்தன; ஆனால், இந்த மூன்று காலப்பகுதிகளிலும் நமது நண்பர்களும் எதிரிகளும் அப்படியே மாறாதிருக்கவில்லை யாதலால் நமது குறிப்பான வேலைத் திட்டத்தில் மாறுதல்கள் இருந்தன.

—கூட்டரசாங்கம் பற்றி
மாவோ தேர்வு நூல்கள் தொகுதி III
(On Coalition Government
M S W Vol. III)

# 23

# புரட்சிகர நிலைமையில் சமமற்ற வளர்ச்சி

## 'சப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயல் தந்திரம் பற்றி'யிலிருந்து

**மாசேதுங்**

சீனாவின் அரசியலினதும் பொருளாதாரத்தினதும் சமமற்ற வளர்ச்சி சீனப்புரட்சியின் சமமற்ற வளர்ச்சிக்குக் காரணமாகின்றது. புரட்சி எப்பொழுதும் எதிர்ப்புரட்சிச் சக்திகள் ஒப்பீட்டளவில் பலவீனமானவையாயிருக்கும் இடங்களிலேயே முதலில் தொடங்கி வளர்ந்து வெற்றி பெறுகிறது; அதே வேளையில் எதிர்ப்புரட்சிச் சக்திகள் பலமானவையாயிருக்கும் இடங்களில் புரட்சி தொடங்க இருக்கிறது. அல்லது மிக மெதுவாக வளர்கிறது. சீனப் புரட்சியின் நீண்ட கால நிலைமை இதுவேயாகும். எதிர் காலத்தில் புரட்சியின் பொதுநிலைமை குறிப்பிட்ட கட்டங்களில் மேலும் வளர்ச்சியடையும்; ஆனால் சமமற்ற நிலைமாறாது என்று முன்கூட்டியே கூறலாம். இந்தச் சமமற்ற நிலை பொதுவானதொரு சமமான நிலையாக உருமாற மிக நீண்டகாலமும், மிகப்பெரும் முயற்சிகளும் வேண்டும்; அத்துடன் கட்சி சரியான வழியைச் செயல்படுத்தவும் வேண்டும்.

இப்போதைய நிலைமை தேசியப் புரட்சியில் புதிய பேரெழுச்சியொன்று உடனடியாக நிகழக்கூடிய ஒன்றாகவும், சீனா ஒரு மாபெரும் புதியநாடு தழுவிய புரட்சிக்கு முந்திய நாளில் இருப்பதாகவும் உள்ளது. இது இப்போதைய புரட்சி நிலையின் ஒரு பண்பியல்பு. இது ஓர் உண்மை; அத்துடன் இது விசயத்தின் ஓர் அம்சத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஏகாதிபத்தியம் இன்னமும் பார

தூரமாகக் கணக்கிலெடுக்க வேண்டிய சக்தியாகவே உள்ளதென்பதையும் நாம் கூறியாக வேண்டும்; புரட்சி சக்திகளிடையேயுள்ள சமமற்ற வளர்ச்சி மிகப்பெரும் பலவீனமாகும். நமது எதிரிகளைத் தோற்கடிக்க நாம் நீண்டகாலப் போர் ஒன்றை நடத்தத் தயாராக இருக்க வேண்டும் என்றும், இது இப்போதைய புரட்சி நிலைமையின் இன்னொரு பண்பியல்பு என்றும் நாம் கூறுகிறோம். இதுவும் ஓர் உண்மை; இது விசயத்தின் இன்னோர் அம்சத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இரண்டு பண்பியல்புகளும் இரண்டு உண்மைகளும் நிலைமைக்கேற்ப, எமது செயல் தந்திரங்களில் திருத்தம் செய்யும் படியும் எமது படைகளை ஒழுங்குபடுத்தி நிலைமைக்கு உகந்தவாறு போராட்டம் நடத்துமாறும் எமக்குக் கற்பித்து எம்மைக் கோருகின்றன. எல்லாக்கதவடைப்பு வாதத்தையும் துணிவுடன் ஒதுக்கித்தள்ளும்படியும், ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை உருவாக்கும்படியும், துணிச்சல்வாதத்தைத் தவிர்க்கும்படியும் இப்போதைய நிலைமை நம்மைக்கோருகின்றது. காலம் கனியாத வரையிலும், தேவையான வலிமையைப் பெறாதவரையிலும் தீர்க்கமான சமர்களில் நாம் குருட்டுத்தனமாகக் குதிக்கக்கூடாது.

X X X

புரட்சிகர நிலைமை இப்போது உள்ளூரளவில் நில்லாமல் தேசிய அளவில் மாறுவதையும், சமமற்ற நிலையிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு சமமான நிலைக்குப் படிப்படியாக மாறுவதையும் இதெல்லாம் சுட்டிக் காட்டுகிறது. நாம் மாபெரும் மாற்றம் நடக்கும் நாளுக்கு முந்திய பொழுதில் உள்ளோம். செம்படையின் நடவடிக்கைகளை நாடு முழுதும் உள்ள தொழிலாளர்கள், உழவர்கள், மாணவர்கள், சிறு உடைமையாளர்கள், மற்றும் தேசிய முதலாளிகளின் நடவடிக்கைகளுடன் ஒன்றுசேர்த்து ஒரு புரட்சிகர தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்குவதுதான் கட்சியின் கடமையாகும்.

X X X

சப்பானிய, சீன எதிர்ப்புரட்சிச் சக்திகளினதும் சீனப்புரட்சிச் சக்திகளதும் பலமான அம்சங்களையும் பலவீன அம்சங்களையும் பற்றிப் போதிய அளவில் மதிப்பீடு செய்யாவிட்டால், நாம் பரந்த புரட்சிகரத் தேசிய ஐக்கிய முன்னணியொன்றை அமைப்பதற்கான தேவையைப் போதிய அளவில் புரிந்து கொள்ள முடியாது. கதவடைப்பு வாதத்தைத் தகர்த்தெறிவதற்கான திடமான வழி வகைகளை மேற்கொள்ள முடியாது; நமது மிக முதன்மையான இலக்கை

அதாவது சப்பானிய ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏவல் நாய்களான சீன நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களையும் அடித்து வீழ்த்துவதற்கு முன்னேறுவதில் இலட்சக்கணக்கான மக்களையும், புரட்சியின் வலிமைமிக்க நண்பர்களாகக் கூடிய இராணுவங்கள் அனைத்தையும் அமைப்பாக்கி அணி திரட்டுவதற்கான வழி முறையாக ஐக்கிய முன்னணியைப் பயன்படுத்தவோ, நாம் முன்னேயுள்ள மிக முதன்மையான இலக்கை அடித்து வீழ்த்த நமது இந்தச் செயல் தந்திர ஆயுதத்தைப் பயன்படுத்தவோ முடியாதவர்களாவோம். ஆனால் அதற்கு மாறாக நாம் பல்வேறு இலக்குகள் மீது குறி வைத்து, நமது குண்டுகள் முதன்மை எதிரியை வீழ்த்தாமல், நமது இரண்டாந்தர எதிரிகளையும், நமது நேச அணிகளையும் கூட வீழ்த்திவிடும். இது நமது முதன்மை எதிரியைப் பிரித்தறியத் தவறுவதும், வெடி மருந்தை வீணாக்குவதுமாகும். நாம் நம் எதிரியை உள்ளே தள்ளித் தனிமைப்படுத்த இயலாமையை இது குறிக்கும். எதிரிமுகாமில் கட்டாயத்தின் பேரில் சேர்ந்து கொண்டவர்களையும், நேற்று நமது எதிரிகளாக இருந்து இன்று நமது நண்பர்களாகக் கூடியவர்களையும், எதிரிமுகாமிலிருந்தும் எதிரிமுன்னணியிலிருந்தும் நம் பக்கம் ஈர்க்க முடியாது. இது உண்மையில் எதிரிக்கு உதவி செய்து புரட்சியைத் தடுத்து நிறுத்தி, தனிமைப்படுத்தி, குறுக்கி, அதை மிகத் தணிந்த நிலைக்கும், ஏன் தோல்விக்கும்கூடக் கொண்டு வருவதாகும்.

X X X

உலகிலுள்ள மற்ற நடவடிக்கைகள் அனைத்தையும் போலவே புரட்சி முகாமும் எதிர்ப்புரட்சி முகாமும் மாறக் கூடும். சப்பானிய ஏகாதிபத்தியம் முழுச் சீனாவையும் தன் காலனியாக்கத் தீர்மானித்துள்ளமை,சீனப்புரட்சிச்சக்திகள் இன்னும் மிகப்பலவீனமானவையாயிருத்தல் ஆகிய இவ்விரண்டு அடிப்படை உண்மைகளைக்கொண்டே எமது கட்சி பரந்த ஐக்கிய முன்னணி என்ற புதிய செயல் தந்திரத்தைத் தொடங்கியது. எதிர்ப்புரட்சிச் சக்திகளைத் தாக்குவதற்கு இன்று புரட்சிச்சக்திகள் என்ன செய்ய வேண்டும் என்றால் அவை கோடானு கோடிப் பொதுமக்களை ஒன்று திரட்டி, பிரமாண்டமான புரட்சிகரப்படையொன்றைச் செயற்படச் செய்ய வேண்டும். இப்படியான அளவில் அமைந்ததோர் சக்தியால் மாத்திரமே சப்பானிய ஏகாதிபத்தியவாதிகளையும், தேசத் துரோகிகளையும், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களையும் அடித்து நொறுக்க முடியும் என்பது தெட்டத் தெளிவான உண்மை. ஆகவே, ஐக்கிய முன்னணிச் செயல் தந்திரங்கள் மட்டுமே மார்க்சிய-லெனினியச் செயல் தந்திரங்களாகும்.

—'சப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயல்
தந்திரங்கள் பற்றி' என்பதிலிருந்து,
மா. தெ. நூ. தொகுதி I, பக் 161—165.

# 24

ஹோகான் சி எழுதிய
'நவசீனப்புரட்சியின் வரலாறு' என்ற நூலின் பகுதி

# சீனப் புரட்சியின் தணிந்த அலை-புரட்சிகரத்தளங்களை நிறுவுதலும் மேம்படுத்தலும்

ஆகஸ்ட் 1927—செப்டம்பர் 1931

---

**1. 1927இல் புரட்சி தோற்றபிறகு நிலவிய அரசியல் நிலைமை. புரட்சியின் ஒரு தணிந்த நிலை.**

1924க்கும் 1927க்கும் இடையே முதலாளிய உலகத்தின் உறுதி நிலை ஒரு முக்கியமான பலவீனத்தால் குறிப்பிடத்தக்கதாயிருக்கிறது. உறுதிநிலை திடப்பட்டிருக்கவில்லை, உண்மையில், அந்நிலையில் ஒரு புதிய நெருக்கடியின் கரு உள்ளடங்கியிருந்தது.

இந்தக் காலகட்டத்தில், முதலாளிய உற்பத்தியில் அதிகரிப்பு பற்றிய மிகப் பளிச்சென்றுபட்ட (அம்சம்) சிறப்புக்கூறு, அதனுடைய சீரற்ற தன்மையாகும். உலகிலுள்ள பல நாடுகள் அவற்றின் அதிகரிக்கப்பட்ட உற்பத்திக்குச் சந்தைகளைத் தேடிக் கொண்டிருந்தன. ஆனால், சந்தைகளின் அளவும், செல்வாக்கு மண்டலங்களும் கிட்டத்தட்ட மாறாமலேயே இருந்தன. அதன் விளைவாக, சந்தைகளின் பிரச்சினை கூர்மையாக ஆயிற்று. இந்தக் கால கட்டத்தில் முதலாளிய நாடுகளிடையே இணக்கம் காண முடியாத முரண்பாடுகள் தீவிரமடைதலுக்கான அடிப்படைக் காரணம் இதில்தான் இருந்தன.

ஐரோப்பாவிலும் தூரக் கிழக்கிலும் ஒழுங்கை மீட்பதற்காக உடன்படிக்கைகள் (வெர்சேல்ஸ் மற்றும் வாஷிங்டன் உடன்படிக்கைகள்) செய்வதின் மூலம் முதலாளிய உலகில் நிலைமையை உறுதிப்படுத்துவதற்கு ஏகாதிபத்திய அரசுகள் முயற்சி செய்தன. அவை ஒரு குறுகிய காலத்திற்கு வெற்றியும் பெற்றன. ஆனால் கூர்மையான சந்தைப்பிரச்சினையால் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் முதல் உலகப் போர்முடிவில் குடியேற்றநாட்டுச் சந்தைகள் பிரிக்கப்பட்டிருந்தமுறையால் விரைவிலேயே அதிருப்தி அடைந்திருந்தன, மேலும் அந்தப் பிரிவினை காலாவதி ஆகிவிட்டதாகவும் கருதின.

ஆகவே, உலகத்தை மறுபங்கீடு செய்வதும் மற்றும் அந்நியச் சந்தைகள் தொடர்பாகச் செல்வாக்கு மண்டலங்களைப் பங்கீடு செய்வதும் ஏகாதிபத்திய நாடுகளிடையே அடிப்படையான முரண்பாடாக ஆயிற்று. சீனாவை மையமாகக் கொண்டிருந்த கிழக்கித்திய சந்தை ஏகாத்திபத்தியர்களிடையே முதன்மையான போட்டிக்குரிய பொருளாக இருந்தது. இந்த முறையில் தற்காலிகமான உறுதிச்சம நிலையிலிருந்து ஒரு புதிய நெருக்கடி தோன்றி, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே போரைத் தவிர்க்க முடியாததாகச் செய்து கொண்டிருந்தது.

1927இல் புரட்சியின் தோல்விக்குப்பிறகு, சீனாவில் ஏகாதிபத்தியர்களுக்கிடையே மோதல்கள் தீவிரமடைவதற்கு இது காரணமாக இருந்தது. புதிய கோமின்டாங் போர், போர்ப்பிரபுக்களிடையே நடைபெற்ற தொடர் போர்களில் அது எதிரொலிக்கப்பட்டது. 1927 ஆகஸ்டுக்கும் 1930க்குமிடையே ஆறு பெரிய உள்நாட்டு போர்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அவை ஒரு புறம் சியாங்கைஷேக், லிசங்-ஜென்னுக்கும், மறுபுறத்தில் வாங்சிங்-வெய் மற்றும் வூசானைச் சேர்ந்த டாங் செங்-ஷி ஆகியோருக்குமிடையே 1927 அக்டோபரில் நடைபெற்ற போர், குவாங்டுங்கைக் கட்டுப்படுத்துவதற்காக குவாங்டுங் போர்ப்பிரபுக்கும், சியாங்கை-ஷேக்குக்கும் இடையே, அதே ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற போர், 1928 ஏப்ரல், மே மாதங்களில் பெங்டியன் பிரிவைச் சேர்ந்த போர்ப்பிரபு சாங்சோ-லின்னுக்கு எதிராக சியாங்கை-ஷேக், லிசங்-ஜான், பெங்யு—சியாங், யென் சி-ஷென் ஆகியோரால் தொடுக்கப்பட்ட போர். சியாங்கை ஷேக்கிற்கும், குவாங்சி போர்ப்பிரபுக்களுக்கும் இடையில், 1929 மார்ச் ஏப்ரலில் மைய சீனாவைக் கட்டுப்படுத்துவதற்காக நடந்த போர்; சியாங்கிற்கும், பெங் மற்றும் யென்னின் ஒன்றுபட்ட படைக்கும் இடையே 1929 ஆகஸ்டிலும் ஏப்ரல் 1929 இலும் நடந்த

இரண்டு போர்கள் இதை தவிரவும், யுன்னான், கிவெய்ச்சோவ், செச்சுவான் போர்ப்பிரபுக்களுக்கிடையிலும் போர்கள் நடந்தன.

நவசீன வரலாற்றில், முன்பு ஒருபோதுமே கண்டிராத அளவுக்குப் புதிய கோமின்டாங் போர்ப்பிரபுக்களின் முதல் ஆண்டு ஆட்சியில் நாட்டின் பெரும்பகுதிகளில் போர்கள் வெடித்தன. இத்தகைய போர்கள் ஏகாதிபத்திய நாடுகளிடையே நிலவிய முரண்பாடுகளை எதிரொலித்தன. சியாங்கை-ஷேக்கின் படைகள் மற்ற படைகளைவிட உயர்வானவையாக இருந்ததாலும், அமெரிக்க ஏகாதிபத்தியர்களின் ஆதரவுடையவனாக அவன் இருந்தாலும் இத்தகையபோர்களின் இறுதியில் சியாங்கை-ஷேக் வெற்றியாளனாக வெளிவந்தான்.

புதிய கோமின்டாங் போர்ப்பிரபுக்களைச் சியாங்கை ஷேக் பிரதிநிதித்துவப்படுத்தினான். இவர்களுடைய ஆட்சிக்கு ஏகாதிபத்தியர்களின் ஆதரவு இருந்தது; இந்த ஆட்சி முற்றிலும் ஏகாதிபத்தியர்களுக்குச் சரண் அடைந்து, சீனாவின் தேசிய நலன்களை விட்டுவிட்டது. மேலும், சீனாவின் பரந்துபட்ட மக்கள் திரளை ஒடுக்குவதற்கு அவர்கள் நிலப்பிரபுத்துவ சக்திகளை முற்றிலும் சார்ந்து நின்றார்கள். புரட்சியைக் காட்டிக் கொடுத்தமையால் சியாங்கை ஷேக் சீனாவில் எந்தச் சிக்கலுக்கும் தீர்வு காண முடியவில்லை. அதற்கு மாறாக, அவன் ஏகாதிபத்தியர்கள், (நிலவுடைமையாளர்கள்) நிலப்பிரபுக்கள் மற்றும் தரகு முதலாளிகளின் பொதுவான ஏஜண்டாக (கைக் கூலியாக) மாறினான்.

தோழர் மாசேதுங் சியாங்கை-ஷேக்கினுடைய பிற்போக்கு ஆட்சியை ஊடுருவிப் பார்த்து ஒரு பகுப்பாய்வு செய்துள்ளார்.

"புதிய கோமின்டாங் போர்ப்பிரபுக்களின் இப்போதைய ஆட்சி, நகரங்களில் உள்ள தரகு முதலாளிவர்க்கத்தின் ஆட்சியாகவும், மற்றும் கிராமப்புறங்களில் உள்ள நிலம்படைத்த கூட்டத்தின் ஆட்சியாகவும் இன்னும் உள்ளது. அயல்நாட்டு விவகாரங்களில் ஏகாதிபத்தியத்துக்குச் சரணடைந்த ஓர் ஆட்சியாகவும், உள்நாட்டில் பழைய போர்ப்பிரபுக்கள் புதிய போர்ப்பிரபுக்களால் அகற்றப்பட்டுள்ள ஓர் ஆட்சியாகவும் இன்னும் உள்ளது. தொழிலாளிவர்க்கமும், உழவர் வர்க்கமும் முன்னைக் காட்டிலும் மிக அதிகமான ஈவிரக்கமற்ற முறையில் பொருளியல் சுரண்டலுக்கும், அரசியல் ஒடுக்குமுறைக்கும் உள்ளாகியுள்ளது. குவாங் டுங்கில் இருந்து தொடங்கிய முதலாளிய சனநாயகப் புரட்சி, அரைவழி மட்டுமே சென்றிருந்தபோது, தரகு முதலாளி

வர்க்கமும், நிலம் படைத்த கூட்டமும் அதன் தலைமையைக் கைப்பற்றி உடனடியாக எதிர்ப்புரட்சிப் பாதையில் அதை முடுக்கி விட்டார்கள்; நாடு முழுவதும் தொழிலாளிகளும், உழவர்களும், பொதுமக்களில் பிற பிரிவினரும், ஏன் முதலாளிகளும் (தேசிய முதலாளிகள், ஆசிரியர்) கூட எதிர்ப்புரட்சி ஆட்சியின் கீழ் இருந்துள்ளனர்; அரசியல் அல்லது பொருளியல் விடுதலையின் ஒரு துணுக்கைக் கூட அவர்கள் பெறவில்லை.''

அதாவது வர்க்க பின்னணியைப் பொறுத்தமட்டில், அந்த ஆட்சி மிக அதிகமான காட்டுமிராண்டித்தனமாக இருந்தது என்பதைத் தவிர, புதிய கோமின்டாங் போர்ப்பிரபுக்களின் ஆட்சி பழைய போர்ப்பிரபுக்களின் ஆட்சியைப் போலவே இருந்தது. கியாங் சூவிலும், செகியாங்கிலும் இருந்த வங்கித் தரகு முதலாளிகள், குண்டர்கள், போர்ப்பிரபுக்கள், மற்றும் கட்சித் தலைவர்கள் உள்ளடங்கிய ஓர் அரசியல் அமைப்பாக இருந்து, நாடு முழுவதிலுமுள்ள மக்களின் மீது இராணுவப்படை, இரகசியப் போலீஸ் ஆகியவற்றின் பயங்கரமான ஆட்சியைத் திணித்துக் கொண்டிருந்தது. புதிய போர்ப்பிரபுக்களின் ஆட்சி கோமின்டாங் கட்சியை ஓர் ஐக்கிய முன்னணி அமைப்பில் இருந்து, பெருமுதலாளி வர்க்கத்தின் ஒரு பாசிச அமைப்பாக மாற்றிவிட்டது. அவர்கள் தங்களுடைய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை மூடி மறைப்பதற்கும், மக்களை மோசடி செய்வதற்கும் புரட்சிப் பதாகையைப் பயன்படுத்தினார்கள். ஆகவே, அரசியல் மோசடியோடு கூடிய பயங்கரவாதம், சியாங்கை. ஷேக் ஆட்சியின் பண்பியல்பாகியது.

1927இல் புரட்சியின் தோல்விக்குப் பிறகு சீனாவின் வர்க்கச் சேர்மானத்தில் புதியதொரு மாற்றம் ஏற்பட்டது. பெருமுதலாளி வர்க்கம் புரட்சியின் குறிக்கோளைக் காட்டிக் கொடுத்துவிட்டது; தேசிய முதலாளி வர்க்கம் சரணடைந்துவிட்டது. குட்டி முதலாளி வர்க்கத்தின் ஒருபகுதி ஒதுங்கிப் போய்விட்டது. தொழிலாளி வர்க்கமும், உழவர்களும், வறுமையில் வாடிக்கொண்டிருந்த குட்டி முதலாளியப் பிரிவினரும்தான் புரட்சிப் போராட்டத்தில் விடாப் பிடியாக இருந்தார்கள். ஏகாதிபத்தியர்கள், நிலப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத் தரகு முதலாளிகள், கோமின்டாங்கின் வலது சாரிகள் சேர்ந்து ஓர் எதிர்ப்புரட்சிக் கூட்டணியாக அமைந்து இருந்தார்கள். அவர்களது வலிமை புரட்சியின் வலிமையைக் காட்டிலும் மிதமிஞ்சியதாக இருந்தது. ஆகவே, புரட்சி ஒரு தணிந்த அலையின் நிலையை அடைந்தது.

கோமின்டாங் பிற்போக்கு ஆட்சி,பெருமுதலாளி வர்க்கத்தின் பக்கம் தாவிச் சென்றிருந்த தேசிய முதலாளிகளின் மேல்தட்டு வர்க்கத்திற்கும், தேசிய முதலாளிகளுக்கும் எந்தவித அரசியல் உரிமைகளோ அல்லது பொருளியல் ஆதாயமோ வழங்கவில்லை. பிற்போக்குக் கோமின்டாங் அரசாங்கத்தின் தேசிய முதலாளி வர்க்கத்தின் ஒன்று அல்லது இரண்டு சார்பாளர்கள்பங்கெடுத்தார்கள் என்ற விவரம் அதனுடைய பாசிச சர்வாதிகாரத்தின் உண்மையான தன்மையை மூடி மறைப்பதற்கான ஒரு முயற்சியே தவிர, வேறு எதுவும் அல்ல. புரட்சிப் போரில் விடாப்பிடியாக இருந்த தொழிலாளிகள் மற்றும் உழவர்களைக் கோமின்டாங் பிற்போக்காளர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தார்கள். 1928ஆம் ஆண்டு சனவரி மாதத்துக்கும், ஆகஸ்ட் மாதத்துக்கும் இடையே, ஒரு இலட்சம் உழவர்களும் தொழிலாளர்களும் கொல்லப்பட்டார்கள். அதே நேரத்தில், உயிரோடு இருந்தவர்கள் முன்பு எப்போதைக் காட்டிலும் மிகவும் அதிகமாக ஈவிரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்பட்டார்கள்.

கோமின்டாங் பிற்போக்காளர்கள் பெருநகர்களில் இருந்த தொழிலாளரை முதலில் தாக்கினார்கள்.

கோமின்டாங் பிற்போக்காளர்களின் ஆட்சி, பழைய போர்ப் பிரபுக்களின் ஆட்சியைக் காட்டிலும் மிக அதிகக் காட்டுமிராண்டித் தனமாக இருந்தது. தொழிலாளர்கள் ஏற்கனவே ஈட்டியிருந்த பொருளியல் முன்னேற்றங்களையும், சனநாயக உரிமைகளையும் முற்றிலும் பறிகொடுத்துவிட்டார்கள்.

ஷாங்காய், காண்டன் மற்றும் வூகான் ஆகிய நகரங்களிலிருந்த தொழிற்சங்கப் போராட்டங்களிலிருந்து பெறப்பட்ட முக்கிய வெற்றிகளில் கூலி உயர்வு ஒன்றாகும். எனினும், எதிர்ப்புரட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு இத்தகைய பெருநகரங்களிலிருந்த தொழிலாளர்களின் கூலிகள் கடுமையாக வெட்டப்பட்டன.

வேலை நேரம் மீண்டும் 11 மணி நேரமாகவும், மேலும் அதிகமாகவும் நிர்ணயிக்கப்பட்டன. முன்பு வழங்கப்பட்டிருந்த இடைவேளைக்குப் பிறகு இருந்த அரை மணி நேர ஓய்வு ரத்து செய்யப்பட்டது. பொதுவாகக் கூறுமிடத்து, தொழிலாளர்கள் ஒருநாள் சம்பளத்தை இழப்பதற்குத் தயாராக இருந்தால் ஒழிய அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறையும் இல்லாது போயிற்று.

வேலை நிலைமைகள் கடுமையாக மோசமடைந்தன. உழைப்பின் கடுமை அதிகரித்தது. எடுத்துக் காட்டாக, கடந்த

காலத்தில் ஒன்று அல்லது இரண்டு எந்திரங்களை இயக்கிய தொழிலாளிகள் இப்போது மூன்று, நான்கு எந்திரங்களை இயக்க வேண்டியிருந்தது. குழந்தைத் தொழிலாளிகள் முன்பு போலவே கடுமையாகச் சுரண்டப்பட்டார்கள். பெண் தொழிலாளிகள் மகப் பேறு காலச் சமயத்தில் முன்பு அனுபவித்த ஒருமாதகால ஓய்வினை அனுபவிக்க முடியவில்லை. மேலும் ஒரு தொழிற்சாலையில் பணியாற்றிய தொழிலாளர்கள் ஒரு ஜாமீன் அல்லது பல ஜாமீன்களைக் கொடுக்கும்படிச் சொல்லப்பட்டார்கள். மற்றும், அவர்கள் சிறப்பாகக் கூலிக்கு அமர்த்தப்பட்ட, துப்பறிவாளர்களாலும் படைகளாலும் கூடக் கண்காணிக்கப்பட்டனர்.

சுருங்கச் சொன்னால், சங்கங்களால் தொழிலாளர்களுக்கு வாங்கித் தரப்பட்டிருந்த பொருளியல் முன்னேற்றங்கள் அனைத்தும் புரட்சியின் தோல்விக்குப் பிறகு தூக்கி எறியப்பட்டன.

கோமின்டாங் பிற்போக்காளர்கள் (பொதுவுடமையாளர்களின் தலைமையிலிருந்த) சிவப்புத் தொழிற் சங்கங்களை எப்பொழுதைக் காட்டிலும் மிகவும் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கினார்கள்; அவர்களை வெள்ளைப் பயங்கரத்திற்கு உள்ளாக்கினார்கள்; அத்தொழிற்சங்கங்களை மூடி அவற்றைத் தலைமறைவாகச் செல்லும்படி செய்தார்கள். தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய தலைவர்களின் எல்லா நடவடிக்கைகளும் நசுக்கப்பட்டன. புரட்சிப் போராட்டத்தில் அனுபவம் பெற்றிருந்த தொழிலாளர்களில் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் கொல்லப்பட்டார்கள்; அல்லது, வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

எனினும், கோமின்டாங் பிற்போக்காளர்கள் அவர்களது ஆட்சியில் ஒரு தற்காலிக உறுதி நிலையை மட்டுமே வைத்திருக்க முடிந்தது. அரசியல் ரீதியான அல்லது பொருளியல் ரீதியான எந்த விதமான உண்மையான உறுதி நிலையும் முற்றிலும் அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்தன. தங்களுடைய அரசியல் மற்றும் பொருளியல் நிலைமைகள் மோசமாகிக் கொண்டு இருந்த போதிலும், தொழிலாளிகள் தங்களது போராட்டத்தில் விடாப்பிடியாக இருந்தார்கள்.

1928-இல் ஷாங்காயில் 140 வேலை நிறுத்தங்கள் வெடித்தன. அவற்றில் 233, 802 தொழிலாளிகள் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் மிதமிஞ்சிய கடினமான நிலைமைகளில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

ஆனால் சிவப்புத் தொழிற்சங்கங்கள் தலைமறைவாகச் செல்லும்படி நிர்ப்பந்தப்படுத்தியிருந்த சமயத்தில், தொழிலாளர்

களின் வேலை நிறுத்தங்கள் எதிர்ப்புரட்சி பயங்கர ஆட்சியின் கீழ்த் தொடர்ந்து நடத்தப்பட்டன. தணிந்த அலையின் நிலையிலிருந்த ஒரு புரட்சியின் பண்பியல் ரீதியிலான பின்வரும் அடையாளங்களை அவை தவிர்க்கமுடியாதபடி பெற்றிருந்தன.

முதலாவதாக, தொழிலாளர்களின் போராட்டம் பெரும் பாலும் தன்மையில் பொருளியல் ரீதியான போராட்டமாக இருந்தது. எடுத்துக்காட்டாக, 1928 ஆம் ஆண்டின் பின் பாதியில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறுகளில், 92% தகராறுகள் பொருளியல் காரணங்களினால் ஏற்பட்ட மற்றும் உயர்ந்த கூலிகளைக் கோரி ஏற்பட்ட தகராறுகள். தொழிலாளிகள் போராடுவதற்கான அவசரத் தேவையை உணர்த்திருந்தார்கள்; ஏனெனில், அவர்கள் மிதமிஞ்சிய கொடிய சுரண்டலினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாவதாக, போராட்டம் பெரும்பாலும் தன்னெழுச்சி யானதாகவே இருந்தது. நாற்பத்தொன்பது விழுக்காட்டுக்குக் குறையாதவேலைநிறுத்தங்கள் தொழிலாளர்களாலேயே தொடங்கப் பட்டன; பன்னிரண்டு விழுக்காடு போராட்டங்கள் மஞ்சள் தொழிற்சங்கங்களால் தலைமை தாங்கப்பட்டிருந்தன; மேலும் 37 விழுக்காடு வேலைநிறுத்தப்போராட்டங்கள் சிவப்புத்தொழிற்சங்கங் களால் தலைமை தாங்கப்பட்டிருந்தன.

மூன்றாவதாக, வேலை நிறுத்தம் செய்தவர்களில் ஒரு பெரும் பகுதியினர் கடை வைத்திருப்பவர்களாகவும், கைவினைத் தொழி லாளர்களாகவும், மற்றும் கப்பல் தொழிலாளர்களாகவும் இருந்தார் கள். போராட்டத்தில் பங்கு பெற்ற மொத்தம் 196 தொழில்களில் 94 தொழில்கள் (ஏறத்தாழ 48%) மேற்கூறிய தொழில்களாகும். தொழிற்சாலைத் தொழிலாளர்கள் எதிர்ப்புரட்சிப்பயங்கரத்தின் கீழ் வாங்கிய அடியிலிருந்து இன்னும் மீளவில்லை.

நான்காவதாக, 22 விழுக்காடு வேலை நிறுத்தங்கள் முழு வெற்றி பெற்றன; 19 விழுக்காடு பாதி வெற்றியில் முடிவு அடைந் தன. 59 விழுக்காடு வேலை நிறுத்தங்கள்-பெரும்பகுதியான வேலை நிறுத்தங்கள்-தோல்வியில் முடிந்தன; அல்லது எதையுமே சாதிக்கா மல் முடிந்தன.

எதிர்ப்புரட்சிப் பயங்கரத்தின் கீழ், உழைக்கும்வர்க்கப் பெரு நகரங்களிலிருந்த இயக்கம் உயர்ந்த அலையிலிருந்து தணிந்த

அலைக்கு—தாக்குதல் நிலையிலிருந்து தற்காப்பு நிலைக்கு—கடந்து சென்றது.

சியாங் கை ஷேக்கின் புதிய கோமின்டாங் போர்ப்பிரபு ஆட்சி; கிராமப்புறங்களிலுள்ள நிலப்பிரபுக்கள் எதிர்த்தாக்குதல் தொடுத்து விவசாயிகளோடு சீராகச் செல்வதற்கு அவர்களுக்கு உதவியது. அதன் விளைவாக, வடக்கத்திய படையெடுப்பு நடந்த சமயத்தில் விவசாயிகளால் நிறுவப்பட்டிருந்த பெரும்பாலான புரட்சிகரமான உள்ளூர் அரசாங்கங்கள் அழிக்கப்பட்டன. மற்றும் குத்தகைக் குறைப்பிற்காகவும், வட்டிக் குறைப்பிற்காகவும் போடப் பட்டிருந்த உத்தரவுகள் கிழித்தெறியப்பட்டன. நிலப்பிரபுக்கள் வெறித்தனமாகக் குத்தகையையும், வட்டியையும் அதிகரித்துக் கொண்டிருந்தமையாலும், பிற்போக்கு அரசாங்கம் மிதமிஞ்சிய நிலவரியையும் இதர வரிகளையும் விதித்துக்கொண்டிருந்தமை யாலும் உழவர்கள் அவர்களுடைய வாழ்வுக்கும் உற்பத்திக்கும் அவசியமாக இருந்த நிலைமைகள் பறிக்கப்பட்டிருந்தார்கள்.

குவாங்டுங், ஹூனான், ஹூப்பே மற்றும் கியாங்சியிலும் உழவர் இயக்கம் ஆயுதமேந்திய ஓர் ஆக்கிரமிப்பு வடிவத்தை மேற்கொண்டது. கிழக்கு குவாங்டுங்கில் ஹைஃபெங்கிலும், லு பெங்கி லும், ஹைனான் தீவிலும், ஹூனான்—கியாங்சி, மற்றும் ஹூனான்— குவாங்டுங் எல்லைகளிலும், மற்றும் ஹூவாங் கானிலும், ஹூப்பேயில் மாசெங்கிலும் உழவர்கள் தங்களது சொந்தப் படைகளை அமைத்துத் தங்களுடைய சொந்த அரசாங்கத் தையும் ஏற்பாடு செய்தார்கள். சியாங்கை-ஷேக் ஆட்சியின் மைய மான கியாங்சுவிலும் செக்கியாங்கிலும் குத்தகைகள் மற்றும் வரிகளைக் கொடுப்பதற்கு எதிராக உழவர்களுடைய போராட் டங்கள் வெடித்துக் கிளம்பின. ஹோனானிலிருந்த சிவப்பு ஈட்டிக் கழகம் போன்ற இப்படிப்பட்ட புராதனமான உழவர் அமைப்பு களின் போராட்டம் அதிகமாகத் தீவிரப்படுத்தப்பட்டது. ஹோப்பெய் மற்றும் ஷாங்டுங் மாகாணங்களில் சில மாவட்டங்களில் உழவர் கழகங்கள் நடைபெற்றன.

மிதமிஞ்சிய கடினமான சூழ்நிலைகளின் நடுவில், உழவு மக்கள்திரளினர் அவர்களது போராட்டங்களை இன்னும் விடாப்பிடியாக நடத்திவந்தனர். ஆனால், வெள்ளைப் பயங்கரத் தின் கீழ்த் தணிந்த அலையிலுள்ள ஓர் இயக்கத்தின் பண்பியல்பு களையும் உழவர் இயக்கம் பெற்றிருந்தது; புரட்சியின் தோல்விக்குப் பிறகு ஹூனான்—கியாங்சி எல்லையில் கொரில்லாப் போரை

நிறைவேற்றுவதில் அவருக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்து தோழர் மாசேதுங்கினால் பின்வருமாறு சரியாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது:

கடந்த ஆண்டில் பல இடங்களில் போராடிய பிறகு, நாட்டில் ஒட்டுமொத்தமாகப் புரட்சிப் பேரெழுச்சி தணிந்து கொண்டிருக்கிறது என்று நமக்குக் கூர்மையாகத் தெரியும். செம்படை செல்லுமிடங்களிலெல்லாம், மக்கள் திரள் வரவேற்கா மலும், தயக்கத்தோடும் இருப்பதையும் அது காண்கிறது; பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சிக்குப் பிறகுதான் அவர்கள் மெதுவாகத் தாங்களாகவே எழுவார்கள். எதிரியின் படைகள் எவராக இருந்தாலும், நாம் அவர்களை எதிர்த்துப் போராட வேண்டி யுள்ளது. மேலும், எதிரியின் படைகளுக்குள்ளே எந்த வகையான கலகமும் எழுச்சியும் நடைபெறவே இல்லை.

உள்நாட்டு நிலைமை பற்றி ஊடுருவிப் பார்த்த இந்தப் பகுப்பாய்வு, உயிரோட்டமான முக்கியத்துவம் உடையதா யிருந்தது. மக்கள்திரளிடம் வரவேற்பின்மையும், தயக்கமும் இருந்தது என்பதன் பொருள் என்னவென்றால் நொறுக்கப் பட்டிருந்த மக்கள்திரள் இயக்கம் இன்னும் மீட்சி பெறவில்லை என்பதுதான். கொரில்லாப்போரில் இருந்த கடினமான போராட்டம் பிற்போக்கு வர்க்கங்களின் ஆட்சி இன்னும் முழுமையான வீழ்ச்சியின் கட்டத்தை அடைந்திருக்கவில்லை என்பதையே காட்டிற்று.

ஹூனான்—கியாங்சி எல்லையில் இருந்த நிலைமை மற்ற இடங்களிலும் அப்படியே இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற பெரும்பாலான உழவர் பேரெழுச்சிகள் குவாங்டுங், ஹூனான், ஹூப்பே மற்றும் கியாங்சி மாகாணங்களில் நடைபெற்றன; இந்த மாகாணங்களில் வடக்கத்திய படையெடுப்பு நடைபெற்ற காலத்தில் வீசிய மாபெரும் புரட்சிப் புயலின் செல்வாக்கின் கீழும், மற்றும் இந்த மாகாணங் களில் கிராமப்புறத்தில் ஏகாதிபத்தியர்கள் பத்தாம்பசலி போர்ப் பிரபுக்கள் ஆகியோரது ஆட்சியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது (பலவீனமாக) வலிமை குன்றி இருந்தாலும் புரட்சிகரமான தோர் அடித்தளம் போடப்பட்டிருந்தது. ஆனால் கட்சியின் சரியான தலைமையினால் மட்டுமே உழவர்களது ஆயுதப்படையை யும் ஆட்சியையும் கெட்டிப்படுத்தவும், மேம்படுத்தவும் முடிந்தது. கட்சித் தலைமையின் வலிமையும், புரட்சிச் சக்திகளின் வலிமையும்

மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபட்டிருந்தமையால் உழவர் இயக்கத்தின் வளர்ச்சியும் சீரற்றிருந்தது.

பொதுவாகச் சொல்லுமிடத்து 1927ஆம் ஆண்டிற்குப் பிறகு புதிய கோமின்டாங் யுத்தப்பிரபுக்களின் ஆட்சி இன்னும் நகர்ப்புறங் களில் தரகுமுதலாளிகளின் ஆட்சியாகவும், கிராமப்புறத்தில் நிலம் படைத்த கனதனவான்களின் ஆட்சியாகவும் இருந்தது. எனவே, சீனா அப்பொழுது முதலாளிய சனநாயகப் புரட்சிக் காலகட்டத்தில்தான் இருந்தது. ஆனால் புரட்சி தோல்வியடைந்த பிறகு தொழிலாளிகள் மற்றும் உழவர்களின் படைகள் ஈவிரக்கமற்ற வெள்ளைப் பயங்கரத்தால் ஒடுக்கப்பட்டும் சிதறடிக்கப்பட்டும் இருந்தன. புரட்சி அலை அப்போது இரண்டு எழுச்சிகளுக்கிடையே இருந்தது. ஒன்று முன்பே கடந்துவிட்டது. மற்றது இன்னும் வரவேண்டியிருந்தது. மேலும் இப்படிப்பட்ட இரு எழுச்சிகளின் இடையே இருந்த இடைவேளையில் புரட்சி அலை இருந்தது.

எனினும் புதிய போர்ப் பிரபுக்களின் ஆட்சி உறுதியற்று இருந்தது. இத்தகைய போர்ப் பிரபுக்கள் மக்களிடமிருந்து தனிமைப் பட்டிருந்தார்கள். மற்றும் மக்களோடு அவர்களுக்கிருந்த முரண் பாடுகள் நாள்தோறும் மிகவும் கூர்மையடைந்து கொண்டிருந்தன: ஏனெனில் அவர்களது ஆட்சி தொழிலாளர்கள், உழவர்கள் மற்றும் புரட்சிகர அறிவாளிகளை முன் கண்டிராத அளவு ஓர் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்ததன் மூலமாகப் படிப்படியாக நிலை நாட்டப்பட்டிருந்தது. அவர்களது எல்லா நிறுவனங்களும் (அரசாங்கம், ஆயுதப் படைகள், கட்சிகள் போன்றவை) வலிமை குன்றி இருந்தன. ஏனெனில், அவை பின் தங்கியதொரு சமுதாய மற்றும் பொருளியல் அடித்தளத்தின் மீது நிலை நாட்டப்பட்டிருந் தன. அவற்றின் வலிமை உள்நாட்டு மோதல்களாலும் போர் களாலும் மேலும் பலவீனப்பட்டிருந்தன. புதிய கோமின்டாங் போர்ப் பிரபுக்களின் ஆட்சி உறுதிநிலையில் இருந்து வெகு தொலைவில் இருந்தது என்பதை இவை அனைத்தும் சுட்டிக் காட்டின. இவை இரண்டாவது ஒரு புரட்சி அலையின் எழுச்சியைத் தவிர்க்க முடியாததாகச் செய்தன.

புரட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டிருந்த அரசியல் நிலைமையிலிருந்து, புரட்சிகரமான போர்த் தந்திரத்தை யும், செயல் தந்திரங்களையும் உருவாக்க வேண்டியிருந்தது. இரண் டாவது புரட்சிகர உள்நாட்டுப் போர்க் கால கட்டத்தில் இதிலிருந்து, சரியான புரட்சிப் பாதை —தோழர் மாசேதுங்கினால் பிரதிநிதித்

துவப்படுத்தப்பட்ட ஒரு பாதை—உருவாக்கப்பட்டது. இந்தப்பாதை படிப்படியாக, சீனப் புரட்சியின் அலையை மாற்றிற்று.

**2. முன்னேறுவதிலிருந்து பின்வாங்கிச் செல்வதற்கு சீனப்புரட்சி மாறிச் செல்லுதல்-பொதுவுடைமைக் கட்சிக்குள் முதல் ''இடதுசாரிப்'' பாதையைக் களையெடுத்தல்.**

முதலில் சியாங்கை-ஷேக்கினாலும் பிறகு வாங்சிங்-வெய்யினாலும் புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்டிருந்த நெருக்கடியான சமயத்தில், தோழர்கள் சூயென்-லாய் மற்றும் சூ. தே ஆகியோரின் தலைமையின் கீழ் முப்பதாயிரத்துக்கும் அதிகமான படைகளைக் கொண்டு 1927 ஆகஸ்டு முதல் நாளன்று கியாங்சி மாகாணத்தில் நான்சாங்கில் ஓர் ஆயுதப் பேரெழுச்சியை ஏற்பாடு செய்ததன் மூலம்,தோல்வியிலிருந்து புரட்சியை மீட்கக் கட்சி ஏற்பாடு செய்தது. புரட்சிக் குழு என்ற பெயரில் ஒரு தலைமை உறுப்பு அமைக்கப்பட்டது. அதிகாலையில் பேரெழுச்சி ஆரம்பிக்கப்பட்டது. மூன்று மணி நேரப் போராட்டம் மட்டுமே நடந்த பிறகு கோமின்டாங் பிற்போக்குப் படைகள் செயலற்றுத் தாக்கப்பட்டு மாநகரம் விடுவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 5ஆம் நாளன்று புரட்சிப் படைகள் நான்சாங்கைக் காலி செய்து, குவாங்டுங்கை நோக்கி அணிவகுக்கத் தொடங்கியது.

ஆயுதமேந்திய கலகத்தை, உழவர் இயக்கத்தோடு ஒருங்கிணைக்க வேண்டிய அவசியத்தை உணர்வதற்குத் தலைமை தவறியதன் காரணமாகப் பேரெழுச்சிக்குப் பிறகு எடுக்க வேண்டிய அடுத்த நடவடிக்கையைப் பற்றிய பிரச்சினைக்குச் சரியான தீர்வு காணப்படவில்லை. கியாங்சி, ஹூனான் மற்றும் ஹூப்பே மாகாணங்களில் உழவர் இயக்கம் இன்னும் முழுமுச்சோடு இருந்தமையால், ஒரு விடாப்பிடியான, நீடித்த கொரில்லாப் போரை நடத்துவதற்காகப் புரட்சிகரமான தளங்களை நிலைநிறுத்துவதற்காகவும், மற்றும், முழுமையானதொரு நிலச்சீர்திருத்தத் திட்டத்திற்கு ஏற்பவும் உழவர் புரட்சியை நிறைவேற்றுவதற்கு விவசாயிகளை ஆயுதமேந்தச் செய்வதற்காகக் கிராமங்களுக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்வதற்குப் பதிலாக, காண்டனையும் மற்றும் குவாங்டுங்கின் மற்றப் பகுதிகளையும் மீண்டும் கைப்பற்றக்கூடிய ஒரு முயற்சியை—தெற்கு நோக்கிய ஒரு படையெடுப்பை—அவர்கள் நடத்தினார்கள். இந்தப் பாதையில் செல்லவேண்டும் என்பதுபற்றிப் புத்திசாலித்தனமற்றதொரு

முடிவையும் அவர்கள் செய்தார்கள். உழவர் இயக்கம் வலியதோர் அடித்தளத்தைப் பெற்றிருந்த மேற்கத்திய கியாங்சி வழியாக அணி வகுத்துச் செல்வதற்கு மாறாக உழவர் இயக்கம் இன்னும் உதய மாகாதிருந்த கிழக்கத்திய கியாங்சியில் பொட்டல் காடாக இருந்த பிரதேசத்தின் வழியாக அவர்கள் சென்றார்கள். ஜூசின் மற்றும் ஹூய்செய் வெற்றிகளுக்குப் பிறகு மெய்சியின் கிராமப்பிரதேசத் தைப் பிடிப்பதற்கு அவர்கள் தெற்குநோக்கிச் செல்லவில்லை. ஆனால் சாவோசோவ் மற்றும் ஸ்வாடொவ் ஆகியவற்றைப் பிடிப் பதற்காக ஹாங்காங் மற்றும் டிங்சொவ் ஆகிய ஊர்களின் வழியாக மீண்டும் திரும்பிச் சென்றார்கள். இந்த முறையில், எதிரிப்படைகள் தாக்குதலை நடத்துவதற்குப் போதிய தயாரிப்புகளைச் செய்வதற்கு அவர்கள் அனுமதித்துக் கொண்டிருந்தார்கள். போதுமான அரசியல் வேலை செய்யாததால் படைகளிடையேயும் மக்கள் திரளி டையேயும் பிரச்சாரம் முழுமையாகச் செய்யப்படவில்லை; மற்றும் கட்சிக் கிளைகள் ரெஜிமென்ட்களின் அளவில் மட்டும் அமைக்கப் பட்டிருந்தனவேயொழிய கம்பெனிகளின் அளவில் அமைக்கப்படாம லிருந்தன. இதன் விளைவாக மிதமிஞ்சிய பிற்போக்குப் படைகளுக்கு எதிரே, பெரும்பாலான படைகள் தோல்வியைச் சந்திக்க வேண்டி யிருந்தது. ஒரு சிறுபகுதி மட்டுமே பாதுகாக்கப்பட்டிருந்தது.

அது தோல்வியடைந்த போதிலும், நான்சாங் பேரெழுச்சி மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது.

எதிர்ப்புரட்சிக்கு எதிராக, பொதுவுடைமைக் கட்சியின் ஒரே தலைமையின் கீழ்ப் புரட்சிகரமான ஆயுதப்படைகளின் போராட்டத் தின் தொடக்கத்தை அது குறித்தது. ஆயுதமேந்திய ஒரு பேரெழுச்சி யினால் எதிர்ப்புரட்சிப் படுகொலையை எதிர்த்ததன் மூலம் இந்த நெருக்கடியான சமயத்தில் புரட்சியைக் காப்பாற்றுவதை நோக்க மாகக் கொண்டிருந்த துணுச்சலானதொரு போராட்டமாக அது இருந்தது. சீன மக்களுக்காக விடாப்பிடியான புரட்சிகரமான போராட்டத்தில் அற்புதமானதோர் எடுத்துக்காட்டாக அது திகழ்கிறது.

நான்சாங் பேரெழுச்சி சீன மக்கள் படையின் தோற்றத்தைக் குறித்தது. அடிப்படை சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஒரே தலைமையின் கீழிருந்த ஒரு படையாக இருந்தது; மற்றும் முழுமனத் தோடு மக்கள் புரட்சியின் குறிக்கோளுக்காக அர்ப்பணித்திருந்த ஒரு படையாகவும் இருந்தது. இந்த முறையில் சீனமக்களின் புரட்சிப் போராட்டத்திற்குப் புதியதொரு வரலாற்றுக் காலகட்டம் தொடங்கிற்று.

புரட்சியைக் காப்பாற்றுவதற்கு நடிவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு, சீனப் பொதுவுடைமைக் கட்சி கியாங்சி மாகாணத்தில் கியூகியாங்கில் ஆகஸ்ட் 7ஆம் நாளன்று மையக் குழுவின் அவசர மாநாட்டை நடத்தியது.

புரட்சிகரமான தலைமை, புரட்சிகரமான ஆயுதப்படைகள் மற்றும் விவசாயப்புரட்சி ஆகியப்பிரச்சினைகளில் வலது சந்தர்ப்ப வாத சென் து-சியூவின் தவறான சரணாகதிப் பாதையை மாநாடு விமர்சித்து, தலைமைப் பதவியிலிருந்து சென் து-சியூவை அகற்றியது. சீனச் சனநாயகப் புரட்சிக்குத் திறவுகோலாக விவசாயப் புரட்சி இருந்தமையால், புரட்சிகரமான முறைகளால் விவசாயப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில், கட்சி உழவர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்ல வேண்டுமென்று அந்த மாநாடு உறுதியான நிலை எடுத்தது. படுகொலை செய்தல் என்ற கோமின்டாங் பிற்போக்காளர்களின் கொள்கையை எதிர்த்தது, ஆயுதமேந்திய எதிர்ப்பினைக் கொடுப்பது என்ற பொதுவானதொரு பாதையை அது வகுத்தது; மேலும் புரட்சிகரமான போராட்டத்தை விடாப்பிடியாக நடத்தும்படி அது கட்சி முழுமைக்கும் மக்கள் திரளுக்கும் அறைகூவல் விடுத்தது. அது ஒரு புரட்சிக் குழுவை நிறுவியது. அக்குழு முதலில் பேரெழுச்சியில் தலைமை தாங்கும் உறுப்பாகப் பயன்படுவதாக இருந்தது: பின்னர் பேரெழுச்சி வெற்றிபெற்ற பிறகு, தற்காலிகப் புரட்சி அரசாங்கமாகச் செயல்படுவதாகவும் இருந்தது. தொழிலாளிகள் மற்றும் உழவர்களின் புரட்சிப்படை ஒன்றை நிறுவ அது தீர்மானித்தது; மேலும் இராணுவத்தில் விரிவான அரசியல் வேலைகளை நிறைவேற்றுவதற்கும் கட்சி சார்பாளர்களின் அமைப்பு ஒன்றை நிலைநாட்டுவதற்கும் அது முடிவு செய்தது. இவை ஆகஸ்ட் 7 ஆம் நாள் நடைபெற்ற மாநாட்டின் சாதனைகளாகவும், தலையாய சிறப்புக் கூறாகவும் அமைந்தன.

புரட்சியைக் காப்பாற்றுவதற்காக இலையுதிர்கால அறுவடை சமயத்தில் பேரெழுச்சிகளைத் தொடங்குமாறு உழவர்களுக்கு மாநாடு அறைகூவல் விடுத்தது.

ஹூனான், ஹூப்பே, கியாங்சி மற்றும் குவாங்டுங்கில் பேரெழுச்சியைத் தொடங்கத் திட்டம் இடப்பட்டிருந்தது. அந்த மாகாணங்களில், புரட்சி மிக பலமான அடித்தளத்தைப் பெற்றிருந்தது. இலையுதிர் காலத்தில்தான் உழவர்கள் அவர்களது விளைச்சலை அறுவடை செய்தமையால் நில உடைமையாளர்கள குத்தகையை வசூலிப்பதற்கு அந்தச் சமயத்தில்தான் வந்தமையாலும், நில உடைமையாளர்கள் மிரட்டல் பேர்வழிகள் மற்றும் மோசமான பிரபுக் கூட்டம் ஆகியோர் ஒரு மணி அரிசியைக்கூடப் பெறவிடாதபடி தடுக்கவும், மேலும் அவர்களது நிலம் பறிமுதல் செய்யப்படவும் வசதியாக இருக்கும் பொருட்டுக் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட பேரெழுச்சிக்கு அந்த நேரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

# 25

# இயக்கத்தின் உயர்ந்த அலையும் தணிந்த அலையும்

**மாசேதுங்**

நாம் கடந்த ஆண்டில் பல இடங்களில் சண்டை செய்தும் நாடு முழுமையும் புரட்சிகரப்பெருக்கு வடிநிலையில் உள்ளது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டு உள்ளோம். சிவப்பு அரசியல் அதிகாரம் ஒருசில சிறுபகுதிகளில் நிறுவப்பட்டிருக்கையில் முழுமையாக நாட்டில் மக்கள் சாதாரண சனநாயக உரிமைகளற்று இருக்கின்றனர். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், முதலாளிய சனநாயகவாதிகளுக்கும் கூட, பேச்சுச் சுதந்திரமோ, கூட்டச் சுதந்திரமோ கிடையாது; பொதுவுடைமைக் கட்சியில் சேர்வதே மிக மோசமான குற்றமாயும் உள்ளது. செம்படை எங்கு சென்றாலும் வெகு மக்கள் உற்சாகமின்றியும் ஒதுங்கியுமே இருக்கின்றனர்; எமது பிரசாரத்தின் பின்னர் மட்டுமே அவர்கள் மெதுவாக நடவடிக்கையில் இறங்குகின்றனர். நாம் எந்த எதிரிக் கூறுகளை எதிர்ப்பட்டாலும், எம் பக்கம் மாறிவருவதோ கலகங்களோ எதுவும் இல்லாதிருக்கிறது. நாம் சண்டையிட்டே தீர்க்க வேண்டியதாகிறது. இது மே 21 ஆம் நாள் நிகழ்ச்சிக்குப் பின்னர் மிகப்பெரிய எண்ணிக்கையான ''கலகக் காரர்''களைத் திரட்டிக் கொண்டதான எதிரியின் ஆறாவது சேனைக்குக் கூடப் பொருந்துவதாக இருக்கிறது. நாம் எமது தனிமைப்பாட்டைக் கூர்மையாக உணர்கிறோம். அது முடிவுக்கு வருமென்று நம்பிய வண்ணமாயும் இருக்கிறோம். நகரச் சிறு-முதலாளிய வர்க்கத்தையும் ஈடுபடுத்துவதான, சனநாயகத்திற்கான அரசியல் பொருளியல் போராட்டமொன்றைத் தொடுப்பதன் மூலம் மட்டுமே நாம் புரட்சியை

முழுநாட்டினூடாகப் பீறிப்பாயும் பெருவெள்ளமாக மாற்ற முடியும்.

—சிங்காங் மலைகளிலான போராட்டம்
—மாவோ

தாக்குதலுக்கும் தற்காப்புக்கும், செயல்தந்திர திசை வழி காட்டுவதிலும் பல்வேறு 'இடது'' வழிகள் பிழையானவை யாகவே இருந்தன. தோழர் ஸ்டாலின் சுட்டிக் காட்டுகிறபடி, செயல்தந்திரத்தின் சரியான திசை வழிக்கு நிலைமை சரியாக பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்; (அதாவது, வர்க்க சக்திகளின் சரியானதொரு மதிப்பீடும், இயக்கத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியை யும் பற்றிய சரியானதொரு மதிப்பீடும்—Judgement)

அதற்குச் சரியான போராட்டவடிவமும், அதை அடிப்படை யாகக் கொண்ட அமைப்பு வடிவமும் தேவைப்படுகிறது; ''எதிரி முகாமில் உண்டாகும் ஒவ்வொரு பிளவையும் சாதகமாகப் பயன் படுத்தவும், நண்பர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும்'' சரியாகத் தெரிந்திருக்க வேண்டும்; மிகச் சிறந்த வகை மாதிரிகளில் ஒன்று தோழர் மாசேதுங்கின் சீனப்புரட்சி இயக்கத் திசைவழியாகும். 1927 இல் புரட்சி தோற்கடிக்கப்பட்டபிறகு, நாடு முழுவதிலும் புரட்சிப் பேரலை தாழ்ந்த மட்டத்தில் வீழ்ந்து கிடக்கிறதென்றும் நாடு முழுவதிலும் உள்ள நம்மவர்களை விடவும் எதிரி வலிமையுடை யவனாக இருக்கிறான் என்றும், துணிச்சல் வாதத் தாக்குதல்கள் தவிர்க்க இயலாத தோல்விக்கு இட்டுச் செல்லும் என்றும் தோழர் மாவோ சரியாகவே சுட்டிக்காட்டினார்; ஆனால் பிற்போக்கு ஆட்சி முறைக்குள்ளேயே தொடர்ச்சியான பிளவுகளும் போர்களும் இருக்கிற, புரட்சிக்கான மக்கள் கோரிக்கை படிப்படியாகப் புத்துயிர் பெற்று வளர்ந்து கொண்டிருக்கிற, பொது நிலைமைகளில், முதலாவது மாபெரும் புரட்சியின் போராட்டங்களினூடாக மக்கள் திரள் கடந்து வந்ததும் போதியளவு வலிமையுடைய செம்படை ஒன்றும், சரியான கொள்கைகளையுடைய ஒரு பொதுவுடைமைக் கட்சியும் இருக்கிற குறிப்பான நிலைமைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ''சிவப்பு அரசியல் அதிகாரம் உடைய பகுதிகள்'' ''அவற்றைச் சுற்றிச் சூழ்ந்துள்ள ஒரு வெள்ளை ஆட்சிமுறைக்கு நடுவில்'' தோன்றுவதற்கு முடியும் என்றும் தோழர் மாவோ சரியாகவே சுட்டிக்காட்டினார்.

ஆளும் வர்க்கங்களுக்கிடையில் பிளவுகள் இருக்கிற காலப் பகுதியில் சிவப்பு அரசியல் அதிகாரத்தை விரிவாக்குவது

ஒப்பீட்டளவில் துணிச்சலானது என்றும், இராணுவ நடவடிக்கைகளால் சூழப்பட்டிருக்கிற பகுதி ஒப்பீட்டளவில் பரந்திருக்க முடியும்'' என்றும் கூட அவர் கூறினார்; அதே வேளையில் ஆளும் வர்க்கங்களுக்கு இடையில் ஒப்பீட்டளவில் நிலைத்தன்மை (Stability) இருக்கிற காலப்பகுதியில் அத்தகைய விரிவாக்கம் படிப்படியாக முன்னேறக் கூடிய ஒன்றாகும் என்றும் குறிப்பிட்டார். அத்தகைய காலப்பகுதியில், நம்முடைய செயல்களில் மிகமிக மோசமானது யாதெனில் நமது சக்திகளை (படைகளை—Forces) துணிச்சலாக முன்னேற்றுவதற்காகப் பிரிப்பதாகும்; மேலும் உள்ளூர் வேலையில் **(ஸ்தல வேலையில்)** (நிலத்தைப் பகிர்தல் அரசியலதிகாரத்தை நிறுவுதல், கட்சியை விரிவுபடுத்தல், உள்ளூர் ஆயுதப்படைகளை அமைப்பாக்கித் திரட்டுதல்) மிக மிக மோசமானது யாதெனில் நமது ஆட்களைச் சிதறவிடுவதும், மைய மாவட்டங்களில் திடமான அடித்தளம் நிறுவுவதைப் புறக்கணிப்பதும் ஆகும்.

அந்த ஒரே காலகட்டத்திலும்கூட, நமது எதிரிகளின் வலிமையிலுள்ள வேறுபாடுகளுக்குத் தக்கவாறு நமது செயல் தந்திரம் மாறவேண்டும். நமது மாறும் செயல்தந்திரத்தைத் தீர்மானிப்பதற்கான ஒரு முக்கிய அடிப்படை வெவ்வேறு எதிரிகளின் நலன்களின்பால் புரட்சியின் வெவ்வேறு தாக்கம் ஆகும். இதன் விளைவாக, ''எதிர்ப்புரட்சிக்குள்ளேயுள்ள ஒவ்வொரு சச்சரவையும் பயன்படுத்துக; அதற்குள்ளே இருக்கிற விரிசல்களை அகலப்படுத்தச் செயலூக்கமுள்ள நடவடிக்கைகளை எடுங்கள்'' என்றும், ''தனிமைப்படுத்தும் கொள்கையை எதிர்க்கவும்; சாத்தியமான எல்லா நட்புசக்திகளையும் வென்றெடுக்கும் கொள்கையை உறுதிப்படுத்துக'' என்றும் தோழர் மாசேதுங் எப்போதுமே தூக்கிப் பேசினார். ''முரண்பாடுகளைப் பயன்படுத்துக; பலரை வென்றெடுங்கள்; சிலரை எதிர்க்கவும்; நமது எதிரிகளை ஒருவர் பின் ஒருவராக நசுக்குக'' என்பது போன்ற செயல்தந்திரக் கோட்பாடுகளை நடைமுறைப் படுத்துதல் ''சுற்றி வளைத்து அடக்குத''லுக்கு எதிராகத் தோழர் மாசேதுங் தலைமை தாங்கிய அந்த இயக்கங்களில் அறிவுக் கூர்மையுடன் வளப்படுத்தப்பட்டது.

......வெள்ளைப் பகுதி வேலைக்கான இந்தச் செயல்தந்திரக் கோட்பாடுகளின் சரியான தன்மையை 1935 டிசம்பர் 9இல் நடந்த இயக்கத்தின் வெற்றி நிரூபித்தது; செயல்தந்திரத்தின் இத்தகைய சரியான திசைவழிக்கு நேர்மாறாக, பல்வேறு ''இடது'' வழிகளில் சென்ற தோழர்கள் எதிரிக்கும் நமக்குமிடையில் நிலவிய சக்திகளின்

சமநிலையைப் புறவயமாக ஆராயத் தவறிவிட்டனர்; அதற்கேற்ற போராட்ட வடிவங்களையும், அமைப்பு வடிவங்களையும் மேற்கொள்ளத் தவறிவிட்டனர்: மேலும் எதிரியின் உள் முரண்பாடுகளைத் தெரிந்து புரிந்து கொள்ளவும், அல்லது போதிய கவனம் செலுத்தவும் தவறிவிட்டனர். எனவே, அவர்கள் தற்காப்புநிலை எடுக்கவேண்டிய சமயத்தில் "தாக்குதல் வழியை"க் கண்மூடித்தனமாக மேற்கொண்டதால் தோல்வி ஏற்பட்டது; அதுமட்டுமல்லாது, சரியான நேரத்தில் தாக்குதல், நடத்தியபோதிலும் கூட, வெற்றிகரமாகத் தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தி முடிப்பது எப்படி என்பதை அவர்கள் அறியாதபடியால் அப்போதும் தோல்வி அடைந்தனர். "ஒரு நிலைமையை மதிப்பீடு செய்வதில்" அவர்கள் கடைப்பிடித்த வழி, சொந்த விருப்பு வெறுப்புக்குட்பட்டதாகவும், தொடக்க நிலையில் உள்ளதாகவும், மறைமுகமானதும், ஒரு பக்கம் சார்ந்ததாகவும், மேலோட்டமானதாகவும், அவர்களுடைய நோக்கு நிலைக்குச் சாதகமாக உள்ள மேலோட்ட நிகழ்வாகவும் இருந்தது; அவ்வழியை எடுத்துக் கொண்டு, விரிந்து பரந்ததாகவும், ஆழ்ந்ததாகவும், நேரடியானதாகவும், எல்லாப் பக்கமும் சார்ந்ததாகவும் இன்றியமையாத (Essential) தாகவும் பெரிதுபடுத்தினர்; (எதிரியின் வலிமை, தற்காலிக வெற்றி, நமது வலிமைக்குறைவு, தற்காலிகத் தோல்வி, மக்கள் திரளின் அரசியல் விழிப்புணர்வின் போதாத்தன்மை, எதிரியின் உள்முரண்பாடுகள், நடுநிலையாளர்களின் முற்போக்குத் தன்மை போன்ற) அவர்களின் நோக்குநிலையுடன் முழுதும் ஒத்துப்போகாத எல்லா உண்மைகளையும் அவர்கள் ஒத்துக்கொள்ள அஞ்சினார்கள் அல்லது அவர்கள் இந்த எல்லா உண்மைகளையும் அறியவில்லை.

—கட்சி வரலாற்றின் மீதான தீர்மானம்

## புரட்சிப் பேரலை

இன்றுள்ள புறவய நிலைமை இப்போதைய மேலோட்டமான தோற்றத்தை மட்டும் பார்த்துச் சாராம்சத்தைப் பார்க்காத தோழர்களை இலகுவில் தவறாக வழிநடத்தக்கூடிய ஒன்றாகவே இன்னும் உள்ளது. குறிப்பாகச் செம்படையில் வேலை செய்யும் எமது தோழர்கள் போரில் தோல்வியுற்றாலோ சுற்றிவளைக்கப்பட்டாலோ அல்லது வலிமைவாய்ந்த எதிரிப்படையாற் சுற்றிவளைக்கப்பட்டாலோ தற்காலிகமானதும் குறிப்பானதும் குறுகியதுமான நிலையைத் தம்மை அறியாது அடிக்கடி பொதுவானதாக்கி மிகைப் படுத்துவர். அவர்களுக்குச் சீனாவிலும் உலகிலும் உள்ள நிலைமை முற்றிலும் நம்பிக்கைக்கு இடம் அளிக்காதது போலவும், புரட்சியின்

வெற்றிக்கான வாய்ப்புகள் எட்டாக்கனியாகவும் தோன்றுகின்றன. விசயங்களைப் பார்க்கும் போது அவற்றின் தோற்றத்தைப் பிடித்துக் கொண்டு அவற்றின் சாராம்சத்தை ஒதுக்கித் தள்ளுவதற்கான காரணம் என்னவென்றால் அவர்கள் பொதுவான நிலைமையின் சாராம்சத்தை அறிவியல் ரீதியாக ஆராயாமையேயாம். சீனாவில் புரட்சிப் பேரெழுச்சியொன்று விரைவில் தோன்றுமா என்ற கேள்விக்குப் புரட்சியின் பேரெழுச்சியை ஏற்படுத்தும் பலவித முரண்பாடுகள் உண்மையில் தொடர்ந்து வளர்கின்றனவா என்பதை அலசி ஆராய்வதன் மூலந்தான் அதற்குத் தீர்வுகாண முடியும். உலகில் ஏகாதிபத்தியங்களுக்கிடையிலும் ஏகாதிபத்தியங்களுக்கும் அவற்றின் குடியேற்ற நாடுகளுக்கு இடையிலும், ஏகாதிபத்தியங்களுக்கும் அவற்றின் சொந்த நாடுகளிலேயேயுள்ள பாட்டாளி வர்க்கத்திற்கு இடையிலுமுள்ள முரண்பாடுகள் வளர்கின்றதனால் ஏகாதிபத்தியங்களுக்குச் சீனாவிற்காகப் போட்டியிடும் தேவை மேலும் தீவிரமடைந்திருக்கிறது. சீனாவிற்காக ஏகாதிபத்தியங்களுக்கிடையே ஏற்படும் போட்டி மிகவும் உக்கிரமடைந்தும், ஏகாதிபத்தியத்திற்கும் சீன தேசம் முழுவதற்குமிடையிலுள்ள முரண்பாடும், ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையிலுள்ள முரண்பரடும், சீன மண்ணிலேயே ஒருங்கு வளர்ந்து வருவதனால் சீனாவின் பல்வேறுபட்ட பிற்போக்கு ஆளும் கும்பல்களுக்கிடையே நாளுக்கு நாள் விரிவடைந்தும் தீவிரமடைந்தும் வருகிற சிக்கலான போர் நிலைமை உண்டாகியும், அவற்றுக்கிடையேயுள்ள முரண்பாடுகள் நாள்தோறும் வளர்ந்தும் வருகின்றன. பல்வேறுபட்ட பிற்போக்கு ஆளும் கும்பல்களுக்கிடையுயேலுள்ள முரண்பாடுகளை—போர்ப்பிரபுக்களுக்கிடையேயுள்ள சிக்கலான போரை—தொடர்ந்து வரி அதிகரிக்கிறது. இதனால் வரி கொடுக்கும் பரந்துபட்ட பொதுமக்களும் பிற்போக்கு ஆட்சியாளருக்கும் இடையில் உள்ள முரண்பாடு நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. ஏகாதிபத்தியத்திற்கும் சீனாவின் தேசியத் தொழிலுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டைத் தொடர்ந்த ஏகாதிபத்தியம் சீனத்தேசியத் தொழிலுக்கு இடம் விட்டுக் கொடுக்கவில்லை" என்ற உண்மை ஏற்படுகிறது. இதனாலே சீன பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் சீனத் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையிலுளள் முரண்பாடு வளர்கிறது. சீன முதலாளிகள் தொழிலாளரை வெறித்தனமாகச் சுரண்டுவதன் மூலம் தமது வளர்ச்சிக்கு வழியைக் கண்டுபிடிக்க முயல, அதனைச் சீனத் தொழிலாளர் எதிர்க்கின்றனர். ஏகாதிபத்திய வணிக ஆக்கிரமிப்பு, சீன வணிக முதலாளிகளின் கொள்ளையடிப்பு, அரசாங்கத்தின் பளுவான வரி இன்ன பிறவற்றினைத் தொடர்ந்து நிலப்பிரபு வர்க்கத்திற்கும், விவசாயிகளுக்குமிடையிலுள்ள முரண்பாடு மேலும்

ஆழமாகிறது. அதாவது குத்தகை, கடும் வட்டி ஆகியவற்றின் மூலமான சுரண்டல் மேலும் கொடூரமானதாக, விவசாயிகளுக்கு நிலப்பிரபுக்கள் மீதுள்ள வெறுப்பு மேலும் வளர்கிறது. பிறநாட்டுப் பொருட்களின் சுமையினாலும், பரந்துபட்ட தொழிலாளரும், விவசாயிகளும் பொருட்களை வாங்குவதற்குச் சக்தியற்றவரா யிருப்பதனாலும், அரசாங்கத்தின் வரி அதிகரிப்பினாலும் சீனப் பொருட்களை வியாபாரம் செய்வோரும், தனிப்பட்ட உற்பத்தி யாளரும் திவாலாகும் நிலமைக்குத் தள்ளப்படுகின்றனர். தானியமும் நிதியும் குறைவாயிருந்த நிலைமையிலும் பிற்போக்கு அரசாங்கம் தமது படைகளை முடிவின்றிப் பெருக்கி, அதன் மூலம் போர்களை நாளுக்கு நாள் விரிவாக்கியதால், பரந்துபட்ட போர் வீரர்கள் மாறாத வறுமைக்குள்ளாயினர். அரசாங்க வரி அதிகரித்த தனாலும், நிலப்பிரபுக்களின் குத்தகையிலும் வட்டியிலும் அதிகரிப்பேற்பட்டதனாலும், போர் அழிவுகள் நாள்தோறும் பெருகியதாலும் நாட்டில் எங்கும் பஞ்சமும் கொள்ளையு மாயிருக்கின்றது; பரந்துபட்ட விவசாயிகளும், நகரிலுள்ள வறிய மக்களும் உயிர் வாழ முடியாமலிருக்கின்றனர். பள்ளி களில் பணமில்லாமையால், பல மாணவர்கள் தங்கள் படிப் புக்கு இடையூறு நேரலாம் என்று அஞ்சுகின்றனர்; உற்பத்தி பின் தங்கி இருப்பதால் பல பட்டதாரிகள் வேலை பெறும் நம்பிக்கை யின்றி இருக்கின்றனர். நாம் இந்நிலைமைகளை எல்லாம் ஒருகால் புரிந்து கொள்வோமானால், சீனா எவ்வளவு அச்சமும் ஏக்கமும் கவலையும் கொள்ளும் நிலையிலும், எவ்வளவு குழப்பமான நிலை யிலும் இருக்கிறதென்பதை அறிந்து கொள்வோம். ஏகாதிபத்தியங் களுக்கும், போர்ப் பிரபுகளுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் எதிரான புரட்சிப் பேரெழுச்சியை எப்படியும் தவிர்க்க முடியாதென்பதையும், அது வெகு விரைவில் ஏற்படும் என்பதையும் உணர்ந்து கொள் வோம். சீனா முழுவதும் காய்ந்த விறகுகள் பரப்பப்பட்டிருக் கின்றன; அவை சட்டெனப் பெருஞ்சுவாலை விட்டெரியும். ''சிறு பொறி பெருங் காட்டுத் தீயை மூட்ட முடியும்'' என்ற பழமொழி இப்போதைய நிலைமை வளரும் வகையைக் கூறுவதற்கான பொருத்தமான வர்ணனையேயாகும். பல இடங்களிலும் வளர்ந்து வரும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களையும், விவசாயி களின் கிளர்ச்சிகளையும், போர் வீரர்களின் கலகங்களையும், மாணவர்களின் படிப்பு நிறுத்தங்களையும் மட்டும் கொண்டே, இந்தப் ''பொறி'' ''பெருங் காட்டுத் தீயை மூட்டுவதற்கு'' அதிக நேரமாகாது என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

X X X

மேலே கூறப்பட்ட, கியாங்சியை வென்றெடுப்பது என்ற பிரேரணையில் தவறு என்னவென்றால், ஓராண்டுக் கால வரையறை வகுத்ததேயாகும். கியாங்சியை வென்றெடுப்பது கியாங்சி மாகாணத்திலுள்ள நிலைமைகளைக் கொண்டு மட்டும் நிர்ணயிக்கப்படவில்லை. ஒரு நாடு பரந்த புரட்சிப் பேரெழுச்சி விரைவில் ஏற்படும் என்ற நிலைமையைக் கொண்டும் நிர்ணயிக்கப்பட்டது. ஏனெனில் புரட்சிப் பேரெழுச்சி விரைவில் ஏற்படும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்காவிடில் கியாங்சியை ஓராண்டுக்குள் வென்றெடுக்க முடியும் என்று முடிவு கட்டுவது ஒருபோதும் சாத்தியமானதாயிருந்திராது. இந்தப் பிரேரணையில் ஒரே ஒரு குறைபாடு ஓராண்டுக் காலத்துக்குள் எனக் கால வரையறை வகுத்ததேயாகும்; இப்படிக் காலவரையறை வகுத்திருக்கக் கூடாது. இதனால் அது ''புரட்சிப் பேரெழுச்சியொன்று விரைவில் ஏற்படும்'' என்ற வாக்கியத்திலுள்ள ''விரைவில்'' என்ற சொல்லுக்குத் தவிர்க்கப்பட முடியாதபடி ஓர் அவசரத்தன்மையைக் கொடுத்துவிட்டது. கியாங்சியிலுள்ள அக நிலை நிலைமைகளையும், புறநிலை நிலைமைகளையும் பொறுத்தவரை, அவை மிகவும் கவனத்திற்குரியவை. மையக் குழுவுக்கெழுதிய கடிதத்திற்கு எழுதிய கடிதத்தில் காட்டப்பட்ட அகவய நிலைமைகளுடன் புறவய நிலைமைகளில் மூன்றும் இப்போது தெளிவாகச் சுட்டிக்காட்டப்படலாம். முதலாவதாக, கியாங்சியின் பொருளாதாரம் முதன்மையாக நிலப்பிரபுத்துவப் பொருளாதாரம். வணிக முதலாளிவர்க்கம் ஒப்பீட்டளவில் பலவீனமானது, நிலப்பிரபுக்களின் ஆயுதசக்திகள் மற்றெல்லாத் தென் மாகாணங்களிலுள்ளவற்றினையும் விடப் பலவீனமானவை. இரண்டாவதாக, கியாங்சியிடம் அதற்கெனத் தனிப்பட்ட மாகாணத் துருப்புகள் இருக்கவில்லை. அது எப்பொழுதும் பிற மாகாணத் துருப்புகளாலேயே பாதுகாக்கப்பட்டது. ''பொதுவுடைமையாளர்களை அடக்குவதற்கோ'' ''கொள்ளைக்காரரை அடக்குவதற்கோ'' அனுப்பப்படும் இத்துருப்புகள் உள்ளூர் நிலைமைகளுடன் பழக்கப்படாதவையாயிருப்பதோடு, அவற்றின் நலன்கள் உள்ளூர்த் துருப்புகளுடையவற்றைப் போல அவ்வளவிற்கு நேரடியாகத் தொடர்புடையனவும் இல்லை. ஆகையால் அவை வழக்கமாக உற்சாகம் குன்றியவையாயிருந்தன. மூன்றாவதாக, ஹாங்காங்கிற்கு அருகாமையிலுள்ளதும், கிட்டத்தட்ட எல்லாத் துறைகளிலும் பிரித்தானியக் கட்டுப்பாட்டிற்குக் கீழ் உள்ளதுமான குவாங்துங்கைப் போலன்றிக் கியாங்சி ஒப்பீட்டளவில் ஏகாதிபத்தியப் பாதிப்பினின்றும் விடுபட்டிருக்கிறது. இந்த மூன்று அம்சங்களையும் நாம் ஓரளவு புரிந்து கொண்டால் மற்றெல்லா மாகாணங்களையும் விடக் கியாங்சியில் கிராமியக் கிளர்ச்சிகள் மிகப்

பரந்தவையாக இருப்பதற்கும் செம்படையும், கொரில்லா அலகுகளும் மிகவும் அதிகமாக இருப்பதற்குமான காரணத்தை எம்மால் விளக்கிக் கூறமுடியும்.

அப்படியானால், ''புரட்சிப் பேரெழுச்சியொன்று விரைவில் ஏற்படும்'' என்ற சொற்றொடரிலுள்ள ''விரைவில்'' என்ற சொல்லை நாம் எப்படி விளக்க வேண்டும்? இது பல தோழர்கள் நடுவிலுள்ள ஒரு பொதுக்கேள்வி. மார்க்சியர்கள் சோதிடரல்லர். எதிர்கால வளர்ச்சியினதும் மாற்றங்களினதும் பொது வழியைத் தான் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அதைத்தான் உண்மையில் தெரிவிக்கவும் முடியும். நாளையும் பொழுதையும் எந்திர ரீதியில் நிர்ணயிக்கக்கூடாது. அப்படி நிர்ணயிக்கவும் முடியாது. ஆனால், சீனாவில் புரட்சிப் பேரெழுச்சியொன்று விரைவில் ஏற்படும் என்று நான் கூறும் போது சிலர் கூறுவதுபோல ''வரக்கூடும்'' என்ற ஒன்றினைப்பற்றி, அதாவது செயல் முக்கியத்துவம் அற்றதும் பெற முடியாததும் கற்பனையானதுமான ஒன்றைப்பற்றி நான் பேச வில்லை என்பது உறுதி. இது கரையிலிருந்து பார்க்கையிலேயே பாய் மர நுனி கண்ணுக்குப் புலனாகக் கூடியதாக உள்ள, கடலில் தூரத் தில் வரும் கப்பலைப் போன்றது; இது உயர்ந்த மலை உச்சியில் நின்று கிழக்கை நோக்குகையில் தங்கமயமாகப் பரவிக் கொண் டிருக்கிற, அதன் கதிர்கள் தெரியக் கூடியதாய் உள்ள எழு ஞாயிறு போன்றது; இது பிறக்கும் தறுவாயில் தாயின் கருவறையில் அமைதி யின்றி அசைந்து கொண்டிருக்கும் குழந்தை போன்றது.

**மாசேதுங்**

—''சிறுபொறிபெருங் காட்டுத் தீயை மூட்ட முடியும்'' என்பதிலிருந்து

## இயக்கத்தின் உயர்ந்த அலையும் தாழ்ந்த அலையும் கட்சியின் செயல்தந்திரங்கள்

**ஹோ—கான்சி**

அக்டோபர் 1924இல் குவாங்டுங் வணிகத் தொண்டர் படை (Kwangtung Merchant Volunteers Corps) சம்பவத்தில் புரட்சியாளர்களுக்கும் எதிர்ப் புரட்சியாளர்களுக்குமிடையிலான போராட்டம் மிகக் கடுமையான வடிவம் எடுத்தது. இந்தப் படை நிலவுடைமையாளர்களினதும், தரகுமுதலாளிகளதும் ஆயுதமேந்திய அமைப்பாகும்; சென் லிம்-யிக் என்ற பிரிட்டிஷாருக்குச் சொந்த

மான ஹாங்காங் மற்றும் ஷாங்காய் வங்கிக் கழகத்தின் தரகு முதலாளி இதற்குத் தலைமை தாங்கினார். இந்தப் படைக்குப் பிரிட்டிஷாரின் ஆதரவு இருந்தது; சென் சியங்-மிங் என்ற போர்ப் பிரபுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டது. இப்படை பிரிட்டிஷாரின் ஆதரவுடன் சென்சியுங்-மின் என்ற போர்ப் பிரபுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, குவாங்டுங்கிலிருந்த சன்யாட் சென்னின் புரட்சி அரசாங்கத்தைத் தூக்கி எறிய உள்ளேயிருந்தும் வெளியிலிருந்தும் திட்டமிட்டது. ஆனால் சன்யாட்சென் இந்தப் போராட்டத்தில் மாபெரும் உறுதியோடு செயல்பட்டார். தொழிலாளர் மற்றும் உழவர் மக்கள் திரளின் ஆதரவுடன் வணிகத் தொண்டர் படையின் ஆயுதமேந்திய கலகத்தைப் புரட்சி அரசாங்கம் வெற்றிகரமாக ஒடுக்கிவிட்டது.

சீனப்புரட்சியின் எழுச்சியுடன் கூடவே உழைக்கும் வர்க்க இயக்கம் மறுமலர்ச்சி அடைந்தது.

பிப்ரவரி 7 படுகொலைக்குப் பிறகு, பீசிங்-ஹாங்கோவ் இருப்புப்பாதை மற்றும் ஹுகான்மாநகரில் இருந்த தொழிற்சங்கங்கள் தடை செய்யப்பட்டன. மற்றத் தொழிற்சங்கங்களும் கூடத் தலைமறைவாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது; கான்ட்டனிலும் ஹுனானிலுமிருந்த தொழிற்சங்கங்கள் மட்டுமே இதற்கு விதி விலக்காக இருந்தன. ஆனால் கான்ட்டனில் இருந்த புரட்சி அரசாங்கம் இத்தொழிற்சங்கங்களை அறிந்தேற்றிருந்தாலும்; போராட்டத்தில் நிலைத்து நின்ற அன்யுவான் தொழிற் சங்கம் ஏராளமாகச் சாதித்திருந்த போதிலும் கூட, நாட்டிலிருந்த உழைக்கும் வர்க்க இயக்கம் மொத்தத்தில் தற்காலிகமாகத் தணிந்த அலையின் நிலையிலிருந்தது. அந்த நேரத்தில் தொழிலாளர்க்கு நிவாரணம் வழங்குவதும், போராட்டத்தை மீண்டும் தொடர்வதுமே தொழிற் சங்கங்களின் மிகமிக அவசரமான கடமைகளாக இருந்தன. இப்போராட்டங்களில் பலியான பலருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நிதி திரட்டுவதற்காகத் தொழிற்சங்கச் செயலகம் ஒரு தனிக்குழுவை அமைத்தது. பன்னாட்டு உழைக்கும் வர்க்க இயக்கத்தின் அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்ட சீனப் பொதுவுடைமைக் கட்சி, ''தொழிற்சாலைத் தொழிற்சங்கக் குழுக்களை'' அமைப்பதை அதன் மையக் கடமையாகக் கொண்டது; அதாவது தொழிற்சாலைப் பட்டறைகளில் பத்துப் பேருக்கும் குறைவானவர்களைக் கொண்ட இரகசியக் குழுக்களை அமைப்பதைக் கடமையாகக் கொண்டது. தொழிலாளர் கூட்டத்தினரைத் திரட்டி அமைப்பாக்கும் நோக்கத்துக்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டன. 1924 பிப்ரவரியில் பீகிங்கில் தேசிய

இருப்புப் பாதைத் தொழிலாளர் தொழிற் சங்கக் கூட்டமைப்பு (The National Railway Workers Trade Union Federation) நிறுவப் பட்டது.

"தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும், தொழிலாளர் அமைப்புகளைப் பாதுகாக்கவும் கோமின்டாங்கின் அரசியல் செயல்திட்டம் வாய்ப்பளித்தது. கான்ட்டனிலிருந்த உழைக்கும் வர்க்க இயக்கம் இவ்வாறாக முன்னேற முடிந்தது. உழைப்பாளர் படை கூடக் கட்டியமைக்கப்பட்டது.

1924இல் பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்ட காண்டன் ஷமீனில் இருந்த அயல்நாட்டார்களது தொழிற்சாலைகளில் பொதுவுடைமை கட்சி ஒரு பெரிய வேலை நிறுத்தத்தைத் தலைமையேற்று நடத்தியது. அந்த மாவட்டத்துக்குள் நுழையும் போதும் வெளியேறும் போதும் சீனர்கள் தங்களுடைய அடையாள அட்டைகளைக் காட்ட வேண்டுமென்று போலீஸ் புதிய விதி செய்தது. இதை எதிர்த்தே அந்த வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. அது ஒரு மாத காலத்துக்குமேல் நீடித்தது. இறுதியில் அந்த ஒதுக்கல் விதியை விலக்கிக் கொள்ளுமாறு ஏகாதிபத்தியர்கள் நிர்பபந்திக்கப் பட்டனர். அந்த வேலைநிறுத்தம் உள்ளூரில் மட்டுமின்றி வெளியே மைய மற்றும் வட சீனாவரையில் மிதாலைதூரங்களிலும் கூடத் தாக்கத்தை ஏற்படுத்தி எதிரொலித்தது. ஷாங்காயிலிருந்த நான்யாங் புகையிலைத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், ஹாங்கௌ ரிக்ஷாக்காரர்கள், சூச்சோவ் நெசவாளர்கள், மற்றும் செக்கியாங்கைச் சேர்ந்த யுயாவ் உப்புத் தொழிலாளர்கள் ஆகியோர் அதைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்தனர். இந்த வேலைநிறுத்தம் ஒவ்வொன்றிலும் 10, 000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர். நாட்டில் உழைக்கும்வர்க்க இயக்கம் மறுமலர்ச்சி பெற்றதை இதெல்லாம் காட்டியது.

இந்தக் காலப்பகுதியில் தெற்கில் உழவர் இயக்கமும் படிப்படியாகவும் உறுதியாகவும் வளர்ச்சியடைந்தது. 1921 ஆம் ஆண்டு போன்ற தொடக்கக் காலத்திலேயே குவாங்டங்கில் பெங்பய் உழவர்களிடையே பெருமளவிலான புரட்சிகரப் பணியாற்றி இருந்தார்.

1923 சனவரியில் ஹாய்ஃபெங் உழவர் சங்கம் கட்டப் பட்டது. அதில் 1,00,000 உறுப்பினர்கள் இருந்தனர். இந்தச் சங்கம் கொடுங்கோல் நிலப்பிரபுக்களை எதிர்த்தும் நிலக்(குத்தகை) வாடகையைக் குறைக்கக் கோரியும் போராட்டங்களை நடத்தியது.

19:4 இல் பிற்போக்குப் போர்ப்பிரபுவாகிய சென் சியங்-மிங்கால் இச்சங்கம் கலைக்கப்பட்ட போதிலும்கூட, இதுபோன்ற உழவர் அமைப்பு ஹாய்பெஃங்கிலிருந்தும் லுஃபெங்கிலிருந்தும் சாவோச் சோவுக்கும், ஸ்வாட்டோவுக்கும், அப்புறமாக க்வாங்டங் மாகாணம் (புராவின்ஸ்) முழுமைக்கும் பரவியது. 1923 அக்டோபரி ஹூனானிலுள்ள ஹாங்ஷானில் 1,00,000 உழவர்களைக்கட்சி திரட்டியது. ஹூனான் போர்ப்பிரபுக்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராகக் கடுமையான போராட்டங்களை அவர்களுக்குத் தலைமை தாங்கி நடத்தியது. குவாங்டங்கையும் ஹூனானையும் மையமாகக் கொண்ட தென்பகுதியில் உழவர் இயக்கம் அமைப்பு ரீதியாக விரிவடைந்து பொருளியல் போராட்டங்களை நடத்தியது மட்டுமில்லாமல், அரசியல் போராட்டங்களிலும் பங்கேற்றது. கான்ட்டனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்த உழவர் தற்காப்புப் படைப்பிரிவுகள் வணிகத் தன்னார்வப்படைகளின் கலகத்தை அடக்குவதற்குச் சன்யாட்—சென்னுக்கு உதவியும் செய்தன.

இரண்டாவது சிஹ்லி—ஃபெங்டியென் போர்க் காலத்தின் போது ஃபெங்யு—ஹலாங் சிஹ்லி குறுங்குழு 1924 அக்டோபரில் ஆட்சிக் கவிழ்ப்புச் சதியை நடத்தினார். அவர் தன் துருப்புகளின் பெயரைக் தேசியப் படை என்று மறுபெயரிட்டார். சிஹ்லி போர்ப்பிரபுக்களைப் பீகிங்கிலிருந்து வெளியேற்றினார்.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து ஃபெங்டியன் போர்ப்பிரபுக்களின் செல்வாக்கு வடசீனாவுக்குள்ளும் ஊடுருவியது. இறுதியாக, பீகிங்கிலும் அரசியல் அதிகாரத்தை அவர்கள் எடுத்துக் கொண்டனர். சிஹ்லி குறுங்குழுவின் முக்கிய சக்திகள், வு பெயி-லு தோல்வியுற்ற பிறகு, யாங்ட்சி பள்ளத்தாக்குக்குப்பின் வாங்கினர். மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு அங்கிருந்தபடியே வலிமையைத் திரட்டினர். சாங் ட்சோ-லின், டுவான் சி-ஜுயி மற்றும் ஃபெங் யு-சியாங் என்ற மூன்று குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழான ஒரு கூட்டணி ஆட்சி வடிவத்தைப் பீகிங் ஆட்சி எடுத்தது. டுவான் சி-ஜுயி ''தற்காலிக நிர்வாக ஜெனரல்'' என்ற பட்டத்துடன் தலைமை ஏற்றார்.

பீகிங்கிலிருந்த புதிய போர்ப்பிரபுக்களின் அரசாங்கம் இன்னமும் உறுதிப்படாத நிலையில் தொழிலாளர் மீதான ஒடுக்குமுறையைத் தற்காலிகமாகத் தளர்த்தியது. பிப்ரவரி 7 படுகொலையிலிருந்து சிறையில் வைக்கப்பட்டிருந்த தொழிலாளர் தலைவர்களை மீட்கவும், ரெயில்வே தொழிற்சங்கத்தை மீட்டமைக்கவும். வேலை

யில்லாதிருந்தோர்க்கு வேலை பெறவும் கட்சிக்கு இது ஒரு வாய்ப்பளித்தது. 1925 பிப்ரவரியில், ரெயில்வே தொழிற்சங்களின் இரண்டாவது தேசியப் பேராயம் பீகிங்கில் நடத்தப்பட்டது. உடனடியாக இதைத் தொடர்ந்து ட்சிங்கடாவ்-ட்சினான் ரெயில்வே தொழிலாளர்களின் மாபெரும் வேலை நிறுத்தமும், அதைத் தொடர்ந்து பீகிங், வுகான், ஷென்யாங் மற்றும் டாங்க்ஷானில் தொடர்ச்சியான பல வேலை நிறுத்தங்களும் நடந்தன.

தேசிய அசெம்பிளியைக் கூட்டுவதற்கும், சமமற்ற ஒப்பந்தங்களை ஒழித்துக் கட்டவுமான நாடு தழுவிய மக்கள் திரள் இயக்கத்தைத் தொடங்கியதன் மூலம் சனநாயகப் புரட்சிப் பதாகையின் கீழே பரந்துபட்ட மக்களைத் திரட்டுவதற்கும் அமைப்பாக்குவதற்கும் இந்தச் சூழ்நிலைகளில் கட்சி தீர்மானம் செய்தது. கட்சியின் அழைப்புக்கு விடையளிப்பது போல ''தேசிய அசெம்பிளியை நிறுவுவதற்கான சங்கங்கள்'' ஷாங்காய், செக்கியாங், குவாங்டுங், ஹூனான், ஹூப்பெயி மற்றும் பல இடங்களில் வெற்றிகரமாகக் கட்டப்பட்டன.

சனவரி 1925இல், மக்கள் திரள் இயக்கம் ஏற்கனவே முழு வீச்சில் இருக்கும் போது சீனப் பொதுவுடைமைக் கட்சியின் நான்காவது தேசியப் பேராயம் ஷாங்காயில் கூட்டப்பட்டது. 980 கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவம் செய்த 20 பேராளர்கள் அதில் கலந்து கொண்டனர்.

கட்சிப் பேராயம் அந்த நேரத்திலிருந்த அரசியல் நிலைமையை விரிவாகப் பகுத்தாய்ந்தது. போர்ப்பிரபுக்களின் ஆட்சி விரைவாகச் சரிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்த காலப்பகுதி அது; ஏனெனில் அப்போது பழைய போர்ப் பிரபுக்களின் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, புதிய போர்ப்பிரபுக்கள் தங்கள் நிலையை உறுதி செய்து கொள்ளாத நேரம். சீனாவில் மக்கள் இயக்கம் மேலும் வளர்வதற்கு இது சாதகமாக இருந்தது. கட்சியின் கொள்கைகளையும், அதன், பிரச்சாரம் மற்றும் அமைப்பு வேலைகளையும் முழுவதும் பொருத்தே இயக்கத்தின் வெற்றி இருக்கும்; ஆகவே நாடுதழுவிய அளவில் மக்கள் இயக்கத்தைக் காட்டி வளர்ப்பது எப்படி என்பது பேராயத்தில் நடந்த விவாதங்களின் மையப் பொருளானது இயற்கையே யாகும்.

முதலாளிய சனநாயகப் புரட்சியில் பங்குகேற்பதில் உழைக்கும் வர்க்கத்துக்குத் தனது சொந்த நோக்கம் ஒன்று உள்ளது—அதாவது சனநாயகப்புரட்சி முழுமையாக வெற்றிபெற்ற

பிறகு மக்களைப் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒன்றுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் நோக்கம் உள்ளது—என்பதைப் பேராயம் சுட்டிக்காட்டியது. எனவே, இந்தப் புரட்சியில் உழைக்கும் வர்க் கத்தின் இடம் மற்றவர்க்கங்களுடையதை விட வேறு பட்டிருந்தது. உழைக்கும் வர்க்கம் உடைமை வர்க்கத்தின் வாலாக இருந்து விடாமல் தனக்கெனச் சுதந்திரமான நோக்கங்களைக் கொண் டிருக்க வேண்டும். உழைக்கும் வர்க்கம் தலைமை ஏற்பதன் மூலம் மட்டுமே சீனச் சனநாயகப் புரட்சி ஒரு முழுமையான வெற்றியை அடைய முடியும்.

முன்னோக்கிய நடைபோட்டுக் கொண்டிருந்த தொழிற்சங்க இயக்கத்துக்குப் புதிய காலப்பகுதி தொடங்கி விட்டதென்று பேராயம் சுட்டிக்காட்டியது. சீனாவில் தேசிய அசெம்பிளியைக் கூட்டுவதென்பது அந்த நேரத்தில் தெளிவான ஒரு சாத்தியப் பாட்டுடன் இருந்தது. எனவே, தேசிய சனநாயக இயக்கத்தில் தலைமை நிலையை அடைவதற்கு உழைக்கும் வர்க்கம் அந்த இயக்கத்தில் செயலூக்கமுடன் பங்கேற்பதோடு, தனது சொந்த, ஆற்றல் வாய்ந்த மக்கள் அமைப்புகளைக் கட்டியமைக்க வேண்டும். போர்ப்பிரபுக்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இந்த அமைப்புகள் ஒவ்வொரு தொழிற்சாலை அல்லது பட்டறையிலும் மூன்றுக்கு மேற்பட்ட உழைப்பாளரைக் கொண்ட தொழிற்சங்கக் குழுக்களின் வடிவில் கட்டப்பட வேண்டும்; ஒவ்வொரு தொழிற் சாலையிலும் உள்ள வெவ்வேறு வேலைத்துறைக்கும் ஏற்றவாறு இக்குழுக்களைக் கிளைகளாக ஒன்று சேர்க்க வேண்டும்; இந்தக் கிளைகள் சேர்ந்ததே தொழிற்சங்கமாகும்; இத்தொழிற்சங்கங்களை இணைத்து வட்டாரத் தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டும்; ரெயில்வே, சுரங்கங்கள், துணி ஆலைகள் போன்ற தொழிற் சாலைகளிலும், ஷாங்காய், ஹாங்கோவ், டியென்ட்சின் போன்ற வணிக நகரங்களிலும் முதலில் அமைப்பு வேலையைச் செய்தாக வேண்டும்.

சீனாவின் தேசிய சனநாயகப் புரட்சியின் ஆதாரசக்தி உழவர்களே என்றும், அவ்வர்க்கம்தான் உழைக்கும் வர்க்கத்தின் முதன்மையான கூட்டாளி என்றும் பேராயம் மேலும் சுட்டிக் காட்டியது. எனவே அரசியல் மற்றும் பொருளியல் போராட்டங் களை நடத்துவதற்கு உழவர்களை அமைப்பு ரீதியாகத் திரட்டத் தன்னாலானது அனைத்தையும் பொதுவுடைமைக் கட்சி செய்தாக வேண்டும். அதற்கேற்ப நிலப்பிரபுத்துவ ஆட்சியையும் அதன் ஆயுதப்படைகளையும் எதிர்த்துப் போரிட உழவர்சங்கங்களையும், உழவர் தற்காப்புப் படைகளையும் கட்டியமைக்க வேண்டுமென்று

# 26

# ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் வேறுபாடுகள்

**லெனின்**

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இன்றையத் தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் பிரதான செயல்தந்திர வேறுபாடுகள், இந்த இயக்கத்தில் உண்மையில் ஆதிக்கம் செலுத்தும் தத்துவமாகிவிட்ட மார்க்சியத்திலிருந்து விலகிச் செல்லும் இரு பெரும் போக்குகளுக்கு எதிரான போராட்டத்தில் தம்மைக் குறைத்து வெளிக் காட்டிக் கொள்கின்றன. திருத்தல் வாதமும் (சந்தர்ப்பவாதம், சீர்திருத்த வாதம்) அராஜக வாதமுமே (அராஜக-சிண்டிக்கலிசம், அராஜக-சோசலிசம்) இவ்விரு போக்குகள் தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்துகிற மார்க்சியத் தத்துவத்திலிருந்தும் மார்க்சியச் செயல்தந்திரத்திலிருந்தும் விலகும் இவ்விரு போக்குகளும் நாகரீக மடைந்த எல்லா நாடுகளிலும் வெகுஜனத் தொழிலாளர் இயக்கத்தின் அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றில் பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு சாயல்களிலும் காணப்பட்டவை.

இந்த ஓர் உண்மையே போதும், இந்த விலகல்கள் தற்செயலானவை என்றோ, தனி நபர்கள் அல்லது கோஷ்டிகள் புரிந்த தவறுகளால் தோன்றியவை என்றோ, ஏன் தேசியத் தனி இயல்புகள், மரபுகளின் விளைவாய் ஏற்பட்டவை என்றோ, இன்ன பலவாறோ கூறமுடியாதென்பதைத் தெளிவுப்படுத்த. ஓயாமல் இந்த விலகல்கள் தோன்றுவதற்குப் பொருளாதார அமைப்பிலும் முதலாளித்துவ நாடுகள் யாவற்றினுடைய வளர்ச்சியின் தன்மையிலும் ஆழமான வேர்களைக் கொண்ட காரணங்கள் இருத்தல்

வேண்டும். டச்சு மார்க்சியவாதியான அன்தோன் பேனக்கக் சென்ற ஆண்டில் வெளியிட்ட **தொழிலாளர் இயக்கத்தில் உள்ள செயல்தந்திர வேறுபாடுகள்** என்னும் சிறு புத்தகம் இந்தக்காரணங்களை விஞ்ஞான வழியில் ஆராயும் சுவையான ஒரு முயற்சியாகும். பேனக்கக்கின் முடிவுகள் முற்றிலும் சரியென அங்கீகரிக்கப்பட வேண்டியவை. இந்த முடிவுகளை எமது விளக்கத்தில் வாசர்களுக்குத் தெரியப் படுத்துகிறோம்.

தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியே செயல்தந்திரம் குறித்து அவ்வப்பொழுது வேறுபாடுகள் தோன்றுவதற்குரிய மிக ஆழமான காரணங்களில் ஒன்றாகும். இந்த இயக்கத்தை ஏதோ கற்பனை வடிவிலுள்ள ஓர் இலட்சியத்தைக் கொண்டு அளந்திட முற்படாது, சாதாரண மக்களது நடைமுறை இயக்கமாய்க் கருதுவோமாயின், மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் புதுப்புதுப் ''படையாட்கள்'' சேர்க்கப்படுவதைத் தொடர்ந்து, உழைப்பாளி மக்களின் புதிய பகுதிகள் ஈர்க்கப் படுவதைத் தொடர்ந்து தத்துவத் துறையிலும் செயல்தந்திரத் துறையிலும் ஊசலாட்டங்களும், பழைய தவறுகள் திரும்பவும் எழுதலும், காலத்துக்குப் பொருந்தாத பழைய கருத்துக்களும் பழைய வழிமுறைகளும் தற்காலிகமாய்த் திரும்பவும் தலைதூக்குவதும் இன்ன பிறவும் தவிர்க்க முடியாதபடி ஏற்படவே செய்யும் என்பது தெளிவு. ஒவ்வொரு நாட்டின் தொழிலாளர் இயக்கமும் புதிதாய்ச் சேர்ந்த படையாட்களுக்கு அவ்வப்பொழுது ''பயிற்சியளிப்பதில்'' வெவ்வேறு அளவுக்கு முயற்சியும் கருத்தும் காலமும் செலவிடுகிறது.

தவிரவும் வெவ்வேறு நாடுகளிலும் தேசப் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளிலும் முதலாளியம் வெவ்வேறு வேகங்களில் வளர்கிறது. எங்கே பெருவீதத் தொழில் துறை மிக அதிகமாய் வளர்ச்சி பெற்றிருக்கிறதோ அங்கே தொழிலாளி வர்க்கத்தினரும் தொழிலாளி வர்க்கச் சித்தாந்தவாதிகளும மார்க்சியத்தை மிகச் சுலபமாகவும் விரைவாகவும் முழுமையாகவும் நிரந்தரமாகவும் கிரகித்துக் கொள்கிறார்கள். பிற்பட்ட அல்லது வளர்ச்சியில் பின்தங்கிய பொருளாதார உறவுகளானவை, மார்க்சியத்தின் குறிப்பிட்ட சில கூறுகளை மட்டுமே, புதிய உலகப் பார்வையின் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டுமே, அல்லது தனிப்பட்ட சில முழக்கங்களையும் கோரிக்கைகளையும் மட்டுமே தீரவிசாரித்துக் கொண்டு, பொதுவாய் முதலாளித்துவ உலகப் பார்வையின் குறிப்பாய் முதலாளித்துவ-சனநாயக உலகப் பார்வையின் எல்லா மரபுகளிலிருந்தும் உறுதியாய் முறித்துக் கொள்ள இயலாதவர்

பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு இதைக் குறிப்பிடுகிறோம். பேனக்கக் ருஷ்யாவைச் சிறிதளவும் குறிக்காமலே முழுக்க முழுக்க மேற்கு ஐரோப்பிய வரலாற்றிலிருந்து மட்டுமே, குறிப்பாய் ஜெர்மனி, பிரான்ஸ் இவற்றின் வரலாற்றிலிருந்து மட்டுமே எடுக்கப்பட்ட உதாரணங்களைக் கொண்டு தமது பகுத்தாய்வினை விவரிக்கிறார். சிற்சில இடங்களில் அவர் ருஷ்யாவைக் குறிப்பதாய் தோன்றுகிறதெனில், அதற்குக் காரணம் பண்பாட்டிலும், வாழ்க்கை முறையிலும், வரலாற்று வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் ருஷ்யாவுக்கும மேலை நாடுகளுக்குமிடையே இருக்கும் மிகுந்த வேறுபாட்டையும் மீறி, நமது நாட்டிலும் கூட மார்க்சியச் செயல்தந்திரத்திலிருந்து திட்டவட்டமான விலகல்களைத் தோற்றுவிக்கும் அடிப்படைப் போக்குகள் காணப்படுவதுதான்.

இறுதியாக, தொழிலாளர் இயக்கத்தில் பங்கு கொள்வோரிடையே வேறுபாடுகள் எழ மிகவும் முக்கியமான ஒரு காரணம் பொதுவாய் ஆளும் வர்க்கங்களும், குறிப்பாய் முதலாளித்துவ வர்க்கமும் அனுசரிக்கும் செயல் தந்திரத்தில் ஏற்படும் மாறுதல்களில் அடங்கியுள்ளது. முதலாளித்துவ வர்க்கத்தின் செயல்தந்திரம் மாறுபாடின்றி எப்பொழுதும் ஒரே மாதிரியாய் இருக்குமாயின், அல்லது குறைந்தது ஒரே வகைப்பட்டதாகவாவது இருக்குமாயின், தொழிலாளிவர்க்கம் அதேபோல ஒரே மாதிரியான அல்லது ஒரே வகைப்பட்ட செயல்தந்திரத்தைச் கொண்டு அதற்குப் பதிலளிக்க விரைவில் கற்றுக்கொண்டு விடலாம். ஆனால் உண்மையில் நடப்பதென்னவெனில், ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிசெலுத்துவதற்குத் தவிர்க்கமுடியாத வகையில் இருவகை முறைகளை, தனது நலன்களுக்காகப் போராடுவதற்கும் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் இருவழிமுறைகளை வகுத்துக் கொள்கிறது. இவ்விரு முறைகளும் சில நேரங்களில் ஒன்றன்பின் ஒன்றாகவும், சில நேர்ங்களில் பல்வேறு சேர்மானங்களில் இணைந்தும் கலந்தும் கையாளப்படுகின்றன. முதலாவது முறை பலாத்கார வழி முறை, தொழிலாளர் இயக்கத்துக்கு எவ்வகையிலும் விட்டுக் கொடுக்க மறுக்கும் முறை; காலாவதியாகி விட்ட பழைய ஏற்பாடுகள் யாவற்றையும் ஆதரித்து நிற்கும் முறை; சமரசத்திற்கு இடமின்றிச் சீர்திருத்தங்களை நிராகரிக்கும் முறை. பழமை பேணும் கன்சர்வேட்டிவ் கொள்கை இத்தன்மையதே; இது மேற்கு ஐரோப்பாவில் நிலமுடைய வர்க்கங்களுடைய கொள்கையாய் இருக்கும் நிலை மேலும் மேலும் குறைந்து, பொதுவில் முதலாளித்துவ வர்க்கத்தினுடைய கொள்கையின் பல ரகங்களில் ஒன்றாய் மேலும் மேலும் மாறிவருகிறது. இரண்டாவது முறை, "மித

வாதத்தின்'' வழிமுறை, அரசியல் உரிமைகளின் வளர்ச்சியை நோக்கி, சீர்திருத்தங்களையும், விட்டுக் கொடுத்தலையும் இன்ன பிறவற்றையும் நோக்கி நடவடிக்கைகள் எடுத்துச் செல்லும் முறை.

முதலாளித்துவ வர்க்கம் ஒரு முறையிலிருந்து மற்றொன்றுக்கு மாறிச் செல்வது தனிநபர்களின் கெட்ட எண்ணத்தின் காரணத்தாலோ, தற்செயலாகவோ ஏற்படுவதல்ல; முதலாளித்துவ வர்க்கத்தின் நிலை அடிப்படையிலேயே முரண்பாடான தன்மை கொண்டிருப்பதால் ஏற்படுவதாகும். முறையான முதலாளித்துவச் சமுதாயம், உறுதியாய் நாட்டப்பெற்ற பிரதிநிதித்துவ அமைப்பின்றி, நாட்டு மக்களுக்குக் குறிப்பிட்ட சில அரசியல் உரிமைகளின்றி—இம்மக்கள் ஒப்பளவில் உயர்வான ''பண்பாட்டுத்'' தேவைகளுக்குரிய சிறப்புடைத்திருக்க வேண்டியதாகி விடுகிறது—வெற்றிகரமாய் வளர முடியாது. குறிப்பிட்ட குறைந்தபட்ச பண்பாட்டுக்கான இந்தத் தேவைகள், உயர்ந்த தொழில் நுட்பமும் சிக்கலான நெகிழ்வும் சலனமும், உலகு தழுவிய போட்டியின் விரைவான வளர்ச்சியும் இன்ன பிறவும் கொண்ட முதலாளித்துவ உற்பத்தி முறையின் நிலைமைகளால் தோற்றுவிக்கப்படுகின்றன. இவற்றின் விளைவாய் முதலாளித்துவ வர்க்கத்தின் செயல் தந்திரத்தில் ஊசலாட்டங்கள், பலாத்கார வழி முறைகளிலிருந்து தோற்ற அளவிலான சலுகைகள் வழங்கும் வழிமுறைகளுக்குச் செல்வதற்கான மாறுதல்கள், கடந்த அரை நூற்றாண்டில் எல்லா ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றுக்குமுரிய குண விசேசமாய் இருந்துள்ளன. வெவ்வேறு நாடுகளும் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட வழிமுறைகளைப் பிரதானமாய் வளர்த்து வந்திருக்கின்றன. உதாரணமாய், பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறுபதாம், எழுபதாம் ஆண்டுகளில் பிரிட்டன் ''மிதவாத'' முதலாளித்துவக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தது; எழுபதாம் எண்பதாம் ஆண்டுகளில் ஜெர்மனி பலாத்கார வழி முறையை அனுசரித்தது.

ஜெர்மனியில் இந்த வழிமுறை அனுசரிக்கப்பட்ட காலத்தில், இந்தக் குறிப்பிட்ட முதலாளித்துவ அரசாங்க வழிமுறையின் ஒரு தலைப்பட்சமான எதிரொலியாய்த் தொழிலாளர் இயக்கத்தில் அராஜக—சிண்டிக்கலிசம் அல்லது அன்று அது அழைக்கப் பட்டதுபோல அராஜக வாதம் வளர்ந்தது. (தொண்ணூறாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ''இளைஞர்கள்'' எண்பதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் யோஹன் மொஸ்ட்) 1890இல் ''சலுகைகள்'' வழங்குவதற்குரிய மாற்றம் ஏற்பட்டபோது,

எப்பொழுதும் நேர்வதைப் போலவே இந்த மாற்றம் தொழிலாளர் இயக்கத்துக்கு இன்னுங் கூட அதிக அபாயம் விளைவிப்பதாகி, முதலாளித்துவச் ''சீர்திருத்த வாதத்தின்'' அதே அளவு ஒரு தலைப் பட்சமான எதிரொலியான சந்தர்ப்பவாதத்தைத் தொழிலாளர் இயக்கத்தில் தோன்றச் செய்தது. ''தொழிலாளர்களைத் தவறான பாதையில் போக வைப்பதும், அவர்களுடைய அணிகளில் பிளவை உண்டாக்குவதும், திராணியற்ற, எப்போதுமே திராணியற்றதும், அநித்தியமானதுமான, போலிச் சீர்திருத்தவாதத்தின் வாலாய்த் தொழிலாளர்களுடைய கொள்கையை மாற்றுவதும் தான் முதலாளித்துவ வர்க்கத்தினுடைய மிதவாதக் கொள்கையின் நேரான உண்மையான நோக்கம்'' என்று பேனக்கக் கூறுகிறார்.

ஒருசில காலத்துக்கு முதலாளித்துவ வர்க்கம் ''மிதவாதக்'' கொள்கை மூலம் பல சந்தர்ப்பங்களில் தனது குறிக்கோளை அடைகிறது. பேனக்கக் நியாயமாகவே குறிப்பிடுவது போல இந்தக் கொள்கை ''மேலும் சூழ்ச்சியான'' கொள்கையாகும். தொழிலாளர்களில் ஒரு பகுதியோரும், அவர்களுடைய பிரதிநிதி களில்ஒரு பகுதியோரும் தோற்ற அளவிலான சலுகைகளால் சில சமயங்களில் தாம் ஏமாற்றப்படுவதற்கு இடமளித்து விடுகிறார்கள். திருத்தல்வாதிகள் வர்க்கப் போராட்டத் தத்துவம் காலத்துக்குப் பொருந்தாத ''பழமையானதாகி விட்டது'' என்கிறார்கள்; அல்லது உண்மையில் வர்க்கப் போராட்டத்தை நிராகரிக்கும் ஒரு கொள்கையை அனுசரிக்கத் தொடங்குகின்றனர். முதலாளித்துவ செயல்தந்திரத்தின் கோணங்கள் தொழிலாளர் இயக்கத்தில் திருத்தல்வாதத்தைப் பலன்படுத்துகின்றன; தொழிலாளர் இயக்கத்தில் இருக்கும் வேறுபாடுகளைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே பிளவு உண்டாக்கிவிடும் அளவுக்குக் கடுமையாக்கி விடுகின்றன.

மேலே சுட்டிக் காட்டப் பெற்ற எல்லாக் காரணங்களும் தொழிலாளர் இயக்கத்தினுள்ளும் பாட்டாளிவர்க்க அணி களினுள்ளும் செயல் தந்திரம் குறித்து வேறுபாடுகளை எழச் செய் கின்றன. ஆனால் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளை உள்ளடக்கிய அதனுடன் தொடர்பு கொண்ட குட்டி முதலாளித் துவப் பிரபுகளுக்குமிடையே சீனப் பெருஞ்சுவர் இருக்கவில்லை, இருக்கவும் முடியாது. குட்டி முதலாளிகளில் குறிப்பிட்ட சில தனி யாட்களும் கோஷ்டிகளும், பிரபுகளும் பாட்டாளி வர்க்க அணி களுக்கு வந்து சேர்வதன் விளைவாய்ப் பாட்டாளி வர்க்கச் செயல் தந்திரத்தில் ஊசலாட்டங்கள் ஏற்படவே செய்யும் என்பது தெளிவு.

பல்வேறு நாடுகளிலும் தொழிலாளர் இயக்கத்தின் அனுபவமானது குறிப்பான நடைமுறைப் பிரச்சினைகளின் அடிப்படையில் மார்க்சியச் செயல்தந்திரத்தின் தன்மையை நாம் புரிந்து கொள்ள உதவுகிறது; இளம் நாடுகள் மார்க்சியத்திலிருந்து விலகிச் செல்லும் விலகல்களின் மெய்யான வர்க்க உட்பொருளை மேலும் தெளிவாய் இனங்கண்டு கொள்ளவும், இந்த விலகல்களை மேலும் வெற்றிகரமாய் எதிர்த்துப் போராடவும் அவற்றுக்குத் துணை புரிகிறது.

நூல் திரட்டு, தொகுதி 20, பக்கம். 62-69

# 27

# வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய தாராளவாதக் கருத்துகளும் மார்க்சியக் கருத்துகளும்

## குறிப்புரை

கலைப்புவாதியான ஏ. யெர்மன்ஸ்கி பெரும் வணிக, ஆலை முதலாளிகளின் அரசியல் பாத்திரம் பற்றிய பிரச்சினையின் மீதான அவருடைய (மற்றும் குஸக்காவின்) கண்ணோட்டம் பற்றிய எனது விமர்சனத்தின் மீது ''நாஷா ஸார்யா'' வில் வியப்புக்குள்ளாக்கும் ஏராளமான சினத்தைக் கொட்டினார்.

திரு. யெர்மன்ஸ்கி தனது அவதூறு மற்றும் பழைய ''அவமரியாதைகளை'' நினைவு கூர்தல் (1907இல் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சமூக—சனநாயக அமைப்பைப் பிளவுபடுத்த முயன்று தோல்வியடைந்த திரு. டான் மற்றும் அவரது சகபாடிகளின் ''அவமரியாதை'' உட்பட) ஆகியவற்றைக் கொண்டு பிரச்சினையின் உட்பொருளை (Substance) மறைக்க முயல்கிறார்.

ஆயினும் தகுதியற்ற அவமரியாதைகளையும் கலைப்பு வாதிகளின் தோல்விகளையும் நினைவு கூர்தலின் மூலம் தற்போதைய வாக்குவாதத்தின் உட்பொருளை மறைத்துவிட திரு. யெர்மன்ஸ்கியை நாம் அனுமதிக்க மாட்டோம். ஏனெனில் ஆயிரக் கணக்கான வெவ்வேறு காரணங்களால் மீண்டும் மீண்டும் எழுகின்ற மிக முக்கியமானதொரு கோட்பாட்டுப் பிரச்சினையுடன் தற்போதைய வாக்குவாதம் சம்பந்தப்பட்டுள்ளது.

துல்லியமாகக் கூறினால் (இப்பிரச்சினையானது மார்க்சியம் பற்றிய தாராளவாதப் பொய்யுரைகளைப் பற்றியதாகும்: மேலும் வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய மார்க்சியப் புரட்சிகரக் கருத்துக்களுக்குப் பதிலாகத் தாராளவாதக் கருத்துகளை மாற்றீடு செய்வதைப் பற்றியதாகும்) மார்க்சியவாதிகளுக்கும் கலைப்புவாதிகளுக்கும் இடையிலான எல்லா வாக்குவாதங்களின் இந்தச்சித்தாந்த அடித்தளத்தை விளக்கிச்சொல்வதில் ஒருபோதும் நாம் சோர்வடைய மாட்டோம்

திருவாளர் ஏ. யெர்மன்ஸ்கி எழுதுகிறார்:

> ''நான் (யெர்மன்ஸ்கி) எனது கட்டுரையில் விவரித்ததைப் போல ஆலை அமைப்புகளின் நடவடிக்கைகளில் வர்க்கப் போராட்டத்தைத்'தேசம் தழுவிய அளவில்'(மேலும், சர்வ தேசிய அளவில் பகுதியாகக் கூட) அங்கீகரிக்க ''மார்க்சிய வாதி" இல்யின் மறுக்கிறார். ஏன்? . 'தேசிய அளவிலான' அல்லது மாநில அளவிலான அடிப்படை அம்சம் அதாவது, அரசு அதிகாரக் கட்டமைப்பு 'இல்லாமையே' இதற்குக் காரணம்...'' (நாஷா ஸார்யா-பக்கம், 55)

திரு. யெர்மன்ஸ்கியினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினையின் உட்பொருளுக்கான விளக்கம் மேற் கண்டதில் உள்ளது; அவரே அந்த உட்பொருளை ஒதுக்கித தள்ள சாத்தியமான, சாத்தியமல்லாத அனைத்தையும் செய்கிறார்; அவரது அனைத்துக் கண்ணோட்டங்களையும், மனித இயல்புக்குரிய குற்றங்களையும் (சாவுக்கான பாபங்களையும்) நான் திரித்துச் சொல்வதாக அவர் என் மீது குற்றம் சுமத்தினாலும் சரி, 1907 ஆம் ஆண்டு பிளவின் நினைவுகளிடம் அவர் தஞ்சம் புகுந்தாலும் கூட சரி, உண்மை வெளிப்பட்டே தீரும்.

எனவே, எனது ஆய்வுரை-தேசிய அளவிலான அடிப்படை அம்சம் என்னவெனில் அரசு அதிகாரத்துக்கான கட்டமைப்புதான் என்பது-தெளிவாக உள்ளது.

எனது கோபக்கார எதிராளியே அந்தக் கண்ணோட்டத்தைத் தாங்கள் ஒப்புக் கொள்ளவில்லையா? இது ஒன்றுதான் மார்க்சியக் கண்ணோட்டம் என நீங்கள் நினைக்கவில்லையா?

பிறகு ஏன் அவ்வாறு மிக வெளிப்படையாகச்சொல்லவில்லை? தவறான ஒன்றுக்கு மாறாகச் சரியான ஒன்றை ஏன் முன் வைக்க வில்லை? தேசிய அளவிலான அடிப்படை அம்சம் அரசு அதிகாரக்

கட்டமைப்புதான் என்ற கருத்து உங்களுடைய எண்ணப்படி, அடைப்புக் குறிகளுக்குள் உள்ள மார்க்சியம் என்றால், தவறைத் தாங்கள் ஏன் மறுக்கவில்லை? மேலும் உங்களது மார்க்சியப் புரிதலைத் தெளிவாகவும் துல்லியமாகவும், விலகலின்றியும் ஏன் விவரிக்கவில்லை?

மேலே கொடுத்துள்ள பத்தியை அடுத்து வருகின்ற திரு. ஏ. யெர்மன்ஸ்கியின் புத்தகத்தின் பத்தியை நாம் மேற்கோள் காட்டினால் வாசகருக்கு இந்தக் கேள்விகளுக்கான பதில் தெளிவாகிவிடும்.

> ''ரசியப் பெருமுதலாளிகள் தங்களது வர்க்கப்போராட்டத்தை வேறுபட்ட வழியில் எடுத்துச் செல்லவேண்டுமென இல்யின் விரும்புகிறார்; அவர்கள் முழு அரசமைப்பிலும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இல்யின் விரும்புகிறார். ஆனால் முதலாளிகள் இதை விரும்பவில்லை— 'வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய மார்க்சிய அர்த்தத்திற்குப் பதிலாக தாராளவாத கருத்துகளை மாற்றீடு செய்கின்ற ''கலைப்புவாதி'' திரு. யெர்மன்ஸ்கிதான் உண்மையிலேயே தவறு செய்கிறார்.''

நீங்கள் இங்கே திரு. யெர்மன்ஸ்கியின் வசைமாரி முழுவதையும் காணலாம்; நழுவிச் செல்லும் கலைப்புவாதி இங்கே கையும் களவுமாக மாட்டிக் கொள்ளும் காட்சியைக் காண இது உங்களுக்கு உதவும்.

நழுவல் தெளிவாக உள்ளது.

தேசிய அளவிலான ''அடிப்படை அம்சத்தை" நான் சரியாகச் சுட்டிக் காட்டியிருக்கிறேனா, இல்லையா?

நான் இந்த விசயத்தின் உட்பொருளைச் சரியாகச் சுட்டிக் காட்டியுள்ளேன் என்பதைத் திரு. யெர்மன்ஸ்கியே ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

மேலும் திரு. யெர்மன்ஸ்கி தான் மாட்டிக் கொண்டிருப்பதைப் புரிந்துகொண்டு பதில் கூறாமல் நழுவுகிறார்.

கையும் களவுமாக மாட்டிக் கொண்ட திரு. யெர்மன்ஸ்கி நான் சுட்டிக் காட்டியுள்ள அடிப்படை அம்சம் சரியானதா

தவறானதா என்ற கேள்விக்குப் பதிலளிக்காமல் நழுவுகிறார். அவர் இந்தக் கேள்வியிலிருந்து இல்யினும் முதலாளிகளும் என்ன ''விரும்புகிறார்கள்'' என்ற கேள்விக்குத் தாவுகிறார். ஆனால் திரு. யெர்மஸ்ஸ்கியின் தாவல்கள் எவ்வளவுதான் பயமின்றியும், துணிவுடனும் இருந்தாலும் அவர் மாட்டிக் கொண்டிருக்கிறார் என்ற உண்மையை அவை மூடி மறைக்க வில்லை.

எனதருமை எதிராளியே, வாக்குவாதம் வர்க்கப் போராட் டக் கருத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் போது அதனுடன் ''விருப்பங்களுக்கு'' என்ன வேலை? மார்க்சியக் கருத்தோட்டத்திற்கு மாறாகத் தாராளவாத கருத்தோட்டத்தினை மாற்றீடு செய்வதாக உங்கள் மீது நான் குற்றம் சாட்டியுள்ளேன் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது; மார்க்சியக் கருத்தோட்டத்தின் ''அடிப்படை அம்சம்'' தேசிய அளவிலான வர்க்கப் போராட்டக் கருத்தில் அரசு அதிகாரக் கட்டமைப்பை உள்ளடக்கியுள்ளதைப் போன்றது என்று நான் சுட்டிக் காட்டியுள்ளதையும் நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது.

திரு. யெர்மன்ஸ்கி கோபக்காரராக இருந்த போதிலும் பொதுவாகக் கலைப்பு வாதத்திற்கும் குறிப்பாகத் தனது (யெர் மன்ஸ்கியின்) சொந்தத் தவறுகளுக்கும் இடையிலான தொடர்பு பற்றியும், வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய தாராளவாதக் கருத்தோட்டம் பற்றியும் தன் சொந்த எடுத்துக்காட்டின் மூலமே தெளிவாக விளக்குகின்ற அத்தகையதொரு குழப்பமான வாதம் புரிகின்றவர் அவர்.

வர்க்கப் போராட்டம் பற்றிய பிரச்சினையானது மார்க்சியம் பற்றிய அடிப்படையான பிரச்சினைகளுள் ஒன்றாகும். எனவே வர்க்கப் போராட்டம் பற்றிய கருத்தை இன்னும் விரிவாக விவாதிப்பது தகுதியுடையதாகும்.

ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஒரு அரசியல் போராட்டமாகும். தாராளவாதக் கருத்துகளின் அடிமைகளான சந்தர்ப்பவாதிகள் மார்க்சின் இந்த ஆழமான வார்த்தைகளைத் தவறாகப் புரிந்து கொண்டு அவற்றைத் திரித்து உருக்குலைத்துத் தவறாகப் பொருள் கூற முயல்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். எடுத்துக்காட்டாகச்சந்தர்ப்பவாதிகளுள் கலைப்புவாதிகளின் அண்ணன்களான பொருளாதாரவாதிகள் இருந்தனர். பொருளாதாரவாதிகள், வர்க்கங்களுக்கிடையிலான

எந்தவொரு மோதலும் அரசியல் போராட்டமே என நம்பினர். இதன் காரணமாகப் பொருளாதாரவாதிகள், ரூபிளுக்கு ஓர் ஐந்து கோபெக்குகள் உயர்த்துவதற்கான ஊதிய உயர்வு போராட்டத்தை "வர்க்கப் போராட்டமாக" அங்கீகரித்தனர்; வளர்ச்சியடைந்த தேசிய அளவிலான போராட்டத்தை, அதாவது அரசியல் குறிக்கோள்களுக்கான போராட்டத்தை அங்கீகரிக்க மறுத்தனர். எனவே பொருளாதாரவாதிகள், கரு வடிவிலான வர்க்கப் போராட்டத்தை அங்கீகரித்தனர்; ஆனால் அதன் வளர்ச்சியடைந்த வடிவத்தை அங்கீகரிக்கவில்லை. வேறு வார்த்தைகளில் கூறினால், பொருளாதாரவாதிகள், தாராளவாத முதலாளிகளால் பொறுத்துக்கொள்ளக் கூடிய வர்க்கப்போராட்டப் பகுதியை மட்டுமே அங்கீகரித்தனர். தாராளவாதிகளைவிட முன்னேறிச் செல்ல மறுத்தனர். தாராளவாதிகளால் ஏற்றுக்கொள்ள இயலாத வர்க்கப் போராட்டத்தின் உயர்ந்த வடிவத்தை அங்கீகரிக்க மறுத்தனர். இவ்வாறு செய்வதன் மூலம் பொருளாதாரவாதிகள், தாராளவாதத் தொழிலாளர்களின் அரசியல்வாதிகளாக ஆயினர். இவ்வாறு செய்ததன் மூலம் பொருளாதாரவாதிகள், வர்க்கப்போராட்டம் பற்றிய மார்க்சிய, புரட்சிகரக் கருத்தோட்டத்தை நிராகரித்தனர்.

தொடர்வோம்; வர்க்கப் போராட்டம் அரசியல் துறையைத் தழுவும் போதுதான் அது உண்மையானதாக, நிலையானதாக, வளர்ச்சியுற்றதாக மாறுகிறது என்பது மட்டும் போதாது. அரசியலிலும் கூட ஒருவர் தன்னை அற்ப விவகாரங்களுடன் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். ஒருவர் இன்னும் ஆழமாகவும் அதனுடைய சாரத்தை அடையும்வரை செல்லலாம். ஒரு வர்க்கப் போராட்டம் அரசியலைத் தழுவிக்கொள்வதோடு மட்டும் நிற்காமல், அத்துடன் அரசியலில் மிகச் சாராம்சமாக உள்ள அரசு அதிகாரத்தின் கட்டமைப்பு பற்றிய பிரச்சினையைத் தன் பிடிக்குள் கொண்டு வரும் போதுதான் அதை முழுமையான வளர்ச்சி பெற்ற "நாடு தழுவிய" வர்க்கப் போராட்டமாக மார்க்சியம் அங்கீகரிக்கிறது.

மறுபுறத்தில், தாராளவாதிகள், தொழிலாளி வர்க்க இயக்கம் சிறிது வலிமையாக வளர்ந்திருக்கின்றபோது வர்க்கப் போராட்டத்தை மறுக்கத்துணிவதில்லை. ஆனால் வர்க்கப் போராட்டக் கருத்தைக் குறுக்கவும், மறைக்கவும், அதன் வீரியத்தைக் குறைக்கவும் முயல்கின்றனர். தாராளவாதிகளும்கூட அரசியல் துறைக்குள் வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிக்கத் தயாராக உள்ளனர். ஆனால் அரசியல் துறைக்குள் அரசு அதிகாரத்திற்கான கட்டமைப்பு நுழையக்கூடாது என்ற ஒரு நிபந்தனையின் பேரில்தான் அங்கீகரிக்கத் தயாராக உள்ளனர். முதலாளி வர்க்கத்தாரின் எத்தகைய வர்க்க

நலன்கள் வர்க்கப் போராட்டக் கருத்தின் தாராளவாத உருத் திரிபை தோற்றுவிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வது கடின மன்று.

இப்பொழுது, மிதவாதியும் நேர்மையான அரசு ஊழியரான திரு. குஷ்காவின் வேலையைத் திரு. யெர்மன்ஸ்கி சிறிது மாற்றிப் புதிதாகக் கட்டியமைத்தபோது, வர்க்கப் போராட்டக் கருத்தைத் தாராளமாக ஆண்மையிழக்க செய்ததைக் கவனியாமல் (அல்லது பார்க்க விரும்பாமல்?) குஷ்காவுடனான தன் ஒருமைப்பாட்டை திரு. யெர்மன்ஸ்கி வெளிப்படுத்தியபோது தத்துவத்துக்கும் பொதுக் கோட்பாடுகளுக்கும் எதிரான அவரது முதன்மையான பாவத்தை நான் திரு.யெர்மன்ஸ்கிக்குச் சுட்டிக்காட்டினேன். திரு.யெர்மன்ஸ்கி நான் சொன்னதை மறுக்க முடியாததால் கோபம்கொண்டு மோசமான வார்த்தைகளைப் பிரயோகிக்கவும், திரிக்கவும், புரட்டவும் தொடங்கினார்.

இப்படிச் செய்ததன் மூலமாக திரு. யெர்மன்ஸ்கி இத்தகைய தொரு குழப்பமான அரசியல்வாதி என்பதை மிகத்தெளிவுடன் தானாகவே வெளிப்படையாக நிருபித்துவிட்டார். ''இல்யின் விரும்புகிறார். முதலாளிகள் விரும்புவதில்லை'' என்று எழுது கிறார். பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டம் (மார்க்சியம்) மற்றும் முதலாளி வர்க்கக் கண்ணோட்டம் (தாராளவாதம்) ஆகியவற்றின் எந்த முக்கியமான அம்சங்கள் இந்த வெவ்வேறான 'விருப்பங் களைத்' தோற்றுவிக்கின்றன என்பதை இப்போது நாம் அறிவோம்.

முதலாளிகள் வர்க்கப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தவும் இந்தக் கருத்தோட்டத்தைத் திரிக்கவும், குறுக்கவும், கூர்முனையை மழுங்கச் செய்யவும் 'விரும்புகிறார்கள்.' ''பாட்டாளி வர்க்கம்இந்த வஞ்சகம் அம்பலப்படுத்தபடவேண்டுமென'விரும்புகிறது.' மார்க்சியம் என்ற பெயரில் முதலாளிய வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தைப் பற்றிப் பேச யார் முன் வந்தாலும், மார்க்சியவாதி விவரங்களை வெறுமனே மேற்கோள் காட்டுவதோடு மட்டுமல்லாமல், 'பெரிய" விவரங்களில் மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் திளைப்பதோடு மட்டு மல்லாமல், உண்மையில் வர்க்கப் போராட்டம் பற்றிய முதலாளித் துவக் கருத்தோட்டத்தின் குறுகிய தன்மையை, சுயநலத் தன்மை கொண்ட குறுகிய தன்மையை அம்பலப்படுத்த விரும்புகிறார். தாராளவாதிகள் முதலாளிய வர்க்கத்தையும் அதன் வர்க்கப் போராட்டத்தையும் அதனுடைய குறுகிய தன்மையை மறைக்கும் வகையிலும், அந்தப் போராட்டத்தில் ''அடிப்படையானதும்''

முக்கியமானதும் ஆன ஒன்றை சேர்த்துக் கொள்ளத் தவறுவதை மறைக்கும் வகையிலும் கணிக்க ''விரும்புகிறார்.''

சுவாரஸ்யமான, ஆனால் சித்தாந்த வெறுமையுடைய அல்லது அடிமைக் குணமுடன் தொகுக்கப்பட்ட திரு. குஷ்காவின் புள்ளி விவரங்களைத் தாராளவாத முறையில் விவாதிப்பதில் திரு. யெர்மன்ஸ்கி சிக்கிக் கொண்டார். இது வெளிப்படுத்தப்பட்ட பொழுது சாபமிடுவதையும் புழுப்போல் துடிப்பதையும் தவிர திரு. யெர்மன்ஸ்கி செய்வதற்கு எதுவுமில்லை என்பது தெளிவு.

திரு. யெர்மன்ஸ்கியின் கட்டுரைப் பகுதியை நாம் விட்ட இடத்திலிருந்து தொடருவோம்:

> ''உண்மையான நிலவரங்களைப் பற்றிய ஆய்வை மெய்யாகவே தன் சொந்தத் தகுதியாலும் மேலும் கூடுதலாக, (!!) மாபெரும் பிரெஞ்சுப் போராட்ட வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட, பள்ளி மாணவர் ஆய்வு முறையை ஆதாரமாகக் கொண்ட ஒரே மாதிரி வகையான (Stereotyped) பாங்காலும் மாற்றீடு செய்கின்ற ஒரே ஆள் இல்யின் தான் என்பது தெளிவாகும்.''

திரு. யெர்மன்ஸ்கி தன்னைத் தானே ''அழித்துக் கொள்வதில்'' முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஈவிரக்கமில்லாதவராக ஆகியுள்ளார்! அந்த அளவுக்கு அவர் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கின்றார். மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியினுடைய ''ஒரே மாதிரியான வகைகளுக்கு'' எதிரான அவரது ஆவேசமான கோபத்தால் அவரது தாராளவாதம் எந்த அளவுக்கு வெளிப்படுத்தப்படுகிறது என்பதை அவர் கவனிக்கவில்லை.

என் அன்பார்ந்த திரு. யெர்மன்ஸ்கி அவர்களே! உண்மை நிலவரத்தை வரையறுக்காமல் அதை மார்க்சிய அல்லது தாராளவாத அல்லது பிற்போக்கு போன்றவற்றின் நோக்குநிலையில் மதிப்பீடுசெய்யாமல் ''உண்மை நிலவரங்களைக் கற்றறிவது என்பது'' சாத்தியமல்ல என்பதை (இதைப் புரிந்து கொள்வது ஒரு கலைப்புவாதிக்கு எவ்வளவு கடினம் என்பது பற்றி கவலை இல்லை) நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

திரு. யெர்மன்ஸ்கி அவர்களே! நீங்கள் அரசு ஊழியரான ருஷ்காவின், ''ஆய்வைத்'' தாராளவாதப் பாணியில் வரையறுத்தீர்கள்; இன்னும் அப்படியே வரையறுக்கிறீர்கள். நான் மார்க்சிய

முறையில் வரையறுக்கிறேன். இவையெல்லாவற்றுக்கும் அடியில் இருப்பது இதுதான். அரசு அதிகாரக் கட்டமைப்பைப் பற்றிய பிரச்சினையின் தொடக்கம் மீதான உங்களது விமர்சனப் பகுப்பாய்வை விட்டு விட்டதன் மூலம் வர்க்கப்போராட்டம் பற்றிய உங்களது கருத்தின் தாராளவாத எல்லைகளைத் தாங்கள் நிரூபித்து விட்டீர்கள்.

தெரியப்படுத்தியிருக்க வேண்டியது எது?

மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் ''ஒரே மாதிரியான வகைக்கு'' எதிரான தங்களது சொல்திறம் உங்களை முற்றிலும் கை விட்டு விடுகிறது. ஒரே மாதிரியான வகை அல்லது ஒரு பிரெஞ்சு மாதிரி இந்த விஷயத்தோடு தொடர்பற்ற ஒன்று என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும். எடுத்துக் காட்டாக அந்த நேரத்தில் ''ஒரே மாதிரியான வகை மற்றும் மாதிரி'' நிலைமைகளின் கீழ் அங்கே வேலை நிறுத்தங்கள் அதிலும் குறிப்பாக அரசியல் வேலை நிறுத்தங்கள் இல்லை; இருந்திருக்கவும் முடியாது என்பதாகும்.

உண்மை என்னவென்றால், நீங்கள் ஒரு கலைப்புவாதியாக மாறிவிட்ட பின்னர் சமூக நிகழ்ச்சிகளை மதிப்பிடுவது பற்றிய புரட்சிகர நோக்கு நிலைகளை எப்படிப் பிரயோகிப்பது என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள். பிரச்சினை அங்கேதான் இருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவிலிருந்து எடுக்கப்பட்ட ''ஒரே மாதிரியான வகைகள் மற்றும் மாதிரி''களுடன் மட்டும் மார்க்ஸ் தனது சிந்தனையை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை என்பது உறுதி. ஆனால், அவர் மேற்கொண்ட நோக்குநிலை எப்போதுமே புரட்சிகரமாக இருந்தது; அவர் எப்போதுமே வர்க்கப் போராட்டத்தை மிகமிக ஆழமாக மதிப்பிட்டார். (எனது அன்பான திரு. யெர்மன்ஸ்கி அவர்களே! 'கற்றறிந்தோர்' சொல்லை நீங்கள் விரும்பினால், ''வரையறுத்தார்'' என்ற சொல்லைப் பயன்படுத்தவும்) அது ''அடிப்படைகளைப்'' பாதிக்கிறதா என்பதை எப்போதும் வெளிப்படுத்தினார். அவர் எப்போதும் எண்ணத்தின் எந்த ஓர் உரமின்மையையும், வளர்ச்சியற்றதும், ஆண்மையிழக்கப்பட்டதும், தன்னலத்தோடு உருக்குலைக்கப்பட்டதுமான வர்க்கப் போராட்டத்தை மறைப்பதையும் ஈவிரக்கமின்றித் தோற்கடிக்கவும் செய்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த வர்க்கப் போராட்டம் அது எவ்வாறு அரசியல் ரீதியாக மாறமுடியும் என்பதையும், உண்மையிலேயே ''நாடு தழுவிய'' வடிவங்களுக்கு அது எவ்வாறு வளர்ச்சியடைய முடியும் என்பதையும் நமக்குக்

காட்டியது. அதன் பிறகு முதலாளித்துவமும் பாட்டாளி வர்க்கமும் பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்டன. எடுத்துக்காட்டாக மேலே நான் ஓரளவுக்குக் கோடிட்டுக் காட்டிய போராட்டத்தின் புதிய வடிவங்களைப் பற்றிய கற்றலைப் பழைய ''மாதிரிகள்'' தடுப்பதில்லை.

எனினும் மார்க்சியவாதியின் கண்ணோட்டத்திற்கு எப்போதும் ஆழமானதும், மேலோட்டமற்றதுமான ''மதிப்பீடு'' தேவைப்படும். அது எப்போதும் தாராளவாத உருக்குலைவுகளின் வறுமையையும், குறை மதிப்பீடுகளையும், கோழைத்தனமாக மறைப்பதையும் அம்பலப்படுத்தும்.

புரட்சிகரக் கண்ணோட்டத்திலிருந்து சமூக நிகழ்வுகளை எப்படி ஆராய்வது என்பதை மறந்துவிட்டு, வர்க்கப் போராட்டம் பற்றிய மார்க்சியக் கருத்துக்கு மாறாகத் தாராளவாத நோக்கு நிலையை மாற்றீடு செய்யும் கலைப்புவாதிகளின் வழியைப் பற்றி திரு. யெர்மன்ஸ்கி அவர்கள் ஈடுபாட்டுடனும் சிறப்பாகவும் செய்த விளக்கத்திற்காக அவரை நாம் பாராட்டுவோமாக!

ப்ரொஸ்வெஷ்ச்செனியே, எண். 5.
மே. 1913.
ஒ-ம். வி. இல்யின்

ப்ரொஸ் வெஷ்ச்செனியேயன்
மூலத்தில் உள்ளபடியே
வெளியிடப்பட்டது.

# 28

# தொழிலாளர்களின்வேலைநிறுத்தங்கள் பற்றி ஆலை முதலாளிகள்

**லெனின்**

மாஸ்கோ, பி. பி. ரியாபுஷின்ஸ்கி அச்சகம், "1912 மாஸ்கோ தொழில் வட்டார ஆலை முதலாளிகள் சங்கம்" என்ற தலைப்பிட்ட சுவாரஸ்யமான புத்தகம் ஒன்றை வெளியிட்டியிருக்கிறது. விலை குறிக்கப்படவில்லை. ஆலை முதலாளிகள், தங்களுடைய வெளியீடுகள், விலைக்கு விற்கப்படுவதை விரும்பவில்லை.

யூலி பெட்ரோவிக்குகோன் என்பவர் இச்சங்கத்தின் தலைவர். அவர் மார்ச் 30இல் அந்த ஆண்டின் ஆண்டுக்கூட்டத்தைத் தொடங்கி வைத்து, அவர்கள் சங்கத்தின் "ஏழாவது செயல்முறை ஆண்டின் தொடக்கத்தை" முன்னிட்டு தொழில் அதிபர்களைப் பாராட்டியதுடன், புறக்கணிக்க முடியாத, தொழில் கழகங்களின் வலிமை பற்றிய கருத்தைத் தங்களுடைய ஒற்றுமையின் மூலம் தொழிலதிபர்கள் உருவாக்கியிருந்தனர்" என்று அறிவித்தார். "சங்கத்தின் புதிய உறுப்பினர்களின் கடமையானது, இந்த வலிமையை மேலும் பலப்படுத்துவதாக இருக்க வேண்டும்" என்று திரு. குகோன் கூறுகிறார்.

இந்த உரையானது படிப்பாளித்தனமானது இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த உரையானது ஏதோ இராணுவ குமாஸ்தா பேச்சின் பழைய நினைவு போல, முழுதும் அராஜகத் தன்மையுடையதாகவும் இருந்தது.

இந்நூலில் தகவல்களைத் தருகிற பகுதிகளை நாம் காணலாம். மூன்றில் ஒரு பங்குக்கு மேல் (பக்கங்கள் 16—69) இந்த நூலில் "வேலை நிறுத்தங்கள்" பற்றிக் கூறப்படுகிறது. தொழிலதிபர்கள், 1912-வேலை நிறுத்தங்களில் பங்கெடுத்துக் கொண்ட மொத்த தொழிலாளர்களைப் பற்றிய பின்வரும் சித்திரத்தை நமக்கு அளிக்கிறார்கள்.

# 29

# பொருளாதாரம் மற்றும் அரசியல் வேலை நிறுத்தங்கள்

1905ஆம் வருடத்தில் இருந்து, அதிகாரபூர்வ வேலை நிறுத்தப் புள்ளி விவரங்களை எடுக்கும் வர்த்தக, தொழில் அமைச்சகம் வேலை நிறுத்தங்களை, அரசியல் வேலை நிறுத்தம், பொருளாதார வேலை நிறுத்தம் என்று இரு வகையாகப் பிரித்தது. வேலை நிறுத்த இயக்கங்களின் தனித்துவமான வெளிப்பாடுகளே—இந்த உண்மை நிலையே—இத்தகைய உட்பிரிவுகளை அவசியமாக்கியது. பொருளாதார, அரசியல் வேலை நிறுத்தங்களின் சேர்க்கையானது, இத்தகைய வடிவங்களின், ஒரு தலையாய விசேச அம்சமாகும். இப்போது வேலை நிறுத்த இயக்கம் மறுமலர்ச்சி அடைந்துள்ளது. விஞ்ஞானப் பகுப்பாய்வு, நிகழ்ச்சிகள் பற்றிய அறிவார்ந்த போக்கு ஆகியவற்றின் பொருட்டு ரஷ்யாவில் வேலை நிறுத்த இயக்கங்களின் தனித்துவமான சிறப்புக் கூறைத் தொழிலாளர்கள் நெருக்கமாக உற்று நோக்க வேண்டும்.

முதலாவதாக, அரசாங்க வேலை நிறுத்தப் புள்ளி விவரப் பட்டியலில் இருந்து எடுத்த விவரங்களை நாம் கூறுவோம். 1905-07, மூன்று வருட காலத்தில், உலகத்தின் முன் எப்போது எங்கும் இராத அளவுக்கு வேலை நிறுத்த இயக்கங்கள் ஓர் உச்சநிலையை அடைந்தன. அரசாங்கப் புள்ளி விவரமானது, தொழிற்சாலைகளில் நடந்த வேலை நிறுத்தங்களை மட்டுமே காட்டுகிறது. இதன் காரணமாக, சுரங்கத் தொழில், இருப்புப் பாதை, கட்டிடத் தொழில் மற்றும் எண்ணற்ற பிறதொழில்களில்ஈடுபட்டுள்ளகூலித்தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் விடுபட்டுள்ளன. ஆனாலும், தொழிற்சாலைகளில் மட்டும் 1905இல் 28,63,000 அதாவது 3 மில்லியனுக்குச் சற்று குறைவான தொழிலாளர்களும், 1906 இல், 11,08,000

தொழிலாளர்களும், 1907இல் 7, 40,000 தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். 1894-லிருந்து 1908 வரையிலான, 15 ஆண்டுக் காலத்தில், ஐரோப்பாவில் வேலை நிறுத்தங்கள் பற்றி முறையாக ஆராயத் தொடங்கியபோது, அமெரிக்காவில் ஓர் ஆண்டுக் காலத்தில் அதிகபட்சமாக 6, 60,000 தொழிலாளர்கள் கலந்து கொண்டதாகப் பதிவு செய்யப்பட்டது.

உலகத்திலேயே முதன் முறையாக, ருஷ்யத் தொழிலாளர்கள் தான், வேலை நிறுத்தங்களை மிகப் பரந்துபட்ட அளவில் நடத்தினர் என்பதை 1905-07 இல் நாம் கண்டோம். இப்பொழுது, பிரிட்டன் தொழிலாளர்கள், பொருளாதார வேலை நிறுத்தங்களுக்கு அதிக உத்வேகம் அளித்துள்ளனர். ருஷ்யத் தொழிலாளி வர்க்கமானது, மேற்கு ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கத்தாருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, மிகவும் வலிமை வாய்ந்த முறையிலும், உயர்ந்த வளர்ச்சி பெற்ற அளவிலும், உயர்ந்த அமைப்பு வடிவத்திலும் வேலை நிறுத்தங்களைத் தலைமைப் பாத்திரம் தாங்கி நடத்திச் செல்லவில்லை என்றாலும், ஐரோப்பாவானது ஒரு மகத்தான தேசிய நெருக்கடியைக் கடக்காததும் அதில் பாட்டாளி வர்க்கத் திரள் ஒரு சுதந்திரமான பாதையை எடுக்கவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால், அத்தகைய பிரச்சினைகள் எழும்பொழுது, ஐரோப்பாவில், ஒட்டுமொத்த வேலை நிறுத்தங்கள் 1905இல் ரஷ்யாவில் நடந்ததைவிட, மிக வலிமை வாய்ந்த அளவில் இருக்கும்.

இந்தக் கால கட்டங்களில் நடந்த பொருளாதார வேலை நிறுத்தத்திற்கும் அரசியல் வேலை நிறுத்தத்திற்குமிடையே உள்ள விகிதம் என்ன? அரசாங்கப் புள்ளி விவரங்கள் பின்வரும் பதிலைத் தருகின்றன.

**வேலை நிறுத்தம் செய்தோரின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)**

| | 1905 | 1906 | 190 |
|---|---|---|---|
| பொருளாதார வேலை நிறுத்தங்கள் | 1,439 | 458 | 200 |
| அரசியல் வேலை நிறுத்தங்கள் | 1,424 | 650 | 540 |
| மொத்தம்... | 2,863 | 1,108 | 740 |

இந்த அட்டவணையானது, இருவகைப்பட்ட வேலை நிறுத்தங்களுக்கும் இடையிலுள்ள பிரிக்கமுடியாத தொடர்பைக் காட்டு

கிறது. வேலை நிறுத்த இயக்கமானது, ஓர் உயர்ந்த பட்ச நிலையில் இருந்தபொழுது (1905), வேலை நிறுத்தங்கள் பொருளாதார அடிப்படை பரந்து இருந்தது. அந்த ஆண்டில் அரசியல் போராட்டமானது, பொருளாதார வேலை நிறுத்தங்களை உறுதியாகவும், கெட்டியாகவும் பற்றி இருந்தன. பொருளாதார வேலை நிறுத்தங்கள், அரசியல் வேலை நிறுத்தங்களைவிட எண்ணிக்கையில் அதிகமாக இருந்தன.

1906, 1907 இல் இந்த இயக்கங்கள் வீழ்ந்திருந்த பொழுது, பொருளாதார அடிப்படை சுருங்கியது. பொருளாதார வேலை நிறுத்தம் செய்தவர்களின் எண்ணிக்கையானது, மொத்த எண்ணிக்கையில், 1906 இல் 40 விழுக்காடாகவும், 1907 இல் 30 விழுக்காடாகவும் குறைந்தன. இதன் பயனாக, இருவிதமான வேலை நிறுத்தங்களும் ஒன்றை ஒன்று ஆதரிப்பதாகவும், ஒன்றுக்கு ஒன்று வலிமையின் ஊற்று மூலமாகவும் அமைந்தன. இத்தகைய இரு வேலை நிறுத்த வடிவங்களில் ஒன்றுடன் ஒன்றைப் பின்னிப் பிணைக்காவிட்டால் ஓர் உண்மையான, பரந்த மக்கள் இயக்கம்-இதனினும் மேலாக, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இயக்கம்—சாத்தியமில்லாது போகும். இந்த இயக்கமானது, அதன் தொடக்க நிலையில் இருந்த பொழுது பொருளாதார வேலை நிறுத்தம்தான், பிற்பட்டவர்களின் மத்தியில் ஓர் விழிப்புணர்வையும், எழுச்சியையும் உண்டுபண்ணியது. இதை ஒரு பொது நிகழ்வாக ஆக்கியது; இயக்கத்தை அதன் உயர்ந்த கட்ட வளர்ச்சிக்கு உயர்த்தியது.

1905 ஆம் ஆண்டில் முதல் கால் பகுதியில் பொருளாதார வேலை நிறுத்தம் அரசியல் வேலை நிறுத்தத்தைவிட அதிகமாக இருந்து ஆதிக்கம் செலுத்தியது. பொருளாதார வேலை நிறுத்தத்தில் 6, 04,000 தொழிலாளர்களும், அரசியல் வேலை நிறுத்தத்தில் 2, 06,000 தொழிலாளர்களும் பங்கு கொண்டனர். 1905 ஆம் ஆண்டின் கடைசி கால் பகுதியில், விகிதாச்சாரமானது தலைகீழாக மாறியது. 4,30, 000 தொழிலாளர்கள் பொருளாதார வேலை நிறுத்தத்திலும், 8, 47, 000 தொழிலாளர்கள் அரசியல் வேலை நிறுத்தத்திலும் பங்கு கொண்டனர். இதன் பொருள், இயக்கத்தின் தொடக்கக் கட்டத்தில், அநேக தொழிலாளர்கள், பொருளாதாரப் போராட்டத்தை வைத்தனர்; அதன் உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்தில், போராட்டமானது, அதன் அடுத்த சுற்றுக்குச் சென்றது என்பதாகும். ஆனால் எல்லா நேரத்திலும், பொருளாதார அரசியல் வேலை நிறுத்தங்களுக்கு இடையே ஓர் தொடர்பு இருந்தது. நாம் மீண்டும் கூறுகிறோம், இவை இரண்டுக்கும்,

தொடர்பு இல்லை எனில், உயர்ந்த நோக்கங்களைச் சாதிக்கக் கூடிய ஓர் உண்மையான, பெரிய இயக்கமானது சாத்தியமில்லை.

அரசியல் வேலை நிறுத்தத்தில், தொழிலாளி வர்க்கம், அனைத்து மக்களினதும் முன்னேறிய வர்க்கமாக முன்வருகிறது. இந்நிலைமைகளில் பாட்டாளி வர்க்கம் முதலாளிய சமூகத்தின் ஓர் வர்க்கம் என்ற பாத்திரம் மட்டும் கொள்ளாமல் வழிகாட்டியாகவும், முன்னணிப் படையாகவும், தலைவனாகவும் விளங்குகிறது. இந்த இயக்கம் வெளிப்படுத்தும் அரசியல் கருத்துகள், அனைத்து மக்களையும் உள்ளடக்குகிறது. அதாவது, அவை நாட்டினது அடிப்படையான, மிகவும் ஆழமான அரசியல் வாழ்க்கையின் விதிகளைச் சார்ந்துள்ளது. 1905-07 ஆம் ஆண்டு அனைத்து அறிவியல் ஆய்வாளர்களாலும் காட்டப்பட்ட, இந்த அரசியல் போராட்டத்தின் குணாம்சமானது, எல்லா வர்க்கங்களையும் போராட்டத்தினுள்ளே கொண்டு வந்தது; மேலும், குறிப்பாக உண்மையிலேயே மக்களின் மிகப்பரந்த, எண்ணிக்கையில் அதிகமான, மக்கள் தொகையிலும் உழவர்களிலும் மிகவும் சனநாயகத் தன்மையுடைய பிரிவுகளை இயக்கத்தினுள்ளே கொணர்ந்தது.

மறுபுறத்தில், உழைக்கும் மக்கள்,பொருளாதாரக் கோரிக்கைகள் இன்றி, அவர்களுடைய நிலையில் ஓர் உடனடியான, நேரடியான முன்னேற்றம் இன்றி, நாட்டின் பொதுவான முன்னேற்றத்தைப் பற்றி நினைக்க ஒரு பொழுதும் உடன்படமாட்டார்கள். உழைப்பவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும்பொழுது மட்டும்தான், மக்கள் இயக்கத்தினால் ஈர்க்கப்படுவார்கள்; தீவிரமான முறையில் இதில் பங்கு கொள்வார்கள்; ஓர் இயக்கத்தை உயர்ந்ததாகக் கருதுவார்கள்; வீரத்தையும், சுய தியாகத்தையும், விடாமுயற்சியையும், பக்தியையும் அந்த மகத்தான நோக்கத்துக்காகக் காட்டுவார்கள். உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலையானது, "சாதாரண" காலங்களில் நம்ப முடியாத அளவிற்குக் கடினமாக இருக்கும் பொழுது, இது வேறு விதமாக இருக்க முடியாது. தன்னுடைய வாழ்நிலையை உயர்த்திக் கொள்ள முயலும் அதே வேளையில், தொழிலாளி வர்க்கமானது, கருத்து ரீதியாகவும், அறிவு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் முன்னேறுகிறது; மேலும், அடிமை நிலைமையில் இருந்து விடுவித்துக் கொள்ளும் தன்னுடைய உயர்ந்த நோக்கங்களைச் சாதிக்கும் திறன் பெற்றதாகவும் மாறுகிறது.

வர்த்தக, தொழில் அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்த வேலை நிறுத்தங்களின் புள்ளி விவரமானது, தொழிலாளி

வர்க்கத்தாரின் பொருளாதாரப்போராட்டமானது, ஒரு பொதுவான மறுமலர்ச்சிக்கு உள்ளான காலகட்டத்திய மாபெரும் முக்கியத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. தொழிலாளி வர்க்கத்தார் எந்த அளவுக்கு வலுவாகத் தாக்கப்படுகிறார்களோ அவ்வளவு அதிகமாக அவர்கள் தங்களுடைய வாழ்நிலைத் தரத்தை உயர்த்திச் சாதனை புரிவார்கள். ''சமுதாயத்தின்பால் அனுதாபம்'' மற்றும் சிறந்த வாழ்நிலை, இவை இரண்டும் போராட்டத்தின் உயர்ந்த அளவு வளர்ச்சியின் விளைவுகள் ஆகும். தாராளவாதிகள் (மேலும் கலைப்பு வாதிகளும்) தொழிலாளர்களிடத்தில் கூறுகிறார்கள்; ''சமுதாயத்தின்பால் நீங்கள் அனுதாபம் கொள்ளும்போது, நீங்கள் வலிமை வாய்ந்தவர்களாக உள்ளீர்கள்'' என்று. மார்க்சியர்கள் தொழிலாளர்களிடத்தில், வேறுவிதமாகப் பின்வருமாறு கூறுகிறார்கள்: ''நீங்கள் வலிமை வாய்ந்தவர்களாக இருக்கும் பொழுது, சமுதாயத்தின்பால் அனுதாபம் கொள்கிறீர்கள்'' நாம், இங்குச் சமுதாயம் என்பதன் மூலம், மக்களின் அனைத்துச் சனநாயகப் பிரிவுகளையும், குட்டி முதலாளிகள், விவசாயிகள், தொழிலாளர் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய அறிவாளிகள், அலுவலக ஊழியர்கள் இன்ன பிறரையும் குறிப்பிடுகிறோம்.

வேலைநிறுத்த இயக்கமானது 1905இல் மிகமிக வலிமை வாய்ந்ததாக இருந்தது. அதன் விளைவு என்னவாக இருந்தது? அந்த ஆண்டில் தொழிலாளர்கள், தங்களுடைய நிலைமையில் பெரிய முன்னேற்றங்களைச் சாதித்தனர் என்பதை நாம்கண்டோம். 1905இல் 100 பேர்களில், 29 பேர் மட்டுமே எதையும் அடையாமல் தங்களுடைய போராட்டத்தை நிறுத்திக் கொண்டனர் என்று அரசாங்கப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது; அதாவது, அந்தத் தொழிலாளர்கள், முற்றுமாகத் தோற்கடிக்கப்பட்டனர். முந்தைய பத்து ஆண்டுகளில் (1895-1904) 100 வேலை நிறுத்தங்களில் 52 வேலை நிறுத்தங்கள், ஒன்றும் அடையாமல், தங்களுடைய போராட்டத்தை நிறுத்திக் கொண்டன. அதிக அளவிலான போராட்டங்கள்-கிட்டத்தட்ட இரு மடங்கு-மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளன என்பதை இதன் வாயிலாக அறியலாம்.

இயக்கம் வீழ ஆரம்பித்தபோது, போராட்டத்தின் வெற்றிகளும் அதற்கேற்றாற் போன்று குறைய ஆரம்பித்தன. 1906இல் போராடிய 100 நபர்களில், 33 தொழிலாளர்கள் ஒன்றும் அடையாமல், தங்களுடைய போராட்டத்தை நிறுத்திக் கொண்டனர்; அல்லது தோற்கடிக்கப்பட்டனர். சரியாகக் கூறினால், இந்த எண்ணிக்கை 1907இல் 100க்கு, 58 ஆகவும், 1908இல் 69 ஆகவும் உயர்ந்தது.

இவ்வாறாக, பற்பல ஆண்டுகளாக எடுத்த அறிவியல் ரீதியான புள்ளி விவரப் பட்டியல், அரசியல் வேலை நிறுத்தத்தையும் பொருளாதார வேலை நிறுத்தத்தையும் இணைப்பதன் இன்றியமையாமை மற்றும் மக்கள் அனைவரின் மெய்யான பரந்த இயக்கத்தில் இந்தச் சேர்க்கையின் தவிர்க்க இயலாத் தன்மைதொடர்பான வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர் ஒவ்வொருவரது தனிப்பட்ட பட்டறிவு மற்றும் உற்று நோக்கி அறிந்ததையும் முழுதும் உறுதிப்படுத்துகின்றது.

இப்போதைய போராட்ட அலையானது, அவ்வாறே இந்த முடிவை உறுதி செய்கிறது. 1911இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோரின் எண்ணிக்கை, 1910இஐ விட இரு மடங்காக இருந்தது. (1910இல் 50,000 ஆகவும், 1911இல் 1,00,000 ஆகவும்) இருந்த போதிலும், இந்த எண்ணிக்கை உண்மையிலேயே மிகவும் குறைவாகும். தூய்மையான பொருளாதார போராட்டங்கள் ஒப்பீட்டளவில் குறுகிய நோக்கம் கொண்டிருந்தன; அவை தேசிய முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. மறுபக்கத்தில், இன்று, கடந்த ஏப்ரல் நிகழ்ச்சியின் தொடர்ச்சியான வேலை நிறுத்த இயக்கம், இந்தத் துல்லியமான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது அனைவருக்கும் வெளிப்படையாகும்.

எனவே, இந்தப் போராட்டத்தின் குணாம்சத்தைத் திரிப்பதற்கான தாராளவாதிகள் மற்றும் தாராளவாத தொழிலாளர் அரசியல் வாதிகளின் (கலைப்புவாதிகள்) முயற்சிகளைப் பின்னுக்குத் தள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். திரு. செவர்யானின் ஒரு தாராளவாதம் அவர் மேநாள் போராட்டத்தில், பொருளாதாரத்தையோ அல்லது வேறு எந்த கோரிக்கையையோ ''கலப்பதையும்'' எதிர்த்து, ரஷ்கியே வேதபோஸ்தி இதழில் ஒரு கட்டுரை எழுதினார். அதை கேடட் இதழான ரெக், அந்தக் கட்டுரையின் முக்கிய பகுதிகளை மறுபதிப்பு செய்திருக்கிறது.

''மேநாளுடன் இத்தகைய போராட்டங்களை இணைப்பது அறிவுக்கும் பொருத்தமானதில்லை. உண்மையிலேயே இப்படிச்செய்வது விந்தையானது; நாம், பன்னாட்டுத் தொழிலாளர் விடுமுறை தினத்தைக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம்; நாம், இந்த வாய்ப்பை இன்ன இன்னதரத்திலுள்ள காலிக்கோவுக்கு(துணி) பத்து விழுக்காடு உயர்வைக் கோரப் பயன்படுத்துகிறோம்'' (ரெக். எண். 132) என்று தாராளவாதக் கனவான் எழுதுகிறார்.

தொழிலாளிகளுக்குத் தெளிவாகத் தெரிகிற அது தாராள வாதிகளுக்கு விந்தையாகத் தோன்றுவது என்ன? முதலாளியத்தை யும், அதன் மேலதிக இலாபத்தையும் பாதுகாக்கிறவர்கள் மட்டுமே "உயர்வுக்கான" கோரிக்கையை எண்ணிநகையாட முடியும். ஆனால் தொழிலாளர்கள் இந்த உயர்வுக்கான கோரிக்கையின் பரவலான பண்பியல்பு, வேலை நிறுத்தத்தின் அறிவுடைய பண் பியல்பு ஏராளமான புதிய பங்கேற்பாளர்களைக் கவர்ந்திழுக் கக் கூடிய மாபெரும் திறன் கொண்டதும், தாக்குதலுக்கான வலிமையையும் சமூகத்தின்பாலான அனுதாபத்தையும் உறுதிப் படுத்துவதும், தொழிலாளர்களின் வெற்றிக்கும் அவர்களது இயக்கத்துக்கான தேசிய முக்கியத்துவத்துக்கும் உத்திரவாதமளிப் பதும் இந்த உயர்வுக்கான கோரிக்கையின் பரந்து விரிந்த பண் பியல்பே என்பதை, வேலை நிறுத்தத்தின் அனைத்தையும் உள்ள டக்கிய (Comprehensive) இந்தப் பண்பியல்பே என்பதைத் தொழி லாளர்கள் அறிகிறார்கள். அதனால்தான் திரு. செவர்யானின் ரஷ்கியே வேதபொஸ்தி மற்றும் ரெக் போதிக்கும் தாராள வாத உருத்திரியை எதிர்த்து வைராக்கியமுடன் போரிட வேண்டி யதும், இந்த வகையான சிறுதிற அறிவுரையாளர்களுக்கு எதிராக ஒவ்வொரு வழியிலும் எச்சரிக்க வேண்டியதும் இன்றியமையாத தாகிறது.

கலைப்புவாதி திரு. வி. யேழோவ், கலைப்புவாத நெவ்ஸ்கி கோலோஸின் முதல் இதழில் இந்தப் பிரச்சினையை வேறு விதமான கோணத்திலிருந்து அணுகிய போதிலும், இதுபோன்ற, தூய்மை யான தாராளவாத உருத்திரிபைப் பரிந்துரை செய்கிறார்; மேநாள் அபராதங்களால் ஆத்திர மூட்டப்பட்ட வேலை நிறுத்தங்களை அவர் குறிப்பாகப் பிடித்துத் தொங்குகிறார். தொழிலாளர்கள் போதுமான அளவில் அமைப்பாக்கப்படவில்லை என்று அவர் சரியாகச் சுட்டிக் காட்டுகிறார். இந்தக் கட்டுரையாளர் தன்னுடைய சரியான விவரங்களிலிருந்து எடுக்கும் முடிவுகள் மிகவும் தவறானது; மேலும் தொழிலாளர்களுக்குப் பெரும் தீங்கு அளிக்கக் கூடியது. ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதையும், வேறொன்றில், அவர்கள் பொருளாதாரக் கோரிக்கைகள் போன்றவற்றைச் சேர்த்துக் கொண் டுள்ளதையும் கண்டு, இதிலிருந்து அமைப்பாக்கப்படவில்லை என்று சொல்கிறார். இருந்த போதிலும், உண்மையிலேயே, இந்தப் பல வகையான வேலை நிறுத்த வடிவங்கள், தம்முள் அமைப்பு இன்றி இருப்பதை எப்பொழுதும் வெளிக்காட்டவில்லை. அமைப்பு என்பது, அவசியமாக, சீரான தன்மையைக் குறிக்கின்றதே அன்றி, கற்பனை

செய்வது நகைப்புக்குரியதாகும். திரு. யேழோவ் பார்த்த அமைப்புக் குறைபாட்டை அவர் பார்க்கிற இடத்தில் காணவே முடியாது. ஆனால், அவருடைய முடிவானது மேலும் தவறானதாகவே உள்ளது: ''இதன் காரணமாக (பல்வேறு வகையான வேலை நிறுத்தங்கள் பொருளாதார மற்றும் அரசியல் வேலை நிறுத்தங்கள் வெவ்வேறு வகையில் இணைந்த வடிவங்கள், இவற்றின் காரணமாக) எதிர்ப்பில் உள்ள கொள்கையானது (சாதாரணமாக, இந்த வேலை நிறுத்தங்களுக்கு அறைகூவல் விடப்பட்டது சில கோபெக்குகளுக்காக இல்லை) குறிப்பிடத்தக்க பல வேலை நிறுத்தங்களில் மங்கித் தெளிவின்றி உள்ளது; இது பொருளாதாரக் கோரிக்கைகளால் சிக்கலாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது...''

இது உண்மையிலேயே மானக்கேடானது. முற்றும்தவறானது; முற்றிலும் தாராளவாத விவாதம் ஆகும். ''சில கோபெக்குகளுக்கான'' கோரிக்கையானது, எதிர்ப்பில் உள்ளார்ந்திருக்கும் கொள்கையைத் ''தெளிவற்றதாக்கி விடும்'' தன்மை வாய்ந்தது எனச் சிந்திப்பது, ''கேடட்டுகளின்' நிலைக்குத் தாழ்ந்து போவதாகும். இதற்கு மாறாக, திரு. யெழோவ் அவர்களே, ''சில கோபெக்குகளுக்கான'' போராட்டமானது, முழுதும் அங்கீகரிக்கத் தகுதியானது; எள்ளி நகையாடுவதற்கு அன்று. மேலும், இதற்கு மாறாக, திரு. யேழோவ் அவர்களே, இந்தக் கோரிக்கையானது, ''எதிர்ப்பில் அடங்கியுள்ள கொள்கையை மறைத்து விடுவதற்கு'' மாறாக அதை வலியுறுத்துகிறது; முதலாவதாக, உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பற்றிய கேள்வியும் கூட கொள்கையினைப் பற்றிய கேள்வியே ஆகும். மேலும், இது மிகவும் முக்கியமான ஒன்று. இரண்டாவதாக, யார் எதிர்த்தாலும், ஒன்றை எதிர்த்தாலும், இரண்டை எதிர்த்தாலும், மூன்றை... எத்தனையை எதிர்த்தாலும் ஒடுக்கு முறையின் வெளிப்பாடுகள் அவனது எதிர்ப்பை நலிவடையச் செய்யாது; அதற்கு வலிவூட்டவே செய்யும்.

திரு. யேழோவின் இந்த விஷயம் பற்றிய மானக்கேடான தாராளவாத உருத்திரிபை ஒவ்வொரு தொழிலாளியும் கடுங் கோபத்துடன் நிராகரிப்பார்.

திரு. யேழோவைப் பொறுத்த வரையில் இது எந்த வகையிலும் கைதவறி எழுதப்பட்டது ஆகாது. இவர் இதைவிட மானக் கேடானவற்றைச் சொல்லிக் கொண்டு போகிறார்:

''ஒரு சாதாரண வேலை நிறுத்தத்தை, கொள்கை சார்ந்த கோரிக்கையை வைத்துச் சிக்கலாக்குவது எந்த அளவுக்கு அறிவார்ந்த

தில்லையோ, அது போலவே அவர்களுடைய எதிர்ப்பைப் பொருளியல் கோரிக்கைகளால் சிக்கலாக்குவதும் அறிவார்ந்ததில்லை என்று தொழிலாளர்களுக்கு அவர்களுடைய சொந்தப் பட்டறிவு கூறியிருக்கும்.''

இது உண்மையில்லை; ஆயிரம் தடவை உண்மையில்லை! இத்தகைய குப்பையை அச்சிட்டதன் மூலம் நெவ்ஸ்கி கோலோஸ் தன்னைத் தானே அவமதித்துக் கொண்டுள்ளது. அறிவார்ந்தது இல்லை என்று திரு. யேழோவ் கருதுவது மிகச் சரியாக அறிவார்ந்ததே ஆகும். அண்மை ஆண்டுகளில் ஒவ்வொரு தொழிலாளியின் சொந்த அனுபவமும், மிக ஏராளமான ருஷ்யத் தொழிலாளர்களின் அனுபவமும் திரு. யேழோவ் போதிப்பதற்கு நேர்மாறானதற்குச் சாட்சியம் கூறுகின்றன.

மிக மிகச் ''சாதாரணமான'' வேலை நிறுத்தத்தைக் கூட ''கொள்கைகள் சார்ந்த கோரிக்கைகளை'' வைப்பதன் மூலம் ''சிக்கலாக்குவதற்குத்'' தாராளவாதிகளால் தான் மறுப்புத் தெரிவிக்க முடியும். இது முதலாவது கட்டுரையாகும். இரண்டாவதாக, இப்போதைய இயக்கத்தைச் ''சாதாரண" வேலைநிறுத்த அளவு கோலால் அளப்பதன் மூலம் நமது கலைப்புவாதி வருந்தத்தக்க அளவில் தவறு செய்துள்ளார்.

மேலும், திரு. யேழோவ், பொருளாதார வேலை நிறுத்தங்களுடன் அரசியல்வேலை நிறுத்தங்களைச் சேர்க்கும் பிரச்சினையைப் பொருளாதார அல்லது அரசியல் வேலை நிறுத்தங்களில் ஒன்றுக்கான தயாரிப்பு வேலைகளுடன் சேர்த்துக் குழப்புவதன் மூலம் தன்னுடைய திருட்டுச் சரக்கை மூடி மறைக்க முயற்சி செய்து, தன்னுடைய முழு நேரத்தையும் வீணடிக்கிறார். உண்மையிலேயே இதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுவதும், தயாராக இருப்பதும், இதை இயன்ற வகையில் முழுமையாக இணைந்து திட்டமிட்டும் ஒற்றுமையாக, அறிவு பூர்வமாக, உறுதியாகச் செய்தல் விரும்பத்தக்கதாகும். இது வாதத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால் திரு. யேழோவ் கூறுவதற்கு மாறாக, இந்த இருவகை வேலை நிறுத்தங்களைச் சேர்ப்பதற்குச் சரிநுட்பமாகத் திட்டமிட்டுத் தயாரிப்புகளை செய்வது அவசியமாகும்.

''பொருளாதார வேலை நிறுத்தக் காலப்பகுதி நமக்கு முன்னால் இருக்கிறது" என்று திரு. யேழோவ் எழுதுகிறார். மேலும், அவர் ''பொருளாதார வேலை நிறுத்தங்களைத் தொழிலாளர்களின் அரசியல் நடவடிக்கைகளுடன் பின்னிப்

பிணைய அனுமதிப்பது திருத்த முடியாத தவறாக இருக்கும்; இந்தச் சேர்க்கையானது பொருளாதாரம், அரசியல் என்ற இரு வகையான தொழிலாளர் வேலை நிறுத்தங்களுக்குத் தீங்கான விளைவுகளை ஏற்படுத்தும்'' என்கிறார்.

ஒருவர் நீண்ட தொலைவுக்குச் செல்ல முடியாது. இந்தச் சொற்கள் கலைப்புவாதிகள் சாதாரண தாராளவாதிகள் நிலைக்குத் தாழ்ந்து விட்டதை மிகவும் தெளிவான, சாத்தியமான வழியில் காட்டுகின்றன. ஒவ்வொரு வாக்கியமும் ஒரு தவறை உள்ளடக்கி யுள்ளது. நாம், உண்மையை அடைய ஒவ்வொரு வாக்கியத்தையும் அதன் நேர் எதிரிடையாக மாற்ற வேண்டும்.

பொருளாதார வேலை நிறுத்தக் காலப்பகுதி நம் முன்னால் இருக்கிறது என்பது உண்மையல்ல. உண்மை நேர்மாறாகவே உள்ளது. நம் முன்னால் உள்ள காலப்பகுதி சாதாரண பொருளாதார வேலை நிறுத்தங்களை விடச் சற்று அதிகமானதாகும். நாம் அரசியல் வேலை நிறுத்த காலகட்டத்தை எதிர்நோக்கியுள்ளோம். திரு.யேழோவ் அவர்களே! உண்மையில் தங்களின் தாராள உருத்திரிபுகளை விட வலிமை வாய்ந்தவை வர்த்தக, தொழில் அமைச்சகம் சேகரித்துள்ள வேலைநிறுத்தம் பற்றிய அரசாங்கப் புள்ளி விவரங்கள் கூட முழுவதுமாக உங்களை மறுதலிப்பதை நீங்கள் காணலாம்.

''பின்னிப் பிணைவது'' தவறானதாகும் என்பது உண்மை அன்று. இது சரியானதேயாகும். தொழிலாளர்கள், இந்த மாபெரும் ஒருமையை, மாபெரும் முக்கியத்துவத்தை, மாபெரும் அவசியத்தை, சரி நுட்பமான இத்தகைய ''பின்னிப் பிணைதலின்'' மாபெரும் முக்கியத்துவத்தை உணரத் தவறினால், அது ''திருத்த முடியாத'' தவறாக இருக்கும். அதிர்ஷ்டவசமாக, இதைத் திருத்தமாக அவர்கள் உணருகிறார்கள். மேலும் அவர்கள் தாராளவாத தொழிலாளர் அரசியல்வாதிகளின் போதனையை வெறுப்புடன் துடைத்து ஒதுக்குகிறார்கள்.

இறுதியாக, இருவித போராட்ட வடிவங்களுக்கும் இந்தப் பின்னிப் பிணைதலானது ''ஊறு விளைவிக்கும்'' என்பது உண்மையல்ல: ஊறு விளைவிக்காது என்பதே உண்மையாகும். இது இரண்டிற்கும் நன்மை செய்கிறது. இது, இரண்டையும் வலுப்படுத்துகிறது.

திரு. யேழோவ், தான் கண்டுபிடித்திருக்கிறதாகத் தோன்றும் சில மூர்க்கர்களுக்கு விரிவுரையாற்றுகிறார். இதைக் கவனியுங்கள்.

''தொழிலாளர்களின் மனோபாவங்களுக்கு, அமைப்பு வடிவம் கொடுப்பது அவசியமானதாகும்...'' இது வேத வாக்கான உண்மையாகும். ''தொழிற்சங்கங்களுக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு, அவற்றுக்குப் பிரச்சாரம் செய்வதை அதிகரிப்பது இன்றியமையாததாகும்...''

உண்மையிலேயே சரியானதுதான்—ஆனால், திரு யேழோவ் அவர்களே! ''அமைப்பு வடிவத்தை'' தொழிற்சங்கங்களுக்கு மட்டுமே குறைப்பது என்பதை அனுமதிக்க முடியாது. திரு. கலைப்பு வாதியே இதை நினைவில் கொள்ளுங்கள்.

''மக்கள் திரள் இயக்கத்தால் அடித்துச் செல்லப்படும் பல மூர்க்கர்கள் தொழிலாளர் மத்தியில் இருந்து தொழிற் சங்கங்கள் பயனற்றவை, தேவையற்றவை என்று பொதுக் கூட்டங் களில் பிதற்றித் திரியும் இக் காலத்தில் இது மேன்மேலும் அவசிய மாகிறது.''

இது, தொழிலாளர்கள் மீதான தாராளவாத சிந்தனை யாகும். தொழிலாளர்கள் எப்போதும் கலைப்புவாதிகளுக்கு ஒரு முள் போன்று இருந்திருக்கிறார்கள்; இனியும் இருப்பார்கள்; அவர்கள் வெளிவந்து கொண்டிருப்பது ''தொழிற்சங்கங்களுக்கு எதிராக'' அன்று. இல்லை; அமைப்பு வடிவத்தைத் ''தொழிற் சங்கமாக''க் குறைக்கும் முயற்சிக்கு எதிராகத்தான் அவர்கள் வெளிவந்து கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிக்கு, முன் சொன்ன திரு. யேழோவின் வாசகங்கள் சாட்சியாகும்.

தொழிலாளர்கள், ''சங்கங்களுக்கு எதிராக'' வெளிவந்து கொண்டு இருக்க வில்லை; அவாகள் தொடுத்து நடத்திக்கொண்டி ருக்கிற போராட்டத்திலுள்ள தாராளவாத உருத்திரிபை எதிர்த் துத்தான், திரு. யேழோவின் கட்டுரை முழுதும் பரவியிருக்கும் உருத்திரிபை எதிர்த்துத்தான் வெளிவந்துகொண்டிருக்கிறார்கள்.

ருஷ்யத் தொழிலாளர்கள், அனைத்து மக்களுக்குமான, தங்களது இயக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும் அளவிற்கு அரசியல் முதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அவர்கள் தாராளவாத தொழிலாளர் கொள்கை எவ்வாறு மிகவும் தவறாக வும் அற்பமாகவும் உள்ளது என்பதைக் காணும் அளவுக்கும் போதிம் முதிர்ச்சியுடையவர்களாக உள்ளனர். அவர்கள் அதை எப்போதுய வெறுப்புடன் ஒதுக்கித் தள்ளுவார்கள்.

மே, 31, 1912ல் நேவ்ஸ்கயா ஷ்வேழ்தா (Nevskya zezda எண் 12இல் வெளியிடப்பட்டது.

மார்க்சியம் மற்றும் கலைப்புவாதக் கருத்தரங்க நூலை, (பாகம், 2. செயின்ட் பீட்டர்ஸ் பர்க், 1914) சரி பார்த்து வந்த செய்தித்தாள் நூல்படி வெளியிடபட்டது.

# 30

# பாட்டாளி வர்க்கக் கட்சியின் இராணுவப் பாதை

''செம்படையைக் கட்டியமைப்பதற்கும், செம்படையின் போர்த் தந்திரம் மற்றும் செயல் தந்திரத்துக்குமான அடிப்படைக் கோட்பாடுகள் முறையாகவும் விளக்கமாகவும் இக்காலப்பகுதியில் தோழர் மாவோ சே துங்கால் வகுத்தளிக்கப்பட்டன. இந்த அடிப்படைக் கோட்பாடுகளும் மற்ற இராணுவக்கொள்கைகளும் சேர்ந்து தோழர் மாவோ பிரதிநிதித்துவப் படுத்திய சீனப் பொதுவுடைமைக் கட்சியின் இராணுவப் பாதையாக அமைந்தன."

(சீனாவின் நவீன வரலாறு, பக். 109)

## போருக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவு

''போர் என்பது அரசியலின் நீடிப்பே ஆகும்" இந்தப் பொருளில் போர் அரசியலாகவும், போர் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகிறது... ஒரே சொல்லில் கூறினால் போர் தனியொரு கணத்திற்குத் தானும் அரசியலிலிருந்து பிரிக்கப்பட முடியாது.

ஆனால் போருக்கு அதற்குரிய சிறப்புப் பண்புகள் உண்டு; இந்த வகையில் போரைப் பொதுவான அரசியலுடன் சமப்படுத்த முடியாது. ''சிறப்பு நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே போர் என்பது'' * அரசியல் அதன் வழக்கமான வழிகளில் மேற்

* லெனின், ''சோசலிசமும் போரும், அதிகாரம் I, ''இரண்டாம் அகிலத்தின் தகர்வு'" பகுதி 3 ஆகியவற்றைப் பார்க்கவும்.

கொண்டு முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சி யடைந்ததும் அதன் பாதையிலிலுள்ள தடைகளை நீக்குவதற்காகப் போர் வெடிக்கிறது... தடைகள் அகற்றப்பட்டு அரசியல் குறிக்கோள் நிறைவேறியதும் போரும் முடிவடைகிறது. ஆனால் அத்தடைகள் முற்றாக நீக்கப்படாவிட்டால் அக்குறிக்கோள் முழுமையாக நிறை வேற்றப்படும் வரையில் போரும் தொடர்ந்து நடைபெறும்... ஏனெனில் ஏதோ ஒரு காரணத்தால் சமரசம் ஏற்பட்டாலும் கூடப் பரந்த மக்கள் திரள்கள் அடிபணிய மாட்டார்கள் என்பது உறுதி; மாறாகப் போரை அதன் அரசியல் குறிக்கோள் அடையப் பெறும்வரை தொடர்ந்து நடத்துவார்களாகையால் போர் மறுபடி வெடிக்கும். எனவே அரசியலை இரத்தம் சிந்தாத போர் என்றும், போரை இரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம்.

போரின் குறிப்பான பண்பியல்புகளிலிருந்து குறிப்பான அமைப்புகளின் தொகுதியொன்றும், குறிப்பான முறைகளின் வரிசை யொன்றும், குறிப்பான வகை நிகழ் முறை (போக்கு Process) ஒன்றும் தோன்றுகின்றன. இந்த அமைப்புகள் ஆயுதப்படைகளும் அவற்றோடு தொடர்புடைய அனைத்துமாகும். இம்முறைகள் போரை நடத்துவதற்கான போர்த் தந்திரமும், செயல் தந்திரங் களும் ஆகும். இந்தப் போக்கு எதிரெதிரான ஆயுதப்படைகள் தத்தமக்குச் சாதகமானவையும், எதிரிக்குப் பாதகமானவையுமான போர்த் தந்திரத்தையும் செயல் தந்திரங்களையும் பயன்படுத்தி ஒன்றை ஒன்று தாக்குவது அல்லது ஒன்று மற்றதற்கெதிராகத் தற் காத்துக்கொள்வதான சமூக நடவடிக்கையின் குறிப்பான வடிவ மாகும். எனவே போர் அனுபவம் குறிப்பான ஒருவகையான அனுபவ மாகும். போரில் பங்குபெற்றும் அனைவரும் தங்கள் வழக்கமான பழக்கங்களைக் கைவிட்டுத் தம்மைப் போருக்குப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். அதன் பின்பே அவர்களால் வெற்றியீட்ட இயலும்.

(மாவோ தேர்வு நூல்கள் தொகுதி II பக்கம் 252,253,254.

(தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப்படைப்புகள் பக்: 469-70)

வர்க்கங்களுக்கும், தேசங்களுக்கும், அரசுகளுக்கும் அல்லது அரசியல் குழுக்களுக்கும் இடையே முரண்பாடுகள் வளர்ந்து ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடையும்போது அவற்றைத்தீர்த்துக்கொள் வதற்குரிய மிக மிக உயர்ந்த போராட்ட வடிவமே போர் ஆகும். தனிச்சொத்துடைமையும், வர்க்கங்களும் தோன்றியதிலிருந்தே போர் இருந்து வருகிறது. போரின் மெய்யான சூழ்நிலைகளையும், அதன் இயல்பையும், அதற்கும் மற்றவைகளுக்கும் இடையிலுள்ள உறவு களையும் நீங்கள் புரிந்துகொள்ளாத வரையில், உங்களால் போரின் விதிகளையோ, அல்லது போரை எப்படி இயக்குவது என்பதையோ

புரிந்து கொள்ள முடியாது; அல்லது போரில் வெற்றியடைய முடியாது.

(மாவோ தேர்வு நூல்கள், தொகுதி I பக் 180)

## போரின் விதிகள்

இவ்வாறாக, வெவ்வேறு போர்களை வழிநடத்துவதற்கான வெவ்வேறான விதிகள் அந்தப் போர்களின் வெவ்வேறான சூழ்நிலைகளால்—அவற்றின் காலம், இடம், இயல்பு ஆகியவற்றிலான வேறுபாடுகளால்—நிர்ணயிக்கப்படுகின்றன.

**கால அம்சத்தைப்** (Time factor) பொறுத்தவரையில் போர், அதை வழி நடத்தும் விதிகள் இரண்டுமே வளர்ச்சியடைகின்றன; ஒவ்வொரு வரலாற்றுக் கட்டமும் அதன் சிறப்புப் பண்பியல்புகளைக் கொண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் போரின் விதிகள் அவற்றின் சிறப்புப் பண்பியல்புகளைக் கொண்டவையாக இருக்கின்றன. அவை மற்றொரு கட்டத்தில் எந்திரக் கதியிற் பயன்படுத்தப்பட முடியாது. **போரின் இயல்பைப்** பொறுத்தவரையில் புரட்சிப் போர், எதிர்ப்புரட்சிப் போர் இரண்டும் அவற்றின் சிறப்புப் பண்பியல்புகளைக் கொண்டவையாகையால், அவற்றை ஆட்சி செய்யும் விதிகளும் அவற்றின் சொந்தப் பண்பியல்புகளைக் கொண்டிருக்கின்றன; ஒன்றிற்குப் பொருந்தும் விதிகள் எந்திர கதியில் (Mechanically) மற்றதற்குக் கொண்டு பொருத்தப்பட முடியாது. இட அம்சத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாடும் அல்லது தேசமும், குறிப்பாகப் பெரியதான ஒரு நாடு அல்லது தேசம் அதன் சொநதப் பண்பியல்புகளைக் கொண்டுள்ளதாகையால் ஒவ்வொரு நாட்டுக்கும் அல்லது தேசத்திற்குமான போரின் விதிகளும் அவற்றின் சொந்த பண்பியல்புகளைக் கொண்டுள்ளன; இங்கு ஒன்றுக்குப் பொருந்தும் விதிகள் எந்திர கதியில் மற்றதற்குக் கொண்டு பொருத்தப்பட முடியாது. வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களில் நிகழ்பவையும், இயல்பில் வேறுபடுபவையும், வெவ்வேறு இடங்களிலும், வெவ்வேறு தேசங்களிலும் நடத்தப்படுபவையுமான போர்களை வழி நடத்துவதற்கான விதிகளை ஆராய்வதில் நாம் ஒவ்வொன்றினதும் பண்பியல்புகளுக்கும், வளர்ச்சிக்கும் எமது கவனத்தைச் செலுத்தவும், போர்ப் பிரச்சினையைப் பொறுத்து எந்திரகதியிலான அணுகுமுறையை மேற்கொள்வதை எதிர்க்கவும் வேண்டும்.

(மாவோ தேர்வு நூல்கள் தொகுதி I பக் 181, 182.)

## இராணுவ போர்த்தந்திரமும் செயல்தந்திரமும்

ஒரு போர் நடைபெறும்போது, மொத்தத்தில் ஒரு போர் நிலைமை இருக்கிறது. போர் நிலைமை மொத்தத்தில் உலகம் முழுவதையுமோ, ஒரு நாடு முழுவதையுமோ, தனிப்பட்ட ஒரு கொரில்லா மண்டலத்தையோ, அல்லது தனிப்பட்ட ஒரு பெரிய நடவடிக்கை முனையையோ (Operational front) தழுவி இருக்கலாம். ஒரு போர் நிலைமை அதன் பல்வேறு அம்சங்கள் மற்றும் கட்டங்களின் விளக்கமான தன்மையை அடையும்போது அது ஒரு முழுமையான போர்நிலைமை ஆகிறது. போர்த்தந்திரத்தின் அறிவியலின் கடமை ஒரு போரை இயக்குவதற்குப் போர் நிலைமையை முழுமையாக ஆளுகின்ற விதிகளைக் கற்பதாக உள்ளது. அணி திரட்டும் இயக்க அறிவியலின் (Science of Campaign) கடமையும், செயல்தந்திரமும் போரை இயக்குவதற்கு ஒரு பகுதி நிலைமையை (Partial Situation) ஆளுகின்ற விதிகளைக் கற்பதாகும்.

(மா. தே. நூ. பகுதி I பக் 183.)

போர்த்தந்திர அறிவியல், அணிதிரட்டும் இயக்க அறிவியல், மற்றும் செயல்தந்திர அறிவியல் எல்லாம் சீன இராணுவ அறிவியலின் கூறுகளாகும். போர்த்தந்திர அறிவியல் போர் நிலைமை மொத்தத்தையும் ஆளுகின்ற விதிகளுடன் செயல் தொடர்பு கொண்டுள்ளது. அணிதிரட்டும் இயக்கங்கள் பற்றிய அறிவியல் இயக்கங்களை ஆள்கிற விதிகளோடு செயல் தொடர்பு கொண்டுள்ளது; அணிதிரட்டும் இயக்கங்களை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. செயல்தந்திர அறிவியல் போர்க்களங்களை ஆள்கிற விதிகளுடன் செயல் தொடர்பு கொண்டுள்ளது. போர்க்களங்களை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

(மா. தே. நூ. பகுதி I பக் 249.)

### 2. சீனப் புரட்சிப் போரின் பண்பியல்புகள் எவை?

அப்படி எனின், சீனப் புரட்சிப் போரின் பண்பியல்புகள் எவை?

முதன்மையானவை நான்கு உள்ளன என்று நான் நினைக்கிறேன்.

முதலாவது, சீனா அரசியல் ரீதியிலும், பொருளியில் ரீதியிலும் ஏற்றத்தாழ்வாக வளர்ச்சி அடைந்துள்ளதும், 1924 முதல் 1927 வரையான புரட்சியின் ஊடாகச் சென்றுள்ளதுமான ஓர் அகன்ற அரைக் காலனிய நாடு என்பதாகும்.

சீனாவின் புரட்சிப்போர் வளர்ச்சியடைந்து வெற்றியீட்ட முடியும் என்று இந்தப் பண்பியல்பு காட்டுகிறது. 1927 ஆம் ஆண்டுக் குளிர் காலத்திலும், 1928 ஆம் ஆண்டு இளவேனில் காலத்திலும், சீனாவில் கொரில்லாப் போர் தொடங்கப் பட்ட சற்றைக்குப்பின், ஹூனான்-கியாங்சி எல்லைப்பகுதியில் உள்ள சிங்காங் மலைகளில் சில தோழர்கள், ''நாம் எவ்வளவு காலத்திற்குச் செங்கொடியை உயர்த்தி வைத்திருக்க முடியும்?" என்ற கேள்வியை எழுப்பிய போதே நாம் இதை ஏற்கனவே (ஹூனான்-கியாங்சி எல்லைப் பகுதியின் முதலாவது கட்சி மாநாட்டில்) சுட்டிக் காட்டி விட்டோம். ஏனெனில், இக்கேள்வி மிக அடிப்படையான ஒன்றாக இருந்தது. சீனாவின் புரட்சிகரத் தளப்பகுதிகளும், சீனச் செம்படையும் பிழைத்திருக்கவும், வளர்ச்சி யடையவும் முடியுமா என்ற இந்தக் கேள்விக்கு விடையளிக்காமல் நாம் தனியொரு அடிகூட முன்னேறியிருக்க முடியாது. 1928இல் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஆறாவது தேசிய மாநாடு இக் கேள்விக்கு மீண்டும் விடையளித்தது. அப்போதிருந்து சீனாவின் புரட்சி இயக்கம் சரியான ஒரு தத்துவ ரீதியான அடிப்படையை உடையதாக இருந்து வந்துள்ளது.

இனிநாம் இந்தப்பண்பியல்பைப் பகுத்தாராய்வோம்: சீனாவின் அரசியல், பொருளியல் வளர்ச்சி ஏற்றத்தாழ்வானது வலிமையற்ற ஒரு முதலாளியப் பொருளியல் மேலாதிக்கம் பெற்றுள்ள ஓர் அரை நிலவுடைமைப் பொருளியலுடன் ஒருங்கு நிலவுகிறது. சில நவீன, தொழில், வர்த்தக நகரங்கள் தேக்க நிலையில் உள்ள அகன்ற நாட்டுப்புறத்துடன் ஒருங்கிருக்கின்றனர்; மைய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும் பெரிய போர்ப்பிரபுக்கள் மாகாணங்களைக் கட்டுப் படுத்தும் சிறிய போர்ப்பிரபுக்களோடு ஒருங்கே இருக்கின்றனர்; இரு வகையான பிற்போக்குப் படைகள், அதாவது சியாங்கேஷேக்கின் கீழ் உள்ள ''மையப்படை'' என்றழைக்கப்படுகிற படையும், மாகாணங்களில் போர் பிரபுக்களின் கீழுள்ள ''பலரகத் துருப்புகள்'' என்று அழைக்கப்படுபவையும் அருகருகே உள்ளன; சில புகை வண்டிப்பாதைகளும், நீராவிக்கப்பல் வழிகளும், மோட்டார் வண்டி வீதிகளும் பெருந்தொகையான தள்ளு வண்டிப் பாதைகளோடும், நடைபாதைகளோடும், கால் நடையாகக் கூடக் கடப்பதற்குக் கஷ்டமான பாதைகளும் அருகருகே இருக்கின்றன.

சீனா ஓர் அரைக்குடியேற்ற நாடு. ஏகாதிபத்திய வல்லரசுகள் நடுவில் உள்ள ஒற்றுமையின்மை சீனாவில் ஆளும் குழுக்கள் நடுவில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்துகிறது. பலநாடுகளால் கட்டுப்பாடு செய்யப்படும் ஓர் அரைக் குடியேற்ற நாட்டிற்கும், தனியொரு நாட்டால் கட்டுப்பாடு செய்யப்படும் ஒரு குடியேற்றத்திற்கும் இடையில் ஒரு வேறுபாடு உள்ளது.

சீனா ஓர் அகன்ற "நாடு-கிழக்கில் இருளாயிருக்க மேற்கில் இன்னும் பகலொளி இருக்கிறது; தெற்கில் எல்லாம் இருட்டியிருக்க வடக்கில் இன்னும் ஒளியிருக்கிறது." எனவே, நகர்ந்து செயல்பட இடம் போதாதென்று கவலைப்பட வேண்டியதில்லை.

சீனா ஒரு மாபெரும் புரட்சியின் ஊடாகச் சென்றுள்ளது-இது செம்படை முளைத்தெழுவதற்கான வித்துகளைத் தந்தும், செம்படையின் தலைவரை, அதாவது சீனப் பொதுவுடைமைக் கட்சியைத் தந்தும், ஒரு புரட்சியிற் பங்குபற்றிய மக்கள் திரளைத் தந்தும் உள்ளது.

ஆகவே நாம் சீனாவின் புரட்சிப் போரின் முதலாவது பண்பியல்பு, அது அரசியல், பொருளியல் ரீதிகளில் ஏற்றத்தாழ்வாக வளர்ச்சியடைந்துள்ளதும், ஒரு புரட்சியினூடாகச் சென்றுள்ளதுமான ஓர் அகன்ற அரைக் குடியேற்ற நாட்டில் நடத்தப்படுகிறது என்பதாகும் எனக் கூறுகிறோம். இந்தப்பண்பியல்பு எமது அரசியல் ரீதியான போர்த்தந்திரத்தையும் செயல் தந்திரங்களையும் போலவே,எமது இராணுவ ரீதியான போர்த் தந்திரத்தையும் செயல் தந்திரங்களையும் அடிப்படையாக நிர்ணயிக்கிறது.

இரண்டாவது பண்பியல்பு எமது எதிரி பெரியவனும் திறன் மிக்கவனும் என்பது.

செம்படையின் எதிரியான கோமின்டாங்கின் நிலைமைகள் எப்படி இருக்கின்றன? அது அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டும், ஏறத்தாழத் தன் அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொண்டும் உள்ள ஒரு கட்சி. அது உலகின் (Principal) தலையாய எதிர்ப் புரட்சிகர அரசுகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. அது தன் படையைப் புதுவடிவில் அமைத்துக் கொண்டுள்ளது; அப்படை அவ்வாறாகச் சீன வரலாற்றிலிருந்த மற்றெந்தப் படையிலிருந்தும் வேறுபட்டதாயும், மொத்தத்தில் உலகில் நவீன அரசுகளின் படைகளைப் போன்றதாயும் ஆகியுள்ளது; இந்தப் படை செம்படையை விட மிகச் சிறப்பான ஏராளமான ஆயுதங்களும், ஏனைய

இராணுவத் தளவாடங்களும் பெறுவதும், சீன வரலாற்றில் எந்தப் படையையும் பார்க்கப் போனால், உலகில் மற்றெந்த நாட்டினதும் நிலையான படையை விடப் பெரியதும் ஆகும். கோமின்டாங் படைக்கும் செம்படைக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு உள்ளது. கோமின்டாங் சீனாவின் அரசியலிலும், பொருளியலிலும், போக்குவரத்து வழிகளிலும், பண்பாட்டிலும் கேந்திர நிலைகளை அல்லது உயிர் நாடியானவற்றைக் கட்டுப்படுத்துகிறது; அதன் அரசியல் அதிகாரம் நாடளாவியது. (தேச விசாலமானது)

இவ்வாறாகச் சீனச் செம்படை பெரிய, திறன் மிக்க ஒரு எதிரியை எதிர்ப்பட்டுள்ளது. இது சீனப் புரட்சிப் போரின் இரண்டாவது பண்பியல்பாகும். இது உறுதியாகச் செம்படையின் போர் நடவடிக்கைகளைப் பொதுவான போர்கள், சோவியத் ஒன்றியத்தின் உள்நாட்டுப் போர், வடபடையெடுப்புப் போர் ஆகியவற்றிலான போர் நடவடிக்கைகளிலிருந்து பலவகைகளில் வேறுபட்டவையாக்குகின்றது.

மூன்றாவது பண்பியல்பு செம்படை சிறியதும் வலிமை குன்றியதும் என்பதாகும்.

கொரில்லா அலகுகளாகத் தொடங்கிய சீனச் செம்படை முதலாவது பெரும்புரட்சியின் தோல்விக்குப் பின்னர் பிறந்தது. இது சீனாவிற் பிற்போக்கும், உலகின் பிற்போக்கு முதலாளிய நாடுகளில் அரசியல்; பொருளியல் ரீதியில் ஒப்பு நோக்கான உறுதி நிலையில் இருந்ததுமான ஒரு கால கட்டத்தில் நிகழ்ந்தது.

எமது அரசியலதிகாரம் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறியும் தனிப்பட்டும் உள்ள மலைப்பகுதிகளிலும் அல்லது ஒதுக்குப்புறப் பகுதிகளிலும் இருக்கிறது. அதற்கு வெளி உதவி எதுவுமே கிடைப்பதில்லை. கோமின்டாங் பகுதிகளில் உள்ளவற்றோடு ஒப்பிடுகையில புரட்சிகரத் தளப் பகுதிகளில் பொருளியல், பண்பாட்டு நிலைமைகள் பின்னடைந்தவையாக உள்ளன. புரட்சித் தளப் பகுதிகள் கிராமங்களையும் சிறு நகரங்களையும் மட்டுமே தழுவியவை. இந்தப் பகுதிகள் தொடக்கத்தில் மிகமிகச் சிறியதாக இருந்தன. பிற்பாடும் அவ்வளவு அதிகம் பெரிதாக வளர்ந்து விடவில்லை. மேலும், அவை மாற்றமுறும் இயல்பின. நிலையானவை அல்ல; செம்படைக்கு உண்மையில் திடப்படுத்தப்பட்ட தளங்கள் எதுவும் இல்லை.

நீண்டபோர் நடவடிக்கைகளையும், விரைவில் வெற்றி தோல்விகாணும் போர்த்தந்திரத்தையும் எதிர்ப்பதும், நீண்ட போர்த்தந்திரத்தையும் விரைவில் வெற்றி தோல்வி காணும் போர் நடவடிக்கைகளையும் அறிந்தேற்பதும்.

நிலையான போர் முனைகளையும், ஓரிட (Positional) போர் முறையையும் எதிர்ப்பதும், மாற்றமடையும் போர் முனைகளையும், நடமாட்ட போர் முறையையும் அறிந்தேற்பதும்.

எதிரியை வெறுமனே புறங்காணப் போரிடுவதை எதிர்ப்பதும், எதிரியை அழித்தொழிக்கப் போரிடுவதை அறிந்தேற்பதும்.

இரண்டு ''முஷ்டி (fist)''களால் இரண்டு திசைகளில் ஒரே நேரத்தில் தாக்கும் போர்த்தந்திரத்தை எதிர்ப்பதும், ஒருசமயத்தில் ஒரு ''முஷ்டியால்'' ஒரு திசையில் தாக்கும் போர்த்தந்திரத்தை அறிந்தேற்பதும்.

பின் பகுதியில் பெரிய சேவை நிறுவனங்களை வைத்திருக்கும் கோட்பாட்டை* எதிர்ப்பதும். சிறு சேவை நிறுவனங்களை வைத் திருக்கும் கோட்பாட்டை அறிந்தேற்பதும்.

முற்றிலும் மையப்படுத்திய படைத் தலைமையை எதிர்ப்ப தும், ஒப்பு நோக்காக மையப்படுத்திய படைத்தலைமையை அறிந் தேற்பதும்.

சுத்த இராணுவக் கண்ணோட்டத்தையும் அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரர் சிந்தாந்தத்தையும் எதிர்ப்பதும் **செம்படை சீனப் புரட்சியின் பிரசாரகரும் அமைப்பாளரும் ஆகும் என்பதை அறிந் தேற்பதும்.

கொள்ளைக்காரப் போக்கு***களை எதிர்ப்பதும், கறாரான அரசியல் கட்டுப்பாட்டை அறிந்தேற்பதும்.

---

*பின்னணிப் பகுதியில் பெரிய சேவை நிறுவனங்களை வைத்திருக்கும் கோட்பாடு என்பது அன்றையப் போர்க்கால நிலைமைக்கு இணங்காத பெரிய பல பிரிவுகளைக் கொண்ட பின்னணிப்பகுதி சேவை நிறுவனங்களை அமைப்பதைக் குறிக் கிறது. பின்னணிப்பகுதியில் சிறிய சேவை நிறுவனங்களை வைத் ருக்கும் கோட்பாடு என்பது போர் இயக்கத்துக்கு ஏற்றதான சிறந்த சிறிய பின்னணிப் பகுதிசேவை நிறுவனங்களை அமைப் பதைக் குறிக்கிறது.

** கட்சியில் நிலவும் தவறான கருத்துகளைத் திருத்துவது பற்றி'' என்ற கட்டுரையின் 3ஆம், 4ஆம் குறிப்புகளைப் பார்க்கவும்.

*** 'கொள்ளைக்காரப் போக்குகள் என்பது கட்டுப் பாடும் அமைப்பும் தெளிவான அரசியல் திசைவழியும் இல்லாமல் இருந்து தோன்றும் கொள்ளையடித்தலையும் சூறையாடலையும் குறிக்கிறது.

போர்ப் பிரபுப் போக்குகளை எதிர்ப்பதும், படையில் உரிய வரம்புகளுக்குட்பட்ட சனநாயகம், அதிகாரம் பொருந்திய இராணுவக் கட்டுப்பாடு இரண்டையும் அறிந்தேற்பதும்.

ஊழியர் (Cadre) பற்றிய தவறான, கோஷ்டிவாத (Sectarian) கொள்கையை எதிர்ப்பதும், ஊழியர் பற்றிய சரியான கொள்கையை அறிந்தேற்பதும்.

தனிமைப் படுத்தும் கொள்கையை எதிர்ப்பதும், வாய்ப்புள்ள அனைத்துக் கூட்டாளிகளையும் வென்றெடுக்கும் கொள்கையை அறிந்தேற்பதும்.

செம்படையை அதன் பழைய கட்டத்தில் வைத்திருப்பதை எதிர்ப்பதும், அதை ஒரு புதிய கட்டத்திற்கு வளர்க்க முயற்சி செய்வதும்.

போர் தந்திரப் பிரச்சினைகள் பற்றிய எமது இப்போதைய விவாதம், சீனாவின் பத்தாண்டுக் கால இரத்தம் பெருகிய புரட்சிப் போரில் பெறப்பட்ட வரலாற்று ரீதியான அனுபவத்தின் ஒளியில் இந்தச் செய்திகளைத் தெளிவு படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே ஆகும்.

(மாசேதுங், தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப் படைப்புகள்-பக்கம் 177-186)

## ''சுற்றி வளைத்து அடக்குதலும்'' அதற்கு எதிரான நடவடிக்கைகளும் சீனாவின் உள்நாட்டுப் போரின் தலையாய வடிவம்

எமது கொரில்லாப் போர் தொடங்கிய பின்பான பத்தாண்டுகளில் ஒவ்வொரு சுதந்திரச் செங் கொரில்லாப் படை அலகும், ஒவ்வொரு செம்படை அலகும், ஒவ்வொரு புரட்சிகரத் தளப்பகுதியும் எதிரியால் அடிக்கடி ''சுற்றி வளைத்து அடக்குதலுக்கு'' உட்படுத்தப்பட்டுள்ளது. எதிரி செம்படையை ஓர் அரக்கனெனக் கருதி, அது தன்னைக் காட்டிக்கொள்ளும் அக்கணமே அதைப் பிடித்துவிட முயல்கிறான். அவன் எந்நேரமும் செம்படையைத் துரத்திக் கொண்டும், எந்த நேரமும் அதனைச் சுற்றி வளைக்க முயன்று கொண்டும் இருக்கிறான். பத்தாண்டுகளாக இந்த வடிவிலான போர் மாற்றமடையவில்லை; உள்நாட்டுப்

போரின் இடத்தில் தேசியப்போர் வந்தால் அல்லாமல் இந்த வடிவம் எதிரி வலிமை குன்றியவனாகவும், செம்படை வலிமையுடையதாயும் ஆகும் நாள்வரை இப்படியே இருந்துவரும்.

செம்படையின் நடவடிக்கைகள் "சுற்றி வளைத்து அடக்கு" தலுக்கு எதிரான நடவடிக்கைகளின் வடிவத்தை எடுக்கின்றன. எம்மைப் பொறுத்தவரை வெற்றி என்பதன் பொருள் முதன்மையாக "சுற்றிவளைத்து அடக்குத"லுக்கு எதிராகப் போரிடுவதில் பெறும் வெற்றியே. அதாவது, போர்த்தந்திர ரீதியான வெற்றியும் போர் நடவடிக்கைகளிலான வெற்றியுமே ஆகும். ஒவ்வொரு "சுற்றிவளைத்து அடக்கும்" நடவடிக்கைக்கும் எதிரான போராட்டம் வழமையாகப் பெரியவையும் சிறியவையுமான பல அல்லது பல பத்து (ஸ்கோர் கணக்கில்) கூட ஆன சண்டைகளைக் கொண்டதான ஒரு போரியக்கமாகிறது. பல சண்டைகள் வெல்லப்பட்டிருந்த போதும்கூட ஒரு "சுற்றி வளைத்து அடக்கும்" நடவடிக்கை அடிப்படையாகத் தகர்க்கப்படும் வரை போர்த்தந்திர ரீதியான வெற்றியை அல்லது போர் நடவடிக்கையில் பெற்ற முழுமையான வெற்றியைப் பற்றிப் பேச இயலாது. செம்படையின் பத்தாண்டுக் காலப்போரின் வரலாறு, "சுற்றிவளைத்து அடக்குதலுக்கு" எதிரான நடவடிக்கைகளின் வரலாறாகும்.

எதிரியின் "சுற்றி வளைத்து அடக்கும்" நடவடிக்கைகளிலும் அவற்றுக்கு எதிரான செம்படையின் நடவடிக்கைகளிலும் சண்டையிடுதலின் இரு வடிவங்களும், தாக்குதல், தற்காப்பு இரண்டும் பயன்படுத்தப்படுகின்றன; இவை புராதனமானதோ நவீனமானதோ சீனாவிலானதோ வேறெங்குமானதோ ஆன போரிலுள்ளவற்றிலிருந்து எந்த வேற்றுமையையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் சீனாவின் உள்நாட்டுப் போரின் சிறப்புப் பண்பியல்பு இவ்விரு வடிவங்களும் ஒரு நீண்ட காலகட்டத்திற்குத் திரும்பத் திரும்ப ஒன்றுமாறி ஒன்று இடம் பெறுவதாகும். ஒவ்வொரு "சுற்றி வளைத்து அடக்கும்" நடவடிக்கையிலும் எதிரி செம்படையின் தற்காப்பிற்கு எதிராகத் தாக்குதலைப் பயன்படுத்துகிறான்; அவனது தாக்குதலுக்கு எதிராகச் செம்படை தற்காப்பைப் பயன்படுத்துகிறது; செம்படை அவனது தற்காப்பிற்கு எதிராகத் தாக்குதலைப் பயன்படுத்துகிறது; இது "சுற்றி வளைத்து அடக்குத"லுக்கு எதிரான நடவடிக்கையின் இரண்டாவது கட்டம். ஒவ்வொரு "சுற்றிவளைத்து அடக்கும்" நடவடிக்கைக்கும் இந்த இரு கட்டங்களும் உள்ளன; இவை நீண்ட காலகட்டத்திற்கு ஒன்றுமாறி ஒன்று இடம் பெறுகின்றன.

நீண்ட கால கட்டத்திற்குத் திரும்பத் திரும்ப ஒன்றுமாறி ஒன்று இடம்பெறுவது என்பதால் நாம் போரினதும், சண்டையிடுதலினதும் இந்த வடிவங்கள் திரும்பத்திரும்ப இடம் பெறுவதையே கருதுகிறோம். இது ஓர் உண்மை. இது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிந்ததாகும். ஒரு "சுற்றிவளைத்து அடக்கும்" நடவடிக்கையும், அதற்கு எதிரான நடவடிக்கையும்—இத்தகையதே திரும்பத் திரும்ப இடம்பெறும் இப்போரின் வடிவமாகும். ஒவ்வொரு "சுற்றி வளைத்து அடக்கும்" நடவடிக்கையிலும், சண்டையிடுதலின் வடிவங்கள் ஒன்றுமாறி ஒன்று இடம் பெறுவது, எமது தற்காப்பிற்கு எதிராக எதிரி தாக்குதலைப் பயன்படுத்துவதும், நாம் அவனது தாக்குதலை எமது தற்காப்பைக் கொண்டு எதிர்ப்பதுமான முதலாவது கட்டமொன்றும், எமது தாக்குதலுக்கு எதிராக எதிரி தற்காப்பைப் பயன்படுத்துவதும் நாம் அவனது தற்காப்பை எமது தாக்குதலைக் கொண்டு எதிர்ப்பதுமான இரண்டாவது கட்டமொன்றும் சேர்ந்ததாகும்.

ஒரு போரின் அல்லது ஒரு சண்டையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில், அது வெறுமனே திரும்பத்திரும்ப இடம் பெறுவதால் ஆனதல்ல, மாறாக ஒவ்வொரு தடவையும் வேறு விதமானதாகும். இதுவும் ஓர் உண்மையும், அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிந்ததுமாகும். இது தொடர்பாக, ஒவ்வொரு "சுற்றி வளைத்து அடக்கும்" நடவடிக்கையோடும் ஒவ்வொரு "சுற்றி வளைத்து அடக்குத"லுக்கெதிரான நடவடிக்கையோடும் அளவு மேலும் பெரிதாகிறது. நிலைமை மேலும் சிக்கலாகிறது. சண்டை மேலும் தீவிர மடைகிறது என்பது ஒரு விதியாகிவிட்டது.

—மாவோ. சீனப்புரட்சிப் போரில் போர்த்தந்திரப் பிரச்சினைகள்

## சீனப்புரட்சிப்போரின் தனிப் பண்பியல்புகள்

அவை போரிட விரும்பும் ஒரே போர் அவை தயார் செய்து கொண்டிருக்கிற உள்நாட்டுப் போர்தான். ஆனால் பூர்ஷுவா வர்க்கம் உண்மையில் திறமையற்றதாக ஆகாதவரையிலும், பாட்டாளிவர்க்கத்தின் பெரும்பான்மை ஆயுதமேந்தி எழுந்து போரிடுவதென்று உறுதி பூணாத வரையிலும் உழவர் வெகுமக்கள் பாட்டாளிவர்க்கத்திற்கு விருப்புடன் உதவியளிக்காத வரையிலும் இந்தக் கிளர்ச்சியும் போரும் தொடுக்கப்படக்கூடாது. இத்தகைய கிளர்ச்சியையும், போரையும் தொடுக்கும் காலம் வரும்போது

முதற்படி நகரங்களைக் கைப்பற்றுவதும், பின்னர் நாட்டுப்புறங்களுக்கு முன்னேறுவதுமாகவே இருக்கும், இதற்கு மற்ற பக்கமாக நடக்கக்கூடாது. இவையனைத்தும் முதலாளிய நாடுகளிலுள்ள பொதுவுடைமைக் கட்சிகளாற் செய்யப்பட்டுள்ளன; அத்துடன் ருஷ்யாவில் அக்டோபர் புரட்சியால் இது சரியென்று மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

எப்படியிருந்தாலும் சீனா வித்தியாசமானது. சீனாவின் தனியியல்புகள் அது ஒரு விடுதலை பெற்ற சனநாயக நாடு அல்ல, மாறாக அரைக் குடியேற்ற, அரை நிலவுடைமை நாடு என்பதும் உள்நாட்டில் அதற்கு சனநாயகமில்லை, மாறாக, நிலவுடைமை அடக்குமுறையின் கீழ் உள்ளது என்பதும் வெளியுறவுகளில் அதற்குத் தேசிய சுதந்திரம் இல்லை, மாறாக ஏகாதிபத்தியத்தால் அடக்கி ஒடுக்கப்படுகிறது என்பதுமாகும். ஆகவே பயன்படுத்துவதற்கு எமக்குப் பாராளுமன்றமும் இல்லை, தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஒழுங்கமைக்க எமக்குச் சட்டபூர்வமான உரிமையும் இல்லை. அடிப்படையில் இங்குள்ள பொதுவுடைமைக் கட்சியின் கடமை கிளர்ச்சியையும், போரையும் தொடுக்க முன் ஒரு சட்டபூர்வமான நீண்ட காலப் போராட்டத்திற்கூடாகச் செல்வதுமல்ல, முதலில் நகரங்களைப் பிடித்துப் பின்னர் நாட்டுப்புறங்களைக் கைப்பற்றுவதுமல்ல, ஆனால் இதற்கு மாறானது.

எமது நாட்டின்மீது ஏகாதிபத்தியம் ஆயுதத் தாக்குதல் தொடுக்காமலிருக்கும்போது, சீனப் பொதுவுடைமைக் கட்சி ஒன்றில் 1924-27 இல் குவாங் துங் மாகாணப் போரிலும் வட படையெடுப்புப் போரிலும் செய்ததுபோல, பூர்ஷ்வா வர்க்கத்துடன் சேர்ந்து போர்ப் பிரபுக்களுக்கு (ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளுக்கு) எதிராக உள்நாட்டுப்போர் தொடுக்கிறது, அல்லது 1927—36 வரை நடந்த நிலப்புரட்சிப் போரில் செய்தது போல, நிலப்பிரபு வர்க்கத்திற்கும், தரகு முதலாளி வர்க்கத்திற்கும் (இவர்களும் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளே) எதிராக உழவர்களுடனும், நகரக் குட்டி முதலாளி வர்க்கத்துடனும் ஒன்று சேர்ந்து உள்நாட்டுப் போர் நடத்துகின்றது. ஏகாதிபத்தியம் சீனாமீது ஆயுதத்தாக்குதல்

---

1. வி. இ. லெனின், "போரும் ருஷ்ய சமூக சனநாயகக் கட்சியும்," "வெளிநாட்டிலுள்ள ருஷ்ய சமூக சனநாயகத் தொழிற்கட்சிக் கிளைகளின் மாநாடு," "ஏகாதிபத்தியப் போரில் தன் சொந்த அரசாங்கத்தின் தோல்வி" "ருஷ்யாவின் தோல்வியும் புரட்சியின் நெருக்கடியும்" ஆகிய கட்டுரைகளைப் பார்க்க.

தொடுக்கும்போது, இந்தக்கட்சி, இப்போதைய சப்பானிய எதிர்ப்புப் போரில் செய்து கொண்டிருப்பதைப் போல வெளி ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கும் எல்லா வர்க்கங்களுடனும் வர்க்கத் தட்டுகளுடனும் ஒன்று சேர்ந்து அந்நிய எதிரிக்கெதிராகத் தேசியப் போரொன்றை நடத்துகிறது.

இவையனைத்தும் சீனாவிற்கும் முதலாளிய நாடுகளுக்குமிடையிலுள்ள வேறுபாட்டைக் காட்டுகின்றன. சீனாவில் போர் தலையாய போராட்ட வடிவமாகவும், இராணுவம் தலையாய அமைப்பு வடிவமாகவும் இருக்கின்றன. மக்கள்திரள் அமைப்புகள் மக்கள்திரள் போராட்டங்கள் போன்ற பிற வடிவங்கள் அனைத்தும் அதிமுக்கியமானவையும் உண்மையில் இன்றியமையாதவையும், எந்தச் சந்தர்ப்பத்திலும் புறக்கணிக்கப்படக் கூடாதவையும் ஆகும். ஆனால் அவற்றின் நோக்கம் போருக்குச் சேவை செய்வதாகும். ஒரு போர் வெடிப்பதற்கு முன்பு எல்லா அமைப்புகளும் போராட்டங்களும் 1919 மே 4 இயக்கத்திற்கும் 1925 மே 30 இயக்கத்திற்கும் இடையிலான காலகட்டத்தில் இருந்ததுபோல, அந்தப் போருக்கான தயாரிப்பில் இருக்கின்றன. போர் வெடித்தபின் எல்லா அமைப்புகளும் போராட்டங்களும் போருடன் நேரடியாக இணைந்தும், வட போர்ப்பிரபுக்கள் ஆளும் பகுதியிலிருந்தவை போருடன் மறைமுகமாக இணைந்தும் இருந்ததுபோல, நேரடியாகவோ, மறைமுகமாகவோ போருடன் இணைகின்றன. இன்னும் நிலப்புரட்சிப் போர்க் காலகட்டத்தில் செம்பகுதிகளுக்குள் இருந்த எல்லா அமைப்புகளும் போராட்டங்களும் போருடன் நேரடியாக இணைந்திருக்க, செம்பகுதிகளுக்கு வெளியே இருந்தவை மறைமுகமாக இணைந்திருந்தன. மேலும் இப்போதைய சப்பானிய—எதிர்ப்புப் போர்க் காலகட்டத்தில், சப்பானிய எதிர்ப்புப் படைகளின் பின்னணிப் பகுதிகளிலும் எதிரி இடங்கொண்ட பகுதிகளிலும் உள்ள எல்லா அமைப்புகளும் போராட்டங்களும் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் போருடன் இணைந்துள்ளன.

''சீனாவில் ஆயுதந் தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியுடன் போரிடுகிறது. அது சீனாப்புரட்சியின் சிறப்புக் கூறுகளில் ஒன்றாகவும் அதன் மேம்பாடுகளில் ஒன்றாகவும் இருக்கிறது. *''தோழர் ஸ்டாலினின் இந்த ஆய்வுவரை முற்றிலும் சரியானது; அத்துடன் வடபடையெடுப்பிற்கும், நிலப்புரட்சிப் போருக்கும்.

---

''*சீனப் புரட்சியின் எதிர்கால வாய்ப்புகள்.'' ஜே. வி. ஸ்டாலின்

இப்போதைய சப்பானிய— எதிர்ப்புப் போருக்கும் ஒரே அளவாகப் பொருந்தும். இவையனைத்தும் புரட்சிப் போர்கள்; அனைத்தும் எதிர்ப்புரட்சியாளருக்கு எதிராக நடத்தப்பட்டவை; அனைத்தும் முக்கியமாகப் புரட்சிகர மக்களால் நடத்தப்பட்டவை. இவை ஒரு உள்நாட்டுப் போர் தேசியப்போரிலிருந்து வேறுபடும் அளவிலும் பொதுவுடைமைக்கட்சி தனித்து நடத்திய ஒரு போர் அது கோமின்டாங்குடன் சேர்ந்து நடத்திய போரிலிருந்து வேறுபடும் அளவிலும் மட்டுமே வேறுபடுகின்றன. இயல்பாகவே, இந்த வேறுபாடுகள் முக்கியமானவைதாம். இவை போரின் தலையாய சக்தியின் அகலத்தை (தொழிலாளர்— உழவர்கள் நேச அணியொன்றை, அல்லது தொழிலாளர், உழவர் உடைமையாளர் வர்க்க நேச அணியொன்றை)யும், போரில் எமது எதிரி உள்ளேயோ, வெளியேயோ இருக்கிறான் என்பதையும், (போர் உள்நாட்டு எதிரிகளுக் கெதிரானதா, வெளிநாட்டு எதிரிகளுக்கு எதிரானதா என்பதையும், உள்நாட்டு எதிரிகளுக்கெதிரானது என்றால், வட போர்ப் பிரபுக்களுக்கெதிராகவா கோமின்டாங்கிற் கெதிராகவா என்பதையும் காட்டுகின்றன; சீனாவின் புரட்சிப்போரின் அம்சம் போரின் வேறுபட்ட வரலாற்றுக் கட்டங்களில் வேறுபடுகின்றது என்றும் இவை காட்டுகின்றன. ஆனால் இந்தப் போர்கள் அனைத்தும் ஆயுதந் தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியை எதிர்க்கும் போர் களாகும். அத்துடன் இவையனைத்தும் புரட்சிப் போர்கள், சீனப் புரட்சியின் தனிப்பட்ட இயல்புகளையும், மேம்பாடுகளையும் காட்டு கின்றன.

—தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப்படைப்புகள்.
பக்கம் 559-563.

ஹூனானில் ஏற்ற இறக்கமுடைய ஒரு வாழ்க்கையுடைய வராயிருந்த திறமையுள்ள அதிகாரியான தான் யென்-கை என்பவர் ஒருபோதும் ஒரு தூய, எளிய சிவில் ஆளுநராக மட்டும் இருக்கவில்லை. மாறாக, இராணுவ ஆளுநர், சிவில் ஆளுநர் ஆகிய இரண்டுமாக இருப்பதிலேயே எப்பொழுதும் விடாப்பிடியாக நின்றார். முதலில் குவாங்துவிலும், பின்னர் வூஹானிலும் தேசிய அரசாங்க சனாதிபதியாக வந்தபோது கூட அவர் அதேசமயத்தில் இரண்டாவது படையின் தளபதியாகவும் இருந்தார். சீனாவின் இந்தத் தனித்தன்மையை அறிந்த இவர் போன்ற பல போர்ப் பிரபுக்கள் இன்னும் இருக்கின்றனர்.

ஒரு படையை வைத்திருக்க விரும்பாத கட்சிகளும் சீனாவில் இருந்துள்ளன; இதில் குறிப்பிடத்தக்கது முற்போக்குக் கட்சியாகும்.

இருந்தும் இந்தக் கட்சி கூட சில போர்ப்பிரபுக்களின் ஆதரவின்றி அரசாங்கப் பதவிகள் பெறமுடியாதென உணர்ந்தது. யுசுன் ஷு-கை, துவன் சி-ழெய், சியாங்கை-ஷேக் (முற்போக்குக் கட்சியின் ஒரு பகுதியிலிருந்து உருவாகிய அரசியல் அறிவியல் குழு சியாங்குடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது) ஆகியோரும் இதன் தொடர்ச்சியான பாதுகாவலரில் அடங்குவர்.

இளைஞர் ஓர் கட்சி போன்ற ஒரு குறுகியகால வரலாறுடைய ஒரு சில அரசியல் கட்சிகளிடம் இராணுவம் இல்லை; ஆகவே அவை எவ்விதப்பயனும் பெறமுடியவில்லை.

வேறுநாடுகளில் ஒவ்வொரு பூர்ஷ்வா கட்சியும் தனது நேரடி ஆணையின் கீழ் ஆயுதப்படையொன்றை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் சீனாவில் விசயங்கள் வேறு. இங்கு நிலப்பிரபுத்துவப் பிரிவு காரணமாக நிலப்பிரபு அல்லது பூர்ஷ்வாக் குழுக்களிலோ அல்லது கட்சிகளிலோ எவை துப்பாக்கிகளை உடையனவாயிருக்கின்றனவோ அவை அதிகார முடையனவாயிருக்கின்றன; அதிகப்படியான துப்பாக்கி வைத்திருப்பவை அதிகப்படியான அதிகார முடையனவாயிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையிலுள்ள ஒரு பாட்டாளிவர்க்கக் கட்சி, இந்த விசயத்தின் சாராம்சத்தைத் துருவிப்பார்க்க வேண்டும்.

பொதுவுடைமையாளர்கள் தனிப்பட்ட இராணுவ அதிகாரத்திற்காகப் போரிடுவதில்லை. (எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் அப்படிச் செய்யக்கூடாது; அத்துடன் சாங்கோ-தௌவைப்போன்று இனி எவரையும் விடக் கூடாது). ஆனால் அவர்கள் கட்சிக்கு இராணுவ அதிகாரத்துக்காக, மக்களுக்கு இராணுவ அதிகாரத்திற்காகப் போரிடவேண்டும். இப்போது ஒரு தேசியப் போர் நடந்து கொண்டிருப்பதால், தேசத்தின் இராணுவ அதிகாரத்திற்காகவும் நாம் போரிடவேண்டும். இராணுவ அதிகாரப் பிரச்சினையில் சூதுவாதற்ற தன்மை இருந்தால் எதுவும் நிறைவேற்றப்பட முடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களால் ஏமாற்றப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வரும் உழைக்கும் மக்களை அவர்களின் கைகளில் துப்பாக்கிகளை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை உணரும்படி செய்வது மிகக் கடினம். இப்போது சப்பானிய ஏகாதிபத்திய அடக்குமுறையும், அதற்கான நாடு தழுவிய எதிர்ப்பும் எமது உழைக்கும் மக்களைப் போர்க்களத்திற்குள் தள்ளியுள்ளன. பொதுவுடைமையாளர்கள் இந்தப்போரில் யாவரையும் விட அரசியல் உணர்வு மிகுந்த தலைவர்களாக விளங்க வேண்டும். "துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்

கின்றது'' என்ற உண்மையை ஒவ்வொரு பொதுவுடைமையாளரும் ஈர்த்துக்கொள்ள வேண்டும். கட்சி, துப்பாக்கிமீது ஆணை செலுத்து கிறது; கட்சி மீது துப்பாக்கி ஆணை செலுத்துவதை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. இதுவே நம் கோட்பாடு. ஆனால் துப்பாக்கி களை வைத்திருந்தால் நாம் கட்சி அமைப்புகளைஉருவாக்க முடியும். எடுத்துக்காட்டாக வடசீனாவில் எட்டாவது வழி இராணுவம் உருவாக்கியுள்ள ஆற்றல் மிக்கக் கட்சியமைப்புகள். மேலும் நாம் ஊழியர்களை உருவாக்கலாம்; பண்பாட்டை உருவாக்கலாம்; மக்கள் திரள் இயக்கங்களை உருவாக்கலாம்; துப்பாக்கிகளைக் கொண் டிருப்பதாலேயே ஏனெனில்அனைத்தும் உருவாக்கப்பட்டுள்ளன. எல் லாம் துப்பாக்கிக் குழாயில் இருந்தே பிறக்கின்றன. அரசுபற்றிய மார்க்சியத் தத்துத்துவத்தின்படி, அரசதிகாரத்தின் முதன்மையான கூறு இராணுவம் ஆகும். யார் அரசதிகாரத்தைக் கைப்பற்றி, நிலை நிறுத்த விரும்பினாலும் அவர் வலிமைமிக்கப் படை ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். ''போரின் அனைத்து வல்லமைத்துவத்துக் காக வாதாடுபவர்கள்'' நாம் என்று சிலர் நம்மை எள்ளி நகையாடு கின்றனர். ஆம், புரட்சிப் போரின் அனைத்து வல்லமைத்துவக்கத்திற் காக வாதாடுபவர்கள்தான். அது தீயதல்ல; நல்லது.

மார்க்சியம் தழுவியது. ருஷ்யப் பொதுவுடைமைக் கட்சியின் துப்பாக்கிகள் சோஷலிசத்தைப் படைத்தன. நாம் ஒரு சனநாயகக் குடியரசைப் படைப்போம். தொழிலாளர் வர்க்கமும் உழைப்பாளி மக்களும் துப்பாக்கி வலிமையைக் கொண்டுதான் ஆயுதமேந்திய உடைமை வர்க்கத்தையும், நிலப்பிரபுக்களையும் தோற்கடிக்க முடியும் என்று ஏகாதிபத்திய சகாப்தத்தின் வர்க்கப் போராட்ட அனுபவம் நமக்குப் போதிக்கிறது. இந்தப் பொருளில் துப்பாக்கி களால்தான் உலகம் முழுவதும் மாற்றப்பட முடியும் என்று நாம் கூறலாம். நாம் போரை ஒழிப்பதற்காக வாதாடுபவர்கள். நாம் போரை விரும்பவில்லை; ஆனால் போரைப் போரின் மூலம்தான் ஒழிக்கமுடியும். துப்பாக்கியை ஒழிக்க வேண்டுமானால், துப்பாக்கி ஏந்துவது இன்றியமையாததாகும்.

## சீனப் பொதுவுடைமைக் கட்சியின் போர் வரலாறு

நமது கட்சி, நான்கு வருடங்களாக, அதாவது 1921-லிருந்து (சீனப் பொதுவுடைமைக் கட்சி நிறுவப்பட்ட காலம்) 1924 வரை (கோமின்டாங்கின் முதலாவது தேசிய காங்கிரஸ் நடத்தப்பட்ட காலம்), போருக்கான தயாரிப்புகள் மற்றும் ''ஆயுதமேந்திய சக்தி களை அமைப்பு ரீதியாகத் திரட்டல்'' ஆகிய வேலைகளில், நேரடி யாக, தானே, ஈடுபடுவதில் உள்ள முக்கியத்துவத்தை உணரத்

தவறியது; மேலும், 1924-27 காலப் பகுதியிலும், அதன் பின்னும் கூடக் கட்சியானது, இன்னும், இந்த விசயங்களைப் பற்றிய போதுமான புரிதலின்றி இருந்தது; இருந்த போதும், 1924க்குப் பிறகு "வாம்போவா இராணுவக்கல்விக்கழகத்தில், பங்கெடுத்துக்கொள்ள ஆரம்பித்த பின், கட்சியானது, ஒரு புதிய கட்டத்தினுள் நுழைந்தது; இராணுவ விசயங்களின் முக்கியத்துவத்தைப் பார்க்கத் தொடங்கியது. குவாங்டங் மாகாணத்தில் நடந்த போர்களில் கோமின்டாங்கிற்கு உதவியதன் வாயிலாகவும், வடக்கத்திய படையெடுப்பில் பங்கு கொண்டதன் வாயிலாகவும், கட்சியானது, சில ஆயுதம் தாங்கிய சக்திகளின் மீது தனது தலைமையினை நிறுவியது. பிறகு, புரட்சியின் தோல்வியில் இருந்து கசப்பான பாடங்களைக் கற்ற பின்னர், கட்சியானது, "நான்சங் எழுச்சி (Nanchang uprising), இலையுதிர் கால அறுவடை எழுச்சி, மற்றும் கான்டன் எழுச்சி (Canton uprising) ஆகியவற்றை ஏற்பாடு செய்தது. மேலும், "செம்படையை உருவாக்குவது" என்ற புதிய கட்டத்தினுள் நுழைந்தது. இராணுவத்தின் முக்கியத்துவத்தை முற்றிலுமாக உணர்ந்து கொள்வதற்கு, நமது கட்சி வந்தடைந்த இந்தக்கால கட்டமானது, மிகவும் தீர்மானகரமானகால கட்டமாகும்.

மாவோ,

"யுத்தம் மற்றும் போர்த் தந்திரத்தைப் பற்றிய பிரச்சினைகள்."

தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் — தொகுதி—2.

# 31

# இராணுவப் பாதை

## செம்படையைக் கட்டுவதன் அடிப்படைக் கோட்பாடுகள்

## செம்படையின் போர்த் தந்திரம் மற்றும் செயல் தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகள்.

**சியாங்கை-ஷேக் பிற்போக்குக் கும்பலின் முதல் மூன்று சுற்றி வளைக்கும் இயக்கங்கள் செம்பகுதியில் நொறுக்கித் தள்ளப்பட்டன. சீனப்புரட்சியில் புதிய எழுச்சி.**

ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, புரட்சிகரத் தளங்கள் நிறுவப்பட்டன. ஆயுதப் போராட்டத்தில் வெற்றி பெறாமல் புரட்சித்தளங்களைக் கெட்டிப்படுத்துவதும் விரிவு படுத்துவதும் அல்லது விவசாயப் புரட்சியை ஊக்குவிப்பதும் இயலாததாக இருந்திருக்கும். எல்லாப் பழைய வகைப்பட்ட இராணுவங்களிலிருந்தும் வேறுபட்டதொரு மக்களின் புரட்சிப் படை ஆயுதப் போராட்டத்தின் வெற்றிக்குத் தேவையாக இருந்தது. மேலும் இந்தப்படை சரியான போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரத்தின் வழிகாட்டுதலின் கீழ்ப் போராட வேண்டியிருந்தது செம்படையைக் கட்டுவதன் அடிப்படைக் கோட்பாடுகளும், மற்றும் செம்படையின் போர்த்தந்திரங்களும் செயல் தந்திரங்களும் இந்தக் காலகட்டத்தில் மாசேதுங்கினால் முறையாகவும் ஒழுங்கமைவுடனும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டன. இத்தகைய அடிப்படையான கோட்பாடுகளும், இதர இராணுவத் தத்துவங்களும் சேர்ந்து, மாசேதுங்கினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சீனப் பொதுவுடைமைக்கட்சியின் இராணுவப்பாதையாக அமைந்தன.

*முதலாவதாக, செம்படையைக் கட்டுவதன் அடிப்படையான கோட்பாடுகள் என்ன?*

செம்படை பாட்டாளிவர்க்க சித்தாந்தத்தினால் வழிகாட்டப் படவேண்டும்; மக்களின் போராட்டத்திற்குப் பயன்படவேண்டும். மேலும் தளங்களைக் கட்டுவதில் உதவி செய்ய வேண்டும். இதுதான் செம்படையைக் கட்டுவதை ஆட்கொண்டிருந்த அடிப்படையான கோட்பாடாக இருந்தது.

இந்த அடிப்படைக் கோட்பாட்டுக்கு ஏற்ப, செம்படையின் மீது கட்சியின் தலைமை அமைப்பு ரீதியாகவும், அரசியல்ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும், உறுதிப்பட வேண்டும். செம்படையின் பல்வேறு மட்டங்களிலும் கட்சி அமைப்புகளை ஏற்பாடு செய்வதனாலும், அரசியல் கமிசார்கள் முறையை நடைமுறைப்படுத்துவதனாலும், செம்படையின் மீது கட்சி உறுதியானதொரு தலைமையைப் பிரயோகிக்கும்; மற்றும் கட்சியின் திட்டங்களையும், கொள்கைகளையும் தீர்மானமாக நிறைவேற்றுவதையும் அதற்குச் சாத்தியமாக்கும். அதே வேளையில் செம்படையின் அரசியல் வேலையின் ஓர் ஏற்பாடு அமைக்கப்பட்டு வலுப்படுத்த வேண்டியிருந்தது. அதனுடைய கடமைகள் செம்படைக்குக் கட்சியின் திட்டங்களையும் கொள்கைகளையும் கற்றுக் கொடுப்பதும், செம்படையில் நிலவிக் கொண்டிருந்த பாட்டாளி வர்க்கத்திற்கு ஒவ்வாத கருத்துகளை எதிர்த்துப் போராடுவதும், செம்படையினுடைய மார்க்சிய-லெனினிய சித்தாந்த உணர்வின் தரத்தை உயர்த்துவதும் அதனுடைய போராடும் திறனை உயர்த்துவதுமாகும்.

மேலும், இக்கருத்திற்கு ஏற்ப, புரட்சிப்போரை நிறைவேற்றுவதில் உழவர்களை நம்பி நிற்கவேண்டும். உழவர்களை அதனுடைய முதுகெலும்பாகக் கொண்ட ஒரு படை அமைக்கப்பட வேண்டும்; மற்றும் விரிவான மக்கள்திரள் கொரில்லாப் போரை நடத்துவதற்கு கிராமப்புற மாவட்டங்களில் புரட்சித் தளங்கள் நிறுவப்படவும் வேண்டும். ஆகவே செம்படையின் கடமை எதிர்த்துப் போராடுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. மக்களிடம் கிளர்ச்சிப்பிரசாரம் செய்தல், அவர்களை அமைப்பு ரீதியாகத் திரட்டல், அவர்களை ஆயுதபாணியாக்குதல், புரட்சிகரமான அரசாங்கத்தை நிறுவுவதற்கும் கட்சியைக் கட்டுவதற்கும் அவர்களுக்கு உதவி செய்வது போன்ற இப்படிப்பட்ட கடமைகளையும் அது மேற்கொள்ளவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நிதிகளைச் சேர்க்கும் வேலையை மேற்கொள்ள வேண்டும். போரிடுவது, மக்களிடையே வேலை செய்வது

மற்றும் நிதி சேர்ப்பது— செம்படையின் இந்த மூன்று கடமைகளும், பிரிக்க முடியாது, முழுமையாக அமைந்திருக்கின்றன.

மேலும், இராணுவ உறுப்புகளுக்கும் அரசியல் உறுப்புகளும் இடையேயும், இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையேயும் அதிகாரிகளுக்கும் படையாளர்களுக்குமிடையேயும் சரியான உறவுகள் நிலை நாட்டப்பட்டிருப்பதையும் செம்படை பார்த்துக் கொள்ள வேண்டும். எதிரியைச் சீர் குலைப்பதற்காகவும், கைதிகளை வென்றெடுப்பதற்காகவும் அது சரியான ஒரு கொள்கையைப் பெற்றிருக்க வேண்டும்.

செம்படையைக் கட்டுவதற்கான தோழர் மாசேதுங்கின் அடிப்படையான தத்துவமும், அதிலிருந்து வளர்ந்து வந்த கோட்பாடுகளின் முழுமையான அமைப்பும் செம்படையை வெல்ல முடியாததொரு படையாகச் செய்தது; மேலும் இதர எல்லாப் படைகளிலிருந்தும் வேறுபட்டதொரு புரட்சிப் படையாகவும் செய்தது.

அடுத்து, செம்படையின் போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகள் என்ன?

சீனப் புரட்சிப் போரின் பின் வரும் நான்கு பண்பியல்புகளைத் தோழர் மாசேதுங் தெளிவுபடுத்தினார். (1) சீனா அரசியல் ரீதியாகவும், பொருளியல் ரீதியாகவும் சீரற்ற முறையில் வளர்ச்சியடைந்திருந்த பரந்த ஓர் அரைக் குடியேற்ற நாடு; மேலும் அப்பொழுது தான் ஒரு மாபெரும் புரட்சியின் வழியாகச் சென்றிருந்தது;

(2) எதிரியின் வலிமை மிக மேம்பட்டிருந்தது;

(3) செம்படையின் பலவீனமும் சிறிய அளவும்;

(4) பொதுவுடைமைக் கட்சியின் தலைமையும் விவசாயப் புரட்சியும்.

இத்தகைய பண்பியல்புகள், ஒருபுறத்தில் செம்படை வளர்ந்து அதனுடைய எதிரியை முறியடிக்கும் சாத்தியப் பாட்டினைத் தீர்மானித்தது; மறுபுறத்தில் செம்படை வேகமாக வளர்வதன் அல்லது அதனுடைய எதிரியைச் சீக்கிரமாக முறியடிப்பதன் சாத்திய மற்ற தன்மையையும் நிர்ணயித்தது. உண்மையில், விஷயங்களைத் தவறாகக் கையாளும் போது தோல்வி ஏற்படும் சாத்தியப் பாட்டினையும் அவை சுட்டிக் காட்டின. இத்தகைய குணாம்சங்களிலிருந்து வெளிவந்த அடிப்படையான போர்த் தந்திர மற்றும் செயல் தந்திரக் கோட்பாடுகளில் பின்வரும் விசயங்களும் அடங்கும். ஒரு மக்கள் போரை நடத்துவதற்கு மக்கள் திரளை நம்பி இருப்பது; போரின்

முதன்மை வடிவங்களாகக் கொரில்லாப் போர் முறையையும், ''கொரில்லாத் தன்மைவாய்ந்த இயக்கத்திலுள்ள நகரும் போர் முறையையும்'' கையாளுவது, போர்த் தந்திர ரீதியாக நீடித்த ஒரு போரையும் சீக்கிரமாக முடிவு செய்யும் தனித்தனிப் போர்க்களங்களையும் நடத்துவதற்குச் செம்படைக்குள்ள அவசியம், போர்த் தந்திர ரீதியில் கொஞ்சம் பேரை வைத்துக் கொண்டு பலரை முறியடிப்பதும், ஆனால் தனித்தனி இயக்கங்களில் பலரை வைத்துக் கொண்டு கொஞ்சம் பேரை முறியடிப்பதுமாகும்.

மேலே சுட்டிக் காட்டியிருப்பது போல், எதிரியினுடைய படை வலிமையுடையதாகவும், பெரியதாகவும் இருந்தது. ஆனால் மக்கள் திரளிடமிருந்து அந்நியப்பட்டிருந்தது. அதே சமயத்தில் செம்படை வலிமை குன்றியும் சிறியதாகவும் இருந்தது. ஆனால் மக்கள் திரளோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தது. இத்தகைய நிலைமைகளின் கீழ், எதிரியினுடைய பலவீனங்களையும் அதனுடைய சொந்த வசதிகளையும் செம்படை முழுமையாகப் பயன்படுத்தாமலிருந்தால், நீடிப்பதும் வெற்றி பெறுவதும், மேலும் வளர்ச்சி அடைவதும் கேள்விக்கு அப்பாற்பட்டதாக இருக்கும். ஆகவே, அவனுடைய மிகவும் வலிய எதிரியை வெல்லுவதற்கு, செம்படை ஒரு மக்கள் போரை நடத்த வேண்டும்; அந்தப் போரில் தலையாயப் படைகள் உள்ளூர்ப் படைப்பிரிவுகளோடு ஒருங்கிணைக்கப்பட்டிருக்க வேண்டும். முறையான இராணுவம் கொரில்லாப் படைகளோடும், ஆயுதமேந்திய ஊர்க்காவல் படைகளோடும் மற்றும், ஆயுமேந்தியவர்கள் ஆயுதமேந்தாமலிருக்கும் மக்கள் திரளோடும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

கொரில்லாப் போர் முறையையும், கொரில்லாத் தன்மை வாய்ந்த நகரும் போர் முறையையும் போரின் முதன்மை வடிவங்களாக ஏற்றுக் கடைப்பிடிப்பது செம்படைக்கு அவசியமாக இருந்தது. இராணுவ அறிவியலுக்குத் தோழர் மாசேதுங்கினால் அளிக்கப்பட்ட மாபெரும் பங்குகளில் ஒன்று, ஒரு போர்த் தந்திர மட்டத்தில் கொரில்லாப் போர் முறையைப் பற்றி அவர் விளக்கிக் கூறியதில் திட்டவட்டமாக அடங்கி உள்ளது. அவர் சொன்னார்:

''கொரில்லாப் போர்முறை என்றால் என்ன? ஒரு பின்தங்கிய நாட்டில், ஒரு பெரிய அரைக் குடியேற்ற நாட்டில், நீண்டதொரு காலகட்டத்திற்கு அது தவிர்க்க முடியாததாக உள்ளது. ஆகவே, ஆயுதமேந்தியுள்ள எதிரியை வெல்லுவதற்கும், அவர்களுக்கே உரித்தான தளங்களை உருவாக்குவதற்கும் மக்களின் ஆயுதம் ஏந்திய படைகளுக்கு மிகமிகச் சிறப்பான போராட்ட வடிவமாகவும் அது உள்ளது.

கொரில்லாப் போர்முறையை அதனுடைய அதிக பட்ச வரம்பிற்கு விரிவு படுத்துவதும் பிறகு குறிப்பிட்ட நிலைமைகளின் கீழும், வலிமை பெருகியிருப்பதைப் பொறுத்தும் கொரில்லாப் போர் முறையை முறையான போர்முறையாக மாற்றுவதும் சரியான கொள்கையாக இருந்தது. இரண்டாவது புரட்சிகர உள்நாட்டுப் போர்க் காலகட்டத்தில் கொரில்லாப் போர்முறை படிப்படியாக வளர்ச்சியடைந்து முறையான போர்முறையாக மாறியது. ஆனால் அச்சமயத்தில் செம்படை இன்னும் ஒரு கொரில்லாத் தன்மை வாய்ந்த இயங்கும் (mobile) போரைத்தான் நடத்திக் கொண்டிருந்தது.

வலிமையின் விசயத்தில் செம்படை எதிரிக்குக் குறைவானதாக இருந்தமையால் விரைந்ததொரு வெற்றியைப் பற்றிச் சிந்திக்க முடியாததாக இருந்தது. ஆகவே, நீடித்தபோர் முறையான ஒரு போர்த்தந்திரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டியதும் அவசியமாக இருந்தது; மற்றும் வலிமையின் சாதகமற்ற நிலையில் ஒரு மாற்றத்தைப் படிப்படியாகக் கொண்டு வருவதும் அவசியமாகவும் இருந்தது: எனினும், நடவடிக்கை மற்றும் செயல்தந்திர திசைவழியின் கோட்பாடு எதிரிடையான—பாதுகாப்பு அல்ல; ஆனால் விரைந்த முடிவாக இருந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, ஆயுதங்களை—சிறப்பாக வெடிகுண்டு முதலியவற்றைப் புதுப்பிப்பதற்குச் செம்படையிடம் எந்தவிதமான மூலாதாரமும் கிடையாது. இரண்டாவதாக, எதிரி பெரும் எண்ணிக்கையில் தனியான படைப்பிரிவுகளைப் பெற்றிருந்தான். அவற்றில் ஒன்றினைச் செம்படை எதிர்த்துப் போராடும்பொழுது செம்படை சீக்கிரமாக வெற்றி பெறுவதில் தவறிவிடுமேயானால், தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கும் ஒரு படைப்பிரிவை மீட்பதற்கு இதர படைப்பிரிவுகள் ஒன்று சேர்ந்து வரும். மூன்றாவதாக, ஒரு ''சுற்றிவளைக்கும் இயக்கத்தை'' நொறுக்கித் தள்ளிய பிறகு, செம்படை மற்ற தொடர்ச்சியான இடைவிடாத நடவடிக்கைகளுக்குத் தன்னை வேகமாகத் தயார் செய்ய வேண்டியிருந்தது. இத்தகைய காரணங்களும் மற்ற காரணங்களும் ஓர் இயக்கத்தில் விரைந்து முடிவு எடுக்க வேண்டியதன் அவசியத்தைத் தீர்மானித்தன. நீண்டகாலம் நீட்டப்படும் சண்டைகள் செம்படையின் நலனுக்கு எதிரான வேலை செய்யும். போர்த்தந்திர ரீதியில் பலரைச் சிலரால் முறியடிப்பதற்கும், செயல்தந்திர ரீதியில் சிலரைப் பலரால் முறியடிப்பதற்கும்-வெற்றி பெறும் பொருட்டும், அதனுடைய சொந்த வலிமையைப் பாதுகாத்து வைத்திருக்கும் பொருட்டும், மற்றும் நிகழ்ச்சிப்போக்கில் தீர்மானமானதொரு

வெற்றியைப் பெறும் பொருட்டும் ஒவ்வொரு போர்க்களத்திலும் முற்றுமுழுதான எண்ணிக்கை ரீதியான மேலாண்மை பெறுவது இக்கோட்பாட்டின்படிச் செம்படைக்குத் தேவைப்பட்டது.

சீனப் புரட்சிப்போரின் இத்தகைய பண்பியல்புகளைக் கண்டுபிடித்தவரும், அவற்றிலிருந்து தொடங்கி, புரட்சிப்போருக்கான போர்த்தந்திரத்தையும், செயல்தந்திரங்களையும் வகுத்தவரும் தோழர் மாசேதுங்தான்.

இந்தச் சரியான போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரக் கோட்பாடுகள் போராட்டங்களின் போக்கில் படிப்படியாக வடிவம் பெற்றன. சிங்காங் மலைகளில் நடைபெற்ற போராட்டத்தின் போது, கொரில்லாப் போர் முறையின் போர்த்தந்திர மற்றும் செயல்தந்திரங்கள் தொடர்பாக ''மக்களைத் தட்டி எழுப்புவதற்கு மக்கள் திரளிடையே படைகளைச் சிதறவிடுங்கள்; எதிரியைச் சமாளிப்பதற்குப் படைகளைக் குவியுங்கள்'' என்றும், ''எதிரி முன்னேறுகிறபோது நாம் பின்வாங்குகிறோம்; எதிரி நிற்கிறபோது நாம் துன்புறுத்துகிறோம்; எதிரி களைப்படைகிறபோது நாம் தாக்குகிறோம்; எதிரி பின்வாங்கும் பொழுது நாம் துரத்துகிறோம்" போன்ற இப்படிப்பட்ட எண்ணற்ற நன்கு அறியப்பட்ட கோட்பாடுகளைத் தோழர் மாசேதுங் ஏற்கனவே உருவாக்கி இருந்தார். முன்னால் சொல்லப்பட்ட கோட்பாடு, சிறிய தளப்பகுதிகளிலிருந்து ஒரு கொரில்லாப் போரை நடத்தும் சிறுபடைப் பிரிவுகளால் பின்பற்றப்பட வேண்டிய ஒரு கோட்பாடாகும். அதனுடைய அழுத்தம் ''முழுமையைப் பகுதிகளாக உடைக்கும்'' முறையின் மீதும், மற்றும் ''பகுதிகளை முழுமைக்குள் சேர்க்கும்'' முறையின் மீதும் உள்ளது. பின்னால் கூறப்பட்ட கோட்பாடு போர்த்தந்திர ரீதியான தற்காப்பையும், போர்த்தந்திர ரீதியான முன்னேறித் தாக்குதலையும் கொண்ட இரு துணைக் கட்டங்களை உள்ளடக்கியுள்ளது; மேலும் தற்காப்பில் போர்த்தந்திர ரீதியான பின்வாங்குதலையும், மற்றும் போர்த்தந்திர ரீதியான எதிரி முன்னேறித் தாக்குதலையும் (Counter-offensive) கொண்ட இரண்டு துணைக் கட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இவை காலத்தின் நிலைமைகளை ஒட்டிய எளிய அடிப்படையான கோட்பாடுகளாக இருந்தன. செம்படையின் கொரில்லாப் போர் முறையோடு தொடர்புடையதாக இக்கோட்பாடுகள் இருந்தன. சிறு கொரில்லாப்படை அலகுகளிலிருந்து பெரிய கொரில்லாப் படைப் பிரிவுகளாக செம்படை வளர்ச்சி அடைந்ததனாலும் மற்றும் சியாங்சி மையப்பகுதியினால் தொடங்கப்பட்ட எதிர் சுற்றி வளைப்பு இயக்கங்களின் (Counter Encirclement Campaigns)

காலக்கட்டத்தின் தளப்பகுதிகளின் விரிவாக்கம் மற்றும் கெட்டிப் பட்டமையாலும் மற்ற அடிப்படையான கோட்பாடுகள் முன் வைக்கப்பட்டன. ''எதிரியை ஆழமாக ஊடுருவிச்செல்வதற்கு ஆசை காட்டுவது,'' படைகளைக் குவித்தல், இயங்கிக் கொண்டிருக்கும் போர் முறை, விரைவில் முடிவு எடுக்கும் போர், அழித்தொழிக்கும் போர் போன்ற இப்படிப்பட்ட அடிப்படையான கோட்பாடுகள் முன்னுக்குக் கொண்டு வரப்பட்டன.

முதலாவதாக, எதிரியை ஆழமாக ஊடுருவச் செய்வதற்கு ஆசை காட்டுதல் அல்லது போர்த்தந்திர ரீதியான பின்வாங்குதல், மேலானதொரு எதிரியின் படைக்கு முன்னால் தாழ்வான நிலையிலுள்ள ஒரு படையைக் கையாளும் திட்டமிட்டதொரு போர்த் தந்திர நடவடிக்கையாக இது இருந்தது. எதிர்த்தாக்குதலில் ஈடுபடுமுன் எதிரிக்குப் பாதகமான, புரட்சிச் சக்திகளுக்குச் சாதகமான சில சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். இன்னும் மிக அதிக விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், பின்வரும் நிலைமைகள் இல்லாவிட்டால் எதிர்-முன்னேறித் தாக்குதல் (Counter offensive) தொடங்கவே கூடாது. மக்கள்திரள் மிக மிக அதிகமாக அல்லது ஒப்பு நோக்கில் மிக அதிகமாக ஒத்துழைக்கக் கூடிய ஒரு பகுதி—நடவடிக்கைகளுக்குச் சாதகமானதோர் இடைவெளி மற்றும் எதிரியினுடைய வலிமை குன்றியிருக்கும் இடங்கள்.

இரண்டாவதாகப் படைகளைக் குவித்தல், முன்னேறுவதற்கான ஒரு நிலைமையையும் பின்வாங்குவதற்கான ஒரு நிலைமையையும், மாற்றுவதற்கும் மற்றும் எதிரிக்கும் மக்கள் படைகளுக்கும் இடையே நடைபெறும் முன்னேறித் தாக்குதலையும், தற்காப்பையும் மாற்றுவதற்கும் இது அவசியமாக இருந்தது. அப்படிச் செய்வதன் மூலம் முன்கை எடுத்துள்ள போர்த்தந்திர ரீதியில் மேலான நிலையிலுள்ள ஓர் எதிரியைச் செயல் தந்திர ரீதியாகக் கீழான நிலைக்கும், செயலற்ற நிலைக்கும் குறுக்கிவிட முடியும். இயல்பாகவே எல்லாப் படைகளும் குவிக்கப் படுவதில்லை; ஏனெனில், படைக்குவிப்பின் குறிக்கோளே, போர்க்களத்தில் நடவடிக்கைகளுக்கான முற்றுமுழுதான அல்லது ஒப்பீட்டளவிலான மேலாண்மையை உத்திரவாதம் செய்வதாகும். எனவே எதிரியைக் குறிப்பிட்ட இடத்திற்குள் நிறுத்திவைக்கச் செய்வதிலும், அல்லது துணை இயக்கங்களிலும் மக்கள் படைகளின் ஒரு பிரிவைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகவும் இருந்தது.

மூன்றாவதாக, செம்படையின் நடவடிக்கைகள் இயங்கிக் கொண்டே இருக்கும் போர்முறையைச் சிறப்பியல்பாகக்

கொண்டிருந்தது. நிலைகொண்டிருக்கும் போர்முறையைச் சிறப்பியல் பாகக் கொண்டிருக்கவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், செம்பகுதி (Red Area) மிகச்சிறிய பரப்பளவில் இருந்தது; எண்ணிக்கையிலும், தளவாடங்களிலும் செம்படை எதிரிக்கு மிகவும் கீழ்ப்பட்ட நிலையிலிருந்தது. மற்றும், ஒவ்வொரு தளப்பகுதியிலும் எல்லாச் சண்டையையும் செம்படையின் ஒரு தனிப்படைப் பிரிவு மட்டுமே செய்ய வேண்டியிருந்தது. ஆகவே, நிலை கொண்டிருக்கும் போர் முறை செம்படைக்கு அடிப்படையிலேயே பயனற்றிருந்தது. எனினும், அதனை முற்றிலும் தவிர்த்துவிட முடியாது. எதிரியை ஓரிடத்தில் நிலைநிறுத்த வேண்டிய நடவடிக்கையில் சில கேந்திர மான நிலைகளை விடாப்பிடியாகப் பாதுகாத்து நிற்க வேண்டி இருக்கும் ஒரு போர்த்தந்திரத் தற்காப்புப் போரிலும், மற்றும் தனிமைப்பட்டிருக்கும் எதிரிப்படையை எதிர்நோக்கியிருக்கும் ஒரு போர்த்தந்திர முன்னேறித் தாக்கும் போரிலும், நிலைபெற்றிருக்கும் போர்முறை நிச்சயமாக இன்றியமையாததாகவும், சாத்தியமான தாகவும் இருந்தது.

நான்காவதாக, விரைந்து முடிவெடுக்கும் கொள்கை. தனித் தனியான போர்கள் நடக்கும்பொழுது இக் கொள்கையைப் பின் பற்ற வேண்டியிருந்தது. ஒவ்வொரு போரும் ஒரு சில மணிகளில் அல்லது ஒன்றிரண்டு நாட்களில் முடிக்கப்பட வேண்டும். "எதிரியி னுடைய பலப்படுத்தும் அம்சங்களைத் தாக்குவதற்கு எதிரியை முற்றுகையிடுதல்" என்று அறியப்பட்டிருக்கும் செயல் தந்திரத்தில் முற்றுகையிடும் நடவடிக்கைகள் ஒரு குறிபிட்ட அளவு நீடித்து நடத்துவதற்குத் தயாரிக்க வேண்டியது அவசியமாக இருந்தது; ஆனால் இந்தச் சாகசத்தின் குறிக்கோள் முற்றுகையிடப்பட்டிருக்கும் எதிரியை முறியடிப்பதன்று. ஆனால் எதிரியைப் பலப்படுத்துவதற் குச் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் முறியடிப்பதாகும்; மேலும், இந்த முயற்சியோடு விரைந்ததொரு முடிவை எடுக்க வேண்டியது இன்னும் இன்றியமையாததாகும்.

ஐந்தாவதாக, செம்படை அதனுடைய எல்லாப் பொருள் தேவைகளையும் நடைமுறையில் எதிரியிடமிருந்து பெற்று வந்தமை யால், அழித்தொழிப்பு இன்றியமையாததாக இருந்தது. எதிரியின் மனிதசக்தியை அழித்தொழிப்பதால் மட்டுமே செம்படை தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முடியும்.

இவை செம்படையின் இராணுவக் கோட்பாடுகளில் புதிய தொரு முன்னேற்றமாக அமைந்தன; இவை உள்ளடக்கத்தில்

செழுமையாகவும், உருவத்தில் திருத்தம் பெற்றவையாகவும் இருந்தன; ஆனால் சாரத்தில் சிங்காங் மலைகளிலான போராட்டம் நடைபெற்ற சமயத்தில் உருவாக்கப்பட்ட அதே கோட்பாடுகளாகவே இருந்தன.

நான்கு எதிர்-சுற்றி வளைத்தல் இயக்கங்கள் நடைபெற்ற சமயத்தில் செம்படையினால் ஈட்டப்பெற்ற வெற்றிகள், தோழர் மாசே துங்கால் உருவாக்கப்பட்ட போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரங்கள் பற்றிய இத்தகைய வழிகாட்டும் கோட்பாடுகள்தான், செம்படை சண்டையிட்டுக் கொண்டிருந்த எதார்த்த நிலைமைகளுக்குச் சரியாகப் பொருந்தக்கூடிய ஒரே கோட்பாடுகளாக இருந்தன என்பதை முழுமையாக மெய்ப்பித்தன.

—நவசீனப் புரட்சியின் வரலாறு, ஹோ-கான்-சி.

## ஆயுதம் ஏந்திய மக்கள் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சியை எதிர்த்து நிற்கின்றனர்

1950, ஜூன் 16-இல் வெளியான பீகிங் மக்கள் தினசரி நாளிதழில் அதன் பதிப்பாசிரியர் ஒரு வாசகருக்கு எழுதிய பதில்.

**தோழர் ஹுவாங்-சே-சுன்!**

உங்கள் கடிதம் கிடைத்தது. தலைவர் மாவோவின் 'சீனப்புரட்சியும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும்' என்ற கட்டுரையைப் படித்துவிட்டுச் சீனப்புரட்சியின் தன்மைகளைப் பற்றிச் சிந்தித்தபின் "**ஆயுதம் ஏந்திய மக்கள் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சியை எதிர்த்து நிற்பதுதான் சீனப்புரட்சியின் சிறப்பியல்பு**" என்ற ஸ்டாலினது சொற்கள் சீனத்தின் வரலாற்று யதார்த்தத்திற்குப்பொருந்தி வருகின்றன எனத் தாங்கள் கருதுவதாகவும் கூறியுள்ளீர்கள். கடிதத்தில் ஒரு கேள்வியும் கேட்டுள்ளீர்கள்.

"அநேகமாக எந்நாட்டுப் புரட்சியும் இந்த ரகத்திலிருந்து வேறுபட்டிருக்கப் போவதில்லை. இதுதான் அனைத்து நாட்டுப் புரட்சிகளதும் சிறப்பியல்பு என்று கூறாமல் சீனப்புரட்சியினது சிறப்பியல்பாக மட்டுமே இதனை ஸ்டாலின் சித்தரிப்பது ஏன்?" எனக் கேட்டுள்ளீர்கள்.

இந்தச் சிறப்பியல்பு அதாவது ஆயுதம் ஏந்திய மக்கள் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சியை எதிர்த்து நிற்றல் என்ற இந்தச்சிறப்பியல்பு

கடந்த காலத்தில் எந்தவொரு முதலாளிய நாட்டுப் புரட்சியிலும் காணப்படாததாக இருந்தது என்பது தெளிவு. அரைக்குடியேற்ற அரை நிலப்பிரபுத்துவ சீனாவில் மக்கள் விடுதலை போராட்டத்தின் போது இச்சிறப்பியல்பு முதன் முதலில் தலையெடுத்தது. இருப்பினும் சில வரலாற்று நிலைமைகளில் இதுவே பல குடியேற்ற அரைக் குடியேற்ற நாடுகளின் மக்கள் விடுதலைப் போராட்டத்தின் பொதுவான இயல்பாக மாறமுடியும்.

சீனத்தின் ஆயுதப்புரட்சிபற்றி நாம் அடிக்கடி எடுத்துக் கூறுகின்ற ஸ்டாலினது புகழ்பெற்ற வார்த்தைகள் 1926, நவம்பர் 30இல் பொதுவுடைமை அகிலத்தின் செயற்குழுவின் சீன விவகார கமிஷனில் ஓர் சொற்பொழிவின் போது கூறப்பட்டவை. அதில் அவர் கூறியதாவது:

''1 , 19ஆவது நூற்றாண்டுகளில் புரட்சிகள் எப்போதுமே பின்வருமாறு தான் தொடங்கின. பொதுவாக பெருவாரியான மக்கள் ஆயுதமின்றியோ அல்லது அற்ப சொற்ப ஆயுதங்களுடனோ ஓர் ஆயுத எழுச்சியைத் தொடங்குவர். பழைய அமைப்பின் இராணுவத்துடன் மோதுவர். பழைய இராணுவத்தை ஒழித்துக் கட்ட முயலுவர். அல்லது அதில் ஒரு பகுதியைத் தமது தரப்பிற்கு வென்றெடுக்க முயலுவர். இதுதான் முந்தைய புரட்சிகர எழுச்சிகளின் வழக்கமான வடிவம். 1905இல் ரஷ்யாவிலும் இதுதான் நடந்தது.

''ஆயின், சீனத்தில் வேறுவிதமாக இருந்தது. சீனாவில் பழைய அரசாங்கத்தின் இராணுவத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுந்தது ஆயுதம் ஏந்தாத மக்களல்ல. புரட்சிகர இராணுவத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஆயுதம் ஏந்திய மக்களே. சீனாவில் ஆயுதம் ஏந்திய புரட்சியானது ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சியை எதிர்த்து நிற்கிறது. இது சீனப்புரட்சியின் சிறப்பியல்புகளுள் ஒன்று. இது சீனப்புரட்சியின் அனுகூலங்களுள் ஒன்று. சீனாவில் புரட்சிகர இராணுவத்தின் சிறப்பான முக்கியத்துவமும் இதில்தான் அடங்கியுள்ளது."

இந்தச் சிறப்பியல்பு சீனாவில் முதலில் தோன்றியது. ஏனெனில் சீனா பெரிய மிக முக்கியமான அரைக்குடியேற்ற அரைநிலப்பிரபுத்துவ நாடாக இருந்தது. சீனமக்களின் எதிரிகள் ஏகாதிபத்தியமும் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து நின்ற உள்நாட்டுப் பிற்போக்காளர்களுமாவர். அவர்கள் மிக மிருகத்தனமான இராணுவ எதேச்சாதிகாரத்தைத் திணித்தனர். அத்துடன்சீனாவின்

மீது படையெடுத்து ஆதிக்கம் செலுத்தி வந்தது ஒரு ஏகாதிபத்திய நாடல்ல, பல ஏகாதிபத்திய நாடுகள். அவர்களிடையே முரண்பாடுகள் இருந்தன. அது உள்நாட்டுப் பிற்போக்காளர் மத்தியில் ஒற்றுமையின்மையையும் பிளவுகளையும் போராட்டத்தையும் தோற்றுவித்தது. இது ஒரு ஆயுதப் போராட்டத்தைத் தொடுத்து உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கேற்ற வசதியான சூழ்நிலைகளை மக்களுக்கு ஏற்படுத்தித் தந்தது. நீங்கள் இப்போது படித்துக்கொண்டுள்ள 'சீனப்புரட்சியும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும்' என்ற கட்டுரையில் தோழர் மாசேதுங் தெளிவாக சுட்டிக் காட்டினார்:

''இத்தகைய எதிரிகளின் முன், சீனப்புரட்சியின் முறையும் பெரும் வடிவமும் அமைதியானதாக இருக்கமுடியாது. ஆயுதந் தாங்கியதாகவே இருக்கமுடியும் என்பது ஏற்கனவே முடிவு கட்டப் பட்டுவிட்ட விசயம். ஏனெனில் நமது எதிரிகள் அமைதியான நடவடிக்கைகளுக்கான எந்தச் சாத்தியக் கூறுகளையும் சீன மக்களுக்கு விட்டுவைக்கவில்லை. சீனமக்களுக்கு எவ்வித அரசியல் சுதந்திரமும் இல்லை. 'சீனப்புரட்சியின் சிறப்பியல்பு ஆயுதம் ஏந்திய மக்கள் ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சியை எதிர்த்து நிற்கிறார்கள்' என்பதாகும் என ஸ்டாலின் கூறினார். இது மிகமிகச் சரியான கருத்தாகும்.''

## போரும் போர்த்தந்திரமும்

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஆறாவது மகாநாட்டின் ஆறாவது முழு அமர்வுக் கூட்டத்தில் (1936, நவம்பர் 6) தோழர் மாசேதுங் தொகுத்துக் கூறியதின் ஒரு பகுதியான **'போரும் போர்த் தந்திரமும் பற்றிய பிரச்னைகள்'** என்ற கட்டுரையில் அவர் இன்னும் மிகத் துல்லியமாகச் சுட்டிக் காட்டுகிறார்:

''ஒரு முதலாளித்துவ நாட்டில் பாசிசமோ போரோ இல்லாத காலங்களில் நிலைமை பின்வருமாறு உள்ளது. உள்நாட்டைப் பொறுத்தவரை அந் நாட்டில் ஒரு நிலப்பிரபுத்துவ அமைப்பு இல்லை. மாறாக ஒரு முதலாளிய சனநாயக அமைப்பு நிலவுகிறது; அயல் நாடுகளுடனான உறவில் அது எவ்வித தேசிய ஒடுக்கு முறைக்கும் உள்ளாகவில்லை. மாறாக பிறதேசங்களை ஒடுக்குகிறது. இந்தச் சிறப்பியல்புகளின் அடிப்படையில்பார்த்தால் எந்த முதலாளிய நாட்டிலும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் பணி சட்டரீதியான போராட்டம், தொழிலாளர்களைப் பயிற்றுவித்தல், வலிமையைப் பெருக்கிக் கொள்ளுதல், முதலாளியத்தை இறுதியாகத் தூக்கியெறிய

தயாரித்தல் என்ற ஒரு நீண்ட காலகட்டத்தினூடாகக் கடந்து செல்வதில் அடங்கியுள்ளது.''

''அவ்விடங்களில் ஒரு நீண்ட சட்டரீதியான போராட்டக் காலம் எனில் பாராளுமன்ற மேடைகளைப் பயன்படுத்திக்கொள்ளல் என்று பொருள்; பொருளாதார, அரசியல் வேலை நிறுத்தங்கள் என்று பொருள்; தொழிற்சங்கங்களை அமைத்தல், தொழிலாளர் களைப் பயிற்றுவித்தல் என்று பொருள். அங்கு அமைப்பு வடிவம் சட்டரீதியானது. போராட்ட வடிவம் இரத்தம் சிந்தாதது (போர் போன்றதில்லை). அவ்விடத்துப் பொதுவுடைமைக் கட்சிகளைப் பொறுத்தமட்டில் போர் என்றால் தத்தமது நாட்டு ஏகாதிபத்தியப் போர்களை எதிர்த்தல் என்று பொருள். இத்தகைய போர்கள் தோன்றுமேயானால் தமது நாட்டின் தோல்வியை உறுதிப்படுத்து வதே கட்சியின் பணியாகும்.''

''கட்சி விரும்புகின்ற ஒரே போர் உள்நாட்டுப் போரே ஆகும். அதற்காக அது தயாரித்தும் வருகின்றது. ஆயினும் உடைமை வர்க்கம் அண்மையிலே வலிமையற்றதாகும் வரையிலும், பெரும் பான்மை பாட்டாளிகள் ஒரு ஆயுதம் தாங்கிய எழுச்சியையும் போரையும் நடத்த உறுதிபூணும் வரையிலும் விவசாய மக்கள் திரள் பாட்டாளி வர்க்கத்திற்கு உதவ முன் வரும் வரையிலும் இத்தகைய போரை மேற்கொள்ளலாகாது. ஒரு எழுச்சிக்கும் போருக்கும் உகந்த நேரம் வந்தபின் நகரங்கள் முதலில் பிடித்துக் கொள்ளப்பட வேண்டும். பின்னர் கிராமப் புறங்கள் தாக்கப்பட வேண்டும். இது துளிக்கூட மாற்றப்பட முடியாதது. இவையனைத்தையும் முதலாளிய நாட்டுப் பொதுவுடைமைக் கட்சிகள் நடைமுறைப்படுத்து கின்றன. ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் போது உறுதிப்படுத்தப் பட்டன.''

''ஆயினும் சீனா அதேபோன்றில்லை. சீனாவின் சிறப்பியல்பு இந்நாடு ஒரு சுதந்திர சனநாயக நாடல்ல, மாறாக ஒரு அரைக் குடியேற்ற அரைநிலப்பிரபுத்துவ நாடாகும். உள்நாட்டில் சனநாயக அமைப்பில்லை. நிலப்பிரபுத்துவ அமைப்பின் ஒடுக்குமுறையே உள்ளது. அயல்நாட்டு உறவில் தேசிய சுதந்திரமில்லை, ஏகாதி பத்திய ஒடுக்குமுறையே உள்ளது. எனவே பயன்படுத்திக் கொள்வ தற்குப் பாராளுமன்றங்களுமில்லை. வேலை நிறுத்தங்களை நடத்த தொழிலாளர்களைத் திரட்ட சட்டபூர்வ உரிமைகளும் இல்லை.''

''இங்கு அடிப்படையில் பொதுவுடைமைக் கட்சியின் பணி. எழுச்சியையும் போரையும் நடத்துவதற்காக ஒரு நீண்ட சட்டரீதி

களின் பரந்துபட்ட மக்களின் அரசியல் விழிப்புணர்வை அளவிடற்கரிய விதத்தில் விரைவுபடுத்தியுள்ளன. அத்துடன் பெரும்பாலான விஷயங்களில் இந்தப் புரட்சிகர ஆயுத எழுச்சிகள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களின் வளர்ச்சியுடனும் நாட்டிற்குள் வர்க்கப் போராட்டக் கூர்மையின் வளர்ச்சியுடனும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன.''

## குடியேற்ற நாடுகளுக்கான படிப்பினைகள்

சீனாவின் புரட்சிகர அனுபவத்தின் அடிப்படையிலும் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய அரசியல் நிலையின் ஒரு சரியான ஆய்வின் அடிப்படையிலும் தோழர் லியூசாசி சென்ற டிசம்பரில் நடந்த ஆசிய ஆஸ்திரேலிய நாடுகளின் தொழிற்சங்க மாநாட்டுத் தொடக்க உரையில் மேலும் கட்டிக் காட்டினார்:

''குடியேற்ற அரைக்குடியேற்ற ஆதிக்கத்தின் கீழுள்ள மக்களுக்கு ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் குற்றேவலர்களும் எவ்வித சனநாயக உரிமைகளையும் அளிக்கவில்லை. உதாரணமாக, முன்பு சீனத்தில் இப்படித்தான் இருந்தது. புரட்சியாளர்களாகிய நாங்கள் ஏகாதிபத்தியவாதிகளாலும் அவர்களது கையாட்களாலும் வேட்டையாடப்பட்டோம். வெள்ளைப் பயங்கர ஆட்சியில் நகரங்களில் காலூன்ற முடியவில்லை. அதன் விளைவாக நாங்கள் கிராமப் புறங்களுக்கோ அல்லது மலைகளுக்கோ சென்றுதான் ஆயுதங்களைக் கொண்டு எங்களைத் தற்காத்துக் கொள்ள முடிந்தது.

''ஒரு குடியேற்ற அல்லது அரைக்குடியேற்ற மக்களுக்கு தம்மைத் தற்காத்துக்கொள்ள எந்த ஆயுதங்களும் இல்லையேல் அவர்களுக்கு ஒன்றுமேயில்லை. பாட்டாளி வர்க்க அமைப்புகள் நிலைநிற்பதும் வளர்வதும், தேசிய ஐக்கிய முன்னணி நிலைநிற்பதும் வளர்வதும் இத்தகைய ஆயுதப் போராட்டங்கள் நிலைநிற்பதுடனும் வளர்வதுடனும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமான தமது போராட்டத்தில் பல குடியேற்ற அரைக்குடியேற்ற மக்களுக்கு இதுதான் ஒரே பாதை.''

ஆகவே ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சியை ஆயுதம் ஏந்திய மக்கள் எதிர்த்து நிற்பது என்ற சிறப்பியல்பு சீனப்புரட்சிக்கு மட்டுமே உரியதல்ல என்பது தெட்டத்தெளிவு. தற்போதைய நிலைமைகளில் அது பல குடியேற்ற அரைக்குடியேற்ற மக்களால் நடத்தப்படும் விடுதலைப் போராட்டங்களின் பொதுவான சிறப்பியல்பாக மாற முடியும், மாறவேண்டும்.

பொதுவுடைமைக் கட்சிகள் தொழிலாளர் கட்சிகளின் தகவல் மையத்தின் **'நீடித்த அமைதிக்கும் மக்கள் சனநாயகத்திற்கும்'** என்ற பத்திரிகையின் இவ்வருட சனவரி 27 இதழில் வெளியான ஓர் தலையங்கத்தில் தோழர் லியூசாசி குறிப்பிட்டது போல சீன மக்கள் பின்பற்றிய பாதை ''பல குடியேற்ற மற்றும் சார்பு நாட்டு மக்கள் தேசியச் சுதந்திரத்திற்கும் மக்கள் சனநாயகத்திற்கு மான தமது போராட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பாதை யாகும்" எனக் கூறப்பட்டுள்ளது. அத்தலையங்கம் மேலும் சுட்டிக் காட்டுவது:

''சீனா, வியத்நாம், மலேயா மற்றும் பலநாட்டு அனுபவம் காட்டுவது போல பல குடியேற்ற மற்றும் சார்புநிலை நாடுகளில் ஆயுதப் போராட்டம்தான் தேசிய விடுதலை இயக்கத்தின் தலையாய வடிவமாக தற்போது ஆகி வருகிறது.''

இந்தியாவிற்குச் சீனப்புரட்சிகர அனுபவத்தின் முக்கியத் துவத்தை அது வலியுறுத்தியது. இத்தலையங்கம் வெளியிடப்பட்ட பின் இந்தியப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச்செயலாளர் ரணதிவே ''இத்தலையங்கத்தின் முடிவுகளோடு பூரணமாக ஒத்துப்போவதாக" அறிக்கை வெளியிட்டார். அவர் மேலும் கூறினார்:

''தோழர் மாசேதுங்கின் தலைமையில் சீனப்பொதுவுடைமைக் கட்சி, சீனமக்களின் வெற்றிவாகை சூடிய விடுதலைப் போராட்டப் போக்கில் லெனினதும், ஸ்டாலினதும் போதனைகளை வெற்றி கரமாகப் பிரயோகித்துள்ளது. சீனமக்களின் இந்த வெற்றிவாகை சூடிய விடுதலைப் போராட்டத்தின் படிப்பினைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை இட்டுச் செல்லும் பணியை ஏற்றுக் கொண்டுள்ள இந்தியப் பொதுவுடைமைக் கட்சிக்கு ஒரு பிழையற்ற திசைகாட்டியாக விளங்கும்.''

ஏகாதிபத்திய ஆக்ரமிப்பிற்கு எதிரான ஆயுதப் போராட்டம் பல குடியேற்ற அரைக்குடியேற்ற நாட்டு விடுதலைக்கு இன்றியமை யாதது. ஆனால் இத்தகைய புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்கான நேரமும் இடமும் பருண்மையான நிலைமைகளின் படியே தீர்மானிக்கப்பட வேண்டும். தேவையான நிலைமைகளும் தயாரிப்புகளுமின்றி எந்தக் குடியேற்ற அல்லது அரைக்குடியேற்ற நாட்டிலும் எந்த நேரத்திலும் அது நடத்தப்பட்டு விட முடியாது. புறநிலைமைகள் இந்த ஆயுதப் போராட்டத்தை அனுமதிக்கிற நாடுகளிலும் இந்த ஆயுதப் போராட்டம் வெற்றியடையுமா

இல்லையா என்பது அந்நாட்டு மக்கள் தமக்குத் தலைமை தாங்க ஒரு தொழிலாளி வர்க்கக்கட்சியைப் பெற்றிருக்கிறார்களா இல்லையா, அதன் தலைமை சரியானதா இல்லையா என்ற அகநிலைமைகளை பொறுத்த விஷயம். தலைவர் மாவோவால் தலைமை தாங்கப்பெற்ற சீனப் பொதுவுடைமைக் கட்சியின் சரியான அரசியல் இராணுவப் பாதையின் காரணமாகத்தான் சீனமக்கள் அவர்களது மாபெரும் வெற்றியைச் சாதிக்க முடிந்தது.

இன்று வியத்நாமிய மக்கள் தமது ஆயுதப் போராட்டத்தில் அபாரமான வெற்றிகளை ஏற்கனவே அடைந்துவிட்டனர். பர்மா, மலேயா, பிலிப்பைன்ஸ் தீவுகள் இன்னும் பல நாடுகளில் மக்கள் ஆயுதப் போராட்டம் பெரும் விரிவாக்கக் கட்டத்தில் உள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் இப்போராட்டங்கள் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் நடத்தப்படுகின்றன.

ஏகாதிபத்தியத்தினாலும் அதன் குற்றேவலர்களான உள் நாட்டுப் பிற்போக்காளர்களாலும் கடுமையாக ஒடுக்கப்பட்டுத் தாக்கப்பட்டு வருகின்ற பிற குடியேற்ற மற்றும் சார்புநிலை நாட்டு மக்களுக்குச் 'சனநாயக உரிமைகள்' இல்லை. சட்டப்பூர்வமான போராட்டங்கள் பற்றிய மாயைகள் வேகமாகக் கரைந்து வருகின்றன. சூழ்நிலைகள் அனுமதிக்கும்போது அவர்களும் கூட ஆயுதப் போராட்டப் பாதையில் இறங்குவர். அவர்களுக்கு மட்டும் ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியின் சரியான தலைமை இருந்து தமது போராட்டங்களிலிருந்து அனுபவங்களைப் பெறுவார்களேயானால் இந்நாட்டுத் தேசிய விடுதலை இயக்கங்கள் வெற்றியை நோக்கிப் பீடுநடை போடும் என்பது உறுதி.

# 32

# பிற்சேர்க்கை

## நமது கட்சியின் வரலாற்றில் சில பிரச்சினைகள் பற்றிய தீர்மானம்

*சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஆறாவது மையக் குழுவின் விரிவாக்கப்பட்ட ஏழாவது முழு அமர்வால் 1845, ஏப்ரல் 20இல் நிறைவேற்றப்பட்டது.*

I

1921இல் சீனப் பொதுவுடைமைக் கட்சி தோன்றியதிலிருந்து அது, அனைத்தையும் தழுவிய உண்மையாகிய மார்க்சிய-லெனினியத்தைச் சீனப் புரட்சியின் பருண்மையான நடைமுறையுடன் ஒருமைப்படுத்தி அதன் எல்லா வேலைகளினதும் வழிகாட்டும் நெறிமுறையாகக் கொண்டுள்ளது; சீனப் புரட்சியில் தோழர் மாசேதுங்கின் கோட்பாடும் நடைமுறையும் இந்த ஒருமைப்பாட்டை குறிக்கின்றன. நமது கட்சியை நிறுவிய உடனேயே ஒரு புதிய கால கட்டம் தொடங்கியது; தோழர் மாவோ சுட்டிக் காட்டியபடி இது புதிய சனநாயகப் புரட்சிக் கால கட்டமாகும். (1921 முதல் 1945 வரையிலான) இருபத்து நான்கு ஆண்டுக்காலம் புதியசனநாயகப் புரட்சிக்காக நடந்த போராட்டம் மூன்று வரலாற்றுக் காலப் பகுதிகளைக் கொண்டதாகும். முதலாவது மாபெரும் புரட்சி, நிலப்புரட்சி (Agrarian Revolution), சப்பானிய எதிர்ப்புப் போர் ஆகியவையே இந்தக் காலப் பகுதிகளாகும்; இந்தக் காலப் பகுதிகள் முழுவதிலும் நமது கட்சி சீன மக்களின் எதிரிகளான ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிரான மிகமிகக் கடுமையானதும் கசப்பானதுமான புரட்சிகரப் போராட்டங்களில் பரந்துபட்ட மக்கள் திரள்

களுக்குத் தலைமை தாங்கி இடைவிடாது வழிநடத்திச் சென்றது. அப்போராட்டங்களில் மாபெரும் வெற்றிகளையும் செழுமையான அனுபவத்தையும் ஈட்டியது. கட்சி தன் போராட்டத்தின் போதே (ஊடாகவே) தனக்கென ஒரு தலைவரை, தோழர் மாசேதுங்கை உருவாக்கிக் கொண்டது. தோழர் மாசேதுங் சீனப் பாட்டாளி வர்க்கத்தினதும், சீன மக்களதும் சார்பாளராக விளங்கி, மானுட அறிவுக் கருவூலத்தின் (Wisdom) மலைமுகடான மார்க்சிய-லெனினிய அறிவியல் கோட்பாட்டை ஆக்கப் பூர்வமாகச் சீனாவில் பயன்படுத்தினார். சீனாவோ ஒரு பரந்த அரை நிலப்பிரபுத்துவ அரைக் குடியேற்ற நாடாகும். அங்கே உழவர்களே மக்களில் மிகப் பெரும் பான்மையினர் ஆவர்; அங்கே உடனடிக் கடமை ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்துப் போரிடுதலாகும். சீனா அகன்ற நிலப்பரப்பையும், மிகப் பெரிய மக்கள் தொகையையும் கொண்டது; அங்கே நிலைமை மிகமிகச் சிக்கலானது; போராட்டம் மிகமிகக் கடினமானது. அப்படிப்பட்ட சீன நாட்டில் குடியேற்ற மற்றும் அரைக் குடியேற்றப் பிரச்சினை பற்றி லெனினும், ஸ்டாலினும் வகுத்தளித்த கோட்பாடுகளையும், சீனப்புரட்சி பற்றிய ஸ்டாலின் கோட்பாட்டையும் மாவோ ஒளிதுலங்க வளர்த்தெடுத்தார். கட்சி சரியான மார்க்சிய லெனினிய வழியை உறுதியாகப்பற்றிக் கொண்டதாலும், இந்த வழியை எதிர்த்துப் பிழையான கருத்துகளை எல்லாம் எதிர்த்து ஒரு வெற்றிகரமான போராட்டத்தைத் தொடுத்ததாலும் மட்டுமே அது இந்த மூன்று காலப்பகுதிகளிலும் மாபெரும் சாதனைகளை ஈட்டியிருக்கிறது; இதற்கு முன் நிகழ்ந்திராத சித்தாந்த அரசியல் மற்றும் அமைப்புத் திட்டத்தையும் ஒற்றுமையையும் இன்றைக்கு எட்டியிருக்கிறது; இன்றைய ஆற்றல் மிக்கப் புரட்சிகரச் சக்தியாக வளர்ந்திருக்கிறது; 1,200,000 உறுப்பினர்களுக்கு மேலே கொண்டிருக்கிறது. ஏறத்தாழ பத்துக்கோடி (100,000,000) மக்கள் தொகையையும், ஏறத்தாழ பத்து இலட்சம் இராணுவத்தையும் கொண்ட சீனாவின் (விடுவிக்கப்பட்ட) விடுதலைப் பகுதிகள் சப்பானிய எதிர்ப்புப் போரிலும், விடுதலைப் போரிலும் முழு நாட்டின் ஈர்ப்பு மையமாகி விட்டது.

## II

1921 இலிருந்து 1927 வரையில், அதிலும் குறிப்பாக 1924 இல், இருந்து 1927 வரையில் நடந்த சீனாவின் புதிய சனநாயகப் புரட்சியின் முதலாவது காலகட்டத்தில் சீன மக்களின் மாபெரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சி நடந்தது. இது பொதுவுடைமை அகிலத்தால் சரியாக

வழி காட்டப்பெற்றது. இது சீனப் பொதுவுடைமைக் கட்சியின் சரியான தலைமையால் செல்வாக்குக்கு உட்பட்டு, முன்னோக்கி உந்தித்தள்ளப் பெற்று அமைப்பாக்கப் பெற்றது; இந்தப் புரட்சி விரைந்து முன்னேறி மாபெரும் வெற்றிகளை அடைந்தது. இந்த மாபெரும் புரட்சியில் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினர் கள் அனைவரும் பிரம்மாண்டமான புரட்சிகரப் பணியைச் செய்தனர்; நாடு முழுவதிலும் தொழிலாளர், இளைஞர் மற்றும் உழவர் இயக்கங்களைக் கட்டி வளர்த்தனர்; கோமின்டாங்கை மீளமைப்பாக்குவதிலும் (Reorganisation), தேசியப் புரட்சிகர இராவணுத்தை உருவாக்குவதிலும் உதவி முன்னுக்குத் தள்ளினர்; கிழக்கத்திய போர் எழுச்சி நடவடிக்கைகளுக்கும், வட படை யெடுப்புக்கும் அரசியல் முதுகெலும்பாக அமைந்தனர்; ஏகாதிபத்தி யத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக மாபெரும் தேசிய அளவிலான போராட்டத்தைத் தலைமைதாங்கி நடத்தினர்; எனவே சீனப்புரட்சியின் வரலாற்றில் மிகமிக மேன்மையான அதிகாரத்தை எழுதினர். இருப்பினும், 1927இல் கோமின்டாங்கி லிருந்து பிற்போக்குக் கும்பல்-அப்போது அது நமது நேச அணியாக இருந்தது-புரட்சிக்கு இரண்டகம் விளைவித்தபடியால் புரட்சி தோல்வியில் முடிந்தது; ஏனெனில் ஏகாதிபத்தியம், பிற் போக்குக் கோமிந்தாங் கும்பல் இரண்டும் சேர்ந்த சக்திகள் அப்போது மிகவும் வலிமை பெற்றிருந்தன; ஏனெனில் குறிப்பாக இந்தப் புரட்சி முடிவடையும் காலப்பகுதியில் நமது கட்சியிலிருந்த வலதுசாரி கருத்தியல் -சென் து-சியு வால் பிரதிநிதித்துவம் செய்யப் பட்டது—அப்போது சரணடைவு வழியாக வளர்ச்சிடைந்து (ஏறத் தாழ ஆறு மாதங்கள் வரையில்), கட்சியின் தலைமை அமைப்பில் ஆதிக்கம் செலுத்தியது. இந்த வலதுசாரிக் கருத்தியல் பொது வுடைமை அகிலத்தினதும் தோழர் ஸ்டாலினதும் பல அறிவார்ந்த வழிகாட்டுதல்களைச் செயல்படுத்த மறுத்தது; மாசேதுங் மற்ற தோழர்கள் ஆகியோரது சரியான நோக்குகளை ஏற்க மறுத்தது. இதன் விளைவாக, கோமின்டாங் புரட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டு மக்கள்மேல் திடீரெனத் தாக்குதல் தொடுத்தபோது, கட்சி யும் மக்களும் அமைப்பாக வீறார்ந்த எதிர்ப்புக்காட்ட முடிய வில்லை.

1927 இல் புரட்சி தோற்கடிக்கப்பட்டதற்குப் பிறகுள்ள பத்தாண்டுகாலத்தில், 1937 இல் சப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போர் வெடிக்கிற வரையில், தீவிர பயங்கரவாத எதிர்ப்புரட்சி ஆட்சியின் கீழ் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு என்ற மாபெரும் பதாகையை ஒரு மனதோடு தொடர்ந்து

உயர்த்திப் பிடித்தும், தொழிலாளர்கள், உழவர்கள், படை வீரர்கள், புரட்சிகர அறிவாளிகள், மற்ற புரட்சியாளர்கள் ஆகிய பரந்த மக்கள் திரளை மாபெரும் அரசியல், இராணுவம் மற்றும் கருத்தியல் (சித்தாந்தம்) போராட்டங்களில் தலைமைதாங்கி வழி நடத்திச்சென்றதும் சீனப் பொதுவுடைமைக் கட்சியாகும்; சீனப் பொதுவுடைமைக் கட்சி மட்டுமேயாகும். இந்தப் போராட்டங்களின் போது சீனப் பொதுவுடைமைக் கட்சி செம்படையை உருவாக்கியது; தொழிலாளர், உழவர்கள், மற்றும் படை வீரர்கள் கழகங்களின் அரசாங்கத்தை நிறுவியது; புரட்சிகரத் தளங்களை அமைத்தது; சிதறி வறுமைதாக்கி வலுக்குன்றிக் கிடந்த உழவர்களைத் திரட்டிப் பிற்போக்குக் கோமின்டாங் அரசாங்கத் தாக்குலையும் 1931 செப்டம்பர் 18 க்குப் பிறகு சப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும் எதிர்த்தது. இதன் விளைவாக, சீன மக்கள் தங்களது தேசிய மற்றும் சமூக விடுதலையின் புதிய சனநாயக நோக்கத்தில் மாபெரும் வெற்றியடைந்தனர். அதுபோலவே, டிராட்ஸ்கிய சென் து-சியு கும்பல், லோ சாங்கியுங் கும்பல், சாங் குவோ-தாவோ மற்றும் கட்சியைப் பிளவுபடுத்த முயன்றவர்கள் கட்சிக்கு இரண்டகம் (துரோகம்) இழைத்தவர்களது எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்கு எதிராகக் கட்சி முழுவதுமே சண்டை போட்டது; இவ்வாறாக, மார்க்சிய-லெனினியப் பொது கோட்பாடு களின் அடிப்படையில் கட்சியின் ஒற்றுமை உறுதி செய்யப்பட்டது. இந்தப் பத்தாண்டுக் காலத்தில் கட்சியின் இப்பொதுக் கொள்கையும், அக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக நடந்த வீரஞ் செறிந்த போராட்டங்களும் முற்றிலும் சரியானவையாகவும், இன்றியமையாதவையாகவும் இருந்தன. எண்ணற்ற கட்சி உறுப் பினர்களும், எண்ணற்ற மக்களும், கட்சிக்கு வெளியே இருந்த புரட்சியாளரில் எண்ணற்றோரும் பல்வேறு முனைகளில் சினமிக்கப் (feiry) புரட்சிகரப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினர்; தயக்கமின்றிச் சண்டையிட்டுத் தங்களைத் தியாகம் செய்தனர்; பிறர் உடைப்புகளில் வீழ்ந்த போதும் அவர்கள் வெல்லற்கரியவர் களாய் அவற்றைத் தாண்டிச் சென்றனர். தங்கள் ஊக்கத்தாலும் (spirit) செயல்களாலும் அவர்கள் நமது தேசத்தின் வரலாற்றில் அழியாத இடத்தை வென்றனர். இதெல்லாம் இல்லாமல் சப்பானிய எதிர்ப்புப் போர் நடந்திருக்க முடியாது; அல்லது அது நடந்திருந்தாலும், தாக்குப் பிடித்திருக்கவும் வெற்றிப் பெற்றிருக் கவும் முடியாது; ஏனெனில் மக்கள் போரில் செழுமையான அனுபவத் தைச் சேமித்துக் கொண்டிருந்த ஒரு பொதுவுடைமைக் கட்சியை அது முதுகெலும்பாகக் கொண்டிருக்காமல் இவற்றையெல்லாம் சாதித்திருக்க முடியாது. இது ஐயத்திற்கிடமில்லாத ஒன்றாகும்.

அந்தப் பத்தாண்டுகளில் நமது கட்சி தோழர் மாசேதுங்கைத் தன் சார்பாளராகக் கொண்டு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரது புரட்சிகரக் கோட்பாடுகளைச் சீன நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் ஆக்கபூர்வமாகச் செயல்படுத்து வதில் மிக மாபெரும் முன்னேற்றமடைந்தது என்ற உண்மையைத் தனிச்சிறப்பாக எண்ணி நாம் களிபேருவகை அடைகிறோம். இறுதியாக, விவசாயப் போர் முடியப்போகும்போது, நமது கட்சி தோழர் மாசேதுங் தலைமையை மையத்தலைமை அமைப்பிலும் (leading body) கட்சி முழுவதிலும் உறுதியாக நிறுவியது. அந்தக் காலப்பகுதியில் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மிக மிக மாபெரும் சாதனையாகும் இது; இது சீன மக்களை விடுதலை செய்வதற்கு மிகவும் நிச்சயமான உத்தரவாதமாகும்.

எனினும், அந்தப் பத்தாண்டுகளில், நமது கட்சி செய்த மாபெரும் சாதனைகளைத் தவிர, குறிப்பிட்ட சில நேரங்களில் பல தவறுகளையும் செய்திருக்கிறது. 1931 ஜனவரியில் நடந்த கட்சியின் ஆறாவது மையக்குழுவின் நான்காவது குழு அமர்வுக் கூட்டத் தொடர்க் காலத்திலிருந்து, 1935 இல் நடந்த (சுன்யி கூட்டம்—The Tsynyi meeting) மையக்குழுவின் அரசியல் தலைமைக் குழுவின் (Political Bureau) விரிவாக்கப்பட்ட கூட்டம் வரையிலான காலம் வரையில் கட்சி கடைப்பிடித்த அரசியல், இராணுவம் மற்றும் அமைப்பு வழிகளில் இருந்த ''இடதுசாரி'' தவறு இவற்றிலெல்லாம் மிகவும் மோசமான தவறு ஆகும். அந்தத் தவறு நமது கட்சிக்கும், சீனப்புரட்சிக்கும் மிகக் கடுமையான இழப்பு களை ஏற்படுத்தியுள்ளது.

வரலாற்றுப் பாடங்களைக் கற்றறிவதற்காகவும், ''வருங் காலத் தவறுகளைத் தவிர்ப்பதற்காக கடந்த காலத் தவறுகளி லிருந்து கற்பதற்காகவும்' நோயாளியைக் காப்பாற்றுவதற்காக நோயைப் போக்கவும்", ''முன்னால் போன தேர் குடை சாய்ந்ததை வைத்துப் பின்னால் வருகிற தேரை எச்சரிக்கவும்,'' ஒரு பொது வான மார்க்சிய-லெனினியக் கருத்தியலின் அடிப்படையில் கெட்டி யான எஃகைப் போன்று ஓர் ஒத்திசைந்த குடும்பமாகக் கட்சி முழுவ தையும் ஒற்றுமைப்படுத்தவும், சப்பானிய எதிர்ப்புப் போரில் முழு வெற்றி அடையப் போரிடுவதற்கும், சீனமக்களை முழுமையாக விடுதலை செய்வதற்கும், அந்தப் பத்தாண்டுக் காலத்தின் போதான கட்சி வரலாற்றின் சில குறிப்பான பிரச்சினைகளிலும், மற்றும் குறிப்பாக நான்காவது முழு அமர்வுத் தொடர்க் கூட்டத்திலிருந்து சுன்யி கூட்டம் வரையிலான மையத் தலைமையின் வழியின் மீதும்

முறையான முடிவுகளை எடுத்தல் பயனுள்ளதும், இன்றியமையாததுமாகும் என்று சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஆறாவது மையக் குழுவின் இந்த விரிவாக்கப்பட்ட ஏழாவது முழு அமர்வுத் தொடர்க் கூட்டம் கருதுகிறது.

## III

1927 இல் புரட்சி தோல்வியடைந்த பிறகு, ''இடது" வலது திசை விலகல்கள் ஆகிய இரண்டுமே நமது கட்சியில் நிகழ்ந்தன.

முதலாவது மாபெரும் புரட்சிக் காலப்பகுதியைச் சேர்ந்த சென் து-சியு வைத் தங்கள் சார்பாளராகக் கொண்ட கையளவு சரணடைவாளர்கள் புரட்சியின் எதிர்காலம்பற்றி நம்பிக்கையற்றுப் போய்ப் படிப்படியாகக் கலைப்புவாதிகளாக மாறி விட்டனர். அவர்கள் பிற்போக்கு டிராட்ஸ்கிய நிலையை எடுத்தனர்; 1927 புரட்சிக்குப் பிறகு சீன உடைமையாளர்கள் ஏகாதுபத்திய, நிலப்பிரபுத்துவ சக்திகளை வென்றுவிட்டார்கள் என்றனர்; சீன உடைமைவர்க்கம் மக்களின்மேல் ஆட்சியை நிலைப்படுத்திக் கொண்டுள்ளது என்றனர்; சீனச் சமுதாயத்தில் ஏற்கனவே முதலாளியம் ஆதிக்கம் செலுத்துகிறதென்றும், அது அமைதியான முறையில் வளர்ச்சிபெறும் என்றும் கூறினர். எனவே, சீனாவில் முதலாளிய சனநாயகப் புரட்சி நிறைவுபெற்று விட்டது என்றும், சீனப்பாட்டாளிவர்க்கம் வருங்காலத்தில்''சோசலிசப் புரட்சியைக்'' நிறைவேற்றுவதற்காகக் காத்திருக்க வேண்டுமென்றும், அதுவரையில் இப்போதைக்கு ''ஒரு தேசியச் சட்டமன்ற''த்திற்கான முழக்கத்தை மையமாகக் கொண்ட சட்டபூர்வ இயக்கங்கள் என்பவற்றில் மட்டுமே ஈடுபட வேண்டும் என்றும் அவர்கள் ஒருதலையாக முடிவெடுத்து வலியுறுத்தினர்; இவ்வாறாக அவர்கள் புரட்சிகர இயக்கத்தைக் கலைத்தனர். எனவே, அவர்கள் கட்சி தொடுத்த எல்லாப் புரட்சிகரப் போராட்டங்களையும் எதிர்த்தனர்; செம்படை இயக்கத்தைச் ''சுற்றியலையும் கலகக்காரர்களின் இயக்கம்'' என்று இழித்துக் கூறினார்கள். அவர்கள் கட்சியின் அறிவுரையை ஏற்றுத் தங்களுடைய சந்தர்ப்பவாத, கலைப்புவாத, கட்சி எதிர்ப்பு நோக்கு நிலைகளைக் கைவிட மறுத்தனர்; இது மட்டுமின்றி, பிற்போக்கு டிராட்ஸ்கியவாதிகளுடன் சேர்ந்து, கட்சிக்கு எதிரான உட்குழுவை உருவாக்கவும் செய்தனர். இதன் விளைவாக அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டியதாயிற்று. பின்னர் அவர்கள் எதிர்ப்புரட்சியாளர்களாக இழிந்து போனார்கள்.

மறுபுறம், கோமின்டாங்கின் படுகொலைக் கொள்கை மேலுள்ள வெறுப்பாலும், சென் து-சியூவின் சரணடைவுக் கொள்கையின் மேலுள்ள சீற்றத்தாலும் சிறு உடைமையாளருடைய புரட்சிகர வேகம் சீர்கேடடைந்தது. இந்தக் கேடும் கட்சிக்குள் எதிரொலித்தது; கட்சியில் "இடது" மனப்போக்கு வேகமாக வளர வழி வகுத்தது. இந்த இடது மனப்போக்கு 1927 ஆகஸ்டு 7 ஆம் நாள் நடைபெற்ற மையக் குழுவின் அவசரக் கூட்டத்தில் முதலில் தோன்றியது. கட்சியின் வரலாற்றில் ஆகஸ்டு 7 ஆம் நாள் கூட்டம் ஓர் ஆக்கபூர்வமான பங்களிப்பைக் கொடுத்தது. சீனப் புரட்சியின் மாறு நிலைக் கட்டத்தில் அக்கூட்டம் சென் து-சியூவின் சரணடைவுச் செயலைத் தீர்மானகரமாகத் திருத்தி முடிவுக்குக் கொண்டு வந்தது. நிலப் புரட்சி மற்றும் கோமின்டாங் பிற்போக்காளரின் படுகொலைகள் பற்றிய பொதுக் கொள்கையைத் தீர்மானித்தது. புரட்சிப் போர் புரியும்படி கட்சியையும் மக்கள் திரளையும் அழைத்தது. இதெல்லாம் சரிதான்; கூட்டத்தின் தலையாய அம்சமாக இது அமைந்தது. ஆனால் வலது பிழைகளை எதிர்த்துப் போரிடும் போதே 'இடது' பிழைகளுக்கு வழியமைத்துக் கொடுத்தது. புரட்சிகர நிலைகளை (Positions)ப் பாதுகாக்கவும் புரட்சிகரச் சக்திகளை ஒரு திட்டமிட்ட வழியில் திரட்டவும் வெவ்வேறு இடங்களிலுள்ள வெவ்வேறு நிலைமைகளுக்கு ஏற்ப ஒன்று, பொருத்தமான எதிர்த் தாக்குதல்களைத் தொடுக்க வேண்டும் அல்லது இன்றியமையாத செயல்தந்திரப் பின்வாங்குதல்களை (Retreats) அந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள அரசியல் ரீதியாக அது தவறியது. இதற்கு மாறாக, அது துணிச்சல் வாதம் மற்றும் கட்டளை வாதம் (குறிப்பாகத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யக் கட்டாயப்படுத்துதல்) ஆகியவற்றின் பாலான போக்குகளை அது பொறுத்துக் கொண்டு ஊட்டி வளர்த்தது. அமைப்பு ரீதியாக, அக் கூட்டம் மித மிஞ்சிய, குறுகிய உட்கட்சிப் போராட்டங்களைத் தொடங்கி வைத்தது; கட்சியின் தலைமை ஊழியர்கள் தொழிலாளர் வர்க்கத்தில் பிறந்தவர்களாக மட்டுமே இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மட்டுமீறி முறையற்ற வழியில் வற்புறுத்தியது; கட்சியில் சனநாயகம் கடந்த மோசமான ஒரு நிலையைக் கொண்டு வந்தது. ஆகஸ்டு 7ஆம் நாள் கூட்டத்திற்குப் பிறகு இந்த "இடது" மனப்போக்கு வளர்ந்துகொண்டே போனது. இறுதியில் 1927 நவம்பரில் நடந்த மையத் தலைமை அமைப்பின் விரிவாக்கப்பட்ட கூட்டத்தில் அது 'புத்ஸ்சிச'

(Putschism அதாவது துணிச்சல்வாதம்) ''இடது'' வழியாக வடிவெடுத்தது.

சீனப்புரட்சி இயற்கையிலேயே நிரந்தரமான புரட்சி எனவும் எழுச்சி எனப்படும் ஒரு நிலையில் சீனப்புரட்சி இருப்பதாகவும் அப்போது புத்ஸ்சிஸ்டுகள் நிலையெடுத்தனர். அவர்கள் சனநாயகப் புரட்சியை சோசலிசப் புரட்சியுடன் சேர்த்துக் குழப்பினர். 1927 புரட்சியின் தோல்வியை அவர்கள் மறுத்தனர். இதன் விளைவாக அவர்கள் முறையாக வாபஸ் வாங்குவதற்கு அமைப்பு ரீதியாகச் செயல்பட மறுத்தனர். இதற்கு மாறாக, எதிரியின் வலிமையையும், புரட்சி தோற்கடிக்கப்பட்ட பிறகு, மக்கள் திரளின் நிலையைக் கணக்கில் எடுக்காமல், வெற்றிக்கு மிகச் சிறிதளவு கூட நம்பிக்கையற்ற உள்ளூர் எழுச்சிகளை நாடெங்கிலும் நடத்துமாறு கையளவு கட்சி உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் கட்டளையிட்டனர். இந்த அரசியல் துணிச்சல் வாதத்தோடு கூடவே, தோழர்களைத் தாக்கும் குறுகிய அமைப்புக் கொள்கையையும் கூட வளர்த்தனர். இருந்த போதிலும் வெள்ளைப் பகுதிகளில் வேலை செய்து கொண்டிருந்த தோழர் மாசேதுங் மற்றும் பல தோழர்களிடமிருந்து இத்தவறான வழிக்குச் சரியான விமர்சனமும் எதிர்ப்பும் கிளம்பியது. மேலும் நடைமுறை வேலையில் இது பல இழப்புக்களை உண்டாக்கியதால் 1928 இன் தொடக்கத்திலேயே இவ்வழியைச் செயல்படுத்துவது நிறுத்தப்பட்டது. அதே ஆண்டு ஏப்ரல் மாதத்தில் (இது தொடங்கிய ஆறு மாதத்திற்குள்ளேயே) நாடு முழுவதிலும் இது நிறுத்தப் பட்டது.

1928 ஜூலையில் நடந்த கட்சியின் ஆறாவது தேசியப் பேராயம் (காங்கிரஸ்) வைத்த வழி அடிப்படையிலேயே சரியான தாகும். அந்தக் கட்சிக் காங்கிரஸ் சீனச் சமுதாயம் அரைக் குடியேற்ற அரை நிலவுடமைச் சமுதாயமே என்று உறுதிப் படுத்தியது; இக்காலச் சீனப்புரட்சி எழக் காரணமான அடிப்படை முரண்பாடுகள் எதுவும் இன்னும் தீர்க்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியது; எனவே இக்கட்டங்களில் சீனப்புரட்சி இன்னமும் முதலாளிய சனநாயகப் புரட்சி என்றது; அந்தச் சனநாயகப் புரட்சிக் கான பத்து அம்ச செயல் திட்டம் ஒன்றை அறிவித்தது. அப்போதைய அரசியல் நிலைமை இரண்டு புரட்சிப் பேரலைகளுக்கு இடையிலான இடைக் கட்டமே என்றும், புரட்சி சமச் சீரற்று வளர்ந்துள்ளது என்றும், அந்த நேரத்தில் கட்சியின் பொதுவான கடமை தாக்குதலைத் தொடுப்பதோ

ஆட்சிக் கெதிரான எழுச்சிகளுக்கு ஆயத்தம் செய்வதோ இல்லை என்றும், மக்கள் திரளை வென்றெடுப்பதே என்றும் கட்சிப் பேராயம் சரியாகவே சுட்டிக் காட்டியது. 'வலது'' சென்-து-யிசத்தையும், 'இடது' புத்ஸ்சிசத்தையும் மறுதலித்து கட்சி இருமுனைப் போராட்டத்தை நடத்தியது. புத்ஸ்சிசம், இராணுவத் துணிச்சல் வாதம், கட்டளை வாதம் போன்ற மக்களை அந்நியப்படுத்துகின்ற போக்குகளே கட்சியிலுள்ள மிக அபாயகரமான போக்கு என்று குறிப்பாகச் சுட்டிக்காட்டியது. இதெல்லாமே முற்றிலும் தேவைப்பட்டது. மறுபுறம் ஆறாவது பேராயம் குறைபாடுகளையும் தவறுகளையும் கூடக் கொண்டிருந்தது. இடைநிலை வர்க்கங்களின் இரட்டைப் பண்புபற்றிய சரியான மதிப்பீடுகளும் கொள்கைகளும் பிற்போக்குச்சக்திகளிடையே யுள்ள உள் முரண்பாடுகளைப்பற்றிய சரியான மதிப்பீடுகளும். கொள்கைகளும் அதற்குப்போதாது. மாபெரும் புரட்சி (Great Revolution) தோற்கடிக்கப்பட்ட பின்பு முறையாக செயல்தந்திர ரீதியில் பின்வாங்குவது பற்றிய கட்சியின் தேவை பற்றிய இன்றியமையாத புரிதலும் அதற்குப் போதாது. நாட்டுப்புறத் தளங்களின் முக்கியத்துவம் பற்றியும், சனநாயகப் புரட்சியின் நீண்டகால இயல்பு பற்றியும் கூட கட்சிக்குத் தேவையான இன்றியமையாத புரிதல் போதாது. ஆகஸ்ட் 7 ஆம் நாள் கூட்டத்துக்குப் பின்னால் நிலவிய ''இடது'' கருத்துகளை முற்றிலும் துடைத்தழிப்பதை இந்தக் குறைபாடுகளும், தவறுகளும் தடுத்தால் கூட, அவை மிகவும் கடைக்கோடித் தன்மையுடையனவாக இருந்தாலும் அடுத்தடுத்து வந்த ''இடது'' கருத்துகளால் அவை மிகவும் அதிகமாகப் பெரிதாக்கப்பட்டாலும் கூட, தலையாய அம்சத்தில் கட்சிப் பேராயத்தின் சரியான நிலையை அவற்றால் ஒருபோதும் மறைக்க முடியவில்லை. பேராயம் நடந்து முடிந்த பிறகு சிலகாலம் கட்சியின் வேலைபயனுள்ளதாக அமைந்தது. அந்தக்காலத்தில் தோழர் மாவோ, ஆறாவது பேராய வழியின் சரியான அம்சத்தை வளர்த்தெடுத்து, பேராயம் தீர்க்காத அல்லது சரியில்லாமல் தீர்த்துவைத்த பற்பல சிக்கல்களைச் சரியாக நடைமுறையில் தீர்த்து வைத்தார்: அது மட்டுமின்றி, கோட்பாட்டு அளவில் சீனப்புரட்சியின் திசைவழிக்கு முழுமையான, மேலும் திட்பமான, அறிவியல் சார்ந்த மார்க்சிய லெனினிய அடிப்படையை வகுத்தளித்தார். அவருடைய வழிகாட்டலின் கீழும் செல்வாக்கின் கீழும் நாட்டிலேயே ஒரு முக்கியமான அரசியல் காரணியாகச் செம்படை இயக்கம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. வெள்ளைப் பகுதிகளில் கூட கட்சி அமைப்பும், கட்சி வேலையும் ஓரளவுக்கு மறு மலர்ச்சியடைந்தன.

ஆனால் 1929 இன் இரண்டாம் பாதியிலும் (பிற்பகுதியிலும்) 1930இன் முதற் பாதியிலும் கட்சியில் இன்னமும் நிலவிய ''இடது'' கருத்தியல்களும் கொள்கைகளும் மறுபடியும் சிறிது இடம் பிடித்துக் கொண்டன. நிகழ்ச்சிகள் புரட்சிக்குச் சாதகமாக மாறிய பொழுது இந்த அடிப்படையிலிருந்து அவை இரண்டாவது ''இடது'' வழியாக வளர்ந்தன. ஒருபுறம் சியாங்கை ஷேக்குக்கும், மறுபுறம் ஃபெங் யு-சியாங்கும் யென்சி-ஷானுக்கும் இடையில் 1930 மேயில் சண்டை வெடித்த பிறகு உண்டான உள்நாட்டு நிலைமையால் கிளர்ச்சியடைந்த, தோழர் 'லிலி-சான்' தலைமை தாங்கி நடத்திய மையக் குழுவின் (C. C)அரசியல் பிரிவு (பொலிட்டிகல் பீரோ) சூன் 11இல்''இடது''தீர்மானத்தை நிறைவேற்றியது; ''புதிய புரட்சிகரப் பேரலையும் முதலில் ஒன்று அல்லது பல மாநிலங்களில் (Provinces) வெற்றி பெறலும்'' என்பது அத்தீர்மானத்தின் பெயர்; இதில் ''இடது'' வழி இரண்டாவது முறையாக மையத் தலைமை அமைப்பில் ஆதிக்கம் செலுத்தலானது. இந்தத் தவறான வழி (லி லி-சான் வழி) எழப் பல காரணங்கள் உண்டு. புரட்சிக்கு அதன் சொந்த அமைப்பு ரீதியான வலிமையைக் கட்டி வளர்ப்பதன் மூலம் போதிய அளவு தயாரிப்புகளைச் செய்ய வேண்டும் என்பதை லி. லி. சானும் மற்ற தோழர்களும் அறிந்துகொள்ளத் தவறியதால் இத் தவறான வழி எழுந்தது; அதற்கு மாறாக அவர்கள் ''மக்கள் பெரிய நடவடிக்கைகளை மட்டுமே விரும்புகிறார்கள்; சிறியனவற்றை அன்று'' என நம்பினர்; எனவே, அந்த நேரத்தில், அவர்கள் யுத்தப் பிரபுக்களுக்கிடையிலான இடைவிடாத போர்களும், செம்படை இயக்கத்தைக் கட்டவிழ்த்துவிடத்தொடங்குவதும் வெள்ளைப் பகுதிகளில் நமது வேலையைத் தொடங்கி மறுபடியும் நடத்தலும், நாடு முழுவதிலும் ''பெரிய நடவடிக்கை''களை ஆயுத எழுச்சிகளை மேற்கொள்வதற்கு ஏற்ற நிலைமைகளை அளித்தன என்று அவர்கள் நினைத்தனர். சீனப் புரட்சியின் சமச் சீரற்ற வளர்ச்சியை அறிந்து கொள்ள அவர்கள் தவறியதாலும், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் புரட்சிகர நெருக்கடி சீராக வளர்ந்து பெருகிக் கொண்டுள்ளது என்றும், எல்லா இடங்களிலும் உடனடி எழுச்சிகளுக்கு ஆயத்தம் செய்ய வேண்டும் என்றும், குறிப்பாக உயிர் நாடியான நகரங்கள் தலைமை ஏற்று, நாடுதழுவிய புரட்சிகரப் பேரெழுச்சிக்கான மையங்களாக மாறவேண்டுமென்றும் அவர்கள் கருதியதாலும் இந்நிலை எழுந்தது. நாட்டுப்புறத் தளப்பகுதிகளை உருவாக்குவதற்கு நமது முக்கிய வலிமையை நாம் நீண்ட காலத்துக்குப் பயன்படுத்த வேண்டும்; இந்த நாட்டுப்புறத் தளப்பகுதிகளைப் பயன்படுத்தி நகரங்களைச் சுற்றிவளைக்க வேண்டும்; இத்தளப் பகுதிகளைப் பயன்படுத்தி நாடுதழுவிய புரட்சிப் பேரலையை

முன்னோக்கித் தள்ள வேண்டும் என்பதே தோழர் மாசேதுங்கின் கருத்தாகும். இதை அவர்கள் ''முற்றிலும் பிழையானது, விவசாயிகளின் மனப்போக்கான ஸ்தலத்தன்மையும் பழமைப் பற்றுமுடையது'' என்று அவதூறு பரப்பினர். உலகப்புரட்சி சமச்சீரற்ற வளர்ச்சி நிலையிலுள்ளதென்பதை அவர்கள் மறந்துவிட்டு, சீனப்புரட்சி பொதுவாக வெடித்தால் அது தவிர்க்க இயலாதபடி பொதுவான உலகப்புரட்சி வெடிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும், உலகப்புரட்சி இல்லாமல் சீனப்புரட்சி வெற்றி பெறாது என்றும் அவர்கள் நம்பியதால் இக்கருத்து எழுந்தது. சீன முதலாளிய சனநாயகப் புரட்சியின் நீண்டகாலப்பண்பை அறிந்துகொள்ள அவர்கள் தவறிவிட்டு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் வெற்றி பெறத் தொடங்குவதானது சோசலிசப் புரட்சிக்கு மாறும் கட்டத்தைக் குறிக்குமென்று அவர்கள் நம்பி, அதனால் அவர்கள் பற்பல காலங்கெட்ட ''இடது'' கொள்கைகளை வகுத்ததால் இக்கருத்து எழுந்தது. இத்தவறான பார்வைகளால் லி லி-சான் வழியைச் சார்ந்த தலைவர்கள் நாடு முழுவதிலுமுள்ள கேந்திரமான நகரங்களில் ஆயுதந் தாங்கிய எழுச்சிகளைத் திட்டமிட்டு நடத்தவும் செம்படை முழுவதையும் குவித்து இந்நகரங்களைத் தாக்கவுமான ஒரு துணிச்சல்வாதத் திட்டத்தை வகுத்தனர். அதன் பிறகு, அவர்கள் கட்சியின் முக்கியமான பல்வேறு முன்னணி (Leading bodies) அமைப்புகள், இளைஞர் அணி, தொழிற்சங்கங்கள் போன்றவற்றை ஒன்று கலந்து அந்தந்த மட்டங்களில் ஆயுத எழுச்சிகளை நடத்துவதற்கான நடவடிக்கைக் குழுக்களாக்கினார்கள். இவ்வாறாக அவர்கள் அன்றாட வேலைகளையெல்லாம் நிறுத்தி வைத்தனர்.

இத் தவறான முடிவுகளை வகுத்து நிறைவேற்றும் போதிலே பல தோழர்கள் எழுப்பிய சரியான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் தோழர் லி லி-சான் மறுத்து ஒதுக்கினார்; ''வலது விலகல்'' என்ற அப் போக்கை எதிர்த்துக் கட்சிக்குள் போரிடுமாறு அவர் வலியுறுத்தினார்; இந்த முழக்கத்தின் கீழ் அவருடைய பார்வைகளோடு மாறுபட்ட தோழர்களை அவர் தவறாகத் தாக்கினார்; இதனால் கட்சிக்குள்ளே உட்கட்சி குறுங்குழுப் பற்றை மேலும் ஆழமாக்கினார். இவ்வாறாக, லி லி-சான் வழி முதலிலிருந்த ''இடது'' வழியைக் காட்டிலும் மேலும் முழுமையாக வளர்ச்சியடைந்த வடிவம் பெற்றது.

இருந்த போதிலும், கட்சிக்குள் லி லி-சான் வழியின் ஆதிக்கம் குறுகிய காலமே நீடித்தது (நான்கு மாதங்களுக்கும் குறைவாகவே).

இவ்வழி நடைமுறைப்படுத்தப்பட்ட இடங்களிலெல்லாம் கட்சிக்கும் புரட்சிகர சக்திகளுக்கும் இழப்புகள் ஏற்பட்டன. எனவே ஊழியர் களிலும் கட்சி உறுப்பினர்களிலும் இருந்த பரந்து பட்ட பகுதியினர் இவ்வழியைத் திருத்த வேண்டுமென்று கோரினர். குறிப்பாகத் தோழர் மாசேதுங், லி லி-சான் வழியை ஒருபோதும் ஒப்புக்கொள்ள வில்லை; அவர் மிகவும் பொறுமையாக செம்படையின் முதல் முனைப் படை செய்த ''இடது'' தவறுகளைத் திருத்தினார். முடிவில், இக் கால கட்டத்தில் இழப்புக்கு உள்ளாவதற்கு மாறாக கியாங்சி யிலிருந்த புரட்சிகரத் தளத்திலிருந்த செம்படை சியாங்கை-ஷேக் குக்கும், ஃபெங் யு-சியாங் மற்றும் யென் சி-ஷானுக்கும் இடையில் நடந்த சண்டை உருவாக்கிய சாதகமான நிலையைப பயன்படுத் தியது; 1930இன் பிற்பகுதியிலும் 1931இன் முற்பகுதியிலும் எதிரிகள் நடத்திய ''சுற்றி வளைத்து அடக்குதல்'' என்ற இயக்கத்தை வெற்றி கரமாகத் தகர்த்தது. ஒருசில விதிவிலக்குகளைத் தவிர மற்ற புரட்சி கரத் தளப்பகுதிகளிலிருந்த செம்படையும் கூட இது போன்ற வெற்றி களை அடைந்தது! வெள்ளைப் பகுதிகளில் கூட நடைமுறை வேலை செய்து கொண்டிருந்த பல தோழர்கள் கட்சி அமைப்புகளின் வழியாக லி லி-சான் வழியை எதிர்த்தனர்.

1930 செப்டம்பரில் நடந்த ஆறாவது மையக்குழுவின் மூன்றாவது தொடர் கூட்ட அமர்வும், அடுத்தபடியாக இருந்த மையத்தலைமையும் லிலி-சான் வழியை நடைமுறைப்படுத்துவதை முடிவுகட்டுவதில் ஆக்க ரீதியான பங்கு வகித்தன. இத்தொடர் அமர்வின் ஆவணங்கள் லிலி-சான் வழியைப் பொறுத்தவரையில் இணக்கப்படுத்துகிறதும் விட்டுக்கொடுக்கிறதுமான ஒரு மனநிலை யைக்காட்டின. (எடுத்துக்காட்டாக, அது ஒரு தவறான வழி என் பதை மறுப்பதன் வாயிலாகவும், இது செயல் தந்திர ரீதியில் மட்டுமே தவறாகும் என்றும் சொல்லுவதன் மூலமும்) அமைப்பு ரீதியில் குறுங்குழுவாதப் பிழையையே இந்தத் தொடர் அமர்வு தொடர்ந்து செய்த போதிலும் சீனப்புரட்சிச் சூழ்நிலையை அதி தீவிரமாக (அதி இடது சாரி) மதிப்பீடு செய்ததை அது திருத்திக் கொண்டது. நாடுதழுவியதொரு பொதுக் கிளர்ச்சியைத் திட்ட மிட்டு நடத்தும் திட்டத்தையும், முக்கிய மாநகரங்களைத் தாக்கு வதற்குச் செம்படை முழுவதையும் குவிப்பதையும் கைவிட்டது; சுதந்திரமான அமைப்புகளை, மீட்டுருவாக்கியது; கட்சி இளை ஞர் அணி மற்றும் தொழிற்சங்கங்களின் அன்றாட வேலைகளை மீண்டும் செய்யத் தொடங்கியது. இவ்வாறாக. லி லி-சான வழிக்கே மிகவும் உரியதான பிழைகளை அது திருத்திவிட்டது. மூன்றாவது தொடர் கூட்ட அமர்வில் தோழர் லி லி-சான் சுட்டிக்

காட்டப்பட்ட தம்முடைய தவறுகளை ஒப்புக் கொண்டார், பிறகு அரசியல் செயலகத்தில் (Political Bureau) தமக்கிருந்த தலைமை இடத்தைத் துறந்தார்.

மூன்றாவது தொடர் கூட்ட அமர்வுக்கு அப்புறம் மையத் தலைமை மேலும் ஒருபடி முன்னே சென்று, அதனுடைய 1930 நவம்பர் தீர்மானத்திலும் டிசம்பரில் வெளியிட்ட சுற்றறிக்கை எண் 96 இலும் லி-லி-சான் மற்றும் பிற தோழர்களின் வழி தவறு எனவும் தொடர் கூட்ட அமர்வின் இணக்கமான போக்கு தவறானதாகும் எனவும் அவ்வறிக்கைகளில் அறிவித்தது. லி லி-சான் வழியின் கருத்தியல் சாரத்தை முழுக்க ஆய்வு செய்யவும், திருத்தவும் மூன்றாவது தொடர் கூட்ட அமர்வும், அடுத்தப்படியாக மையத் தலைமையும் தவறிவிட்டன என்பது உறுதியே. எனவே சில ''இடதுசாரி''க் கருத்துகளும் கொள்கைகளும் 1927 ஆகஸ்டு 7 ஆம் நாள் கூட்டத்திலிருந்து கட்சியில் நிலவின; அதிலும் குறிப்பாக 1929 இல் இருந்து இந்த ''இடதுசாரிக் கருத்துகளும் கொள்கைகளும்'' இந்தத் தொடர்க் கூட்டத்திலும் அதன் பிறகும் வலுவுடன் நிலவின. எனினும், மூன்றாவது தொடர்க் கூட்ட அமர்வு, அடுத்து மையத் தலைமை ஆக இரண்டுமே லி லி-சான் வழியை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆக்கபூர்வமான மேற்சொன்ன நடவடிக்கைகளை எடுத்தன; ஆதலால் கட்சித் தோழர்கள் எல்லாரும் இந்த நடவடிக்கைகளின் அடிப்படையில் ''இடது'' பிழைகளுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த மேலும் முயன்றிருக்க வேண்டும்.

ஆனால் அந்த நேரத்தில் நடைமுறைப் புரட்சிகரப் போராட்டத்தில் அனுபவமில்லாத, ''இடது சாரி''ச் சித்தாந்தத் தவறுகளையுடைய தோழர்கள் தோழர் சென் ஷாவோ-யு (வாங்மிங்) வைத் தலைவராகக் கொண்டு மையத் தலைமையை எதிர்க்க முன் வந்தனர். ''லி லி-சான் வழிக்கு எதிராக'' ''இணக்கப்படுத்தும் வழிக்கு எதிராக'' என்ற பதாகைகளின் கீழ் லி லி-சான் வழியைக் காட்டிலும் அதிக மூர்க்கமான குறுங்குழுவாத நிலை எடுத்தனர். அவர்களுடைய சண்டை லி லி-சான் வழியின் கருத்தியல் சாரத்தையும் கொள்கைகளையும் 1927 ஆகஸ்டு 7, அதிலும் குறிப்பாக 1929 இல் இருந்து கட்சியில் நிலவிய லி லி-சான் வழியின் கருத்தியல் சாரத்தையும் கொள்கைகளையும் எதிர்த்து அழிக்க மையத்தலைமைக்கு உதவுவதாக இல்லை; இத் தவறான வழிகள் ஒருபோதும் முழுக்கச் சாடப்படவில்லை. அந்த நேரத்தில் தோழர் சென்ஷாவோ-யு ஒரு குறுநூலை (Pamphlet) வெளியிட்டார்.

''சீனப் பொதுவுடைமைக் கட்சியை மேலும் போல்ஷெவிச மயமாக்கு வதற்கான போராட்டம் அல்லது இருவழிகள்" என்பது அதன் தலைப்பாகும். இச் செயல் திட்டம் லி லி-சான் வழியையும் மற்ற ''இடது சாரி''க் கருத்துகளையும் கொள்கைகளையும் புது உருவில் தொடர்ந்தது; மறு மலர்ச்சி அடையச் செய்தது; அல்லது மேலும் வளர்த்தது. இவ்வாறாகக் கட்சியில் ''இடது'' கருத்துகளும் கொள் கைகளும் மேலும் வளர்ந்து புதிய வகை ''இடது'' வழியாக வடிவமெடுத்தது.

தோழர் சென் ஷாவோ-யு தலைமையிலான இந்தப் புதிய ''இடது'' வழி, லி லி-சான் வழியின் ''இடது'' பிழைகளையும், மூன்றாவது தொடர்க் கூட்ட அமர்வு தன் பங்குக்குச் செய்த பிழை யான இணங்குவிக்கும் பிழை*யையும் விமர்சனம் செய்தது; இருப் பினும் அதன் தெளிவான சிறப்புக் கூறு முக்கியமாக லி லி சான் வழியை அது ''வலது சாரித்தனம்'' என்றது; ''லி லி சான் வழியின் விடாப் பிடியான வலது சந்தர்ப்ப வாதக் கோட்பாட்டையும், நடை முறையையும் அம்பலப்படுத்தவும் தாக்கவும்'' மூன்றாவது தொடர்க் கூட்ட அமர்வு எதையுமே செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டியது. ''இப்போது கட்சியில் முக்கிய அபாயமாக வலது திசை விலகலே இன்னமும் உள்ளது என்பதைக்'' காணத் தவறியதற்காக அது சுற்றறிக்கை எண் 96ஐக் குறை கூறியது. சீன சமுதாயத்தையும், வர்க்க உறவுகளையும் பொறுத்தவரையில் இப் புதிய வழி சீனப் பொருளாதாரத்தில் முதலாளியத்தின் ஒப்பீட்டளவிலான அழுத் தத்தை மிகைப்படுத்தியது; உடைமையாளர்கள் மற்றும் பணக்கார விவசாயிகளின் முக்கியத்துவத்தையும், சீனப் புரட்சியின் இக் கட்டத்தில் சோசலிசப் புரட்சியின் கூறுகளின் முக்கியத்துவத்தை யும் மிகைப்படுத்தியது; இடைநிலை முகாம்களும், மூன்றாவது கட்சிகளும், குழுக்களும் இருப்பதை மறுத்தது. புரட்சிகர நிலைமை மற்றும் கட்சியின் கடமைகளைப் பற்றிய பிரச்சினையில் நாடு முழுவதும் ஒரு ''புரட்சிகரப் பேரலை" இருந்தது என்பதையும் தேசிய அளவில் ''தாக்குதல் தொடுக்கும் வழியை"க் கட்சி மேற் கொள்ள வேண்டும் என்பதையும் இப்புதிய இடது வழி தொடர்ந்து அழுத்தமாகச் சொன்னது; மிக முக்கியமான (கேந்திரமான-Key) பெருநகர்களைக் கொண்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெரிய மாகாணங்களில் ''இடைநிலைப் புரட்சிகர நிலைமை" ஒன்று விரைவிலேயே உண்டாகும் என்று அது வலியுறுத்தியது. 'இடது' நோக்கு நிலையிலிருந்து அணுகி சீனாவில் அதுவரையில் ''உண்மை

(* இணங்குவிக்கும் பிழை - Error of Concilation)

யான" (genuine) செம்படை இல்லை என்றும், தொழிலாளர்கள், உழவர்கள், படைவீரர்கள் அவையின் (கவுன்சிலின்) "உண்மையான" அரசாங்கம் இல்லை என்றும் அது அவதூறு உண்டாக்கும் வகையில் அடித்துக் கூறியது; "இடது சந்தர்ப்பவாதம்", "நடைமுறை வேலையில் சந்தர்ப்பவாதம்", "பணக்கார விவசாய வழி" ஆகியவையே அப்போது கட்சியிலிருந்த முக்கிய அபாயமாகும் என்று அழுத்தந்திருத்தமாக அடித்துக் கூறியது.

அமைப்பு ரீதியாக இந்தப் புதிய "இடது" வழியை உயர்த்திப் பிடித்தவர்கள் கட்டுப்பாட்டை மீறினர்; கட்சி அவர்களுக்குக் கொடுத்த வேலையைச் செய்ய மறுத்தனர்; மையத் தலைமைக்கு எதிராக உட்பகை நடவடிக்கைகளில் ஈடுபட்ட மற்ற பல தோழர்களுடன் சேரும் பிழையைச் செய்தனர்; தற்காலிக மையத்தலைமை அமைப்பு ஒன்றை அமைக்குமாறு கட்சி உறுப்பினர்களுக்குத் தவறாக அழைப்பு விடுத்தனர்; அவர்களுடைய "இடது" வழியைச் "செயலூக்கமுடன் ஆதரித்துப் பின்பற்றுகிற" "போரிடும் ஊழியர்களை (Cadres)" "எல்லா மட்டங்களிலும் தலைமை அமைப்புகளைச் சீர்திருத்தவும், வலுப்படுத்தவும்" பயன்படுத்தியாக வேண்டும் என்று கோரினர்; இதனால் அவர்கள் கட்சியில் ஒரு கடுமையான நெருக்கடியை உருவாக்கினர். எனவே, பொதுவாகச் சொன்னால், அது கேந்திரமான பெருநகர்களில் ஆயுதந் தாங்கிய எழுச்சிக்குத் திரட்டாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்தப் பெருநகர்களைத் தாக்குவதற்குச் செம்படைகளைக் குவிக்கும்படி அழைப்பு விடுக்காவிட்டாலும் கூட இந்தப் புதிய "இடது" வழி அதிகம் தீர்மானகரமானதாகவும், அதிக "கோட்பாட்டுத்" தன்மையுடையதாகவும், அதிக ஆணவம் செலுத்துவதாகவும் லி லி-சான் வழியைவிட "இடதுசாரித்தனத்தில்" அதிகமான முழுத் தெளிவுடையதாகவும் இருந்தது.

1931 சனவரியில் கட்சியின் ஆறாவது மையக் குழுவின் நான்காவது தொடர்க் கூட்ட அமர்வு கூட்டப்பட்டது; "இடது" பிடிவாதிகளும் தோழர் சென் ஷாவோ-யு தலைமை தாங்கிய குறுகிய உட்குழுவினரும் எல்லாத் திசைகளிலிருந்தும் நெருக்கடி (Pressure) கொடுத்த நிலைமைகளின் கீழ் அக்கூட்டம் கூட்டப்பட்டது. அறிந்தே பிழைகளைப் புரிந்திருந்த மையத் தலைமை அமைப்பிலிருந்த சில தோழர்கள் மேற்படியார்களோடு சமரசம் செய்து கொண்டு அவர்களை ஆதரித்தனர். இத்தொடர்க் கூட்டத்தைக் கூட்டியதால் ஆக்கப்பூர்வமான அல்லது உருப்படியான பங்கு எதையும் ஆற்றவில்லை. புதிய "இடது" வழி ஏற்றுக் கொள்ளப்

பட்டமை; மையத்தலைமை அமைப்பில் அதன் வெற்றி (triumph) விவசாயப் புரட்சிப் போர்க் கால கட்டத்தின்போது மூன்றாவது தடவையாகக் கட்சியில் ஓர் ''இடது'' வழி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியமை ஆகியவையே அக்கூட்டத்தின் விளைவுகளாகும். புதிய ''இடது'' வழியின் செயல் திட்டத்தில் ஒன்றோடொன்று தொடர்பு உடையதும், பிழையானதுமான இரண்டு நெறிகளை நான்காவது தொடர்க்கூட்ட அமர்வு உடனடியாக அமல்படுத்தியது. ''இப்போது கட்சியிலுள்ள முக்கிய ஆபத்து வலது திசை விலகல் தான்'' என்று அதை எதிர்த்துப் போரிடுதல். எல்லா மாவட்டங் களிலுமுள்ள தலைமை அமைப்புகளையும் சீர்திருத்துவதும் வலுப்படுத்துவதும் என்பவையே அதன் நெறிகளாகும். லி லி-சான் வழியையும், ''இணங்குவிக்கும் வழியையும்'' எதிர்த்தல் என்ற பதாகையை அது புறப்பகட்டாகவே இன்னமும் தூக்கித் திரிந்தது; ஆனால் சாரத்தில் அதன் அரசியல் செயல்திட்டம் முதன்மையாக ''வலது திசை விலகலை எதிர்த்தே''யாகும்.

நான்காவது தொடர்க் கூட்ட அமர்வு தனது தீர்மானங்களில் அப்போதைய அரசியல் நிலைமைகளை ஆய்வு செய்யவோ, கட்சிக் குப் பருண்மையான அரசியல் கடமைகளை முன் வைக்கவோ இல்லை; மேலும் ''வலது திசை விலகல்'' என்றழைக்கப்பட்டதை யும், ''நடைமுறை வேலையில் சந்தர்ப்பவாதம்'' என்பதையும் ஒரு பொதுவான முறையில் எதிர்த்ததோடு சரி; ஆனால் உண்மையில் தோழர் சென் ஷாவோ-யு வின் (பிரசுரமான) கட்டுரையான ''இரண்டு வழிகள் அல்லது சீனப் பொதுவுடைமைக் கட்சியை மேலும் போல்ஷெவிய மயமாக்குவதற்கான போராட்டம்'' என்பதை ஏற்றுக் கொண்டது; கட்சியிலுள்ள ''இடது சாரிக்'' கருத்துகளை அந்தக் கட்டுரை பிரதிநிதித்துவப் படுத்தியது; அப்போது இருந்த நபர் களால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின் வந்த பத்து அல்லது அதற்கு மேலான ஆண்டுகளில் ஏற்கனவே கண்டது போல மேலே கண்ட பகுப்பாய்விலிருந்து அது அடிப்படையிலேயே முற்றிலும் தவறான ஒன்று என்ற போதிலும் அக்கட்டுரை ''சரியான செயல் திட்டத்தின் பாத்திரத்தை'' வகித்தது. இந்தச் செயல் திட்டத்தின் கீழ் நான்காவது தொடர்க் கூட்ட அமர்வும், அடுத்து வந்த மையத் தலைமையும் 'இடது' சித்தாந்திகளையும் குறுங் குழுவாதத் தோழர்களையும் ஒருபுறம் மையத் தலைமை அமைப்புகளிலிருந்த பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கு உயர்த்தியது; மறுபுறம் லிலி-சான் வழியின் பிழைகளைப் புரிந்தவர்களை அளவுக்கு மீறித் தாக்கினர்; சூ சூ-வய் தலைமையின் கீழிருந்த தோழர்களைத் தாக்கும் தவறு புரிந்ததாக இவர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். தொடர்க் கூட்டம்

முடிந்த உடனேயே ''வலது சாரி''த் தோழர்கள் என்றழைக்கப் பட்ட மிகப் பெரும்பான்மையினரை மையக்குழு தவறாகத் தாக் கியது. உண்மையில், ''வலதுசாரிகள்'' எனப்படுவோர் முக்கியமாக இந்தத் தொடர்க் கூட்ட அமர்வில் ''வலது திசை விலகலு''க்கு எதிராக நடத்தப்பட்ட உட்குழுப் போராட்டத்தால் உருவாக்கப் பட்டவர்களேயாவர். அத்தகையோரில் லோ சாங்-லுங் தலைமை யின் கீழ் கையளவு பிளவு வாதிகளும் இருந்தனர் என்பது உறுதியே; இவர்கள்தான் பின்னர் மெய்யான வலது சாரிகளாக மாறினர்; எதிர்ப் புரட்சியாளராகச் சீரழிந்தனர்; கட்சியிலிருந்தே நிரந்தர மாக வெளியே தள்ளப்பட்டனர்; இவர்கள் தீர்மானகரமாக எதிர்த்துப் போரிடப்பட வேண்டியவர்கள்தான் என்பதிலும் ஐயம் இல்லை. டூப்ளிகேட் கட்சி அமைப்பை நிறுவியதும் அதைக் கட்டிக் காப்பதில் உறுதியாக இருந்ததும் கட்சிக் கட்டுப்பாட்டின்படி முற்றிலும் அனுமதிக்கப்படக் கூடாதவையேயாகும். ஆனால் லின்யு-நான், லி சுயி-ஷி, ஹோ மெங்-சியுங் மற்றும் ஏறத்தாழ கட்சியின் முக்கிய பிற ஊழியர்களும் அப்போது தாக்கப்பட்டனர்; அவர்கள் கட்சிக்கும் மக்களுக்கும் அதிகம் பயனுள்ள வேலையைச் செய்திருக்கின்றனர். மக்கள் திரளுடன் நெருக்கமான உறவுகளைத் தொடர்ந்து வைத்திருந்தனர்; கொஞ்ச காலம் கடந்த பிறகு அவர் கள் கைது செய்யப்பட்ட போது அவர்கள் உறுதியாகவும் எதிரியிடம் வளைந்து கொடுக்காமலும் நிமிர்ந்து நின்று, வீரர்களாகவே இறந் தனர். தோழர் சு.சு. பய் மீது ''இணங்குவிக்கும் வழியாகிய பிழை'' புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. அவர் அப்போது கட்சியில் மதிப்புக்குரிய ஒரு தலைவராக இருந்தார்; அவர் தாக்கப்பட்ட பிறகும் கூட, அவர் தொடர்ந்து மிகவும் பயனுள்ள வேலைகளை (முக்கியமாக பண்பாட்டுக் களத்தில்) செய்து கொண்டிருந்தார்; எதிரிக் கொலையாளிகளின் கைகளில் 1935 சூனில் அவர் வீரச்சாவு அடைந்தார்; இந்தத் தோழர்கள் அனைவரது பாட்டாளிவர்க்க வீர நினைவு எல்லாக் காலத்திலும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். நான்காவது தொடர்க் கூட்ட அமர்வு மைய அமைப்பில் கொண்டு வந்த இவ்வகையான ''சீர்திருத்தம்'' புரட்சிகரத் தளங்களிலும், வெள்ளைப் பகுதிகளிலும் இருந்த உள்ளூர் அமைப்பு களுக்கும் விரிவாக்கப்பட்டது. மூன்றாவது தொடர் கூட்ட அமர்வோடும், அடுத்து வந்த மையத் தலைமையோடும் ஒப்பிடும் போது, நான்காவது தொடர்க் கூட்ட அமர்வுக்குப் பின்னால் வந்த மையத் தலைமை மேலதிக உறுதியுடையதாகவும், ''வலது திசை விலகளுக்கு எதிரான'' அதன் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு அதன் சார்பாளர்களையும், முகவர்களையும், புதிய

முன்னணிகளையும் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்புவதில் மேலதிக ஒழுங்கு முறையோடும் இருந்தது.

1931, மே 9இல், அதாவது நான்காவது தொடர் அமர்வு நடந்து முடிந்த உடனேயே மையத் தலைமையால் வெளியிடப் பட்ட தீர்மானங்கள், புதிய "இடது" வழி ஏற்கெனவே பருண்மை யாக நடைமுறை வேலையில் பயன்படுத்தப்பட்டு மேம்படுத்தப் பட்டது என்பதைக் காட்டியது. அதன் பிறகு சீனாவில் தொடர்ச்சி யாகப் பெரிய நிகழ்ச்சிகள் நடந்தன. நான்காவது தொடர் கூட்ட அமர்வுக்குப் பின் வந்த மையத் தலைமை தனது பிழையான வழியைக் கொண்டு செலுத்தும் முன்பே கியாங்சியின் மையப் பகுதியைச் சேர்ந்த செம்படை, தோழர் மாசேதுங்கின் தலைமையின் கீழும், எல்லாத் தோழர்களின் வீர மிக்க முயற்சிகளின் மூலமாகவும் மாபெரும் வெற்றிகளை ஈட்டின; எதிரியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது "சுற்றி வளைத்து அடக்குதல்" இயக்கத்தைத் தகர்த்த னர்; அதே கால கட்டத்திலும், அதே நிலைமைகளின் கீழும் மற்ற புரட்சிகரத் தளப்பகுதிகளும், செம்படை அலகுகளும் பல வெற்றி களை அடைந்து மேலும் முன்னேறின.

இதற்கு இடையில் சப்பானிய ஏகாதிபத்தியப் படையெடுப்பு 1931 செப்டம்பர் 81இல் தொடங்கியது. இதனால் நாடு முழுவதிலும் தேசிய சனநாயக இயக்கம் வெடித்தெழுந்தது. தொடக்கத்தி லிருந்தே புதிய மையத் தலைமை இந்த நிகழ்ச்சிகளால் உருவாக்கப் பட்ட புதிய சூழ்நிலைமையை முற்றிலும் தவறாகவே மதிப்பீடு செய்தது. கோமின்டாங் ஆட்சியின் அப்போதைய நெருக்கடியையும் புரட்சிகரச் சக்திகளின் வளர்ச்சியையும் அது மிகவும் அதிகமாகவே பெரிது படுத்தியது; செப்டம்பர் 18 நிகழ்ச்சிக்குப் பிறகு சீனாவுக்கும் சப்பானுக்கும் இடையிலான தேசிய முரண்பாடு முற்றிக் கொண்டே போனதென்ற உண்மையையும், இடைத்தட்டு வர்க்கங்கள் சப்பானை எதிர்க்கவும், சனநாயகம் அளிக்கவும் வேண்டுமென்ற கோரிக்கைகளை முன் வைத்தன என்ற உண்மையையும் அது புறக் கணித்து விட்டது; சப்பானிய ஏகாதிபத்தியமும் மற்ற ஏகாதி பத்திய வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து சோவியத் ஒன்றியத்தைத் தாக்கும் என்றும், ஏகாதிபத்திய வல்லரசுகளும், சீன எதிர்ப் புரட்சிக் குறுங்குழுக்களும், ஏன், இடைத்தட்டுக் குழுக்களும் கூட ஒன்று சேர்ந்து சீனப் புரட்சியைத் தாக்கும் என்றும் அது வலியுறுத்தியது; மேலும் சீனப் புரட்சியின் மிகவும் அபாயகர மான எதிரி இடைத்தட்டுக்குழுக்களே என்று அது அறுதியிட்டு உறுதி யாகச் சொன்னது. எனவே புதிய மையத் தலைமை "எல்லாமே

ஒழிக'' என்ற முழுக்கத்தைத் தொடர்ந்து முன் வைத்தது; மேலும், ''சீனாவிலுள்ள அரசியல் நிலைமையின் இதயமே எதிர்ப்புரட்சிக்கும் புரட்சிக்கும் இடையிலான வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் தானுள்ளது'' என்று விடாப்பிடியாகக் கூறினர்; எனவே செம்படையால் முக்கிய நகரங்களை முற்றுகையிட்டு முதலில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களை வெற்றி கொள்ளல், வெள்ளைப் பகுதிகளிலுள்ள எல்லாத் தொழிலாளிகளுக்கும், உழவர்களுக்கும் ஆயுதம் வழங்குதல், அங்கே பொது வேலை நிறுத்தங்களை ஏற்பாடு செய்தல் போன்ற பல துணிச்சல்வாதப் புதுத் திட்டங்களை முன் வைத்தது.

1930 செப்டம்பர் 20 ஆம்நாளிட்ட ''எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்குதலுக்கான' மூன்றாவது இயக்கத்தைத் தொழிலாளர் மற்றும் உழவர்களின் செம்படையால் தகர்ப்பதாலும், புரட்சிகர நெருக்கடியின் படிப்படியான முதிர்ச்சியாலும், எழுகின்ற அவசரக் கடமைகளின் மீதான தீர்மான''த்தில் இந்தத் தவறுகள் முதலில் வெளிப்பட்டன. அடுத்தடுத்துத் தற்காலிகமையத் தலைமை அல்லது அதன் வழிகாட்டலின் கீழ் வரையப்பட்ட, பிற்பாடு வந்த ஆவணங்களில் இத்தவறுகள் மீண்டும் இழைக்கப்பட்டு, முழுமையாக விளக்கப் படுத்தப்பட்டன:

''சப்பானிய ஏகாதிபத்தியம் மஞ்சூரியாவை வலிந்து ஆக்கிரமித்தமை பற்றிய தீர்மானம்'' (செப்டம்பர் 22, 1931);

''முதலில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் புரட்சியின் வெற்றிக்காகப் போராடுவது பற்றிய தீர்மானம்'' (1932, சனவரி 9);

''சனவரி 28 நிகழ்ச்சி பற்றிய தீர்மானம்'' (1932, பிப்ரவரி 26);

''முதலில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் சீனப்புரட்சி வெற்றி பெறுவதற்கான போராட்டத்தில் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்குள் நடந்த சந்தர்ப்பவாத ஊசலாட்டங்கள்'' (1932, ஏப்ரல் 4);

''சோவியத் ஒன்றியத்தின் மீதான ஏகாதிபத்தியத் தாக்குதலை எதிர்த்தும், சீனாவைப் பிரிவினை செய்வதை எதிர்த்தும், தேசியப் புரட்சிகரப் போரை விரிவுப் படுத்துவதற்காகவும் நடக்கும் ஒரு வார இயக்கத்தில் தலைமையளிப்பதும் பங்கேற்பதும் பற்றிய மையக்குழுவின் மையப் பகுதி பீரோ தீர்மானம்". (1932, மே 11);

பட்டது; இதனால் செம்படைக்கு மேலும் இழப்புகள் ஏற்பட்டன. இது போலவே, ''இடது'' வழியின் ஆதிக்கத்தால் பெரும்பாலான மற்ற புரட்சிகரத் தளங்களிலும் (ஃபூசியன்-செகியாங்-கியாங்சி பகுதி, ஹீனான் கியாங்சி பகுதி, மேற்கு ஹூனான்-ஹூப்பே பகுதி மற்றும் செச்சுவான்-ஷென்சி பகுதி) பரந்த வெண் பகுதிகளிலும் கட்சியின் வேலை தோற்கடிக்கப்பட்டது. ஒரு காலத்தில் ஹூபேபே-ஹோனான்-அன்வெய் மற்றும் செச்சுவான்—ஷென்சி பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய சாங்குவோ—ட்டாவோ வழியைப் பொறுத்தமட்டிலும், அது பொதுவகை ''இடது'' வழி மட்டுமின்றி, எதிரியின் தாக்குதல்களின் முன்பாக யுத்தப் பிரபுத்துவம் மற்றும் துடிப்புவாதம் என்ற குறிப்பான கடுமையான வடிவங்களைத் தன் பண்பாகக் கொண்டிருந்தது.

இதுதான் தவறான ''இடது'' வழியின் தலையாய உள்ளடக்கமாகும்; இது மூன்றாவது முறையாகக் கட்சி முழுவதிலுமே ஆதிக்கம் செலுத்தியது; தோழர்கள் சென் ஷாவோ-யு மற்றும் சின் பாங்—சியென் ஆகிய இரண்டு சித்தாந்திகளே இதன் தலைவர்கள் ஆவர்.

அவர்கள் ''மார்க்சிய—லெனினியக் கோட்பாட்டைப்'' போர்த்திக் கொண்டு நான்காவது தொடர்க்கூட்ட அமர்வு கட்டியமைத்த அரசியல் மற்றும் அமைப்புக் கவுரவத்தையும் செல்வாக்கையும் நம்பியிருந்தனர்; சித்தாந்தப் பிழை புரிந்த இந்தத் தோழர்கள் நீண்ட நான்காண்டுக் காலம் கட்சியில் மூன்றாவது ''இடது'' வழி ஆதிக்கம் செலுத்தியதற்கும் பொறுப்பாவார்கள்; அவ்வழிக்குக் கருத்தியலாகவும், அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் நிறைவானதும், மிக மிக முறையானதுமான விளக்கம் கொடுத்தனர்; கட்சியில் ஆழமான செல்வாக்கு வகிக்கவும், இறுதியில் மாபெரும் சேதம் விளைவிக்கவும் உதவினர். அப்படி இருந்தாலும், இந்த உண்மைகளை எதிர்க்கும் வகையில், இத்தவறான வழிக்குக் காரணமான தோழர்கள் ''சீனப் பொதுவுடைமைக் கட்சியை மேலும் போல்சுவியமாக்குதல்'', மற்றும் ''நூற்றுக்கு நூறு போல்சுவிக்'' என்பன போன்ற சித்தாந்தத் தொடர்களைப் பயன்படுத்தி, நான்காவது தொடர்கூட்ட அமர்வுக்குப் பின்வந்த மையத்தலைமையின் வழியானது ''சரியான தன்மை'' மற்றும் ''அழியாச் சாதனை''கள் பற்றித் தற்புகழ்ச்சியாக நீளமாகவும் ஆழமாகவும் பேசித் திரிந்தனர். இவ்வாறாக அவர்கள் கட்சியின் வரலாற்றை முழுக்க முழுக்கச் சிதைத்தனர்.

மூன்றாவது "இடது" வழியின் ஆதிக்கக் காலம் முழுக்கவும் சரியான வழிக்கு வக்காலத்து வாங்கிய தோழர் மாசேதுங்கைத் தங்கள் சார்பாளராகக் கொண்டிருந்த தோழர்கள் இத்தவறான வழியை நேருக்கு நேர் எதிர்த்தனர். அவர்கள் இந்த "இடது" வழியுடன் ஒத்துப் போகவில்லை; அதைச் சரி செய்ய வேண்டுமென்று அவர்கள் கோரினர்; இதன் விளைவாக எல்லா இடங்களிலும் அவர்களுடைய சரியான தலைமையானது நான்காவது தொடர்க் கூட்ட அமர்வைத் தொடர்ந்து வந்த மையத் தலைமையாலும், அதன் முகவர்கள் மற்றும் அது அனுப்பிய சார் பாளர்களாலும் தூக்கி எறியப்பட்டது. ஆனால் நடைமுறை வேலை யில் திரும்பத் திரும்ப நிகழ்ந்த "இடது" வழியின் தோல்விகளும், அதிலும் குறிப்பாக மையத் தலைமை அமைப்பு இடங் கொண்டிருந்த பகுதியில் ஐந்தாவது "சுற்றி வளைத்தலுக்கும் அடக்குதலுக்கும்" எதிரான இயக்கம் திரும்பத் திரும்பத் தோற்கடிக்கப் பட்டமையும், மேலும் மேலும் பல முன்னணி ஊழியர்களுக்கும் கட்சியின் அனைத்து மட்ட உறுப்பினர்களுக்கும் இந்த வழியின் தவறான தன்மையை வெளிப்படுத்தத் தொடங்கின. அவர்களிடம் ஐயத்தையும் அதிருப்தி யையும் எழுப்பத் தொடங்கின. அப்பகுதியிலிருந்த செம்படை நீண்ட பயணத்தைத் தொடங்கிய பிறகு, "இடது" பிழைகளைச் செய்த சில தோழர்கள் விழித்தெழுந்து, அத் தவறுகளுக்கு எதிரான ஒரு நிலையை எடுக்கத் தொடங்கினர். அதன்படி, "இடது" வழியை எதிர்த்த பெரும் எண்ணிக்கையிலான ஊழியர்களும், கட்சி உறுப்பினர்களும் தோழர் மாசேதுங் தலைமையின் கீழ் அணி திரண் டனர். இதனால், மையத் தலைமை அமைப்பின் மீதான "இடது வழியின்" ஆதிக்கத்திற்கு வெற்றிகரமாக முடிவு கட்டவும் மிகவும் இக்கட்டான நிலைமையிலிருந்து கட்சியைக் காப்பாற்றவும் 1935 சனவரியில் கீவெய்ச்சோ மாகாணத்தில் உள்ள சுன்யீ மாநகரில் தோழர் மாதுசேங் தலைமையில் நடந்த மையக் குழுவின் அரசியல் செயலகத்தின் விரிவாக்கப்பட்ட கூட்டத்தால் முடிந்தது.

அந்த நேரத்தில் தீர்மானகரமான முக்கியத்துவமுடையதாக இருந்த இராணுவ மற்றும் அமைப்புத் தவறுகளைத் திருத்துவதில், அதன் எல்லா முயற்சிகளையும் ஒன்று குவிப்பதில், சுன்யி கூட்டம் முற்றிலும் சரியாக இருந்தது. தோழர் மாசேதுங் தலைமையி லமைந்த ஒரு புதிய மையத் தலைமையை அக்கூட்டம் தொடங்கி வைத்தது. இது சீனப் பொதுவுடைமைக்கட்சியில் நிகழ்ந்த முதன்மை முக்கியத்துவமுடைய ஒரு வரலாற்று மாற்றமாகும். சரி நுட்ப மாகச் சொன்னால், இந்த மாற்றத்தால்தான், நமது கட்சி நீண்ட

பயணத்தை வெற்றிகரமாக முடிக்க இயன்றது; நீண்ட பயணத்தின் கடின மற்றும் அபாயகரமான நிலைமைகளில் கட்சியிலும் செம்படையிலும் இருந்த ஊழியர்களைப் பாதுகாக்கவும், எஃகைப் போலக் கெட்டிப் படுத்தவும் முடிந்தது; பின் வாங்கவும், தப்பியோடவும் வலியுறுத்தி, உண்மையில் ஒரு போலிக் கட்சியை நிறுவிய சாங்குவோ தாவோ வழியை வெற்றிகரமாக வென்றடக்கவும் முடிந்ததும்; ''இடது'' வழி கொண்டு வந்த நெருக்கடியிலிருந்து வட ஷென்சி புரட்சித் தளத்தைக் காப்பாற்ற முடிந்தது; 1935 டிசம்பர் 9 தேசிய மீட்பு இயக்கத்தைச் சரியாக முன் நடத்தவும் முடிந்தது; சப்பானிய எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியை அமைப்பாக்க முடிந்தது; சப்பானை எதிர்த்த புனிதப் போர் இயக்கத்தை இயங்க வைக்க முடிந்தது.

## IV

சுன்யி கூட்டம் நடந்ததிலிருந்து தோழர் மாசேதுங் தலைமையிலமைந்த மையக்குழு தலைமை அமைப்பின் அரசியல் வழி முற்றிலும் சரியானதாகவே அமைந்தது. அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் ''இடது வழி'' படிப்படியாக அடக்கப்பட்டது. 1942இல் இருந்து தோழர் மாசேதுங் தலைமையின் கீழ்க் கட்சியானது தன்னிலைவாதம், குறுங்குழுவாதம், சலிப்பேற்படுத்தும்படியான ஒரே மாதிரிக் கட்சிக் கட்டுரைகள் போன்றவற்றைச் சீர் செய்வதற்காகப் பரந்த அளவில் இயக்கம் நடத்தியது. மேலும், கட்சியின் வரலாற்றில் எழுந்த பல்வேறு ''இடது'' மற்றும் ''வலது'' தவறுகளுக்குக் காரணமான கருத்தியல் வேர்களில் ஏற்பட்ட பிழைகளைச் சரி செய்யவும் கட்சி வரலாற்றை ஆய்வு செய்யவும் இயக்கம் நடத்தியது. இடது மற்றும் வலது பிழைகளைச் செய்தவர்களில் அறுதிப் பெரும்பான்மையினரான தோழர்கள் அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்கிற நீண்டதொரு நிகழ் முறையின் மூலம் மாபெரும் முன்னேற்றமடைந்து, பெருமளவு நல்ல வேலையைக் கட்சிக்கும் மக்களுக்கும் செய்தனர். அவர்கள் இப்போது மற்ற பெருந்திரளான தோழர்களுடன் ஒரு பொதுவான அரசியல் புரிதலின் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளனர்.

நமது கட்சி தனது வெற்றிகள் மற்றும் பின்னடைவுகள் மூலமாக, இறுதியில், தோழர் மாசேதுங் தலைமையின் கீழ் முன் எப்போதுமிராதபடி இப்போது கட்சியில் கருத்தியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும், இராணுவ

ரீதியாகவும் உயர்ந்த அளவு திட்பமும், ஒற்றுமையும் அடைந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதில் இந்த விரிவாக்கப் பட்ட ஏழாவது தொடர்க் கூட்ட அமர்வு மகிழ்ச்சி அடைகிறது. இது விரைவில் வெற்றி அடையக் கூடியதொரு கட்சியாகும்; எந்தச் சக்தியாலும் வெல்லப்பட முடியாத சக்தியாகும்.

எதிர்ப்புப் போர்க் கட்டம் இன்னமும் முடிவடையாத படியால், எதிர்ப்புப் போர்க் காலகட்டத்திய வரலாற்றின் சில பிரச்சினைகளுக்கு முடிவுகளை வந்தடைவதை எதிர் காலத்திற்கு ஒத்திப் போடுவது பொருத்தமானதாகும்.

''வருங்காலத்தில் தவறுகள் நேராமல் தவிர்ப்பதற்காகக் கடந்தக் காலத் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளும் பொருட்டு,'' அதனால் அவர்கள் இனியும் அத்தகைய பிழைகள் நேராமல் தடுப்பதற்காகப் பல்வேறு ''இடது'' வழிகளின் பிழைகளை, அதிலும் குறிப்பாக மூன்றாவது ''இடது வழியின்'' பிழைகளை மேலும் நன்றாகத் தோழர்கள் புரிந்து கொள்ளும் வகையில், அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் சரியான வழிக்கு எதிரானதாக நிலவிய இவ்வழிகளின் முக்கிய உள்ளடக்கங்கள் என்ன என்பதை நாம் முன்வைக்கிறோம்.

## I. அரசியல் ரீதியாக

தோழர் ஸ்டாலின் சுட்டிக் காட்டியபடி மற்றும் தோழர் மாசேதுங் விவரமாகச் செய்துள்ள ஆய்வின்படி, இன்றையக் காலகட்டத்தில் சீனா அரைக்காலனிய, அரை நிலவுடைமை நாடாகும். (செப்டம்பர் 18 நிகழ்ச்சிக்குப் பிறகு சில பகுதிகளில் சீனா காலனிய அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது) சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் சோவியத் யூனியனில் வெற்றி பெற்றும் சீனப் பாட்டாளி வர்க்கம் அரசியல் விழிப்புணர்வு பெற்றும் உள்ள இக் கால கட்டத்தில், சீனப் புரட்சியானது முதல் உலகப் போரிலிருந்து தேசிய சனநாயகப் புரட்சியாக இருந்து வருகிறது. இந்நிலைமையானது சீனப் புரட்சியின் தன்மையாக இக்காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தலைமையிலான ஏகாதிபத்திய-எதிர்ப்பு, நிலவுடைமை-எதிர்ப்புப் புரட்சியாகத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் முக்கிய பங்கு வகிப்பவர்களாகவும், சமூகத்தின் பரந்துபட்ட பிற வர்க்கங்களும் பங்கு கொள்கின்றவர்களாகவும் உள்ள புரட்சியாகவும் தீர்மானிக்கிறது. அதாவது இப்புரட்சி பழைய சனநாயகப் புரட்சி மற்றும்

மேலும் (புறநிலைமைகளைக் கணக்கில் கொள்ளாமல்) சனநாயகப் புரட்சியைக் கடந்து செல்ல தங்கள் எண்ணத்தில் ஆர்வமாக இருந்தனர். சீனப்புரட்சியின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் விவசாயிகளின் தீர்மானகரமான பங்கை அவர்கள் குறைத்து மதிப்பிட்டனர்; மேல்தட்டுக் குட்டி முதலாளிகள் உள்ளிட்ட முதலாளிகள் அனைவரையும் எதிர்த்தப் போராட்டத்திற்கு வக்காலத்து வாங்கினார்கள்: மூன்றாவது ''இடது'' வழியினரோ மேலும் ஒரு படி முன் சென்று, ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்திற்குச் சமமாக முதலாளியத்தையும், எதிர்த்துப் போராட வேண்டும் என்றனர்; பணக்கார விவசாயிகளுக்கு எதிரான போராட்டத்திற்கு அழுத்தம் கொடுத்ததுடன் இடைநிலை முகாம் மற்றும் மூன்றாவது கட்சிகள் மற்றும் குழுக்கள் நிலவுவதையே மறுத்தார்கள்.

குறிப்பாக 1931 செம்படம்பர் 18 இல் நடந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் சீன வர்க்க உறவுகளில் தெளிவான மற்றும் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன; ஆனால் இம்மாற்றங்களை அங்கீகரிப்பதற்கு மாறாக, மூன்றாவது ''இடது" வழியினர் இடைநிலைக் குழுக்களை ''மிக பயங்கர எதிரி'' என்ற முத்திரையைக் குத்தி இக்குழுக்களுக்கும் எதிர்ப்புரட்சிக் கோமின்டாங்குக்கும் இருந்த முரண்பாடு மற்றும் அவை காட்டும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை ஆகியவற்றை மறுத்தனர்; மூன்றாவது ''இடது'' வழியினர் விவசாயிகளை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் நிலங்களைப் பகிர்ந்து கொடுத்தல் மற்றும் கோமின்டாங் அரசாங்கத்தின் தாக்குதலுக்கு எதிராக ஆயுதத் தாக்குதல் தொடுத்தல் என்ற வகையில் வழி நடத்திச்சென்றதாக கூறிக் கொண்டனர்; இத்தகைய நடவடிக்கைகள் சரியானவைதான்; இருந்த போதிலும், மேலே குறிப்பிட்டிருந்த அவர்களது ''இடது'' பார்வைகளிலிருந்து, பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கிச் செல்லும் விவசாய இயக்கம் ஒரு செம்படை இயக்கம் என்பதைத் தவறான அச்சம் காரணமாக ஒப்புக் கொள்ள மறுத்தனர்; மேலும், ''விவசாயிகளின் விசேசமான புரட்சிகர இயக்கம்,'' ''விவசாய முதலாளித்துவம்,'' ''பணக்கார விவசாய வழி'' என்றெல்லாம் கூறிச்செம்படை இயக்கத்தைத் தவறாக எதிர்க்கவும் செய்தனர்; இதற்கு மாறான முறையில், சனநாயகப் புரட்சிக்கு அப்பால் செல்வதற்காகப் பல்வேறான ''வர்க்க-வழி"களை முன்னெடுத்தனர்; உதாரணத்திற்கு, பணக்கார விவசாயிகள் பொருளாதாரத்தை நீக்குதல் மற்றும் இடது தீவிரப் பொருளாதாரம் மற்றும் தொழிலாளர் கொள்கைகளைக் கையாளுதல்; சுரண்டுபவர்களுக்கு எத்தகைய அரசியல் உரிமைகளும் இல்லாத அரசுக் கொள்கையைக் கடைப்பிடித்தல்;கம்யூனிசத்திற்கு அழுத்தம் தரும் உள்ளடக்கத்தைக்

கொண்ட பரந்த கல்விக் கொள்கை; அறிவாளிகளைப் பற்றிய ஒரு அதீத இடதுசாரிக் கொள்கை; எதிரித் துருப்புக்களின் மத்தியில் வேலை செய்யும் போது அதிகாரிகளை வென்றெடுப்பதைப் புறக் கணித்துப் படை வீரர்களை மட்டும் வென்றெடுக்கும் கொள்கை; எதிர்ப்புரட்சியாளர்களை நசுக்குவதில் ஒரு அதிதீவிர இடது கொள்கை போன்றவற்றைக்கொண்டனர். இவ்வாறாக, புரட்சியின் உடனடிக் கடமைகள் திரித்துக் கூறப்பட்டன; புரட்சிகரச் சக்திகள் தனிமைப் படுத்தப்பட்டனர். மற்றும் செம்படை இயக்கம் பின்னடைவுகளால் தளர்வுண்டது.

இதைப்போலவே, 1927இல் கோமின்டாங் பகுதிகளில் புரட்சியின் தோல்விக்குப் பின்னர், நமது கட்சியானது மக்களது தேசிய சனநாயக இயக்கத்தை முன்னெடுப்பது, தொழிலாளர்களுடைய மற்றும் பரந்துபட்ட மக்களுடைய பொருளாதாரப் போராட்டங் களுக்குத் தலைமை கொடுப்பது மற்றும் புரட்சிகரப் பண்பாட்டு இயக்கத்தை நடத்துவது மற்றும் தேசிய நலன்களுக்குத் துரோகம் விளைவிக்கும் கோமின்டாங் அரசாங்கத்தின் கொள்கைகளையும், மக்களை ஒடுக்குவதையும் எதிர்த்துப் போராடுவது ஆகியவற்றைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. செப்டம்பர், 18 நிகழ்ச்சிக்குப் பின்னர், குறிப்பாக, நமது கட்சியானது, ''சப்பானிய எதிர்ப்பு ஐக்கிய இராணுவத்தை வழி நடத்தியது; 1932, சனவரி 28 போரை ஆதரித்தது; மேலும், வடக்கு சாஹர் பகுதியில் சப்பானிய எதிர்ப்புக் கூட்டு ராணுவம், பூசியன் மக்கள் அரசாங்கத்துடன் சப்பானிய எதிர்ப்புச் சனநாயகக் கூட்டணியை நிறுவியது. ஆனால், அது கோமின்டாங் படைகளுடன் சேர்ந்து சப்பானை எதிர்ப்பதற்கு மூன்று நிபந்தனைகளையும், மக்களது அனைத்துப் பிரிவுகளையும் கொண்ட தேசியப் படையின் சுயப் பாதுகாப்புக் கமிட்டி அமைக்க ஆறு நிபந்தனைகளையும் முன் வைத்தது; 1935, ஆகஸ்ட் 1இல், ''தேசிய மீட்பு மற்றும் சப்பானை எதிர்க்க நாட்டு மக்களுக்கான அறைகூவல்'' என்ற பிரகடனத்தை வெளியிட்டுச் சப்பானிய எதிர்ப்பு ஐக்கியப் படையையும் தேசியப் பாதுகாப்பு அரசாங்கத்தையும் உருவாக்க அழைப்பு விடுத்தது. இவை அனைத்தும் கூட சரியானவைகளே.

ஆனால், பல்வேறு ''இடது'' வழிகள் ஆதிக்கம் செலுத்திய போது வழிகாட்டும் கொள்கையில் நேர்ந்த பிழையால், அதிலும் குறிப்பாக, மூன்றாவது ''இடது'' வழி காலத்தில், நமது கட்சி நடைமுறையில் பிரச்சினைகளைச் சரியாகத் தீர்க்க இயலாமலும், கோமின்டாங் பகுதிகளில் கூட இதன் காரணமாக நமது கட்சி

வேலை அடைய வேண்டிய பயன்களை அடையாமலும் தோல்வியில் முடிவதாகவும் இருந்தன. சப்பானிய எதிர்ப்பு பற்றிய பிரச்சினையில் 1935, வடசீன நிகழ்ச்சிக்குப் பின்னர், அதிலும் குறிப்பாக 1936 இன் சியான் சம்பவத்திற்குப் பின்னர், சீனாவின் பெரும் நிலப்பிரபுக்கள் மற்றும் பெரும் முதலாளிகள் போன்றவரில் பிரதானப் பிரிவினர் பிரதிநிதித்துவப்படுத்திய கோமின்டாங் பிரதான ஆளும் கும்பல்களில் நேர்ந்த மாற்றங்களை முன் கூட்டியே, உண்மையிலேயே அனுமானிப்பது என்பது சாத்தியமற்றதே ஆகும். ஆனால், சப்பானிய எதிர்ப்பில் வட்டார பெருநிலப்பிரபுக்கள் மற்றும் பெரு முதலாளிகள் கொண்ட குழுக்களும் மற்றும் இடைத்தட்டுப் பிரிவினரும் நமது கூட்டாளிகளாக ஏற்கெனவே மாற்றமடைந்திருந்தனர். இத்தகைய மாற்றமானது கட்சி உறுப்பினர்களின் பரந்த அணிகளாலும் மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மூன்றாவது "வழி"யை விளக்குப்வர்களால் புறக்கணிக்கப்பட்டோ அல்லது மறுக்கப்பட்டோ வந்தது.

இவர்கள் இவ்வாறாக ஒரு கடுமையான கதவடைப்புவாத நிலையை உருவாக்கினர்; அரசியல் வாழ்க்கையில் சீன மக்களிடமிருந்து மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருந்தனர். இத்தகைய கதவடைப்புவாத பிழை காரணமாக ஏற்பட்ட தனிமை மற்றும் பின்தங்கிய நிலைமை சுன்யி கூட்டம் வரை அடிப்படையில் மாறாமல் இருந்து வந்தது.

இரண்டாவதாக, இந்தப் பல்வேறு "இடது" வழிகளும் புரட்சிகரப் போர் மற்றும் புரட்சிகரத் தளப்பகுதிகள் சம்பந்தமான பிரச்சினையிலும் தவறாக இருந்தன. தோழர் ஸ்டாலின், "சீனாவில் ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்புரட்சிக்கு எதிராகப் போரிடுகிறது. இது சீனப் புரட்சியின் சிறப்புக் கூறுகளில் ஒன்றும் மற்றும் சாதகமான அம்சங்களில் ஒன்றும்" என்று தெளிவுபடுத்தினார். தோழர் ஸ்டாலினைப் போலவே தோழர் மாசேதுங்கும் விவசாயப் புரட்சிகர யுத்த காலகட்டத்தின் தொடக்கத்திலேயே தொழிற்சாலைகளும் சனநாயகமும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள, ஒன்றுபடாத நாடாகவும், மிகப்பரந்த நாடாகவும் உள்ள சீனாவின் அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவத்தின் தன்மை காரணமாக சீனப்புரட்சியில் ஆயுதந்தாங்கிய போராட்டமானது பிரதான வடிவம் என்றும், விவசாயிகளை முதன்மையாகக்கொண்ட இராணுவமானது பிரதானமான அமைப்பு வடிவம் என்றும் தெளிவாகவும் மிகச் சரியாகவும் சுட்டிக் காட்டியிருந்தார். விவசாய மக்களின் பரந்துபட்ட பகுதிகளின் வாழ்விடமாக இருந்த கிராமப்

பகுதிகளே, சீனப்புரட்சியின் இன்றியமையாத, தலையாய நிலைக் களன்கள் என்றும் (புரட்சிகரக் கிராமங்கள் பெருநகரங்களைச் சுற்றி வளைக்க முடியும். ஆனால் புரட்சிகர ப்பெருநகரங்கள் கிராமங்களில் இருந்து தங்களைத் துண்டித்துக் கொள்ள இயலாது) சீனா ஆயுதப் புரட்சிகரத் தளப் பகுதிகளை நாடு தழுவிய வெற்றி பெறுவதற்கான (முழுநாட்டையும் சனநாயக ரீதியில் ஒன்றுபடுத்த) தொடக்கப்புள்ளியாகக் கொள்ளவும் நிறுவவும் வேண்டும் என்று மாசேதுங் சுட்டிக் காட்டியிருந்தார்.

1924-27 புரட்சி கால கட்டத்தில், பொதுவுடைமைக் கட்சிக்கும் கோமின்டாங் கட்சிக்கும் இடையிலான ஒத்துழைப்பு மூலம் உருவாக்கப்பட்ட கூட்டரசாங்கம் நிலவியபோது, சில பெரிய நகரங்கள் தளப்பகுதிகளின் மையங்களாக விளங்கின. ஆனால், அப்போதும்கூட, தளப்பகுதிகளின் அடித்தளங்களை உறுதிப் படுத்துவதற்காக, பாட்டாளவர்க்கத் தலைமையின் கீழ் விவசாயிகளைப் பிரதானப் பகுதியாகக் கொண்ட மக்கள் படையைக் கட்டுவது மற்றும் கிராமப் பகுதிகளில் நிலப்பிரச்சினையைத் தீர்ப்பது அவசியமாக இருந்தது. ஆனால், விவசாயப் புரட்சிப் போர்க் காலத்தில், வலிமை வாய்ந்த எதிர்ப் புரட்சிகர சக்திகளால் நகரங்கள் அனைத்தும் கைப்பற்றப் பட்டபோது, பிரதானமாக விவசாய கொரில்லாப் போர்முறையைச் (நிலையான போர் முறை அன்று) சார்ந்து நின்று தளப்பகுதிகளை நிறுவவும், விரிவாக்கவும், உறுதிப்படுத்தப்படவும் வேண்டியிருந்தது. மேலும் எதிர்ப்புரட்சிகர சக்திகளின் ஆட்சி கிராமப்புறத்திலேதான் பலவீனமாக இருந்தது. (நகர கேந்திரங்களில் அன்று) என்பதையும் அனைத்திலும் முதலாவதாகப் பார்க்கவேண்டியிருந்தது. 'ஸ்தலமயமாகிய விவசாயப் பொருளாதாரம் (ஒன்றிணைந்த முதலாளித்துவப் பொருளாதாரம் அன்று) மற்றும் பிரித்துச் சுரண்டுவதற்காகச் செல்வாக்கு மண்டலங் களைப் பிரிக்கும் ஏகாதிபத்தியக் கொள்கை", இதன் விளைவாக எழுந்த, "வெள்ளை ஆட்சிப் பகுதிக்குள் உண்டாகும் நீடித்த பிளவுகளும் போர்களும்" என்ற சீனாவில் நிலவிய வரலாற்று நிலைமைகளே இத்தகைய ஆயுதப் புரட்சிகரக் கிராமப்புறத் தளப்பகுதிகள் நிலவுவதற்கான காரணம் என்று மாசேதுங் சுட்டிக் காட்டினார். சீனப்புரட்சிக்கான இத்தகைய தளப்பகுதிகளின் வரலாற்று முக்கியத்துவத்தையும் அவர் பின்வருமாறு சுட்டிக் காட்டியிருந்தார்:

"மேற்கூறியபடி செய்வதன் மூலம் மட்டுமே சோவியத்யூனியன் உலக முழுவதும் உள்ள புரட்சிகர சக்திகளின் நம்பிக்கையைக் கட்டியமைத்தது போல, நாடு முழுவதிலும் உள்ள புரட்சிகர மக்கள்

திரளின் நம்பிக்கையை நாமும் கட்டி அமைக்க முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே, மிகப் பெரிய கஷ்டங்களை எதிர்ப் புரட்சிகர ஆளும் வர்க்கங்களுக்கு உருவாக்க முடியும்; அவர்களுடைய அஸ்திவாரங்களை அசைக்கவும், அவர்களுக்கு இடையேயான ஒற்றுமையின்மையைத் துரிதப்படுத்தவும் முடியும். இப்படிச் செய்வதன் மூலம் மட்டுமே, எதிர்காலத்தின் மகத்தான புரட்சியில் முதன்மையான ஆயுதமாகத் திகழப்போகும் செம்படையை உருவாக்கும் உண்மையான சாத்தியப்பாட்டைப் பெறமுடியும். சுருக்கமாகக் கூறினால், இவ்வாறுதான் புரட்சியின் உயர்ந்த அலையை விரைவு படுத்த முடியும்.''

அத்தகைய காலப் பகுதிகளில் நகரங்களில் மக்கள் திரளினரிடையே வேலை செய்வதற்கான முதன்மையான கொள்கைகளை, வெள்ளைப் பகுதிகளில் வேலை செய்வதற்கான சரியான வழியை வகுத்தளித்தது போன்றே தோழர் லியு. சோசி தொகுத்தளித்திருக்கிறார். அவையாவன: தற்காப்பிற்கான செயல்பாடுகளாக இருக்க வேண்டும்; (தாக்குதலுக்கானது அன்று). வேலை செய்வதற்கான அனைத்துச் சட்டப் பூர்வ வழிகளையும் உபயோகித்தல் வேண்டும்; (சட்டப்பூர்வமான வழிகளை மறுப்பது அன்று) இவ்வாறு தான், கட்சி அமைப்புகள் பெருந்திரளான மக்களிடையே ஆழமாகச் சென்று, நீண்ட காலம் தலை மறைவாக வேலை செய்து நம் சக்திகளைத் திரட்ட முடியும்; புரட்சிகரச் சூழ்நிலையின் வளர்ச்சியை முன்னேற்றும் பொருட்டும், கிராமப்புறத்தில் நடக்கும் போராட்டத்திற்கு ஒத்துழைப்பை நல்குவதற்காகவும், கிராமப் பகுதிகளில் நடக்கும் ஆயுதப் போராட்டத்தை வளர்ச்சியடையச் செய்யவும் நாம் எப்போதும் மக்களை அனுப்பத் தயாராக இருக்க வேண்டும். எனவே, நகரங்களில் சனநாயக அரசாங்கங்களை அமைக்கும் சாத்தியமான பொதுச் சூழ்நிலை கனியும் வரை சீனப் புரட்சிகர இயக்கமானது கிராமப் பகுதி வேலையைப் பிரதானமாகவும், நகர்ப்புற வேலையைத் துணையானதாகவும் கொள்ளவேண்டியிருந்தது. கிராமப் புறங்களில் புரட்சியின் வெற்றிகள் மற்றும் நகரங்களில் புரட்சி வெற்றி பெற இயலாத தற்காலிக நிலைமை; கிராமப் புறங்களில் தாக்குதல்கள் மற்றும் நகரங்களில் பொதுவான தற்காப்பு நிலைமைகள்; கிராமப்புறப் பகுதியில் முன்னேற்றமும் வெற்றியும் மற்றும் நகர்ப்புறத்தில் பின்னடைவும் தோல்வியும்- இவையெல்லாம் அந்தக் காலப் பகுதியின் போது நாடு முழுவதும் புரட்சிக்கும், எதிர்ப் புரட்சிக்கும் இடையிலான ஒரு குறுக்கும் நெடுக்குமான வடிவமைப்பை உருவாக்கியது; மற்றும், தோல்வியிலிருந்து வெற்றி என்ற பரிணாமத்தினைத் தொடர்ந்து சென்று உறுதிப்பட வேண்டியிருந்தது.

அரைக் காலனிய-அரை நிலப்பிரபுத்துவச் சீனச்சமுதாயத்தின் விசேசக் கூறுகளைப் புரிந்து கொள்ள இயலாமை; சீனாவில் நடைபெறும் பூர்சுவா சனநாயகப் புரட்சியின் சாரம் ஒரு விவசாயப் புரட்சி என்பதைப் புரிந்து கொள்ள இயலாமை; சீனப் புரட்சியின் சீரற்ற, கடினமான, நீண்ட தன்மையைப் புரிந்து கொள்ள இயலாமை; இத்தகைய புரிதல்கள் அற்ற பல்வகைப்பட்ட ''இடது" வழிகளின் பிரதிநிதிகள் ''துப்பாக்கியின் தத்துவம்,'' மற்றும், ''விவசாய மனோநிலையின் பண்பியல்பான ஸ்தல மனப்பான்மையும் பழமைவாதமும்'' என்றெல்லாம் கூறி, ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தைக் குறைத்துமதிப்பிட்டதுடன்,முக்கியமாக,கிராமத் தளப்பகுதிகள் மற்றும் விவசாயிகளின் கொரில்லாப்போர் முறையைக் குறைத்து மதிப்பட்டதுடன் எதிர்க்கவும் செய்தனர். ஆனால் அவர்கள் ஒரு கனவை எப்போதும் கண்டு கொண்டிருந்தனர்; நகரங்களில் உள்ள தொழிலாளிகள் மற்றும் மக்கள் திரளினரது போராட்டங்கள் எதிரியின் மோசமான ஒடுக்குமுறையினால் திடீரென வெடித்தெழுந்து கட்டாயம் முன்னேறும்; கேந்திர நகரங்களில் ஆயுத எழுச்சிகள் வெடித்துக் கிளம்பும்; ''ஒன்று அல்லது அதிகமான மாநிலங்களில் வெற்றியை முதலில் கொண்டு வர'' சாதிக்கும்; மற்றும் கூறப்படும் புரட்சிகர உயர் அலையை தேசம் பூராவிலும் கொண்டுவரும்; இதனால் தேசம் பூராவும் வெற்றியும் கிடைக்கும்; இவ்வாறெல்லாம் கனவுகள் கண்டு, இந்தக் கனவுகளின் அடிப்படையிலேயே அவர்களுடைய வேலையின் திட்டத்தையும் அமைப்பு முறையையும் உருவாக்கிக் கொண்டனர்.

எனினும், உண்மையில் நடந்தது என்னவெனில், 1927 இல் புரட்சியின் தோல்விக்குப் பின்னர் வர்க்கச் சக்திகளின் பொது உறவில் பெற்ற மாற்றமானது, நகர்ப்புற வேலையில் தோல்வியைக் கொண்டு வந்து இந்தக் கனவை ஏதோ ஒரு வகையில் சிதற அடித்தது. எவ்வாறு முதல் ''இடது'' வழி இத்தகையதோல்வியைச் சந்தித்ததோ, இரண்டாவது ''இடது'' வழியும் இதே தவறை மீண்டும் திருப்பிச் செய்தது. ஆனால் ஒரேஒரு வித்தியாசம்இருந்தது; செம்படையானது ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக வளர்ந்து இருந்ததால் அதன் ஆதரவைக் கோரும் வித்தியாசமே அதுவாகும். இந்த இரண்டாவது ''இடது'' வழியும் தோல்வியில் முடிந்த பின்னர் மூன்றாவது ''இடது'' வழியானது நகரங்களில் ஆயுத எழுச்சிக்கு ''உண்மையான' தயாரிப்புக்கான கோரிக்கையைத் தொடர்ந்தது. இங்கேயும் ஒரு வித்தியாசம் இருந்தது. அது என்னவெனில் செம்படையைக் கொண்டு பெரும் நகரங்களைக் கைப்பற்றும் கோரிக்கையாகும் அது. ஏனெனில் நகர்ப்புறங்களில்

வேலையானது மேலும் மோசமான நிலையில் இருந்தபோது செம்படையானது மிக வலிமைப் பெற்றதாக வளர்ந்திருந்தது.

நகர்ப்புற வேலைகளைக் கிராமப்புற வேலைகளுக்குக் கீழ்ப்படுத்தாமல் கிராமப்புற வேலைகளை நகர்ப்புற வேலைகளுக்குக் கீழ்படுத்தியதன் விளைவாக நகரங்களிலான வேலையும் தோல்வியை அடைந்தது; பெரும்பாலான கிராமப்புற வேலைகளும் தோல்வியைத் தழுவின. 1932-க்குப் பின்னர், கேந்திர நகரங்களைப் பிடிக்கும் நமது திட்டமானது உண்மையில் நிறைவேறா:மல் நின்றுவிட்டது. ஏனெனில் செம்படையால் நகரங்களைக் கைப்பற்றவும் மேலும் தக்கவைக்கவும் இயலவில்லை. மற்றும் குறிப்பாக மிகப் பெரிய அளவில் கோமின்டாங் தாக்கிக் கொண்டிருந்தது, மேலும் கூடுதலாக, 1933-க்கும் பின்னர், நகரத் திட்டங்களுக்கு ஏற்பட்ட மாபெரும் சேதாரம் காரணமாக, நமது கட்சியின் தற்காலிகத் தலைமையே கூட நகரங்களிலிருந்து நாட்டுப்புறத் தளப்பகுதிகளுக்குச் சென்றது. இவ்வாறாக, ஒரு மாற்றம் நிகழ்ந்தது. ஆனால் ''இடது'' வழியைப் பின்பற்றும் தோழர்களைப் பொறுத்த வரையில் இந்த மாற்றமானது உணர்வுப் பூர்வமாக ஏற்படவில்லை அல்லது சீனப் புரட்சியின் தனிப் பண்புகளை ஆய்வு செய்வதன் மூலம் வந்தடைந்த முடிவுகளின் சரியான விளைவுகளாகவும் இல்லை. எனவே, இவர்கள் தளப்பகுதிகள் மற்றும் செம்படையின் அனைத்து வேலைகளுக்கும் தங்களுடைய பிழையான நகர்ப்புற நோக்கு நிலையிலிருந்து வழி காட்டினர்; மற்றும் அவ்வேலைகளுக்கு மிகப் பெரிய சேதாரத்தையும் ஏற்படுத்தினர்.

கீழே தரும் எடுத்துக்காட்டுக்கள் அவர்கள் சேதாரம் செய்ததற்கான தெளிவான நிருபணத்தைத் தரும். அவர்கள் நிலை கொண்ட போருக்கு வக்காலத்து வாங்கினர்; மற்றும் கொரில்லாப் போர் அல்லது கொரில்லாப் பண்புடைய இடம் பெயர்ந்து தாக்கும் போரை எதிர்த்தனர். அவர்கள் ''ஒழுங்கமைப்பு'' என்று கூறிக் கொண்டதைக் கடைப்பிடிக்குமாறு செம்படையை வலியுறுத்தினர்; அதன் ''கொரில்லாயிசம்'' எனப்பட்டதை எதிர்த்தனர். எதிரியினால் ஒன்றிலிருந்து மற்றொன்று துண்டாடப்பட்டிருக்கும் பகுதிகளில் நீண்ட கொரில்லாப் போர்முறை மற்றும்கிராமப்பகுதிகளில் தங்களைத்தாங்களே பிரித்துச் செயல்பட வேண்டிய புரிதல் ஆகிய அவற்றை அவர்கள் பெற்றிருக்கவில்லை; எனவே மனித சக்தியையும் பிற மூலப் பொருள் வளத்தையும் அவர்கள் சிக்கனமாகப் பயன்படுத்தவில்லை, அல்லது இன்றியமையாத பிற நடவடிக்கைகளையும் தளப்பகுதிகளில் எடுக்க

வில்லை, ஐந்தாவது ''சுற்றி வளைத்து அடக்குதலுக்கு'' எதிரான பிரச்சார இயக்கத்தில், ''சீனாவுக்கான இரண்டு பாதைகளுக்கு இடையிலான தீர்மானகரமான சண்டை'' மற்றும் ''தளப்பகுதிகளில் ஓரங்குல இடத்தைக் கூட விட்டு விடாதீர்கள்'' என்ற தவறான முழக்கங்களை முன்வைத்தனர்.

விரிவாக்கப்பட்ட ஏழாவது தொடர்க்கூட்ட அமர்வு சூழ்நிலையில் ஒரு மாற்றம் மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறியது. அதாவது மேலே நாம் விவாதித்த காலப்பகுதியில், மாற்றமானது கிராமப்பகுதி வேலையை உயர்த்திச் செல்வதாகவும் நகர்ப்புற வேலையை காத்திருக்கச் செய்வதாகவும் இருந்தது. தற்போது மட்டுமே, சப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போரின் இறுதிக் கட்டத்தில் தான் நமது கட்சியின் தலைமையில் செம்படையானது வளர்ந்து வலிமைப் பெற்றும், இன்னும் வலிமையை அடையப் போகிற நேரத்தில் தான், சப்பானிய ஆக்கிரமிப்பு நகரங்களில் நமது வேலையானது விடுதலைசெய்யப்பட்ட பகுதிகளில் நடைபெறும் வேலைகளுடன் சமமான அளவில் செய்யப்பட வேண்டும். கேந்திர நகரங்களில் உள்ள சப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை, உள்ளே இருந்தும் வெளியே இருந்தும் சேர்ந்தாற் போன்ற தாக்குதலின் மூலம் அழித்தொழிப்பதற்காகவும், அதன் பிறகு நாம் நமது வேலையின் மையத்தை இந்த நகரங்களுக்குமாற்றிக் கொள்ளவும் அனைத்துச் சூழல்களையும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

1927 புரட்சியின் தோல்விக்குப் பிறகு நமது கட்சியானது மிகுந்த சிரமத்துடன் தன் மையத்தைக் கிராமப் புறங்களுக்கு மாற்றியது. இந்தப் புதிய மாற்றம் நமது கட்சிக்கு வரலாற்று ரீதியான முக்கியத்துவ முடையதாகும். அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் முழுமையான அரசியல் புரிதலுடன் இந்த மாற்றத்திற்குத் தயார் செய்து கொள்ள வேண்டும். மேலும், விவசாயப் புரட்சிகரப்போரின் போது நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு மாறிச்செல்லும் பிரச்சினையில் இடது 'வழி' செய்த தவறுகள் மீண்டும் ஏற்படாமலும் நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும். முதலில் மாற்றத்தை எதிர்ப்பது மற்றும் மறுப்பது அடுத்து முழுமையான அரசியல் புரிதல் இன்றி ஒரு கட்டாயத்தின் கீழோ அல்லது தயங்கியோ இம்மாற்றத்திற்கு உடன்படுவது ஆகிய தவறுகளில் அது வெளிப்பட்டது. கோமின்டாங் பகுதிகளில், எவ்வாறாயினும் நிலைமைகள் வேறுபட்டுள்ளன. அங்கு நமது உடனடிக் கடமைகளாக நகர்ப்புறங்களிலோ அல்லது கிராமப்புறங்களிலோ மக்களைத் திரட்டுவதில் அனைத்தும் செய்வதும், உள்நாட்டு யுத்தம் மற்றும் பிளவை எதிர்ப்பதும், சப்பானுக்கு எதிரான போரில் முன் முயற்சியை இருமடங்கு எடுக்கக் கோருவதும்,

அமைதிக்கும் ஒற்றுமைக்கும் பாடுபடுவதும், கோமின்டாங்கின் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை ஒழித்துக் கட்டுவதும், ஒன்றுபட்ட சனநாயகக் கூட்டு அரசாங்கத்தை உருவாக்குவதும் ஆகியவை உள்ளன. எப்போது சப்பானிய ஆக்கிரமிப்புப் பகுதிகள் மக்களால் விடுவிக்கப்பட்டு, ஒன்றுபட்ட சனநாயகக் கூட்டு அரசாங்கம் உண்மையில் ஏற்படுத்தப்பட்டு உறுதியாக்கப்படுகிறதோ, அப்போதுதான், கிராமப்புறத் தளப்பகுதிகள் தங்களுடைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியதாக ஆகும்.

மூன்றாவதாக, பல்வேறு ''இடது'' வழிகள் தாக்குதலுக்கும் தற்காப்புக்குமான செயல் தந்திரங்களை வகுத்து அளிப்பதில் தவறுகளை இழைப்பனவாக இருந்தன. தோழர் ஸ்டாலின் சுட்டிக்காட்டியபடி, சரியான செயல்தந்திரத் திசைவழிக்குச் சூழ்நிலையைப் பற்றிய ஒரு சரியான பகுப்பாய்வும் (வர்க்கச்சக்திகளின் உறவுகளைப் பற்றிய ஒரு சரியான மதிப்பீடும், இயக்கத்தின் அலை ஏற்றம், இறக்கம் பற்றிய ஒரு சரியான கணிப்பும்) அதைச் சார்ந்து சரியான போராட்ட வடிவங்களும் அமைப்பு வடிவங்களும் தேவைப்படுகின்றன. சரியாக, தனது எதிரிகளின் முகாமில் உள்ள ஒவ்வொரு பிளவையும் சாதகமாக எடுத்துக் கொள்வதும், கூட்டாளிகளைக் கண்டு கொள்ளும் திறமையை எடுத்துக் கொள்வதும் தேவைப்படுகிறது; சிறந்த மாடல்களில் ஒன்று, சீனப்புரட்சிகர இயக்கத்திற்கான தோழர் மாசேதுங்கின் திசை வழியாகும்.

1927 புரட்சியின் தோல்விக்குப் பின், தோழர் மாசேதுங் சரியாகச் சுட்டிக் காட்டியிருந்தபடி, நாடு முழுவதிலும் புரட்சிகர அலையானது இறங்குமுகமாக இருந்தது; நாடு முழுவதுமாக எடுத்துக் கொண்டு பார்த்தால் எதிரி நம்மைக் காட்டிலும் பலமானவனாக இருந்தான்; எனவே, சாகசத் தாக்குதல்கள் தவிர்க்க இயலாதவாறு தோல்வியிலேயே முடிந்தன; ஆனாலும் ஒரு சரியான கொள்கையைக் கொண்ட பொது உடைமைக் கட்சி இருந்ததாலும், ஒருசெம்படை தேவையான வலிமைபெற்றிருந்ததாலும், முதலாவது மகத்தான புரட்சிப் போராட்டங்களின் வழியே மக்கள் வழிநடத்தப்பட்ட குறிப்பான நிலைமைகள் இருந்ததாலும், மக்களது புரட்சி பற்றிய தேவை படிப்படியாக புத்தூக்கம் பெற்று வளர்ந்தது. பிற்போக்கு முகாமில் ஏற்பட்ட தொடர்ச்சியான பிளவுகள் மற்றும் யுத்தம் போன்ற பொது நிலைமைகள் காரணமாகவும், ''ஒன்று அல்லது அதற்கும் அதிகமான பகுதிகளில் சிவப்பு அதிகாரம்'', ''அப்பகுதிகளைச் சுற்றி வளைத்திருந்த வெள்ளைப் பகுதிகளின் மத்தியிலேயே'' தோன்ற முடிந்தது.

தோழர் மாசேதுங் மேலும் சுட்டிக் காட்டியிருந்தபடி, எதிரியின் முகாமில் பிளவுகள் இருந்த காலப் பகுதியில் சிவப்பு அரசியல் அதிகாரத்தின் விரிவாக்கம், ''ஒப்பீட்டளவில் துணிச்சலானதாகவும் இராணுவ நடவடிக்கைகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகள் பெரிய அளவிலும் இருக்க முடியும்;'' அதே சமயம் ஆளும் வர்க்கங்கள் ஒப்பீட்டளவில் நிலையாக இருந்த காலத்தில் இத்தகைய விரிவாக்கம் படிப்படியாக முன்னேறுவதாகவும் இருந்தது. ஆளும் வர்க்கங்கள் ஒப்பீட்டளவில் நிலையாக இருந்த காலத்தில், சாகசவாத முன்னேறுதலுக்கு நமது சக்திகளைப் பிரித்து அனுப்பும் இராணுவ நடவடிக்கைகளும் பகுதி வேலைகளில் (நிலங்களைப் பகிர்தல், அரசியல் அதிகாரத்தை நிறுவுதல், கட்சியை விரிவுபடுத்தல், உள்ளூர் ஆயுதப்படைகளைக் கட்டியமைத்தல்) நமது ஆட்களைச் சிதறச் செய்வதும், மைய மாவட்டங்களில் ஓர் உறுதியான அடித்தளத்தை அமைக்க மறுப்பதும் சீர்கேட்டை உண்டாக்கின.

ஒரு, மாறாத காலப்பகுதிக்குள்ளே கூட, நமது எதிரியின் வலிமையில் ஏற்படும் வேறுபாடுகளுக்கு ஏற்றபடி நமது செயல் தந்திரமும் மாறவேண்டும்; ''ஹூனான்- கியாங்சி எல்லையிலிருந்து நாம் கைப்பற்றிய பகுதியில் ஒப்பீட்டளவில் வலிமையுடைய ஆட்சி அதிகாரம் உடைய ஹூனானிடமிருந்து தற்காக்கும் நிலையில் இருந்தோம்; கியாங்சியில் ஒப்பீட்டளவில் பலவீனமான ஆட்சி அதிகாரம் இருந்ததால் நாம் அங்கே தாக்குதல் தொடுத்தோம்.'' பிறகு ஹூனான்-கியாங்சி செம்படை ஃபூகியென்-கியாங்சி எல்லையை அடைந்தபோது ''கியாங்சி மாகாணம், மேற்கு ஃபூகியென் மற்றும் மேற்கு செக்கியாங்குக்காகப் போரிடுமாறு'' ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. நமது செயல்தந்திரம் வேறு வேறாக மாறுவதைத் தீர்மானிப்பதற்கு முக்கியமானதோர் ஆதாரமாக இருப்பது வெவ்வேறு எதிரிகளின் நலன்களின் மீது புரட்சி ஏற்படுத்தும் வேறுபட்ட தாக்கமே ஆகும். இதன் விளைவாக, ''எதிர்ப்புரட்சிக்குள் ஏற்படும் ஒவ்வொரு சச்சரவையும் பயன்படுத்துங்கள்; அதற்குள் ஏற்படும் விளைவுகளை அகலப்படுத்தச் செயலூக்கமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்; தனிமைப்படுத்தப்படும் கொள்கையை எதிர்க்கவும்; வாய்ப்புள்ள எல்லா நண்பர்களையும் வென்றெடுக்கும் கொள்கையை உறுதிப்படுத்துங்கள்'' என்று தோழர் மாவோ எப்போதுமே நமக்கு அறுவுறுத்தினார். ''சுற்றி வளைத்து அடக்குதலுக்கு'' எதிராகத் தோழர் மாவோ மேற்கொண்ட இயக்கங்களில் ''முரண்பாடுகளை; பயன்படுத்தவும் பலரை வென்றெடுக்கவும்; சிலரை எதிர்க்கவு

நமது எதிரிகளை ஒருவர் பின் மற்றவராக நசுக்கவும்'' என்ற செயல்தந்திரக் கோட்பாட்டின் பிரயோகம் மிகவும் அறிவொளியுடன் மேம்படுத்தப்பட்டது; அதிலும் குறிப்பாக, சுன்யி கூட்டத்துக்குப் பிறகும், நீண்டபயணத்திலும், சப்பானிய எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி வேலையிலும் செயல்தந்திரப் பயன்பாடு மிகத் தெளிவாக மேம்படுத்தப்பட்டது.

வெள்ளைப்பகுதிகளில் வேலை செய்வதற்கான தோழர் லியுசோசியின் செயல்தந்திரம் பற்றிய கருத்துகளும் இது போலவே ஒரு முன்மாதிரி ஆகும். 1927இல் புரட்சி தோற்கடிக்கப் பட்டபிறகு வெள்ளைப்பகுதியில் குறிப்பாக நகரங்களில் எதிரியின் வலிமைக்கும் நமது சொந்த வலிமைக்கும் இடையிலான வெளிப் படையாகத் தெரியும் சமமின்மையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தோழர் லியு சோசி-சி முறைப்படுத்தப்பட்ட வழியில் நாம் பின் வாங்குவதையும் தற்காத்துக் கொள்வதையும் பரிந்துரைத்தார். மேலும், ''புரட்சிகரத் தாக்குதலுக்குத் தயாரிக்கவும் வருங்காலத்தில் தீர்மானகரமான செயல்களில் ஈடுபடவும், சூழ்நிலையும் நிலைமை களும் நமக்குப் பாதகமாக இருக்கிறபொழுது, கொஞ்ச காலத்திற்கு எதிரியுடன் தீர்மானகரமான செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்'' அவர் பரிந்துரைத்தார். கட்சியின் தலைமறைவு அமைப்புகள் தங்களுடைய வலிமையை நீண்டகாலத்துக்கு மறைத்துக் கொள்ளவும், மக்கள் திரளிடையே ஆழமாகச் செல்லவும், மக்கள்திரளின் சக்திகளைத் திரட்டிச் சேமிக்கவும் வலுப்படுத்தவும், அவர்களுடைய அரசியல் உணர்வை உயர்த்தவும், செய்கிற மக்கள்திரள் வேலைகளில் வெளிப்படையான சட்ட பூர்வமான வழிகளை முடிந்த அளவுக்குப் பயன்படுத்தும் அதே வேளையில், 1924-27 புரட்சிக் காலப்பகுதியிலான கட்சியின் வெளிப்படை அமைப்புகள் ஒழுங்கு முறையான வழியிலும் கண்டிப்பாகத் தலைமறைவு அமைப்புகளாகவும் உருமாற்றப்பட வேண்டும் என்று மேலும் அவர் பரிந்துரைத்தார். மக்கள்திரள் போராட்டங்களில் தலைமை ஏற்பது பற்றி லியுசோசி ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் உள்ள சூழ்நிலைகளுக்கும், குறிப்பான நிலைமைகளுக்குத் தக்கவாறும், மக்கள் திரள்களின் அரசியல் உணர்வுத் தரத்துக்குத் தக்கவாறும், மக்கள்திரள் போராட்டங்களைத் தொடங்கி நடத்த, மக்கள்திரள்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கக் குறிப்பிட்ட சில முழக்கங்களையும் கோரிக்கைகளையும், போராட்ட வடிவங்களையும் முன்வைப்பதன் தேவையையும், அதன்பிறகு, போராட்டப் போக்கின்போது ஏற்படும் மாறுகின்ற நிலைமைகளுக்குத் தக்கவாறு மக்கள் திரள்

போராட்டத்தை அடுத்த உயர்ந்த கட்டத்துக்குப் படிப்படியாக, உயர்த்தவோ அல்லது ''எவ்வளவு தொலைவுக்குப் போக வேண்டும் என்பதை உணர்ந்துகொண்டு'' தற்காலிகமாகச் சண்டையை நிறுத்துவது அடுத்த உயர்ந்தகட்டத்தில் அதைவிட அதிக அளவில் அடுத்த சண்டை நடத்துவதற்குத் தயாரிப்பதற்காக மிக இன்றியமையாதது என உறுதியாகக் கூறினார்.

எதிரிகளுக்கிடையில் உள்ள உள்முரண்பாடுகளைப் பயன்படுத்துவது மற்றும் தற்காலிகக் கூட்டணிகளைப் பெறுவது சம்பந்தமான பிரச்சினையில் அவர் எதிரிகளிடையில் உள்ள உள் முரண்பாடுகளை முறிவு நிலைக்குத் தள்ள வேண்டியது அவசியம் என்றும், எதிரி முகாமிலிருக்கும் எவரொருவர் இன்னும் பிரதான எதிரியாக இல்லாமல் இருந்து நம்முடன் ஒத்துழைப்பு நல்கத் தயாராக உள்ளாரோ, அத்தகையவர்களுடன் ஒரு தற்காலிகக் கூட்டை முதன்மை எதிரிக்கு எதிராக உருவாக்க வேண்டும் என்றும் நம்முடன் ஒத்துழைக்க விரும்பும் கூட்டாளிகளுக்குத் தேவையான சலுகைகள் தரப்பட வேண்டும் என்றும், இவ்வாறு அவர்களை நம்முடன் சேரும்படியும், பொது நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளுமாறும் தூண்ட வேண்டும் என்றும், இதன் பின்னால் அவர்களிடம் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் அவர்களின் பின்னால் உள்ள மக்கள் திரளை வென்றெடுத்தல் வேண்டும் என்றும் தெளிவுபடுத்திக் கூறுகிறார்.

1935, டிசம்பர் 9ஆம் நாள் இயக்கம், வெள்ளைப் பகுதிகளில் வேலை செய்வதற்கான இத்தகைய செயல் தந்திரக் கோட்பாடுகள் சரியானவைதான் என்பதை நிரூபித்தது. இத்தகைய சரியான செயல் தந்திரங்களின் திசை வழிக்கு எதிராகப் பல்வேறு ''இடது'' வழிகளை மேற்கொண்ட தோழர்கள் புறவயமான நிலையில் நமக்கும் எதிரிக்கும் இடையிலான சக்திகளின் சமநிலையை ஆய்வு செய்யத் தவறினர்: எதிரியின் உள் முரண்பாடுகளில் போதுமான கவனம் செலுத்துவதில் அங்கீகரிக்க மறுப்பதிலும் அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்களில் இசைவான நிலைமை ஏற்படுத்துவதிலும் தோல்வியைத் தழுவினர். இதன் காரணமாக அவர்கள் தற்காப்பு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய காலத்தில் கண்மூடித்தனமான ''தாக்குதல் நடவடிக்கையை'' எடுத்ததன் விளைவாகத் தோல்வியைத் தழுவியதோடு மட்டுமின்றி, தாக்குதல் நடவடிக்கைகளுக்கான கால கட்டத்தில், வெற்றிகரமான

தாக்குதல் நடவடிக்கைகளை எப்படித் திரட்டி அமைப்பதென அறியாததன் விளைவாகவும் தோல்வியைத் தழுவினர்.

அவர்களுடைய ''சூழ்நிலையை மதிப்பிடும்'' வழியானது தனியானதும், தொடக்கமானதும், மறைமுகமானதும், ஒருபக்கமானதும் மற்றும் மேலோட்டமான நிகழ்வுகள் ஆகியவற்றைக் கொண்டதாகவும் அவர்கள் நோக்கு நிலைக்கு உகந்ததாகவும் இருந்தது. மேலும் அவற்றை எங்கும் பரவிக் கிடப்பதான, ஆழமான, நேர் முகமானதான, பன்முகப்பட்டதான, இன்றியமையாததானதாகப் பெரிதுபடுத்துவதுமாகும். அவர்களுடைய நோக்கு நிலையுடன் ஒத்துவராத உண்மைகளைக் கண்டு (எதிரியின் பலம் மற்றும் அவனது தற்காலிக வெற்றி, நமது பலவீனம் மற்றும் நமது தற்காலிகத் தோல்வி, மக்கள் திரளினுடைய அரசியல் உணர்வு போதாமை, எதிரியினுடைய உள் முரண்பாடுகள் மற்றும் எப்பக்கமும் சாயாமல் நடுநிலையாக உள்ளவர்களின் முற்போக்கான நிலை போன்றவை) கண் மூடினர் அல்லது அவற்றை அங்கீகரிக்க அச்சப்பட்டனர்.

அவர்கள் எழக்கூடிய மிகவும் கடினமான மற்றும் சிக்கலான சூழ்நிலைமைகளை ஒருபோதும் முன்னோக்கவில்லை; எழவே வாய்ப்பில்லாத, எளிமையான தங்களுக்கு மிகவும் சாதகமான சூழ்நிலைமைகளுக்காக அவர்கள் மிகவும் ஏங்கி எப்போதும் கனவு கண்டனர். செம்படை இயக்கத்தில், புரட்சிகரத் தளப்பகுதிகளைத் எதிரியானவன் சுற்றிவளைத்த போது, ''பயங்கரமான அச்சுறுத்தல்,'' ''தீவிரமான பீதி,'' ''இறுதி அழிவை நெருங்குதல்,'' ''முடுக்கிவிடப்பட்டவேகத்தில் அழிதல்,'' ''மொத்தமான நாசம்'' போன்ற பல்வகையான வர்ணனைகளைச் செய்தனர்.

மூன்றாவது ''இடது'' வழியின் விளக்க உரையாளர்கள் செம்படையானது தன்னைப் போல் பன்மடங்கு உள்ள அனைத்து கோமின்டாங் படைகள் மீது செல்வாக்கு செலுத்துகிறது என்று கூறி அதற்கு ஓய்வு கூட அளிக்காமல் சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாமல் தடையில்லாத இடைவிடாத தாக்குதல்களைத்தொடுக்க வேண்டும் என்று நிலை எடுத்தார்கள். 1924-27 புரட்சியின் விளைவாக வடசீனாவுக்கும் தென்சீனாவுக்கும் இடையில் புரட்சிகர வளர்ச்சியில் ஏற்பட்டிருந்த ஏற்றத்தாழ்வைக் காண மறுத்தனர். (சப்பானிய எதிர்ப்பு யுத்தம் வரை இந்த சூழ்நிலை மாறவில்லை) அவர்கள் ''வடக்குப் பிராந்தியத்தின் பின் தங்கிய நிலைமையின் கோட்பாடு'' என்று கூறுவதன் மூலம் இதைத் தவறாக எதிர்க்கவும் செய்தனர்; வட சீனாவின் எல்லாக் கிராமப்பகுதிகளிலும் சிவப்பு ஆட்சியை நிறுவவும், செம்படையின் குழுக்களை வெள்ளைப்

படையில் கட்டி கிளர்ச்சி அமைப்புக்களை உருவாக்கவும் கோரிக்கை விடுத்தனர். அவர்கள் மேலும் தளப்பகுதிகளின் மைய மற்றும் எல்லைப் பிரிவுகளுக்கிடையில் உள்ள ஏற்றத்தாழ்வை மறுத்ததுடன், ''லோத்மிங் வழி'' என்று கூறித் தவறாக இதை எதிர்க்கவும் செய்த னர். அவர்கள் செம்படையைத்தாக்கியயுத்தப்பிரபுக்களின் மத்தியில் இருந்த முரண்பாடுகளைப் பயன் படுத்தத் தவறியதுடன், தாக்கு வதை நிறுத்தி சமரத்திற்கு வருவதற்கு எவர் விருப்பம் தெரிவித் தனரோ அதையும் பொருட்படுத்தவில்லை. வெள்ளைப் பகுதிகளது வேலை சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் எதிர்ப்புரட்சிகரச் சக்தி கள் ஆளும் சக்திகள் மிகவும் பலம் வாய்ந்தனவாகவும், புரட்சிகர அலையானது தாழ்ந்த மட்டத்திலும் இருந்த நகரப்புறங்களில் அனைத்து சட்டப் பூர்வ வாய்ப்புகளையும் பயன்படுத்த மறுத்தது டன், பின் வாங்கவும், பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கை களை எடுக்க மறுத்தனர். மாறாக, சூழ்நிலைகளுக்குப்புறம்பானதான தாக்குதல் வடிவங்களைத் தொடர்ந்து எடுத்தனர்; பாதுகாப்பற்ற கட்சி அமைப்புகளைப் பெரிய அளவில் நிறுவினர்; மக்களிடமிருந்து தனிமைப்பட்ட ''சிவப்பு மக்கள் திரள் அமைப்புகளை'' அமைத் தனர்; சூழ்நிலைமைகளை கணக்கில் கொள்ளாமல் அவர்கள் அமைப்பாக்கப்பட்ட வேலை நிறுத்தங்கள், கூட்டு வேலை நிறுத்தங் கள், மாணவர், வியாபாரிகள், படைவீரர் மற்றும் காவல் துறையி னர் வேலை நிறுத்தங்கள், மேலும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அணிவகுப்புகள் பொதுக் கூட்டங்கள் மற்றும் ஆயுத எழுச்சிகளுக் கும்கூட— மக்களின் ஆதரவு அல்லது பங்கெடுப்பை வென்றெடுக்க இயலாத செயல்கள்— அழைப்பு விடுத்து இதில் அடைந்த தோல்வி களை ''வெற்றி''களாக வியாக்கியானமும் செய்தார்கள்.

தொகுத்து கூறுவோமானால், பல்வேறு ''இடது'' வழிகளை மேற்கொண்ட தோழர்கள், அதிலும் குறிப்பாகமூன்றாவது''இடது'' வழியினர் ஒன்றுமில்லாத கூப்பாடு போட்டுக் கதவடைப்புவாதத் தையும், சாகசவாதத்தையும் கைக் கொண்டனர்: ''அனைத்திற்கும் மேலாகப் போராட்டம் மற்றும் அனைத்தும் போராட்டத்திற்காக'' மற்றும் ''போராட்டத்தைத் தொடர்ச்சியாக வளர்த்தெடுத்தல் மற்றும் அதை மேலான கட்டத்திற்கு உயர்த்துதல்'' என்றெல்லாம் அவர்கள் குருட்டுத்தனமாக நம்பியதுடன், இதனால் எல்லாம் தொடர்ச்சியான தோல்விகளையெல்லாம்- எவையெல்லாம் நடை பெறாமலும், தவிர்க்கப்பட்டும் இருக்கக் கூடுமோ— சந்தித்தனர்.

## 2. இராணுவ ரீதியாக

சீனப் புரட்சியின் இன்றைய கால கட்டத்தில் அரசியல் போராட்டத்தின் முக்கிய வடிவமாக இராணுவப் போராட்டம்

இருக்கிறது. விவசாயப் புரட்சிகர யுத்தத்தின் போது, கட்சியின் வழியில் இது மிக முக்கியமான கேள்வியாக எழுந்தது. தோழர் மாசேதுங் மார்க்சிய லெனியத்தைப் பிரயோகித்து சீனப் புரட்சியின் சரியான அரசியல் வழியை வடிவமைத்ததோடு, விவசாயப் புரட்சி யின் தொடக்கக் காலத்திலிருந்தே அரசியல் வழிக்குக் கீழிருக்கும் சரியான இராணுவ வழியையும் வகுத்தளித்தார். தோழர் மாசே துங்கின் இராணுவ வழியானது இரண்டு அடிப்படை அம்சங்களி லிருந்து தொடங்குகிறது. முதலாவதானது, நமது இராணுவம் ஒரு குறிப்பிட்ட வகையானதாக இருக்கிறது; அப்படித்தான் இருக்கவும் முடியும். அது பாட்டாளி வர்க்கத்தின் தத்துவார்த்தத் தலைமைக்குக் கீழ்ப்பட்ட ஒரு கருவியாக இருக்க வேண்டும்; மக்களு டைய போராட்டங்களுக்குச் சேவை செய்கின்றதாகவும், புரட்சிகரத் தளப் பிரதேசங்களைக் கட்டுவதாகவும் இருக்க வேண்டும். இரண் டாவது, நமது யுத்தமானது ஒரு குறிப்பிட்ட வகையானதாக இருக்கிறது; அப்படித்தான் இருக்கவும் முடியும். எதிரி பலமாகவும் நாம் பலவீனமாகவும் இருக்கிறோம் என்பதையும், எதிரி பெரிய வனாகவும் நாம் சிறியவனாகவும் இருக்கிறோம் என்பதையும், எனவே எதிரியின் பலவீனத்தையும் நமது பலமான அம்சங்களையும் முழுமையாக நாம் பயன்படுத்துகிற, நீடிப்புக்கும் வெற்றிக்கும் விரிவாக்கத்திற்கும் மக்கள் திரளின் பலத்தை முழுமையாகச் சார்ந் திருக்கிற ஒரு யுத்தமாகவும் அது இருக்க வேண்டும்.

முதலாவது அம்சத்திலிருந்து வெளிப்படுவது என்னவென் றால், செந்சேனையானது (தற்போது எட்டாவது வழி இராணுவம், புதிய நான்காம் பிரிவு இராணுவம் மேலும் மக்களது ஆயுதப் படைகள்) கட்சியின் வழி, வேலைத் திட்டம், கொள்கைகள் ஆகிய வற்றிற்காக முழுமனதுடன் போராட வேண்டும்; அதாவது அனைத்து மக்களின் எல்லாவித நலன்களுக்காகப் போராட வேண்டும்; இதற்கு எதிராகச் செல்லுகிற போக்குகளை எதிர்த்துப் போராட வேண்டும்; எனவே, அரசியலுக்குக் கீழ்ப்படியாத அந்த இராணுவக் கண்ணோட்டத்தையும், அலைந்து திரியும் போராளித் தத்துவத்தையும் செஞ்சேனையானது எதிர்க்க வேண்டும். போராடு தல், மக்கள் திரள் வேலையைச் செய்தல், நிதி வசதிகளை உயர்த்துதல் (உற்பத்தியில் ஈடுபடுவதைத் தற்சமயம் உள்ளடக்கியது) என்ற மூன்று வகைப் பணிகளையும் ஒரே நேரத்தில் செஞ்சேனை யானது சுமக்க வேண்டும். மக்கள் திரள் வேலையைச் செய்வது என்பது, கட்சிக்காகவும் மக்கள் அரசியல் அதிகாரத்திற்காகவும் ஒரு பிரச்சாரகனாகவும், அணி திரட்டுபவனாகவும் மாறுவது என்று பொருள்படும்; நில வினியோகத்தில் உள்ளூர் மக்களுக்கு உதவுவது

என்று பொருள் படும்; (தற்சமயத்தில் நிலஉடைமை வாடகையையும் வரியையும் குறைப்பது) ஆயுதப்படை அரசியல் அதிகார உறுப்புகள், கட்சி அமைப்புகள் ஆகியவற்றைக் கட்டுவதில் உதவுவது என்று பொருள் படும். எனவே, அரசாங்கத்துடனும் மக்களுடனும் ஆன தனது உறவுகளில், செஞ்சேனையானது மக்கள் அரசியல் அதிகார உறுப்புகளையும் மக்கள்திரள் அமைப்புக்களையும் மிகக் கவனத்துடன் மதிப்பதும், அவற்றின் பெருமையைப் பலப்படுத்துவதும் கட்டுப்பாடு சம்பந்தமான மூன்று முக்கிய விதிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டிய எட்டு முக்கிய அம்சங்களையும் மிகக் கடுமையாகப் பின்பற்றுவதும் தேவைப்படுகின்றன. இராணுவத்திற்குள் அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் இடையில் ஒரு சரியான உறவை நிறுவுவதும், அரசியல் உணர்வின் அடிப்படையில் ஒரு பொருத்தமான சனநாயக வாழ்க்கை, ஒரு தேவையான இராணுவக் கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் பெற்றிருப்பதும் அவசியமாகிறது. எதிரிப் படைகளின் மத்தியில் வேலை செய்யும் போது, எதிரிகளைச் சீர்குலைக்கக் கூடியதும் கைதிகளை வென்றெடுக்கக் கூடியதுமான, ஒரு சரியான கொள்கை அவசியமாக இருக்கிறது.

இரண்டாவது அடிப்படை அம்சத்திலிருந்து, விவசாயப் புரட்சிகரப் போர்க் காலப் பகுதியின் போது, செம்படையானது கொரில்லா யுத்த முறையும், கொரில்லாத் தன்மை கொண்ட நடமாடும் போர் முறையும் பிரதான யுத்த முறை வடிவங்கள் என்பதை அங்கீகரிக்க வேண்டியுள்ளது; அது பிரதான படைப் பிராந்திய படைப் பிரிவுகளோடு ஒன்றிணைந்த, கிரமமான படை கொரில்லாப் பிரிவுகளுடனும், மக்கள் குடிப்படையுடனும் ஒன்றிணைந்த, ஆயுதந்தாங்கிய மக்கள்திரள் ஆயுதமற்ற மக்கள் திரளுடன் ஒன்றிணைந்த ஒரு மக்கள் யுத்தமே, செம்படையை விட பன்மடங்கு வலிமை வாய்ந்த ஒரு எதிரியை வீழ்த்தி, வெற்றியைத் தரமுடியும் என்பதை அங்கீகரிக்க வேண்டும். எனவே, போர்த் தந்திரத்தில், விரைந்து வெற்றி காணும் ஒரு யுத்தத்தைச் செம்படை எதிர்க்க வேண்டும்; செயல்தந்திரத்தில், நீண்ட சண்டையை எதிர்க்க வேண்டும்; போர்த்தந்திரத்தில் அது நீண்ட யுத்தத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும்; செயல்தந்திரத்தில், அது விரைந்து முடிவெடுத்தலைப் பற்றிக் கொள்ள வேண்டும்; போரியக்க நடவடிக்கைகளிலும், தனிச் சண்டைகளிலும் அது பலரைத் தோற்கடிக்கச் சிலரைப் பயன் படுத்துவது என்பதை எதிர்க்க வேண்டும்; சிலரைத் தோற்கடிக்க, பலரைப் படுத்துவது என்பதை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

எனவே, செம்படையானது கீழ்க்கண்ட போர்த்தந்திர மற்றும் செயல்தந்திரக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மக்களைத் தட்டியெழுப்புவதற்கு நமது சக்திகளைப் பிரி; எதிரிகளைச் சந்திக்க நமது சக்திகளை குவி.

எதிரி முன்னேறும்போது, நாம் பின்வாங்குவோம்; எதிரி முகாமிடும்போது, நாம் தொந்தரவு கொடுப்போம்; எதிரி தளர்வடையும்போது, நாம் தாக்குவோம்; எதிரி பின்வாங்கும் போது, நாம் பின்தொடர்வோம்.

தளப்பிரதேசங்களை விரிவுபடுத்த, அலை அலையாக முன்னேறும் கொள்கையைப் பயன்படுத்து; ஒரு பலமிக்க எதிரியால் பின்தொடரப்படும் போது, சுற்றி வட்டமிடும் கொள்கையைப் பயன்படுத்து.

எதிரியை ஆசைக்காட்டி, ஆழமாக கவர்.

அதி உன்னதப் படைகளைக் குவித்துக் கொண்டு, எதிரிகளின் வலிமை குறைந்த பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, எதிரிப் படைகளை ஒன்றன் பின் ஒன்றாக நசுக்கும் வகையில், நகரும் போர் முறையில், எதிரியின் ஒரு பகுதியை அல்லது பெரும் பகுதியை அழித்து விட முடியும் என்று உறுதியாகத் தெரியும் போது தாக்குதல் தொடுத்தல் வேண்டும்.

இராணுவ ரீதியாக, பல் வகைப்பட்ட ''இடது'' வழியினரும் தோழர் மாசேதுங்கின் வழியை முழுவதுமாக எதிர்த்தனர். முதல் ''இடது'' வழியின் திடீர் புரட்சி வாதம், செம்படையை மக்கள் திரளிடமிருந்து தனிமைப்படுத்தியது. இரண்டாவது ''இடது'' வழி செம்படையைத் துணிச்சல் வாதத் தாக்குதல்களுக்கு வழி நடத்தியது. ஆனால் இரண்டும் இராணுவ ரீதியாக ஒழுங்கமைக்கப் பட்டதல்ல. மூன்றாவது ''இடது'' வழி இவை இரண்டையும் இணைப்பதாக இருந்தது. இராணுவத்தைக் கட்டுவது என்ற பிரச்சினையில் மூன்றாவது ''இடது'' வழி விளக்க உரையாளர்கள் செம்படையின் மூன்று ஒன்றிணைந்த கடமைகளைத் தாக்குதல் என்ற ஒற்றைக் கடமையாகக் குறைத்தனர்; செம்படைக்கும் மக்களுக்கும், செம்படைக்கும் அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் படை வீரர் களுக்கும் இடையில் சரியான உறவுகளைப் பேணுவது எவ்வாறு என்பதைச் செம்படைக்குக் கற்றுக்கொடுப்பதையும் புறக்கணித்தனர். அவர்கள் தகாத ஒழுங்குக் கட்டுபாட்டை அனுசரிக்க கோரினர்;

மற்றும் அப்போதைய தவறற்ற செம்படையினர் கொரில்லாத் தன்மையைக் ''கொரில்லா வாதம்'' என்று கூறி எதிர்க்கவும் செய் தனர்; இதற்கும் மேலாக இராணுவத்திலான அரசியல் வேலைகளில் ''சடங்குகளை'' ஊட்டி வளர்த்தனர்.

இராணுவ நடவடிக்கைகளைப் பற்றிய பிரச்சினையில் எதிரி வலிமையுடன் இருப்பதையும் நாம் பலவீனமாய் இருப்பதையும் மறுத்தனர்; முக்கிய படைகளையே நம்பியிருக்கக் கூடிய வழக்கமான போர் முறை என்றழைக்கப்பட்ட நிலையான யுத்த முறையைக் கோரினார்கள். அவர்கள் போர்த் தந்திரத்தில் விரைவில் முடிவு காணும் யுத்தங்களையும் செயல் தந்திரத்தில் நீடித்த போரையும் வலியுறுத்தினார்கள். அவர்கள், ''எல்லா முனைகளின் மீதும் தாக்குதல்," மற்றும், ''இரண்டு முஷ்டிகளைக்கொண்டு தாக்குதல்'' என்பதை கோரினார்கள்; அவர்கள் எதிரியை ஆசை காட்டி ஆழமாகக் கவர்தலை எதிர்த்தார்கள்; துருப்புகளைத் தேவைக் கேற்றபடி இடமாற்றம் செய்வதைப் ''பின் வாங்குதல் மற்றும் பறந்தோடுதல்" என்று கூறி எதிர்த்தனர்; மேலும் நிலையான போராட்ட வழிகளையும், முற்றிலுமாக மையப்படுத்தப்பட்ட கட்டளைகளையும் கோரினார்கள்.

சுருங்கக் கூறின், கொரில்லாப் போர் முறையையும், கொரில் லாத் தன்மைக் கொண்ட நகரும் போர் முறையையும் தவறு என்று கூறி எதிர்த்தனர். மேலும் ஒரு மக்கள் யுத்தத்தைச் சரியான வழியில் எவ்வாறு நடத்திச் செல்வது என்பதை அவர்கள் அறிந்திருக்க வில்லை; ஐந்தாவது ''சுற்றி வளைத்து அடக்குதல்'' நடவ டிக்கைக்கு எதிரான இயக்கத்தின் போது மூன்றாவது ''இடது'' வழி விளக்க உரையாளர்கள் தாக்குதலில் துணிச்சல் வாதத் துடன் தொடங்கியதோடு, ''எதிரிகளோடு கதவுகளுக்கு வெளியே போராட வேண்டும்'' என்றும் நிர்ப்பந்தித் தனர். பிறகு அவர்கள் தற்காப்பில் பழைமை வாதத்திற்குத் திரும்பி, எல்லாவற்றையும் பாதுகாப்பதற்கு என்று நமது சக்திகளைப் பிரிக்கக் குரல் கொடுத்து, ''காலக்குறைவான வேகமான தாக்குதல்'', ''உரசிப்பார்க்கும் போட்டி'' என்பனவற்றை முழங்கி, இவ்வாறு உண்மையான பறந்தோடலுக்கு வித்திட்டு, கியாங்சி தளப்பகுதி களிலிருந்து பின்வாங்கும் கட்டாயத்திற்கும் ஆளானார்கள். மேற் கூறப்பட்டவைகள் தான் கொரில்லாப் போர் முறைக்கும் நகரும் போர் முறைக்கும் பதிலாக நிலையான போர் முறையையும், சரியாக நடத்தப்படும் மக்களது யுத்தத்திற்கு மாற்றாக ''வழக்கமான'' போர் முறையையும் முன் வைத்ததனால் கிடைக்கப் பெற்ற பின் விளைவுகளாகும்.

சப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போரில் போர்த்தந்திர ரீதியிலான பின்வாங்குதல் மற்றும் போர்த்தந்திர ரீதியிலான ஸ்தம்பித்த நிலைக் காலகட்டங்களில், நம்முடைய வலிமைக்கும் எதிரியின் வலிமைக்கும் இடையில் மிகப் பெரிய வேற்றுமை நிலவியதன் காரணமாக எட்டாவது வழி இராணுவத்திற்கும், புதிய நான்காவது இராணுவத்திற்கும் கீழ்க் கண்டவை தான் சரியான கோட்பாடாக இருந்திருக்கின்றது:

''கொரில்லாப் போர் முறைதான் அடிப்படையானது. ஆனால் சாதகமான காலகட்டங்களில் நகரும் போர் முறைக்கான வாய்ப்புகளை இழக்கக் கூடாது.'' நகரும் போர் முறைக்குக் கூடுதலான அழுத்தம் தருவது தவறானதாக இருந்தது. ஆனால், போர்த்தந்திர ரீதியான எதிர்தாக்குதலைத் தொடுக்கும் காலகட்டங்களில், கட்சியின் வேலையின் ஈர்ப்பு மையமானது, நாட்டுப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு மாற்றப்பட வேண்டும்; எனவே போர்த்தந்திரத்தில் பிரதானமான கொரில்லாப் போர் முறையிலிருந்து, பிரதானமான நகரும் போர் முறைக்கும் மற்றும் நிலையான போர் முறைக்கும் மாறுவது அவசியமாகும். அப்போது நமது படைகள் நவீனக் கருவிகள் பெற்றிருப்பதும் அவசியமாகும். வரப்போகின்ற இத்தகைய மாற்றத்திற்காகக் கட்சி முழுமையிலும் முழு எச்சரிக்கையுடன் தயாரிப்புகளைச் செய்ய வேண்டியிருந்தது.

## 3. அமைப்பு ரீதியாக

தோழர் மாசேதுங் கூறுகிறபடி, சரியான அரசியல் வழியானது, ''மக்களிடமிருந்து மக்களுக்கு'' என்று இருக்க வேண்டும். இத்தகைய அரசியல் வழியானது உண்மையிலேயே மக்களிடமிருந்து வருவதற்கும், மேலும் குறிப்பாக மக்களிடம் செல்வதை உறுதிப்படுத்துவதற்கும், கட்சிக்கு வெளியே மக்களுக்கும் கட்சிக்கும் (வர்க்கத்துக்கும் மக்களுக்குமிடையில்) நெருக்கமான உறவு இருந்தால் மட்டும் போதாது; இதற்கும் மேலாகக் கட்சியை வழிநடத்திச் செல்லும் அமைப்புகளுக்கும், மக்களுக்கும் கட்சிக்குள்ளே (ஊழியர்கள் மற்றும் அணிகளுக்கு இடையில்) நெருக்கமான உறவுகள் இருக்க வேண்டும்; வேறு வார்த்தைகளில் கூறினால் ஒரு சரியான அமைப்பு வழி இருக்க வேண்டும். ஆகையினால் கட்சி வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் தோழர் மாசேதுங் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அரசியல் வழியை வடிவமைத்திருக்கிறார். இதன் காரணமாக அரசியல் [வழிக்கு பணிபுரியக்கூடிய ஓர் அமைப்பு

வழியையும் உருவாக்கியதோடு, மேலும் கட்சியின் வெளியேயும் உள்ளேயும் மக்களுடன் நெருக்கமான உறவுகளைப் பராமரித்தார்.

1929-இல் நடந்த நான்காவது செம்படையின் ஒன்பதாவது கட்சிக் காங்கிரஸ் கூட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்ட முடிவுகளின் காரணமாக, விவசாயப் புரட்சிகரப் போர்க் கால கட்டத்தில் முக்கியமான வளர்ச்சிகள் ஏற்பட்டன. இந்த முடிவுகள் தத்துவார்த்த, அரசியல் கோட்பாட்டுத் தளத்தின் மேல் கட்சியைக் கட்டி அமைப்பதையும் பாட்டாளிவர்க்கத் தத்துவத்தின் தலைமைப் பங்கினையும் உறுதியாக உயர்த்திப் பிடித்தது. தூய்மையான இராணுவக் கண்ணோட்டம், அகநிலை வாதம், தனிநபர் வாதம், சமத்துவ வாதம், அலைந்து திரியும் கலகக்கார சித்தாந்தம், திடீர்ப்புரட்சி வாதம் போன்ற போக்குகளை அது சரியான முறையில் எதிர்த்துச் சண்டையிட்டது. மேலும் இத்தகைய போக்குகளின் கெடுதல்களையும், அதன் வேரையும் சுட்டிக்காட்டிய துடன் இதைத் திருத்துவதற்கான வழிமுறைகளையும் சுட்டிக் காட்டியது. அதே சமயத்தில் இந்த முடிவுகள் சனநாயக மத்தியத்துவத்தைக் கண்டிப்பாக உயர்த்திப் பிடித்ததுடன் முறையற்ற கட்டுப்பாடுகளை, சனநாயகத்தின் மீதோ அல்லது மத்தியத்துவத்தின் மீதோ விதிப்பதை எதிர்த்தது. கட்சியின் முழுமையான ஒற்றுமையின் நலன்களின் செயல் முறைகளி லிருந்து தோழர் மாசேதுங் பகுதி முழுமைக்குக்கட்டுப் பட வேண்டும் என்று வற்புறுத்தினார். சீனப்புரட்சியின் பருண்மையான குணாம்சங்களுக்கு உகந்த வகையில் அவர் புதிய மற்றும் பழைய ஊழியர்களுக்கு இடையேயும், வெளியேயுள்ள மற்றும் உள்ளே உள்ள ஊழியர்களுக்கு இடையேயும், இராணுவ ஊழியர்களுக்கும் ஒரு பிரதேசத்தில் வேலை செய்யும் உள்ளூர் ஊழியர்களுக்கும் கட்சியின் பல்வேறு பிரிவைச் சார்ந்த ஊழியர் களுக்கும், ஒரு பிரதேசத்தைச் சார்ந்த ஊழியர்களுக்கும் இடையே யான சரியான உறவுகளை வரையறுத்தார். இவ்வாறு ஒரு கோட்பாடு என்ற வகையில் உண்மையில் உறுதியாக நிற்பதை ஒரு ஒழுக்கம் என்ற வகையில் அமைப்பிற்குக் கீழ்ப்படிதல் என்பதோடு எவ்வாறு இணைப்பது என்பதற்கான ஒரு மாதிரியை, உட்கட்சி ஒற்றுமையை ஒரு சரியான வழியில் பேணிக்கொண்டே உட்கட்சிப் போராட்டத்தை எவ்வாறு நடத்துவது என்பதற் கான மாதிரியைத் தோழர் மாவோ நமக்கு அளித்தார்.

தலைகீழாகக் கூறினால், எப்பொழுதெல்லாம் ஒரு தவறான அரசியல் வழி ஆதிக்கம் செலுத்தியதோ அப்போது தவிர்க்க இயலாத வகையில் ஒரு தவறான அமைப்பு வழி தோன்றியது:

இந்தத் தவறான அரசியல் வழியின் ஆதிக்கம் எவ்வளவு காலம் நீடித்ததோ அவ்வளவு அதிகமாக அமைப்பு வழியினால் தீங்கு ஏற்பட்டது. எனவே விவசாயப் புரட்சிப் போரின்போது தோன்றிய பல்வேறு இடது வழிகளும் தோழர் மாசேதுங்கின் அரசியல் வழியை எதிர்த்தது போன்று அமைப்பு வழியையும் எதிர்த்தன. அவர்கள் ஒரு குறுகிய உள் வகுப்புப்பற்றை (Sectria-nism) உருவாக்கினர். அது கட்சிக்கு உள்ளே இருந்த மக்களை அந்நியப்படுத்தியது. (அதாவது, அது ஒரு சில கட்சி உறுப்பினர் களின் பகுதி நலன்களை முழு கட்சியின் நலனுக்குப் பணிய வைக்கவில்லை; கட்சியின் தலைமை அமைப்பு முழுக்கட்சியின் விருப்புறுதியைக் குவிக்கிற ஒன்றாக மதிக்கவில்லை) அதுபோலவே, கட்சிக்கு வெளியேயுள்ள மக்கள்திரள்களையும் அந்நியப்படுத்தியது. (அதாவது, மக்கள்திரளுடைய நலன்களின் பிரதிநிதியாகவும் அவர்களுடைய விருப்புறுதியின் குவிப்பானாகவும் கட்சியை அது, மதிக்கவில்லை.) குறிப்பாக, மூன்றாவது ''இடது'' வழியினர் தங்களுடைய விருப்புறுதியைக் கட்டாயமாகச் செயல்படுத்துவதற் காக, இந்தத் தவறான வழி நடைமுறைக்கு ஒவ்வாதது எனக் கண்டு, ஆகவே அதன்பால் ஐயம் அல்லது ஒப்புதலின்மை அல்லது அதிருப்தி தெரிவித்தவர்களை, அல்லது இந்தத் தவறான வழியைச் செயலூக்கமுடன் ஆதரித்தவர்களை அல்லது அதை உறுதியுடன் செயல்படுத்தாதவர்களை— இத்தகைய கட்சி உறுப்பினர் களாகிய தோழர்கள் மீது-''வலது சந்தர்ப்ப வாதம்'', ''பணக்கார உழவர் வழி'' ''லோமிங் வழி'', 'இணங்கிப் போகிற (சமரச) வழி' ''இரட்டை வேடம் போடும் வழி''யைச் செயல்படுத்துகிறவர்கள் என்று இட்டுக்கட்டி முத்திரை இட்டுவிட்டனர். அவர்கள் மீது ''ஈவிரக்கமற்ற போராட்டங்களை''த் தொடுத்தனர். அவர்கள் மீது ''இரக்கமற்ற அடிகளை''க் கொடுத்தனர்; ஏதோ குற்றவாளி களையும் எதிரிகளையும் கையாள்வதுபோல இந்த உட்கட்சிப் போராட்டங்களை நடத்தினர். இந்த ''இடது'' வழியைத் தலைமை ஏற்று நடத்திய தோழர்கள் இத்தகைய தவறான உட்கட்சிப் போராட்டங்களை வழக்கமான ஒன்றாக ஆக்கி விட்டனர். இப்போராட்டங்களால் அவர்கள் தங்கள் சொந்தக் கௌரவத்தை உயர்த்திக் கொள்ளவும் தங்கள் சொந்தக் கோரிக்கை களைச் செயல்படுத்தவும், கட்சி ஊழியர்களை அச்சுறுத்தவும் செய்தனர். இது கட்சியின் உள்ளே அதன் அடிப்படை கோட் பாடான, சனநாயக மத்தியத்துவத்தைப் பலவந்தமாக மீறியது; ''விமர்சனம், சுயவிமர்சனம்'' என்ற சனநாயக உணர்வுகளைத் தளர்த்தியது. கட்சியின் ஒழுக்கத்தை, எந்திர ரீதியான ஒழுக்கமாகத் திசை மாற்றியது; குருட்டுத்தனமான பணிவையும்,கீழ்ப் படிதலையும்

ஊட்டி வளர்த்தது. இவ்வாறாக, உயிரோட்டமான மேலும் ஆக்கப்பூர்வமான மார்க்சியத்தின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்திச் சிதைத்தது.

இந்தத் தவறான உட்கட்சிப் போராட்டத்துடன், தோழர் கள்பாலான பிளவுவாதக் கொள்கையும் இணைக்கப்பட்டது. இந்தப் பிளவுவாதிகள் தேர்ச்சி மிகுந்த உறுப்பினர்களைக் கட்சியின் மதிப்புமிக்கச் சொத்தாக அங்கீகரிக்கவில்லை. இதற்கு மாறாக, பிளவுவாதிகள் வேலையில் அனுபவமுடைய, பெருந்திரளான மக்களுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்த பிளவுவாதிகளுடன் உகந்த நல்லுறவு கொண்டிராத தேர்ச்சி மிக்க ஏராளமான ஊழியர்களை, அவர்களுடைய குருட்டுத் தொண்டர்களாகவும் ஆமாம்சாமிகளாகவும் ஆவதற்கு விருப்பம் கொண்டிராத தேர்ச்சி மிக்க ஏராளமான ஊழியர்களைத் தாக்கினர், தண்டித்தனர். மேலும் மைய மற்றும் உள்ளூர்க் குழுக்களில் இருந்து நீக்கவும் செய் தனர். அவர்கள் புதிய உறுப்பினர்களுக்குக்கல்வி புகட்டவும் இல்லை. அவர்களது பணி உயர்வை முக்கியமானதாகக் கருதிக் கையாளவும் இல்லை(முக்கியமாக தொழிலாளிவர்க்கத்திடமிருந்துவந்தவர்களை). இதற்கு மாறாக, நடைமுறையில் அனுபவம் இல்லாதவர்களுக்கும், மக்களுடன் நெருக்கமான உறவு கொண்டிராதவர்களுக்கும், பிளவு வாதிகளை ஆதரித்தவர்களுக்கும், அவர்களுடைய 'ஆமாம் சாமி களுக்கும்,' குருட்டுத் தொண்டர்களுக்கும் பதவி உயர்வு அளித்தது டன், அவர்களை மைய மற்றும் உள்ளூர்க்குழுக்களில் இருந்த தேர்ச்சி மிக்கத் தோழர்களுக்குப் பதிலாக மாற்றீடும் செய்தனர். இவ்வாறாக இவர்கள் பழைய உறுப்பினர்களை தாக்கியது மட்டுமின்றிப் புதிய உறுப்பினர்களையும் பாழாக்கினர். மேலும், அநேக இடங்களில் கையாளப்பட்ட எதிர்ப்புரட்சிகரச் சக்திகளை நசுக்குவதற்கான தவறான கொள்கையுடன் உறுப்பினர்கள்பாலான பிளவுவாதக் கொள்கையும் இணைந்து சிக்கலாக மாறிய இடங்களில் ஏராளமான சிறந்த தோழர்கள் நீதியற்ற முறையில் பொய்க்குற்றச்சாட்டுகளின் கீழ்த் தண்டிக்கப்பட்டனர். இது கட்சிக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பை ஏற்படுத்தியது. இத்தகைய பிளவுவாதத்தவறுகள் கட்சியை மிகவும் பலவீனப்படுத்தின. உயர்ந்த மற்றும் கீழேயுள்ள அமைப்பு களின் இடையேயிருந்த ஒழுங்கான இயக்கத்தை கெடுத்தன. கட்சிக் குள் மேலும் பல முறைகேடுகளைத் தோற்றுவித்தன.

விரிவுப்படுத்தப்பட்ட ஏழாவது தொடர்க்கூட்ட அமர்வு பின் வருமாறு அறிவித்தது:

சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பிழையான வழிகளின் பிரதிநிதிகளால், தோழர்களின் மீது தவறாகச் சுமத்தப்பட்ட

எல்லாவிதமான குற்றச்சாட்டுகள் மற்றும் குற்றச்சாட்டுகளின் பகுதிகள் தள்ளுபடி செய்யப்படும். ஆய்வுகளின் வாயிலாக, பொய்க் குற்றச் சாட்டுக்கு ஆளானவர் என்று நிரூபிக்கப்படும் ஒவ்வொரு தோழரும், குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்படுவர். மீண்டும் கட்சியின் உறுப்பினராக்கப்படுவர். அவருடைய நினைவு எல்லாத் தோழர்களாலும் மரியாதையுடன் போற்றப்படும்.

## 4. கருத்துநிலை ரீதியாக (Idealogically)

எல்லாவித சரியான அல்லது சரியற்ற அரசியல், ராணுவ, அமைப்பு வழிகள் தத்துவார்த்த வேர்களைத் தன்னுள் கொண்டுள்ளன. அதாவது இத்தகைய தத்துவார்த்த வேர்கள் மார்க்சிய லெனினிய இயக்கவியல் பொருள் முதலியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதலியல் ஆகியவற்றிலிருந்து தொடங்குகின்றனவா என்பதைச் சார்ந்தும், மேலும் சீனப்புரட்சியின் புறவயமான அம்சங்களிலிருந்தும் சீன மக்களின் புறவயமான தேவைகளிலிருந்தும் தொடங்குகின்றனவா என்பதைச் சார்ந்தும் உள்ளன. தோழர் மாசேதுங் சீனப் புரட்சி என்ற நோக்கத்தை ஏற்றுக் கொண்ட நாளிலிருந்தே, சீனச் சமுதயத்தின் மெய்யான நிலைமைகளை ஆராயவும் கற்றறியவும் அனைத்தும் தழுவிய உண்மையான மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளைப் பயன் படுத்துவதில் பற்றுறுதியோடும் இருந்தார். விவசாயப்புரட்சிகர யுத்தத்தின் போது, ''ஆய்வின்றிப் பேசுவதற்கு உரிமையில்லை'' என்ற கோட்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததுடன், வறட்டுச் சூத்திரவாதம் அக நிலைவாதம் ஆகிய அபாயங்களைக் கடுமையாக எதிர்த்துப் போரிட்டார். நிதர்சனமான சூழ்நிலைகளைப் பற்றி சரியான விதத்தில் ஆய்வு செய்து, அதன் விளைவாக நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் கட்சியின் உள்ளேயும் வெளியேயும் நிலவும் குணாம்சங்களை ஆய்வு செய்து, சீனப்புரட்சியின் குறிப்பாக 1924-27 புரட்சியின் வரலாற்று அனுபவங்களைத் துல்லியமாகத் தொகுத்து, வரலாற்றுப் பொருள் முதலியல் மற்றும் இயக்கவியல் பொருள் முதலியல் என்ற மார்க்சிய லெனினியக் கோட்பாட்டினடிப்படையில் கட்சியின் அரசியல், இராணுவ அமைப்பு வழிகளை உருவாக்கியது உண்மையிலேயே தோழர் மாசேதுங்கின் அறிவார்ந்த சாதனைகளாகும்.

சீனாவில் வாழ்ந்து போரிட்டுக் கொண்டிருக்கிற சீனப் பொதுவுடைமையாளர்கள் இயங்கியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதலியலைக் கற்றறிவதன் நோக்கம் தோழர்மாவோ செய்துள்ளபடி சீனப்புரட்சியின் நடைமுறைப் பிரச்சினைகளைக் கற்றறிவதும் அவற்றுக்குத் தீர்வுகாண்பதுமேயாகும்.

ஆனால் உண்மையிலேயே "இடது" தவறுகள் புரிந்த எவரும் மாவோவின் வழிமுறைகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது அதைப் புரிந்து கொள்ளவோ இல்லை. மூன்றாவது "இடது" வழியின் பிரதிநிதிகள் மாவோவை 'குறுகிய அனுபவவாதி' என்று நிந்தித்தனர். அவர்களுடைய தத்துவமானது அகநிலை வாதத்தையும், சம்பிரதாயவாதத்தையும், வேர்களாகக் கொண்டிருந்தது. மூன்றாவது "இடது" வழி ஆதிக்கம் செலுத்திய காலத்திலோ, அது வறட்டுச் சூத்திரவாதமாக இன்னும் முனைப்பான வடிவத்தில் வெளிப்பட்டது. வறட்டுச் சூத்திர வாதத்தின் குணாம்சமானது, நிலவும் நிலமைகளிலிருந்து தொடங்காமல் புத்தகங்களிலிருந்து குறிப்பிட்ட வார்த்தைகள் மற்றும் வாக்கியங்களை மேற்கோள் காட்டுவதாக அமைகிறது. வறட்டுச் சூத்திர வாதிகள் மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தை அடித்தளமாகக் கொள்ளவில்லை, அந்த அடிப்படையில் கடந்த கால நிகழ்காலச் சீனப் புரட்சியின் அரசியல், இராணுவ, பொருளாதார, பண்பாட்டு அனுபவங்களையும் நடைமுறை அனுபவங்களையும் பற்றித் தீவிரமாக ஆராயவும் அவற்றின் அடிப்படையிலிருந்து சீனப்புரட்சியின் நடைமுறைக்கு முடிவுகளை எடுக்கவும், அவ்வாறு எடுத்த முடிவுகளை மக்கள் திரளின் நடைமுறையில் பயன்படுத்தி அவற்றைச் சோதிக்கவும் மறுத்தனர். இதற்கு மாறாக, மார்க்சிய லெனினியத்தின் சாரத்தை வீசியெறிந்துவிட்டு அவர்கள் மார்க்சிய லெனினிய இலக்கியத்திலிருந்து குறிப்பிட்ட சில மேற்கோள்களை நாட்டில் தூவியெறிந்து இன்றைய சீனத்தில் பொருத்தமான சூழ்நிலைமைகளுக்கு தகுந்தவாறு, அவற்றைப் பொருத்துவதைப் பற்றி ஆய்வு செய்யாமல் வறட்டுச் சூத்திரவாதமாகக் கையாண்டனர். ஆகையால் தவிர்க்க இயலாதவாறு வறட்டுச் சூத்திரவாதிகளின் "கோட்பாடுகள்" உண்மையிலிருந்து தனிமைப்பட்டன; அவர்களுடைய தலைவர்கள் மக்கள் திரளிடமிருந்து தனிமைப்பட்டுப் போயினர். விவரங்களிலிருந்து உண்மையைத் தேடாமல் அவர்கள் முன்பே கருத்தைக் கொண்டவர்களாகவும், அராஜகவாதிகளாகவும், முறையான விமர்சனம் மற்றும் சுயவிமர்சனத்தைக் கண்டு அஞ்சுபவர்களாகவும், வழுக்கல் தன்மையுடையோராகவும் இருந்தனர்.

அனுபவவாதக் கருத்து நிலையானது வறட்டுச் சூத்திர வாதம் ஆதிக்கம் செலுத்திய காலப்பகுதியின் கூட்டாளியும் உதவியாளுமாகும். அது அகநிலை வாதம் மற்றும் சம்பிரதாய வாதத்தின் வெளிப்பாடுமாகும். அனுபவ வாதம் புத்தகங்களில் இருந்து தொடங்காமல் குறுகிய அனுபவத்திலிருந்து தொடங்குகிறது. இவ்வகையில் அது வறட்டுச்சூத்திரவாதத்திலிருந்து வேறு

படுகிறது. பெருந்திரளான தோழர்கள் நடைமுறை வேலையில் ஈட்டிய பயனுள்ள அனுபவம் மிகமிக மதிப்பு மிக்க சொத்தாகும் என்பதை வலியுறுத்தியாக வேண்டும். அனுபவ வாதமல்ல, மாறாக மார்க்சிய லெனினியமே அந்த அனுபவங்களை எதிர்கால நடவடிக்கைக்கான ஒரு வழிகாட்டியாக விஞ்ஞான பூர்வமாகத் தொகுக்கிறது; அது போலவே நடைமுறை வேலையில் அனுபவம் உள்ளவர்கள் மத்தியில், தங்களது சொந்த வறட்டு வாதமல்ல, மாறாக, மார்க்சிய லெனினியமே, மார்க்சிய லெனினியத் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் வறட்டுக் கோட்பாடாக எடுக்காமல் புரட்சிகர நடவடிக்கைக்கான வழிகாட்டியாக எடுக்கிறது.

ஆனால், நடைமுறை வேலை செல்வதில் தேர்ந்த தோழர்களிடையே சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குறுகிய சொந்த அனுபவத்துடன்—அத்துடன் மட்டுமே-மன நிறைவடைந்து விடுகின்றனர்; அதையே தமது கொள்கை எனப் பிடிவாதமாகக் கருதுகின்றனர்; அதை எல்லா இடங்களிலும் பயன்படுத்த முடியும் என்று கருதுகின்றனர். ''ஒரு புரட்சிகரக் கோட்பாடு இல்லாமல் புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது'' என்ற உண்மையையும், ''தலைமைதாங்கி நடத்துவதற்கு'' ஒருவர் முன்னறி திறன் கொண்டிருக்க வேண்டும் என்ற உண்மையையும் அவர்கள் புரிந்து கொள்வதுமில்லை; அதை ஒப்புக் கொள்வதுமில்லை. இதன் விளைவாக அவர்கள் உலகப் புரட்சி அனுபவங்களின் தொகுப்பாகிய மார்க்சிய லெனினியத்தைக் கற்பதில்லை; மேலும் தத்துவமற்றதும், எங்குமே இட்டுச் செல்லாத அன்றாடப் பழக்கங்களையுடையதுமாகிய குறுகிய நடைமுறை வாதத்துடன் அறிவுமயங்கிக் கிடக்கின்றனர். அவர்கள் உயரதிகாரத்திலமர்ந்து கட்டளையிடும் நிலை ஏற்பட்டால் அவர்களது மூடத்தனத்தால் தங்களை 'வீரர்கள்' (கதாநாயகர்கள்) என்று கருதிக் கொண்டு, தேர்ச்சி மிக்கவர்களைப் போலக் காட்டிக்கொண்டு தோழர்களின் விமர்சனத்துக்குச் செவிசாய்க்க மறுத்துவிடுகின்றனர்; அல்லது சுயவிமர்சனமும் செய்து கொள்வதில்லை; அப்புறம் இத்தகைய தோழர்கள் அனுபவவாதிகளாகி விடுகின்றனர்.

இவ்வாறாக, அனுபவவாதிகளும் வறட்டுச்சூத்திரவாதிகளும், அவர்கள் வெவ்வேறு விஷயங்களில்,வேறுபட்ட போதிலும் சிந்தனை முறையின் சாராம்சத்தில் ஒன்றாகவே உள்ளனர். இருசாராருமே சீனப் புரட்சியின் பருண்மையான நடைமுறையிலிருந்து அனைத்தும் தழுவிய உண்மையான மார்க்சிய லெனினியத்திலிருந்து துண்டித்துக்

கொண்டவர்களாவர்; இருசாராருமே இயங்கியல் மற்றும்வரலாற்றுப் பொருள் முதலியலை பலவந்தமாக மீறியவர்களாவர்; இருசாராருமே பகுதி மற்றும் ஒப்பீட்டளவிலான உண்மைகளை அனைத்தும் தழுவிய மற்றும் முற்றிலும் முழுமைபெற்ற உண்மைகளாகப் பெரிதுபடுத்தினர். இருசாராரில் எவருடைய சிந்தனையும் புறவயமான, மெய்யான நிலைமையை அப்படியே முழுவதுமாகப் பார்த்து எழுந்ததன்று. எனவே, சீனச்சமுதாயம் மற்றும் சீனப்புரட்சியைப் பற்றிப் பல தவறான கருத்துகளை இருவருமே கொண்டிருந்தனர். (எடுத்துக்காட்டாக, பெருநகரங்களை ஈர்ப்பு மையமாகக் கருதியமை, வெள்ளைப்பகுதிகளிலான வேலைகளை ஈர்ப்பு மையமாகக் கருதியமை, நடப்பியல் நிலைமைகளைக் கணக்கில் கொள்ளாமல் ''ஒழுங்குமுறைப்" போர் நடத்தல் ஆகியவை பற்றிய அவர்களுடைய பிழையான பார்வைகள்) இந்த வெவ்வேறான இரண்டு தரப்புத் தோழர்களைக் கூட்டாளிகளாகக்குவதற்கு வாய்ப்பளித்த சித்தாந்த (கருத்து நிலை) வேர்கள் இவைதான்.

தங்களுடைய குறுகிய, வரம்புக்குட்பட்ட அனுபவம் காரணமாக, அனுபவவாதிகளில் பெரும்பாலானோர் பொதுவான இயல்பையுடைய பிரச்சினைகளில் சுதந்திரமான, தெளிவான, முறையான பார்வைகள் போதாதவர்களாக இருந்தனர். எனவே அவர்கள் வழக்கமாக வறட்டுச் சூத்திரவாதிகளுடனான, கூட்டுறவில் பின் பாட்டுப் பாடுகிறவர்களாகவே இருந்தனர்; எனினும், அனுபவவாதிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் வறட்டுச் சூத்திரவாதிகளால் ''அவர்களுடைய நஞ்சைக் கட்சி முழுவதிலும் எளிதாகப் பரப்பி இருக்க முடியாது'' என்பது நமது கட்சியின் வரலாற்றால் தெளிவாக நிரூபிக்கப் பட்டுள்ளது. வறட்டுச் சூத்திரவாதம் தோற்கடிக்கப்பட்ட பிறகு கட்சியில் மார்க்சிய லெனினியத்தின் வளர்ச்சிக்கு அனுபவ வாதம் முக்கியமான தடையாக மாறியது. எனவே நாம் அகநிலைவாத அனுபவவாதத்தையும், அகநிலை வாத வறட்டுச் சூத்திரவாதத்தையும் ஒருசேரத் தோற்கடிக்க வேண்டும். வறட்டுச் சூத்திரவாத மற்றும், அனுபவவாதச் சித்தாந்தத்தை முழுவதுமாகத் தோற்கடித்துத்தான் மார்க்சிய லெனினியச் சித்தாந்தமும், வழியும், வேலை முறையும் எங்கெங்கும் பரவிக் கட்சி முழுவதிலும் ஆழமாக வேரூன்ற முடியும்.

நான்கு விதமான பிழைகளின் அரசியல், இராணுவ, அமைப்பு மற்றும் சித்தாந்த அம்சங்கள் பற்றி மேலே விவாதிக்கப்பட்டன. இவை, பல்வேறு இடது வழிகள், குறிப்பாக மூன்றாவதன் அடிப் படைப் பிழைகள் ஆகும். மேலும் இத்தகைய அரசியல், இராணுவ, அமைப்புப் பிழைகள் மார்க்சிய லெனினிய இயங்கியல் மற்றும்

வரலாற்றுப் பொருள் முதலியலை மீறியதன் காரணமாகவும், அகநிலை வாதம், மற்றும் சம்பிரதாய வாதத்தின் காரணமாகவும், வறட்டுச் சூத்திரவாதம் மற்றும் அனுபவவாதத்தின் காரணமாகவும் சித்தாந்த ரீதியில் கிளைத்து வளர்ந்தன.

விரிவுப்படுத்தப்பட்ட ஏழாவது தொடர்க்கூட்ட அமர்வானது பல்வேறு ''இடது'' வழிகளின் பிழைகளை நாம் மறுத்து ஒதுக்கும் பொழுது, ''அனைத்துப் பிரச்சனைகளையும் பகுத்தாராயுங்கள்; ஒவ்வொன்றையும் மறுத்து ஒதுக்காதீர்கள்'' என்ற தோழர் மாவோவின் கட்டளையை மனத்தில் கொண்டு செயல்பட வேண்டு மென்று சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய பிழைகளைப் புரிந்த தோழர்களுடைய எல்லா நோக்கு நிலைகளும் தவறானவை அல்ல என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஏகாதிபத்தியத்துக்கும் நிலப் பிரபுத்துவத்துக்கும் எதிரான போராட்டம், விவசாயப் புரட்சி, சியாங்கே-ஷேக்கை எதிர்க்கும் போர் ஆகியவற்றில் அவர்களின் சில நிலைபாடுகள், சரியான வழியை உயர்த்திப் பிடித்த தோழர்களின் நிலைப்பாடுகளுடன் உடன்பட்டிருந்தன. மேலும் நாம் குறிப்பிட வேண்டியது என்னவெனில், குறிப்பாக மூன்றாவது 'இடது' வழி நீண்ட காலம் ஆதிக்கம் செலுத்திய போது, கட்சிக்கும் புரட்சிக்கும் அதனால் குறிப்பாகப் பலத்த சேதம் விளைந்திருந்த போதிலும், அந்தக் கால கட்டங்களில் பல இடங்களிலும், பல தளங்களிலும் நடைமுறை வேலையில் கட்சி அதிகச் சாதனைகள் புரிந்திருந்தது. (உதாரணமாக, போர் முறையிலும், படையைக் கட்டுவதிலும், போர்த் தயாரிப்புகளிலும், அரசியல் அதிகாரத்தைக் கட்டுவதிலும், வெள்ளைப்பகுதிகளில் நடைபெற்ற வேலைகளிலும்) திரளான படை வீரர்களுடனும், மக்களுடனும் சேர்ந்து ஏராளமான கட்சி ஊழியர்களும் உறுப்பினர்களும் செய்த செயலூக்கமுள்ள வேலை களுக்கும், வீரஞ்செறிந்த போராட்டங்களுக்கும் நன்றி கூறியாக வேண்டும். துல்லியமாகக் கூறினால் இந்தச் சாதனைகளால் தான் நாம் பல ஆண்டுகளாக எதிரியின் தாக்குதலுக்கு எதிரான போரில் தாக்குப்பிடித்து நிற்கவும், எதிரிக்குத் துன்பத்தைக் கொடுக்கவும் முடிந்தது; இதேபோல் இந்தப் பிழையான வழிகளின் ஆதிக்கம் காரணமாக இத்தகைய சாதனைகள் இறுதியில் அழிக்கப் பட்டதிலும் முடிந்தது. பல்வேறு பிழையான வழிகளின் ஆதிக்கம் இருந்த காலத்தில் மக்களுடைய நலன்களின் பொருட்டுத் தங்களின் வாழ்வை வீரமாகத் தியாகம் செய்த, கட்சிக்கு உள்ளேயும் வெளியே யும் இருந்த முன்னணியினர், தலைவர்கள், ஊழியர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரையும் கட்சியும் மக்களும் என்றென்றைக்கும் ஏற்றிப்போற்ற வேண்டும். இதைப்

போன்றே, கட்சியின் வரலாற்றின், பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் உயிர்த்தியாகம் செய்த அனைவரும் மதிக்கப்பட வேண்டும்.

மேலே, நான்கு அம்சங்களிலும் விவாதிக்கப்பட்ட 'இடது' வழியின் பிழைகள் எதிர்பாராமல் நேர்ந்தவை அல்ல; அவை மிகவும் ஆழமான சமுதாய வேர்களைக் கொண்டுள்ளன.

தோழர் மாசேதுங் பிரதிநிதித்துவப்படுத்திய, சரியான வழியானது, சீனப்பாட்டாளி வர்க்கத்தின் மிக முன்னேறிய பகுதியினரின் சித்தாந்தத்தைப் பிரதிபலித்தது. அதுபோலவே "இடது" வழியானது சீனக் குட்டிமுதலாளிய சனநாயகவாதிகளின் சித்தாந்தத்தைப் பிரதிபலித்தது. அரைநிலப்பிரபுத்துவ அரைக்காலனிய சீனாவானது ஏராளமான குட்டி முதலாளிய வர்க்கத்தைக் கொண்டிருந்தது. நமது கட்சியானது இத்தகைய பரந்துபட்ட வர்க்கங்களுக்கு நடுவே இருந்ததோடு மட்டுமின்றி, பெருமளவில் குட்டிமுதலாளியத் தோற்றத்தைக் கொண்டோர் உறுப்பினராக நம் கட்சிக்குள்ளும் உள்ளனர். அக்டோபர் புரட்சிக்குப் பின்னால் மார்க்சிய லெனினியத்தின் மாபெரும் உலக வெற்றியின் விளைவாக வலிமை வாய்ந்த சீனக் குட்டி முதலாளிய வர்க்கத்தாரின் கட்சி உருவாகச் சீனாவில் வாய்ப்பில்லாமல் போய் விட்டபடியாலும், சீனாவில் நிலவிய அரசியல் சமூக நிலைமைகள் அதிலும் குறிப்பாகக் கோமின்டாங் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் வரலாற்று வளர்ச்சியின் விளைவாகவும், அநேக புரட்சிகர சீனக் குட்டி முதலாளிய வர்க்கத்தார், தங்கள் இடர்ப்பாடான நிலைமை காரணமாக, பாட்டாளி வர்க்கத்தை நோக்கித் திரும்பினர். மேலும் சீனாவில் நிலவிய பொருளாதாரச் சூழ்நிலைமைகளின் காரணமாக உழைக்கும் மக்கள் மற்றும் பாட்டாளி வர்க்கத் தோற்றத்தில் இருந்துவந்த கட்சி உறுப்பினர்களும், குட்டி முதலாளிய சந்தனப் பூச்சுக்கு உள்ளாக நேர்ந்தது. எனவே ஒவ்வொரு வகையிலும் வடிவிலும் குட்டி முதலாளியக் கருத்துநிலை அடிக்கடி நம் கட்சிக்குள்ளே பிரதிபலிப்பதென்பது தவிர்க்க முடியாததாகும்; இதில் வியப்படைய எதுவுமில்லை.

கட்சிக்கு வெளியில் உள்ள குட்டி முதலாளிய மக்கள் திரளினர் மத்தியில், சீனாவின் முதலாளியச் சனநாயகப் புரட்சியில் தலையாய சக்தியாக அமைந்துள்ள விவசாயிகளுடன் சேர்த்து நகர்ப்புறக் குட்டி முதலாளிகளும் கூட இன்றைய கால கட்டத்தில் புரட்சியின் உந்து சக்திகளில் ஒன்றாக உள்ளனர். ஏனெனில், இந்த வர்க்கத்தின் மிகப் பெரும்பாலோர் எல்லா விதமான அடக்கு

முறைகளுக்கும் உட்படுத்தப்படுவதுடன், தொடர்ச்சியாகவும் வேகமாகவும் வறுமைக்கும், திவலான நிலைக்கும், வேலையற்ற நிலைக்கும் உள்ளாக்கப்படுவதால் அவர்கள் பொருளாதாரம் மற்றும் அரசியல் சனநாயகத்தைக் கோருகின்றார்கள். மாறுநிலையிலுள்ள வர்க்கமென்ற முறையில் இவர்கள் இருவிதமான பண்புகளைக் கொண்டுள்ளார்கள். அதன் நல்ல மற்றும் புரட்சிகரப் பகுதியைப் பொறுத்தவரையில் இந்த வர்க்கத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல், அமைப்பு வழி மற்றும் கருத்து நிலையின் செல்வாக்குக்கு உள்ளாகி ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளனர். இப்போது அவர்கள் சனநாயகப் புரட்சியைக் கோருகிறார்கள்; அதற்காக ஒன்று கூடிப் போராடக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். மேலும், வருங்காலத்தில் பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து சோசலிசப் பாதை அமைக்கவும் அவர்களால் முடியும். ஆனால், இதனின் கெட்ட மற்றும் பிற்போக்குப் பகுதியைப் பொறுத்தவரையில் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற, பலவித பலவீனங்களை இது கொண்டிருப்பதுடன், பாட்டாளி வர்க்கத் தலைமையிலிருந்து இவ்வர்க்கம் அடிக்கடி விலகித் தன் திசை வழியை மாற்றிக் கொள்வதுடன் தாராளவாத முதலாளியத்தின் செல்வாக்கின் கீழ் விழுந்து விடுகிறது; அல்லது பெரும் முதலாளிய வர்க்கத்தாரின் செல்வாக்கின்கீழ்ச் சென்று அவர்களின் சிறைக் கைதிகளாக மாறவும் செய்கின்றது.

எனவே ,இன்றையக் கட்டத்தில் சீனப் பாட்டாளி வர்க்கமும், அதனுடைய முன்னணிப் படையான சீனப் பொதுவுடைமைக் கட்சியும், கட்சியின் வெளியேவுள்ள குட்டி முதலாளிய வர்க்கத்தாருடன் ஓர் உறுதியான பரந்த கூட்டணியைக் கட்ட வேண்டும். மேலும், ஒருபுறம் அவர்களைக் கையாள்வதில் கடுமையற்றும், அவர்களுடைய தாராளவாதக் கருத்துகளையும் வேலை முறையையும் எதிரியுடனான போராட்டத்தைத் தடுக்காத வகையிலும், அல்லது நாம் பொதுவாகச் சேர்ந்து வாழ்கிற சமூக வாழ்க்கைக்கு ஊறு ஏற்படாத வகையிலும் பொறுத்துக் கொள்ளவும் வேண்டும். அதே சமயத்தில், மறுபுறம் அவர்களுடன் நமது கூட்டைப் பலப்படுத்தும் வகையில், அவர்களுக்குப் பொருத்தமான கல்வியினைக் கொடுக்க வேண்டும்.

தங்களுடைய வர்க்க நிலைப்பாட்டைத் தாங்களாகவே கைவிட்டுப் பாட்டாளி வர்க்கக் கட்சியில் சேர்ந்துள்ள குட்டி முதலாளிய வர்க்கத்தாரைக் கையாளுவது, முன்பு சொல்லப்பட்ட

விதத்தில் இருந்து முற்றிலும் வேறுபடுகிறது. கட்சியின் வெளியே இருந்த குட்டி முதலாளிய வர்க்கத்தாரைக் கையாண்ட கொள்கையில் இருந்து வேறுபட்ட கொள்கையை, இவர்களைக் கையாளுவதில் கடைப்பிடிக்க வேண்டும். இத்தகையவர்கள் தொடக்கத்தில் இருந்தே பாட்டாளிவர்க்கத்துடன் நெருங்கி இருந்தனர். கட்சியில் தாங்களாகவே சேர்ந்துள்ளனர். இதனால் அவர்கள் படிப்படியாக, கட்சியில் மார்க்சிய லெனினியக் கல்வியின் மூலமாகத் தங்களுடைய கருத்துநிலையில் பாட்டாளிவர்க்கமாக மாறமுடியும். மேலும், பல புரட்சிகரப் போராட்டங்களின் வாயிலாக உறுதிப்பட முடியும். மேலும், பாட்டாளி வர்க்கச் சக்திகளுக்கு மாபெரும் சேவை செய்ய முடியும். உண்மையிலேயே, நமது கட்சியில் சேர்ந்த பெருந்திரளான குட்டி முதலாளிய வர்க்கத்தாரில் பெரும்பாலானோர் வீரத்துடன் போரிட்டிருக்கின்றனர். கட்சிக்காகவும், மக்களுக்காகவும், முன்னேறிய தத்துவத்திற்காகவும் தியாகம் புரிந்திருப்பதுடன் பலர், ஏற்கனவே மார்க்சிய, லெனினியர்களாகவும் மாறியிருக்கின்றனர்.

இருந்த போதிலும் பாட்டாளி வர்க்கமாக மாற்றப்படாத குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் புரட்சிப் பண்பு சாராம்சத்தில், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் பண்பில் இருந்து மாறுபடுகிறது என்பதற்கும், இத்தகைய வேறுபாடு அடிக்கடி, பகை நிலைக்கு வளர்ந்து செல்ல முடியும் என்பதற்கும் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும். குட்டி முதலாளியப் புரட்சிப் பண்புடைய கட்சி உறுப்பினர்கள் அமைப்பு ரீதியில் கட்சியில் சேர்ந்திருக்கின்றனரே அன்றி (கருத்து நிலை) சித்தாந்த ரீதியாக இணையவில்லை. அல்லது முழுமையாக அவர்கள் அவ்வாறு இல்லை. அவர்கள் மார்க்சிய லெனினியப் போர்வையில் அடிக்கடி தாராளவாதிகளாகவும், சீர்திருத்தவாதிகளாகவும், அராஜகவாதிகளாகவும், பிளாங்கிஸ்டுகளாகவும், இன்ன பிறவாகவும் இருக்கின்றனர். நிலைமை இப்படியிருக்கையில், சீனப் பொதுவுடைமை இயக்கத்தின் நாளைய வெற்றிக்கு அதை வழி நடத்திச் செல்ல தகுதியற்றவர்களாக இருப்பதுடன் கூட இவர்களால் இன்றைய சீனாவின் புதிய சனநாயகப் புரட்சியின் வெற்றிக்கு வழி நடத்திச் செல்லவும் இவர்களால் இயலாது. பாட்டாளிவர்க்கத்தின் முன்னேறிய பகுதியினர், மார்க்சிய லெனினியச் சித்தாந்தத்திற்கும் குட்டி முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்களின் சித்தாந்தத்திற்கும் இடையில், கறாரான கூர்மையான எல்லைக் கோட்டை வரையாவிடில், அவர்களுக்குக் கல்வி புகட்டாவிடில், கறாரான ஆனால் பொருத்தமான ஏற்ற வழியில் அவர்களுடன் போராடாவிடில், குட்டி முதலாளிய

சித்தாந்தத்தை வெல்வது இயலாததாகி விடும். இதற்கும் மேலாக இந்த உறுப்பினர்கள் தவிர்க்க இயலாதவாறு, பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையைத் தங்களுடைய சொந்தப் படிமமாக மறுவார்ப்பு செய்யக் கடும் முயற்சி செய்வார்கள்; மேலும் அவர்கள் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை அபகரித்து, இவ்வாறாகக் கட்சி மற்றும் மக்களுடைய நோக்கத்திற்கு ஊறுவிளைவிப்பார்கள். கட்சிக்கு வெளியில் ஏராளமான குட்டி முதலாளிய வர்க்கம் இருப்பதாலும் கட்சிக்குள்ளும் இவ்வர்க்கத் தோற்றம் கொண்டோர் ஏராளமாக இருப்பதாலும் கட்சியானது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்க, தன்னுடைய தூய்மையைப் பாதுகாக்கக் கடுமையாக முயல வேண்டும். இதில் தவறினால், குட்டி முதலாளியச் சித்தாந்தமானது கட்சிக்கு மிகவும் பலத்த சேதாரத்தைக் கொண்டு வரும்; பாதிப்பானது மிக மிக அதிகமாக இருக்கும்.

நமது கட்சியின் வரலாற்றில், சரியான வழிக்கும் பல்வேறு தவறான வழிகளுக்கும் இடையில் நடந்த போராட்டங்களானது, கட்சிக்கு வெளியே நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் வெளிப்பாடாகவே இருந்திருக்கிறது. மேலே, விவாதிக்கப்பட்ட, பல்வேறு "இடது" வழிகளின் அரசியல், இராணுவ, அமைப்பு மற்றும் சித்தாந்தப் பிழைகள் யாவும், குட்டி முதலாளியச் சித்தாந்தத்தின் பிரதிப்பலிப்பாகவே இருந்திருக்கின்றன. இந்தப் பிரச்சினையை மூன்று அம்சங்களில் பகுத்தாராயலாம்.

**முதலாவது சிந்தனை முறை :** குட்டி முதலாளியச் சிந்தனை முறையானது, அடிப்படையில், அக நிலை வாதத்திலும், பிரச்சினைகளை ஒரு பக்கமாக நோக்குவதிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அதாவது வர்க்கச் சக்திகளின் சமநிலை சித்திரம் பற்றி ஒருங்கிணைந்த முறையிலும், புறவய நிலையிலும் சிந்திக்கத் தொடங்குவதில்லை; ஆனால் அகவய விருப்பங்களிலிருந்தும் உள்ளப் பதிவுகளிலிருந்தும், எதார்த்தத்திற்குப் பதிலாக வெற்று வாய்ச் சவடால்களிலிருந்தும், அனைத்து அம்சங்களிலிருந்து அல்லாமல் ஒரே அம்சத்திலிருந்தும்; முழுமைக்குப் பதிலாக பகுதியிலிருந்தும், தோப்பிற்குப் பதிலாக தனி மரத்திலிருந்தும் நோக்கத் தொடங்குகிறது. மெய்யான உற்பத்தி வளர்ச்சி நிலவரத்திலிருந்து தனித்து இருப்பதால், குட்டி முதலாளிய அறிவாளிகள் அனுபவ அறிவு இன்றி, புத்தக அறிவு மட்டுமே பெற்றுள்ளனர். எனவே அவர்களுடைய சிந்தனை முறையானது, மேலே விவாதிக்கப்பட்ட வறட்டுச் சூத்திரவாதத்தையே வெளிப்படுத்த இயலும். அப்படியே அவர்கள்

சிறிதளவு அனுபவ அறிவு பெற்றிருந்தாலும், இத்தகைய குட்டி முதலாளியவாதிகள் குறுகியப் போக்கும், துண்டு துண்டானதும், தனிமைப்பட்டதும், பழைமைப் பிடிப்புடையதுமான சிறுவீத உற்பத்தியின் தன்மைகளை வரம்பாகக் கொண்டிருக்கும் உற்பத்தியுடன் தொடர்புகொண்டவர்களாக இருப்பதால், மேலே நாம் விவாதித்தவாறு அவர்களுடைய சிந்தனை முறையானது அனுபவ வாதம் என்பதற்குள்ளேயே தான் வெளிப்பட இயலும்.

**இரண்டாவது, அரசியல் போக்கு:** குட்டி முதலாளிய வர்க்கத்தின் வாழ்க்கை முறை, அகநிலைவாதத்திலும், ஒருபக்கப் பார்வையிலும் வெளிப்படும் சிந்தனை முறையின் வெளிப்பாடு இவற்றின் காரணமாக, அது ''இடது''க்கும் வலதுக்கும் இடையில் ஊசலாடுவதாகவே, அதனுடைய அரசியல் போக்கு அமைந்துள்ளது. பெரும்பாலான குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர்களின் பிரதிநிதிகள் அவர்களுடைய தற்போதைய அந்தஸ்தில் ஒரு முற்போக்கான மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகப் புரட்சியின் உடனடி வெற்றியில் ஆர்வம் கொண்டுள்ளனர். எனவே, நீண்ட காலப் புரட்சிகர முயற்சிக்குத் தேவையான பொறுமை அவர்களிடம் குறைவாக உள்ளது, அல்லது ''இடது'' புரட்சிகர வார்த்தைகளையும் முழக்கங்களையும் விரும்புகிறார்கள்; அவர்களது மனோபாவத்திலும் செயல்களிலும் கதவடைப்புவாதம் அல்லது துணிச்சல் வாதம் இவற்றிற்கு இடம் கொடுத்து விடுகிறார்கள். கட்சியில் இவற்றின் பிரதிபலிப்பாக, இந்த குட்டி முதலாளியப் போக்கு, நாம் மேலே விவாதித்த பல்வேறு பிரச்சினைகளில், அதாவது புரட்சியின் கடமைகள். புரட்சிகரத் தளப்பகுதிகள், செயல்தந்திரத்தின் திசைவழி மற்றும் இராணுவவழி போன்றவற்றில் பல்வேறு தவறான ''இடது'' பிழைகளைத் தோற்றுவித்தன.

ஆனால், இதே குட்டி முதலாளியப் புரட்சியாளர்கள் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைகளை எதிர்கொண்ட போது (அல்லது இவர்களில் வேறொரு பிரிவினர்) நம்பிக்கையில்லாதவர்களாகவும், ஊக்கமிழந்தவர்களாகவும், வலது மனோபாவங்களையும் பார்வைகளையும் வெளியிடுபவர்களாகவும், முதலாளிவர்க்கத்தின் பின் செல்பவர்களாகவும் மாற இயலும். 1924-27 புரட்சியின் பிந்திய காலச் சென்துசிய வாதம், விவசாயப் புரட்சியின் பிந்தியகாலச் சென் குவோ தாவியச வாதம்; நீண்ட பயணத்தின் தொடக்கக் கால கட்டத்தின் பறந்தோடுவாதம் ஆகியவை கட்சிக்குள் இத்தகைய குட்டி முதலாளிய வலதுசாரிச் சித்தாந்தத்தின் பிரதிபலிப்புகளாகும். மேலும் சப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போர்க் காலத்தில் சரணடைவுவாதக் கருத்துகள் மீண்டும் தோன்றின.

பொதுவாகக் கூறினால், முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் பிளவு ஏற்படும் காலங்களில் (உதாரணமாக, விவசாயப் புரட்சியின் காலகட்டத்தில், மூன்று முறைக்குக் குறையாமல், ''இடது'' வழியானது கட்சியின்தலைமை அமைப்பில் ஆதிக்கம் செலுத்தியது) ''இடது'' பிழைகள் தோன்ற அதிக வாய்ப்புள்ளது. அதே சமயம், முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் ஒரு கூட்டணி ஏற்படும் காலங்களில் (உதாரணத்திற்கு, 1924-27 புரட்சியின் பின்பகுதி மற்றும் சப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போரின் தொடக்கப்பகுதி) வலது சாரிப் பிழைகள் தோன்ற அதிக வாய்ப்புள்ளது. ஆனால், ''இடதானாலும்'' வலதானாலும், இத்தகைய போக்குகள் புரட்சிக்கு நற்பயன் அளிக்காமல், எதிர்ப்புரட்சிக்கே நற்பயன் அளிக்கின்றன. ''இடது''க்கோ அல்லது வலதுக்கோ ஊசலாடுதல், அதி தீவிரத்தின் மீதான விருப்பம், பொருளின்றித் திடீரென எண்ணங்களை மாற்றுதல், திறமைமிக்க சந்தர்ப்பவாதம் ஆகிய இவையெல்லாம் மாறும் சூழ்நிலைகளின் அழுத்தத்தால் வெளிப்படுகின்றன. குட்டி முதலாளியச் சித்தாந்தத்தின் மோசமான பக்கத்தின் சிறப்புக் கூறுகளாகும். குட்டி முதலாளிய வர்க்கத்தின் நிலையற்ற பொருளாதார அந்தஸ்தின் சித்தாந்த முனையின் பிரதிபலிப்புகளாக இவை அனைத்தும் அமைகின்றன.

**மூன்றாவது, அமைப்பான வாழ்க்கை :** பொதுவாக, குட்டி முதலாளிய வர்க்கத்தாரின் சிந்தனைமுறை மற்றும் எல்லைகளுக்குட்பட்ட வாழ்க்கை முறை இவற்றின் காரணமாக, மேலும் குறிப்பாக, சீனாவின் பின்தங்கிய மற்றும் மையப்படுத்தப்படாத சமூகச் சூழ்நிலை (அதன் குலங்கள் (Clans) வணிகச் சங்கங்கள் (Guilds) இவற்றையும் உள்ளடக்கி) காரணமாக, குட்டி முதலாளியப் போக்கானது, மக்களிடமிருந்து அந்நியமான, குறுங்குழு வாதம் மற்றும் தனிநபர்வாதம் இவற்றின் வெளிப்பாடுகளாகவே அமைப்பான வாழ்க்கையில் இருக்க முடியும். இந்தப் போக்கு, கட்சியில் பிரதிபலித்தபோது, மேலே விவாதித்த பல்வேறு பிழையான ''இடது'' அமைப்பான வழிக்கு இட்டுச் சென்றன, உண்மையில், கட்சியானது வெகு காலமாகவே சிதறுண்ட கொரில்லாப் போரை நாட்டுப்புறத்தில் நடத்திக் கொண்டிருந்ததே, இத்தகைய போக்கு மேலும் எளிதாக வளர வழி வகுத்தது. இத்தகைய போக்கு கட்சிக்காகவும், மக்களுக்காகவும் தன்னலமற்ற சேவை செய்வதாக இருக்கவில்லை; அதற்கு மாறாக, கட்சியின் வலிமையையும், மக்களையும் சுரண்டுவதுடன் கூடவே அவற்றின் நலன்களை, தங்களுடைய சொந்த அல்லது குறுங்குழுவின் நோக்கங்களுக்காகக் குழித் தோண்டிப் புதைத்தது.

எனவே, இதன் காரணமாக இத்தகைய போக்கு மக்களுடன் நெருங்கிய உறவு கொள்ளுதல் என்ற கட்சிக் கோட்பாட்டுடனும், கட்சியின் சனநாயக மத்தியத்துவத்துடனும், கட்சிக் கட்டுப்பாட்டுடனும் இணக்கம் கொள்ளவில்லை. இத்தகைய போக்கு அடிக்கடி, அதிகாரத்துவம், வம்சா வழித் தலைமை, தண்டனை விதிக்கும் தன்மை, கட்டளைவாதம், தனிநபர் வீர சாகசம், அரை - அரசாக வாதம், தாராள வாதம், அதீத சனநாயகம், ''சுதந்திரத்தை'' வற்புறுத்தல், வணிகக்குழு மனோநிலை, ''மலை-அரண்'' மனோ நிலை, சக நகர மாந்தருக்கும் பள்ளித் தோழருக்கும் சலுகை காட்டும் ரசிக மனோ நிலை, கோஷ்டிச் சண்டைகள் மற்றும் கயமைத்தனமான சூழ்ச்சிகள் போன்ற இத்தகைய வடிவங்களில் வெளிப்பட்டு, இவை அனைத்தும், கட்சிக்கும் மக்களுக்கும் இடையே இருந்த தொடர்பையும், கட்சியின் உள் ஒற்றுமையையும் அரித்தெடுத்து வீழ்த்தின.

இவை குட்டி முதலாளியச் சித்தாந்தத்தின் மூன்று அம்சங்கள் ஆகும். சித்தாந்தத்தில் அக நிலைவாதம், அரசியலில் ''இடது'' மற்றும் வலது விலகல்கள், அமைப்பில் குறுங்குழு வாதம் ஆகிய இவை அனைத்தும் பல்வேறு சமயங்களில் நம் கட்சியில் தோன்றின; இவை ஒரு வழியாக ஒழுங்காய்த் திரண்டு ஒன்று சேர்ந்து கட்சியின் தலைமையைக் கைப்பற்றினாலும் கைப்பற்றா விட்டாலும்கூட, இவை மார்க்சிய லெனினியத்துக்கு எதிரான, பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான குட்டி முதலாளிய வெளிப்பாடுகள் என்பது தெளிவானதாகும். கட்சி மற்றும் மக்கள் நலன்களின் பொருட்டு, மார்க்சிய கல்வி முறையைப் பயன்படுத்திப் பகுத்தாய்வதும் கட்சிக்குள் குட்டி முதலாளியச் சித்தாந்தத்தைக் கடந்து வருவதும், பாட்டாளிவர்க்கச் சித்தாந்தமாக உருப்பெருவதற்கு உதவுவதும் ஆகியவை மிக இன்றியமையாதனவாகும்.

## VI

கட்சி முழுவதும் ஆதிக்கம் செலுத்திய பல்வேறு ''இடது'' வழிகள், அதிலும் குறிப்பாக மூன்றாவது ''இடது'' வழி தற்செயலான நிகழ்வு அன்று; ஒரு குறிப்பிட்ட சமூக மற்றும் வரலாற்று நிலைமைகளின் விளைவே என்பதை நாம் மேலே தெரிந்து கொண்டவைகளிலிருந்து காண இயலும். எனவே, பிழையான ''இடது'' அல்லது வலது சித்தாந்தத்தை வெல்ல வேண்டுமாயின், நாம் போகிற போக்கிலோ அல்லது கட்டாயப்படுத்தலின் மூலமோ

அதனைச் செய்ய இயலாது; ஆனால் மார்க்சிய லெனினியக் கல்வியை ஆழமாக்கி, பாட்டாளிவர்க்கச் சித்தாந்தத்தைக் குட்டி முதலாளியச் சித்தாந்தத்திலிருந்து வேறுபடுத்தும் அளவிற்குக் கட்சி முழுவதன் திறமையை உயர்த்தவேண்டும்; உட்கட்சி சனநாயகத்தை முழு அளவில் செயல்படுத்த வேண்டும்; விமர்சனம், சுய விமர்சனத்தை மேம்படுத்த வேண்டும்; பொறுமையாக எடுத்துச் சொல்லியும் கல்வி கற்பித்தும் வேலையைத் தொடங்குவதுடன் பிழைகள் பற்றிய குறிப்பான ஆய்வு செய்வதையும் மற்றும் பிழைகளின் ஆபத்துகளையும் மற்றும் இவற்றின் வரலாற்றுச் சித்தாந்த வேர்களைச் சுட்டிக்காட்டி விளக்குவதுடன் இவற்றைத் திருத்துவதற்கான வழிமுறைகளையும் கூறவேண்டும். கட்சிக்குள் பிழைகளைக் கடந்து வருவதற்கான மார்க்சிய லெனினியவாதிகளின் முறையான அணுகுமுறை இதுவேயாகும்.

கட்சி முழுமையும் தற்சமயம் நடைபெற்று வரும் சீர்செய் இயக்கத்திற்காகவும் கட்சி வரலாற்றைக் கற்றறிவதற்காகவும் தோழர் மாசேதுங் முன்வைத்த ''எதிர்காலத்துத் தவறுகளைத் தவிர்க்கும் பொருட்டுக் கடந்தகால அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளல் மற்றும் நோயாளியைக் குணப்படுத்தும் பொருட்டு நோய்க்குச் சிகிச்சையளித்தல்", ''சித்தாந்தத்தில் தெளிவு மற்றும் தோழர்களுக்குள் ஒற்றுமை'' என்ற கொள்கைகள், கட்சிக்குள் உள்ள பிழைகளைக் கடந்து வருவதற்காக மார்க்சிய லெனினியவாதிகள் கையாளவேண்டிய அணுகுமுறைக்குச் சரியான மாதிரியாக உள்ளதென்று இந்த விரிவுப்படுத்தப்பட்ட ஏழாவது தொடர்க் கூட்ட அமர்வானது சுட்டிக்காட்டுகிறது. எனவே, இதனால் அனைத்துக் கட்சியின் சித்தாந்த, அரசியல், அமைப்புத் தரத்தை உயர்த்தியும், ஒன்றுபடுத்தியும் மகத்தான சாதனைகளைப் பெற்றிட்டுச் செல்லவும் முடிந்தது.

விரிவுபடுத்தப்பட்ட ஏழாவது தொடர்க் கூட்ட அமர்வானது சென்-து-சியுயிசம் மற்றும் லி லி-சானிசம் போன்றவற்றுக்கு எதிராகத் தனது வரலாற்றில் கட்சி நடத்திய போராட்டங்கள் முற்றிலும் இன்றியமையாதன என்று சுட்டிக் காட்டுகிறது. கட்சிக்குள் தீவிரமான அளவில் நிலவிக் கொண்டிருந்த குட்டி முதலாளியச் சித்தாந்தத்தைத் திருத்தும் நோக்கத்துடன், தீவிர நடவடிக்கைகளை உணர்வுப்பூர்வமாக இத்தகைய போராட்டங்கள் எடுக்கவில்லை என்பதே இப்போராட்டத்தின் குறைபாடுகளாக இருந்தன. இதன் விளைவாக, இந்தப் போராட்டங்கள் பிழைகளின் சித்தாந்தச் சாரத்தையும் மற்றும் வேர்களையும் முழுவதுமாக

விளக்கிச் சொல்லவும் இல்லை; அல்லது பிழைகளைச் சரி செய்வதற்கான வழிமுறைகளைச் சுட்டிக் காட்டவும் இல்லை; எனவே இத்தகைய பிழைகள் திரும்பவும் எளிதாக நிகழ்ந்தன. மேலும் கூடுதலாக, பிழை புரியும் தோழரை ஒருமுறை தாக்கினாலே பிரச்சனையைத் தீர்த்துவிட முடியும் என்ற நம்பிக்கையுடன், தவறு செய்யும் நபரைப் பொறுப்பாக்குவதற்கு அதிக அழுத்தம் கொடுக்கப் பட்டது.

ஆறாவது மையக்குழுவின் நான்காவது தொடர்க் கூட்ட அமர்வின் போதும், அதன் பின்பும் நேர்ந்த பிழைகளை ஆய்வு செய்த பின்னர், எதிர்காலத்தில் உட்கட்சிச் சித்தாந்தப் போராட்டங்களின்போது தோழர் மாசேதுங்கின் கொள்கையைக்கட்டாயமாகவும், தீர்மானகரமாகவும் நடைமுறைப்படுத்தி கடந்த காலத்தில் நடந்தது போன்ற குறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று கட்சியானது கருதுகிறது. கடந்த காலத்தில் பிழை புரிந்து தன்னுடைய பிழைகளை உணர்ந்து திருத்திக் கொள்ளத் தொடங்கியிருக்கிற எந்தத் தோழரையும் நாம் எவ்விதத் தப்பெண்ணமும் இன்றி வரவேற்று அவருடன் ஒன்றிணைந்து கட்சிக்காக வேலை செய்ய வேண்டும். தன்னுடைய பிழைகளை இன்னும் முறையாக உணர்ந்து திருத்திக் கொள்ளாத, அதே நேரத்தில் பிழைகளைப் பிடிவாதமாகப் பற்றிக் கொண்டிராத தோழர்களிடம் நாம் உண்மையான, தோழமையுடைய அணுகுமுறையைக் கையாள்வதுடன், அவர்கள் தங்கள் பிழைகளை உணர்ந்து திருத்திக் கொள்வதிலும் உதவ வேண்டும்.

கடந்த காலத்தின் பிழையான வழிகளைப் புரிந்து கொள்வதில் கட்சி முழுவதும் இப்போது ஒரே மனதாக இருக்கிறது. கட்சி முழுமையும், தோழர் மாசேதுங்கால் தலைமைத் தாங்கப் படுகின்ற மையக்குழுவைச் சுற்றி திரண்டிருக்கிறது. எனவே கட்சி முழுவதன் கடமையானது, இப்போதிருந்து தெளிவான சிந்தனை மற்றும் கோட்பாட்டை உறுதியாகப் பற்றிநிற்றல் மூலமாக ஒற்றுமையை வலுப்படுத்துவதில் முனைய வேண்டும். அல்லது இந்தத் தீர்மானத்தின் இரண்டாவது பிரிவின் வார்த்தைகளில் கூறினால், ''ஒரு ஒத்திசைவான குடும்பம் போன்று, உறுதியான எஃகைப் போன்று கட்சி முழுவதையும் ஒன்றுபடுத்தி, சப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போரின் முழு வெற்றிக்குச் சண்டையிடுவதும், சீன மக்களின் முழு விடுதலைக்குப் போரிடுவதும்'' ஆகும்.

நமது கட்சியின் அனைத்துப் பகுப்பாய்வுகளும் விமர்சனங்களும், கட்சி வரலாறு பற்றிய கருத்து மாறுபாடுகளும் ஒற்றுமை

என்ற விருப்பத்திலிருந்து தொடங்கி ஒற்றுமையிலேயே முடிவடைய வேண்டும். இந்தக் கோட்பாட்டை மீறுகிற எந்த ஒரு செயலும் தவறானதாகும். இன்றும் குட்டி முதலாளியச் சிந்தனையானது கட்சிக்குள் தனது சமுதாய வேர்களைக் கொண்டு நீடிப்பதாலும், கிராமப்புறத்தில் கட்சியானது நீண்ட காலத்திற்கு நீடித்த மற்றும் சிதறலான கொரில்லாப் போர்முறை நடத்திய சூழ்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாலும், வறட்டு வாதம் மற்றும் அனுபவவாதம் ஆகியவற்றின் சித்தாந்த எச்சங்கள் இன்னும் நிலவி வருவதாலும், மேலும் குறிப்பாக, அனுபவவாதத்தைப் பற்றிய விமர்சனம் போதுமானதாக இல்லாததாலும், கட்சியில் தீவிரக் குறுங்குழுவாதத்தை முக்கியமாக வெற்றிக் கொண்டிருந்த போதிலும் இன்னும் குறுங்குழுவாதப் போக்குகள் ''மலை அரண்'' மனோபாவத்துடன் சேர்ந்து இன்றளவும் மிகப் பரவலாக நீடிப்பதாலும், கட்சியானது முழுமையான மார்க்சிய லெனினிய சித்தாந்த ஒற்றுமையைச் சாதிக்க வேண்டுமானால், தவறான கருத்துகளை வெல்லுவதற்கு ஒரு நீண்ட, தொடர்ந்த போராட்டம் தேவைப்படும் என்ற உண்மைக்கு கட்சி பூராவும் அதிக கவனம் தர வேண்டும். எனவே சரியான கட்சி வேலை முறையை மேலும் வளர்ப்பதற்கும் வறட்டுவாதம், அனுபவ வாதம், குறுங்குழுவாதம் மற்றும் ''மலை அரண்'' மனோபாவம் ஆகிய போக்குகளை முழுமையாகக் கடந்து வரவும், கட்சி முழுவதிலும் தனது மார்க்சிய லெனினிய கல்வியைப் பலமிக்கதாக ஆக்குவதுடன் மார்க்சிய லெனினியத்தைச் சீனப் புரட்சியின் நடை முறையுடன் இணைக்க வேண்டும் என்பதற்கு மிகவும் அழுத்தமும் தர வேண்டும் என்று விரிவாக்கப்பட்ட ஏழாவது தொடர்க் கூட்ட அமர்வு தீர்மானிக்கிறது.

## VII

இந்த விரிவுபடுத்தப்பட்ட ஏழாவது தொடர்க்கூட்ட அமர்வு அழுத்தமாகப் பிரகடனப்படுத்துவது என்னவெனில், கடந்த 24 வருடங்களாக நடைபெற்றுவரும் சீனப்புரட்சியின் நடைமுறையானது நிருபித்திருப்பது மேலும் தொடர்ந்து நிருபித்துக் கொண்டிருப்பது, தோழர் மாசேதுங்கால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ள வழியானது, முழு நாட்டிலுள்ள மக்களாலும் கட்சியாலும் நடத்தப்பட்ட போராட்ட வழியானது, முற்றிலும் சரியானது என்பதாகும். இந்த வழியின் சரியான தன்மையைத் தற்போது நடைபெற்று வரும் எதிர்ப்புப் போரின் போது நமது கட்சி படைத்த மகத்தான சாதனைகளும் மற்றும் நமது கட்சியின் தீர்மானமான பங்கும் மிகவும் தெளி

வாகச் சோதித்தறிந்துள்ளது. நமது கட்சியின் தலைமையின் கீழ்க் கடந்த இருபத்து நான்கு வருடங்களாகப் பெற்ற செழுமையான அனுபவத்தையும் மகத்தான சாதனைகளையும், புயல்வேக வளர்ச்சி யுடன் கூடிய சீனப் புரட்சியை அதனுடைய முழுமையான உறவில் வைத்துப் பரிசீலிக்கும் போது கட்சியில் சில குறிப்பிட்ட காலங்களில் எழுந்த ''இடது'' மற்றும் வலது பிழைகள் பகுதி நிகழ்வுகளே யாகும். கட்சி போதுமான அனுபவத்தையும் அரசியல் உணர்வையும் கொண்டிராத போது, இத்தகைய நிகழ்வுகளை முழுவதுமாகத் தவிர்த்துக் கொள்வது கடினமாய் இருந்தது. மேலும் கூடுதலாக, இந்தப் பிழைகளைக் கடந்துவர நடத்தும் போராட்டங் களின் வாயிலாகவே கட்சியானது உறுதியாகவும் வலிமையாகவும் வளர்ந்தது என்பது துல்லியமானதாகும். இன்று, முன் என்றும் இராத வகையில் முழுக் கட்சியும் ஒரு மனதாக, தோழர் மாசேதுங் கின் சரியான வழியை அங்கீகரிக்கிறது. மற்றும் அவருடைய தலைமை யின் பதாகையின் கீழ் முன் என்றும் இராத அரசியல் உணர்வுடன் அணி திரள்கிறது. தோழர் மாசேதுங் பிரதிநிதித்துவப்படுத்தும் மார்க்சிய-லெனினியச் சித்தாந்தமானது மேன்மேலும் அதிகமான ஊழியர்களையும், கல்வி உறுப்பினர்களையும், மக்கள் திரளினரை யும் மிக ஆழமாகப் பற்றிக் கொள்ளும்போது, கட்சிக்கும் சீனப் புரட்சிக்கும் பிரம்மாண்டமான முன்னேற்றமும், வெல்ல முடியாத உறுதியும் உண்டாகும் என்பது உறுதியானதாகும்.

இந்த ஆறாவது மையக்குழுவின் ஏழாவது தொடர்க் கூட்ட அமர்வு தோழர் மாசேதுங் தலைமை தாங்கும் மையக்குழுவின் சரி யான தலைமையின்கீழ், சீனப் பொதுவுடமைக் கட்சி மூன்று புரட்சிப் போராட்டங்களான-வடதிசை படையெடுப்பு, விவசாயப் புரட்சிப் போர், சப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போர்-ஆகியவற்றில் பெற்ற செழுமையான அனுபவங்களுடன் சீனப்புரட்சியை முழுவெற்றிக்கு இட்டுச் செல்லும் என்பதை உறுதியாக நம்புகிறது.

—மாசேதுங்

# 33

# 'கம்யூனிஸ்ட்டை அறிமுகம் செய்தல்'

அக்டோபர் 4. 1938

மாசேதுங்

மையக்குழு உட்கட்சிப் பத்திரிகையொன்றை வெளியிடுவதற்கு நீண்ட காலமாகத் திட்டமிட்டிருந்தது. கடைசியில் இப்போது அந்தத் திட்டம் உண்மையாக்கப்பட்டுவிட்டது. தேசிய அளவிலானதும் பரந்த மக்கள் இயல்புள்ளதும் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் முற்றாக உறுதிப்படுத்தப்பட்டதுமான போல்ஷெவியமான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியொன்றினைக் கட்டியமைப்பதற்கு இப்படிப்பட்ட வெளியீடு ஒன்று அவசியம். தற்போதைய நிலைமையில் இந்தத் தேவை மேலும் தெளிவாகத் தெரியக்கூடியதாயுள்ளது. தற்போதைய நிலைமையின் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு; ஒருபுறம், சப்பானிய எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணிக்குள் சரணடைவு, பிளவு, பின்னடைவு ஆகிய ஆபத்துக்கள் நாளுக்குநாள் அதிகரிக்கின்றன. மறுபுறம் எமது கட்சி தனது குறுகிய எல்லைகளைத் தாண்டி, தேசிய அளவிலான பெரிய கட்சியாகின்றது. சரணடைவு, பிளவு, பின்னடைவு ஆகிய ஆபத்துக்களை வெற்றி கொள்ளவும் எதிர்பாராதபடி நிகழக்கூடிய நிகழ்ச்சிகளனைத்தையும் சமாளிப்பதற்கு ஆயத்தம் செய்யவும் பொதுமக்களை அணி திரட்டுவதே கட்சியின் கடமையாகும். இதனால், எதிர்பாராதபடி நிகழக்கூடிய நிகழ்ச்சி நிகழ்ந்தாலும் கட்சியும் புரட்சியும் எதிர்பாராத இழப்பிற்குள்ளாகமாட்டா. இது போன்றதொரு சமயத்தில் ஒரு உட்கட்சிப் பத்திரிகை வெளியிடுவது உண்மையிலேயே மிக அவசியமானது.

இந்த உட்கட்சிப் பத்திரிகை 'கம்யூனிஸ்ட்' என்றழைக்கப் படுகின்றது. அதன் கடமை என்ன? அது எதைப்பற்றி எழுதும்? அது ஏனைய கட்சி வெளியீடுகளினின்றும் எவ்வகையில் வேறுபட்டதா யிருக்கும்?

தேசிய அளவிலானதும் மக்கள் திரள் இயல்புள்ளதும், சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் முற்றாக உறுதிப்படுத்தப்பட்டதுமான போல்ஷெவியமான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியொன்றினைக் கட்டியமைக்க உதவுவதே அதன் கடமையாகும். இப்படிப்பட்ட கட்சி ஒன்றைக் கட்டியமைப்பது சீனப்புரட்சியின் வெற்றிக்கு மிக அவசியம். மொத்தத்தில் அதற்குரிய அகநிலை நிலைமைகளும் புறநிலை நிலைமைகளும் இப்போ துள்ளன. இந்த மகத்தான திட்டம் உண்மையில் இப்பொழுது முன்னேற்றமடைகிறது. சாதாரண கட்சிப் பிரசுரம் ஒன்றின் ஆற்றலுக்கப்பாற்பட்ட இந்த மகத்தான திட்டத்தை நிறைவேற்று வதில் உதவுவதற்குத் தனிக்கட்சி வெளியீடொன்று அவசியம். ஆகவேதான், இப்போது 'கம்யூனிஸ்ட்' வெளியிடப்படுகின்றது.

எமது கட்சி ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தேசிய அளவினதாகவும் மக்கள் திரள் இயல்புடையதாகவுமிருக்கின்றது; அதன் தலைமை மையத்தையும் அதன் உறுப்பினரில் ஒரு குறிப்பிட்ட பகுதியையும் அதன் பொது வழியையும் புரட்சி வேலையையும் பொறுத்தவரை அது ஏற்கனவே சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் உறுதிப்படுத்தப்பட்டதும் போல்ஷெவியமானதுமான ஒரு கட்சியாக இருக்கின்றது.

அப்படியானால் இப்போது ஒரு புதுக்கடமையை முன் வைப்பது ஏன்?

காரணம் என்னவென்றால், எமக்குத் தற்போது பல புதிய கிளைகளுள்ளன; அவை பெருந்தொகையான புதிய உறுப்பினர் களைக் கொண்டுள்ளன; அவை இன்னும் மக்கள் திரள் இயல்புடையனவாகவோ சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதி யிலும் அமைப்பு ரீதியிலும் உறுதிப்படுத்தப்பட்டனவாகவோ அன்றி போல்ஷெவியமானவையாகவே கருதப்படக் கூடியனவா யில்லை. அதே வேளையில், பழைய கட்சி உறுப்பினர்களின் அரசி யலறிவின் மட்டத்தை உயர்த்துவது, பழைய கட்சிக் கிளைகளைச் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் மேலும் நிலைப்படுத்துவது, அவற்றை மேலும் போல்ஷெவியமாக்குவது என்ற பிரச்சினையும் இருக்கிறது. கட்சி எதிர்நோக்கும் சூழ்நிலைகளும்

கட்சி தோள்கொடுக்கும் பொறுப்புகளும் புரட்சிகர உள்நாட்டு யுத்தக் காலத்திலிருந்தவற்றினின்றும் பெருமளவில் வேறுபட்டன வாயுள்ளன; தற்போதைய சூழ்நிலைகள் முன்பைவிட மிகக் கூடிய அளவு குழப்பமுடையனவாயும் பொறுப்புகள் மிகவும் சுமையான வையாயும் உள்ளன.

இது தேசிய ஐக்கிய முன்னணிக் காலம், நாம் பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணியொன்றை அமைத்திருக்கின்றோம்; இது சப்பானிய எதிர்ப்புப் போர்க்காலம், எமது கட்சியின் ஆயுதந் தாங்கிய சக்திகள் போர்முனையில் நேசப்படைகளுடன் சேர்ந்து எதிரிகளுடன் ஈவிரக்கமற்ற போரிலீடுபடுகின்றன. எமது கட்சி தேசிய அளவிலானதொரு பெரிய கட்சியாகிய காலம் இதுதான். அப்படியாகியதால், எமது கட்சி இனிமேலும் முன்பிருந்தது போலிருக்காது. இவ்வம்சங்களெல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்ப்போமானால், நாமாகவே முன்வைத்த கடமை, அதாவது, ''தேசிய அளவிலானதும் வெகுசன இயல்புள்ளதும் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் முற்றாக நிலைப்படுத்தப் பட்டதுமான போல்ஷெவியமான சீனப் பொதுவுடைமைக் கட்சியொன்றினைக் கட்டியமைக்கும்'' கடமை எவ்வளவு மேன்மையானதும் மதிப்பு வாய்ந்ததும் ஆகும் என்பதை நாம் புரிந்து கொள்வோம்.

இவ்வகையான கட்சியொன்றை அமைப்பதற்கே இப்பொழுது நாம் விரும்புகின்றோம். ஆனால், அதற்கு எப்படி வேலை செய்யத் தொடங்க வேண்டும்? எமது கட்சியின் வரலாற்றையும், அதன் பதினெட்டாண்டுக் காலப் போராட்ட வரலாற்றையும் ஆராயாது இந்தக் கேள்விக்கு எம்மால் விடை கூற முடியாது.

1921இல் நடந்த எமது முதலாவது தேசிய மாநாடு முதல் இன்றுவரை எமது கட்சியின் வரலாற்றுக் காலம் முற்றாகப் பதினெட்டு ஆண்டுகளாகி விட்டது. இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் எமது கட்சி பல மகத்தான போராட்டங்களுக் கூடாகச் சென்றிருக்கிறது. கட்சியின் உறுப்பினர்களும் அதன் ஊழியர்களும் அமைப்புகளும் இந்த மகத்தான போராட்டங்களில் புடம் போட்டெடுக்கப்பட்டுள்ளனர், அவர்கள் புரட்சியில் மகத்தான வெற்றிகளையும் துயரார்ந்த தோல்விகளையும் அனுபவித்தனர். இந்தக் கட்சி, பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒரு தேசிய ஐக்கிய முன்னணியை நிறுவியது. பின்னர் இந்தத் தேசிய ஐக்கிய முன்னணி தகர்ந்ததனால் பெரும் பூர்ஷ்வாவர்க்கத்துடனும் அதன் கூட்டாளிகளுடனும் ஒரு கசப்பான ஆயுதப் போராட்டத்திலீடுபட்டது. கடந்த

மூன்றாண்டுக் காலத்தில், அது பூர்ஷ்வா வர்க்கத்துடன் அமைக்கப் பட்ட தேசிய ஐக்கிய முன்னணிக் காலத்திற்குள் திரும்பவும் நுழைந் திருக்கின்றது. சீனப் பூர்ஷ்வா வர்க்கத்துடனுள்ள இவ் வகையான சிக்கலான தொடர்பு மூலந்தான் சீனப் புரட்சியும் சீனப் பொதுவுடை மைக் கட்சியும் தம் வளர்ச்சியில் முன்னேற்றமடைந்திருக்கின்றன. இது ஒரு சிறப்பான வரலாற்று அம்சம். காலனிய அரைக்காலனிய நாடுகளிலுள்ள புரட்சிக்குச் சிறப்பான, எந்த முதலாளித்துவ நாட்டுப் புரட்சி வரலாற்றிலும் காண முடியாததோர் தனி வர லாற்று அம்சம். மேலும், சீனா ஓர் அரைக்காலனிய, அரை நிலப் பிரபுத்துவ நாடாக இருப்பதனாலும் அதன் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிகள் சமச்சீராக இல்லாததனாலும் அதன் பொருளாதாரம் பிரதானமாக அரைநிலப்பிரபுத்துவமாகவும் அதன் பரப்பு பரந்த அளவிலும் இருப்பதனாலும் இந்தக் கட்டத்தில் சீனப் புரட்சி, இயல்பில் பூர்ஷ்வா வர்க்கச்சனநாயகப்புரட்சியாக உள்ளது, அதன் முதன்மை இலக்குகள் ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவ மாகவும் அதன் அடிப்படை உந்து சக்திகள் பாட்டாளி வர்க்கமும் விவசாயிகளும் நகரக் குட்டி முதலாளிய வர்க்கமுமாகவும் உள்ளன. இதில் தேசிய பூர்ஷ்வா வர்க்கமும் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட அளவு பங்கெடுக்கும்.

அத்துடன் சீனப்புரட்சியின் முதன்மையான போராட்ட வடிவம் ஆயுதப்போராட்டமாகவும் இருக்கிறது. உண்மையில், எமது கட்சி வரலாறு ஆயுதப் போராட்ட வரலாறு என்று கூறப்படலாம். ''சீனாவில் ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியுடன் போரிடுகின்றது. அது சீனப்புரட்சியின் தனிச் சிறப்புக் கூறுகளிலொன்றாகவும் அதன் மேம்பாடுகளிலொன்றா கவும் இருக்கின்றது'' எனத் தோழர் ஸ்டாலின் கூறியுள்ளார். இது முற்றிலும் உண்மையானது. அரைக்காலனிய சீனாவிற்கே சிறப் பாக உரிய இந்த அம்சம் முதலாளியநாடுகளில் பொதுவுடைமைக் கட்சிகளால் தலைமை தாங்கப்பட்ட புரட்சிகளின் வரலாற்றில் காணப்படவேயில்லை, அல்லது அது அந்த நாடுகளில் இருப்பவற்றி லிருந்து வேறுபட்டதாயுள்ளது. ஆகவே, சீனப் பூர்ஷ்வாவர்க்கச் சனநாயகப் புரட்சியில் இரண்டு தனி அடிப்படைக் கூறுகள்— (1) பாட்டாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒன்றிப் புரட்சி கரத் தேசிய ஐக்கிய முன்னணியொன்றை நிறுவுகின்றது, அல்லது அதைத் தகர்க்க நிர்பந்திக்கப்படுகின்றது (2) ஆயுதப் போராட்டம் புரட்சியின் முதன்மை வடிவமாயிருக்கின்றது.

எமது கட்சிக்கு விவசாயிகளுடனும் நகரக் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்துடனும் உள்ள உறவுகளை அடிப்படையான தனிச் சிறப்புச்

கூறாக நாம் குறிப்பிடவில்லை. ஏனென்றால் முதலாவதாக, இந்த உறவுகள் கோட்பாட்டு ரீதியில் உலகெங்குமுள்ள பொதுவுடைமைக் கட்சிகளை எதிர் நோக்கியவை போன்றவை. இரண்டாவதாக, சீனாவிலுள்ள ஆயுதப் போராட்டத்தைப் பற்றிச் சொல்லப் போனால் அது சாராம்சத்தில் விவசாயி யுத்தமாக இருக்கிறது; கட்சிக்கும் விவசாயிகளுக்குமிடையிலுள்ள உறவுகளைப் பற்றிக் கூறின் அவை கட்சிக்கும் விவசாயி யுத்தத்திற்குமிடையிலுள்ள நெருங்கிய உறவுகளாக இருக்கின்றன.

இந்த இரண்டு அடிப்படைத் தனிச்சிறப்புக் கூறுகளின் காரணமாகவே, உண்மையில் அவற்றின் காரணமாகவே தான் எமது கட்சியின் அமைப்பும் போல்ஷெவிய மயமாக்கமும் தனிச் சூழ்நிலைகளில் முன்னேறுகின்றன. கட்சியின் தோல்விகள் அல்லது வெற்றிகள், அதன் பின்னடைவுகள் அல்லது முன்னேற்றங்கள், அதன் சுருக்கங்கள் அல்லது விரிவுகள், அதன் வளர்ச்சி, உறுதிப்பாடு ஆகியன பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் கட்சிக்கும், ஆயுதப் போராட்டத்திற்கும் கட்சிக்கும் இடையிலுள்ள உறவுகளுடன் தவிர்க்கப்பட முடியாதபடி இணைக்கப்பட்டுள்ளன. பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பது அல்லது அதைத் தகர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றபோது அதைத் தகர்ப்பது என்ற பிரச்சனையில் சரியான அரசியல் வழி ஒன்றைக் கைக்கொள்ளும் போது எமது கட்சி தன் வளர்ச்சியிலும் உறுதிப்பாட்டிலும் போல்ஷெவியமயமாக்கத்திலும் ஒருபடி முன்னேறுகின்றது; ஆனால், பூர்ஷ்வா வர்க்கத்துடனுள்ள உறவுகளில் தவறான வழி ஒன்றைக் கைக்கொள்ளும் போது எமது கட்சி தன் வளர்ச்சியிலும் உறுதிப்பாட்டிலும் போல்ஷெவியமய மார்க்கத்திலும் ஒரு படி பின்னேறுகின்றது.

அது போலவே, எமது கட்சி புரட்சிகர ஆயுதப் போராட்டப் பிரச்சனையைச் சரியான முறையில் கையாளும்போது தன் வளர்ச்சியிலும் உறுதிப்பாட்டிலும் போல்ஷெவிய மயமாக்கத்திலும் ஒருபடி முன்னேறுகிறது; ஆனால், அந்தப் பிரச்சனையைத் தவறாக கையாளும்போது அது ஒரு படி பின்னேறுகிறது. இவ்வாறு பதினெட்டு ஆண்டுகளாக, கட்சியின் அமைப்பும் போல்ஷெவியமய மாக்கமும் அதன் அரசியல் வழியுடன் ஐக்கிய முன்னணி, ஆயுதப் போராட்டம் ஆகிய பிரச்சனைகளைச் சரியாக அல்லது தவறாகக் கையாள்வதுடன் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த முடிவு எமது கட்சியின் பதினெட்டாண்டுக் கால வரலாற்றில் தெளிவாக நிருபிக்கப்பட்டிருக்கின்றது. வேறு விதமாகக் கூறின்

கட்சி எவ்வளவிற்குப் போல்ஷெவியமயமாகின்றதோ, அவ்வளவிற்குத் தனது அரசியல் வழியைச் சரியாகத் தீர்மானிக்கவும் ஐக்கிய முன்னணி—ஆயுதப் போராட்டம் ஆகிய பிரச்சினைகளைச் சரியாகக் கையாளவும் முடியும். இந்த முடிவும் எமது கட்சியின் பதினெட்டாண்டுக் கால வரலாற்றாலேயே தெளிவாக நிரூபிக்கப்படுகின்றது.

ஆகவே, ஐக்கிய முன்னணியும் ஆயுதப் போராட்டமும் கட்சி அமைப்புமே சீனப்புரட்சியில் எமது கட்சியின் மூன்று அடிப்படைப் பிரச்சினைகளாக இருக்கின்றன. இந்த மூன்று பிரச்சினைகளையும் அவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளையும் சரியாக உள்வாங்கிக் கொள்வது சீனப்புரட்சி முழுவதற்கும் தகுந்த தலைமை அளிப்பதற்குச் சமமாகும். எமது கட்சியின் பதினெட்டாண்டுக் கால வரலாற்றில் பெற்ற எமது செழிப்பான அனுபவத்தினால், தோல்வி வெற்றிகளினதும் பின்னேற்ற முன்னேற்றங்களினதும் சுருக்க விரிவுகளினதும் ஆழமான செழுமைமிக்க எமது அனுபவத்தினால் நாம் இந்த மூன்று பிரச்சினைகளையும் பொறுத்தவரை இப்பொழுது சரியான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாயிருக்கிறோம். அதாவது, நாம் இப்பொழுது ஐக்கிய முன்னணி, ஆயுதப் போராட்டம், கட்சி அமைப்பு ஆகிய பிரச்சினைகளைச் சரியான முறையில் கையாளக் கூடியவர்களாயிருக்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறின், கட்சியின் மூன்று 'மந்திர ஆயுதங்கள்'. சீனப்புரட்சியில் எதிரியைத் தோற்கடிப்பதற்கான அதன் மூன்று முக்கிய மந்திர ஆயுதங்கள் என எமது பதினெட்டாண்டுக் கால அனுபவம் எமக்குக் கற்பித்திருக்கின்றது.

இது சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மகத்தான சாதனை; இது சீனப் புரட்சியின் மகத்தான சாதனையுமாகும். மூன்று மந்திர ஆயுதங்களில் ஒவ்வொன்றையும், மூன்று பிரச்சினைகளில் ஒவ்வொன்றையும் இங்கே சுருக்கமாக ஆராய்வோம். பூர்ஷ்வா வர்க்கத்துடனும் பிறவர்க்கத்துடனும் சீனப் பாட்டாளி வர்க்கத்திற்குள்ள ஐக்கிய முன்னணி கடந்த பதினெட்டு ஆண்டுகளில் மூன்று வேறுபட்ட சூழ்நிலைகளில் மூன்று வேறுபட்ட காலகட்டங்களுக்கூடாக வளர்ச்சி அடைந்திருக்கின்றது. அதாவது, 1924ஆம் ஆண்டுக்கும் 1927-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட முதலாவது மாபெரும் புரட்சி 1927-ஆம் ஆண்டுக்கும்1937ஆம் ஆண்டிற்கும்இடைப்பட்டநிலப்புரட்சிப்போர் தற்போதைய சப்பானிய எதிர்ப்பு போர். இந்த மூன்று கட்டங்களினதும் வரலாறு பின்வரும் நியதிகளை நிரூபித்திருக்கின்றது: (1) சீனா உட்படுத்தப்பட்டுள்ளதான அந்நிய அடக்கு முறை அடக்குமுறைகளிலெல்லாம் மிகப் பெரிதாய் இருப்பதன்

காரணமாக, சீனத் தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுகளுக்குமெதிரான போராட்டத்தில் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட அளவிற்குப் பங்குபற்றும். ஆகவே, அப்படிப்பட்ட சமயங்களில் பாட்டாளிவர்க்கம் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணியொன்றை அமைத்து அந்தை இயலுமானவரை நிலைநிறுத்த வேண்டும்.

(2) சீனத்தேசிய பூர்ஷ்வா வர்க்கம் தன் பொருளாதார அரசியல் உறுதிப்பாடின்மை காரணமாக, பிற சரித்திர சூழ்நிலைகளில் ஊசலாட்டமும் மாறும் இயல்பும் உள்ளதாகும். ஆகவே சீனாவின் புரட்சிகர ஐக்கிய முன்னணியின் அமைப்பு தொடர்ந்து எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக இராததோடு மாறக் கூடியதாயுமிருக்கின்றது. தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஒரு காலத்தில் அதில் பங்கு ஏற்கலாம். இன்னொரு காலத்தில் பங்கு ஏற்காமலிருக்கலாம்.

(3) தரகு முதலாளியத் தன்மையுடைய சீனப் பெரும் பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்தியத்திற்கு நேரடியாகச் சேவை செய்து, அதனால் ஊட்டி வளர்க்கப்படும் வர்க்கம். இதனால் தரகு முதலாளியத் தன்மையுடைய சீனப்பெரும் பூர்ஷ்வா வர்க்கம் எப்பொழுதும் புரட்சியின் இலக்காக இருந்து வருகின்றது. இருப்பினும், இந்தப்பெரும் பூர்ஷ்வா வர்க்கத்திற்குளுள்ளவேறுபட்ட கும்பல்கள் வேறுபட்ட ஏகாதிபத்தியங்களால் ஆதரிக்கப்படுகின்றன. ஆகவே, இந்த ஏகாதிபத்தியங்களுக்கிடையே முரண்பாடுகள் கூர்மையடையும்போதும் புரட்சியின் முனை குறிப்பிட்ட ஏகாதிபத்தியமொன்றிற்கெதிராகப் பிரதானமாக நீட்டப்படும் பொழுதும் பிற ஏகாதிபத்தியங்களைச் சார்ந்திருக்கும் இப்பெரும் பூர்ஷ்வா வர்க்கக் கும்பல்கள் அந்தக் குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சேரலாம். அப்படிப்பட்ட சமயங்களில் எதிரியைப் பலவீனப்படுத்தவும் தனது சொந்தச் சேமிப்புச் சக்தியைப் பலப்படுத்தவும் சீனப் பாட்டாளிவர்க்கம் இந்தப் பெரும் பூர்ஷ்வா வர்க்கக் கும்பல்களுடன் சாத்தியமான ஐக்கிய முன்னணி ஒன்றை ஏற்படுத்தலாம். அத்துடன் அது புரட்சிக்குச் சாதகமாயிருக்கும் வரை அதை இயலுமான அளவு நிலை நிறுத்தவும் வேண்டும்.

(4) தரகு முதலாளித்துவத் தன்மையுடைய பெரும் பூர்ஷ்வா வர்க்கம் ஐக்கிய முன்னணியில் சேர்ந்து பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்து பொது எதிரிக்கெதிராகப் போராடும் போதும் அது

தொடர்ந்து மிகவும் பிற்போக்கானதாகவேயிருக்கிறது. அது பாட்டாளி வர்க்கத்தினதும் பாட்டாளி வர்க்கக் கட்சியினதும் சித்தாந்த, அரசியல், அமைப்பு ரீதிகளிலான எந்த வளர்ச்சியையும் பிடிவாதமாக எதிர்க்கிறது. அவற்றிற்குக் கட்டுப்பாடுகள் விதிக்க முயல்கிறது. வஞ்சகம், முகஸ்துதி, ''அரித்தல்'', தாக்குதல்கள் போன்ற சீர்குலைக்கக் கூடிய கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றது. மேலும், எதிரிகளிடம் சரணடைவதற்கும் ஐக்கிய முன்னணியைப்பிளவுபடுத்துவதற்கும் தயார் செய்வதற்காகவே இவற்றையெல்லாம் செய்கிறது.

(5) விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான நேச அணியாவர்.

(6) நகரக் குட்டி பூர்ஷ்வா வர்க்கமும் ஒரு நம்பகமான நேச அணியாகும்.

இந்த நியதிகள் சரியானவை என்பது முதலாம் மாபெரும் புரட்சியின் போதும் நிலப்புரட்சியின் போதும் நிரூபிக்கப்பட்டது மாத்திரமல்ல அது தற்போதைய சப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் போதும் திரும்பவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே பூர்ஷ்வா வர்க்கத்துடன் (சிறப்பாக பெரும் பூர்ஷ்வா வர்க்கத்துடன்) ஐக்கிய முன்னணியை அமைப்பதில் பாட்டாளிவர்க்க அரசியல் கட்சி இரண்டு முன்னணிகளில் திடமான கடுமையான போராட்டமொன்னற மேற்கொள்ள வேண்டும். ஒருபுறம் பூர்ஷ்வா வர்க்கம் ஒரு குறிப்பிட்ட காலத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவிலும் புரட்சிகரப் போராட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்ற சாத்தியப்பாட்டை அலட்சியம் செய்யும் தவற்றை எதிர்த்துப் போரிடுவது அவசியம்.

இந்தத் தவறு சீனாவிலுள்ள பூர்ஷ்வா வர்க்கத்தை முதலாளிய் நாடுகளிலுள்ளவற்றைப் போல் கருதி பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணியொன்றினை உருவாக்கி அதை இயலுமான அளவிற்கு நிலை நிறுத்தும் கொள்கையை அலட்சியம் செய்வதில் அமைந்துள்ளது. இது 'இடது சாரிக்' கதவடைப்புவாதமாகும். மறுபுறம் பாட்டாளி வர்க்கத்தின் வேலைத்திட்டம், கொள்கை, சித்தாந்தம், நடைமுறை இன்னோரன்ன பிறவற்றை பூர்ஷ்வா வர்க்கத்தினுடையனவற்றைப் போல் கருதி, இவற்றிற்கிடையிலுள்ள கோட்பாட்டு ரீதியான வேறுபாடுகளை அலட்சியம் செய்வது என்ற தவற்றை எதிர்த்துப் போராடுவது அவசியம். இந்தத் தவறு பூர்ஷ்வா வர்க்கம் (சிறப்பாக பெரும் பூர்ஷ்வா வர்க்கம்) குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தின் மீதும் விவசாயிகள் மீதும் தன் செல்வாக்கைத் தீவிரமாகச் செலுத்துவது மட்டுமின்றி, பாட்டாளி வர்க்கத்தின் மீதும்

விவசாய நிலப்புரட்சிப் போராட்டமாகவும் இருந்தது. மூன்றாவது காலகட்டம் தற்போதைய சப்பானிய-எதிர்ப்புப் போர்க் கால கட்டம். இந்தக் காலகட்டத்தில் முதலாவது காலகட்டத்தினது எமது ஆயுதப் போராட்ட அனுபவத்தையும் ஆயுதப் போராட்டத்தைத் தேவையான இதர போராட்ட வடிவங்களனைத்துடனும் இணைப்படுதில் பெற்ற அனுபவத்தையும் பயனுடையதாக்கக் கூடியவர்களாயிருக்கிறோம்.

பொதுவாகக் கூறின், ஆயுதப் போராட்டம் என்பது இப்போது கொரில்லாப் போரையே குறிக்கிறது. கொரில்லாப் போரென்றால் என்ன? அது பின் தங்கிய நாடொன்றில், பெரிய அரைக்குடியேற்ற நாடொன்றில் மக்களின் ஆயுதப்படைகள் ஆயுதபாணியாக்கப்பட்ட எதிரியை முறியடித்துத் தம் சொந்தத் தளப்பிரதேசங்களை அமைப்பதற்குத் தவிர்க்க இயலாது சார்ந்திருக்க வேண்டிய ஒன்றாகவும் அதன் காரணமாக மிகக் சிறந்த போராட்ட வடிவமாகவும் விளங்குகிறது. இதுகால வரை, எமது கட்சியின் அரசியல் வழி, கட்சி கட்டுதல் ஆகிய இரண்டும் இந்தப் போராட்ட வடிவத்துடன் மிக நெருக்கமாக இணைந்திருக்கின்றன. ஆயுதப் போராட்டத்தையும்; கொரில்லாப்போரையும் கைவிட்டால் எமது அரசியல் வழியைப் புரிந்து கொள்ள முடியாததோடு எமது கட்சிக் கட்டுதலையும் புரிந்து கொள்ள முடியாது. ஆயுதப் போராட்டம் எமது அரசியல் வழியின் ஒரு முக்கிய பகுதியாகும். பதினெட்டு ஆண்டுகளாக, எமது கட்சி ஆயுதப் போராட்டம் நிகழ்த்தப் படிப்படியாகக் கற்று அதில் ஊன்றி நின்றுள்ளது. சீனாவில் ஆயுதப்போராட்டம் இல்லாவிட்டால், பாட்டாளி வர்க்கத்துக்கு எந்தவித அந்தஸ்தும் கிடையாது: மக்களுக்கு எதுவித அந்தஸ்தும் கிடையாது; பொதுவுடைமைக் கட்சிக்கு எதுவித அந்தஸ்துங் கிடையாது. புரட்சியும் வாகை சூடாதென்று புரிந்து கொண்டோம். பதினெட்டு ஆண்டுகளில் நமது கட்சியின் வளர்ச்சியும் உறுதிப்பாடும் போல்ஷெவியமயமாக்கமும் புரட்சிப் போர்களின் நடுவில்தான் நடைபெற்றன.

ஆயுதப்போராட்டம் இல்லாவிட்டால், பொதுவுடைமைக் கட்சி இன்றுள்ள நிலையில் இருக்கமுடியாது. இரத்தம் சிந்திப்பெற்ற இந்த அனுபவத்தைக் கட்சித்தோழர்கள் ஒருவரும் மறந்துவிடக் கூடாது.

முன்னையவை போலவே, கட்சியைக் கட்டுவதிலும் அதாவது அதன் வளர்ச்சி, உறுதிப்பாடு, போல்ஷெவியமயமாக்கம் ஆகியவற்றிலும் மூன்று தெளிவான கட்டங்களிருந்திருக்கின்றன. முதலாவது கட்டம் கட்சியின் குழந்தைப்பருவம், இந்தக் கட்டத்தின்

தொடக்கக் காலத்திலும் நடுக்காலத்திலும் கட்சியின் வழி சரியாகவும் கட்சி உறுப்பினர்களினதும் ஊழியர்களினதும் புரட்சிகர உற்சாகம் மிக உயர்ந்ததாகவும் இருந்தன. இதன் விளைவானதே முதலாம் மாபெரும் புரட்சியின் வெற்றிகள். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக எமது கட்சி அப்பொழுது குழந்தைப் பருவத்தில் உள்ள ஒரு கட்சியாக இருந்தது. ஐக்கிய முன்னணி, ஆயுதப் போராட்டம், கட்சி கட்டுதல் ஆகிய மூன்று அடிப்படைப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை அனுபவமற்றதாயிருந்தது. அது சீன வரலாற்று நிலைமையைப் பற்றியோ, சீனச் சமுதாய நிலைமையைப்பற்றியோ, அன்றிச் சீனப்புரட்சியின் தனிச்சிறப்புக் கூறுகள், சீனப்புரட்சியின் நியதிகள் பற்றியோ நன்கு அறிந்திருக்கவில்லை.

மார்க்சிய லெனினியத் தத்துவத்திற்கும் சீனப்புரட்சியின் நடைமுறைக்குமிடையிலுள்ள ஐக்கியத்தை விபரமாகப் புரிந்து கொள்வதில் குறைபாடுடையதாயிருந்தது. இதனால் இந்தக் கட்டத்தின் கடைசிக் காலத்தில், அதாவது இந்தக் கட்டத்தின் நெருக்கடியான தருணத்தில், கட்சியின் தலைமைப் பகுதியில் அதிகாரம் செலுத்துபவராயிருந்தோர் புரட்சியின் வெற்றிகளை உறுதிப்படுத்துவதில் முழுக் கட்சியையும் வழிநடத்தத் தவறி, பூர்ஷ்வா வர்க்கத்தினால் ஏமாற்றப்பட்டுப் புரட்சிக்குத் தோல்வியைக் கொண்டு வந்தனர். இந்தக் கட்டத்தில் கட்சி அமைப்புகள் விரிவடைந்தன; ஆனால் அவை உறுதிப்படுத்தப்படவில்லை. அத்துடன் கட்சி உறுப்பினர்களும் ஊழியர்களும் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் திடமானவராக ஆவதற்கு உதவவும் அவை தவறிவிட்டன, பல புதிய கட்சி உறுப்பினர்களிருந்தனர்; ஆனால், அவர்களுக்குத் தேவையான மார்க்சிய லெனினியக் கல்வி அளிக்கப்படவில்லை. வேலையில் மிகுந்த அனுபவம் இருந்த போதிலும் அது தகுந்த முறையில் தொகுக்கப்படவில்லை. பதவி வேட்டையாளர் பலர் கட்சிக்குள் நுழைந்தனர். ஆனால் அவர்கள் வெளியே இழுத்தெறியப்படவில்லை, கட்சி எதிரிகளினதும் நேச அணிகளினதும் சூழ்ச்சிகளாலும் சதிகளாலும் சுற்றி வளைக்கப் பட்டிருந்தபோதிலும் அது போதிய விழிப்புணர்வுடையதாயிருக்கவில்லை. கட்சிக்குள் உற்சாகிகள் பெருந்தொகையாக முன்வந்தனர்; ஆனால் அவர்கள் தகுந்த சமயத்தில் கட்சியின் முதுகெலும்பாகப் பயிற்றப்படவில்லை. கட்சி ஆயுதந்தாங்கிய புரட்சிகரப் பிரிவுகள் சிலவற்றைத் தன் ஆணைக்கீழ் கொண்டிருந்தது; ஆனால், அதனால் அவற்றை இறுகப் பற்ற முடியவில்லை. அனுபவமின்மையும் புரட்சிகர அறிவாற்றலில் போதிய ஆழமின்மையும் மார்க்சிய லெனினியத் தத்துவத்தைச் சீனப்புரட்சியின் நடைமுறையுடன்

புரட்சியின் தனிச் சிறப்பியல்புகள் நியதிகள் ஆகியன பற்றியும் எதுவும் அறியாதவர் களாயிருக்கிறார்கள் அல்லது இன்னும் சிறிதளவே அறிந்திருக்கின்றனர். மார்க்சிய லெனினியத் தத்துவத்திற்கும் சீனப் புரட்சியின் நடைமுறைக்குமிடையிலுள்ள ஐக்கியத்தைப் புரிந்து கொள்ளும் அவர்களின் ஆற்றல் விரிவானதாயுள்ளது என்று கூறுவதற்கே இடமில்லை.

கட்சி அமைப்புகளின் விரிவாக்கத்தின் போது, மையக் குழு ''கட்சியைத் துணிச்சலாக வளருங்கள்; ஆனால், தீயவர்கள் ஒருவரையும் கட்சிக்குள் அனுமதிக்காதீர்கள்'' என்ற முழக்கத்தை வலியுறுத்தி முன் வைத்த போதிலும் உண்மையில் கணிசமான அளவு பதவி வேட்டையாளரும் எதிரிச் சதிகாரரும் கட்சிக்குள் நுழைவதில் வெற்றிக் கண்டனர். ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டு, மூன்றாண்டுகள் நிலை நிறுத்தப்பட்ட போதிலும், பூர்ஷ்வா வர்க்கம் குறிப்பாக, பெரும் பூர்ஷ்வா வர்க்கம் எமது கட்சியை அழிப்பதற்கு இடைவிடாது முயல்கின்றது. பெரும் பூர்ஷ்வா வர்க்கச் சரணாகதிவாதிகளினதும் பிடிவாத வாதிகளினதும் தலைமையிலான கடுமையான மோதல்கள் நம் மீது நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன; பொதுவுடைமைக் கட்சி எதிர்ப்புக் கூச்சலுக்கும் ஒழிவில்லை. இவையெல்லாம் சப்பானிய ஏகாதிபத்தியத்திடம் சரணடைவதற்கும் ஐக்கிய முன்னணியைத் தகர்ப்பதற்கும் சீனாவைப் பின்நோக்கி இழுத்துச் செல்வதற்கும் தயார் செய்வதற்காகப் பெரும் பூர்ஷ்வா வர்க்கச் சரணாகதிவாதிகளாலும் பிடிவாதவாதிகளாலும் பயன்படுத்தப்படுகின்றன.

பெரும் பூர்ஷ்வா வர்க்கம் சித்தாந்த ரீதியிலே பொதுவுடைமையை ''அரிக்க'' முயல்கிறது. அதே வேளையில் அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் பொதுவுடைமைக் கட்சிக்கும் எல்லைப் பிரதேசத்திற்கும் கட்சியின் ஆயுத சக்திகளுக்கும் முடிவு கட்ட முயல்கின்றது. இச் சூழ்நிலைகளில், ஐயமின்றி, எமது கடமை, சரணடைவு, பிளவு, பின்னடைவு ஆகிய பேரிடர்களைச் சமாளிப்பதும் தேசிய ஐக்கிய முன்னணியையும் கோமின்டாங் பொதுவுடைமைக் கட்சிக் கூட்டுறவையும் இயன்ற அளவு நிலைநிறுத்துவதும் தொடர்ந்து சப்பானிய எதிர்ப்பிற்காகவும் ஐக்கியம், முன்னேற்றம் ஆகியவற்றிற்காகவும் வேலை செய்வதுமாகும். அதே வேளையில், எதிர்பாராதபடி நிகழக்கூடிய நிகழ்ச்சிகளைச் சமாளிப்பதற்குத் தயார் செய்யவேண்டும். இதனால் அந்நிகழ்ச்சிகள் நிகழும் சமயத்தில் கட்சியும் புரட்சியும் எதிர்பாராத இழப்பிற்குள்ளாகமாட்டா. ஆகவே, நாம் எமது கட்சி அமைப்பையும் அதன் ஆயுதச் சக்திகளையும் உறுதிப்படுத்தி, சரணடைவிற்கும், பிளவிற்கும் பின்னடை

விற்கும் எதிரான திடமான போராட்டத்திற்காக நாடு பூராவுமுள்ள மக்களை அணிதிரட்ட வேண்டும்.

இந்தக் கடமையை நிறைவேற்றுவது கட்சி முழுவதினதும் முயற்சிகளிலும் கட்சி உறுப்பினர்களனைவரதும் ஊழியர்கள் அனைவரதும், எல்லா மட்டங்களிலும் இடங்களிலுமுள்ள அமைப்புகளைத்தினதும் தளராத, உறுதியான போராட்டத்திலும் தங்கியுள்ளது. பதினெட்டு ஆண்டுக்கால அனுபவத்தைக் கொண்ட சீனப்பொதுவுடைமைக் கட்சி தன் அனுபவமிக்கப் பழைய உறுப்பினரதும் ஊழியரதும் சுறுசுறுப்பும் இளமையுமுடைய புதிய உறுப்பினரதும் ஊழியரதும் கூட்டு முயற்சிகளினாலும், புடமிடப்பட்டு, போல்ஷெவியமாக்கப்பட்ட மையக்குழுவினதும் அதன் உள்ளூர் அமைப்புகளினதும் கூட்டுமுயற்சிகளினாலும் அதன் வலிமை மிக்க ஆயுத சக்திகளினதும் முற்போக்கான பொதுமக்களினதும் கூட்டு முயற்சிகளினாலும் இந்த நோக்கங்களை நிறைவேற்ற இயலும் என நம்புகிறோம்.

இவையெல்லாம் எமது கட்சியின் பதினெட்டாண்டுக் கால வரலாற்றின் பிரதான அனுபவங்களும் அதன் பிரதானப் பிரச்சினை களுமாகும்.

ஐக்கிய முன்னணியும் ஆயுதப் போராட்டமுந்தான் எதிரியைத் தோற்கடிப்பதற்கான இரண்டு அடிப்படை ஆயுதங் களென எமது பதினெட்டாண்டுக் கால அனுபவங்கள் காட்டு கின்றன. ஐக்கிய முன்னணி ஆயுதப் போராட்டத்தை நிகழ்த்து வதற்கான ஐக்கிய முன்னணியாகும். கட்சி அமைப்புத்தான் எதிரியின் நிலைகளைத் தகர்ப்பதற்கு இவ்விரு ஆயுதங்களையும் அதாவது ஐக்கிய முன்னணியையும் ஆயுதப் போராட்டத்தையும் கையாளும் வீரமிக்கப் போர்வீரன். இவ்வாறுதான் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாயுள்ளன.

நாம் இன்று எமது கட்சியை எப்படிக் கட்டியமைக்க வேண்டும்? ''தேசிய அளவிலானதும் மக்கள்திரள் இயல்புள்ளதும் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் முற்றாக உறுதிப்படுத்தப்பட்டதுமான போல்ஷெவியமயமான சீனப் பொதுவுடைமைக் கட்சியொன்றினை'' எம்மாலெப்படிக் கட்டி யமைக்க முடியும்? கட்சியின் வரலாற்றை ஆராய்வது மூலமும், ஐக்கிய முன்னணி, ஆயுதப்போராட்டம் ஆகியவற்றுடன் தொடர் புடையதாகவும், கட்சி கட்டுதல் தொடர்பாக, பூர்ஷ்வா

மென்றும் முன்னதாகவே எண்ணுகிறபடியால், கட்சியின் போர்த்தந்திரம் இன்றியமையாதவாறு குறுகியதாகவும், கட்டுப்பட்டதாகவும் இருக்கிறது. இயக்கத்தின் போர்த்தந்திரத் திட்டத்தை அதாவது இயக்கம் எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை வரைவதில் கட்சி தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. மற்றும் கட்சியின் சேமிப்புச் சக்திகள்-ரஷ்யாவுக்கு உள்ளும் புறமும் இருக்கிற எதிரிகளின் முகாமுக்குள்ளே இருக்கிற முரண்பாடுகள்—பயன் படுத்தாமலோ அல்லது பெரும்பாலும் பயன் படுத்தாமலோ இருந்தன. கட்சியின் பலவீனமே இதற்குக் காரணமாகும்.

மக்கள் திரளை வென்றெடுப்பதையும், போர்த்தந்திர வெற்றியையும் நோக்கமாகக் கொண்டு, இயக்கத்தின் எல்லா வடிவங்களையும் பாட்டாளிவர்க்க அமைப்பின் வடிவங்களையும் அவற்றை ஒன்று கலத்தல் மற்றும் ஒன்றுக்கொன்று விடுபட்டதை நிரப்புதல் என்பன போன்றவற்றைப் பயன்படுத்துவதைச் செயல்தந்திரம் முன்னதாகவே எண்ணுகிறது. எனவே கட்சியின் செயல்தந்திரம் இன்றியமையாதவாறு குறுகியதாகவும், செயல் வாய்ப்பு இல்லாமலும் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் கட்சி தனது கவனத்தையும், அக்கறையையும் கட்சியின் மீதே, அது நின்று நிலவுவதிலும், அழியாமல் பாதுகாப்பதிலும் செலுத்திற்று. இந்தக் கட்டத்தில் அது தன்னை ஒருவகை சுயதேவைப் பூர்த்தி செய்யும் சக்தியாக மதித்துக் கொண்டது. இது இயற்கையானதே. கட்சியின் மீது ஜாரிசம் தொடுத்த கொடிய தாக்குதல்களும், கட்சியை உள்ளிருந்தே சிதறடிக்க மென்ஷெவிக்குகள் செய்த முயற்சிகளும், கட்சி ஊழியர்களை அகற்றி ஓர் உருவமற்ற கட்சியற்ற ஒன்றை அவர்களிடத்தில் வைப்பதும், (அக்சல்ராடு (Axelrod) டுடைய குறிப்பிடக்கூடிய குறுநூலான "மக்களது டூமாவும், தொழிலாளர் பேராயமும்" 1905 என்பதுடன் தொடர்புபடுத்தி மென்ஷெவிக்குகள் ஒரு தொழிலாளர் பேராயத்தை நடத்தும்படி ஓர் இயக்கம் நடத்தியதை நினைவு கூரவும்) கட்சி நின்று நிலவுவதையே அச்சுறுத்தியது. கட்சியைப் பாதுகாப்பது என்ற பிரச்சினை எல்லாவற்றுக்கும் மேலான முக்கியத்துவம் பெற்றது.

அந்தக் காலகட்டத்தில் ரஷ்யாவில் பொதுவுடைமையின் முதன்மையான கடமை தொழிலாளர் வர்க்கத்தின் மிகச் சிறந்தவர்களை மிகவும் செயலூக்கமுடைய பாட்டாளி வர்க்கக் குறிக்கோளுக்காக மிகவும் (அர்ப்பணித்துக்கொண்ட) பக்திசிரத்தையுடன் ஈடுபடக் கூடியவர்களைக் கட்சிக்குள் சேர்ப்பதாகும்; பாட்டாளி

வர்க்கக்கட்சி அணிகளை உருவாக்கி, கட்சியை அதன் கால்களில் உறுதியாக நிற்க வைப்பதுமாகும். தோழர் லெனின் இந்தக் கடமையைப் பின் வருமாறு வகுத்துக் கொடுக்கிறார்: **''பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையைப் பொதுவுடைமையின்பால் வென்றெடுப்பது'' (''இடதுசாரி கம்யூனிசம் ...''** என்ற நூலைப் பார்க்கவும்.)

இரண்டாவது காலகட்டம் தொழிலாளர் மற்றும் உழவர்களின் பரந்த மக்கள் திரளைக் கட்சியின் பால், பாட்டாளி வர்க்க முன்னணிப்படையின்பால் **வென்றெடுப்பதாகும்.** இது ஏறத்தாழ அக்டோபர் 1905 முதல் அக்டோபர் 1917 முடிய உள்ள காலகட்டத்தை ஒட்டி வருவது.

இந்தக் காலகட்டத்தில் நிலைமை முந்திய காலகட்டத்தை விட அதிகமான, செழுமையானதும் சிக்கலானதுமான நிகழ்ச்சிகளைக் கொண்டிருந்தது. ஒருபுறம் மஞ்சூரியப்போர்க்களத்திலும் 1905 அக்டோபர்புரட்சியிலும் ஜாரிசம் அடைந்த தோல்விகள், மறுபுறம் ரஷ்ய-சப்பானியப் போர் நிறுத்தம், எதிர்ப்புரட்சியின் வெற்றி, புரட்சி வெற்றியடைந்ததால் பெற்ற ஆதாயங்களைத் துடைத்தழித்தல், மூன்றாவதாக ஏகாதிபத்தியப் போர், 1917 பிப்ரவரிப் புரட்சியும், அனைவருமறிந்த ''இரட்டை அதிகாரமும்'' (dual power)-இந்த எல்லா நிகழ்ச்சிகளும் ரஷ்யாவிலுள்ள எல்லா வர்க்கங்களையும் கிளர்ந்தெழச் செய்து அரசியல் அரங்கில் ஒன்றின் பின் மற்றொன்றாக அவைகளைத் தள்ளி விட்டன; பொதுவுடைமைக் கட்சியை வலுப்படுத்தின; உழவர்களில் பெருந்திரளானோரை அரசியல் வாழ்வில் விழிப்படையச் செய்தன.

பொது அரசியல் வேலைநிறுத்தம் மற்றும் ஆயுதந்தாங்கிய எழுச்சி போன்ற திறன்மிக்கவடிவங்களால் பாட்டாளிவர்க்க இயக்கம் செழுமையூட்டப்பட்டது.

நிலப்பிரபுக்களைப் புறக்கணித்ததன் மூலம் உழவர் இயக்கம் செழுமை பெற்றது. [நிலப்பிரபுக்களை அவர்களுடைய மாவட்ட நிலைகளிலிருந்து அகற்றித் திரையிடல் (smoking)] இது பின்னர் ஆட்சிக்கு எதிரான ஆயுத எழுச்சியாக மாறியது.

பாராளுமன்றத்துக்குப்புறம்பான, சட்ட ரீதியான வெளிப்படை வடிவம் போன்ற கைதேர்ந்த வடிவங்களில் வேலை செய்ததன் மூலம் கட்சி மற்றும் வேறு புரட்சிகர அமைப்புகளின் நடவடிக்கைகள் ஊக்கமூட்டப்பட்டன.

தொழிலாளர் வர்க்க அமைப்பு தொழிற்சங்கங்கள் போன்ற தேர்ந்த முக்கியமான வடிவத்தால் மட்டுமின்றி வரலாற்றில் இதற்கு முன் நிகழ்ந்திராத வடிவமான தொழிலாளர் பேராண்மைச்சோவியத் துகள் (Soviets of workers Deputies) போன்ற திறன்மிகு தொழிலாளர் வர்க்க அமைப்பாலும் கூட செழுமையாக்கப்பட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி உழவர்களும் உழவர் பேராண்மைச் சோவியத்துகளை (Soviets of Peasants Deputies) அமைத்துக் கொண்டனர்.

கட்சியின் சேமிப்புச் சக்திகளும் செழுமை பெற்றன. பாட்டாளி வர்க்கத்திற்கும் அதன் கட்சிக்குமான வற்றாத சேமிப்புச் சக்தியாக உழவர் வர்க்கம் சேர்ந்து உருவாகும் என்பது போராட்டக் காலத்தினூடே தெளிவாகியது. மூலதன ஆட்சியைத் தூக்கி எறிவதில் பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் தலைமை வகிக்கும் என்பதும் கூடத் தெளிவாகியது.

இந்தக் காலப்பகுதியில் கட்சி இதற்கு முன்பு இருந்ததைப் போல அவ்வளவு வலிமை குன்றி இருக்கவில்லை; இயக்கு சக்தி என்ற வகையில் அது மிக முக்கியமான காரணி ஆகியது. இப்போது கட்சியின் வாழ்வும் வளர்ச்சியும் திடமாக உறுதிப்படுத்தப்பட்டு விட்டதால் அது சுயதேவைப்பூர்த்திப் படையாக இதற்கு மேலும் நீடிக்க முடியாது. அது சுயதேவைப் பூர்த்திப்படை என்பதிலிருந்து தொழிலாளர் மற்றும் உழவர் திரள்களை வென்றெடுக்கும் ஒரு கருவியாக மாறியது; மூலதன ஆட்சியைத் தூக்கி எறிவதில் மக்கள் திரளைத் தலைமை தாங்கி நடத்துவதற்கான கருவியாக மாறியது.

இந்தக் காலப்பகுதியில் கட்சியின் போர்த்தந்திரம் பரந்த செயல் வாய்ப்பைப் (Scope) பெற்றது; உழவர் வர்க்கத்தை ஒரு சேமிப்புச் சக்தியாக வெல்லுவதையும் பயன்படுத்துவதையும் நோக்கி அது முதலாவதாக இயக்கப்பட்டது; அது இந்த வேலையில் முக்கிய வெற்றி பெற்றது.

இதற்கு முன்பு இல்லாத புதிய வடிவங்களால் மக்கள் திரள் இயக்கங்களும், அவற்றின் அமைப்புகளும் கட்சி மற்றும் பிற புரட்சி கர நிறுவனங்களின் நடவடிக்கைகளும் செழுமையாக்கப் பட்டதன் விளைவாகக் கட்சியின் செயல் தந்திரமும் கூடப் பரந்த செயல் வாய்ப்பைப் பெற்றது.

இந்தக்காலப்பகுதியில் கட்சியின் தலையாய கடமை உடைமை வர்க்கச் சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிவதைக் குறிக்கோளாகக் கொண்டு, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டு பரந்துபட்ட மக்கள் திரளைப் பாட்டாளிவர்க்க முன்னணிப் படையின்பால் கட்சியின் பக்கம் வென்றெடுப்பதாக இருந்தது. கட்சி இப்போது தன்மீதேயன்றிப் பரந்துபட்ட மக்களின்பாலும் தன் கவனத்தைக் குவித்தது. தோழர் லெனின் இக்கடமையைப் பின்வருமாறு வகுக்கிறார்: ''இனி வரவிருக்கிற தீர்மானகரமான போர்களில்'' வெற்றியை உறுதி செய்வதற்குத் தகுந்த வகையில் சமூக முன்னணியில் ''பரந்துபட்ட மக்களை மனம் பற்றச் செய்தல்" (தோழர் லெனின் மேலே குறிப்பிட்ட பெயரில் எழுதிய சிறு வெளியீட்டைப் பார்க்கவும்.)

நமது கட்சியின் வளர்ச்சியில் முதலிரு காலப்பகுதிகளின் தனியியல்புச் சிறப்புக் கூறுகள் இத்தகையனவாகும்.

முதலாவது காலப்பகுதிக்கும் இரண்டாவது காலப்பகுதிக்கும் இடையிலான வேறுபாடு ஐயத்திற்கிடமின்றி மிகப் பெரியதாகும். ஆனால் இவையிரண்டுக்கும் இடையிலான பொதுவான கூறுகளும் சில உண்டு. முதலாவது காலப்பகுதியிலும், இரண்டாவது காலப் பகுதியிலும் கட்சி முழுவதுமாக இல்லாவிட்டாலும் பத்தில் ஒன்பது பங்கு ஒரு தேசிய சக்தியாகவே—ருஷ்யாவுக்கு மட்டுமே ருஷ்யாவுக்கு உள்ளேயேயுள்ளதாக இருந்தது (அமைப்பாக்கப்பட்ட பன்னாட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் படைப் பிரிவுகளில் ஒன்றாக இருந்தது) இது முதலாவது முக்கிய செய்தியாகும். இரண்டாவது முக்கிய செய்தி என்னவென்றால் முதலாவது காலப்பகுதியிலும் இரண்டாவது காலப்பகுதியிலும் ருஷ்யப் பொதுவுடைமைக் கட்சி எழுச்சியை மேலே கொண்டுவரும் கட்சியாக ருஷ்யாவுக்குள் புரட்சி செய்யும் கட்சியாக இருந்தது. எனவே இந்தக் காலப்பகுதிகளில் பழைய அமைப்பை (Order) விமர்சனம் செய்தல், அழித்தல் ஆகிய கூறுகள் அதன் வேலையில் மேம்பட்டிருந்தன.

இப்போது நாம் இருக்கிற காலப்பகுதி முற்றிலும் வேறுபட்ட சித்திரத்தை அளிக்கிறது.

மூன்றாவது காலப்பகுதி கீழ்க்காணும் இரண்டு காரணங்களுக்காக அரசு அதிகாரத்தை எடுத்து வைத்துக் (holding) கொள்கிறது. ஒருபுறம் சோசலிசப் பொருளாதாரத்தையும் செம்படையையும் கட்டும் வேலையில் ரஷ்ய உழைக்கும் மக்கள் அனைவரையும் இழுப்பது, மறுபுறம், மூலதனத்தைத் தூக்கி எறிவதற்கான

போராட்டத்தில் பன்னாட்டுப் பாட்டாளிவர்க்கத்துக்கு உதவி அளிப்பதற்காக எல்லாச் சக்திகளையும் மூல வளங்களையும் (Resource) பயன்படுத்துதல். இந்தக் காலப்பகுதி அக்டோபர் 1917 முதல் இன்று வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தை ஒட்டி வருவது.

ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டது என்ற உண்மை பன்னாட்டு அளவிலும், ரஷ்யாவுக்குள்ளும் ஒரு தெளிவான நிலைமையை உருவாக்கியுள்ளது. இத்தகைய நிலைமையை உலகம் இதற்கு முன்னால் கண்டதே இல்லை.

—கட்சி, அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் முன்பும் பின்பும் என்ற கட்டுரையில்—

ஜே. வி. ஸ்டாலின்

SEELAN BOOKS
SIGNATURE
NO

## பிழைத் திருத்தங்கள்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| i | 5 | கொள்கைகள் | கோட்பாடுகள் |
| ii | 37 | சோசலிச சனநாயகக் | சமூக சனநாயகக் |
| iv | 27 | எதிர் நிலையில் | சேமிப்பு சக்தியாக |
| v | 8 | முழுமனதுடனும் | முழுவதுடனும் |
| vii | 8 | பறிமுதல் | துண்டுகளாக்கி பறிமுதல் |
| xi | 21 | கடமைகளைப் | கோரிக்கைகளைப் |
| xvi | 9 | தளங்கள் | தளங்கள் ஒப்பீட்டளவில் |
| xvi | 12 | குறைபாடுகளும் | விதிகளும் |
| xvii | 1 | இந்தக் கோட்பாடுகள் | இந்தப் பண்பியல்புகள் |
| xvii | 20 | ஒன்று மற்றதிலிருந்து விலகித் தனியேநிற்பதோடு | இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்ததோடு |
| 8 | 36 | தேதிய | தேசிய |
| 9 | 28 | ஒப்பந்தங்களை | ஆதாயங்களை உறுதி |
| 23 | 23 | தீர்மானிப்பதாக உள்ளது | தீர்மானிப்பதாக இல்லை |
| 28 | 26 | வளிப்படுத்தியது) | வெளிப்படுத்தியது) |
| 30 | 28 | (டீரெஸ்ட் | (பிரெஸ்ட் |
| 49 | 19 | ஐட்டத்தின் | கட்டத்தின் |
| 51 | 23 | குறிப்பாக | குறிப்பான |
| 71 | 30,31 | நெம்புகோலாலான | நெம்புகோலான |
| 92 | 21 | மேற்கட்டம் | மேல்கட்டுமானம் |
| 95 | 4 | விபத்துக்களிலும் | தற்செயல்களிலும் |
| 97 | 4 | ஹெர்ன்யூகள் டுதேங்கின் | ஹெர்ன்யூகன் டுரிங்கின் |
| 97 | 6 | பொருள் முதலியவை | பொருள்முதலியலை |
| 98 | 14 | உறவுகள் என்று | உறவுகள் மூலம் |
| 99 | 15 | மேற்பட்டால் கலைக் கழகங்கள் | மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் |
| 99 | 27 | பந்தயம் (Race) | இனம் (Race) |
| 99 | 33 | குற்றமுழுக்க | முழுமையாக |
| 100 | 35 | விபத்துகள் | தற்செயல்கள் |
| 102 | 8 | 78, அப்படியே | அப்படியே |

# பத்தி திருத்தம்

**பக்கம் i வரி 21 முதல் 24 வரை**

**பிழை :** ''ஜெர்மனியிலுள்ள முழுவிஷயமும் பாட்டாளிவர்க்கத் தீர்மானத்தை உழவர் போரின் சில இரண்டாவது பதிப்புதாங்கி ஆதரிக்கும் வாய்ப்பை பொறுத்துள்ளது; அப்புறம்அந்தஉறவு அபூர்வமாக இருக்கும்.''

**திருத்தம் :** ''விவசாயிகள் போரின் இரண்டாவது பதிப்பு போன்ற ஏதோ ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ஆதரவு அளிப்பதையே, ஜெர்மனியில் அனைத்தும் சார்ந்திருக்கும்; அப்போது நிலைமை அற்புதமாக இருக்கும்''

பக்கம், vi. வரி 36-ல்......அடைந்தது என்ற வார்த்தைக்குப் பிறகு கீழ்வரும் வரிகளைச் சேர்த்துப்படிக்கவும்.

இது பல தலைமுறைகளாக விவசாயிகளை அடிமைத் தளையில் பிணைத்து துன்புறுத்தி சீரழித்தது;

பக்கம், xviii. வரி 28-ல்......ஒரு போரை என்ற வார்த்தைக்குப் பிறகு கீழ்வரும் பத்தியை சேர்த்துப் படிக்கவும்.

நெறிப்படுத்துவதற்காக அந்த விதிகளைக் கற்பதே ஆகும்." (மாவோ தொகுதி 1, பக். 183) போர் நிலைமை மொத்தத்தில் ஒரு நாடு முழுவதையுமோ அல்லது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தையோ தழுவி இருக்கலாம். போர்த்தந்திர அறிவியலின் கடமை மொத்தமாகப் போர் நிலைமையை ஆளுகின்ற போரை நெறிப்படுத்துவதற்காக அந்த விதிகளைக் கற்பதே ஆகும். எனவே இராணுவப் போர்த்தந்திரம் ஒரு நாடு முழுவதற்குமோ அல்லது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கோ பொருத்தமாக இருக்கலாம். அதே சமயம் அரசியல் போர்த்தந்திரம் நாடு முழுவதன் புரட்சி இயக்கத்தை நெறிப்படுத்துகிறது. புரட்சிக் காலகட்டம் முழுவதன் போதும் அரசியல் போர்த்தந்திரம் மாறாதிருக்கிறது; மேலும் அது நாடு முழுவதற்கும் பொருந்தக் கூடியதாக உள்ளது. அதே சமயம் இராணுவ போர்த்தந்திரம் புரட்சியின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலுள்ள ஒரு தனிப்பட்ட காலப்பகுதிக்குப் பொருந்தக் கூடியதாகும்; மேலும்அது போர் நிலைமை ஒட்டுமொத்தமாக எப்படி இருக்கிறது என்ற அளவைப் பொறுத்து ஒரு நாடு முழுவதற்குமோ அல்லது ஒரு தனிப்பட்ட நிலைமைக்கோ பொருந்தலாம்.

பாட்டாளி வர்க்கத்தின் பொது மற்றும் அடிப்படை நோக்கங்கள், அதாவது அரசியல் போர்த்தந்திரம், புரட்சியின் குறிப்பிட்ட காலகட்டத்தில் மாறுவதில்லை; ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பொருளியல் பரிணாம வளர்ச்சியின் பொதுப் போக்கு (பொருளியல் பரிணாம வளர்ச்சி மட்டும் இல்லை), சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களுக்கு இடையிலான அடிப்படை உறவைப் போல மாறுவதில்லை. ஆனால், புரட்சியின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள்ளே சமூக மற்றும் அரசியல் நிலைமையில் மாற்றங்கள் நிகழ்கின்றன; அந்த மாற்றங்கள் மிக மிக நேரடியான

பக்கம் xxi. வரி 9 முதல் 11 வரை

பிழை : (1) "பாட்டாளிவர்க்கம் முதலாளி வர்க்கத்துடன் ஒரு புரட்சிகர தேசிய ஐக்கிய முன்னணியை நிறுவ வேண்டும் அல்லது அதை முறிக்க வேண்டும்.

திருத்தம் : (1) "பாட்டாளிவர்க்கம் ஒன்று ஒரு புரட்சிகர தேசிய ஐக்கிய முன்னணியை நிறுவுகிறது; அல்லது அதை முறிக்க நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறது."

பக்கம், 99. வரி 32-ல்......அமைவதாகும் என்ற வார்த்தைக்குப் பிறகு கீழ்வரும் வரிகளை ச சேர்த்துப் படிக்கவும்.

ஆனால் இவையனைத்தும் ஒன்றையொன்று பாதிக்கின்றன; பொருளாதார அடித்தளத்தையும் கூட பாதிக்கின்றன.

பக்கம், 105. வரி 1-ல்......விடுவோம். என்ற வார்த்தைக்குப் பிறகு கீழ்வரும் வரிகளைச் சேர்த்துப் படிக்கவும்.

ஆனால் ருசியாவின் உள்நாட்டுச் சக்திகள் பற்றிய பிரச்சினையை நாம் பார்த்து வருவதால்

பக்கம், 113. வரிகள் 28, 29-ஐ நீக்கி விடவும்.

பக்கம். 123 வரி 8 மற்றும் 19

பிழை : இம்மோதல் முதலாளிய விவசாயப் புரட்சிக்கான போராட்டமாகும்.

திருத்தம் : இம்மோதல் ஒன்று அல்லது வேறு வகைப்பட்ட முதலாளிய விவசாயப் பரிணாமத்திற்கான ஒரு போராட்டமாகும்.

பக்கம். 151 வரி 17

பிழை : முழக்கங்களின் மூன்றாவது செயல்தந்திர கோட்பாடு

திருத்தம் : ...மூன்றாவது செயல்தந்திர கோட்பாடு முழக்கங்களின்

பக்கம் : 155. துணைத் தலைப்பு

பிழை : குறிப்பான இயக்கத்தில் நிலைமையை

திருத்தம் : குறிப்பான தருணத்தில் நிலைமையை

பக்கம் : 157. 8-வது வரியிலுள்ள பொதுவாக, என்ற வார்த்தையை 9-வது வரியில் சீனாவுக்கும் என்ற வார்த்தைக்கு முன் சேர்த்துப் படிக்கவும்.

பக்கம், 172. வரிகள் 10, 11.

பிழை : இதுதான் மூலதனத்தை ஒழுங்குபடுத்தும் முக்கிய நெறியாகும். ஆளப்படும் (Principle)

திருத்தம் : நிர்வகிக்கப்படும் மூலதனத்தை ஒழுங்குபடுத்தும் முக்கிய நெறியாகும்.

பக்கம் : 174. வரிகள் 21, 22.

பிழை : டாக்டர் சன்-யாட்-சென் கூறிய மக்கள் நெறிகள் மூன்று

திருத்தம் : டாக்டர் சன்-யாட்-சென்னின் புரட்சிகர மூன்று மக்கள் கோட்பாடுகளின் ஒரு சீனாவை,

பக்கம் 181. வரி 22, 23-ல்... மாறக்கூடும் என்பது வரை நீக்கி விட்டு கீழ்வரும் வரிகளை படிக்கவும்.

உலகிலுள்ள மற்ற நடவடிக்கைகளைப் போலவே உலகப் புரட்சிக்கும் நெளிந்து வளைந்து செல்லும் பாதைதான் உள்ளது; நேரானதொரு பாதை ஒருபோதும் கிடையாது. உலக மாற்றங்களுக்கு ஒவ்வொரு பொருளும் உள்ளாவது போலவே புரட்சிகர முகாமிலும் எதிர்ப்புரட்சிகர முகாமிலும் சக்திகளின் அணிச்சேர்க்கை மாறலாம்.

பக்கம் : 188. வரிகள் 33, 34.

பிழை : எதிர்ப்புரட்சி பயங்கரத்தின் கீழ், உழைக்கும் வர்க்கப் பெருந்கரங்களிலிருந்த இயக்கம் உயர்ந்த அலையிலிருந்து

திருத்தம் : எதிர்ப்புரட்சி பயங்கரத்தின் கீழ், பெருநகரங்களிலிருந்த தொழிலாளி வர்க்க இயக்கம் உயர்ந்த அலையிலிருந்து

பக்கம் 199. வரி 31ல்...உண்மை ஏற்படுகிறது என்ற வார்த்தைக்குப் பிறகு பின்வரும் வரிகளைச் சேர்த்துப் படிக்கவும்.

சீனத்தொழில் முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சலுகைகள் பெறமுடியாமல் ஏற்படும் தோல்வியினால் ஏகாதிபத்தியத்திற்கும் சீனத் தேசியத் தொழிலுக்கும் முரண்பாடு எழுகிறது.

பக்கம் 256. 19-ம் வரியிலுள்ள மார்க்சியம் தழுவியது என்ற சொற்களை 18-ம் வரியிலுள்ள அது தீயதல்ல; நல்லது என்ற சொற்களுடன் சேர்த்துப் படிக்கவும்.

○

இயக்கத்தை விரைவு படுத்துவது அல்லது தாமதிக்கச் செய்வது, அதை நடைபெறச் செய்வது அல்லது தடுப்பது - இதுதான் அரசியல். போர்த்தந்திரத்தையும் செயல் தந்திரத்தையும் நடைமுறைப் படுத்தக் கூடிய களமும் எல்லையுமாகும்.

**ஜே. வி. ஸ்டாலின்**

போர்த்தந்திரமானது புரட்சியின் முக்கிய சக்திகளையும் அவற்றின் சேமிப்புச் சக்திகளையும் பற்றியது. புரட்சியானது ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்கு மாறும் பொழுது அதுவும் மாறுகிறது; ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்டம் முழுவதும் அடிப்படையில் அது மாறாமல் நீடிக்கிறது.

**ஜே. வி. ஸ்டாலின்**

தோழர் ஸ்டாலின் சுட்டிக்காட்டுவது போல, செயல் தந்திரத்தின் சரியான திசை வழிக்குச் சூழல் பற்றிய ஒரு சரியான ஆய்வு (வர்க்கச் சக்திகளின் உறவுகள் பற்றிய ஒரு சரியான மதிப்பீடும் இயக்கத்தின் அலையேற்றமும் இறக்கமும் பற்றிய ஒரு சரியான கணிப்பும்) தேவைப்படுகிறது; அதை அடிப்படையாகக் கொண்ட சரியான போராட்ட வடிவங்களும் அமைப்பு வடிவங்களும் தேவைப்படுகின்றன; அதனுடைய எதிரி முகாமில் நீடிக்கும் ஒவ்வொரு பிளவையும் சரியான முறையில் சாதகமாகப் பயன்படுத்துவதும் நட்புச் சக்திகளைக் கண்டறியும் திறனும் தேவைப்படுகின்றன; அதற்குச் சிறந்த மாதிரிகளில் ஒன்று சீனப்புரட்சிகர இயக்கத்திற்கான தோழர் மாவோவின் திசைவழியாகும்.

**-மாசே துங்**

சமரன் பதிப்பகம்

விலை ரூ. 40